த.பா.நி. (க.வெ.) வரிசை எண்—451

தென்னிந்தியப் பறவைகள்

ஆசிரியர்

க. ரத்னம், பி.ஏ. (ஹானர்ஸ்)

தமிழ்ப் பேராசிரியர்,

சேதுபதி அரசினர் கலைக் கல்லூரி,

இராமநாதபுரம்.

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்

First Edition—May, 1973

T.N.T.B.S. (C.P.) No. 451

© Tamil Nadu Text Book Society

SOUTH INDIAN BIRDS

K RATNAM

Price Rs. 10–50.

'Published by the Tamil Nadu Text Book Society under the Centrally Sponsored Scheme of Production of books and literature in regional languages at the University level, of the Government of India in the Ministry of Education and Social Welfare (Department of Culture), New Delhi.'

Printed by
ELANGOVAN PRINTERS,
23, Muthu Mudali Street,
Royapettah, Madras-14.

அணிந்துரை

திரு. இரா. நெடுஞ்செழியன்

(தமிழகக் கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர்)

தமிழைக் கல்லூரிக் கல்வி மொழியாக ஆக்கிப் பன்னிரண்டாண்டுகள் ஆகிவிட்டன. குறிப்பிட்ட சில கல்லூரிகளில் பி.ஏ. வகுப்பு மாணவர்கள் தங்கள் பாடங்கள் அனைத்தையும் தமிழிலேயே கற்றுவந்தனர். 1968ஆம் ஆண்டின் தொடக்கத்தில் புகுமுக வகுப்பிலும் (P.U.C.), 1969ஆம் ஆண்டிலிருந்து பட்டப் படிப்பு வகுப்புகளிலும் அறிவியல் பாடங்களையும் தமிழிலேயே கற்பிக்க ஏற்பாடு செய்துள்ளோம். தமிழிலேயே கற்பிப்போம் என முன்வந்துள்ள கல்லூரி ஆசிரியர்களின் ஊக்கம், பிற பல துறைகளிலும் தொண்டு செய்வோர் இதற்கெனத் தந்த உழைப்பு, தங்கள் சிறப்புத் துறைகளில் நூல்கள் எழுதித் தர முன்வந்த நூலாசிரியர்கள் தொண்டுணர்ச்சி இவற்றின் காரணமாக இத் திட்டம் நம்மிடையே மகிழ்ச்சியும் மன நிறைவும் தரத்தக்க வகையில் நடைபெற்று வருகிறது. இவ் வகையில், கல்லூரிப் பேராசிரியர்கள் கலை, அறிவியல் பாடங்களை மாணவர்க்குத் தமிழிலேயே பயிற்றுவிப்பதற்குத் தேவையான பயிற்சியைப் பெறுவதற்கு மதுரைப் பல்கலைக்கழகம் ஆண்டுதோறும் எடுத்துவரும் பெருமுயற்சியைக் குறிப்பிட்டுச் சொல்லவேண்டும்.

பல துறைகளில் பணிபுரியும் பேராசிரியர்கள் எத்தனையோ நெருக்கடிகளுக்கிடையே குறுகிய காலத்தில் அரிய முறையில் நூல்கள் எழுதித் தந்துள்ளனர்.

வரலாறு, அரசியல், உளவியல், பொருளாதாரம், தத்துவம், புவியியல், புவியமைப்பியல், மனையியல், கணிதம், இயற்பியல், வேதியியல், உயிரியல், வானியல், புள்ளியியல், விலங்கியல், தாவரவியல், பொறியியல் ஆகிய எல்லாத் துறைகளிலும் தனி நூல்கள், மொழிபெயர்ப்பு நூல்கள் என்ற இரு வகையிலும் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம் வெளியிட்டு வருகிறது.

இவற்றுள் ஒன்றான 'தென்னிந்தியப் பறவைகள்' என்ற இந் நூல் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனத்தின் 451 ஆவது வெளியீடாகும். கல்லூரித் தமிழ்க் குழுவின் சார்பில் வெளியான 35 நூல்களையும் சேர்த்து இதுவரை 486 நூல்கள் வெளிவந்துள்ளன. இந் நூல் மைய அரசு கல்வி, சமூகநல அமைச்சகத்தின் மாநில மொழியில் பல்கலைக்கழக நூல்கள் வெளியிடும் திட்டத்தின்கீழ் வெளியிடப் படுகிறது.

உழைப்பின் வாரா உறுதிகள் இல்லை; ஆதலின், உழைத்து வெற்றி காண்போம். தமிழைப் பயிலும் மாணவர்கள் உலக மாணவர்களிடையே சிறந்த இடம் பெறவேண்டும். அதுவே தமிழன்னையின் குறிக்கோளுமாகும். தமிழ்நாட்டுப் பல்கலைக்கழகங்களின் பல்வகை உதவிகளுக்கும் ஒத்துழைப்புக்கும் நம் மனம் கலந்த நன்றி உரியதாகுக.

இரா. நெடுஞ்செழியன்

பொருளடக்கம்

			பக்கம்
வரிசை :	போடிசிபிடிஃபார்மிஸ்	...	1
வரிசை :	ப்ரோசெல்லேரிஃபார்மிஸ்	...	3
வரிசை :	பெலிக்கனிஃபார்மிஸ்	...	5
வரிசை :	சிக்கோனிஃபார்மிஸ்	...	13
வரிசை :	ஆன்செரிஃபார்மிஸ்	...	34
வரிசை :	பால்கோனிஃபார்மிஸ்	...	43
வரிசை :	காலிஃபார்மிஸ்	...	91
வரிசை :	க்ருஸிஃபார்மிஸ்	...	111
வரிசை :	கெராட்டிரிஃபார்மிஸ்	...	131
வரிசை :	கொலம்பிஃபார்மிஸ்	...	205
வரிசை :	சிட்டாசிஃபார்மிஸ்	...	226
வரிசை :	குக்குலிஃபார்மிஸ்	...	235
வரிசை :	ஸ்டிரிஜிஃபார்மிஸ்	...	255
வரிசை :	கேப்ரிமுல்ஜிஃபார்மிஸ்	...	274
வரிசை :	அபோடிஃபார்மிஸ்	...	280
வரிசை :	ட்ரோகோனிஃபார்மிஸ்	...	290
வரிசை :	கொராசிஃபார்மிஸ்	...	292
வரிசை :	பிஸிஃபார்மிஸ்	...	314
வரிசை :	பேஸ்ஸரிஃபார்மிஸ்	...	335
மேற்கோள் நூல் பட்டியல்		...	515
கலைச்சொல் அகராதி		...	516



படம் 1.



படம் 2.

பறவைகளின் புற உறுப்புகள்

1. மூக்கு (Nostril)
2. அலகு (Culmen)
3. நெற்றி (Forehead)
4. உச்சந்தலை (Crown)
5. விழிப்படலம் (Iris)
6. பிடரி (Nape)
7. செவியிடம் அல்லது காதுப்பகுதி (Earcoverts)
8. பின் கழுத்து (Hindneck)
9. மோவாய் (Chin)
10. கண் முன்னிடம் (Lores)
11. தொண்டை (Throat)

12. கழுத்தின் பக்கங்கள் (Sides of neck)
13. முதுகு (Back)
14. தோள்பட்டை இறகுகள் (Scapulars)
15. பிட்டம் (Rump)
16. வால் மேல் போர்வை இறகுகள் (Upper tail coverts)
17. வால் (tail)
18. வால் அடிப்போர்வை இறகுகள் (Under tail coverts)
19. துணை இறகுகள் (Secondaries)
20. முதல் இறகுகள் (Primaries)
21. சிறு சிறகுப் போர்வை இறகுகள் (Lessor wing-coverts)
22. நடுச்சிறகுப் போர்வை (Medium wing-coverts)
23. பெருஞ்சிறகுப் போர்வை இறகுகள் (Greater wings-coverts)
24. மூன்றும் படி இறகுகள் (Bastard wing)
25. மார்பு (Breast)
26. தொடை (Tibia)
27. கணுக்கால் (Tarsus)
28. உள் விரல் (Inner toe)
29. நடு விரல் (Middle toe)
30. புற விரல் (Outer toe)
31. பின் விரல் (Hind toe)
32. வயிறு (Abdomen)
33. இறகடிப் போர்வை இறகுகள் (Under wing-coverts)
34. துணை உள் இறகுகள் (Auxillaries)

வரிசை : போடிசிபிடிஃபார்மிஸ்

Order : Podicipediformes

Family : Podicipedidae

முக்குளிப்பான்கள்
(GREBES)

1. முக்குளிப்பான்

5. Little Grebe or Dabchick

Podiceps ruficollis capensis (Salvador)

தோற்றம் : வாலில்லாத புறா அளவுள்ள இது சுமார் 23 செ.மீ. நீளம் இருக்கும்.



முக்குளிப்பான்

அலகு கருப்பு நிறம், முனை வெண்மையாகவும் அடிப்பகுதி வெளிர் மஞ்சளாகவும் இருக்கும்; கால்கள் கரும் பச்சை நிறம்; விழிப்படலம் சிவந்த பழுப்பாக இருக்கும்.

நெற்றி, உச்சி, பின் கழுத்து, மோவாய், கன்னம் ஆகியன கருப்பு நிறம்; தொண்டையும், கண் சார்ந்த தலையின் பக்கங்களும் செம்பழுப்பு; உடலின் மேற்பகுதி ஆழ்ந்த பழுப்பாக இருக்கும்; வயிறு பட்டுப்போன்ற வெண்மை; மார்பு, பக்கங்கள் வாலடி ஆகியன வெண்மை தோய்ந்த ஆழ்ந்த பழுப்பு.

குளிர் காலத்தில் தலை பழுப்பாகவும், மோவாய் வெண்மையாகவும், கழுத்து கருஞ்சிவப்பாகவும் மாறும்.



முக்குளிப்பானின் பாதம்

காணப்படும் இடங்கள் : தென்னிந்தியா முழுவதும் நீர்வள மிக்க பகுதிகளில் காணலாம்.

பழக்க வழக்கங்கள் : ஆணும் பெண்ணுமான இணையாகவோ, சிறு கூட்டமாகவோ காணலாம். பெரிய ஏரிகளில் நூற்றுக்கணக்கான பறவைகள் திரளும். மாலை நேரத்தில் நீர்ப்பரப்பின் மீது ஒன்றை ஒன்று துரத்தி விளையாடும். பறப்பதை இவை பெரும்பாலும் தவிர்க்கின்றன. ஆபத்து என்றால் நீரில் மூழ்கி மறையவே செய்யும். நீரில் முக்குளித்து மறைந்த பறவை நெடுந்தூரத்திற்கு அப்பால் எதிர்பாராத இடத்தில் தலையை நீட்டும்.

இனப்பெருக்கம் : காலம் :—ஜூன் முதல் நவம்பர் முடிய ; இரண்டு மூன்று முறை முட்டையிட்டுக் குஞ்சு பொரிக்கும் ; கூடு:—நீரில் மிதக்கும்படியாக, நாணல் புதரில் மறைவாக நீர்த் தாவரங்களைக்கொண்டு மிதக்கும் கூடு அமைக்கும். முட்டை :—4 முதல் 6 வரை. நீள் வட்டமாக வெண்மையாக இருக்கும். அடைகாக்கும் பறவை கூட்டை விட்டுப் போகுமுன் முட்டைகளை மிதக்கும் குப்பைகளால் மூடிச் செல்வதால் விரைவில் முட்டைகள் அழுக்கு அடைந்து விடுகின்றன.

வரிசை : ப்ரோசெல்லேரி·:பார்மிஸ்

Order: Procellariformes

Family: Hydrobatidae

கடற் குருவிகள்
(STORM PETRELS)

2. வில்சன் கடற்குருவி

14. Wilson's Storm Petrels

Oceantes oceanicus oceanicus (*Kuhl*)

தோற்றம்: கொண்டைக் குருவி அளவுள்ளது இது.

அலகும் விழிப்படலமும் கருப்பாக இருக்கும்.

கால் விரல்கள் கருப்பு நிறமானவை. விரல்களைப் பிணைத்திருக்கும் சவ்வு நல்ல மஞ்சள் நிறமாக இருக்கும்.

உடல் முழுதும் புகைக் கருப்பாக இருக்கும். வாலின் மேற்போர்வை இறகுகள் மட்டும் வெண்மையாக இருக்கக் காணலாம்.

காணப்படும் இடங்கள்: தென் துருவப் பகுதியில் பெரும் எண்ணிக்கையில் இனப்பெருக்கம் செய்யும் பறவைகளுள் இதுவும் ஒன்று. இதனைத் தென்னிந்தியக் கடற்கரை சார்ந்த கடலின்மீது அபூர்வமாகவே காணலாம். தென் மேற்குப் பருவ மழை பெய்யும் போது வலசை வரும் இவை மேற்குக் கடற்கரையை நெருங்கி வருகிறது.



வில்சன் கடற்குருவி

பழக்க வழக்கங்கள் : தனித்தும் இருநூறு வரையான கூட்ட மாகவும் கடலின்மேல் தாழ்வாகப் பறந்தும், நீரின்மேல் தாவித் தாவிப் பறந்தும் இரைதேடும்.

விலங்கு மிதவியங்களே இதன் உணவு (Zooplankton).

இனப்பெருக்கம் : காலம் : நவம்பர் முதல் ஜனவரி முடிய தென் துருவத் தீவுகளில் பல்லாயிரக் கணக்கில் கூடி இனப் பெருக்கம் செய்கிறது. கூடு : பாறை இடுக்குகளில்.

வரிசை : பெலிக்கனி:பார்மிஸ்

Order: Pelicaniformes

Family: Pelicanidae

கூழைக்கடாக்கள்
(PELICANS)

3. கூழைக்கடா

21. Spotted Billed or Grey Pelican

Pelicanus philippensis philippensis (Gmelin)

தோற்றம்: கழுகைவிடப் பெரியது. சுமார் 35 செ. மீ. நீளமுள்ள அலகோடு 160 செ. மீ. நீளமிருக்கும்.

அலகு: மேல் அலகின் மஞ்சள் முனை கீழ்நோக்கி வளைந்து இருக்கும். கீழ் அலகில் நெடுகத் தொங்கும் பை இணைந்திருக்கக் காணலாம்; அலகு வெளிர் நீல நிறம்; புள்ளிகளோடிருக்கும் விழிப்படலம் வெளிர் பழுப்பு; கால்கள் ஊன் (Fleshy) நிறமாக இருக்கும் (வெண்மை கலந்த சிவப்பு); விரல்கள் சவ்வினால் இணைக்கப்பட்டு இருக்கும்.

தலையும் கழுத்தும் வெண்மையாக இருக்கும்; உடலின் மேற்பகுதி சாம்பல் தோய்ந்த வெண்மை நிறம்; முதுகு, பிட்டம், வால் போர்வை இறகுகள் சாம்பல் தோய்ந்து அழுக்கு வெள்ளை நிறமாக இருக்கும்; உடலின் கீழ்ப்பகுதி சாம்பல் நிறம் தோய்ந்த வெண்மை. வால் குறுகலாக சதுரமாக இருக்கும். ஆணும் பெண்ணும் ஒன்று போன்ற தோற்றம் கொண்டவை.

காணப்படும் இடங்கள்: நீர்வளமிக்க பகுதிகளில் தென்னிந்தியா முழுதும் காணலாம். தமிழ்நாட்டில், செங்கல்பட்டு, திருநெல்வேலி, இராமநாதபுரம் மாவட்டங்களிம் இனப்பெருக்கம் செய்கிறது.

பழக்க வழக்கங்கள்: இதன் கீழ் அலகில் நீள் வாக்கில் தொங்கும் பை மீன் பிடிக்கும் வலைபோல் இதற்குப் பயன்படுகிறது. வெயில் காலத்தில் அப்பையிலிருந்து வடியும் தண்ணீர் உடலின் வெப்பத்தைத் தணிக்கவும் பயன்படுகிறது. கழுத்தை S வடிவில் வளைத்து உடலின் உள்ளே இழுத்து வைத்துக் கொண்டு இறக்கைகளைச் சீராக அடித்துப் பறக்கும். இது சுமார் 12 கிலோ எடையுள்ளது. ஆனால் இதன் எலும்புகள் 1 கிலோ எடை அளவே இருப்பது இந்தப் பெரிய பறவை எளிதில் பறப்பதற்குத் துணை செய்கிறது. கூட்டமாக V வடிவில் வாத்துக்களைப் போலப் பறக்கும். இது நீள வாக்கிலும் ஒன்றன்பின் ஒன்ருகப் பறக்கக் காணலாம். உயர ஏறும் சூடான காற்றில் (Air Currents) முற்பகல், பிற்பகல் நேரங்களில் மிதந்து உயரச் செல்லவும் காணலாம்.

பெரிய ஏரிகளிலும் உப்பளங்களிலும் இதனைக் கூட்டமாகக் காணலாம். கூட்டுறவு முறையில் இவை மீன் பிடிப்பது பார்க்கச் சுவையாக இருக்கும். அரை வட்ட வடிவாக நூறு இருநூறு பறவைகள் இறக்கைகளால் நீரில் மோதி அடித்தடித்து மீன்களை ஒரு பக்கமாகத் துரத்தும். பின், பின்னல் இருக்கும் பறவைகள் சுற்றிவந்து மீன்கள் பக்கவாட்டில் தப்பிச் செல்ல முடியாதபடி வளைத்துக் கொள்ளும். மீன்கள் கூட்டமாகத் திரண்ட பிறகு அலகைத் திறந்து, அடி அலகை நீரில் நுழைத்தபடி நீந்தும். அப்போது அடி அலகில் உள்ள பையில் மீன்கள் நிறையச் சேரும். பின் அலகை மூடித் தண்ணீரை வெளிப்படுத்தி அவ்வாறு சேர்ந்த மீன்களை விழுங்கும். நீரில் பாய்ந்து மீன் கொத்தியைப் போல மீனைப் பிடிப்பதில்லை. ஆனால் தண்ணீருக்கிடையே நிற்கும் மரக் கிளைகளில் இனப் பெருக்கம் செய்யும் பறவைகள் அந்த நீர் நிலையில் தனித்து நீந்தி மீன் பிடிக்கவும் காணலாம்.

மீனே இதன் உணவு. ஒரு பறவை ஒருநாளில் சுமார் 2 கிலோ மீன் தின்பதாகக் கணக்கிட்டுள்ளனர்.

இனப்பெருக்கம்: காலம்: செப்டம்பர் தொடங்கி ஏப்ரல் முடிய பலவிடங்களிலும் வேறு வேறு மாதங்களில். கூடு: பனைமரம், வேப்பமரம், கருவேலமரம், புளியமரம் போன்ற மரங்களில் உயரத்தில் குச்சிகளையும் வைக்கோலையும் பயன்படுத்திப் பெரிய கூடுகள்

கூழைக்கடா கூட்டின் மேல் பறப்பது காஞ்சிராங்குளம்.

காஞ்சிராங்குளத்தில் — முதுகுளத்தூர் வட்டம் மஞ்சள் மூக்கு நாரைகளும் (22) கூழைக்கடாக்களும் (3) பெரும் அளவில் கூடுகட்டி இனப்பெருக்கம் செய்யும் காட்சி. அவ்வூர் மக்கள் பறவைகளுக்குப் பாதுகாப்புத் தருவது குறிப்பிடத்தக்கது.

காஞ்சிராங்குளம் என்ற சிற்றூரில் மஞ்சள் மூக்கு நாரை
(22) கூட்டின் மீது இறங்கும் காட்சி (பக்கம் 24)

அமைக்கும். கூட்டமாகக் கூடு கட்டுவதே இதன் பழக்கம். பெரும்பாலும் செம்முதுகு நாரை (Painted Stork-P. leneocephalus) உடன் கலந்து ஒரே பகுதியில் இரு இனங்களும் நெருக்கமாகக் கூடமைக்கக் காணலாம். மக்கள் பாதுகாப்புத் தரும் பகுதிகளில் நெடுஞ்சாலையில் நிற்கும் மரங்களில்கூடக் கட்டும். இல்லையாயின் நீர்நிலைகளிடையே முள்மரங்களையே தேர்ந்தெடுக்கும். இவை கூட்டமாகக் கூடமைக்கும் இடத்தின் அருகே மீன்வளம் மிகுந்த ஏரிகள் இருக்கும். தென்னிந்தியாவில் ஆந்திராவில் ஆரேடுவிலும், தமிழ் நாட்டில் திருநெல்வேலி, வேடந்தாங்கலிலும் தொடர்ந்து இனப்பெருக்கம் செய்கிறது. இராமநாதபுரம் அருகே பெரிய ஏரியில் மிகுந்த மீன்வளம் இருப்பதால், அருகே காவனூரில் நீரிடை நிற்கும் கருவேலமரங்களில் கூட்டமாக செம்முதுகு நாரையோடு சேர்ந்து இனப்பெருக்கம் செய்கிறது.

முட்டை: 3 அல்லது 4; வெண்மையாக இருக்கும்; அடைகாக்கும் காலம் 30 நாட்கள். குஞ்சுகள் சுமார் நான்கு மாத காலம் கூட்டிலேயே வளர்கின்றன. தாய்ப்பறவை அலகில் தொங்கும் பையில் குஞ்சுக்காக இரை கொண்டுவரும். குஞ்சு தலை முழுவதையும் தாய்ப்பறவையின் கீழ் அலகில் தொங்கும் பையில் செலுத்தி இரையை எடுத்துண்ணும். இவை இனப்பெருக்கம் செய்யுமிடத்தில் ஒரே ஆரவாரமாக இருக்கும்.

Family: Phalacrocoracidae

நீர்க்காகங்கள் ; பாம்புத்தாரா
(CORMORANTS and DARTER)

4 இந்தியப் பெரிய நீர்க்காகம்

26. Indian Large Cormorant

Phalacrocorax carbo cinensis (Shaw and Nod)

தோற்றம்: பெரிய வாத்து அளவு உள்ள இது சுமார் 80 செ.மீ. நீளமிருக்கும்.

அலகு பழுப்பு நிறம்; மெலிந்து முனை வளைந்து காணப்படும். விழிப்படலம் பச்சை; முகத்தில் தூவியற்ற பகுதி பசுமையாக இருக்கும். கால்களும் விரலும் கருப்பு நிறம்.

தலை, கழுத்து, உடலின் அடிப்பகுதி, வால் ஆகியன கருப்பு நிறம். முதுகும் உடலின் மேற்பகுதியும் வெண்கல நிறம் தோய்ந்த

பெரிய கருப்புப் பட்டைகளோடு காட்சிதரும். மோவாயும் தொடையில் ஒரு பகுதியும் வெண்மையாக இருக்கும். இதுகொண்டு இதனை மற்ற நீர்க் காகங்களிலிருந்து பறக்கும்போதும் உட்கார்ந்திருக்கும் போதும் எளிதாக வேறுபடுத்தி அறியலாம்.

இந்தியப் பெரிய நீர்க்காகம்

இனப்பெருக்கம் செய்யாத குளிர்காலத்தில் தொடையில் காணப்படும் வெண்மையான பகுதியும் தலையிலும்கழுத்திலும் உள்ள வெண்மையான இறகுகளும் வெண்மைநிறம் குன்றிக் காணப்படும்.

ஆணும் பெண்ணும் ஒன்று போன்ற தோற்றமுடையவை.

காணப்படும் இடங்கள் : ஆந்திராவில் பெல்லாரி மாவட்டத்தில் இனப்பெருக்கம் செய்வது கண்டு குறிக்கப்பட்டுள்ளது. தென்னிந்தியாவில் அபூர்வமாகச் சிறிய நீர்க்காகத்தோடு சேர்ந்து திரியக் காணலாம்.



இந்தியப் பெரிய நீர்க்காகம்

பழக்க வழக்கங்கள் : கூழைக்கடாவைப் போலன்றிக் கழுத்தை முன்னுக்கு நீட்டிப் பறக்கும் பழக்கமுடையவை. தரையில் தத்தளித்தே நடக்கும். கழுத்துக்குக் கீழுள்ள உடற்பகுதி முழுதும் நீரில் மூழ்கி நீந்தும். நன்றாக முக்குளிக்கும். கட்டைகள்மீதோ தரையிலோ அமர்ந்து இறக்கையைப் பரப்பி வெயில் காயும்.

மீனே முக்கிய உணவு.

இனப்பெருக்கம் : காலம் : நவம்பர் முதல் மார்ச் வரை. கூடு : நீரிடையே பாறைகள்மீது கூட்டமாக முட்டையிடும். முட்டை ; 4 முதல் 7 வரை ; நீள்வட்டமாக வெண்மையாக இருக்கும்.

5. நீர்க் காகம்

27. Iindian Shag

Phalacrocorax fuscicollis (Steph)

தோற்றம்: உருவில் முன்னதைப் பெரிதும் ஒத்த இது அளவில் சற்றுச் சிறியது. சுமார் 63 செ.மீ. நீளமிருக்கும்.

காணப்படும் இடங்கள்: தென்னிந்தியாவில் நீர்வளமிக்க பகுதிகளில் சிறிய நீர்க்காகத்தோடு சேர்ந்து ஓரளவு காணப்படும். சென்னை, ஆந்திரா முதலான பகுதிகளில் கண்டு குறிக்கப்பட்டுள்ளது.

பழக்க வழக்கங்கள்: பெரும்பாலும் அடுத்த சிறிய நீர்க்காகத்தின் பழக்க வழக்கங்களை ஒத்தவை.

இனப்பெருக்கம்: காலம்: ஜுலை முதல் டிசம்பர் வரை; கூடு: புளியமரங்களிலும் நாணற் புதர்களிலும் கூட்டமாகக் குச்சிகளைக்கொண்டு கூடமைக்கும். முட்டை: 4 முதல் 5 வரை. வெண்மையாக இருக்கும்.

6. சிறிய நீர்க்காகம்

28. Little Cormcrant

Phalacrocorax niger (Vicill)

தோற்றம்: அண்டங் காக்கையைவிடச் சற்றுப் பெரியது. சுமார் 51 செ. மீ. நீளம் இருக்கும்.

மற்ற இரண்டு நீர்க்காகங்களைவிட இது அளவில் சிறியது. அவற்றிற்குக் காணப்படும் முகத்திலிருக்கும் தூவியற்ற மஞ்சள் நிறப் பகுதி இதற்குக் கிடையாது. மற்றபடி தோற்றத்தில் முன்னைய நீர்க்காகத்தினை ஒத்ததே.

காணப்படும் இடங்கள்: தென்னிந்தியா முழுவதும் நீர்வளமிக்க பகுதிகளில் காணலாம். தஞ்சை, இராமநாதபுரம், செங்கல்பட்டு மாவட்டங்களில் தமிழ்நாட்டில் மிகுதியும் காணலாம்.

பழக்க வழக்கங்கள்: தனித்தும், இணையாகவும், 8 முதல் 10 வரையான சிறு கூட்டமாகவும், ஆயிரக்கணக்கான பெருங் கூட்டமாகவும் பெரிய ஏரிகளில் நீந்தித் திரியக் காணலாம். வயிறு நிரம்பியபின் மீனைப் பிடித்துக் கரையில்விட்டு, பின் அது நீரில் விழ

மீண்டும் பிடித்துத் தரையில் விட்டு, பூனை எலியோடு விளையாடுவது போல விளையாடும் ஒன்றின்மேல் ஒன்று தாவி முன்வந்து கூட்டமாக மீன்களைச் சுற்றி வளைத்துப் பிடிக்கும். மதகடியில் எப்போதும் காணலாம். இறக்கை விரித்து வெயில் காய்ந்தபடி ஓய்வு கொள்ளும்.

மீனே இதன் முக்கிய உணவு.

இனப்பெருக்கம்: காலம்: ஜூன் முதல் நவம்பர் வரை. சில பகுதிகளில் பிப்ரவரியில் இனப் பெருக்கம் தொடங்கும். கூடு: சிறு குச்சிகளால் நீரில் நிற்கும் மரங்களின்மீது மற்ற பறவைகளோடு சேர்ந்து கூட்டமாகக் கூடமைக்கும். முட்டை: 4; வெளிர் பசுமையும் நீலமும் கலந்த நிறத்தில் இருக்கும். புதிய முட்டையின் மேல் 'சாக்' (Chalk வெண்மைநிற மேற்பூச்சுக் (Coating) காணலாம். கூட்டை நெருங்கினால் குஞ்சும் பறவையும் கூட்டி விருந்து நீரில் தாவிவிடும். பிறகு பெரிய பறவைகள் கூட்டை நோக்கிப் பறந்துவர, பறக்கும் ஆற்றல் இல்லாத குஞ்சுகள் வளைந்த நகங்களால் மரத்தைப்பற்றி மேலே ஏறிக் கூட்டை அடையும்.

7. பாம்புத் தாரா

29. Indian Darter or Snake Bird

Anhinga melanogaster (*Penn*)

தோற்றம்: வாத்தைவிட அளவில் பெரிய இது சுமார் 90 செ.மீ. நீளமிருக்கும்.

அலகு: மேல் அலகும் கீழ் அலகின் முனையும் கொம்புநிறம்; அலகின் பிற பகுதிகள் மஞ்சள் நிறம்; விழிப்படலம் மஞ்சள்; கால்கள் கருப்பு நிறம்.

கருப்பான நீண்ட மெலிந்த பாம்பு போன்ற கழுத்தும் சிறிய தலையும் கொண்ட பறவை இது. உடலின் தோற்றம் பெரிதும் நீர்க் காகத்தை ஒத்திருக்கும். வால் நீண்டு விறைப்பாக விசிறி வடிவில் இருக்கும். கருப்பு நிற உடலிலும் முதுகிலும் இறக்கைகளிலும் வெளிர் பட்டைகள் காணலாம். தலை சாக்லெட் பழுப்பாக இருக்கும். முகம், மோவாய், தொண்டை ஆகியன வெண்மை. உடலின் கீழ்ப்பகுதி முழுதும் பளபளக்கும் கரும் பழுப்பு நிறம்.

காணப்படும் இடங்கள்: தென்னிந்தியா முழுதும் நீர்வளம் மிக்க பகுதிகளில் ஆங்காங்கே காணலாம்.

பழக்க வழக்கங்கள்: தனித்தோ, இரண்டு மூன்று பறவைகள் சேர்ந்த சிறு கூட்டமாகவோ காணப்படும். உடல் முழுதும் நீரில் மூழ்கிக் கழுத்தையும் தலையையும் வெளியே நீட்டியபடி நீந்தி இரை தேடும். அப்போது இதன் தோற்றம் பாம்பு தண்ணீருக்கு மேல் தலை நீட்டிக்கொண்டிருப்பதுபோல இருக்கும். நீரில் முழுவது மாக மூழ்கி, நீர்க்கடியிலும் நீந்தும். சாதாரணமாகக் கழுத்தைக் குறுக்கி வைத்துக்கொண்டிருக்கும். இது எதிர்பாராது கழுத்தை அம்புபோல் வேகமாக நீட்டி மீனைப் பிடிக்கக் கழுத்தில் சிறப்பான எலும்பு அமைப்பு உண்டு. இறக்கை அடித்தும் மிதந்தும் நன்ருகப் பறக்கும். வயிறு நிரம்பியபின் மரக்கிளையில் அமர்ந்து நீர்க் காகம் போல இறக்கையை விரித்து வைத்துக்கொண்டு வெயில் காயும். நாரைகளோடும், கூழைக் கடாக்களோடும் சேர்ந்து சில சமயம் வானில் உயர வட்டமிட்டுப் பறக்கும். நீர்ப்பரப்பு அருகே முள் மரங்களில் அமர்ந்திருக்கும் இவற்றை நெருங்கினுல் உயிரற்றவை போல முள்ளையும் பொருட்படுத்தாது நீரில் விழுந்து மூழ்கி நெடுந் தூரம் நீர்க்கு அடியில் நீந்தித் தூரத்தில் ஒவ்வொன்ருகத் தலைதூக்கும். புது இறக்கைகள் முளைக்கும்போது ஒவ்வொரு ஆண்டிலும் சில வாரங்கள் இவற்ருல் பறக்க இயலாது.

மீனே இதன் உணவு.

இனப்பெருக்கம்: காலம்: நவம்பர் முதல் பிப்ரவரி வரை; கூடு: மரங்களில் குச்சிகளால் மற்ற நீர்க் காகங்களோடும் பிற நீர்ப் பறவைகளோடும் சேர்ந்து நீரருகிலோ நீரினுள்ளோ நிற்கும் மரங்களில் கூடு அமைக்கும். முட்டை: 3 முதல் 6 வரை, பசுமை தோய்ந்த வெளிர் நீல நிறமாக முனை சிறுத்துக் காணப் படும்.

தாய்ப் பறவை இரை கொண்டு வரும்போது, குஞ்சுகள் கழுத்தையும் தலையையும் நீட்டி அப்படியும் இப்படியுமாக வேடிக்கையாக ஆட்டும். பின் இரை கொண்டுவரும் பெற்ருேரின் திறந்த அலகுக்குள் தலைமுழுவதையும் விட்டு இரை எடுத்துண்ணும். ஆணும் பெண்ணும் குஞ்சுகளுக்கு இரை கொண்டுவரும். மனிதர் நெருங்கும்போது பெரிய பறவைகள் நீரில விழுந்து மூழ்கும்போது அச்சத்தால் குஞ்சுகளும் பெற்ருேரைப் பார்த்து நீரில் விழும். சில குஞ்சுகள் மீண்டும் கூட்டுக்குத் தொத்திவர முடியாமல் இறப்பதும் உண்டு. முதல் முட்டை இட்டவுடன் அடைகாக்கத் தொடங்கும்,

காக்கை இதன் முட்டையையும், கழுகுகள் இதன் குஞ்சுகளையும் தூக்கிச் செல்லும்.

மீனவர்கள் வட இந்தியாவில் இதன் கழுத்தில் வளையம் மாட்டி இதனை மீன் பிடிக்கப் பழக்கித் தங்கள் மீன்பிடிக்கும் படகுகளில் வைத்துக்கொண்டிருப்பார்கள். மீனைப் பிடிக்கும் இதனால் கழுத்தில் இறுகலான வளையம் இருப்பதனால் மீனை விழுங்க முடியாது. இடையிடையே மீனவர் கழுத்து வளையத்தை அகற்றி இதனைச் சில மீன்களை விழுங்க அனுமதிப்பர்.

வரிசை : சிக்கோனிஃபார்மிஸ்

Order : Ciconiiformes

Family : Ardeidae

கொக்குகளும், வெள்ளைக் கொக்குகளும், குருகுகளும்
(HERONS, EGRETTS, BITTERNS)

8. பெரிய சாம்பல் கொக்கு

36. Eastern Grey Heron

Ardea cinerea rectirostria (Gould)

தோற்றம் : சுமார் 95 செ. மீ. நீளமுள்ள பெரிய சாம்பல் நிறக் கொக்கு.

அலகு மஞ்சள் நிறமாகச் சுமார் 15 செ. மீ. நீளம் இருக்கும். விழிப்படலம் பொன் மஞ்சள் நிறம் ; கால்கள் : தொடைப் பகுதி ஆகியன மஞ்சளாகவும், கணுக்காலும் பாதங்களும் பசுமை தோய்ந்த பழுப்பு நிறமாகவும் இருக்கும்.

தலை வெண்மை ; தலைக் கொண்டை இனப்பெருக்கக் காலத்தில் கருப்பாக நீளமாக வளர்ந்திருக்கும். வெண்மையான நீண்ட கழுத்தில் முன்பக்கத்தில் மேலிருந்து கீழாகக் கருப்பு நிறப் பட்டைகள் இருக்கக் காணலாம். உடலின் மேற்பகுதி கருஞ்சாம்பல் நிறம்; இறக்கை கருப்பு ; வயிறு, மார்பு ஆகியன வெண்மை.

பெண் பறவையின் தலைக் கொண்டை இனப்பெருக்கக் காலத்தில் ஆணின் கொண்டைபோல் அதிக நீளமில்லாமல் இருக்கும். இறக்கைகளின் கருப்பு ஆணினைப் போல ஆழ்ந்ததாக இருக்காது.

காணப்படும் இடங்கள் : தென்னிந்தியாவில் நீர்வளம் மிக்க பகுதிகளில் ஆங்காங்கே காணலாம். வேடந்தாங்கலிலும் கொள்ளிடக்கரையிலும் இனப்பெருக்கம் செய்கிறது. கேரளத்தில் இது கடற்கரை சார்ந்த உப்பங்கழிகளிலன்றி உள்நாட்டில் காணப்படுவதில்லை எனப் பெர்கூஸன் கூறுகின்றார்.

பழக்க வழக்கங்கள் : புதர்களும், புல்லும் நிறைந்த சதுப்பு நிலங்கள், வயல்கள், ஆற்றங்கரைகள், குளக்கரைகள் ஆகிய பகுதிகளில் சிறு கூட்டமாகவும், பெருங் கூட்டமாகவும் காணலாம். ஆழமற்ற நீரில் தலையை நீட்டியபடி நடந்து சென்றோ, அசையாமல் ஒரே இடத்தில் நின்றோ மீன் பிடிக்கும். கூடுகட்டி இருக்கும் இடத்தில் முட்டைகளையோ, குஞ்சுகளையோ கவரவரும் வேட்டைக்காரப் பறவைகளை எல்லாக் கொக்குகளும் ஒரு சேர இறக்கையை அடித்துக் கத்தி விரட்ட முயலும். நண்பகலில் உயர எழுந்து கூட்டமாகக் காற்றில் மிதந்து சுற்றிச் சுற்றிப் பறக்கும். ஒரே சீராக இறக்கை அடித்தபடி கழுத்தை மடக்கித் தலையைத் தோள்களுக்கு இடையே இழுத்து வைத்தபடி கால்களைப் பின்னால் நன்றாக நீட்டியபடி பறக்கும்.

இனப்பெருக்கம் : காலம் : வேடந்தாங்கலில் நவம்பர் முதல் மார்ச் வரை; கொள்ளிடக்கரையில் கீழக்குடிக் காட்டில் ஆகஸ்ட் முதல் நவம்பர் வரை; கூடு : நீரிடையே நிற்கும் மரங்களிலும் நீரருகே கரையில் நிற்கும் மரங்களிலும் உயர்கிளைகளில் கூட்டமாக மற்றக் கொக்குகளோடு சேர்ந்து குச்சிகளால் மேடைபோன்ற கூடு அமைத்துக்கொள்ளும். முட்டை : 3; நீலங் கலந்த பச்சை நிறம்.

9. செம்பழுப்புப் பெரிய கொக்கு
Eastern Purple Heron
Ardea purpurea manillensis (*Meyen*)

தோற்றத்தில் முன்னதைவிடச் சற்றுச் சிறியது. உடல் தோற்றத்தில் தலையிலும் மார்பின் பக்கங்களிலும் செம்பழுப்பு நிறக் கறைகள் காணலாம். முன்னதைப்போலத் தென்னிந்தியாவில பரவலாகக் காணப்படுவதில்லை. பழக்க வழக்கங்கள் முன்னதைப் போன்றனவே. இனப்பெருக்கம் தென்னிந்தியாவில் மிக அபூர்வமாகச் செய்யலாம் எனக் கருதப்படுகிறது.

10. சிறிய பச்சைக் கொக்கு
38. Little Green Heron
Butories striatus chloviceps (*Bonaparte*)

தோற்றம் : மடையான் அளவுள்ள இது சுமார் 45 செ.மீ. நீளமிருக்கும்.

அலகு கொம்பு நிற முனையும், பசு மஞ்சளான அடிப்பாகமும் கொண்டிருக்கும் ; கால்கள் பசுமையாகவும், கால் விரல்களின் தோல் ஆரஞ்சு நிறமாகவும் இருக்கும்.

உடலின் மேற்பகுதி பசுமைகலந்த சாம்பல் நிறமாக இருக்கும். கீழ்ப்பகுதி கருஞ் சாம்பல் நிறமாக இருக்கும் தலையும் கொண்டையும் பசுமைதோய்ந்த கருப்புநிறம். மோவாயும் கழுத்தும் வெண்மை.

காணப்படும் இடங்கள் : தென்னிந்தியாவில் நீர்வளம் மிக்க பகுதிகளில் ஆற்றங் கரைகளிலும் புதர்களிலும் காணலாம். மலைகளில் 700 மீ. உயரம் வரை காணப்படும்.

பழக்க வழக்கங்கள் : நீர் நிலைகளையும், ஆறுகளையும் அடுத்த நிழலான காடுகளில் வெயிலற்ற நாட்களில் இரை தேடக் காணலாம். அதிகாலை, மாலை நேரங்களிலேயே வெளிப்பட்டு இரை தேடும் பழக்கமுடையது. சதுப்புக் காடுகளில் மறைந்தே திரியும் பழக்கமுடைய இதனை மற்றப் பகுதிகளில் பெரும்பாலும் காண முடியாது. நண்டு, மீன் முதலியவை இதன் உணவு.

இனப்பெருக்கம் காலம் : மே முதல் ஆகஸ்ட் முடிய ; கூடு : நீர் நிலைகளை அடுத்த சிறு மரங்களிலோ, புதர்களிலோ குச்சிகளால் கூடு அமைக்கும். மற்றக் கொக்குகளைப்போலப் பல சேர்ந்து கூட்டமாக ஓரிடத்தில் கூடு கட்டாமல் தனித்தே கூடமைக்கும். முட்டை : 3 முதல் 5 வரை. வெளிர் பசுமை நிறமாக இருக்கும்.

11. குருட்டுக் கொக்கு

42. Paddy Bird or Pond Heron

Ardeola grajii (Sykes)

தோற்றம் : உண்ணிக் கொக்கைவிடச் சிறியது. சுமார் 50 செ. மீ. நீளமிருக்கும்.

அலகு அடிப்பகுதி நீலமாகவும், நடுப்பகுதி மஞ்சளாகவும், நுனி கருப்பாகவும் இருக்கும்; விழிப்படலம் மஞ்சள் நிறம், கால்கள் பசுமைதோய்ந்த மஞ்சள் நிறம்.

உடலின் மேற் பகுதி உட்கார்ந்திருக்கும்போது மணல் பழுப்பாகத் தோற்றம் தரும். பறக்கும்போது தூய வெண்மையான இறக்கைகளும் வெண்மையான வாலும் பிட்டமும் பளிச்செனத் தெரியும். இனப்பெருக்கக் காலத்தில் தலையில் பழுப்பான கொண்டை வளர்வதோடு கழுத்திலும் மார்பின் மேற் பகுதியிலும் மண் நிறத்தில் பழுப்பான நெடுங்கோடுகள் தோன்றும்.

காணப்படும் இடங்கள்: தென்னிந்தியா முழுவதும் நீர்வள மிக்க இடங்களிலெல்லாம் காணப்படும் கொக்கு இது. மலைகளில் 1000 மீட்டர் உயரம் வரை காணலாம். நகரங்களில்கூடச் சாக்கடைக் கழிமுகப் பகுதிகளில் இவற்றை மிகுதியும் காணலாம்.

பழக்க வழக்கங்கள்: நீண்ட கழுத்தைத் தோள்களுக்கு இடையே இழுத்து வைத்துக்கொண்டு கூனிக் குறுகி உட்கார்ந்திருக்கும். இதனுடைய உடலின் மேற் பகுதியின் மணல் பழுப்பான நிறமும் இது நிற்கும் சேற்று நிலத்தின் நிறமும் ஒத்துப் போவதால் நாம் அருகில் நெருங்கும் வரை இது நிற்பதைக் கண்டு கொள்ள முடியாது. திடீரென வெள்ளை இறக்கைகளைப் பிரித்துப் பறந்து இது நம்மை வியப்பில் ஆழ்த்தும். இரவில் காகங்களோடு சேர்ந்து பெரிய மரங்களில் அடையும். வெள்ளைக் கொக்குப் போலவே பறக்கும்.

தவளை, நண்டு, மீன், பூச்சி புழு முதலியன இதன் உணவு.

இனப்பெருக்கம்: காலம்: நவம்பர் முதல் ஏப்ரல் வரை; கூடு: மற்ற கொக்குகளோடு சேர்ந்து பெரிய மரங்களில் குச்சிகளால் கூடு அமைக்கும். பெரிய நகரங்களின் இடையே கூட இதன் கூடுகளை மரங்களில் காணலாம். நீர்நிலைகளின் அருகிலேயே பெரும்பாலும் கூடு இருக்கும். முட்டை: 4 முதல் 6 வரை; நீலங் கலந்த பச்சை நிறமாக இருக்கும்.

12. **உண்ணிக் கொக்கு**

44. Cattle Egret

Bubulcus ibis coromandus (Boddaert)

தோற்றம்: சிறிய வெண் கொக்கினைவிட அளவில் சிறியது. சுமார் 50 செ. மீ. நீளமிருக்கும்.

அலகு மங்கிய மஞ்சள் நிறம்; விழிப்படலம் வெளிர் மஞ்சள்; முகமும் விழி இமைகளும் பசுமை தோய்ந்த மஞ்சள் நிறம்; கால்களும் விரல்களும் கருப்பாக இருக்கும்.



உண்ணிக் கொக்கு

இனப்பெருக்கம் செய்யாத காலத்தில் உடல் முழுதும் தூய வெண்மையாக இருக்கும். இனப்பெருக்கக் காலத்தில் தலை, கழுத்து, முதுகு ஆகியவற்றில் வெளிர் ஆரஞ்சு மஞ்சள் நிறத் தூவிகள் வளரக் காணலாம்.

காணப்படும் இடங்கள் : தென்னிந்தியா முழுதும் மேய்ச்சல் நிலங்கள், காடுகள், வயல்கள் ஆகியவற்றைச் சார்ந்து காணலாம்.

பழக்க வழக்கங்கள் : சிறு கூட்டமாகக் கால் நடைகள் மேயும் போது அவற்றைச் சூழ்ந்து அமர்ந்திருக்கக் காணலாம். புல் வெளியிலிருந்து வெளிப்படும் தத்துக்கிளி, பூச்சி ஆகியவைகளைப் பிடித்துத் தின்னும். கால் நடைகளையே பின்பற்றிச் செல்வதாலும் கால்நடைகளைச் சார்ந்தே திரிவதாலும் Cattle egret என ஆங்கிலத்தில் இதனைக் குறிக்கின்றனர். நடந்தும், ஓடியும், அச்சமின்றிக் கால்நடைகளின் கால்களுக்குள் நுழைந்தும் புழு பூச்சிகளைப் பிடிக்கும். இரவில் காக்கை, மைனா முதலிய பறவைகளோடு சேர்ந்து பெரிய மரங்களிலும் தோப்புக்களிலும் சென்று அடையும்.

இனப்பெருக்கம் : காலம் : நவம்பர் முதல் மார்ச் வரை ; கூடு ; குச்சிகளால் ஒழுங்கற்ற கூடுகளை மரங்களில் நீர்க் காகங்களோடும் பிற கொக்குகளோடும் சேர்ந்து கட்டும். முட்டை: 3 முதல் 5 வரை; வெளிர் பசுமை நிறமாக இருக்கும்.

13: பெரிய வெள்ளைக் கொக்கு

46 Eastern Large Egret

Egretta alba modesta (J. E. Gray)

தோற்றம் : வெள்ளைக் கொக்குகளில் இதுவே மிகப் பெரியது. சுமார் 82 செ. மீ. நீளம் இருக்கும்.

அலகு ஆரஞ்சு நிற மஞ்சளாக 14 செ. மீ. நீளம் இருக்கும் ; இனப்பெருக்கக் காலத்தில் அலகு கருப்பாக மாறும் ; விழியைச் சுற்றியுள்ள இடம் பசுமை கலந்த மஞ்சள் நிறமாக இருக்கும்: கால்கள் கருப்பு நிறம்.

இதன் உடல் முழுதும் தூய வெண்மை நிறமாக இருக்கும். இனப்பெருக்கக் காலத்தில் தலையில் கொண்டையும் முதுகில் தூவி இறகுகளும் வளரும்.

காணப்படும் இடங்கள் : தென்னிந்தியா முழுதும் சதுப்பு நிலங்களிலும், ஏரிகள் ஆறுகள் சார்ந்த வயல்களிலும் மற்றக் கொக்குகளுடன் சேர்ந்து ஓரளவு காணப்படும்.

பழக்க வழக்கங்கள் : நாரைகளோடும் கொக்குகளோடும் சேர்ந்து இரைதேடும் பழக்கம் உண்டு என்றாலும் பெரும்பாலும்

இக்கொக்கு தனித்தோ ஆணும் பெண்ணுமாகச் சேர்ந்தோ இரை தேடும் பழக்கமுடையது. தலையையும் கழுத்தையும் நாரையைப் போல உள்ளிழுத்தபடி ஒரே சீராக இறக்கை அடித்துப் பறக்கும்.

இனப்பெருக்கம் : காலம் : ஆகஸ்ட் முதல் ஏப்ரல் வரை; கூடு : பிற கொக்குகளோடு சேர்ந்து நீரிலோ, கரையிலோ, ஊர்ப் புறங்களிலோ நிற்கும் மரங்களில் குச்சிகளைக்கொண்டு கூடுகட்டும். முட்டை : 3 ; நீலங் கலந்த பச்சை நிறமாக இருக்கும்.

41. வெள்ளைக் கொக்கு

47. Smaller or Median Egret

Egretta intermedia intermedia (Wagler)

தோற்றம் : பெரிய வெள்ளைக் கொக்கைவிடச் சிறியது. சுமார் 65 செ. மீ. நீளம் இருக்கும்.

அலகு மஞ்சள் நிறம். இனப்பெருக்கக் காலத்தில் கருப்பாக மாறும். விழிப்படலம் மஞ்சள். கால்கள் மஞ்சள் தோய்ந்த பழுப்பு நிறம்.

உடல் முழுதும் வெண்மையாக இருக்கும்.

இனப்பெருக்கக் காலத்தில் முதுகிலிருந்தும் மார்பிலிருந்தும் மென்தூவிகள் வளர்ந்து காணப்படும். ஆனால் மற்றக் கொக்கு களைப்போல அப்போது இதற்குத் தலையில் கொண்டை வளராது.

காணப்படும் இடங்கள் : தென்னிந்தியா முழுதும் நீர்வளம் மிகுந்த பகுதிகளில் எங்கும் பரந்துபட்ட அளவில் காணலாம்.

பழக்க வழக்கங்கள் : பெருங் கூட்டமாகத் திரண்டு ஆழமற்ற நீரில் நின்று மீன் பிடிக்கும். நீரில் நாரை முதலிய பிற பறவை களோடு கலந்து நிற்கும் பழக்கம் இவற்றிற்கு இல்லை. பிற பழக்க வழக்கங்கள் மற்றக் கொக்குகளுக்கு உள்ளதைப் போன்றன.

இனப்பெருக்கம் : காலம் : அக்டோபர் தொடங்கி ஏப்ரல் முடிய. பல பகுதிகளில் பல மாதங்களில். கூடு : மரக்கிளைகளில் நெருக்க மாகச் சிறு குச்சிகளால் கூடு அமைக்கும். இதன் அளவிற்குக் கூடு மிகச் சிறியதே. முட்டை : 4 ; வெளிர் பசுமை நிறம்-நீலம் தோய்ந்து காணப்படும்.

15. சிறிய வெள்ளைக் கொக்கு
49. Little Egret
Egretta garzetta garzetta (Linnaeus)

தோற்றம் : வெள்ளைக் கொக்கைவிடச் சற்றுச் சிறியது. சுமார் 62 செ. மீ. நீளமிருக்கும்.

அலகு எப்போதும் கருப்பாக இருக்கும். விழிப்படலம் மஞ்சள்; கால்கள் கருப்பு நிறம்; விரல்கள் மஞ்சள் தோய்ந்த கருப்பாக இருக்கும்.

உடல் முழுதும் தூய வெண்மை நிறம்.

இனப்பெருக்கக் காலத்தில் உச்சந் தலையில் கம்பிபோன்ற இரண்டு தூவிகள் சுமார் 8 செ. மீ. நீளம் வளர்ந்து பின் நோக்கித் தொங்கும். மார்பிலும் முதுகிலும் சிறு வெண்தூவிகள் வளரும். ஆனால் மிக நீளமாக நீண்டு வால் இறகுக்குக் கீழாகத் தொங்காது.

காணப்படும் இடங்கள் : தென்னிந்தியா முழுதும் எங்கும் கூட்டமாகத் தாராளமாகக் காணலாம். நகரங்கள், சிற்றூர்கள், வயல் வெளிகள், ஆற்றங் கரைகள் ஆகிய எல்லா இடங்களிலும் திரியும்.

பழக்க வழக்கங்கள் : கருப்புநிறக் கால்களை இணைத்துப் பின் நீட்டி ஒரே சீராக இறக்கை அடித்துப் பறக்கும். மாலை அந்திகளில் தங்கும் இடம் நோக்கி V வடிவில் இவை கூட்டமாக 'க்வா, க்வா' எனக் கத்தியபடி செல்லும் காட்சி பல கவிஞர்களின் உள்ளங் கவர்ந்த காட்சியாகும்.

இனப்பெருக்கக் காலத்தில் இதன் மார்பிலும் முதுகிலும் வளரும் தூவிகளுக்காக இதனைப் பெரும் அளவில் வேட்டையாடி வந்தனர். இப்போது இவ் விறகுகளின்மேல் வெளிநாட்டு மகளிர் கொண்ட மோகம் குறைந்துவிட்டதாலும், இவ் விறகுகளின்மேல் ஏற்றுமதி தடைசெய்யப்பட்டுள்ளமையாலும் மக்கள் நெருக்கமாக வாழும் நகர்ப்புறங்களில்கூட இது தைரியமாக இனப்பெருக்கம் செய்கின்றது. இரவில் இவை மரங்களிலும் தோப்புக்களிலும் கூட்டமாக அடையும்.

இனப்பெருக்கம் : காலம் : அக்டோபர் முதல் ஏப்ரல் வரை; கூடு: மரங்களில் கூட்டமாகக் குச்சிகளால் கூடமைத்து இலை தழைகளால் மெத்தென ஆக்கி முட்டை இடும். புளியமரங்களே பெரும்பாலும் கூடமைக்கத் தேர்ந்தெடுக்கப்படுவதைக் காணலாம்.

கூட்டமாகக் கூடு கட்டும் இது தனித்தும் கூடு கட்டுவது உண்டு. காக்கையின் கூட்டையும் இது கூடாகப் பயன்படுத்துவது உண்டு. முட்டை: 4 முதல் 6 வரை; நீலங் கலந்த பச்சை நிறமாக இருக்கும்.

16. கழிநாரை அல்லது கடற்கொக்கு

50. Indian Reef Heron

Egretta gularis schistacea (Hemprich & Ehrenberg)

சிறிய வெள்ளைக் கொக்கைவிடச் சற்றுப் பெரிய இதன் உடலின் மேற்பகுதி சிலேட் நிறமாக நீலம் தோய்ந்து காணப்படும். இனப்பெருக்கக் காலத்தில் தலையில் கொண்டை வளரும். கால்கள் பசுமைகலந்த மஞ்சள் நிறம். வளராத பறவையின் உடல் முழுதும் வெண்மையாகக் காணப்படும். மேற்குக் கடற்கரைப் பகுதியில் உப்பங்கழிகளைச் சார்ந்து அபூர்வமாகக் காணலாம். பழக்க வழக்கங்கள் மற்றக் கொக்குகளைப் போன்றவையே. மற்றக் கொக்குகளோடு சேர்ந்து மரங்களில் கூடமைத்து மார்ச் முதல் ஜூலை வரையான காலத்தில் இனப்பெருக்கம் செய்யும். நீலந் தோய்ந்த பசுமையான 3 அல்லது 4 முட்டைகள் இடும்.

17. வக்கா அல்லது இராக் கொக்கு

52. Night Heron

Nycticorax nycticorax nycticorax (Linnaeus)

தோற்றம்: உண்ணிக் கொக்கைவிடச் சற்றுப் பெரியது. சுமார் 55 செ. மீ. நீளம் இருக்கும்.

தோற்றத்தில் உண்ணிக் கொக்கைப்போன்றதே என்றாலும் தடித்த உடலும் தடித்த அலகும் கொண்டது. அலகு கருப்பாகப் பசுநீலம் தோய்ந்து காணப்படும்; விழிப்படலம் இரத்தச் சிவப்பாக இருக்கும். கால்கள் பசுமைதோய்ந்த மஞ்சள் நிறம்.



வக்கா

உச்சந்தலை, பிடரி, முதுகு, தோள்பட்டை, இறகுகள், ஆகியன கருப்பாகப் பசுமை தோய்ந்து காணப்படும். கழுத்தும் இறக்கையும் வாலும் வெளிர் சாம்பல் நிறம். உடலின் அடிப்பகுதி வெண்மையாக இருக்கும்.

காணப்படும் இடங்கள் : நீர்வளம் மிக்க பகுதிகளில் தென்னிந்தியா முழுதும் காணலாம். வேடந்தாங்கலில் மிகுதியாகக் காணலாம்.

பழக்க வழக்கங்கள் : இது பகல் நேரத்தில் சிறு கூட்டமாக மரத்தில் அமர்ந்திருக்கும். காலை மாலை அந்திகளிலும், இரவிலும் வெளிப்பட்டு இரை தேடும். பறக்கும்போது இடையிடையே 'க்வாக்' எனச் சப்தமிடுவதாலேயே தமிழில் இதற்கு வக்கா எனப் பெயர் வந்திருக்கவேண்டும். கழுத்தை உள்ளே இழுத்துக் கொண்டு சீராக இறக்கை அடித்துப் பறக்கும். இரவில் பறக்கும் இதனுடைய நிழல்தோற்றம் பழந் தின்னி வௌவாலைப்போலவும், கடற்காக்கையைப்போலவும் காட்சி தரும். இரையைப் பிடிக்க மற்றக் கொக்குகளைப்போல காத்திருந்து அருகில் வந்த பின் கழுத்தை நீட்டி அலகால் கொத்திப் பிடிக்காமல் ஓடியாடி இரை தேடும்.

இனப்பெருக்கம் : காலம் : டிசம்பர் முதல் மார்ச் வரை. கூடு: குச்சிகளால் மற்றக் கொக்குகளோடு சேர்ந்து நீர் நிலையில் உள்ளேயோ, கரையிலோ நிற்கும் மரங்களில் கூடு அமைக்கும். முட்டை 4 அல்லது 5 - கடல் பசுமை நிறமாக இருக்கும்.

18. மலாய் குருகு

53. Malay or Tiger Bittern

Gorsachius Melanolophus Melanolophus (Raffles)

தோற்றம் : உண்ணிக் கொக்களவு இருக்கும் இது சுமார் 50 செ. மீ. நீளமிருக்கும்.

அலகு வெளிர் பசுஞ் சாம்பல் நிறம்; விழிப்படலம் நல்ல மஞ்சள் ; கால்கள் பசுமை தோய்ந்த பழுப்பு நிறம்.

தலை உச்சி கருப்பு ; கழுத்து செம்பழுப்பு; உடலின் மேற்பகுதி நல்ல செம்பழுப்பு நிறம். இறக்கைகளில் கருப்புக் கறைகள் காணலாம். வால் கருப்பு ; உடலின் கீழ்பகுதி கருஞ்சிவப்பாகக் கருப்பு வெள்ளைப் புள்ளிகளுடன் காட்சி தரும். வாலடி வெள்ளையாக இருக்கும்.

காணப்படும் இடங்கள் : கேரளாவில் திருவாங்கூர் பகுதியிலும் மலபார் கடற்கரையிலும் நீலகிரி மலைசார்ந்த காடுகளிலும் காணலாம். ஓரளவே காணப்படும் குருகு இது.

பழக்க வழக்கங்கள் : மற்றக் குருகுகளைப் போன்றது.

இனப் பெருக்கம்: காலம்: ஜூன் முதல் செப்டம்பர் வரை; கூடு: மரங்களில் 6 மீட்டர் உயரத்தில் குச்சிகளால் கூடு அமைக்கும். முட்டை: 4; மஞ்சள் தோய்ந்த வெண்மை நிறமாக இருக்கும்.

19. செங்குருகு

56. Chestnut Bittern

Ixoberychus Cinnamomeus (Gemelin)

தோற்றம்: கருங்குருகை விடச் சிறியது இது. சுமார் 38 செ. மீ நீளமிருக்கும். அலகு மஞ்சள் நிறம்; விழிப்படலம் மஞ்சள்; கால்கள் மஞ்சள் கலந்த பசுமை; கால் விரல்கள் மஞ்சள்.

இதன் தோற்றம் ஓரளவு குருட்டுக் கொக்கின் தோற்றத்தை ஒத்திருக்கும். உடலின் மேற்பகுதி செம்பழுப்பாக இருக்கும்.



செங்குருகு

மோவாயும் தொண்டையும் வெண்மை நிறம்; மார்பின் மேற் பகுதி செம்பழுப்பும் கருப்பும் கலந்து தோற்றம் தரும்; வயிறு வெளிர் பழுப்பாக இருக்கும். பெண் நிறம் மங்கிக் காணப்படும்.

காணப்படும் இடங்கள்: தென்னிந்தியாவில் ஆங்காங்கே நீர் வளமிக்க பகுதிகளில் நெல்வயல்களைச் சார்ந்தும் ஆற்றங்கரை, குளக்கரைகளில் உள்ள நாணற்புதரைச் சார்ந்தும் காணலாம்.

பழக்க வழக்கங்கள்: மிகவும் அச்சங்கொண்ட இயல்புடைய இதனைத் தனித்தோ இணையாகவோ காணலாம். பகல் முழுதும் நாணல் புதர்களில் பதுங்கி இருக்கும். அல்லது குளங்களை அடுத்த மரங்களின் தாழ்ந்த கிளைகளில் அமர்ந்திருக்கும். நாணல் புதரில் அமர்ந்திருக்கும் இது மனிதர் நெருங்கி விட்டால் மெலிந்த கழுத்தை வானோக்கி உயர்த்தி உயிரற்றதைப் போலப் போக்குக் காட்டி அப்படியே ஆடாது அசையாது இருக்கும். அப்பொழுது நாணல் புதரின் ஓர் ஒடிந்த தண்டு போலவே இதன் தோற்றம் இருக்கும். காலை மாலை நேரங்கள் குளங்கள் ஆற்றுப் பரப்பு ஆகியவற்றில் இரைதேடும்.

மீன், தவளை முதலிய இதன் முக்கியமான உணவு.

இனப்பெருக்கம்: காலம்: ஆகஸ்ட் முதல் டிசம்பர் வரை கூடு: வயல்களில் வளர்ந்த நெற்பயிரிடையேயும் குளக்கரை ஆற்றங்கரைகளில் நாணற் புதரிடையேயும் புல், வைக்கோல் ஆகியவற்றால் மேடைபோல் கூடு அமைத்துக் கொள்ளும். முட்டை: 5; வெண்மையான நிறம் கொண்டவை.

20. மஞ்சள் நிறக் குருகு

57. Yellow Bittern

Ixobrychus sinensis (Gmelin)

தோற்றம்: செங்குருகு அளவு உள்ள இதுவும் சுமார் 38 செ. மீ. நீளமிருக்கும்.

அலகு கருப்பு; விழிப்படலம் மஞ்சள்; கால்கள் வெளிர் சிவப்பாகவும் விரல்கள் வெளிர் மஞ்சளாகவும் இருக்கும்.

இதன் உடலின் மேற்பகுதி மஞ்சளாக இருக்கும். கீழ்ப் பகுதி மங்கிய மஞ்சளாக இருக்கும்.

காணப்படும் இடங்கள்: கேரளாவில் அபூர்வமாகக் காணலாம்.

பழக்க வழக்கங்கள்: முன்னதான செங்குருகைப் போலவே.

இனப்பெருக்கம்: செங்குருகைப் போலவே.

21. கருங் குருகு

58. Black Bittern

Dupetor flavicollis flavicollis (Latham)

தோற்றம்: குருட்டுக் கொக்கைவிடப் பெரியது. சுமார் 58 செ. மீ. நீளமிருக்கும்.

அலகு சிவப்பும் பழுப்புமாக இருக்கும்; விழிப்படலம் பொன் நிறப் பழுப்பாக இருக்கும்; கால்கள் ஆழ்ந்த பழுப்பு நிறம்;

உச்சந்தலையும் உடலின் மேற்பகுதியும் இறக்கைகளும் சிலேட் சாம்பல் நிறம். சிலபோது நல்ல கருப்பாகவும் காட்சி தருவதுண்டு. கழுத்தின் பக்கங்களில் வெளிர் மஞ்சள் கலந்த பழுப்புக் கோடுகள் காணப்படும். மோவாயும், தொண்டையும், கழுத்தும்

செம்பழுப்புக் கரையோடு கூடிய வெண்மையாக இருக்கும். மார்பும் வயிறும் கருஞ் சிலேட் நிறம். சில வெண் நிறக் கோடுகளை மேல் மார்பில் காணலாம். பெண் சற்று நிறங்கள் வெளுத்துக் காணப் படும் (Paler).

காணப்படும் இடங்கள்: கேரளாவில் உப்பங்கழி சார்ந்த பகுதி களில் ஆங்காங்கேயும் பிற தென்னிந்திய மாநிலங்களில் கடற்கரை சார்ந்து அபூர்வமாகவும் காணலாம்.

பழக்க வழக்கங்கள் : கடற்கரையை அடுத்த உப்பங்கழிகளி லும் வயல்களிலும் காணலாம். இரவு நேரத்திலேயே வெளிப்பட்டு மேயும். இருபுறமும் மரங்களடர்ந்த உப்பங்கழிகளில் காலை நேரத் தில் படகில் செல்பவர்கள் இது படகு நெருங்கும்போது எழுந்து பறப்பதைக் காணலாம். பகல் முழுவதும் புதர்களில் மறைந் திருக்கும்.

மீன், தவளை, புழு, பூச்சி முதலியன முக்கிய உணவு.

ஆழ்ந்த, மெல்லிய, குரலில் கத்தும் (Booming Call).

இனப்பெருக்கம் : காலம்: மே முதல் ஆகஸ்ட் வரை. கூடு: சதுப்பு நிலத்தில் முட்புதரில் புல், இலை, சிறுகுச்சிகள், நீர்த் தாவரம் ஆகியன கொண்டு கூடு அமைக்கும். முட்டை: 4; லேசான பச்சை நிறங்கொண்டது.

Family: Ciconiidae

நாரைகள்

(STORKS)

22. மஞ்சள் மூக்கு நாரை

60. Painted Stork

Ibis Leucocephalus (Pennant)

தோற்றம்: பெரிய சாம்பல் கொக்கு அளவுள்ள இது சுமார் 100 செ. மீ. நீளமிருக்கும்.

அலகும் தூவியற்ற முகப் பகுதியும் ஆரஞ்சு மஞ்சள் நிறமாக இருக்கும்; விழிப்படலம் வெளிர் மஞ்சளாக இருக்கும்; கால்களும் விரல்களும் பழுப்பு நிறம்.

முதல் இறகுகள், துணை இறகுகள், வால் ஆகியன தவிர உடலின் மேற் பகுதி வெண்மையாக இருக்கும். முதலிறகுகளும், துணை இறகுகளும் பளபளக்கும் பசுமை கலந்த கருப்பாக இருக்கும்.

மஞ்சள் மூக்கு நாரை (துணை அருகில் நிற்க அடைகாத்தல்)

வால் மேல் போர்வை இறகுகளும், போர்வை இறகுகளும் ரோசா நிறம் தோய்ந்த வெண்மையாக இருக்கும். வால் கருப்பு நிறம். கீழ்மார்பில் அகன்ற பசுமை தோய்ந்த கருப்புப் பட்டை இருக்கும். உட்கார்ந்திருக்கும் பறவைகள் மட்டுமே வெண்மை, கருப்பு, ரோசா ஆகிய மூவண்ணத் தோற்றம் தரும். உயரப் பறக்கும்போது கீழிருந்து பார்த்தால் கருப்பு நிறமே சிறப்பாகத் தெரியும். பெண், ஆணைப் போலவே தோற்றம் தரும்.

காணப்படும் இடங்கள்: தென்னிந்தியா முழுவதும் நீர்வளமிக்க பகுதிகளில் காணலாம். தமிழ் நாட்டில் பல மாவட்டங்களில் கூழைக்கடாவோடு சேர்ந்து இனப்பெருக்கம் செய்கிறது.

பழக்க வழக்கங்கள்: மிகுந்த ஆழமற்ற நீரில் கூட்டமாக அமைதியாக நின்று மீன்களையும் பிற நீர் வாழ் உயிர்களையும் பிடிக்கும். நீரில் உடலின் பெரும் பகுதி மூழ்க அலகைத் திறந்தபடி நடந்து சென்றும் சிலபோது மீன் பிடிக்கும். பிற்பகல் நேரத்தில் காற்றில் மிதந்து உயரப் பறந்து கழுகுகள் போலச் சுற்றிச் சுற்றி

வட்டமிட்டுப் பறந்து செல்லக் காணலாம். சதுப்பு நிலங்கள், ஆற்றங்கரைகள், பெரிய ஏரிகள் ஆகியவற்றைச் சார்ந்து காண லாம். வயிறு நிரம்பிய பின் நீரில் அமைதியாக நின்றபடி தின்ற உணவைச் சீரணிக்கும். குஞ்சுகளுக்கு இரை கொண்டு வந்து ஊட்டும்போது மிகுந்த மீன்கள் கூடுகளின்கீழ் நழுவி விழக் காணலாம்.

மீன், நண்டு, தவளை ஆகியன முக்கிய உணவு.

இனப்பெருக்கம்: காலம்: ஜனவரி முதல் மார்ச் வரை. கூடு: கிராமங்களை அடுத்து நீரினுள்ளோ நீரருகிலோ நிற்கும் மரங்களில் கூடுகளை அமைத்துக் கொள்ளும். பறவைகளின் அளவை நோக்கக் குச்சிகளால் இவை கட்டிக் கொள்ளும், கூடுகள் அள வில் சற்றுச் சிறியனவே. முட்டை: 4; வெண்மை நிறமாக இருக்கும்.

23. நத்தை குத்தி நாரை

61. Open Billed Stork

Anastomus oscitans (Boddaert)

தோற்றம்: பெரிய சாம்பல் கொக்கைவிடச் சிறியது. சுமார் 80 செ. மீ. நீளமிருக்கும்.

மேல் அலகுக்கும் கீழ் அலகுக்கும் இடையே இடைவெளி இருக்கும். பருத்த இதன் அலகு சுமார் 15 செ. மீ. நீளமிருக்கும். வெளிர் பச்சை நிறமாக அடிப் பகுதி சிவப்பு நிறந்தோய்ந்து



நத்தை குத்தி நாரை

காணப்படும்; விழிப்படலம் வெளிர் பழுப்பு நிறம்; கால்கள் வெளிர் வெண் சிவப்பு நிறம். உடல் முழுதும் வெண்மை நிறம். இறக்கை களும் வாலும் கருப்பு நிறம்.

காணப்படும் இடங்கள்: தென்னிந்தியா முழுவதும் நீர்வளம் மிகுந்த பகுதிகளில் காணலாம்.

பழக்க வழக்கங்கள்: சிறு கூட்டமாகவும் பெருங் கூட்டமாக வும் காணப்படும். இதன் முக்கிய உணவு நத்தை. இடைவெளி

யோடு கூடிய வலிமை வாய்ந்த அலகால் சற்றும் சிரமமின்றி மிக எளிதில் நத்தை ஓட்டினை ஒடித்து உள்ளே இருக்கும் நத்தையை விழுங்குகின்றது.

இனப்பெருக்கம் : காலம் : ஜூன் முதல் ஜனவரி வரை. கூடு : பல பறவைகள் ஒரே மரத்தில் பெரிய குச்சிகளால் மேடை போன்ற கூடு அமைக்கின்றன. முட்டை : 2 முதல் 5 வரை ; பெரும்பாலும் 4 ; வெண்மையாக இருக்கும்

24. வெண் கழுத்து நாரை

62. White Necked Stork

Ciconia episcopus episcopus (Boddaert)

தோற்றம் ; பெரிய சாம்பல் கொக்கைவிடச் சிறியது. சுமார் 75 செ. மீ. நீளமிருக்கும்.

அலகு கொம்பு நிறம் பழுப்பாக இருக்கும் விழிப்படலம் சிவப்பாக இருக்கும் ; கால்கள் விரல்கள் உட்பட சிவப்பு நிறம்.

உச்சந்தலை கருப்பு நிறம்; வயிறும் வால் கீழ் இறகுகளும் வெண்மை நிறம்; முதுகும் எஞ்சிய உடற் பகுதிகளும் ஊதாவும் வெளிர் பசுமையும் கலந்த பளபளக்கும் கருப்பு நிறம்.

காணப்படும் இடங்கள் : தென்னிந்தியா முழுதும் நீர்வளம் மிகுந்த பகுதிகளில் ஆறுகளையும், ஏரிகளையும், வயல்களையும் சேர்ந்து திரியக் காணலாம்.

பழக்க வழக்கங்கள் : ஆழமற்ற நீரில் சிறு கூட்டமாக நின்று கொண்டிருக்கும். விளை நிலங்கள் வயல்கள் ஆகியவற்றின் இடையேயும் இரை தேடிக் கொண்டிருக்கக் காணலாம்.

புழு பூச்சிகள், ஊர்வன, தவளை, நண்டு, நத்தை, மீன் முதலிய பலவற்றையும் உணவாகக் கொள்ளும்.

இனப்பெருக்கம் : காலம் : ஜனவரி முதல் மார்ச் முடிய ; கூடு: பெரிய மரங்களில் மிக உயரத்தில் குச்சிகளால் கூடமைத்து இலை, தழைகளால் மெத்தெனச் செய்யும் கூட்டின் அகலம் 125 செ. மீ. வரை இருக்கும். முட்டை 4 ; நீலந் தோய்ந்த வெண்மை நிறமாக இருக்கும்.

Family: Threskiornithidae

அரிவாள் மூக்கன், கரண்டிவாயன்
(IBISES AND SPOONBILLS)

25. வெள்ளை அரிவாள் மூக்கன்

69. White Ibis

Threskiornis melanocephala (Latham)

தோற்றம்: வெள்ளைக் கொக்கைவிடச் சற்றுப் பெரியது. சுமார் 75 செ. மீ. நீளம் இருக்கும்.

அரிவாள் போல் வளைந்த 15 செ, மீ. நீளமுள்ள அலகு கருப்பு நிறம்; விழிப்படலம் செம்பழுப்பு; கால்கள் பளபளக்கும் கருப்பு நிறம்.

தலையும் கழுத்தும் கருப்பாக நீலந் தோய்ந்து காணப்படும். உடம்பின் பிற பகுதிகள் வெண்மையாக இருக்கும். இனப்பெருக்கக் காலத்தில் வெண்மையாகத் தூவிகள் கழுத்திலிருந்தும் மேல் மார்பிலிருந்தும் தொங்கும். அப்போது முதுகில் சில இறகுகள் சாம்பல் நிறமாகத் தோற்றம் தரும்.

காணப்படும் இடங்கள்: தென்னிந்தியா முழுவதும் நீர்வளம் மிக்க பகுதிகளில் காணலாம். வேடந் தாங்கலில் இதனைக் காணலாம்.

பழக்க வழக்கங்கள்: இதனைச் சிறு கூட்டமாகக் காணலாம். அலகால் சேற்றைக் கிளறி ஆராய்ந்து இரைதேடும். ஆழமில்லாத நீரில் தலையை நீருக்குள் மூழ்கடித்தபடியும் இரை தேடக் காணலாம். இரை தேடி சுறுசுறுப்பாக அலைந்தபடி இருக்கும்.

புழு பூச்சி நத்தை, நண்டு முதலியன இதன் உணவு.

காணப்படும் இடங்கள்: காலம்: நவம்பர் முதல் பிப்ரவரி வரை. கூடு: சிறு கூட்டமாக ஆல், அரசு, புளி, முதலான மரங்களில் மற்ற நாரைகளோடும் கொக்குகளோடும் சேராது கூடு அமைத்துக் கொள்ளும். பறவைகள் தனித்தனியே கூடு அமைத்துக் கொள்வதும் உண்டு. கூடு 50 செ. மீ. குறுக்களவுள்ளதாகக் குச்சிகளால் அமைக்கப்படும். இலை தழைகளால் மெத்தெனச் செய்யும். முட்டை: 2 முதல் 4 வரை; நீலமோ, பசுமையோ கலந்த வெண்மை. பழுப்புப்புள்ளிகளை முட்டைகளின் மீது காணலாம்.

26. கருப்பு அரிவாள் மூக்கன்
70. Indian Black Ibis
Pseudibis papillosa papillosa (Temminck)

தோற்றம்: வெள்ளை அரிவாள் மூக்கனைவிட அளவில் சிறியது. சுமார் 52 செ. மீ. நீளமிருக்கும்.

அலகு பசுமை தோய்ந்த ஈய நிறம்; விழிப்படலம் லேசான ஆரஞ்சுச் சிவப்பு நிறம்; கால்களும் விரல்களும் செங்கல் சிவப்பு நிறம்.



கருப்பு அரிவாள் மூக்கன்

இதற்கு உச்சந் தலையில் முக்கோண வடிவில் சிவந்த நிற முடைய சிறு தூவிகளாலான கொண்டை உண்டு. உடல் முழு வதும் கருத்த ஆலிவ் பழுப்பாக இருக்கும். முதுகில் சற்று பள பளக்கும் பசுமை தோய்ந்திருக்கக் காணலாம், இறக்கைகளில் வெள்ளைத் திட்டு காணலாம். எஞ்சிய இறக்கைப் பகுதிகள் பள பளக்கும் ஊதாவும் பசுமையும் தோய்ந்த கருப்பாக இருக்கும்.

காணப்படும் இடங்கள்: ஆந்திரா, மைசூர் மாநிலங்களில் காட்டு நிலப் பகுதிகளில் காணலாம். இது நீர்வள மிகுந்த மருத நிலப் பாங்கான இடங்களை விரும்பாது முல்லை நிலப் பாங்கான இடங்களையே விரும்பி வாழ்வது.

பழக்க வழக்கங்கள்: புஞ்செய் காடுகளில் இணையாக மேய்ந்து திரியும். ஒரு குறிப்பிட்ட பகுதியில் இரை தேடிய பின் வழக்கமாக ஒரே மரத்தில் நாளும் இரவிலே சென்று அடையும். V வடிவில் கூட்டமாக ஒரே சீராக இறக்கை அடித்துப் பறக்கும். மிதந்து பறப் பதும் உண்டு.

நத்தை, பூச்சி புழுக்கள், தானியங்கள், ஊர்வன ஆகியன இதன் உணவு.

இனப்பெருக்கக் காலத்தில் உரத்த கரகரப்பான குரலில் கத்தும்.

இனப்பெருக்கம்: காலம்: நவம்பர் முதல் ஜனவரி வரை கூடு: மரங்களில் உயர குச்சிகளால் பெரிய கூடமைத்து வைக் கோல், இறகுகள், தழைகள் ஆகியவற்றுல் மெத்தெனச் செய்து முட்டையிடும். பெரும்பாலும் தனித்தே கூடு அமைக்கும். கழுகு கள், பருந்துகள் ஆகியவற்றின் பழைய கூடுகளிலும் முட்டையிடும். முட்டை 2 முதல் 4 வரை; வெளிர் பசுமையாகப் பழுப்புப் புள்ளி களும் கோடுகளும் பெற்றிருக்கும்.

27. கரண்டிவாயன்

72. Spoon Bill

Platalea leucorodia majer (Temminck & Schlegel)

தோற்றம்: பெரிய சாம்பல் கொக்கைவிடச் சிறிய இது சுமார் 82 செ. மீ. நீளமிருக்கும்

அலகு தட்டையாகக் கரண்டி போன்ற வடிவில் கருப்பு நிற மாக நுனிப்பகுதி மஞ்சளாக இருக்கும். வளராத பறவைகளின் அலகு முழுவதும் மஞ்சள் நிறமாக இருக்கும். கால்கள் கருப்பு நிறம்.

நீண்ட கால்களும் நீண்ட கழுத்துமுடைய இதன் உடல் முழு தும் வெண்மையாக இருக்கும். கழுத்தின் அடிப்பகுதியில் மஞ்சள்

கரண்டிவாயன்

தோய்ந்த பழுப்புக் கறை திட்டுப்போலக் காணப்படும். இனப் பெருக்கக் காலத்தில் நீண்ட கொண்டை வளரும்.

காணப்படும் இடங்கள்: தென்னிந்தியா முழுவதும் நீர்வளம் மிகுந்த பகுதிகளில் காணலாம்.

பழக்க வழக்கங்கள்: சதுப்பு நிலங்கள், குளங்கள், உப்பங்கழிகள், ஆற்றுக்கழி முகங்கள் ஆகியவற்றில் சிறு கூட்டமாகக் காணலாம். காலையிலும் மாலையிலும் சுறு சுறுப்பாக இரைதேடும். ஆழமில்லாத நீர்ப் பரப்பில் தலையை முன் நீட்டியபடி பாதி திறந்த அலகோடு சிறு கூட்டமாக அரை வட்ட வடிவில் சேற்றைக் கலைத்தபடி முன்னேக்கிச் செல்லும். ஒரே சீராக இறக்கை அடித்தபடி V வடிவிலோ, நேர்கோட்டிலோ மெல்லப் பறந்து செல்லும்.

தவளை, நத்தை, பூச்சி புழுக்கள், நீர்த்தாவரங்கள் சிறு மீன்கள் ஆகியன இதன் உணவு.

அலகுகளை ஒன்ருேடு ஒன்று மோதும்போது ஓசையும் சிறு உறுமலும் தவிர வேறு குரலொலி எழுப்புவதில்லை.

இனப்பெருக்கம்: காலம்: நவம்பர் முதல் பிப்ரவரி வரை. கூடு: கொக்குக் கூட்டங்களோடு சேர்ந்து நீரிலோ நீரருகிலோ நிற்கும் மரங்களில் குச்சிகளால் பெரிய கூடமைக்கும். மனித சஞ்சாரமற்ற இடங்களிலும் ஊர் அருகிலும் இவற்றின் கூடுகளைக் காணலாம். முட்டை 4; செம்பழுப்புப் புள்ளிகளோடு கூடிய வெண்மை நிறங் கொண்டவை

Family: Phoenicopteridae

பூநாரைகள்
(FLAMINGOS)

28. பூ நாரை
73. Flamingos
Phoenicopterus roseus (Pallas)

தோற்றம்: இதன் உடல் வீட்டு வாத்தின் பருமன் இருக்கும். நன்ருக நிமிர்ந்து நிற்கும்போது 120 செ மீ. உயரம் இருக்கும்.

அலகு வெளிர் சிவப்பாக சற்று உள்நோக்கி வளைந்து திரண்டு காணப்படும். அலகின் முனை கருப்பாக இருக்கும். விழிப்படலம் மஞ்சள் நிறம்; 60 செ. மீ. நீளமுள்ள நீண்ட கால்கள் இளஞ் சிவப்பாக இருக்கும்.



பூநாரைகள் கூட்டமாகப் பறந்து செல்லுதல்

உடல் முழுதும் வெண்மை நிறம், இறக்கைகள் நல்ல சிவப்பாக இருக்கும்.

காணப்படும் இடங்கள் : தென்னிந்தியாவில் கடற்கரைப் பகுதிகளில் குளிர் காலத்தில் காணலாம், கோடிக்கரை, பாம்பன், ராமேஷ்வரம், தனுஷ்கோடி, ஆகிய பகுதிகளில் கடற்கரை சார்ந்த பகுதியில் காணலாம் (தமிழ் நாட்டுப் பறவைகள் வரிசையில் திரு. எம். ஏ. பாத்சா P. Minorரும் ராமேஷ்வரம் தீவில் காணப்படுவதாகக் குறித்துள்ளார்).

பழக்க வழக்கங்கள் : ஆழமற்ற நீரில் நின்று நீண்ட கால்களுக்கிடையே கழுத்தை வளைத்துத் தலையைத் தொங்க வைத்தபடி இரை தேடும். அப்படி இரை தேடும்போது அதனுடைய கீழ் அலகு மேலே இருக்கும்படியாக அலகு அமைப்பு இருப்பது குறிப்பிடத்தக்கது. மேல் அலகின் விளிம்பு கூரிய மண்வெட்டியைப் போலத் தரையைச் செதுக்கும். அப்போது சேரும் நீரும் அதிலுள்ள பூச்சி புழுக்களும் கீழ் அலகில் சேரும். தலையை அப்படியும் இப்படியும் அசைப்பதால் நீர் வெளிப்பட, சேர்ந்த இரையை விழுங்குகிறது. எப்பொழுதும் கூட்டமாகவே காணலாம். பறக்கும்போது கழுத்தை முன்நீட்டிக் கூட்டமாக V வடிவில் பறக்கும்.

நத்தை, நண்டு, சிறு புழு பூச்சிகள், மீன், பாசி முதலியன இதன் உணவு.

உரக்கக் கத்துவதோடு, வாத்துப்போல 'ஹோங்' எனவும் குரல் கொடுக்கும்.

இனப்பெருக்கம் : காலம் : செப்டம்பர் முதல் அக்டோபர் வரை அல்லது பிப்ரவரி முதல் ஏப்ரல் வரை. இந்தியாவில் குஜராத் மாநிலத்தில் கட்ச் பகுதியில் ராணுவில் இனப்பெருக்கம் செய்கிறது. கூடு: சேற்றால் அரை அடி முதல் ஓரடி உயரமாகக் கூம்பு வடிவில் கட்டப்பட்ட மண் மேடைகளில் குழியில் முட்டையிடும். முட்டை: 1 அல்லது 2; வெளிர் நீலச் சாம்பல் சிறிது கலந்த வெண்மை நிறம். ஆணும் பெண்ணும் அடைகாத்துக் குஞ்சுகளைப் பேணும்.

வரிசை: ஆன்செரி:ஃபார்மிஸ்

Order: Anseriformes

Family: Anatidae

வாத்துக்கள், கூசுகள், அன்னங்கள்
(DUCKS, GOOSE, SWANS)

29. பட்டைத் தலை வாத்து

82. Bar-headed Goose

Anser indicus (Lathan)

தோற்றம்: வீட்டு வாத்தளவு உள்ள இது சுமார் 75 செ. மீ. நீளமிருக்கும்.

அலகு ஆரஞ்சு மஞ்சள் நிறம்; விழிப்படலம் பழுப்பு; கால்கள் ஆரஞ்சு நிறம்.



பட்டைத் தலை வாத்து

வெண்மையான தலையில் குதிரை லாடம் போன்ற இரண்டு கருப்பு அல்லது ஆழ்ந்த பழுப்புப் பட்டை காணலாம். ஒன்று பின் தலையிலும் மற்றொன்று பின் கழுத்திலும் காணப்படும். கன்னம், முகம், கழுத்தின் பக்கங்கள் ஆகியன வெண்மையாக இருக்கும்.

உடலின் மேற்பகுதி வெண்மை; இறக்கைகளில் கரும் பழுப்பும் காணலாம்; வால் கருஞ் சாம்பல் நிறம்; உடலின் கீழ்ப்பகுதி கருஞ் சாம்பலும் மஞ்சளும் தோய்ந்த வெண்மை நிறமாக இருக்கும்.

காணப்படும் இடங்கள்: குளிர்காலத்தில் மைசூர் ஆந்திரா மாநிலங்களில் மட்டும் ஓரளவு ஆங்காங்கு காணலாம். பாம்பன் கடற்கரையைச் சார்ந்த பகுதிகளில் காணப்படுவது இவ் வாத்தே என்ற குறிப்பு உள்ளது.

பழக்க வழக்கங்கள்: நவம்பர் முதல் தென்னிந்தியாவில் காணப்படும் இது மார்ச் மாதத்தில் திபேத் பகுதி நோக்கித் திரும்புகிறது. காலை மாலை அந்திகளில் இரை தேடுவது. கூட்டமாக விளைநிலங்களில் இரை தேடும். ஆற்றிடைக் குறை மணல் திட்டுக்களில் நின்று ஓய்வுகொள்ளும். நெருங்குவது கடினம். V வடிவிலோ, நெடுக்காகவோ காலை மாலைகளில் பறக்கும்.

இனப்பெருக்கம்: ஏப்ரல், ஜூன் மாதங்களில், லடாக், திபேத் ஆகிய பகுதிகளில் இனப்பெருக்கம் செய்கிறது.

30. சிறிய சீழ்க்கைச் சிறகி

88. Lesser Whistling Teal or Tree Duck

Dendrocygna javanica (*Horsfield*)

தோற்றம்: தோற்றம் வீட்டு வாத்தைவிடச் சிறியது இது. சுமார் 40 செ. மீ. நீளமிருக்கும்.

அலகு நீலங் கலந்த ஈய நிறம்; விழிப்படலம் பழுப்பு; கால்கள் நீலங் கலந்த ஈய நிறம்.

தலை, பிடரி பழுப்பு நிறம்; முகம், காது, கழுத்து ஆகியன வெளிர் மஞ்சள் கலந்த பழுப்பாக இருக்கும். முதுகு சிலேட் நிறம்; பிட்டம் கருப்பு; மேல் சிறகுப் போர்வை இறகுகள் செம்பழுப்பு நிறம். வால் கரும் பழுப்பாக இருக்கும். இறக்கைகள் கருப்பு. மோவாயும் தொண்டையும் வெண்மை. மேல் மார்பு மஞ்சள் கலந்த செம்மை; வயிறு செம்பழுப்பு. வால் கீழ் இறகுகள் வெண்மை நிறம்.

காணப்படும் இடங்கள்: தென்னிந்தியாவில் நீர் வளமிக்க பகுதிகளில் ஆண்டு முழுதும் தங்கி வாழக் காணலாம்.

பழக்க வழக்கங்கள் : நீர்த் தாவர மிகுந்த நீர் நிலைகளிலும் நாணல் புதர் மலிந்த ஏரிக்கரைகளிலும் கூட்டமாகக் காணலாம். தாமரைக் கோழியைப்போல மெல்ல இறக்கை அடித்து ஏரிகளின் மேல் சீழ்க்கைக்குரல் கொடுத்தபடி சுற்றிச் சுற்றிப் பறந்தபடி இருக்கும். இதன் சீழ்க்கைக்குரல் 'சீஸிக், சீஸிக்' எனக் கூறுவது போலிருக்கும்.

இனப்பெருக்கம் : காலம்: ஜூலை முதல் ஆகஸ்ட் வரை; கூடு : மரங்களில் பொந்துகளிலும், மரக்கிளைகளிடையே உள்ள குழிவுகளிலும், காக்கை முதலான பிற பறவைகளின் பழைய கூடு களிலும் முட்டையிடும். நீரருகே முட்புதர்களில் தானே கூடு கட்டிக்கொள்வதும் உண்டு. முட்டை: 8 முதல் 10 வரை; வெண்மையாக இருக்கும்.

31 கிளுவை
94. Comman Teal
Anas crecca crecca (*Linnaeus*)

தோற்றம் : வீட்டு வாத்தைவிடச் சிறியது. சுமார் 20 செ. மீ. நீளமிருக்கும்.

அலகு கருப்பு, விழிப்படலம் பழுப்பு; கால்கள் சாம்பல் கலந்த பழுப்பு நிறம்.



கிளுவை - 1

ஆணின் உடல் முழுதும் கருஞ் சாம்பல் வண்ணமாக இருக்கும்; தலை செம்பழுப்பு நிறம்; மேலும் கீழும் வெள்ளை விளிம்போடு கூடிய கரும் பச்சைக்கோடுகள் கண்களிலிருந்து பிடரி நோக்கிச் செல்லக் காணலாம். பறக்கும்போது கருப்பு, பச்சை, மங்கிய மஞ்சள் நிறம் ஆகியன இறக்கைகளில் தெரியும்.

பெண் பறவை கரும் பழுப்பும் வெளிர் பழுப்புமான பெரும் புள்ளிகள் கொண்டதாக, மார்பும் வயிறும் மங்கிய நிறத்தோடு கருப்பும் பச்சையுமான இறக்கைகளோடு காட்சி தரும்.

காணப்படும் இடங்கள் : குளிர்காலத்தில் தென்னிந்தியா முழுதும் காணலாம். கேரளக் கடற்கரை ஓரம் சார்ந்த பகுதிகளில் மட்டும் காணப்படுவதில்லை.

பழக்க வழக்கங்கள் : வெளி நாட்டிலிருந்து வலசை வரும் வாத்துக்களில் முக்கியமானது. வேட்டைக்காரர்கள் இதன் சுவை கருதி இதனை விரும்பி வேட்டையாடுவர். வேகமாகப் பறக்கும் ஆற்றல்வாய்ந்த இதனை நீர்நிறைந்த வயல்களிலும் நாணல் புதர் சூழ்ந்த ஏரிகளிலும் காணலாம்.

தானியங்களே இதன் முக்கிய உணவு.

இனப்பெருக்கம் : தென்னிந்தியாவிற்கு வெளியே.

32. ஊசி வால் வாத்து
93. Pintail
Anas acuta (Linnaeus)

தோற்றம் : வீட்டு வாத்தைவிடச் சிறிய... நீளமிருக்கும்.

அலகு ஈய நிறம்; விழிப்படலம் பழுப்பு; கால்கள் சிலேட் நிறம் போன்ற கருப்பு நிறம்.

ஆண் : உடலின் மேற்பகுதி பென்சில் சாம்பல் நிறமாக இருக்கும்; தலை சாக்லெட் நிறம்; தலையிலிருந்து இரு புறமும் வெள்ளைப் பட்டை கீழ்நோக்கிச் சென்று கழுத்து வெள்ளையோடு கலக்கக் காணலாம். மார்பு, வயிறு ஆகியன வெண்மை; கூரிய நீண்ட வால் எளிதில் அடையாளம் காண உதவும்.

பெண் : உடலின் மேற்பகுதி பழுப்பும் வெளிர் மஞ்சளுமான சிறு வட்டங்களாக அலங்கரிக்கப்பட்டிருக்கும். இதற்கு நீண்ட கூரிய வால் கிடையாது.

காணப்படும் இடங்கள் : குளிர்காலத்தில் தென்னிந்தியா முழுதும் காணலாம். கேரளாவின் கடற்கரைப் பகுதிகளில் காண முடியாது.

பழக்க வழக்கங்கள் : ஆணும் பெண்ணுமான இணையாகவோ, சிறு கூட்டமாகவோ நாணல் புதரோடு கூடிய ஏரிகளிலும் குளங்களிலும் திரியக் காணலாம். பிற வாத்துக்களோடு கலந்தும் காணப்படும். வேட்டைக்காரர் சுட்டவுடன் முதலில் பறந்து எழுந்து

தப்ப முயல்வது இதுவே. வெள்ளம் புகுந்த வயல்களிலும் ஏரிகளின்மேல் எல்லையிலும் சேற்றைக் கிளறித் திரியக் காணலாம்.

தானியங்களும் தாவரப் பொருள்களுமே முக்கிய உணவு.

இனப்பெருக்கம் : தென்னிந்தியாவிற்கு வெளியே.

33. கருஞ்சாம்பல் நிற வாத்து
97. Spotbill Duck
Anas poecilorhyncha poecilorhyncha (J. R. Forster)

தோற்றம் : வீட்டு வாத்தளவு உள்ள இது சுமார் 60 செ. மீ. நீளம் இருக்கும்.

அலகு முனை மஞ்சளாகவும் அடிப்பகுதியில் ஆரஞ்சுச் சிவப்புக் கறையுடனும் கருப்பாக இருக்கும் ; விழிப்படலம் பழுப்பு ; கால்கள் ஆரஞ்சுச் சிவப்பு நிறம்.

இதன் உடலின் மேற்பகுதி முழுதும் வெளிர் பழுப்பாகவும் ஆழ்ந்த பழுப்பாகவுமான கறைகள் ஒரே சீராக அமைந்திருக்கும். இறக்கையில் கரும் பச்சைப் பட்டையைக் காணலாம்.

காணப்படும் இடங்கள் : தென்னிந்தியா முழுவதும் கேரளக் கடற்கரைப் பகுதிகள் தவிரக் காணலாம்.

பழக்க வழக்கங்கள் : தென்னிந்தியாவில் ஆறுகளில் காணப்படுவதில்லை. இணையாகவோ, சிறு கூட்டமாகவோ ஏரிகளின்மேல் காணலாம். நீரின் மேற் பரப்பில் காணப்படும் தாவரப் பொருள்களை உணவாகக்கொள்ளும். ஆழமற்ற நீர்ப் பகுதிகளிலும் இரை தேடித் தின்னக் காணலாம். வேட்டைக்காரர்கள் இதனை விரும்பி வேட்டையாடுவர்.

இனப்பெருக்கம் : காலம் : அக்டோபர் முதல் டிசம்பர் வரை. மைசூர் பகுதியில் இனப்பெருக்கம் செய்கிறது. கூடு : ஏரிக் கரைகளில் புல்லால் கூடு அமைக்கும். முட்டை : 6 முதல் 12 வரை ; பசுமைதோய்ந்த வெண்மையாக இருக்கும்.

34. நீல இறகுச் சிறகி
104. Garganey or Blue Winged Teal
Anna querquedula (Linnaeus)

தோற்றம் : வீட்டு வாத்தைவிடச் சிறியது. சுமார் 40 செ. மீ. நீளம் இருக்கும்.

அலகு கருப்பு நிறம்; விழிப்படலம் ஆழ்ந்த பழுப்பு; கால்கள் லேசான கருப்பு நிறமாக இருக்கும்.

ஆண்: தலையில் வெளிர் சிவப்பும் பழுப்புமான புள்ளிகளைக் காணலாம்; கண்ணுக்குமேல் அகன்ற வெண்மையான நீண்ட புருவம் போன்ற கோடு இருப்பது இதனை எளிதில் அடையாளம் கண்டுகொள்ள உதவும். தோள்பட்டையும் இறகுகளும் நீல நிறச் சாம்பல் வண்ணமாக இருக்கும். மார்பும் வாலடியும் கரும் பழுப்புக் கோடுகள் நிறைந்து சிவப்புத் தோய்ந்த மஞ்சள் நிறமாக இருக்கும்.

பெண்: பெண் கிளுவையைப் பெரிதும் ஒத்திருக்கும். கண்ணின் மேற்புருவத்தைக் கொண்டு பெண் கிளுவையிலிருந்து வேறுபடுத்தி அறியலாம். பறக்கும்போது மங்கிய நிறங் கொண்ட இறகுகள் இதனை ஆணிலிருந்து வேறுபடுத்திக் காட்டும்.

காணப்படும் இடங்கள்: கேரளக் கடற்கரை தவிர தென்னிந்தியாவின் பிற பகுதிகளில் புல்லும் புதரும் நிறைந்த குளங்களில் குளிர் பருவத்தில் காணலாம்.

பழக்க வழக்கங்கள்: கிளுவையின் பழக்க வழக்கங்களை ஒத்தவை.

35. செங்களியன்

107. Red Crested Pochard

Netta rufina (Pallas)

தோற்றம்: வீட்டு வாத்தைவிடச் சிறியது. சுமார் 52 செ. மீ. நீளமிருக்கும்.

அலகு நல்ல சிவப்பு; விழிப்படலம் இரத்தச் சிவப்பு; கால்கள் வெளிர்த்த பழுப்பு நிறம்.

தலை உச்சியும் கொண்டையும் செம்பழுப்பு நிறம்; கன்னம், மோவாய், தொண்டை கழுத்தின் பக்கங்கள் ஆகியன. கருஞ் சிவப்பு; மேல் முதுகு, பக்கங்கள், மரர்பு, வயிறு, வாலடி ஆகியன ஆழ்ந்த பழுப்புநிறந் தோய்ந்த கறுப்பு நிறமாக இருக்கும்.

பெண் சற்றுச் சிறியதாக உடலின் மேற் பகுதி முழுதும் சாம்பல் பழுப்பாகவும் கீழ்ப்பகுதி வெண்மையாகவும் இருக்கும்.

காணப்படும் இடங்கள் : குளிர் காலத்தில் தென்னிந்தியாவில் சில பகுதிகளில் காணலாம். திருச்சிராப்பள்ளி, செங்கல்பட்டு மாவட்டங்களில் காணப்பட்ட குறிப்புண்டு.

பழக்க வழக்கங்கள் : பிற வாத்துக்களைப்போல.

இனப்பெருக்கம் : தென்னிந்தியாவிற்கு வெளியே.

36. தாமரைச் சிறகி

114. Cotton Teal

Nettapus coromandelianus coromandelianus (Gmelin)

தோற்றம் : புறாவை விடச் சற்றுப் பெரியது. சுமார் 38 செ மீ. நீளமுள்ள இது நம் நாட்டில் காணப்படும் வாத்துக்களுள் சிறியது.



தாமரைச் சிறகி

அலகு பழுப்புக் கலந்த மஞ்சள் நிறம்; விழிப்படலம் பழுப்பு : கால்கள் சாம்பற் பழுப்பு நிறம்.

இதன் அலகு மிகச் சிறியதாக அடி பருத்திருக்கும். தலையும் பிடரியும் கருப்பு ; முதுகு தோள்பட்டை இறகு, சிறகுப் போர்வை இறகுகள் பசுமையும் ஊதாவும் கலந்த கறுப்பு நிறம். இறக்கைகளில் வெள்ளைப் பட்டை காணலாம். கழுத்தில் ஒரு கருப்பு வளையம் இருக்கும். பெண்ணுக்குக் கழுத்தில் கருப்பு வளையமும் இறக்கைகளில் வெள்ளைப் பட்டையும் இராது.

காணப்படும் இடங்கள் : தென்னிந்தியா முழுவதும் குளிர் காலத்தில் நாணல் புதர்கள் சூழ்ந்த ஏரிகளிலும் குளங்களிலும் காணலாம். தென் மைசூரில் ஓரளவு மிகுதியாகக் காணப்படும். இது பிற பகுதிகளில் அவ்வளவாகக் காணப்படுவதில்லை.

பழக்க வழக்கங்கள் : கிராமப் புறங்களில் உள்ள குளங்களில் கூட வேட்டைக்காரர்கள் தொந்தரவு இல்லையானால் தாராளமாக வந்து பழகும். நீரில் முக்குளித்து மறையவும், வேகமாக எழுந்து பறந்து தப்பவும் வல்லது. பறக்கும்போது க்ளுக் என்ற சப்தம் கேட்கலாம். நீர்த் தாவரங்கள், நீர்வாழ் சிற்றுயிர்கள் ஆகியன இதன் உணவு.

இனப்பெருக்கம் : தென்னிந்தியாவிற்கு வெளியே.



நாமணைச் சிறகு

37. செண்டு வாத்து

115. Nokhta or Comb Duck

Sarkidiornis melanotes melanotes (Pennant)

தோற்றம்: வீட்டு வாத்தைவிடச் சற்றுப் பெரியது. சுமார் 75 செ. மீ. நீளம் இருக்கும்.

அலகு கருப்பு நிறம்; அலகின்மேல் ஆணுக்கு இனப் பெருக்கக் காலத்தில் உருண்டையான கருப்புநிறச் செண்டு வளரும். விழிப் படலம் பழுப்பு; கால்கள் நல்ல ஆழ்ந்த பழுப்பு நிறம்; இதன் தலையும் கழுத்தும் கரும் புள்ளிகளோடு இருக்கும். முதுகு நீலந் தோய்ந்த கருப்பாகவும், மார்பும் வயிறும் வெண்மையாகவும் இருக்கும்.

பெண் ஆணைவிடச் சிறியதாக முதுகின் நிறம் சற்று மங்கி அலகில் செண்டின்றி இருக்கும்.

காணப்படும் இடங்கள்: தென்னிந்தியாவில் நீர்வளம் மிகுந்த பகுதிகளில் காணலாம்.

பழக்க வழக்கங்கள்: தாமரை, அல்லி முதலான கொடிகள் படர்ந்த பெரிய குளங்களிலும் நாணற் புதர்கள் நிறைந்த நீர்நிலை களிலும் காணலாம். நன்கு மூழ்கி நீந்துவதோடு நடக்கவும் செய்யும். சிலபோது மரங்களில் கிளைகளில் உட்கார்ந்திருக்கக் காணலாம். வயல்களில் விளைந்த நெல்லையும், செடி கொடிகளின் தளிரையும் தானியங்களையும் உணவாகக் கொள்வதோடு நீரில் நீந்தித் தவளை, புழு பூச்சிகளையும் உணவாகக் கொள்ளும்.

இனப்பெருக்கக் காலத்தில் ஆண் வாத்து 'ஹோங்' என்று கத்தும்.

இனப்பெருக்கம்: காலம்: ஜனவரி முதல் செப்டம்பர் வரை. கூடு: குச்சிகளாலும், காய்ந்த சருகு, புல், இறகுகள் முதலியவற்றைக்கொண்டு மரப் பொந்துகளிலும், மரக் கிளைக ளிடையே அமைந்த குழிவிலும் கூடு கட்டும். முட்டை: 8 முதல் 12 வரை; தந்த நிறங் கொண்ட வெண்மை நிறம் கொண்டவை; பெரும்பாலும் பெண் வாத்தே அடை காக்கும்.

வரிசை : பால்கோனிஃபார்மிஸ்

Order : Falconiformes

Family : Accipitridae

பருந்துகள், வல்லூறுகள், கழுகுகள்
(HAWKS, VULTURES)

38. சிறிய கரும் பருந்து
124. Black Winged Kite
Elanus cacruleus vociferus (Latham)

தோற்றம் : காக்கையைவிட அளவில் சற்றுச் சிறியது. சுமார் 32 செ. மீ. நீளம் இருக்கும்.



சிறிய கரும் பருந்து

அலகு கருப்பு ; விழிப் படலம் நல்ல சிவப்பு ; காலும் விரல்களும் ஆழ்ந்த மஞ்சள் ; விரல் நகங்கள் கருப்பு நிறம்.

சாம்பல் நிற மேலுடம்பும் வெள்ளை நிறக் கீழுடலும் கொண்ட பருந்து இது. உச்சி, கழுத்து, முதுகு, வாலடி, வால்மேல் இறகுகள் ஆகியன நீர்த்த சாம்பல் நிறமாக இருக்கும். தலையின் எஞ்சிய பகுதிகளும் உடலின் கீழ்ப் பகுதியும் வாலும் வெண்மை நிறமாக இருக்கும். அலகடியிலிருந்து சிவந்த கண்கள் வழியாக சிறிய கருப்புநிறப் பட்டை செல்லக் காணலாம். உட்கார்ந்திருக்கும்போது இதன் இறகுகள், சிறிது பிளவுபட்ட வாலைவிடச் சற்று நீண்டிருக்கக் காணலாம்.

காணப்படும் இடங்கள் : தென்னிந்தியா முழுவதும் காடுகளிலும், விளை நிலங்களிலும் புல்வெளிகளிலும் இதனைக் காணலாம்.

பழக்க வழக்கங்கள் : தனித்தோ, தூரப் பிரிந்திருக்கும் இணையாகவோ திரியக் காணலாம். காலை, மாலை அந்திகளில் காண வாய்ப்பு அதிகம். பரந்த புல்வெளிகளில் ஒரு குறிப்பிட்ட மரத்திலோ, கம்பத்திலோ எப்பொழுதும் பழக்கப்பட்டதைப்போல உட்கார்ந்திருக்கும். அப்படி உட்கார்ந்து சுற்று வட்டாரத்தை நோட்டம் விட்டபடி இருக்கும். இதன் வால், சற்றைக் கொரு முறை மேலும் கீழும் அசைவதைக் காணலாம். இடையிடையே எழுந்து சுற்றி வட்டமிட்டுப் பறந்து அந்தப் பகுதியை ஆராய்வதும் உண்டு. இது இறக்கை அடித்தும் மிதந்தும் பறப்பது பனங்காடை, கடற்காகம் ஆகியவை பறப்பதை ஒத்திருக்கும். தரையில் பாய்ந்து இரையைப் பிடிக்கும்போது மிக வேகமாகப் பறந்து பற்றும். இரவில் பெரிய மரங்களில் இலைகளிடையே அந்த வட்டாரத்தில் இருக்கும் 20 முதல் 30 வரையான பறவைகள் சேர்ந்து அடைவது உண்டு.

தத்துக்கிளி, சிள்வண்டு, புழுபூச்சி, பல்லி, ஓணான், எலி, பறவைக் குஞ்சுகள் ஆகியவற்றை உணவாகக்கொள்ளும். பாம்புகளையும், தவளைகளையும் தின்பதும் உண்டு.

இனப்பெருக்கம் : காலம் : ஏப்ரல், மே மாதங்களில்; கூடு: சிறு மரங்களில் 9 மீட்டர் உயரத்திற்குள்ளாகக் காக்கைக் கூடுகளைப்போலக் குச்சிகள், புல், வேர் ஆகியவற்றால் கூடு அமைக்கும். முட்டை : 3 அல்லது 4; வெளிர் நிறமாகச் சிவப்புப் பழுப்புப் புள்ளிகளும் கறைகளும் கொண்டிருக்கும்.

39. கொண்டை வல்லூறு

126. Legge's Baza or Southern Brown Lizard Hawk

Aviceda jerdoni ceylonensis (Legge)

தோற்றம் : அண்டங் காக்கை அளவுள்ள இது சுமார் 50 செ. மீ நீளம் இருக்கும்.

தலையில் உள்ள கருத்த வெள்ளை முனையோடு கூடிய கொண்டையைக்கொண்டு இதனை எளிதாகக் கண்டுகொள்ளலாம். உடலின் மேற் பகுதி பழுப்பு நிறமாக இருக்கும். உடலின் கீழ்ப் பகுதி வெளிர் பழுப்பாக இருக்கும். பழுப்பு நிறமான வாலில் மூன்று கருப்புப் பட்டைகளைக் காணலாம். வால்முனையை அடுத்துள்ள மூன்றாவது பட்டை அகலமாகவும் நன்கு கறுத்தும் காணப்படும். மென் பறவை சற்றுப் பெரியது.

காணப்படும் இடங்கள் : கேரளா, மைசூர் மாநிலங்களிலும் நீலகிரிப் பகுதியும் பசுங் காடுகளில் 150 மீட்டர் உயரம் முதல் 900 மீட்டர் உயரம் வரை காணலாம்.

பழக்க வழக்கங்கள் : காலை, மாலை அந்தி நேரங்களில் இணையாக வெளிப்பட்டு இரை தேடும். வேகமாக இறக்கை யடித்துப் பறக்கும் ஆற்றல் வாய்ந்தது. மர உச்சியில் அமர்ந்து ஓணான் முதலியவற்றைப் பாய்ந்து பற்றும். மற்ற வல்லூறுகளைப்போல இரையைக் கால் விரல்களால் பற்றிச் செல்லாமல் அலகால் தூக்கிச் செல்லும் பழக்கமுடையது. சுற்றிப் பறந்து இரை தேடாமல் மரக் கிளைகளில் உட்கார்ந்திருந்தபடி பார்த்துப் பாய்ந்து பற்றும் பழக்கம் கொண்டது இது.

ஓணான், தவளை, எலி முதலியன இதன் உணவு.

இனப்பெருக்கம் : காலம் : பிப்ரவரி முதல் ஏப்ரல் வரை. கூடு : இலை தழை தளிர்கள் முதலியவற்றால் குச்சியால் கட்டிய கூடுகளை மெத்தெனச் செய்யும். அடர்ந்த காடுகளில் இதன் கூடுகளை மரங்களில் 7 முதல் 20 மீட்டர் உயரம் வரையும் காணலாம். முட்டை : 2 அல்லது 3. சாம்பல் நிறங் கலந்த வெண்மையாக இருக்கும். ஆணும் பெண்ணும் அடைகாக்கும்.

இனப்பெருக்கக் காலத்தில் காதலூடாட்டத்தின்போது ஆணும் பெண்ணும் உயரப் பறந்தும் ஒன்றைச் சுற்றி ஒன்று வட்டமிட்டும், தாழ்ந்து இறக்கையை மடக்கி வீழ்ந்தும் விளையாடும்.

40. சிறிய கருங்கொண்டை வல்லூறு
127. Indian Blackcrested Baza or Lizard Hawk
Aviceda leuphotes leuphotes (Dumont)

தோற்றம் : புறா அளவுள்ளது இது. சுமார் 40 செ. மீ. நீளம் இருக்கும்.

சிறிய கருங்கொண்டை வல்லூறு

அலகு ஆழ்ந்த சிலேட் நிறம் ; விழிப்படலம் ஆழ்ந்த செம்பழுப்பு ; கால்கள் ஈய நிறம் தோய்ந்த நீளமாக இருக்கும்.

சிறிய கருங்கொண்டை வல்லூறு

உடலின் மேற் பாகமும் நன்றாக நீண்ட கொண்டையும் கருப்பாக இருக்கும். தோள்பட்டை இறக்கைகளிலும் பறக்கும் இறக்கைகளிலும் தெளிவான செம்பழுப்பு வெள்ளைக் கறைகளைக் காணலாம். கழுத்தும் மார்பின் மேற் பகுதியும் கருப்பாக இருக்கும். வெள்ளைப் பட்டையும் கரும் பழுப்புப் பட்டையும் ஒன்றினை அடுத்து ஒன்றாக மார்பில் வளையம் போல அழகு செய்யக் காணலாம். மார்பின் கீழ்ப் பகுதி வெண்மை நிறமாக செம்பட்டைக் குறுக்குக் கோடுகளோடு காட்சி தரும் வயிறு, வாலடி ஆகியன கருப்பாக இருக்கும். உடலின் கீழ்ப் பகுதியில் காணப்படும் நிற வேறுபாடுகள் காரணமாக இதனைப் பறக்கும்போதும் தெளிவாக அடையாளம் கண்டு கொள்ளலாம்.

காணப்படும் இடங்கள்: கேரள மாநிலத்தில் இது இனப் பெருக்கம் செய்கிறது. குளிர்காலத்தில் இலங்கைக்கு வலசை செல்கிறது. கேரளாவில் மலைப் பகுதிகளிலும் காடுகளிலும் காணலாம்.

பழக்க வழக்கங்கள்: தனித்தும் சிறு கூட்டமாகவும் காணலாம். 20 வரையான கூட்டம் காணப்பட்டுள்ளது. காலை மாலை நேரங்களிலும் வானம் மப்பும் மந்தாரமுமாக இருக்கும்போதும் சுறுசுறுப்பாக இருக்கும். நல்ல வெயிலாக இருக்கும் நேரங்களில் இலைகளிடையே மரங்களில் மறைந்திருக்கும். காகம் பறப்பதைப் போலச் சீராக இறக்கை அடித்துப் பறக்கும். பருந்துகளைப்போலக் கீச்சிட்டுக் கத்தும்.

ஓணான், தவளை, வெட்டுக்கிளி ஆகியவற்றோடு கூட வௌவால், பறவைக் குஞ்சுகள் ஆகியவற்றையும் உணவாகக் கொள்ளும்.

இனப்பெருக்கம்: காலம்: பிப்ரவரி முதல் ஜூலை வரை. கூடு: 20 செ. மீ. அகலமும் 5 முதல் 10 செ. மீ. ஆளமுள்ள சிறிய கூடுகளைச் சிறு குச்சிகள், புல், நார், இலை முதலியவற்றால் அமைத்துக்கொள்ளும். முட்டை: 2 அல்லது 3 சாம்பல் நிறம் தோய்ந்த வெண்மையாகச் சிறு முனையில் சிவப்புக் கறைகளுடன் காட்சி தரும்.

41. தேன் பருந்து

130. Crested Honey Buzzard

Pernis ptilorhynchus ruficollis (Lesson)

தோற்றம்: பரப் பருந்து அளவுள்ளது இது. சுமார் 60 செ.மீ. நீளமிருக்கும்.



தேன் பருந்து

அலகு கருப்பு; விழிப்படலம் சிவப்புத் தோய்ந்த பழுப்பு அல்லது பொன்னிறமான மஞ்சள்; கால்களும் விரல்களும் மஞ்சள் நிறம்.

உடலின் மேற்பகுதி ஆழ்ந்த பழுப்பு நிறமாக இருக்கும். கண்ணைச் சுற்றிலும், மோவாய், கன்னம் ஆகிய முகப் பகுதிகளிலும் ஈய நிறம் தோய்ந்த கருஞ் சாம்பல் நிறத் தூவிகளைக் காணலாம். இறக்கைகள் கருப்புப் பட்டைகளோடு கருமுனை கொண்டவையாக இருக்கும். வால் கருப்பு நிறமாக அகன்ற சாம்பல் பழுப்புப் பட்டைகளோடும் சாம்பல் பழுப்பு முனையோடும் காட்சி தரும். மார்பு வெளிர் பழுப்பாகவும் வயிறு சாம்பல் தோய்ந்த வெண்மையாக சிறு கறைகளோடு காணப்படும்.

பறக்கும்போது இது குட்டைக்கால் கழுகினை ஒத்திருக்கக் காணலாம். ஆனால் அதனைவிட மெலிந்த உடலும் சிறிய தலையும் சற்று நீண்ட கழுத்தும் கொண்டிருப்பது கொண்டு இதனை வேறுபடுத்தி அறிய முடியும்.

காணப்படும் இடங்கள் : தென்னிந்தியா முழுதும் காடுகள் மிகுந்த பகுதிகளில் காணலாம் எனினும் மேற்குத் தொடர்ச்சிமலை சார்ந்த பகுதிகளிலேயே சிறப்பாகக் காணலாம். கேரளாவில் இனப்பெருக்கம் செய்கிறது.

பழக்க வழக்கங்கள் : தனித்தோ, இணையாகவோ உயரக் காற்றில் மிதந்து பறந்தபடி இருக்கக் காணலாம். மரங்களில் உயர உட்கார்ந்திருக்கும் இதனைக் காக்கைகள் அமைதியாக இருக்க விடாமல் துரத்துவதைக் காணலாம். இரவில் சிறு கூட்டமாக இலைகளோடு கூடிய பெரிய மரங்களில் நன்ருகத் தங்கும்.

தேன் கூடுகளை அதிலிருக்கும் தேனோடும், தேனீக்களின் முட்டையோடும் தின்னும். தேன் கூட்டினைக் காலில் இடுக்கி அலகால் பிய்த்துத் தின்பதைக் காணலாம். முகத்தில் அடர்த்தியாக இருக்கும் தூவிகள் தேன் கூட்டைத் தாக்கும், இதனைத் தேனீக்களின் கடியிலிருந்து காப்பாற்றுகின்றது. தேன் கூட்டோடு கூடப் பெரிய புழு பூச்சிகள், சிறு பறவைகள் ஆகியவற்றையும் உணவாகக் கொள்ளும். ஊர்ப்புறங்களில் வந்து கோழிக்குஞ்சுகளைத் திருடிப்போவதும் உண்டு

இனப்பெருக்கம் : காலம்: ஜனவரி முதல் ஜுன் வரை. கூடு : குச்சிகள் தென்னை பனை ஓலைகள் காய்ந்த இலை சருகுகள் முதலியன கொண்டு 40 செ. மீ. விட்டமும் 20 செ. மீ. ஆழமும் உள்ள கூடுகளை மரங்களில் 6 முதல் 20 மீட்டர் உயரத்தில் அமைத்துக்கொள்ளும். முட்டை: 2; பல நிறங்களில் செம்பழுப்புப் புள்ளிகளோடு அழகாகக் காட்சி தருவன. சில முட்டை பலவகை ஆழ்ந்த நிறங்களால் அழகொடு விளங்க சில தூய வெண் நிறங் கொண்டவையாகக் காணப்படுகின்றன. அடைகாக்கும் காலம் 32 நாட்கள்.

42. பரப் பருந்து

133. Pariah Kite

Milvus migrans govinda (Sykes)

தோற்றம் : செம்பருந்தைவிடப் பெரிய இது சுமார் 58 செ. மீ. நீளமிருக்கும்.

அலகு மஞ்சள்; அடிப்பகுதியும் மேந்தோலும் மஞ்சளாக இருக்கும். விழிப்படலம் பழுப்பு; கால்கள் வெளிர் மஞ்சள்.



பாப் பருந்து

பழுப்புநிறமான தோற்றம் கொண்ட இதனை மற்ற வேட்டைக காரப் பறவைகளிலிருந்து இதன் பிளவுபட்ட வாலினைக்கொண்டு எளிதில் பிரித்து உணரலாம். கிராமங்களிலும் நகரங்களிலும் மிகுந்த அளவில் காணப்படும் கழுகினத்தைச்சேர்ந்த பறவையான இதற்கு விளக்கம் தேவையில்லை. எனினும் வளரும் பறவை ஆண்டுக்காண்டு சிறிது மாறுபட்ட நிறத்தோற்றம் கொள்ளும் என்பதனையும் இறுதியிலே குறிப்பிட்ட சீரான நிறப் பொலிவினைப் பெறுகிறது என்பதனையும் நினைவில் கொள்ளவேண்டும். வளராத பறவைகள் சற்று நிறம் மங்கிக் காணப்படும்.

காணப்படும் இடங்கள் : தென்னிந்தியா முழுதும். நகரங்கள் கிராமங்கள் ஆகிய மனிதர் வாழ்விடத்தைச் சார்ந்து திரியக் காணலாம்.

பழக்க வழக்கங்கள் : நகரங்களிலும் கிராமங்களிலும் தனித்தும் கூட்டமாகவும் இவற்றைக் காணலாம். தெருவில் எறியப்படும் அழுகிய பண்டங்களைத் தூக்கிச் செல்லும். இறைச்சிக் கடைகளைச் சுற்றி வட்டமிடும். உணவு விடுதிகள், ராணுவ முகாம்கள் ஆகியவற்றில் உணவு வேளைகளில் தவருது வந்து எஞ்சிய உணவுப் பண்டங்களைக் கொண்டுசெல்லும். தைரியம் மிகக் கொண்ட இதனைக் காகங்கள் பின்பற்றித் துரத்தக் காணலாம். காகங்களின் முட்டையையோ குஞ்சுகளையோ இது விரும்பாவிட்டாலும் காகம் தான் கூடமைத்திருக்கும் பகுதியில் இதனை நெருங்க விடுவதில்லை. ஒரு பறவை ஏதேனும் பண்டத்தைத் தூக்கிச் சென்ருல் மற்றப் பறவைகள் அதைத் துரத்தி அதன் கால் விரல்களிலிருந்து அந்தப் பண்டத்தைப் பறித்துச் செல்லும். இப்படிப் பலமுறை கால் (கை மாறுவதை) மாறுவதும் உண்டு. செம்பருந்தைப் போல இது மீனை விரும்பித் தின்பதில்லை.

கோழிக்குஞ்சுகள், புருக்குஞ்சுகள், ஓணன் முதலானவையும் இதன் உணவாகும்.

இனப்பெருக்கம் செய்யாத காலங்களில் பல நூறு பறவைகள் நன்ருகத் திரண்டு இரவில் ஒரே மரத்திலோ ஒரு சோலையிலோ அடையக் காணலாம். வீடுகளின் கூரைமீதும் கோயில் கோபுரங்களின்மீதும் காலை நேரத்தில் அமர்ந்து இறகை உலர்த்திக்கொள்வதைக் காணலாம். தின்னமுடியாத அளவு இரை கிடைக்குமானல் கொண்டுபோய் மறைத்துவைக்கும் பழக்கமும் அபூர்வமாக இதனிடம் உண்டு.

இனப்பெருக்கம் : காலம் : செப்டம்பர் முதல் மார்ச் வரை. சில இரண்டு தடவை முட்டையிடுவதும் உண்டு. கூடு: மரங்

களில் பெரிய குச்சிகளால் அழுக்குத்துணி, சாக்கு முதலிய குப்பைகளையும் பயன்படுத்திக் கூடமைக்கும். முட்டை: 2 முதல் 4 வரை. செம்பழுப்புப் புள்ளிகள், கோடுகள், கறைகள் முதலியன கொண்டனவாக இருக்கும். சிலபோது கறைகள் ஏதுமின்றி இருக்கும்.

43. செம் பருந்து
135. Brahminy Kite
Haliastus indus indus (Boddaert)

தோற்றம்: பரப் பருந்தைவிட அளவில் சற்றுச் சிறியது. சுமார் 50 செ. மீ. நீளமிருக்கும்.

அலகு வெளிர் நீலமாக முனை மட்டும் வெளுத்துக் காணப்படும்; விழிப்படலம் மஞ்சளாகவோ மஞ்சள் பழுப்பாகவோ இருக்கும்; கால்கள் வெண்மைதோய்ந்த மஞ்சள் நிறம்.

செம் பருந்து

இதன் தலை, கழுத்து, மார்பு ஆகியன வெண்மையாக இருக்கும். உடலின் மேற்பகுதி முழுதும், வயிறும் வாலும் துருச் செந்நிறமாக இருக்கும். வளராத பறவைகள் சாக்லெட் பழுப்பாக இருக்கும். இதன் வால் வட்ட வடிவமாக இருப்பதுகொண்டு இதனை எளிதில் வேறுபடுத்தி அறியலாம்.

காணப்படும் இடங்கள் : தென்னிந்தியா முழுவதும் காணலாம். பரப் பருந்தும் இதுவும் சேர்ந்து திரிவதும் உண்டு. நீர்வளமில்லாத பகுதிகளில் பரப்பருந்தைப்போல அவ்வளவு மிகுதியாகக் காணப்படுவதில்லை. இடம் விட்டு இடம் கூட்டமாகப் பெயர்ந்து செல்வதும் உண்டு.

பழக்க வழக்கங்கள் : கோடையில் நீர்வள மிகுந்த கடற்கரைப் பகுதிகளிலும், உப்பங்கழிகளிலும், மீன்வளர் கிராமங்களிலும் காணப்படும் இது மழைக்காலத்தில் உள்நாட்டு ஏரிகளிலும், வயல்களிலும், குளங் குட்டைகளிலும் காணலாம். பகலில் கிராமங்களின் மீது தனித்துப் பறக்கும் இது கோழிக் குஞ்சுகளையும் தூக்கிச் செல்லும். நீர்வளமிக்க பகுதிகளில் புகை வண்டிப் பாதையின் இருபுறமும் உள்ள தந்திக் கம்பிகளில் அடுத்தடுத்து உட்கார்ந்திருக்கக் காணலாம். கோடைக்காலத் தொடக்கத்தில் ஏரிகளில் நீர் வற்றும் போது மீன் அரிப்பு நடைபெறும் இடங்களில் நூற்றுக்கணக்காக இவை கூடுவதைக் காணலாம்.

நத்தை, நண்டு, மீன், பாம்பு முதலானவற்றை உணவாகக் கொள்ளும். ‘ க்யாவ் ’ எனக் குரல் கொடுக்கும்.

இனப்பெருக்கம் : காலம் : ஜனவரி முதல் மார்ச் வரை. கூடு : தென்னை, வேம்பு முதலான மரங்களில் உயர குச்சிகளால் கூடு அமைக்கும். கூட்டுக்கு அருகில் மரத்தின் மீது ஆணும் பெண்ணும் சேரும். முட்டை : 2 அல்லது 3; வெண்மை முதல் ஆழ்ந்த பழுப்பு வரையான பல நிறங்களில் காணலாம்.

44. வல்லூறு

138. Indian Shikra

Accipter badius dussumieri (Temminck)

தோற்றம் : ஆண் சுமார் 30 செ. மீ. நீளமும் பெண் 35 செ.மீ நீளமும் உள்ளது. காக்கையைவிடச் சிறியது.

அலகு நீலநிறம் : விழிப்படலம் ஆரஞ்சு நிறம்; கால்கள் மஞ்சள் நிறம்.

உடலின் மேற்பகுதி வெளிர் கருஞ்சாம்பல் நிறமாக இருக்கும். இறக்கைகள் கருப்பாக உள்ளே வெள்ளைப் பட்டைகளோடு



வல்லூறு

காணப்படும். மோவாய், தொண்டை, வாலடி, தொடை ஆகியன வெண்மை; அதில் சற்று லேசான சிவப்புத் தோய்ந்திருக்கும். மார்பும் வயிறும் வெண்மையாக்ச் செம்பழுப்புக் குறுக்குப் பட்டை களோடு காட்சி தரும்.

காணப்படும் இடங்கள்: தென்னிந்தியா முழுதும். மலைகளில் 1500 மீட்டர் உயரம் வரை.

பழக்க வழக்கங்கள்: கிராமப் புறங்களை அடுத்த தோப்புகளி லும், சாலை மரங்களிலும் தனித்தும் இணையாகவும் காணலாம். மரக் கிளைகளிலும், வேலிப் புதர்களிலும் காத்திருந்து ஓணான், அணில், சிறு பறவைகள் போன்ற இரைகளைப் பாய்ந்து பற்றும். வேகமாகப் பறக்கும் ஆற்றல் வாய்ந்த இது தாவியே மரக்கிளை களில் அமரும். இனப்பெருக்கக் காலத்தில் பெண்ணும் ஆணும் ஓயாது கத்தியபடி இருக்கும். ஒன்றை ஒன்று துரத்திச் செல்லும் இவை நடுப்பகல் நேரத்தில் வேப்ப மரத்தில் கூட்டை விட்டுத் தொலைவில் ஒன்றோடு ஒன்று சேர்வது கண்டு குறிக்கப்பட் டுள்ளது.

ஓணான், அணில், எலி முதலிய சிறு உயிரினங்கள் இதன் முக்கிய உணவு.

க்கீ! இ கீஇ கீஇஇ, கீஇஇ என விடாது நெடுநேரம் கத்தியபடி இருக்கும்.

இனப்பெருக்கம்: காலம்: ஏப்ரல் முதல் ஜூன் வரை. கூடு: தென்னை மரம், அரசமரம், வேப்பமரம் முதலான மரங்களில் சிறு குச்சிகளால் கூடு அமைக்கும், அரசங்குச்சிகளை எளிதாக உடைத்துவரும். தொடர்ந்து ஏழு ஆண்டுகள் ஒரு தென்னை

மரத்தில் ஜோடிப் பறவைகள் கூடு கட்டின. முட்டை: 3 அல்லது 4. நீலங்கலந்த வெண்மையாக சாம்பல் நிறப் புள்ளிகளோடு காணப் படும்.

பெண் ஆணினிடமிருந்து இரையைப் போராடிப் பிடுங்கி வந்து குஞ்சுகளுக்கு ஊட்டியது கண்டு குறிக்கப்பட்டுள்ளது.

45. தென்னிந்தியக் கொண்டை வைரி

145. South Indian Crested Goshawk

Accipiter triviragatus peninsulae (Koelz)

தோற்றம்: தோற்றத்தில் முன்கண்ட வல்லூறினைப் பெரிதும் ஒத்திருக்கும் இது தலையில் சிறு கொண்டை பெற்றிருக்கும். தலை நல்ல கருப்பு நிறம். உடலின் மேற்பகுதி சாம்பல் தோய்ந்த ஆழ்ந்த பழுப்பு நிறம். வெண்மையான உடலின் கீழ்ப் பகுதியில் மார்பில் செம்பழுப்புக் கீற்றுக்களும், வயிற்றில் குறுக்குக் கோடு களும் காணலாம். வாலில் நான்கு கருப்புப் பட்டைகள் அடிப்பக் கத்தில் தெளிவாகத் தெரியும்.

காணப்படும் இடங்கள்: மைசூர், கேரளா மாநிலங்களில் மலைப்பகுதிகளைச் சார்ந்து வாழ்வது இது. சமவெளி முதல் 1000 மீட்டர் வரை காணலாம்.

பழக்க வழக்கங்கள்: வல்லூறு நாட்டுப் புறத்தில் வேட்டை யாடித்திரிவதைப் போல இது காட்டுப் பகுதிகளில் வேட்டை யாடும். காடுகளின்மேல் சுற்றி வட்டமிடும். மலைக்காடுகளில் தவளைகள், ஓணான், புரு, சிறுகோழி முதலியவற்றை வேட்டை யாடும்.

இனப்பெருக்கம்: காலம்: மார்ச் முதல் மே முடிய; கூடு: குச்சிகளால் 50 செ. மீ. விட்டமும் 30 செ. மீ. ஆழமும் உள்ளதாக மரங்களில் கூடமைத்து இலைகளால் மெத்தெனச் செய்யும். முட்டை: 3 அல்லது 2; நீலங் கலந்த வெள்ளை நிறங் கொண்டவை. குஞ்சு களை நெருங்குபவரை தீரத்தோடு தாக்க வரும்.

46. சின்ன வல்லூறு

148. Indian Sparrow Hawk

Accipiter nisus melaschistos (Hume)

47. சின்ன ஆசிய வல்லூறு

147. Asiatic Sparrow Hawk

Accipiter nisus nisosimilis (Tickell)

48. தென்னிந்திய பெஸ்ரா சின்ன வல்லூறு

151. Southern Besra Sparrow Hawk

Accipiter virgatus besra (Jerdon)

மேற்கூறிய மூன்று பறவைகளும் அளவிலும் தோற்றத்திலும் பெரும்பாலும் வல்லூறினை ஒத்தன. (Accipiter n. n.) மத்திய ஆசியா ஜப்பான் முதலிய பகுதிகளில் இனப் பெருக்கம் செய்து குளிர் காலத்தில் நம் நாட்டு மலைப் பகுதிகளுக்கு வலசை வருகின்றது. (Accipiter v. b.) தென் திருவாங்கூர் பகுதிகளில் என்றும் தங்கி வாழ்ந்து இனப்பெருக்கம் செய்வது, (Accipter n. m.) தென்னிந்தியா முழுவதும் ஆங்காங்கே அபூர்வமாகக் காணப்படும் இது குளிர் காலத்தில் ஓரளவு வடக்கே இருந்து வந்து ஆங்காங்கே காணப்படுவதும். இவற்றின் பழக்க வழக்கங்கள் வல்லூறுவின் (Accipiter b. d.) பழக்க வழக்கங்களை ஒத்தவை.

கழுகுகள்

(EAGLES)

பறவைகளுள் ஆற்றலும் வலிமையும் வாய்ந்தவை கழுகுகளே. இலக்கியங்களில் பறவைகளுக்கு அரசர் எனக் கழுகுகளே பேசப் படுகின்றன. இராசாளி எனப் பேச்சு வழக்கில் மக்கள் இவற்றைக் குறிப்பதும் இவற்றின் பெருமையை விளக்கப் போதிய சான்றாகும்.

உலகில் வேட்டையாடி இரை தேடித் தின்னும் 250க்கு மேற்பட்ட பறவை இனங்களுள் 50க்கு மேற்பட்டனவாகக் கழுகுகளே சிறப்பிடம் பெறுகின்றன. இவையும் தங்கள் வாழ்விடங்களுக்கேற்பப் பலவேறு பழக்க வழக்கள் உடையனவாக உள்ளன கடலையும் கடல் சார்ந்த பகுதிகளையும் சார்ந்து வாழும் கடற்கழுகுகள் மீனையே தங்கள் முக்கிய உணவாகக் கொள்பவை. இவை அதிகம் பறப்பதில்லை. கடற்கரை ஓரங்களில் மரங்களிலோ கம்பங்களிலோ நெடு நேரம் ஒரே இடத்தில் கடலைப் பார்த்தபடி அமர்ந்திருக்கக் காணலாம். உயர்ந்த மலை முகடுகளிலோ அடர்ந்த காடுகளிலோ பழகும் கழுகுகளை விட இந்தக் கடற்கழுகுகளோ சிலபு

மாக எப்போதும் காணக் கூடியவை. வெள்ளை வயிற்றுக் கடற் கழுகு நம் தென்னிந்தியக் கடற்கரைகளில் காணக் கூடிய ஓரின மாகும். சில கழுகுகள் மீனை முக்கிய உணவாகக் கொள்ளும் பழக்க முடையவையேனும் கடல் மீனை விரும்பாமல் உள்நாட்டு நீர் நிலை களிலும், ஆறுகளிலும் மீன் பிடிக்கும் பழக்கமுடையவை. சாம்பல் தலை மீன் பிடிக்கும் கழுகு கேரளா மைசூர் மாநிலங்களில் மேற்குத் தொடர்ச்சி மலையை அடுத்த காடுகளில் ஆற்றங்கரைகளைச் சார்ந்து வாழ்பவை.

பாம்பு தின்னும் கழுகுகள் அடுத்துக் குறிப்பிடத் தக்கவை. இவை காடுகளில் மரங்களிலும் வயல்களிலும் ஊர்ந்து செல்லும் பாம்புகளை உயரப் பறக்கும்போதே கண்டு கொள்ள ஏற்ற கூர்மை யான பார்வை கொண்டவை. இவற்றின் கால் விரல்கள் வளவளப் பான பாம்புகளை இறுக்கிப் பற்ற ஏற்ற வகையில் குட்டையாகவும் சொரசொரப்பான அடிப்பக்கம் உடையவையாகவும் இருக்கக் காண லாம். பாமர மக்கள் பாம்பு கடித்தால் இவை நஞ்சின் வேகத்தால் சாகாத ஆற்றலுடையவை என நம்புகின்றனர். ஆனால் அக் கொள்கைக்கு ஆதாரம் இல்லை. பாம்புகள் தம்மைக் கடிக்க இயலாதபடி இவை அவற்றை லாவகமாக இறுக்கிப் பிடிக்கின்றன. தென்னிந்தியாவில் அபூர்வமாகக் காணப்படும் குட்டைக்கால் கழுகும், காடுகளில் ஓரளவு காணப்படும் சின்னப்பாம்பு தின்னும் கழுகும் இவ்வகைக்குச் சிறந்த உதாரணங்கள்.

தென் அமெரிக்காவில் அமெசான் காடுகளிலும் பிலிப்பைன்ஸ் காடுகளிலும் காணப்படும் குரங்கு தின்னிக் கழுகுகள் வலிமைக்குப் பெயர் பெற்றவை. அடர்ந்த காடுகளிலும் இடையே எளிதாக நுழைந்து வேட்டையாடும் ஆற்றல் வாய்ந்தவை. இவ்வகைக் கழுகுகள் நம் நாட்டில் காணப்படுவதில்லை.

கொண்டைக் கழுகுகள் பெரும்பாலும் சாதாரணமாகக் காணப் படுபவை. பெரும்பாலும் இவற்றின் கால்கள் முழுவதும் இறகு களால் போர்த்தப்பட்டிருக்கும். தலையில் காணப்படும் கொண்டை இவற்றை எளிதில் அடையாளங் கண்டுகொள்ள உதவும். கேரளா வில் காணப்படும் பெரிய கொண்டைக் கழுகும் இந்தியக் கொண் டைக் கழுகும் இவ்வகையில் நம் நாட்டில் காணப்படுபவை.

Hawk Eagle எனக் கூறப்படும் மெலிந்த ராசாளிகளைக் கழுகு களோடு சேர்த்துச் சொல்வதில்லை என்றாலும், உருவிலும் வேட்டையாடும் திறனிலும் இவை கழுகுகளுக்குச் சளைத்தவை யல்ல. இவ்வகை ராசாளிகள் சில தென்னிந்தியாவில் காணப்படு கின்றன.

மேற்குத் தொடர்ச்சிமலைப் பகுதிகளில் சிறப்பாகக் காணப் படும் கருப்புக் கழுகு கழுகு இனத்துள் குறிப்பிடத்தக்க பறவை. பிற பறவைகள் மரங்களில் கட்டியுள்ள கூடுகளை அந்தக் கூடு களில் இருக்கும் முட்டைகளோடும் குஞ்சுகளோடும் அப்படியே தூக்கிச்செல்லும் பழக்கமுடையது இது. காலால் பிற பறவை களின் கூடுகளை இடுக்கிச்செல்ல ஏற்ற வகையில் இதன் கால் விரல்கள் அமைந்துள்ளன. காடுகளின்மேல் அதிக உயரம் பறக்காமல் மரங்களை ஒட்டியே பறக்கும் இயல்புடைய இது மரங்க ளிடையேயும் மரக்கிளைகளிடையேயும் எளிதாகப் புகுந்து பறக்கும் ஆற்றல் வாய்ந்தது.

கழுகுகள் சுமார் நாற்பது ஆண்டுவரை வாழலாம் எனக் கணக் கிட்டுள்ளனர். அதற்கு மேலும் வாழலாம் என்பதற்குச் சான்றுகள் உறுதியாகத் துணைநிற்கவில்லை. ஆணும் பெண்ணும் சேர்ந்து குறிப்பிட்ட ஒரு பகுதியில் நெடுங்காலம் வாழ்ந்துவரும் பழக்க முடையவை. பெரும்பாலும் ஒரே இடத்தில் ஆண்டுதோறும் கூடு கட்டக் காணலாம். ஒரே சமயத்தில் இரண்டு கூடுகளைப் பழக்கத் தில் வைத்திருக்கும். ஒரு ஜோடி கழுகுகள் இரண்டு கூடுகள் கட்டிக்கொள்வதற்குப் பல காரணங்கள் கூறப்படுகின்றன. ஒரு கூடு குஞ்சுகளின் எச்சத்தாலும் எலும்பு முதலான கழிவுப் பொருள் களாலும் மிகவும் நாற்றமுடையதாக ஆகிவிடும் என்றும் அப்போது அடுத்த கூட்டில் முட்டையிடும் என்றும் அதற்கு அடுத்த ஆண்டும் முதற் கூட்டின் நாற்றம் தணிந்தபின் அங்கு திரும்பிவரும் எனவும் ஒரு காரணம் கூறப்படுகிறது. முட்டை திருடும் பறவைகளைத் திசைதிருப்ப இப்படி இரண்டு கூடுகள் கட்டும் முறை கையாளப் படுகிறது என்றும் கூறுகின்றனர். இதுபற்றித் தெளிவான ஆராய்ச்சி முடிபுகள் காணப்படவில்லை. கழுகுகள் பெரும்பாலும் ஒரே முட்டையிடும். சில இரண்டு முட்டைகள் இடுவதும் உண்டு. இரண்டு முட்டைகள் இடப்படும்போது முட்டைகளிடையே ஏற் படும் கால இடைவெளியால் முதலில் இடப்பட்ட முட்டையி லிருந்து முதலில் வெளிவரும் குஞ்சு இரண்டாவது முட்டையி லிருந்து வரும் குஞ்சினை வளர்ந்து வாழவிடாமல் கொத்திக் கொன்றுவிட்டுத் தாய் தந்தையர் கொண்டுவரும் இரை முழுவதை யும் அதுவே தின்று வளர்கின்றது. சிறு குஞ்சினை முதலில் முட்டையிலிருந்து வெளிப்பட்ட பெரிய குஞ்சு முதுகில் ஒரே இடத் தில் கொத்திக் கொத்தித் துன்புறுத்துவதைக் காணும் தாய்ப் பறவை அதைத் தடுக்க முயல்வதோ அதைப்பற்றிக் கவலைப் படுவதோ இல்லை.

ஜோடி சேர்ந்த பறவைகள் அவற்றுள் ஒன்று இறக்கும்வரை வேறு துணையை நாடிச் செல்வதில்லை. ஆனால் துணை இறந்த

வுடன் வேறு துணையை உடனே தேடிக்கொள்கின்றன. காதலூடாட்டச் சமயத்தில் இவை வானில் உயரப் பறந்து இறக்கைகளை மடிந்து வீழ்ந்தும், பறந்து ஆணும் பெண்ணும் ஒன்றை ஒன்று நெருங்கிக் கால் விரல்களை இணைத்துக்கொள்ளக் கத்தியபடியே முயற்சிசெய்யக் காணலாம்.

சிறு பறவைகளையும், ஓணான் பாம்பு முயல் முதலானவற்றையும் வேட்டையாடும் கழுகுகள் நாள்தோறும் காலையில் இரை தேடத் தொடங்கும். ஆனால் குரங்குகள், சிறிய மான்கள் முதலிய விலங்குகளை வேட்டையாடித் தின்னும் கழுகுகள் சில நாட்களுக்கு ஒருமுறையே வேட்டையாடுகின்றன. ஆண் வேட்டையாடிக் கொன்ற இரையில் பெண்ணும் பெண் வேட்டையாடிக்கொன்ட இரையில் ஆணும் பங்குபெறுவது உண்டு. வேட்டையாடாத நாட்களில் இவை உயரச் சுற்றி வட்டமிட்டுப் பறந்து பொழுதுபோக்கக் காணலாம். காலையும் மாலையும் வேட்டையாடியும் வானத்தில் பறந்தும் பொழுதைக் கழிக்கும் இவை இரவில் வழக்கமாகத் தங்கும் இடங்களில் சென்று தங்கும். தொடர்ந்து பல ஆண்டுகள் ஒரே இடத்தை இருப்பிடமாகக்கொண்டு இரவில் சென்று தங்கும் பழக்கமுடையவை இவை. காலையில் நன்ருக வெயில் காயத் தொடங்கிய பின்னரே இரவில் அடைந்த இடத்தைவிட்டு வெளிப்படும். முற்பகலில் வெயில் ஏற ஏற விரிவடைந்து மேலே உயரும் காற்று மண்டலத்தின் துணையால் இவை இறக்கையை விரித்து மிதந்து வட்டமிட்டபடி உயர உயரச் செல்லும் காட்சி கண்டு மகிழத்தக்க ஒன்ருகும்.

தென்னிந்தியாவில் காணப்படும் கழுகுகள்

49. கேரளக் கொண்டைக் கழுகு

155. Legge's Hawk Eagle

Spizaetus nipalensis kelaarti (Legg)

தோற்றம்: செம்பருந்தைக் காட்டிலும் அளவில் சற்றுப் பெரியது இது. ஆண் பெண்ணைக் காட்டிலும் அளவில் சற்றுச் சிறியதாக இருக்கும்.

அலகு கருப்பு நிறமாகவும் விழித்திரை மஞ்சளாகவும் கால்கள் எலுமிச்சை மஞ்சள் நிறமாகவும் இருக்கும்.

வெள்ளை விளிம்போடு கூடிய கருப்புநிறத் தலைக் கொண்டையைக்கொண்டு இதனை அடையாளம் கண்டுகொள்ளலாம். தலை கருப்பு நிறமாகவும் இறக்கைகளும் உடலின் மேற்பகுதியும் பழுப்பும்

வெளிர் பழுப்புமாகவும் இருக்கும். மோவாய், தொண்டை, முன் கழுத்து ஆகியன வெண்மையாக இருக்கும். மற்ற உடலின் கீழ்ப் பகுதிகள் வெளிர் பழுப்பாக இருக்கும்.

காணப்படும் இடங்கள் : கேரளா மைசூர் மாநிலங்களில் உயர்ந்த மலைப்பகுதிகளிலும் நீலகிரியிலும் இதனைக் காணலாம்.

பழக்க வழக்கங்கள் : வேகமாகவும் ஆற்றலோடும் பாய்ந்து பறக்கும் இது இரையினைப் பறந்த நிலையிலிருந்து பாய்ந்து பற்றாமல் மரங்களில் இலைகளிடையே மறைந்து அமர்ந்தபடியிருந்தே பாய்ந்து பற்றுகிறது.

இனப்பெருக்கம் : காலம்: டிசம்பர் முதல் மார்ச் முடிய. கூடு : மலைக்காடுகளில் பெரிய மரங்களில் உயர குச்சிகளால் பெரிய கூடு அமைக்கும். ஒரே சமயத்தில் இரண்டு கூடுகள் கட்டும். முட்டை : ஒன்று மட்டும்; வெண்மை நிறமாக சாம்பல் மஞ்சள் நிறக் கறைகள் தோய்ந்து காணப்படும்.

50. இந்தியக் கொண்டைக் கழுகு

161. Indian Crested Hawk-Eagle

Spizaetus cirrhatus cirrhatus (Cemelin)

தோற்றம் : இதுவும் செம்பருந்தைவிடச் சற்றுப் பெரியது (72 செ. மீ) அலகு ஈயத்தைப்போன்ற நிறமுடையதாக முனை கருத்துக் காணப்படும், கண்விழி வைக்கோல் நிறமாகவும் கால்கள் மஞ்சள் நிறமாகவும் இருக்கும்,



இந்தியக் கொண்டைக் கழுகு

சற்று மெலிந்த தோற்றம் கொண்ட இந்தக் கழுகும் காடுகளையே விரும்பி வாழ்வது. உடலின் மேற்பகுதி பழுப்பு நிறமாகவும் அடிப் பகுதி வெள்ளை நிறமாகக் கீழ்மேலான கருத்த கோடுகளுடனும் காணப்படும். சுமார் 10 செ. மீ. நீளமுள்ள கறுத்த கருஞ்சிவப்பு முனையோடு கூடிய தலைக்கொண்டையும் சிறகுகளால் மூடப்பட்ட கால்களும் இதனை வேறு கழுகுகளிலிருந்து பிரித்து அடையாளம் காணத் துணைசெய்யும்.

காணப்படும் இடங்கள் : தென்னிந்தியா முழுதும் காணப் படுவதாக ஜெர்டன் குறித்துள்ளார். கேரளாவின் தென் பகுதியில் இதற்குப் பதிலாக முன் கூறப்பட்ட கேரளக் கொண்டைக் கழுகு மட்டுமே காணப்படுகிறது.

பழக்க வழக்கங்கள் : மரங்கள் நெருங்கியில்லாத காடுகளிலும் காடுகளை அடுத்த ஊர்ப்புறங்களிலும் இதனைக் காணலாம். மரக் கிளைகளில் உயர இலைப் புதர்களிடையே மறைந்து அமர்ந்து சுற்றும் நோட்டம் விட்டபடி இருக்கும் இதனை நாமோ இதற்குப் பலியாகும் இரைகளோ எளிதில் கண்டுகொள்ள முடியாது. நாம் மிக நெருங்கி வந்தவுடன் திடீரென இது இலைப் புதிரைவிட்டு வெளியே பாய்ந்து பறந்து நம்மை வியப்பில் ஆழ்த்தும். அதிக மாகப் பறக்கும் பழக்கம் இதற்கு இல்லை. இனப்பெருக்கக் காலத்தில் மட்டும் காதலூடாட்டத்தின்போது ஆணும் பெண்ணும் உயரப் பறந்து தாழ்ந்து இறக்கையை மடித்தபடி வீழ்ந்து விளையாடும்.

முயல், அணில், கௌதாரி, காடை, காட்டுக்கோழி ஆகிய வற்றை மரக்கிளையிலிருந்து பாய்ந்து பற்றி உணவாகக்கொள்ளும். குஞ்சு பொறித்த பறவைகள் வீட்டில் வளர்க்கும் கோழிக் குஞ்சு களுக்கு எமனாகக் கருதப்படுகிறது.

க்கி, க்கி, க்கி, க்கி, க்கி...க்கீ இ என இனப்பெருக்கக் காலத்தில் அடிக்கடி கத்தும் குரலைக் கேட்கலாம்.

இனப்பெருக்கம் : காலம் : டிசம்பர் முதல் ஏப்ரல் வரை. கூடு : பெரிய மரங்களில் உச்சியில் குச்சிகளால் பெரிய கூடு அமைத்து தழைகளால் மெத்தெனச் செய்யும் மாமரங்களில் பெரும்பாலும் கூடுகள் அமைந்திருக்கக் காணலாம். ஆலமரம் வாகைமரம் ஆகியவற்றிலும் கூடுகளைக் காணலாம். முட்டை: ஒன்று மட்டும் வெண்மையாகக் கறைகள் ஏதுமின்றிக் காணப் படும். சிலபோது முட்டைகளின் பெருமுனையில் சிறு சிவப்புக் கறைகள் காணப்படுவது உண்டு.

51. வெள்ளைக்கண் கழுகு

157. White Eyed Buzzard Eagle

Butastur teesa (Franklin)

தோற்றம் : கழுகுகளில் இது சிறியது. அண்டங்காக்கை அளவு இருக்கும். சாம்பலும் பழுப்புமான நிறங்கொண்ட கழுகு இது. தொண்டை வெண்மையாக இருக்கும். பின் கழுத்தில் ஒரு

வெள்ளைத் திட்டுக் காணலாம். உடம்பின் அடிப்பாகம் பழுப்பும் வெண்மையும் கலந்து காணப்படும்.

அலகு கருப்பாகவும் விழிப்படலம் வெண்மையாகவும் கால்கள் வெளிர் மஞ்சளாகவும் காட்சி தரும்.

காணப்படும் இடங்கள் : தென்னிந்தியா முழுவதிலும் புதர்க் காடுகளிலும் சமவெளிகளிலும் ஆங்காங்கே காணலாம்.

பழக்க வழக்கங்கள் : வழக்கமான இடங்களில் எப்போதும் அமர்ந்திருக்கக் காணலாம். தந்திக் கம்பங்கள், மரக்கட்டைகள், ஆகியவற்றில் அமர்ந்திருந்து பாய்ந்து இரையைப் பிடிக்கும். காட்டுத்தீ எரிந்து அடங்கியபின் அத் தீயில் வெந்த இரைகளைத் தூக்கிச் செல்லும். சிலபோது தரையிலும் எல்லைக்கல் ஆகிய வற்றின்மீதும் அமர்ந்திருக்கக் காணலாம். தரையில் நடந்து கரையான் போன்ற சிறு பூச்சிகளையும் பிடித்துத் தின்னும். வேக மாகப் பாய்ந்து பறக்கும் ஆற்றல் வாய்ந்தது.

காட்டெலி, சுண்டெலி, சிறு பாம்புகள், தத்துக்கிளி, தவளை, நண்டு முதலியன இதன் உணவு.

இனப்பெருக்கம் : காலம் : மார்ச் முதல் மே முடிய. கூடு . மாமரம் வேப்பமரம் முதலியவற்றில் தரையிலிருந்து 9 முதல் 12 மீட்டர் உயரத்தில் சிறு குச்சிகள் முதலியவற்றால் கூடு அமைத்துக் கொள்ளும். முட்டைகள் : 2 முதல் 4 வரை ; பசுமைகலந்த வெண்மை நிறமாக இருக்கும். சிலபோது செம்புள்ளிகளும் முட்டை யின்மேல் காணப்படும்.

52. போனெல் கழுகு

163. Bonelli's or Slender Hawk Eagle

Hieraaetus fasciatus fasciatus (Vieillot)

தோற்றம் : செம்பருந்தின் அளவிருக்கும் இது சுமார் 70 செ: மீ. நீளமுடையது. பெண் ஆணைவிடச் சற்றுப் பெரியது.

அலகு நீலங் கலந்த கருஞ் சாம்பல் நிறமாகவும் விழிப்படலம் நல்ல மஞ்சளாகவும் கால்கள் சற்று மஞ்சள்தோய்ந்த வெளிர் பழுப் பாகவும் இருக்கும்.

சற்று மெலிந்த உடலோடு கூடிய இதன் வால் மற்ற கழுகு களின் வாலைவிடச் சற்று நீண்டிருக்கக் காணலாம். இதற்குத் தலை

யில் கொண்டை கிடையாது. உடலின் மேற்பகுதி ஆழ்ந்த மஞ்சள் கலந்த பழுப்பு நிறமாகவும் உடலின் அடிப்பகுதி கீழ் மேலான கருங் கோடுகளோடு கூடிய வெண்மை நிறங் கொண்டும் காணப் படும். வாலின் நுனியில் அகன்ற கருப்பு நிறப் பட்டையைக் காணலாம்.

உயரப் பறக்கும்போது வெண்மையான உடற் பகுதியும் கரும் பழுப்புப் போர்வை இறகுகளும் சாம்பல் நிறப் பட்டைகளோடு கூடிய பறக்கும் இறகுகளும் வால்நுனிக் கரும் பட்டையும் இதனை அடையாளங் கண்டுகொள்ளத் துணைசெய்யும்.

காணப்படும் இடங்கள் : தென்னிந்தியா முழுவதும் மலைகளைச் சார்ந்த காடுகளிலும் மலைகளை அடுத்த பள்ளத்தாக்குகளிலும் காண லாம். சென்னையைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் காணப்பட்ட குறிப்புள்ளது. நீலகிரி மலைச்சாரலில் ஓரளவு மிகுதியாகக் காண லாம். மற்றப் பகுதிகளில் அபூர்வமாகவே காணப்படும்.

பழக்க வழக்கங்கள் : இந்தியாவில் காணப்படும் கழுகுகளுள் இது ஆற்றல் வாய்ந்ததும் தைரியம் மிகுந்ததும் ஆகும். இதன் நிறையைக் காட்டிலும் அதிகக் கனமுள்ள இரைகளையும் அடித்துத் தூக்கிச் செல்லும். கொண்டைக் கழுகுபோல மரத்தில் உயர இலைக ளிடையே மறைந்திருந்து பாய்ந்து இரையைத் தாக்குவதும், வட்ட மிட்டுப் பறந்து இரையைத் தேடிப் பின் வீழ்ந்து பாய்ந்து தாக்கு வதும் ஆகிய இரண்டு வகைகளிலும் இரைதேடும் பழக்கம் இத னிடம் உண்டு. இரையை இரண்டு கால் விரல்களாலும் பற்றித் தூக்கும்போதே கூரிய நகங்களை இரையின் உடலில் செலுத்திக் கொன்றுவிடும் ஆற்றல் வாய்ந்தது. பெரும்பாலும் ஆணும் பெண் ணும் ஒன்ருகச் சேர்ந்தே வேட்டையாடக் காணலாம். கூட்டமாகப் பறக்கும் புருக்களை ஒரு பறவைமேலிருந்து எதிர்பாராது தாக்கி அச்சுறுத்தும். அப்போது சிதறித் தப்பி ஓட முயலும் புறுக்களில் ஒன்றை இன்னொரு பறவை பாய்ந்து பற்றிச் சென்றதும் முதலில் புருக்களை அச்சுறுத்தப் பாய்ந்த பறவை மறுபடியும் வீழ்ந்து இன்னொரு பறவையைப் பிடித்துச் சென்றதையும்தான் கண்டதாக ஜெர்டன் குறித்துள்ளார். கூட்டமாகப் பறக்கும் பறவைகளில் ஒன்றைத் தனியே பிரித்து விரட்டி இரண்டு கழுகுகளும் சேர்ந்து துரத்திப் பிடித்துப் பகிர்ந்து தின்பதும் உண்டு. வேட்டைக்காரர் களால் வலியனைப்போல இதனைப் பழக்க முடியவில்லை.

பெரிய பறவைகளும் கௌதாரி, காட்டுக்கோழி, பச்சைப் புழு, காகம் போன்ற பறவைகளும் இதன் உணவாகும். காகம் இதன் முக்கிய உணவு. வீட்டில் வளர்க்கும் கோழிகளைப் பிடித்துப் பழகி

விட்டால் தொடர்ந்து கோழிகளுக்குச் சேதம் உண்டாக்கியபடி இருக்கும். அளவில் மிகப் பெரிய நாரையை இது பிடித்ததாகவும் குறிப்பு உண்டு.

இனப்பெருக்கம்: காலம்: டிசம்பர் முதல் மார்ச் முடிய. கூடு: கேரளாவில் காடுகளில் உயர வளர்ந்திருக்கும் மரங்களில் கூடுகட்டும் இது. நீலகிரியில் மலைச்சிகரங்களில் பாறை இடுக்கு களிலும் கூடு கட்டுகிறது. குச்சிகளால் கூடு அமைத்து இலை களால் மெத்தெனச் செய்யும். முட்டை: ஒன்று அல்லது இரண்டு வெண்மையாக இருக்கும்; சில சமயங்களில் பழுப்பு நிறப் புள்ளி களை முட்டையின்மீது காணலாம்.

ஆணும் பெண்ணும் கூடுகட்டி அடைகாக்கும் பணிகளில் பங்கு கொள்ளும்.

53. இறகு போர்த்த காலுடைய கழுகு

164. Booted Hawk-Eagle

Hieraaetus pennatus (Gmelin)

தோற்றம்: செம்பருந்தைவிட இது அளவில் சிறியது. நீளம் சுமார் 52 செ. மீ. இருக்கும்.

அலகு வெளிர் நீலமாக முனை கறுத்துக் காணப்படும். விழிப் படலம் சிவப்புக் கலந்த பழுப்பாக இருக்கும். கால்கள் மஞ்சள் நிறம்.

தோற்றத்தில் இது முன்பு சொன்ன போனல் கழுகினை ஒத்தது என்றாலும் அளவில் அதனைக் காட்டிலும் சிறியது. அடிக்கடி பெறும் நிற மாற்றத்தால் செம்பருந்துபோலவும் பரப்பருந்துபோல வும் சில சமயங்களில் தோற்றம தரும். சதுர அமைப்புடைய வாலைக்கொண்டே இதனை அவற்றிலிருந்து வேறுபடுத்தி அறிய லாம். கணுக்கால் முழுதும் மூடியிருக்கும் இறகுகள் இன்னொரு அடையாளமாகும். இந்தியாவில் காணப்படும் காலில் இறகுள்ள கழுகுகளில் இதுவே அளவில் பெரியது.

காணப்படும் இடங்கள்: தென்னிந்தியாவில் முழுதும் மலைத் தோட்டங்களில், ஊர்புறத் தோப்புக்கள் தோட்டங்கள் ஆகியவை களில் ஆங்காங்கே காணலாம். நகரங்களில் சிலபோது பரப் பருந் தோடு சேர்ந்து இதுவும் பறக்கக் காணலாம்.

பழக்க வழக்கங்கள்: ஆணும் பெண்ணுமாகச் சேர்ந்து சுற்றி வட்டமிட்டபடி பறந்து இரைதேடும். மரக்கிளைகளில் உட்கார்ந்து

நோட்டம் பார்த்துப் பாய்ந்து இரையைப் பிடிப்பதும் உண்டு. பருந்துபோலச் சுற்றிச் சுற்றிப் பறக்கும். இதனை அடிக்கடி காக்கைகள் துரத்தக் காணலாம். இரவில் பல பறவைகள் ஒன்ருகச் சேர்ந்து இலைகள் அடர்ந்த பெரிய மரங்களில் அடையும்.

எலி, அணில், வானம்பாடி, குக்குறுவான் கொண்டைக் குருவி, புரு முதலிய பறவைகளை இது வேட்டையாடித் தின்றுள்ளது. வீட்டில் வளர்க்கும் கோழிக் குஞ்சுகளையும் தூக்கிச் செல்வது உண்டு.

மிக உரத்த குரலில் கிக், கிக், கிக் என இனப்பெருக்கக் காலத்தில் அடிக்கடி கத்தும்.

இனப்பெருக்கம்: காலம்: டிசம்பர் முதல் ஏப்ரல் முடிய. கூடு: மலைப் பகுதிகளை அடுத்துப் பெரிய மரங்களில் உயரக் குச்சிகளால் கூடமைத்துப் பச்சை இலைகளால் மெத்தெனச் செய்யும். முட்டை: இரண்டு மட்டும். துருச் செந்நிறக் கறைகள் கொண்ட நீலங் கலந்த வெண்மை நிறம்.

54. கருஞ்சிவப்பு வயிற்றுக் கழுகு

165. Rufous Bellied Hawk-Eagle

(*Lophotriorchis kieneri kineri* (E. Geoffroy)]

தோற்றம்: பருந்து அளவு உள்ள இது சுமார் 53 முதல் 60 செ. மீ. நீளம் இருக்கும். ஆணைவிடப் பெண் உருவில் சற்றுப் பெரியது.

அலகு கருப்பாகவும் விழிப்படலம் ஆழ்ந்த பழுப்பாகவும் கால்கள் மஞ்சளாகவும் இருக்கும்.

சிறிய கருப்புநிறக் கொண்டையோடு கூடிய இக் கழுகின் தலை கருப்பாக இருக்கும். மோவாய், தொண்டை, மேல் மார்பு ஆகிய வெண்மை நிறமாக இருக்கும். மார்பில் நெடுங் கருங்கோடுகள் சில இருக்கக் காணலாம். வயிறு, வாலடி, தொடை, இறக்கை ஆகியன கருஞ் சிவப்பாக இருக்கும்.

பறக்கும்போது குறுகிய வாலும், செம்பழுப்பு நிற வயிறும், வெள்ளைநிற மார்பும், சாம்பல் நிற இறக்கை அடித்தோற்றமும் இதனை அடையாளங் காண உதவும்.

காணப்படும் இடங்கள் : வடக்கு மைசூர், கேரளா ஆகிய பகுதிகளில் மலைகளிலும் அடர்ந்த காடுகளிலும் 1200 மீட்டர் உயரம் வரையிலும் காணலாம். நீலகிரியிலோ பழனிமலையிலோ இப்பறவையைக் கண்ட குறிப்பு இல்லை.

பழக்க வழக்கங்கள் : மலைச்சரிவை ஒட்டிய காடுகளிலும் பள்ளத்தாக்குகளிலும் இறக்கையை விரித்து மிதந்தோ அல்லது வேகமாக இறக்கையடித்தோ பறந்தபடி இருக்கக் காணலாம். தென் கேரளாவில் மலைப்பகுதி சார்ந்த காடுகளில் 500 மீட்டர் முதல் 1000 மீட்டர் உயரம் வரை சாதாரணமாகக் காணப்படும். இது மிகுந்த தைரியமும் பறக்கும் ஆற்றலும் வாய்ந்த பறவை என ஸ்டீவர்ட் பேக்கர் குறிப்பிடுகிறார். லகுடுபோல வேகமாகப் பாய்ந்து காட்டுக்கோழி, மயில்போன்ற பெரிய பறவைகளையும் கொல்லும் ஆற்றல் வாய்ந்தது. அடர்ந்த மரக் கிளைகளிடையே துன்பத்தைப் பொருட்படுத்தாமல் தலைகீழாக வேகமாகப் பாயும் ஆற்றல் உடையது.

காட்டுமுயல், அணில், காட்டுக்கோழி, பச்சைப்புரு, மயில் போன்றவை இதன் உணவு.

செம்பருந்துபோலவே இதுவும் கத்தக் கேட்டதாக ஸ்டூவர்ட் பேக்கர் குறித்துள்ளார்.

இனப்பெருக்கம் : காலம் : டிசம்பர் முதல் மார்ச் முடிய. கூடு : அடர்ந்த காட்டில் பெரிய மரங்களில் 24-30 மீட்டர் உயரத்தில் குச்சிகளாலும் இலைதழைகளாலும் கூடு அமைத்துக்கொள்ளும். ஒவ்வொரு ஜோடி பறவை பரந்த காட்டுப் பகுதியை இனப்பெருக்க இடமாக வரையறை செய்துகொண்டு ஒரே சமயத்தில் இரண்டு கூடுகளைக் கட்டிக்கொள்ளும். பல ஆண்டுகள் தொடர்ந்து அதே கூடுகளைப் புதுப்பித்துப் புதுப்பித்துப் பயன்படுத்தக் காணலாம். முட்டை : 1 மட்டும்; சிலசமயம் தூய வெண்மையாகவும் சிலபோது சிவப்புப் புள்ளிகளுடன் கூடிய வெண்மையாகவும் இருக்கும்.

ஆணும் பெண்ணும் சேர்ந்து கூடுகட்டி மாறி மாறி அடைகாக்கும். எப்பொழுதும் ஒரு பறவை கூட்டின் அருகே இருக்கும். கூட்டை நெருங்குபவர்களைக் கோபம்கொண்டு தாக்கும் பழக்கமுடைய இதனைச் சுட்டுக் கொல்லாமல் கூட்டிலிருந்து முட்டையை எடுக்கவோ குஞ்சுகளைப் பிடிக்கவோ முடியாது.

55. கருங் கழுகு

172. Black Eagle

Ictinaetus malayensis perniger (Hodgson)

தோற்றம்: பருந்து அளவினதான இந்தக் கருங்கழுகு 68-81 செ. மீ. நீளமிருக்கும்.

அலகு பசுமைகலந்த கொம்பு நிறமாக (Greenish horny) முனை கருத்துக் காணப்படும்; கால்கள் நல்ல மஞ்சள் நிறம்; விழிப்படலம் ஆழ்ந்த பழுப்பு நிறம்.

உடல் முழுதும் கருப்பு நிறமாகத் தோன்றும். மேற்பகுதியை விட அடிப்பகுதி சற்று மங்கிய கருப்பாக இருக்கும். உட்காரும் போது இறக்கைகள் வால்நுனியைத் தொடும். பறக்கும்போது சாம்பல்நிறப் பட்டைகளோடு கூடிய நீண்ட வாலும் மஞ்சள் நிறக் கால்களும் இதனை அடையாளம் கண்டுகொள்ள உதவும். அப்போது விரிந்து காட்சிதரும் இறக்கைகள் நீண்டு அகன்று வட்டமான முனையோடு காட்சிதரும். அப்போது இறக்கைகள் முதுகின் மேல்நோக்கி சற்று வளைந்து V வடிவில் அமைந்திருக்கக் காணலாம். தலைக்கு நேர் மேலே பறக்கும்போது இறக்கைகளின் அடிப் பாகத்தில் ஒரு நிறங் குன்றிய வெளிரான பகுதி புலனாகக் காணலாம்.

காணப்படும் இடங்கள்; கன்னியாகுமரி முதல் கோவா வரை மேற்குத் தொடர்ச்சிமலைப் பகுதிகளைச் சார்ந்த அடர்ந்த பசுமையான காடுகளில் ஆங்காங்கே காணலாம்.

பழக்க வழக்கங்கள்: எப்பொழுதும் அடர்ந்த பசுங் காடுகளையே சார்ந்து வாழ்வது இது. சிலபோது காட்டின் விளிம்புகளில் பறந்து திரியக் காணலாம். இணையாக ஆணும் பெண்ணும் இறக்கைகளை அகல விரித்துக் காடுகளின்மேல் ஓரிரு மீட்டர் உயரத்தில் சிரமமின்றிப் பறந்தபடி இருக்கும் உயர வளர்ந்த மரங்களின் கிளைகளிடையேயும் நுழைந்து நுழைந்து பறக்கும் ஆற்றல் வாய்ந்தது. மரங்களை நெருங்கிப் பறக்கும்போது மரங்களில் பிற பறவைகள் கட்டியுள்ள கூடுகளையும் கூடுகளில் உள்ள முட்டைகளையும் குஞ்சுகளையும் நோட்டம் விட்டபடி இருக்கும். வாய்ப்பாக அமைந்த பறவைகளின் கூடுகளை அவற்றில் உள்ள முட்டைகளோடும் குஞ்சுகளோடும் கால்களால் இடுக்கித் தூக்கிச் செல்லும். கூட்டினைக் கால்களில் இடுக்கிக்கொண்டு பறக்கும்போதே அந்தக் கூடுகளில் உள்ள முட்டைகளை ஆராய்ந்தெடுத்து விழுங்கும். கூடு

களை முழுதுமாக அப்படியே தூக்கிச்செல்ல ஏற்ற வகையில் இக் கழுகின் கால் விரல்கள் நீண்டு அமைந்துள்ளது தனித்த சிறப்பு வளர்ச்சி நிலையை விளக்கும் ஒரு உண்மையாகும். மற்ற கழுகு களின் கால் விரல்கள் பாய்ந்து பற்றும் இரையை இறுக்கிப் பிடிக்க ஏற்ற வகையில் குட்டையாக அமைந்திருப்பது இங்கு கருதத் தக்கது. இது எப்போதும் முட்டைகளையும் குஞ்சுகளையுமே உண வாகக்கொண்டு வாழ்வதில்லை. பிற கழுகுகளைப்போல பள்ளத் தாக்குகளில் பறந்து திரிந்து வேட்டையாடவும் செய்கிறது. அப்படி வேட்டையாடித் தவளை, ஓணான் முதலியவற்றையும் பிடித்துத் தின்னும்.

இனப்பெருக்கம்: காலம்: நவம்பர் முதல் மார்ச் முடிய. கூடு: மலைகளில் 300-1200 மீட்டர் உயரத்தில் பெரிய இலைகள் அடர்ந்த மரங்களில் பெரிய ஒழுங்கான குச்சிகளால் கட்டிக்கொள் ளும். வேறு சில கழுகுகளைப்போல அருகருகே இரண்டு கூடுகளை வேறு வேறு மரங்களில் ஒரே சமயத்தில் அமைத்துக்கொள்ளும். முட்டை: 1 மட்டும்; அபூர்வமாக 2; கழுகு முட்டைகளுள் இதன் முட்டைகளே மிக அழகானவை. இளஞ் சிவப்பு நிறந் தோய்ந்த வெண்மை நிறமாகச் செங்கல் சிவப்புநிறக் கறைகள் கொண்டு விளங்கக் காணலாம். வேறு பலவகை நிறப் பொலிவுகளோடும் முட்டைகள் கண்டு எடுக்கப்பட்டுள்ளன.

ஆணும் பெண்ணும் காதலூடாட்டத்தின்போது உயரப் பறந்து ஒன்றைச் சுற்றி ஒன்று திரிந்தும் இறக்கைகளை மடித்துக் கீழே விழுவதுபோல வானில் சாய்ந்தும் ஓயாது கத்தியும் பலவகை விளையாட்டுக்களில் ஈடுபடும். ஆணும் பெண்ணும் பிரியாது தொடர்ந்து இணையாக வாழும் பழக்கமுடையவை. ஆனால் ஆணோ பெண்ணோ இறந்துவிட நேர்ந்தால் உயிர் வாழும் பறவை உடனே வேறு துணையைத் தேடிக்கொள்கிறது.

56. வெள்ளை வயிற்றுக் கடற் கழுகு

173. White Bellied Sea Eagle

Haliaetus leucogaster (Emelin)

தோற்றம்: பருந்தைவிட இது அளவில் பெரியது.

மேல் அலகு கொம்பு நிறமாகவும் கீழலகு கருப்பாகவும் இருக் கும். விழிப்படலம் பழுப்பாகவோ பழுப்புக் கலந்த மஞ்சளாகவோ இருக்கும். கால்கள் வெண்மையாக இருக்கும்.

அழகிய தோற்றம் கொண்ட இந்தக் கடற் கழுகின் உடலின் மேற்பகுதி சாம்பல்நிறந் தோய்ந்த பழுப்பாக இருக்கும். தலையும் கழுத்தும் உடலின் அடிப்பாகமும் வெண்மையாக இருக்கும். பறக்கும்போது வெண்மையான ஆப்பு வடிவமான வாலும், கரு விளிம்போடு கூடிய வெள்ளை நிற அடி சிறகுகளும் இதனை அடையாளங் கண்டுகொள்ள உதவும். பறக்கும்போது இறக்கைகள் முதுகுக்குமேல் V வடிவில் அமைந்திருக்கக் காணலாம். உட்கார்ந்திருக்கும்போது மடங்கிய இறக்கைகள் வாலுக்குச் சமமாகவோ வாலைவிடச் சற்று நீண்டோ இருக்கக் காணலாம்.

காணப்படும் இடங்கள் : தென்னிந்தியக் கடற்கரைப் பகுதி நெடுகவும் கடலை ஒட்டிய நிலப் பகுதிகளிலும் காணலாம்.

பழக்க வழக்கங்கள் : ஆணும் பெண்ணும் சேர்ந்தே இருக்கக் காணலாம். மீன் பிடிக்கும் மீனவர் படகுகளின் கூம்பு மீதோ, கடற்கரையை ஒட்டியுள்ள பாறைகள்மீதோ, கடலை அடுத்து உயர வளர்ந்துள்ள மரங்களின்மீதோ உட்கார்ந்திருக்கக் காணலாம். இரை தேடும்போது கடலின்மேல் சுமார் 15-20 மீட்டர் உயரத்தில் அலைப் பகுதிகளுக்கு அப்பால் இறக்கையை விரித்து மிதந்தபடி கம்பீரமாகப் பறந்தபடி இருப்பதைக் காணலாம். இப்படிப் பறந்து கொண்டிருக்குமிது திடீரெனக் கடலில் பாய்ந்து காலில் ஒரு கடற் பாம்பைப் பற்றிக்கொண்டு மேலெழுந்து கடற்கரையை அடுத்து இருக்கும் பாறைக்கோ மரத்திற்கோ சென்று அமர்ந்து பிடித்த கடற் பாம்பைத் தின்னும் விரால் அடிப்பானைப்போல நீரில் மூழ்கி இரையைப் பிடிப்பதில்லை. கடல் மட்டத்திற் பறந்தே காலால் பற்றி எடுத்துச் செல்லும். இனப்பெருக்கம் செய்யாத காலத்தில் பழைய கூடு இருக்கும் இடத்தில் ஓய்வாக உட்கார்ந்து இரை தின்னும் இடமாகப் பயன்படுத்தும்.

கடற் பாம்பே இதன் முக்கிய உணவு. மீன், நண்டு முதலியவற்றையும் தின்னும். சிலபோது கடற்கரையை அடுத்த சிற்றூர்களிலிருந்து கோழிக்குஞ்சுகளைத் தூக்கிச்செல்வதும் உண்டு.

இனப்பெருக்கம் : காலம் : அக்டோபர் முதல் ஜனவரி முடிய. கூடு : கடற்கரையை அடுத்துநிற்கும் மரங்களில் 10-50 மீட்டர் உயரத்தில் குச்சிகளால் பெரிய கூடு அமைத்து இலைகளால் மெத்தெனச் செய்யும். கடற்கரையை அடுத்த கோட்டைகள் மலைப் பாறைகள்மீதும் கூடு கட்டுவது உண்டு. முட்டை : இரண்டு மட்டும். நிறம் தூய வெண்மை.

57. கருஞ்சாம்பல் நிறத்தலை மீன் பிடிக்கும் கழுகு

175. Grey Headed Fishing Eagle

Icthyophagus ichithyaetus ichithyaetus (Horsfield)

தோற்றம் : பருந்தைவிட அளவில் பெரிய இது சுமார் 74 செ. மீ. நீளமிருக்கும்.

அலகு ஆழ்ந்த பழுப்பு நிறமாகவும் விழிப்படலம் வெளிர் மஞ்சளாகவும் கால்கள் சிறுக்களிமண்ணின் வெண்மை நிறமாகவும் இருக்கும்.

இதன் தலையும் கழுத்தும் கருஞ்சாம்பல் நிறம். உச்சி, பின் கழுத்து, மேல்முதுகு ஆகியன இளம் பழுப்பு. உடலின் எஞ்சிய மேற்பகுதி நல்ல பழுப்பு. இறக்கைகள் கருப்பு. மேல்மார்பு இளம் பழுப்பு. வயிறும் பக்கங்களும் வெண்மை. வாலில் சுமார் 6-8 செ. மீ. அகலமுள்ள கருநிறப் பட்டை இருக்கும். தலைக்குமேல் பறக்கும்போது கருப்புப் பட்டையோடு கூடிய குறுகிய வாலும் வெண்மையான வயிறும் பழுப்புநிற மார்பும் இதனை அடையாளங் கண்டுகொள்ளத் துணைசெய்யும்.

காணப்படும் இடங்கள் : கேரளா மைசூர் மாநிலங்களில் மேற்குத் தொடர்ச்சிமலையைச் சார்ந்த பகுதிகளில் ஆற்றங்கரைகளை அடுத்துக் காணலாம்.

பழக்க வழக்கங்கள் : தனித்தோ சற்று விலகி இருக்கும் ஆணும் பெண்ணுமான இணையாகவோ காணலாம். ஆற்றங்கரைகளை அடுத்திருக்கும் பெரிய மரங்களில் நிமிர்ந்து உட்கார்ந்தபடி இருக்கும். மற்றக் கழுகுகளைப்போல இது அதிகநேரம் வட்டமிட்டுப் பறப்பதில்லை. பறந்து வட்டமிட்டு நீர்ப்பரப்பை ஆராய்ந்து மீன் பிடிப்பதும், மரக்கிளையில் மீன்கொத்தி போல மீன் வருவதைப் பார்த்தபடி அமர்ந்திருந்து பாய்ந்து பற்றுவதும் ஆகிய இரண்டு பழக்கங்களும் இதனிடம் உண்டு. விரால் அடிப்பானைப்போல நீரில் மூழ்கி மீன் பிடிப்பதில்லை. தூக்கமுடியாத அளவு பெரிய மீன்களை நீர்மட்டத்தோடு தண்ணீரின்மேல் இழுத்துச்செல்லும். 12 பவுண்டு நிறையுடைய மீனை இது கொன்றிருப்பதாக ஸ்டூவர்ட் பேக்கர் கண்டு குறித்துள்ளார். இனப்பெருக்கக் காலத்தில் குஞ்சுகளுக்கு காட்டு அணில், பறவைக்குஞ்சுகள் ஆகியவற்றை அடிக்கும். பாம்பு, காட்டுக்கோழி அழுகிய உடல்கள் ஆகியவற்றைத் தின்னும் பழக்கமும் இதற்கு உண்டு.

இனப்பெருக்கம்: காலம்: நவம்பர் முதல் ஜனவரி முடிய கூடு: பெரிய மரங்களில் 10-30 மீட்டர் உயரத்தில் 150 செ. மீ. அகலமுள்ள பெரியகூடுகளைக் குச்சிகளால் கட்டிக் கொள்ளும் ஒரே சமயத்தில் இரண்டு கூடுகள் கட்டிப் பராமரிக்கும் பழக்கம் உண்டு. முட்டைகள்: 2 அல்லது 3; தூய வெண்மை நிறத்தில் எத்தகைய கறைகளும் இன்றிக் காணப்படும்.

58. கருப்புப் பிணந்தின்னிக் கழுகு

178. Black or King Vulture

Torges Calvus (Scopoli)

தோற்றம்: எங்கும் சாதாரணமாகக் காணப்படும் வெள்ளை முதுகுக் கழுகைவிட இது உருவில் பெரியது. சுமார் 84 செ. மீ. நீளமிருக்கும்.

இறகற்ற மஞ்சள் கலந்த சிவப்பு நிறமான தலையும், கழுத்தும் தொடையும் காலும் இதனை எளிதில் அடையாளங் கண்டு கொள்ளத் துணை செய்யும். கழுத்தின் கீழ்ப்பகுதியிலும் மேல் தொடை



கருப்புப் பிணந் தின்னிக் கழுகு

யிலும் வெண்மை நிறமான திட்டுக்களைக் காணலாம். தலைக்கு மேல் உயரமாகப் பறக்கும்போது கருத்த உடலின் பின்னணியில் சிவந்த தலையும் வெண் திட்டுக்கள் கொண்ட தொடையும் குவிந்தது போல முடியும் இறகுகளில் காணப்படும் வெள்ளைப் பட்டையும் கொண்டு இதனை அறிந்து கொள்ளலாம். பறக்கும்போது இறக்கைகள் முதுகின் மேல் *V* வடிவில் அமையும்.

காணப்படும் இடங்கள்: தென்னிந்தியா முழுதும் வறள் காடுகளில் மக்கள் வாழ்விடத்தை அடுத்துக் காணலாம்,

பழக்க வழக்கங்கள் : பிற கழுகுகளைப்போலப் பெருங் கூட்டமாக இதனைக் காணமுடியாது. செத்த பிணங்களைத் தின்னும் மற்றவகைக் கழுகுக் கூட்டங்களிடையே இதுவும் ஒன்றிரண்டு கலந்து பிணம் தின்னக் காணலாம். சில சமயம் 20-30 வரை பெருங் கூட்டமாகக் காணப்படுவதும் உண்டு. மற்ற இனக் கழுகுகளைத் தைரியமாக விரட்டி விட்டுத் தன் வயிறு நிறையத் தின்னும் ஆற்றல் வாய்ந்தது இது. அதனாலேயே இதனைக் கழுகரசன் என அழைக்கின்றனர். ஓரிரு முறை இறக்கை அடித்த பிறகே இதனால் எழுந்து பறக்க முடியும். கிராமப் புறங்களில் இறந்து கிடக்கும் விலங்குகளின் பிணங்களே இதன் முக்கிய உணவு.

இனப்பெருக்கம் : காலம் : டிசம்பர் முதல் ஏப்ரல் முடிய கூடு : பெரிய குச்சிகள் மிளார்கள் முதலியவற்றைப் பயன்படுத்தி ஆலமரம் அரசமரம் போன்ற மரங்களில் 9-12 மீட்டர் உயரத்தில் கூடு கட்டிக் கொள்ளும். வைக்கோல், இலைகள் முதலியவற்றைப் பயன்படுத்திக் கூட்டினை மெத்தெனச் செய்யும். ஒரு மரத்தில் ஒரு கூட்டுக்குமேல் காணப்படுவதில்லை. தொடர்ந்து பல ஆண்டுகள் ஒரே கூட்டினைத் திருத்தித் திருத்திப் பயன்படுத்தும். பாலை நிலங்களில் பெரிய மரங்கள் இல்லாதபோது புதர்களிடையே தரையிலிருந்து இரண்டு மீட்டர் உயரத்தில் கூடு கட்டிக் கொள்ளவும் இது தயங்காது. முட்டை : ஒன்று மட்டும் ; வெண்மை நிறமாக இருக்கும்.

ஆகாயத்தில் பறக்கும்போதே இக் கழுகுகளில் ஆணும் பெண்ணும் இணை கூடுவதாக ஒரு நம்பிக்கை உள்ளது.

அக நானூற்றில் பாலை நிலத்திற்கு உரியதாகப் பல பாடல்களில் கூறப்பட்டுள்ள 'செஞ்செவி எருவை' என்ற கழுகு இதுவாகவே இருத்தல் வேண்டும்.

59. நீண்ட அலகுப் பிணந்தின்னிக் கழுகு

182. Indian Long Billed Vulture

Gyps indicus indicius (Scopoli)

தோற்றம் : இதுவும் வெள்ளை முதுகுக் கழுகினைவிட அளவில் பெரியது. 92 செ. மீ.

அலகு வெளிர் பச்சை நிறமாகவும், விழிப்படலம் பழுப்பாகவும், கால்கள் சாம்பல் நிறமாகவும் இருக்கும். தலை, கழுத்து, பின் கழுத்து ஆகியனவற்றில் வெண்மையான மயிர் போன்ற தூவி இறகுகளை ஆங்காங்கே காணலாம்.

இதன் பொதுத் தோற்றம் மங்கிய பழுப்புக்கும், கரும் பழுப்புக்கும் இடைப்பட்டது. அடிவயிறு வெளிர் பழுப்பாக மணல் போலப் பட்டைபட்டையான தோற்றம் கொண்டிருக்கும். பறக்கும்போது இறக்கைகளின் கீழ்ப் பகுதிகளில் காணப்படும் பெரிய வெள்ளைப் பட்டை இதனை வெள்ளை முதுகுக் கழுகிலிருந்து வேறு படுத்திக் காட்டும்.

காணப்படும் இடங்கள்: தென்னிந்தியா முழுதும் ஆங்காங்கே காணலாம். தென் கேரளத்தில் மட்டும் காணப்படுவதில்லை.

பழக்க வழக்கங்கள்: வறண்ட பாலை நிலம், வளமான மருத நிலம் மலை சார்ந்த காடுகள் ஆகிய எல்லாப் பகுதிகளிலும் காணலாம். பெரும்பாலும் வெள்ளை முதுகுக் கழுகோடு சேர்ந்தே காணப்படும் 20-30 பறவைகள் வரை பிணங்கள் வீழ்ந்து கிடக்கும் இடங்களில் கூடக் காணலாம். பிற பழக்க வழக்கங்கள் வெள்ளை முதுகுப் பிணந்தின்னிக் கழுகைப் போன்றனவே.

இனப்பெருக்கம்: காலம்: நவம்பர் முதல் மார்ச் முடிய. கூடு: மலையுச்சிகளில் பாறை விளிம்பிலும் பாழடைந்த மலைக் கோட்டைகளிலும் சிறு கூட்டமாகக் கூடு கட்டக் காணலாம். பல ஆண்டுகள் தொடர்ந்து ஒரே இடத்தில் இனப்பெருக்கம் செய்யும். இவற்றின் எச்சம் வழிந்து வழிந்து பெரிய மலைப் பாறைகள் வெள்ளை அடித்தது போலக் காணப்படும். குஞ்சுகள் வளர வளர பாறைமேல் உள்ள குச்சிகள் எல்லாம் சரிந்து விழுந்து விடும். முட்டை: ஒன்று மட்டும்; வெண்மையாக இருக்கும். ஆணும் பெண்ணும் கூடு அமைத்தல், அடைகாத்தல் ஆகிய பணிகளில் பங்கு கொள்ளும்.

60. வெண்முதுகுப் பிணந்தின்னிக் கழுகு

185. INDIAN WHITE-BACKED VULTURE

Gyps bengalensis (Gmelin)

தோற்றம்: அளவில் தோகையில்லாத மயிலுக்குச் சமமானது இது எனச் சொல்லலாம். சுமார் 90 செ. மீ. நீளமிருக்கும்.

இதன் கீழலகு பழுப்பு நிறமாகவும் மேலலகு சாம்பல் தோய்ந்த மஞ்சள் நிறமாகவும் இருக்கும். விழிப்படலம் பழுப்பாகவும் கால்கள் கருப்பாகவும் இருக்கும்.

பழுப்புத் தோய்ந்த கருப்பு நிறமான பெரிய கழுகு இது. நீண்ட தூவிகள் அற்ற கழுத்தை உட்கார்ந்திருக்கும்போது தோள்

களுக்குள்ளே இழுத்து வைத்துக் கொண்டிருக்கும். கழுத்தின் கீழ்ப் பகுதியில் முன் பக்கத்தைத் தவிர சுற்றிலும் மெல்லிய நீண்ட தூவிகள் "புஸ்"ஸென மேலெழும்பி நிற்கக் காணலாம். பார்ப்பவர் கள் கண் மட்டத்திற்குக் கீழ் பள்ளத்தாக்கில் உட்கார்ந்திருக்கும் போது அல்லது பறக்கும்போதுதான் முதுகிலிருக்கும் வெண்மை நிறம் தெரியும்.

காணப்படும் இடங்கள்: தென்னிந்தியா முழுதும் அதிகமாகக் காணப்படும் பிணந் தின்னிக் கழுகு இதுவே. கடற்கரையைச் சேர்ந்த பகுதிகளைவிட உள்நாட்டில் அதிகம் காணலாம்.

பழக்க வழக்கங்கள்: பெரும்பாலும் சிறு கூட்டமாக மற்ற பிணந் தின்னிக் கழுகுகளோடு காணலாம். நெடுநேரம் தொடர்ந்து இது வானில் மிதந்தபடி வட்டமிட்டுப் பறக்கும் காட்சி காணத் தகுந்தது. எங்கு பிணங்கள் உள்ளன என்பதை அறிந்துகொள் வதற்காக மட்டும் அன்றி வேடிக்கையாகப் பொழுதுபோக்கவும் இவ்வாறு நெடுநேரம பறப்பதுண்டு. இதன் பார்வை மிகக் குறிப் பிடத்தக்க கூர்மை வாய்ந்தது என்றாலும் அதனைப்பற்றி மிகைப் படுத்தப்பட்ட கதைகள் பல வழங்குகின்றன. காடுகளில் மரங் களுக்கிடையே கிடக்கும் பிணங்களை இப் பிணந் தின்னிக் கழுகுகள் விரைவில் அறிந்துகொண்டு கூட்டமாக அவ்விடத்தில் வந்து இறங்குகின்றன. இதற்குக் காரணம் இலை தழைகளுக்கிடையேயும் வெகு உயரத்திலிருந்து பார்த்து அப்பிணத்தை இவை கண்டு கொள்கின்றன என்று நம்பப்படுகிறது. உண்மையில் அப் பிணத்தை நோக்கிச் செல்லும் நாய்களையும் காகங்களையும் மற்ற சிறு பறவைகளைப் பார்த்து அறிந்துகொண்டே இவை சந்தேகங் கொண்டு கீழே இறங்குகின்றன. உயர வட்டமிடும் கழுகுகள் கீழே கிடக்கும் பிணங்களைக் கவனிப்பதோடுகூட நெடுந் தொலைவில் பறந்துகொண்டிருக்கும் மற்றக் கழுகுகள் எங்கேனும் இறங்குகின் றனவா என்பதையும் கவனித்தபடி இருக்கின்றன. ஒரு கழுகு இறங்குவதைப் பார்த்து அந்த இடத்தை நோக்கி அடுத்தது, அதைப் பார்த்து அதையடுத்துப் பறக்கும் மற்றொன்று என இப் படியே சங்கிலித் தொடர்போல பல நூறு கிலோ மீட்டர்களுக்கு இடைவெளி விட்டுப் பறக்கும் கழுகுகள் அனைத்தும் சில நிமிட நேரத்தில் ஓரிடத்தில் கூடிவிடுகின்றன. விரைந்து இப்படி ஓரிடத் தில் கூடும் இவை மிக விரைவாகப் பெரிய பிணங்களையும் தின்று தீர்க்கின்றன. சுமார் 125 கிலோ எடையுள்ள இரண்டு பன்றிகளை 60-70 கழுகுகள் நாற்பது நிமிடத்தில் தின்று தீர்த்துவிட்டதை சலீம் அலி அவர்கள் கண்டு குறித்துள்ளார். டி. ஆர். பெல் அவர்கள் இந்தக் கழுகுகள் வேறு இனக் கழுகுகளோடு சேர்ந்து

ஒரு பெரிய காளைமாட்டின் பிணத்தை 20 நிமிடங்களில் தின்று தீர்த்துவிட்டதாகக் கண்டு குறித்துள்ளார்.

நன்ருகத் தின்றபின் பறக்க முடியாமல் இவை தரையிலேயே இரவு முழுவதும் தங்கிவிடுவதும் உண்டு. சில சமயங்களில் இரவு வந்தபின் கூட இவை தொடர்ந்து பிணங்களைவிட்டுப் போகாமல் தின்றுகொண்டிருக்கக் காணலாம். நன்ருகத் தின்ற பறவைகள் பலநாட்கள் வரை தொடர்ந்து உணவின்றி இருக்கின்றன.

பிணத்தைத் தின்று வாழ்ந்தாலும் இவை தண்ணீரில் குளித்து கழுத்து, அலகு, தலை ஆகியவற்றில் ஒட்டிய மாமிசங்களைச சுத்தம் செய்துகொள்கின்றன. நீரில் இறங்கித் தலையைத் தண்ணீரில் முக்கியும், இறக்கைகளால் நீரை வாரி உடம்பின்மேல் இரைத்துக் கொண்டபடியும் குளிக்கக் காணலாம். பின்னர் நீர்க் காகங்களைப் போல இறக்கையை விரித்துக்கொண்டு வெயிலில் உட்கார்ந்து உடம்பை உலர்த்திக் கொள்கின்றன.

இரவில் இவை கூட்டமாகச் சென்று பெரிய மரங்களில் தங்குகின்றன. இவற்றின் எச்சத்தால் அந்த மரங்கள் நாளடைவில் பட்டுப்போகின்றன. இரவில் சென்று தங்கிய மரங்களில் இவை பொழுதுபுலர்ந்து நன்ருக வெளிச்சம் வந்தபிறகும் கூடத் தலையை இறக்கைகளுக்குள் மடக்கி வைத்தபடி தூங்கிக்கொண்டிருப்பதைக் காணலாம். வெயில் மிகுந்து காற்று வெப்பமடைந்த பிறகே இவைகளால் காற்றில் மிதந்து பறக்க முடியும். ஆதலால் விடிந்த பிறகும் உறங்குகின்ற பழக்கத்தை மேற்கொண்டுள்ளனபோலும்.

செத்து வீழ்ந்த பலவகை விலங்குகளின் பிணங்களே இவற்றின் உணவு.

இனப்பெருக்கம்: காலம்: அக்டோபர் முதல் மார்ச் முடிய. கூடு: கூடுகட்டப் பெருங் குச்சிகள், மிலார்கள், இலைக் கொத்துகள் ஆகியவற்றை மரங்களிலிருந்து ஒடித்துச் செல்வதைக் காணலாம். ஆலமரம், மாமரம், பனைமரம் ஆகியவற்றில் தரையிலிருந்து 10-18 மீட்டர் உயரத்தில் கூடுகட்டும். ஒரே மரத்தில் அருகருகே கூட்டமாகக் கூடுகட்டுவதும் உண்டு. குஞ்சுகள் வளர வளரச் சிதையும் கூட்டை அடிக்கடி சீர்திருத்தும் முட்டை: ஒன்று மட்டும்; வெண்மை நிறத்தில் கறையேதுமின்றி இருக்கும்; சில போது முட்டை செம்பழுப்புக் கலந்த சாம்பல் நிறமாகத் தோற்றம் தருவது உண்டு.

கூடுகட்டும் இடத்திற்கு அருகேயோ கூட்டின்மீதேயோ இரவு நேரத்தில் ஆணும் பெண்ணும் கூடுகின்றன.

61. மஞ்சத் திருடிப் பிணந்தின்னிக் கழுகு

187. INDIAN SCAVENGER VULTURE

Neophron percnopterus ginginianus (*Latham*)

தோற்றம்: பரப்பருந்து அளவுள்ள இது சுமார் 61 செ. மீ. நீளமிருக்கும்.

அலகு இறைச்சியின் (Fleshy) நிறமாக இருக்கும்; விழிப் படலம் ஆழ்ந்த பழுப்பு நிறம்; கால்கள் அழுக்கு மஞ்சள் நிறம்.

தலையும் தொண்டையும் தூவிகளின்றி வெளிர் மஞ்சளாக இருக்கும். உடல் முழுதும் அழுக்கு வெள்ளையாக இருக்கும். முதல் இறக்கைகள் மட்டும் கருப்பு நிறம்.

காணப்படும் இடங்கள்; தென்னிந்தியா முழுதும் காணலாம்.

பழக்க வழக்கங்கள்: மக்கள் வாழும் நகரங்களையும் கிராமங் களையும் சார்ந்து வாழும் உருவில் சிறிய வெண்மைநிறங் கொண்ட பிணந்தின்னிக் கழுகு இது. பெரிய கட்டிடங்களின் மேலும் ஊர்ப் புறங்களில் தரையிலும் அமர்ந்திருக்கக் காணலாம். சில சமயங் களில் மற்றக் கழுகுகளோடு சேர்ந்து இதுவும் பிணந் தின்னக் காணலாம்.

பிணங்களோடுகூடத் தவளை தத்துக்கிளி, மலம் முதலிய வற்றையும் இது தின்னும்.

இனப்பெருக்கம்: காலம்: பிப்ரவரி முதல் மே முடிய. கூடு: குச்சிகளால் ஒழுங்கற்ற கூட்டினைக் கோட்டை மதில் விளிம்புகள், சர்ச், கோயில் ஆகியவற்றின்மீது கட்டி தோல், இலை தழை, வறட்டி ஆகிய குப்பைகளால் மெத்தென ஆக்கும். வேறு கழுகுகளின் கூட்டையும் பயன்படுத்தும். தொடர்ந்து பல ஆண்டு கள் ஒரே இடத்தில் கூடுகட்டக் காணலாம். முட்டை: 2 மட்டும்; அழகான பல நிறங்களில் செங்கல் சிவப்பு, பழுப்பு, கருப்பு நிறக் கறைகளோடு இருக்கும். ஆணும் பெண்ணும் குஞ்சுகளைப் பரா மரிக்கும். அடைகாக்கும் காலம் 42 நாட்கள். முட்டையை எடுக்க முயலும்போது தாய்ப்பறவை அருகில் இருந்தாலும் ஆத்திரம் அடைவதோ, முட்டை எடுப்பவர்களைத் தாக்குவதோ இல்லை.

பூனைப் பருந்துகள்
(HARRIERS)

மற்றக் கழுகுகளையும் பருந்துகளையும் காட்டிலும் இவை மெலிந்த உடல் கொண்டவை. இவற்றின் அலகும் மற்றக் கழுகு களின் அலகுபோல வலிமை வாய்ந்தது என்று சொல்ல முடியாது. இவற்றின் இறகுகள் நீண்டு குவிந்து (Long and pointed) காணப் படும் வால் நீண்டு வட்டவடிவமாக இருக்கும். கால்கள் நீண்டு மெலிந்து தொடைப் பகுதியில் மட்டும் தூவிகளால் போர்த்தப் பட்டு இருக்கும். விரல்கள் மிக நீண்டன அல்லனவேனும் நகங்கள் நன்கு வளைந்து கூர்மையாக இருக்கும்.

தென்னிந்தியாவில் பூனைப் பருந்துகள் மிகக் குறைந்த அளவி லேயே காணப்படுகின்றன. குளிர்காலத்தில் வடக்கே இருந்து வடநாட்டில் வலசை வந்து நுழையும் இவை தெற்கே மிகுதியாக வருவதில்லை. இவை தென்னாட்டில் இனப் பெருக்கம் செய்வ தில்லை.

62. பூனைப் பருந்து

190. PALE HARRIER

Circus macrourus (S. G. Gmelin)

தோற்றம்: அளவில் இது பருந்தைவிடச் சிறியது. சுமார் 50 செ. மீ. நீளமிருக்கும்.



பூனைப்பருந்து

அலகு கருப்பு நிறம். விழிப் படலம் மஞ்சள்; கால்களும் மஞ்சள் நிறம்.

ஆண்: உடலின் மேற் பகுதி சாம்பல் நிறம் கலந்த வெளிர் கருப்பாகவும், கீழ்ப் பகுதி வெண்மையாகவும் இருக்கும். இறக்கை விளிம்பு கள் நல்ல கருப்பாக இருக் கும். நீண்ட வாலில் வெள்ளையும் சாம்பலுமான பட்டைகள் மாறி மாறி அமைந்திருக்கக் காணலாம்.

பெண்: உடலின் மேற்பகுதி மஞ்சள் கலந்த பழுப்பாக இருக்கக் காணலாம். அலகு முகடும் (Lores) கண் விளிம்பும் வெண்மையாக இருக்கும். கழுத்தைச் சுற்றிலும் வெள்ளை, பழுப்பு

முதலான நிறங்களில் தூவிகள் காணலாம். உடலின் கீழ்ப்பகுதி வெண்மையாக அகன்ற மங்கிய பழுப்புப் பட்டைகள் கலந்து காணப்படும்.

காணப்படும் இடங்கள்: குளிர்காலத்தில் வலசை வரும். இதனை அக்டோபர் முதல் ஏப்ரல் முடிய தென்னிந்தியா முழுதும் சமவெளிகளிலும் மலைகளில் 2600 மீட்டர் உயரம் வரையும் காண லாம். தொட்டபெட்டா, ஆனைமுடி, பழனி ஆகிய மலைச் சிகரங் களில் காணப்பட்ட குறிப்புள்ளது.

பழக்க வழக்கங்கள்: தனித்துக் காணப்படும் இது தரையி லிருந்து சுமார் ஒரு மீட்டர் உயரத்தில் சுற்றிப் பறந்தபடி இருக் கும். மேடுபள்ளங்களுக்கு ஏற்ப தாழ்ந்தும் உயர்ந்தும் பறக்கும். விளை நிலங்கள் மேலேயும் வட்டமிடக் காணலாம். ஏதாவது இரை கண்டவுடன் அதனைக் காலால் பற்றி வயல் பரப்பிலோ ஏரிக்கரை யிலோ அமர்ந்து தின்னும். மற்றப் பறவைகளோடு சேர்ந்து உழுத நிலங்களிலோ புல்வெளிகளிலோ தரையிலேயே அமர்ந்து இரவு முழுவதையும் கழிக்கும். சுமார் ஒரு மீட்டர் இடைவெளி விட்டு ஒன்றுக்கொன்று நெருக்கமில்லாமல் இவை அமர்ந்திருப்பதை இரவில் பார்த்தால் புல் தூறுகள் முளைத்திருப்பதைப்போலவே காட்சி தரும்.

தவளை, ஓணான், எலி ஆகியவற்றோடு நோய்வாய்ப்பட்ட சிறு பறவைகளையும் பிடித்துத் தின்னும். ஒரு கண் குருடான மைனாவை இது பிடித்துச் சென்றதைக் கண்டு குறித்துள்ளனர்.

தரைகளில் அமரும் இவை மரங்களில் விரும்பி இவை அமர்வ தில்லை. இதன் இந்தப் பழக்கத்தைக்கொண்டு இதனை அடை யாளம் காணலாம்.

இனப்பெருக்கம்: ஐரோப்பாவில் இனப் பெருக்கம் செய் யும் இவை தரையில் புல் தூறுகளில் முட்டையிடும்.

63. வெள்ளைப் பூனைப் பருந்து

192. PIED HARRIER

Circus melano leucos (Pennant)

தோற்றம்: பருந்தைவிட அளவில் சிறியது. சுமார் 48 செ.மீ. நீளம் இருக்கும்.

அலகு கருப்பாகவும் விழிப்படலமும் கால்களும் மஞ்சளாகவும் இருக்கும். நகங்கள் கருப்பு நிறம்.

ஆண் : மெலிந்த தோற்றமுடைய கருப்பும் வெள்ளையுமான பூனைப் பருந்து இது. தலை, முதுகு, தொண்டை, மார்பு ஆகியன கருப்பு நிறம். முதுகும் உடலின் மற்ற அடிப்பகுதியும் வெண்மையாக இருக்கும். வால் சாம்பல் வண்ணம். இறக்கைகள் வெளிர் சாம்பல் நிறமாகக் கருப்பு விளிம்போடு ஒரு கரும் பட்டையுடன் காணப்படும்.

பெண் : உடலின் மேற்பகுதி கருப்பாகவும் கீழ்ப்பகுதி மஞ்சள் கலந்த சிவப்பாகவும் இருக்கும். பின் கழுத்தில் சிறிது வெள்ளை நிறம் காணப்படும். பின் முதுகு வெண்மையாக இருக்கும். இதற்கும் முந்தைய பூனைப் பருந்தின் பெண் பறவைக்கும் இயற்கைச் சூழலில் வேறுபடுத்தி அறிவது கடினம்.

காணப்படும் இடங்கள் : மலைப்பாங்கான பகுதிகளின் அருகிலும் சமவெளிகளில் ஓரளவும் தென்னிந்தியா முழுவதும் குளிர் காலத்தில் மட்டும் காணலாம். செங்கல்பட்டு, கடலூர் ஆகிய பகுதிகளில் கண்டதற்குக் குறிப்புண்டு.

பழக்க வழக்கங்கள் : புல்வெளிகளில் இரையைத் தேடித் திரியும் இதன் பழக்க வழக்கங்கள் முன்னதைப் போன்றனவே.

இனப்பெருக்கம் : தென்னிந்தியாவிற்கு வெளியே.

64. சதுப்புநிலப் பூனைப் பருந்து
193. MARSH HARRIER
Circus aeruginosus aeruginosus (*Linnaeus*)

தோற்றம் : இதுவும் பருந்தைவிட அளவில் சிறியதே.

அலகு கருப்பாகவும் விழிப்படலம் கால்கள் ஆகியன மஞ்சளாகவும் இருக்கும்.

ஆண் : உடலின் மேற்பகுதிகள் பழுப்பாகவும் தலை வெளிர் செம்பழுப்பாகவும் கழுத்தும் மார்பும் இளஞ் செம்பழுப்பாகவும் இருக்கும். முன்னைய பூனைப் பருந்துகளைவிட இதன் இறக்கைகள் அகன்று சற்று நீளம் குறைந்து கருப்பு முனைகளோடு காணப்படும். வால் வெளிர் சாம்பல் நிறமாக இருக்கும்.

பெண் : பரப் பருந்தைப்போலச் சாக்லெட் பழுப்பு நிறத்தில் ஆனால் பரப் பருந்தைவிட மெலிந்து காட்சி தரும். தலை கிரீம் நிறம்.

வளராத ஆண் பறவை பெண் பறவையைப்போலவே தோற்றம் தரக் காணலாம்.

காணப்படும் இடங்கள்: குளிர் காலத்தில் மட்டும் தென்னிந்தியா முழுதும் நீர்வளமிக்க பகுதிகளில் காணலாம்.

பழக்க வழக்கங்கள்: முன்னைய இரண்டு பூனைப் பருந்துகளும் புல்வெளிகளை அதிகம் விரும்பித் திரிவன. இது வயல்களையும் நீர்நிலைகளைச் சார்ந்த சதுப்பு நிலங்களையும் சார்ந்து திரிவது. வயல்களின்மீது சில மீட்டர் உயரத்தில் இறக்கை அடிக்காது மிதந்தபடி பறப்பதைக் காணலாம். திடீரென நெற் பயிர்களுக்கு இடையேயோ நாணற் புதர்களிலோ பாய்ந்து தவளை மீன் ஆகியவற்றைப் பற்றி மேலெழும். வாய்க்கால் கரைகளிலும் குளக்கரைகளிலும் நெடுநேரம் ஒரே இடத்தில் அமர்ந்திருக்கக் காணலாம். சிலபோது வானில் உயரத் தனித்து வட்டமிட்டு மிதந்து, பொழுது போக்காகப் பறப்பதும் உண்டு. வேட்டைக்காரர்கள் சுட்டு வீழ்த்தும் வாத்து முதலியனவற்றை —இதன் எடைக்குச் சமமான கனமான பறவைகளைக்கூட —லாகவமாகக் கவர்ந்து செல்லும். தவளை, மீன், எலி, சிறு பறவைகள் ஆகியன முக்கிய உணவு. தத்துக்கிளி போன்ற சிறு பூச்சிகளையும் பிடிப்பதுண்டு.

இனப்பெருக்கம்: கர்நூல் மாவட்டத்தில் கிருஷ்ணநதிக் கரையில் இதன் கூட்டிலிருந்து முட்டை எடுக்கப்பட்டதாக ஒரே குறிப்பு மட்டும் உண்டு எனினும் இது தென்னிந்திய எல்லையில் இனப்பெருக்கம் செய்வதாக ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை.

65. குட்டைக்கால் கழுகு
195. SHORT-TOED EAGLE
Circaetus gallicus gallicus (Gmelin)

தோற்றம்: அளவில் பருந்தை ஒத்த இது சுமார் 65 செ. மீ. நீளமிருக்கும்.

அலகு வெளிர் ஈய நிறமாகக் கருப்பு முனையோடு காணப்படும். விழிப்படலம் ஆழ்ந்த மஞ்சள் நிறமாகவும் கால்கள் அழுக்கு மஞ்சள் நிறமாகவும் இருக்கும்.

சற்றுப் பருத்த தோற்றங்கொண்ட இந்தக் கழுகின் தலை சாம்பல் நிறமாகச் சற்று ஆந்தையின் தலையை ஒத்துக் காட்சி தரும். உடலின் மேற்பகுதி மண் பழுப்பு நிறமாக இருக்கும். தொண்டையும் மேல் மார்பும் கருஞ் சாம்பல் நிறமாக இருக்கும்.

வயிறும் வாலடியும் வெள்ளைத் திட்டுப் பகுதிகளும் பழுப்புக் கோடுகளும் கலந்து காணப்படும். உயரப் பறக்கும்போது வாலில் உள்ள பட்டைகளும் கருத்த தலையோடு மாறுபட்ட வெண்நிற வயிறும் இதனை அடையாளம் காட்டும். வேறு சில கழுகுகளைப்போல இறக்கைகளை V வடிவில் தூக்கிப் பறக்காது. உடல் மட்டத்திலேயே வைத்துப் பறக்கும்.

காணப்படும் இடங்கள்: தென்னிந்தியாவில் அபூர்வமாகவே காணப்படும் பறவை இது. கொடைக்கானல், செங்கல்பட்டு ஆகிய இடங்களில் காணப்பட்ட குறிப்பு உள்ளது.

பழக்க வழக்கங்கள்: தனித்துக் காற்றில் மிதந்தபடி உயர வட்டமிட்டபடி இருக்கும். சிறு காடுகளிலும் வயல்களிலும் தரையிலிருந்து சுமார் 15 மீட்டர் உயரத்தில் கீழே நோட்டம் விட்டபடி இரைதேடிப் பறக்கும். காற்று வேகமாக வீசும்போது அப்படியே மிதந்தபடி ஆடாமல் அசையாமல் அந்தரத்தில் மிதக்கும் ஆற்றல் இதற்கு உண்டு. அப்படிப் பறப்பதை நிறுத்திக் கீழே தரையில் உள்ள கூரையை ஆராய்ந்து கண்டு பின் இறக்கையை மடக்கிக் கொண்டு தலைகீழாக வேகமாகக் கூரைமீது பாயும். கிட்டத்தட்ட 400 மீட்டர் உயரத்திலிருந்து இப்படி இரைமேல் பாய்வது கண்டு குறிக்கப்பட்டுள்ளது. கழுகுகளின் கூர்மையான பார்வைக்கும் கீழே வீழ்ந்து பாயும்போது தரையில் மோதிக்கொள்ளாமல் உரிய சமயத்தில் வேகத்தைக் கட்டுப்படுத்தும் ஆற்றலுக்கும் இந் நிகழ்ச்சி சிறந்த உதாரணமாகும். இத்தகைய ஆற்றல் வாய்ந்த பறவையாக இருந்தாலும் சிலசமயம் தரையில் நடந்து வெட்டுக்கிளி, கரையான் போன்ற சிறு பூச்சிகளையும் பிடித்துத் தின்னும் பழக்கமும் இதனிடம் உள்ளது. தரையில் பாய்ந்து இரையைப் பற்றி எடுத்து மேலே பறக்கும் பறவை காலில் இடுக்கியுள்ள இரை நழுவிக் கீழே விழுமானல் அது தரையைத் தொடுமுன்பே வேகமாகப் பாய்ந்து மீணடும் அதனைப் பற்றும் ஆற்றல் வாய்ந்தது.

பாம்புகள்—விஷப்பாம்புகள் உட்பட—இதன் முக்கிய உணவு. 150 செ. மீ. நீளமுள்ள பாம்பைக்கூட இது பிடித்த குறிப்பு உள்ளது. ஓணன், தவளை, எலி, சிறு பறவைகள் ஆகியவற்றையும் உணவாகக் கொள்ளும்.

இனப்பெருக்கம்: காலம்: டிசம்பர் முதல் மார்ச் முடிய. கூடு: வேப்பமரம், கருவேலமரம் போன்ற மரங்களில் உச்சியில் குச்சிகளால் கூடமைத்து புல்லால் மெத்தெனச் செய்யும். முட்டை: ஒன்று மட்டும்; தூயவெண்மை நிறம் கொண்டது. ஆணும் பெண்ணும் சேர்ந்து கூடுகட்டக் காணலாம். பெண்ணே பெரும்பகுதி நேரம் அடைகாக்கும்.

66. தென்னிந்தியப் பாம்பு தின்னும் கொண்டைக் கழுகு

197. Peninsular Crested Serpent Eagle

Spilovnis cheela melonotis (Jerdon)

தோற்றம் : பருந்தைவிட அளவில் பெரிய கழுகு இது. சுமார் 74 செ. மீ. நீளமிருக்கும்.

அலகு கொம்பு நிறமாகவும் விழிப்படலம் நல்ல மஞ்சள் நிறமாக வும் கால்கள் மங்கிய மஞ்சள் நிறமாகவும் இருக்கும்.

தலையில் வட்டமான கருப்பும் வெள்ளையுங்கலந்த கொண்டை இருக்கும். உடலின் மேற் பகுதி கரும்பழுப்பு நிறமாக இருக்கும். உடலின் அடிப்பாகம் வெளிர் பழுப்பாக வெள்ளையும் கருப்புமான கோடுகளோடு காட்சிதரும். வாலில் இருக்கும் அகன்ற கருப்புப் பட்டையைக் கொண்டு இதனை அடையாளம் கண்டு கொள்ள லாம்.

காணப்படும் இடங்கள் : தென்னிந்தியா முழுதும் ஆங்காங்கே சிறு அளவில் காணப்படும் இது கேரளாவிலும் மைசூரிலும் மழை மிகுந்த காடுகளில் மிகுதியாகக் காணப்படுகிறது.

பழக்க வழக்கங்கள் : குட்டைக்கால் கழுகு நீர் வளமற்ற சிறு காடுகளுக்கு உரியதென்றால் இது நீர்வள மிகுந்த அடர்ந்த காடு களில் அதனைப்போலவே வேட்டையாடுவது. தனித்தும் இணை யாகவும் காணலாம். காடுகளிலும் காட்டாறுகளை அடுத்த பெரிய மரங்களிலும் இலைகளிடையே மறைந்து அமர்ந்து இரைகள் வெளிப்பட்டு வருவதை நோட்டம் விட்டபடி இருக்கும். சில சமயங் களில் மிக உயரத்தில் க்கேய், க்கேய், க்கேய் என உரத்த குரலில் கத்தியபடி காடுகளின்மேல் வட்டமிட்டு இரை தேடும். பாம்பு தவளை, ஓணான், எலி முதலியன இதன் உணவு. வீஇ, வீஇ,— ப்யூ, ப்யூ ப்யூ,—க்கீ, க்கீ, க்கீ எனப் பலவகையாகக் குரலெழுப்பி அடிக்கடி ஆரவாரமாகக் கத்தியபடியே இருக்கும்.

இனப்பெருக்கம் : காலம் : டிசம்பர் முதல் மார்ச் முடிய. கூடு ; காட்டாறுகள் அருகே மரங்களில் உயரக் குச்சிகளால் கூடமைத்து பச்சை இலைகளால் மெத்தெனச் செய்யும். முட்டை: ஒன்று மட்டும்: மஞ்சளும் கிரீமும் கலந்த நிறத்தில் செம்பழுப்புக் கறைகளுடன் இருக்கும்.

67. விரால் அடிப்பான்

203. Osprey

Pandian haliaetus haliaetus (Linnaeus)

தோற்றம் : பருந்தைவிட இது அளவில் சிறியது. சுமார் 56 செ. மீ. நீளம் இருக்கும்.



விரால் அடிப்பான் விரல்கள்

அலகு கருப்பாகவும், விழிப்படலம் நல்ல மஞ்சளாகவும் கால்கள் மங்கிய பச்சை நிறமாகவும் இருக்கும்.

இதன் கால் விரல்களில் அடிப் பகுதியிலுள்ள முள் நிறைந்த தோல் வழுக்கும் இயல்புடைய மீனை இது நீரில் பாய்ந்து பற்றி எடுத்துப் பறக்கும்போது வழுக்கி மீன் தப்பிச் செல்லாமல் இறுகப் பற்றிக் கொள்ள உதவுகிறது.

இதன் உடம்பின் மேற்பகுதி கரும் பழுப்பாக இருக்கும். சிறு கொண்டையோடு தலையில் சில வெள்ளை நிறத்தூவிகள் இருக்கக் காணலாம். உடலின் அடிப்பாகம் வெண்மையாக இருக்கும். மார்பின் மேற்பகுதியில் சில பழுப்பு நிறத்தூவிகளாலான வளையம் தெளிவாகத் தெரியும்.

பெண் தோற்றத்தில் ஆணை ஒத்தது என்றாலும் உருவில் சற்றுப் பெரியது.

தலைக்குமேல் பறக்கும்போது வெள்ளை நிறத் தொண்டையும் வயிறும் பழுப்புநிற மார்பு வளையத்தால் பிரிக்கப்பட்டிருப்பது தெளிவாகத் தெரியும். இறக்கைகளில் கரும்பட்டையைக் காணலாம். வால்பட்டையோடு சதுரமாக இருக்கும். (Tail square).

காணப்படும் இடங்கள் : சிறப்பாகக் குளிர் காலத்திலேயே இதனைக் காணலாம். மற்றப் பருவங்களிலும் வலசை வரும் ஒன்றிரண்டு தங்கி விடுவது உண்டு. தென்னிந்தியா முழுவதும் ஆறுகள், உப்பளங்கள் பெரிய ஏரிகள், அணைக்கட்டுகள் ஆகியவற்றின் மீது பறக்கக் காணலாம்.

பழக்க வழக்கங்கள்: மீன் பிடிக்கும் படகுகளின் கூம்பின் மீதும் கடற்கரை அருகேயும், பெரிய நீர் நிலைகளின் அருகே வறண்டு காய்ந்துபோய் நிற்கும் மரங்களின் மீதும் தனித்து அமர்ந் திருக்கக் காணலாம். இரை தேடும்போது அங்கிருந்து எழுந்து



விரால் அடிப்பான்

நீருக்கு மேல் 20-30 மீட்டர் உயரத்தில் மெல்ல இறக்கை அடித்தும மிதந்தும் பறக்கும். இடையிடையே திடீரென வெள்ளை மீன் கொத்தி போலக் கால்களை மட்டும் அசைத்தபடி அந்தரத்தில் மிதந்து நீர்ப் பரப்பை ஆராயும். கீழே நீரில் மீன் தென்படுமானால் இறக்கைகளை மடக்கிக் கொண்டு தண்ணீருக்குள் தலை கீழாக நாலாபுறமும் நீரைச் சிதறியடித்தபடி பாய்ந்து கால்விரல்க ளிடையே மீனை இடுக்கியபடி எழுந்து உடலைக் குலுக்கி நீரைச் சிதறியபடி பறந்து சென்று ஒரு மரத்தில் அமர்ந்து பிடித்த மீனைத் தின்னும். சில சமயம் சக்திக்கு மீறிய பெரிய மீனைப் பிடித்துத் தூக்க முடியாமல் திண்டாடியபடி நீர்ப் பரப்போடு இழுத்துச் செல் லும். பெரிய மீனின் உடலில் சொருகிய கால் விரல்களை விடுவித் துக் கொள்ள முடியாமலும் அந்த மீனைத் தூக்க முடியாமலும் நீரில் மூழ்கிச் செத்த பறவைகளும் உண்டு. மீன் மட்டுமே இதன் உணவு.

இனப்பெருக்கம்: காலம்: தென்னிந்தியாவிற்கு வெளியே— இமயமலைச் சாரலிலும் அதற்கு வடக்கிலும்.

Family: Falconidae

லகுடுகள்
(FALCONS)

68. வெள்ளை லகுடு
208. Laggar Falcon
Falco biarmicus jugger (J. E. Grey)

தோற்றம்: கரும் பருந்தைவிடச் சற்றுப் பெரியது இது; சுமார் 45 செ. மீ. நீளம் இருக்கும்.


வெள்ளை லகுடு

மேல் அலகு நீல நிறம்; கீழ் அலகு மஞ்சள்; விழிப் படலம் பழுப்பு; கால்கள் மஞ்சள்.

உடலின் மேற் பாகம் கறுப்பும், சாம்பல் பழுப்பும் கலந்து காணப் படும். உச்சந்தலையும் பின் கழுத்தும் வெள்ளை நிறம். கண்ணை ஒட்டி ஒரு மெலிந்த கோடு முன்னிருந்து கீழ்நோக்கிச் செல்லக் காணலாம். உடலின் அடிப் பாகம் வெண்மையாக நீள வாக்கிலான பழுப்புக் கோடுகளோடு இருக்கும். வயிற்றின் பக்கங்களிலும் தொடைகளிலும் அதிகமாகக் கோடுகளைக் காணலாம். மார்பில் கோடுகள் முறிந்து காணப்படும். தலைக்குமேல் பறக்கும்போது வெள்ளை மார்பும், இறக்கை நுனிகளில் காணப்படும் கருப்பு வெள்ளைப் புள்ளிகளும் அடையாளங் கண்டு கொள்ள உதவும்.

காணப்படும் இடங்கள்: தென்னிந்தியா முழுதும் அருமையாக வறள் நிலங்களிலும் புதர்க் காடுகளிலும் காணலாம். அடர்ந்த காடுகளில் காணப்படுவதில்லை.

பழக்க வழக்கங்கள்: இணையாகவே எங்கும் காணலாம் கம்பங்களின் மீதோ மரங்களில் உயரவோ விளை நிலங்களை அடுத்து வீற்றிருக்கும். நகரங்களில் மாடப் புறாக்கள் வாழும் இடங்களின் அருகே தங்கள் இருப்பிடத்தை அமைத்துக் கொண்டு அவைகளை வேட்டையாடி வாழும். இணையான பறவைகள் மாறி மாறிப் பலியாகும் பறவையைத் தேர்ந்தெடுத்துத் துரத்திக் களைப்படையச் செய்து, பின் அடித்துக் கொன்று இரண்டும் பகிர்ந்து உண்ணும்.

காடை கௌதாரியை வேட்டைக்காரர்கள் துரத்தும்போது அதில் ஒன்றைப் பாய்ந்து தூக்கிச் செல்லும். சுட்டு வீழ்த்திய பறவைகளைத் தூக்கிச் செல்வதும் உண்டு. பிற பறவைகளைப் பிடிக்க வேட்டைக்காரர்கள் இதனைப் பழக்குவர். தான் தாக்கும் பறவையின் முகத்தில் பாய்ந்து அதன் பார்வையை மறைத்துப்பின் அதனை எளிதில் கைப்பற்றும்.

வெட்டுக்கிளி, காடை, கௌதாரி, தவுட்டுக் குருவி, கரிச்சான் போன்றவை இதன் உணவு.

இனப்பெருக்கம்: காலம்: ஜனவரி முதல் ஏப்ரல் வரை. கூடு: ஆல், அரசு, மா முதலிய மரங்களில் 10 முதல் 15 மீட்டர் உயரத்தில் குச்சிகள், இலை, வைக்கோல் ஆகியவற்றைப் பயன்படுத்திக் கூடு கட்டும். காக்கை பருந்து முதலியவற்றின் பழைய கூடுகளைப் பயன் படுத்தும். புரு முதலியவை இது கூடு கட்டும் அதே மரத்தில் கூடு கட்டும். அப்போது இது அவற்றிற்கு எந்தத் தீங்கும் செய்வதில்லை. முட்டை: 3 அல்லது 4; இளஞ்சிவப்பு நிறத்தில் செங்கல் சிவப்பு, கரும் பழுப்பு ஆகிய கறைகளுடன் காணப்படும். ஆணும் பெண்ணும் அடைகாக்கும்.

இனப்பெருக்கக் காலத்தில் காதலூடாட்டத்தின் போது ஆணும் பெண்ணும் உயர எழுந்து பறந்து வீழ்ந்து விளையாடும்.

69. பொரி லகுடு

209. Eastern Peregrine Falcon

Falco peregrinus paponensis (Gmelin)

தோற்றம்: அண்டங் காக்கை அளவுள்ள இது சுமார் 40 செ. மீ. நீளம் இருக்கும்.

அலகு நீலநிறமாக முனை கருத்துக் காணப்படும். விழிப்படலம் பழுப்பு; கால்களும் விரல்களும் மஞ்சள் நிறம்.

கூரிய இறகு முனைகளையும் அகன்ற தோள்களையும் கொண்ட லகுடு இது. தலை சிலேட் கருப்பாக இருக்கும். கருத்த மோவாய்க் கோடு காணப்படும். உடலின் மேற்பாகம் சாம்பல் நிறமாகக் கருப்புப் பட்டைகளோடு காணப்படும். கீழ்ப்பாகம் இளஞ் சிவப்பான பழுப்பும் வெளிர் மஞ்சள் கலந்த வெள்ளையுமாகக் காணப்படும். விட்டு விட்டுக் காணப்படும் கருப்புப் பட்டைகள் கீழ் மார்பு வயிறு ஆகியவற்றின் வெள்ளை நிறத்தைப் பொரி

பொரிந்தது போன்ற தோற்றம் பெறச் செய்வதாலேயே இதனைப் பொரி லகுடு என அழைக்கின்றனர். உயரப் பறக்கும்போது மோவாய், தொண்டை ஆகியவற்றின் மீது நெடுக்காகக் காணப்



பொரி லகுடு

படும் கருப்புக் கோட்டை வைத்து அடையாளம் காணலாம். வால் கருஞ் சாம்பல் நிறமாக ஆழ்ந்த கருஞ் சாம்பல் நிறப் பட்டைகளுடனும் வெள்ளை முனையுடனும் காணப்படும்.

காணப்படும் இடங்கள்: செப்டம்பர் முதல் மார்ச் வரையான குளிர் காலத்தில் தென்னிந்தியாவில் ஆறுகள், ஏரிகள் உப்பங்கழிகள் ஆகியன நிறைந்த நீர்வள மிக்க பகுதிகளில் ஆங்காங்கே காணலாம். மத்திய ஆசியா, ஐரோப்பா முதலிய பகுதிகளிலிருந்து வலசை வருவது இது.

பழக்க வழக்கங்கள்: முன்னைய லகுடைப் போல இணையாகத் திரியாமல் தனித்துத் திரிவது. காலையிலும் பிற்பகல் நேரத்திலும் சுறு சுறுப்பாக வேட்டையாடும். நடுப்பகல் வெயிலின்போது மரக்கிளைகளில் இலை மறைவிலோ மணலில் புதர்களின் நிழலிலோ அமர்ந்திருக்கும். நீரில் நீந்தியபடி இருக்கும் வாத்துக்களையோ காட்டில் மேயும் புறாக்களையோ துரத்திப் பிடிக்கும். நீரில் வாழும் பறவைகளையே இது விரும்பி வேட்டையாடக் காணலாம். காலின்

பின் விரலாலேயே லகுடுகள் இரையைத் தூக்கிச் செல்கின்றன. நாரை, கொக்கு போன்ற பெரிய பறவைகளை அடித்து வீழ்த்தி வேட்டையாடவும் இதனைப் பழக்குகின்றனர்.

வாத்து, முக்குளிப்பான், நீர் கோழி, போன்ற நீர் வாழ் பறவைகளே இதன் முக்கிய உணவு.

இனப்பெருக்கம் : இந்தியாவிற்கு வெளியே.

70. சிவப்பு வயிற்று லகுடு

211. Shaheen Falcon

Falco peregrinus peregrinator (Sundevall)

தோற்றம் : அண்டங் காக்கை அளவுள்ள இது சுமார் 42 செ. மீ. நீளமிருக்கும்.

அலகு வெளுத்த ஈய நிறமாக முனை சற்றுக் கருத்துக் காணப் படும் ; விழிப்படலம் ஆழ்ந்த பழுப்பு ; கால்கள் குரோம் மஞ்சள் நிறம்.

தலையும் கன்னத்தின் வழியாகச் செல்லும் கோடும் கருப்பு நிறம். பிடரியில் சில தூவிகளில் கருஞ் சிவப்புப் பட்டையோடு இருக்கும். எஞ்சிய உடலின் மேற் பகுதிகள் சிலேட் கருப்பாக இருக்கும். மோவாய், தொண்டை, மார்பு ஆகியன வெண்மை நிறம். வயிறு, வாலடி இறக்கைக் கீழ் போர்வை இறக்கைகள் ஆகியன கருஞ் சிவப்பு நிறம் ; பக்கங்களில் நெருக்கமான பட்டை களைக் காணலாம்.

காணப்படும் இடங்கள் : தென்னிந்தியாவில் ஆங்காங்கே ஆண்டு முழுதும் காணலாம். கடற்கரைப் பகுதிகளில் அதிகம் திரிவதில்லை.

பழக்க வழக்கங்கள் : முன்னதைப் போன்ற பழக்க வழக்கங் கள் உடையதெனினும் கடற்கரை, நீர் நிலைகள் ஆகியவற்றைச் சார்ந்து திரியாமல் மலைப் பகுதிகளிலும் காடுகளிலும் திரிவது. ஒரு ஜோடிப்பறவைகள் குறிப்பிட்ட ஓர் இடத்தில் தொடர்ந்து வாழ்ந்து இனப்பெருக்கம் செய்வது. மேலே வெகு உயரத்தில் பறந்து கொண்டிருக்கும் இது எதிர் பாராது பாய்ந்து இரையாகும் பறவையைக் கதிகலங்கச் செய்து விடும். இது பாயும் சப்தம் கேட்டு நாம் திருப்பிப் பார்ப்பதற்குள் கால்களில் இரையை இடுக் கியபடி பறந்து சென்று கொண்டிருக்கக் காணலாம்.

காடை, கௌதாரி, புறா, கிளி, அந்திக் குருவி, வௌவால் முதலியன இதன் முக்கிய உணவு.

மற்றப் பறவைகளைப் பிடிக்க வேட்டைக்காரர் இதனைப் பழக்குகின்றனர்.

இனப்பெருக்கம்: காலம்: ஜனவரி முதல் ஏப்ரல் வரை; கூடு: பாறை இடுக்குகளிலும் கோயில் கோபுரங்களிலும் மனிதர் நெருங்க முடியாத இடங்களில், குச்சிகள், புல், கந்தல் முதலியவற்றால் கூடு கட்டி முட்டையிடும். சில சமயங்களில் கூடின்றி பாறை இடுக்குகளில் புல்லின் மீது முட்டையிடும். :முட்டை: 3 அல்லது 4; வெளிர் செங்கல் சிவப்பு நிறத்தில் ஆழ்ந்த செங்கல் சிவப்பு நிறக் கறைகளுடன் காட்சி தரும். பெண்ணே அடைகாக்கும். 25 முதல் 27 நாட்கள் அடைகாக்கும் காலம்.

71. செந்தலை லகுடு

219. Redheaded Merlin

Falco chicquera chicquera (Daudin)

தோற்றம்: புறாவை விடச் சற்றுப் பெரியதான இது சுமார் 35 செ. மீ. நீளமிருக்கும்.[1]

அலகு முனை கருத்து மஞ்சள் நிறமாக இருக்கும்; விழிப்படலம் ஆழ்ந்த பழுப்பு நிறம்; கால்களும் விரல்களும் ஆரஞ்சு மஞ்சள் நிறம். நகங்கள் கருப்பு.

தலை, பிடரி, கழுத்து, கழுத்தின் பக்கம் ஆகியன செம்பழுப்பாக இருக்கும். உடலின் மேற் பகுதி நீலம் தோய்ந்த சாம்பல் நிறம். இறக்கைகள் கருப்பு, வால் கருஞ்சாம்பல் நிறம் கொண்டு நுனிக்குச் சற்று மேலே அகன்ற பெரிய கரும்பட்டையோடு இருக்கும். உடலின் கீழ்ப் பகுதி வெண்மையாகச் சிறு கருங் கோடுகளோடு காட்சி தரும்.

காணப்படும் இடங்கள்: தென்னிந்தியா முழுதும் மேட்டுப் பாங்கான மாவட்டங்களைச் சார்ந்து காணலாம்.

பழக்க வழக்கங்கள்: ஆணும் பெண்ணும் சேர்ந்து ஒன்றாகவே பெரும்பாலும் வேட்டையாடும். ஒன்று ஒரே அம்புபோல் பாய்ந்து இரையைத் துரத்த மற்றொரு பறவை இரையை மேலிருந்து பாய்ந்து தாக்கி மடக்கிப் பிடிக்கும். மரங்களிடையே நுழைந்து இலைகள் மறைவில் அமர்ந்திருக்கும் சிறு பறவைகளைக் கூடத்

துரத்திப் பிடிக்கும். வேட்டைக்காரர்கள் சுட்டு வீழ்த்திய பறவையைத் தூக்கிச் செல்லும் பழக்கமும் இதற்கு உண்டு. நீரருகே இறங்கி நீர் குடிக்கும். வேட்டைக்காரர்கள் இதனை இணையாகப் பழக்கி வேட்டைப் பறவைகளாகப் பயன்படுத்துவர்.

சிட்டுக் குருவி, வாலாட்டி, வானம்பாடி, உள்ளான் ஆகிய பறவைகளோடு எலி, வௌவால் முதலியவற்றையும் வேட்டையாடித் தின்னும்.

கீச்சுக் குரலில் கத்தியபடி காகம், பருந்து முதலியவற்றைத் தன் கூட்டின் அருகிலிருந்து விரட்டும்.

இனப்பெருக்கம்: காலம்: ஜனவரி முதல் ஏப்ரல் வரை: கூடு: காகம், பருந்து ஆகியவற்றின் பழைய கூடுகளைப் பயன்படுத்தும். மா, வேம்பு முதலான மரங்களில் சிற்றூர்களை அடுத்து 5 முதல் 10 மீட்டர் உயரத்தில் குச்சிகள், புல் வேர் ஆகியவற்றால் தானேயும் கூடு அமைக்கும். முட்டை: 4; பழுப்புத் தோய்ந்த சிவப்பாக இருக்கும்; ஆழ்ந்த சிவப்புக் கறையும் கோடுகளும் பெற்று விளங்கும். ஆணும் பெண்ணும் அடைகாத்துக் குஞ்சுகளைப் பேணும்.

72. சிவப்பு லகுடு
224. Indian Kestrel
Falco tinnunculus objurgatus (Baker)

தோற்றம்: புறாவைவிடப் பெரியதான இது சுமார் 35 செ. மீ நீளமிருக்கும்.

அலகு சிலேட் நீல நிறம்; விழிப்படலம் பழுப்பு; கால்கள் ஆரஞ்சு மஞ்சள் நிறம்.

கூர்மையான இறக்கைகளும் (Printed wings) வட்டமான வாலும் கொண்ட பறவை இது. ஆணின் தலை, உச்சி, பின்கழுத்து, கழுத்தின் பக்கங்கள் ஆகியன கருஞ்சாம்பல் நிறமாகக் கருங்கோடுகளுடன் காணப்படும். முதுகு, செங்கல் சிவப்பாக நீள் வட்டமான கரும் புள்ளிகளோடு காணப்படும். கீழ் முதுகு, வால் மேல் இறகுகள், வால் ஆகியன கருஞ்சாம்பல் நிறம். வால் முனை வெண்மையாகவும் அதற்குமேல் அகன்ற குறுக்குக் கரும்பட்டையும் காணப்படும். கீழ்ப் பாகம் வெளிர் இளஞ் சிவப்பு நிறங் கொண்டதாக இருக்கும். மார்பில் கருங்கோடுகளும் வயிற்றில் கரும் புள்ளிகளும் காணப்படும்.

பெண்ணின் உச்சி, கழுத்து ஆகிய வெளிர் மஞ்சள் சிவப்பாக இருக்கும். முதுகில் சில வரைகள் காணலாம். பின் முதுகும் வாலும் கருஞ் சாம்பல் நிறம்—சற்று நீர்த்துக் காணப்படும். மார்பும், வயிறும் ஆணைவிட நிறங் குன்றிக் கருங்கோடுகளும் புள்ளிகளும் அழுத்தமாகக் காணப்படும்.

காணப்படும் இடங்கள்: தென்னிந்திய மலைகளில் இனப் பெருக்கம் செய்கிறது.

பழக்க வழக்கங்கள்: தனித்துத் தந்திக் கம்பங்களின் மீது உட்கார்ந்திருக்கக் காணலாம். தலையை மேலும் கீழும் ஆட்டிக் கொண்டே புல் வெளியினிடையே இரையை எதிர் பார்த்துக் காத்திருக்கும். ஏதேனும் இரை தென்பட்டால் பாய்ந்து பற்றி எடுத்துக் கொண்டு வந்து முன்பு உட்கார்ந்திருந்த அதே இடத்தில் அமர்ந்து கொள்ளும். 30 மீட்டர் உயரத்தில் பறந்தபடி கீழே புல் வெளிகளை நோட்டம் விடும். காற்றை எதிர்த்துப் பறந்தபடி இருக்கும் இது சில விநாடி நேரம் அப்படியே காற்றில் மிதந்து அசையாமல் இருந்து, பின் தாழ்ந்து வந்து இரைமீது தாவிப் பிடித்துச் செல்லும்.

தவளை, வண்டு, ஓணான், புழு, பூச்சி முதலியன இதன் முக்கிய உணவு. குறுங் காடை, வானம்பாடி ஆகிய பறவைகளையும் தின்னும்.

இனப்பெருக்கம் · காலம்: ஜனவரி முதல் மார்ச் வரை. கூடு: தென் இந்திய மலைகளில் 1200—2500 மீட்டர் வரை பாறை விளிம்புகளில் புழைகளில் வைக்கோலை வைத்து முட்டையிடும். முட்டை: 3 முதல் 6 வரை; இளஞ் சிவப்பு வண்ணத்தில் பல வண்ணக் கறைகளுடன் காணப்படும். ஆணும் பெண்ணும் அடைகாக்கும். அடை காக்கும் காலம் 27 முதல் 29 நாட்கள் வரை.

வரிசை: காலி∴பார்மிஸ்

Order : Galliformes

Family : Phasianidae

மயில்கள் (Pheasants)

கௌதாரிகள் (Patridges)

காடைகள் (Quails)

காட்டுக்கோழிகள் (Jungle fowls)

சுண்டாங்கோழிகள் (Spur fowls)

கௌதாரியும் காடையும்

வேட்டைக்காரர் மிக விரும்பி வேட்டையாடும் பறவைகள் கௌதாரியும் காடையுமே ஆகும். சிறு காடுகளிலும் புதர்களிலும் புல் வெளிகளிலும் மறைந்து தரையோடு தரையாக ஒட்டி ஓடும். விளை நிலங்களில் அறுவடையின் போது காணலாம். தானியங்களையும் புல்விதைகளையும் முக்கிய உணவாகக் கொள்ளும் இவை சிறு பொடிக் கற்களையும் மணலையும் ஓரளவு உட்கொள்கின்றன.

இன்று நாம் வீட்டில் வளர்க்கும் கோழிகள் எப்படிப் பறக்கும் ஆற்றலை இழந்து விட்டனவோ அதுபோல இவையும் பறக்கும் பழக்கம் குறைந்த பறவைகளே. ஆனால் அதற்கு ஈடு கட்டுவது போல வேகமாக ஓடும் ஆற்றல் பெற்றுள்ளன. எப்பொழுதும் சிறு கூட்டமாகத் திரியும் இவை வேட்டைக்காரர்கள் ஆரவார முழக்கம் (Beating) செய்து துரத்தும்போது எழுந்து பறந்தாலும் சற்றுத் தூரம் பறந்தவுடன் மீண்டும் தரையில் இறங்கி ஓடிப் புதர்களிடையே மறைந்து கொள்ளவே முற்படக் காணலாம். இவற்றின் கால்கள் இப்படி வேகமாக ஓடித் தப்புவதற்கேற்ப உறுதியாக

அமைந்துள்ளன. பெரும்பாலான பறவைகளின் கால்களின் ஒரு முள்போன்ற முளை (Spur) அமைந்திருக்கக் காணலாம்.

தரையிலேயே முட்டையிடும் இவை ஓரளவு அதிக எண்ணிக்கையுள்ள முட்டைகளை இடுவதாகவே கருத வேண்டும். இவற்றின் குஞ்சுகள் முட்டையிலிருந்து வெளிவந்தவுடன் தாய்ப் பறவையைத் தொடர்ந்து செல்லும் ஆற்றல் பெற்றுள்ளமை குறிப்பிடத் தக்கது. ஆணும் பெண்ணும் தோற்றத்தில் பெரும்பாலும் வேறுபட்டு விளங்கக் காணலாம்.

73. வர்ணக் கௌதாரி

241. Southern Painted Partridge

Francolinus pictus pictus (Jardine and Selly)

தோற்றம்: சாதாரணக் கௌதாரியின் அளவே இதுவும் இருக்கும். நீளம் சுமார் 31 செ. மீ.

அலகு கருப்பாகவும் விழிப்படலம் பழுப்பாகவும் கால்கள் ஆரஞ்சுச் சிவப்பாகவும் இருக்கும்.

இது தோற்றத்தில் பெண் கருங்கௌதாரியை ஒத்தது எனலாம். உடலின் மேற்பாகம் பழுப்பு நிறமாகக் கரும் புள்ளிகளோடும், ஒரே சீரான கருங் கோடுகளுடனும், வெள்ளைப்பட்டைகள் நிறைந்தும் காட்சி தரும். தலையும் கண்ணின் மேற் பகுதியும் செம்பழுப்பு நிறமாக இருக்கும். உடலின் அடிப்பாகம் கருப்பாக வெள்ளைப் புள்ளிகளோடு காணப்படும். வயிற்றின் நடுப் பாகமும் வாலடியும் கருஞ் சிவப்பாக இருக்கும். கொண்டை ஆணுக்குச் செம்பழுப் பாகவும் பெண்ணுக்கு வெண்மையாகவும் இருப்பது கொண்டு ஆணையும் பெண்ணையும் வேறுபடுத்தி அறியலாம். இதன் கால்களில் முள் முளை (Spur) கிடையாது. பறந்து செல்லும்போது வெண் புள்ளிகளோடு கூடிய இறக்கைகளும் கருத்த வால் இறகுகளும் அடையாளம் கண்டுகொள்ளத் துணை செய்வன.

காணப்படும் இடங்கள்: கேரளா, மைசூர் மாநிலங்களில் கன மழை பெய்யும் காடுகளைத் தவிர தென்னிந்தியாவின் பிற பகுதிகள் முழுதும் ஆங்காங்கே சிறு காடுகளும் புல்வெளிகளும் விளை நிலங்களும் விரவியுள்ள பகுதிகளில் காணலாம். அடர்ந்த காடுகளை அழித்துத் தோட்டங்களாக்கியவுடன் அங்கு இவை விரைவில் பரவி

தங்கி வாழத் தொடங்குகின்றன. புல்வெளிகளே இவை மிகுதியும் விரும்பி வாழும் இடம்.

பழக்க வழக்கங்கள்: ஆணும் பெண்ணும் சேர்ந்த இணையாகவும், மூன்று நான்கு குஞ்சுகளோடு கூடிய குடும்பமாகவும் காலை மாலை அந்திநேரங்களில் வெளிப்பட்டு இரைதேடக் காணலாம். வெயில் நேரத்தில் புதர்களிடையே மறைந்து ஓய்வுகொள்ளும். ஓடும்போது வாலை மேலே நிமிர்த்திக்கொண்டு ஓடும். வேட்டைக்காரர்களின் முழக்கங்கள் (Beaters) அருகே நெருங்கும்வரை புதர்களை விட்டுக் கிளம்பாது பின் இறக்கையடித்து 'விர்ர்ர்' என ஒலியெழுப்பியபடி எழுந்து பறக்கும் புத்திசாலித்தனமுடையது. மிக நெருக்கமாக வந்துவிட்ட வேட்டைக்காரர்களால் இவற்றை மிக அருகாமையில் வைத்துச் சுட முடியாதல்லவா? இரவில் மரங்களிலும் புதர்களிலும் கூட்டமாகத் தங்கும்.

தானியங்கள், புல்விதைகள், பசுமுளைகள், பழங்கள், கரையான் ஆகியன இதன் உணவாகும். இதன் வயிற்றில் சிறு கல்லும், மண்ணும் எப்போதும் காணப்படுவதுண்டு.

கிளிக்—சீக், சீக், க்கேரே எனத் தொடர்ந்து ஓயாமல் 15 நிமிடங்கள் வரை கூடக் கத்தும் இப்பறவையின் குரலொலியைப் பல்வேறு உருவங்களில் ஆங்கிலத்தில் மொழிப்படுத்துவர். ஒரு பறவை கத்தும்போது இன்னொரு பறவை தூரத்திலிருந்து பதில் குரல் கொடுக்கும்.

இனப்பெருக்கம்: காலம்: ஜூன் முதல் செப்டம்பர் முடிய; கூடு: *தரையில் சற்றுக் குழிவான பகுதியில் புல்லால் மெத்தெனச் செய்து – சிறு காடுகளிடையேயும் விளை நிலங்களிடையேயும் – முட்டையிடும்.* முட்டை: 4 முதல் 8 வரை; கிரீம் நிறமாக இருக்கும்; *சிலபோது* வெளிர் பச்சை, வெளிர் பழுப்புக் கறைகளோடு கூடிய வெண்மை நிறமாக இருத்தலும் உண்டு.

74. கௌதாரி

246. South Indian Grey Partridge

Francolinus pondicerianus pondicerianus (Gemelin)

தோற்றம்: பாதி வளர்ந்த வீட்டுக் கோழியின் அளவிருக்கும். சுமார் 33 செ. மீ. நீளமிருக்கும்.

அலகு கொம்பு நிறமாகவும், விழிப்படலம் ஆழ்ந்த பழுப்பாக வும், கால்கள் சிவப்பாகவும் இருக்கும்.



கௌதாரி

பருத்த குறுகிய வாலோடு கூடிய இதன் உடலின் மேற் பகுதி சாம்பற் பழுப்பும், கருஞ் சிவப்பும், பழுப்பும் கலந்து காணப்படும். மஞ்சளும் கருப்பு மான புள்ளிகளும்,பட்டைகளும், நெளிகோடுகளும் உடல் முழு தும் காணப்படும். உடலின் அடிப்பகுதி வெளிர் மஞ்சளும் கருஞ் சிவப்புமாக இருக்கும். சிறிய நெளி நெளியான கருங்கோடுகள் வயிற்றிலும் பக்கங்களிலும் மிக்கிருக்கக் காணலாம். கழுத்தில் மஞ்சள்கலந்த கருஞ்சிவப்புக் கறை (Rufous patch) கருப்பு வளையத்திற்குள் தெளிவாகக் காணப் படும். வாலின் செம்பழுப்பு நிறம் பறக்கும்போது தெளிவாகத் தெரியும். ஆண் பெண்ணைவிடச் சற்றுப் பருத்துக் காலில் முள் முளையுடன் தோற்றமளிக்கும்.

கௌதாரி

காணப்படும் இடங்கள் : தென்னிந்தியா முழுதும் வறண்ட காட்டுநிலங்களிலும், புன்செய்ப் பயிர்கள் விளையும் விளைநிலங்களிலும் காணலாம். நீலகிரிமலையில் 1200 மீட்டர் உயரம் வரை ஆங்காங்கே காணப்படுகிறது என டேவிட்சனும் ஹ்யூமும் குறித்துள்ளனர்.

பழக்க வழக்கங்கள் : மிக அச்சமடையும் இயல்புடையது இது. ஆணும் பெண்ணுமான இணையாகவோ, சிறு கூட்டமாகவோ திரியக் காணலாம். மாட்டுச் சாணத்தையும் தரையையும், காலாலும், அலகாலும் கிளறி இரை தேடும். சிறு சந்தடி ஏற்பட்டாலும் ஓடிப் புதர்களில் மறைந்துகொள்ளும். வேகமாக ஓடும் ஆற்றல் வாய்ந்த இது தேவை ஏற்பட்டாலே பறந்து தப்பிச் செல்ல முயலும். அப்படிப் பறக்கும்போதும் வேட்டைக்காரர்களின் குறிக்கு எளிதில் பலியாக முடியாதபடி தரையோடு ஒட்டியே பறக்கும். பறந்துசென்று ஒரு புதரருகே இறங்கும்; பின் விரைவில் புதரில் நுழைந்து மறையும். விடாது வேட்டைக்காரர் துரத்திப் புதரை நெருங்கிப் பார்க்கும்போது இது புதரைவிட்டு நெடுந் தூரம் நடந்து ஓடிக்கொண்டிருக்கக் கண்டு வியப்படைவர். இரை தேடிய பின்னும், இரவிலும் சிறு முள் மரங்களில் கூட்டமாகத் தங்கும். இரவில் முட்புதர்களிலும் தங்குவதுண்டு.

தானியங்கள், புல்விதை, புல்முளை, இலந்தை முதலான சிறு பழங்கள் இதன் உணவாகும். சிறு பூச்சிகள் மனிதர் மலம் முதலியவற்றையும் உட்கொள்ளும்.

'காட்டீடர், காட்டீடர், காட்டீடர்' என ஆண் திரும்பத் திரும்பக் கத்தும். பெண் 'ட்டீ, ட்டீ, ட்டீ' எனக் கத்தும். 'க்கீர்ர்ர்...க்கிர்' என்பது இது ஆபத்துக் காலத்தில் கொடுக்கும் குரல்.

இனப்பெருக்கம் : காலம் : ஆண்டு முழுவதும் பொதுவாக; சிறப்பாக ஏப்ரல் முதல் செப்டம்பர் வரை. கூடு : தரையில் குழியில் புல் இலை ஆகியன பரப்பி-விளை நிலங்களிடை-கூடு அமைக்கும். முட்டை : 4 முதல் 9 வரை ; வெளிர் மஞ்சள் நிறமாக இருக்கக் காணலாம். பெண்ணே அடைகாக்கும்; அடைகாக்கும் காலம் 18-19 நாட்கள்.

75. பெரிய காடை

250. Grey Quail

Coturnix coturnix coturnix (Linnaeus)

தோற்றம் : கௌதாரியைவிட அளவில் சிறியது. சுமார் 20 செ. மீ. நீளமிருக்கும்.

அலகு கொம்பு நிறமான பழுப்பு (Horny brown); விழிப்படலம் பழுப்பு, ஆழ்ந்த பழுப்பு, செம்மைகலந்த பழுப்பு ஆகிய பல நிறங் களில் இருக்கக் காணலாம்; கால்கள் வெளிர் மஞ்சளாக இருக்கும்.

தோற்றத்தில் பெரிதும் கௌதாரியை ஒத்த, பருத்த, குறுகிய பறவை இது. உடலின் நிறம் வெளிர் பழுப்பு; ஈட்டிமுனையின் வடிவுடைய வெளிர் மஞ்சள் புள்ளிகளும், செம்பழுப்பும் கறுப்பு மான புள்ளிகளும், சிறு பட்டைகளும் உடல் முழுதும் அழகு செய் யும். ஆணின் கழுத்தில் ஒரு கருங்கோடு குறுக்கே செல்லக் காணலாம். உடலின் கீழ்ப்பகுதி வெளிர் கருஞ் சிவப்பாக இருக் கும். வாலடியை நோக்கிச் செல்லச் செல்ல நிறங் குன்றி வெண்மை யடைந்துவிடும். பெண்ணின் மார்பில் அதிகக் கரும் புள்ளிகள் இருக்கக் காணலாம். குஞ்சு தோற்றத்தில் பெண்பறவை போல கழுத்தில் கருங்கோடின்றி இருக்கும்.

காணப்படும் இடங்கள்: கேரளம், தென் தமிழ் நாடு நீங்க லாகத் தென்னிந்தியா முழுதும் குளிர்காலத்தில் வறண்ட நிலங் களிலும், புல்வெளிகளிலும், ஓடைக் கரைகளிலும் காணலாம். குளிர்காலமல்லாத பருவங்களில் மிக அபூர்வமாகக் காணப்படும்.

பழக்க வழக்கங்கள்: தனித்தோ ஆணும் பெண்ணுமான இணையாகவோ திரியக் காணலாமேயன்றிக் கௌதாரியைப்போல சிறு கூட்டமாக இதனைக் காண முடியாது. விளைநிலங்களில் கதிர்கள் முற்றும் சமயத்தில் அதனைப் பாழ்படுத்தக் கூட்டமாக வருவதுண்டு. ஆள் அரவம் கேட்டவுடன் 'விர்ர்' என இறக்கை யடித்துச் சிறு சீழ்க்கை ஒலியோடு மேலே உயர எழுந்து பின் சில நூறு மீட்டர் தூரம் பறந்து மீண்டும் தரையிலிறங்கிப் புதரில் மறையும். விரைந்து நேராகப் பறக்கும் பழக்கமுடையதால் வேட்டைக்காரர் இதனை எளிதில் வீழ்த்துவர்.

நெல், சோளம் முதலிய தானியங்களோடுகூட புல் விதைகளை யும், புழு பூச்சிகளையும் உணவாகக்கொள்ளும். எறும்பு, கம்பளிப் பூச்சி முதலியனவும் சிலபோது உணவாகும்.

பெரிய தெளிவான சீழ்க்கைக் குரலைத் தொடர்ந்து இது "Wet mi lips" என்ற ஓசை தரும் குரலில் காலையும் மாலையும் கத்தும்.

இனப்பெருக்கம்: காலம்: மார்ச் முதல் ஜூலை முடிய; கூடு: தரையில் சிறு குழியில் புற்களால் மெத்தெனச் செய்து முட்டை யிடும். விளைநிலங்களிலும் புதர்களிலும் முட்டையிடக் காணலாம்; முட்டை: 6 முதல் 11 வரை: நிறம் மஞ்சள், செம்பழுப்பு முதலான பலவேறு நிறங்கள் கொண்டவை.

தென்னாட்டில் இவை அதிகம் இனப்பெருக்கம் செய்வதில்லை. பெரும்பாலான பறவைகள் குளிர்காலம் முடிந்தவுடன் வடநாட்டிற்குத் திரும்பிவிடுவதாகக் குறிப்புள்ளது. ஆனால் அண்மையில் வெளியான இந்தியப் பெருங் கண்டப் பறவைகள் (Handbook of birds of India Pakistan Nepal and Ceylon) என்ற நூலில் இவற்றின் பரப்பும் இனப்பெருக்கமும் இந்தியா முழுதும் எனக் கொடுக்கப்பட்டுள்ளது.

76. கருங் காடை

252. Blackbreasted or Rain Quail

Coturnix Coromandelica (Gmelin)

தோற்றம்: காடையைவிட இது அளவில் சிறியது. சுமார் 15 செ. மீ. நீளமுள்ளது.

இதன் அலகு இனப்பெருக்கக் காலத்தில் கருப்பாகவும் மற்ற சமயத்தில் மேலழகு கொம்பு நிறமாகவும் கீழலகு நீலமாகவும் இருக்கும். கால்கள் இனப்பெருக்கக் காலத்தில் மஞ்சள்கலந்த ஊன் நிறமாகவும் மற்றபோது வெளிர் ஊன் நிறமாகவும் இருக்கும். விழிப்படலம் சிவப்புக் கலந்த பழுப்பு நிறம்.

தோற்றத்தில் பெரிதும் முன்கண்ட பெரிய காடையை ஒத்தது.

ஆணின் மேல் மார்பு நன்றாகக் கருத்துக் காணப்படும். முகமும் தொண்டையும் கருத்து வெண்மையான மோவாயின் பின்னணியில் எடுப்பாகத் தெரியும். மார்பு கருஞ் சிவப்புத் தோய்ந்த வெண்மையாகவும், வயிறும் வாலடியும் வெண்மையாகவும் காட்சி தரும். வயிற்றின் பக்கங்களில் தெளிவான கருங்கோடுகள் காணலாம். பெண் ஆணைவிடச் சற்றுப் பெரியதாக நிறங் குன்றிக் காணப்படும்.

காணப்படும் இடங்கள்: தென்னிந்தியா முழுதும் ஆங்காங்கே காணலாம். மழைக் காலத்தில் இவற்றைப் புல்நிலங்களில் மிகுதியும் காணப்படும். ஜூன் மாதத்தில் தென்னிந்தியாவிற்கு மழைக் காலத்தில் இங்கு இனப்பெருக்கம் செய்து பின் குஞ்சுகள் வளர்ந்தவுடன் வடக்கே சென்றுவிடுகின்றன. மலைகளில் 2000 மீட்டர் உயரம் வரை காணலாம்.

பழக்க வழக்கங்கள்: தனித்தோ, தூரப பிரிந்து திரியும் ஆணும் பெண்ணுமாகவோ பெரும்பாலும் இதனைக் காணலாம்.

சில சமயங்களில் 5 முதல் 8 வரையான சிறு கூட்டமாகத் திரியும். உணவும் மற்றப் பழக்க வழக்கங்களும் பெரிய காடையைப் போன்றனவே.

காலை மாலை நேரங்களில் ஆண் Which-which-which-which எனத் தொடர்ந்து கத்தக் காணலாம். மேகமூட்டமான நாள்களில் நாள் முழுதும் கத்தியபடி இருக்கும்.

இனப்பெருக்கம்: காலம்: மார்ச் முதல் அக்டோபர் வரை; கூடு: முன்னதைப்போல; முட்டை: முன்னதைப்போல.

77. நீலமார்புக் காடை

253. Bluebreasted Quail

Coturnix chinensis chinensis (Linnaeus)

தோற்றம்: காடையைவிட அளவில் சிறியது. சுமார் 14 செ. மீ. நீளமிருக்கும்.

அலகு கருப்புநிறம்; விழிப்படலம் சிவப்பு; கால்கள் நல்ல ஆரஞ்சு நிறம்.

மிகச் சிறுத்த உருவமுடைய கறுத்தநிறக் காடை இது. ஆணின் தலை சிலேட் நீல நிறமாக இருக்கும். உடலின் மேற்பகுதி பெரிய காடையின் உடலைப்போல வெளிர் மஞ்சள் செம்பழுப்புப் புள்ளிகளோடும் காணப்படும். அடிமார்பும், பக்கங்களும் சிலேட் நீல நிறமாக இருக்கும். பெண் பெரிய காடையைப்போலத் தோற்றம் கொண்டிருக்கும். மார்பும், பக்கங்களும் சிறு கோடுகளுக்குப் பதிலாகப் பட்டைகளைக் கொண்டிருக்கும்.

வளராத பறவையின் தலையில் நீலநிறம் இருக்காது. உடலின் அடிப்பகுதி நிறம் மங்கிக் காணப்படும்.

காணப்படும் இடங்கள்: தென்னிந்தியாவில் மேற்குத் தொடர்ச்சிமலைப் பகுதிகளில் புல்வெளிகளிலும், மேய்ச்சல் நிலங்களிலும் காணலாம். மற்றப் பகுதிகளில் ஏற்ற இடங்களில் அருகிக் காணப்படும். செங்கல்பட்டு மாவட்டத்தில் கண்ட குறிப்பு உண்டு.

பழக்க வழக்கங்கள்: மற்றக் காடைகளைக் காட்டிலும் நீர் வளமிக்க இடங்களை விரும்பி வாழ்வது. இதனை வேட்டையாடுவதும்

அத்தனை சிலபமில்லை. ஆட்கள் நெருங்குவதை மோப்பத்தால் இது உணரவல்லது என்ற ஒரு நம்பிக்கை உள்ளது.

புல்விதைகளும், புன்செய் தானியங்களுமே இதன் முக்கிய உணவு.

ட்டிர் ட்டிர் ட்டிர் எனச் சிறு குரலில் கத்தும்.

இனப்பெருக்கம் : காலம் : பிப்ரவரி முதல் ஏப்ரல் முடிய ; கூடு : முன்னதைப்போல ; முட்டை : 4 முதல் 8 வரை ; ஆலிவ் மஞ்சள் அல்லது மண் நிறம்.

78. மலைக் காடை

255. Jungle Bush Quail

Perdicula asiatica asiatica (Latham)

தோற்றம்: காடையைவிட இது அளவில் சிறியது. சுமார் 17 செ. மீ. நீளமிருக்கும்.



மலைக் காடை

அலகு கருப்பு நிறம் ; விழிப் படலம் பழுப்பு ; கால்கள் மஞ்சள் கலந்த சிவப்பு நிறம்.

உடலின் மேற் பகுதி செம் மஞ்சள் கலந்த பழுப்பு நிறமாக இருக்கும். கருப்பும், வெளிர் மஞ்சளுமான கறைகளும் கோடு களும் இடையிடையே காணப் படும். கண்ணின்மேல் வெளிர் மஞ்சளும் பழுப்புமான புருவம் முன் தலையிலிருந்து கழுத்து வரை கீழ்நோக்கிச் செல்வது தெளி வாகத் தெரியும். உடலின் அடிப்பகுதி வெண்மையாக நெருக்க மான கருப்புப் பட்டைகளோடு காணப்படும். மோவாயும் தொண்டையும் நல்ல செம்பழுப்பு நிறமாக இருக்கும்.

பெண் பறவையின் உடலின் மேற்பகுதியும் மோவாயும் தொண்டையும் ஆண் பறவையினத்தைப்போலவே நிறங்கொண்டு விளங்கினாலும் உடலின் கீழ்ப்பகுதி நிறம் மங்கிக் கருஞ் சிவப்பாகக் காணப்படும்.

வயதாக வயதாகப் பறவைகளின் நிற அழகு மங்கத் தொடங்கும். இளம் பறவைகளின் தலையில் செம்பழுப்பு நிறத்தைக் காண முடியாது.

காணப்படும் இடங்கள் : தென்னிந்தியாவில் மேற்குத் தொடர்ச்சிமலையின் அடிவாரங்களில் புல் நிலங்களிலும் கிழக்குத் தொடர்ச்சிமலையைச் சார்ந்த காட்டு நிலங்களிலும் காணலாம். மலைகளில் 1250 மீட்டர் உயரம் வரை காணலாம். இது மற்றக் காடைகளைப்போல விளைநிலங்களில் நுழைவதில்லை.

பழக்க வழக்கங்கள் : 5 முதல் 20 வரையான சிறு கூட்டமாகவே இதனைக் காணலாம். இரவில் புதர்களில் அடையும்போது சிறு சிறு கூட்டமாகப் பிரிந்து புதர்களில் வெளிப்பக்கம் பார்த்தபடி படுத்திருக்கும். ஆட்கள் அருகே நெருங்கும் வரை அமைதியாக இருக்கும் இவை காலால் மிதிக்கும் அளவுக்குப் பக்கத்தில் நெருங்கியபின் 'விர்ர்' என இறக்கை அடித்தபடி எல்லாம் ஒரே சமயத்தில் கூட்டமாக எழுந்து பல திசைகளிலும் சிதறிப் பறக்கும். புண்பட்ட புலி முதலிய கொடிய விலங்குகளைத் தேடிச் சப்தமின்றிச் செல்லும் வேட்டைக்காரர்களுக்கு இந்தப் பறவையின் எதிர்பாராத ஆரவாரம் பெரிய அதிர்ச்சியாக இருக்கும். சற்று தூரம் பறந்து, பின் மீண்டும் புதர்களில் மறையும், பறவைகள் ஒன்றுக் கொன்று குரல் கொடுத்து மீண்டும் கூட்டமாகச் சேர்ந்து கொள்ளும். காலையிலும் மாலையிலும் வரிசையாக ஒன்றன்பின் ஒன்ருக 'க்யூ'வில் வருவது போல நீர் குடிக்க வருவதும் அதே போல வரிசை ஒழுங்கு தவருமல் ஒரு புல்வெளியைவிட்டு இன்னொரு புல் வெளியை நாடிச் செல்வதும் காணத் தகுந்த காட்சிகளாகும்.

புல் விதைகள், சிறு தானியங்கள், கரையான் போன்ற சிறு பூச்சிகள் இதன் உணவாகும். இவற்றின் வயிற்றில் எப்போதும் பொடிக் கற்களைக் காணலாம்.

வ்வீ, வ்வீ வ்வீ, வ்வீ எனச் சிறு குரலில் கத்தும்.

ச்சீ ச்சக், ச்சீ– ச்சக், ச்சீ—ச்சக் என இனப்பெருக்கக் காலத்தில் ஆண் அடிக்கடி குரல் கொடுக்கும்.

இனப்பெருக்கம் : காலம் : ஆகஸ்ட் முதல் ஏப்ரல் முடிய. கூடு : புல் புதரின் அருகே தரையில் புல்லால் மெத்தென ஆக்கி முட்டையிடும். முட்டை : 4 முதல் 8 வரை; க்ரீம் வெண்மை நிறமாக இருக்கும். அடை காக்கும் காலம் 16 முதல் 18 நாட்கள் வரை. ஆண் ஒரே துணையோடு வாழும் பண்புடையது. பெண் மட்டுமே அடை காக்கும்.

79. தக்கண மலைக்காடை

260. Deccan Rock Bush Quail

Perdicula argoondah argoondah (Sykes)

தோற்றம் : இது பெரும்பாலும் முன்பு கண்ட மலைக்காடையை உருவில் ஒத்ததே. மலைக்காடைக்குக் கண்ணின்மேல் இருக்கும் புருவம் இதற்கு இல்லை. இதன் தொண்டையின் நிறம் செம்பழுப்பிற்குப் பதிலாக செங்கல் சிவப்பாக இருக்கும். பெண்ணுக்கு மலைக்காடையின் பெண்ணுக்கு இருப்பதுபோல தொண்டையில் செம்பழுப்பு நிறம் இருக்காது.

காணப்படும் இடங்கள்: ஆந்திரா மைசூர் மாநிலங்களில் சிறு மலைகளைச் சார்ந்த கற்கள் நிறைந்த வறண்ட காடுகளில் காணலாம்.

பழக்க வழக்கங்கள் : இனப்பெருக்கம் : மலைக்காடையைப் போன்றனவே.

80. மைசூர் சரளைக்காட்டுக் காடை

261. Mysore or Laterite Bush Quail

Perdicula argoondah salimalii (Whistles)

தோற்றம் : அளவில் மலைக்காடையை ஒத்த இதன் உடலின் மேற்பகுதி, இறக்கைகள், வால் ஆகியன செங்கல் சிவப்பாக இருக்கும். அடி வயிறும், வாலின் கீழிறகுகளும், பக்கங்களும் லேசான செங்கல் சிவப்பு நிறமாக இருக்கும். மற்றபடி மலைக்காடையைப் போலவே கருங்கோடுகளும் கறைகளும் பெற்றிருக்கும். பெண்ணின் உடலின் மேற் பகுதி செங்கல் சிவப்பாகக் கரும் பட்டைகளின்றியும், உடலின் கீழ்ப் பகுதி வெளிர் மஞ்சளாக இளம் செம்பழுப்புத் தோய்ந்து காணப்படும்.

காணப்படும் இடங்கள் : மைசூர் மாநிலத்தில் சித்தல் துர்க் மாவட்டத்தில் சிவப்புப் பாறை கற்கள் கொண்ட பகுதியில் இது காணப்படுகிறது. இதன் உடல் நிறம் சூழ் நிலையோடு பொருந்த அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

பழக்க வழக்கமும் இனப்பெருக்கமும் : மலைக் காடையைப் போன்றனவே.

81. வண்ணக் காடை

262. Painted Bush Quail

Perdicula erythrorhyncha erythrorhyncha (Sykes)

தோற்றம்: காடையைவிட அளவில் சிறியது. சுமார் 18 செ. மீ. நீளமிருக்கும்.

அலகு நல்ல சிவப்பு நிறம்; விழிப்படலம் மஞ்சள் கலந்த பழுப்பு நிறம். கால்கள் சிவப்பு நிறம்.

நெற்றி மோவாய், கண்ணைச் சுற்றியுள்ள பகுதி ஆகியன கருப்பாக இருக்கும். உடலின் மேற்பகுதி ஆலிவ் பழுப்பாக அழகான வெண் கோடுகளோடும், கருத்த நிறமுடைய பெரிய கறைகளோடும் இருக்கும். முன் உச்சந்தலையிலிருந்து தலையின் பக்கங்களில் பின் கழுத்து வரை வெள்ளைக் கோடு செல்லக் காணலாம். மார்பும் வயிறும் செம்பழுப்பாக இருக்கும். வெள்ளையும் கருப்புமான பெரும் புள்ளிகள் பக்கவாட்டில் அழகு செய்யக் காணலாம்

பெண் பறவையின் உடலின் மேற் பகுதி ஆணின் உடலின் மேற் பகுதியை ஒத்திவைக்கும். ஆணின் தலையில் காணப்படும் வெள்ளைப் பட்டையும் கழுத்து வெள்ளையும் பெண்ணிற்கு இருக்காது. உடலின் கீழ்ப் பகுதி கருஞ் சிவப்பாகப் பக்கங்களில் மங்கிய கரும் புள்ளிகளோடு காணப்படும்.

காணப்படும் இடங்கள்: மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதிகளில் சேரவராயன் மலைப் பகுதிகளிலும் 600 முதல் 2000 மீட்டர் உயரம் வரை நீர் வளம் செறிந்த உயர்ந்து வளரும் புல் வெளிகளிலும், காடுகளின் விளிம்புகளிலும், மலைப் பள்ளத்தாக்கிலுள்ள விளை நிலங்களிலும் காணலாம்.

பழக்க வழக்கங்கள்: தக்கண மலைக்காடை, மலைக்காடை போன்றவற்றின் பழக்க வழக்கங்களே இதன் பழக்க வழக்கங்களும். காலை மாலைகளில் மேயச் செல்லும் இதனை சிறு கூட்டமாகக் காணலாம். பாதைகளில் புழுதியில் விரும்பிப் புரளும் இயல்புடையவை. மற்றக் காடைகளைப் போல மிகுந்த அச்சங் கொண்டு பறந்து ஓடும் பழக்கம் இதனிடம் இல்லை.

புல் விதைகள், ; தானியங்கள், பசு முளைகள், தளிர்கள், கறையான் போன்றவை இதன் உணவு.

ட்யூ—ட்யூ—ட்யூ—ட்யூ என்றும் டுட்யூ, டுட்யூ, டுட்யூ என்றும் மெல்லத் தொடங்கிப் பின் உரத்த குரலில் கத்தும் பழக்கம் உடையது இது.

இனப்பெருக்கம் : காலம் : ஆண்டு முழுதும். கூடு : தரையில் சிறு குழியில் புல் புதர்கள் அடியில் புல்லிட்டு மெத்தென முட்டையிடும். முட்டை : 5 முதல் 10 வரை ; கிரீம் வெண்மை நிறங்கொண்டவை முட்டைகள்.

அடைகாப்பது பெண் பறவையே. அடை காக்கும் காலம் 16 முதல் 18 நாட்கள். குஞ்சுகள் மிக விரைவில் பறக்கக் கற்றுக் கொள்கின்றன.

82. சுண்டாங் கோழி

275. Red Spurfowl

Galloperdix spadicea spadicea (Gmelin)

தோற்றம் : இது அளவில் கௌதாரியை விடப் பெரியது. நன்கு வளர்ந்த வீட்டுக் கோழியின் அளவில் முக்கால் பங்கு இருக்கும். சுமார் 36 செ. மீ. நீளமிருக்கும்.

இதன் அலகு இளஞ் சிவப்பு நிறமாக இருக்கும் ; விழிப்படலம பழுப்பு நிறம் ; கால்கள் பவளச் சிவப்பாக இருக்கும். தூவிகளற்ற முகத்தின் முன் பகுதியும் இளஞ் சிவப்பாக இருக்கும்.



சுண்டாங் கோழி

ஆண் ; உச்சந்தலை கரும் பழுப்பாக இருக்கும். முகமும் கழுத்தும் சற்று வெளிரான கரும் பழுப்பாக இருக்கும். உடலின் மேற் பகுதி கருஞ் சிவப்புத் தோய்ந்த பழுப்பு நிறம். கருப்பும் சிவப்புமான சிறு கோடுகள் உடல் முழுதும் காணப்படும். சாம்பற் பழுப்பு நிற நெளி கோடுகள் இடையிடையே அழகு செய்யக் காணலாம். கால்களில் இரண்டு முதல் நான்கு வரையிலான முள் முளைகள் இருக்கும்.

பெண் : நெற்றி மணற் பழுப்பாகவும், உச்சியும் பின் கழுத்தும் கரும் பழுப்பாகவும் இருக்கும். உடலின் மேற் பகுதி கருஞ் சிவப்புக் கலந்த மணல் நிறமானது. அதனிடையிடையே அழகான சிறு கருங்கோடுகள் காணப்படும். மோவாயும் தொண்டை வெண்மை நிறம். மார்பும் பக்கங்களும் மங்கிய கருஞ் சிவப்பு நிறமாக நல்ல கரும் புள்ளிகளோடு காட்சி தரும். இதன் கால்களில் ஓரிரு முள் முளைகள் காணலாம்.

காணப்படும் இடங்கள்: தென்னிந்தியா முழுதும் தென் கேரளம் நீங்கலாகக் காணலாம். மலை அடி வாரங்கள், மூங்கிற் காடுகள், லாண்டானா புதர்கள் காபித் தோட்டங்கள் ஆகியவை இது மிக விரும்பித் திரியும் இடங்களாகும். மலைகளில் 1000 மீட்டர் உயரம் வரை காணப்படும்.

பழக்க வழக்கங்கள்: 3 முதல் 5 வரையான சிறு கூட்டமாகப் புதர்களிடையே மறைந்து திரியும் இயல்புடையது. ஆளரவம் கேட்டவுடன் அஞ்சிப் புதருக்குப் புதர் மறைந்து புகுந்து மலைப் பகுதியில் மேல் நோக்கி ஓடும். கால்களை நம்பித் தப்பித் தப்பி ஓட முயலுமேயன்றி இறக்கைகளின் மேல் நம்பிக்கை வைத்துப் பறந்து தப்ப இது பெரும்பாலும் முயற்சிப்பதில்லை. பாழடைந்த காட்டு மாளிகைகளிலும் அறுவடை முடிந்த விளை நிலங்களிலும் காணலாம். இடம் விட்டு இடம் பெயராமல் குறிப்பிட்ட ஒரு பகுதி யில் நிலைத்துத் தங்கும் பழக்கமுடையது. காலை மாலை நேரங்களில் காட்டுப் பாதைகளில் திரியக் காணலாம். மற்ற நேரங்களில் புதர் களிடையே மறைந்திருக்கும். இரவில் மரங்களில் பாதுகாப்பாகத் தங்கும்.

புல் விதைகள், பழங்கள், புழு பூச்சிகள், கரையான் ஆகிய வற்றை உணவாகக் கொள்ளும்.

வீட்டில் கோழி முட்டையிட்டவுடன் கத்துவது போன்ற குரலில் கொக் கொக் கொக் கொக்கோ ' எனக் கத்தும்.

இனப்பெருக்கம்: காலம்: ஜனவரி முதல் ஜூன் முடிய. கூடு: மூங்கில் புதர்களிடையே தரையில் சிறு குழியில் காய்ந்த புல்லைக் கொண்டு மெத்தென ஆக்கி முட்டையிடும். முட்டை: 3 முதல் 5 வரை வெளிர் மஞ்சள் நிறம்.

பெண் மட்டுமே அடைகாக்கும் பழக்க முடையது. முட்டையை யாராவது கண்டு கொண்டார்கள் எனத் தெரிந்தால் முட்டையைப் புறக்கணித்து விடும்.

83. திருவாங்கூர் சுண்டாங் கோழி

277. Travancore Red Spurfowl

Galloperdix spadicea stewarti (*Baker*)

முந்தைய சுண்டாங் கோழியைவிட ஆழ்ந்த கருஞ் சிவப்பான செம்பழுப்பு நிற உடல் கொண்டது. சீரான சாம்பற் பழுப்பு தெளி கோடுகள் இதற்கு இல்லை. இந்தச் சிறு நிற வேறுபாடு கருதித்

தனி உள்ளினமாகப் பிரிக்கப் பட்டுள்ளது. கேரளாவில் வய நாடு தவிரப் பிற பகுதிகளில் காணப்படும் இதன் பழக்க வழக்கங்களும் இனப்பெருக்க முறையும் முன்னதைப் போன்றனவே.

84. வர்ணச் சுண்டாங் கோழி

278 Painted Surfowl

Galloperdix lunulata (Valenciennes)

தோற்றம்: கௌதாரியின் அளவுள்ள இது சுமார் 32 செ. மீ. நீளமிருக்கும்.

அலகு கருப்பு நிறம். விழிப்படலம் செம்மை கலந்த பழுப்பு நிறம். கால்கள் கொம்பு நிறமான பழுப்பு நிறம்.

ஆண்: நெற்றியும், உச்சந்தலையும் கரும் பச்சை நிறங் கலந்த கருப்பாக வெண்மை நிறத்திலான சிறு புள்ளிகள் நிறைந்து காணப்படும். தலைப் பக்கங்களிலும் கழுத்திலும் கருப்பு நிறத்திற் கிடையே பெரிய வெள்ளைப் புள்ளிகளைக் காணலாம். உடலின் மேற் பகுதி செம்பழுப்பாக இருக்கும். கருப்புக் கரையோடு கூடிய கண் போன்ற வெண் புள்ளிகள் அந்தச் செம்பழுப்பி னிடையே அழகு செய்யக் காணலாம். வால் பசுமை கலந்த கருப்பாக இருக்கும். முதுகின் பின் பகுதியில் புள்ளிகள் காணப் படுவதில்லை.

பெண்: தலை செம்பழுப்பாகவும், உடலின் மேற் பகுதி ஆலிவ் நிறங் கலந்த கரும் பழுப்பாகவும் இருக்கும். தொண்டை, கன்னம் ஆகியன மங்கிய மஞ்சள் நிறமாக இருக்கும். இடையிடையே செம்பழுப்புப் புள்ளிகள் காணப்படும். மார்பும் வயிறும் ஆலிவ் நிறம் தோய்ந்த பழுப்பாக இருக்கும்.

காணப்படும் இடங்கள்: மேற்குத் தொடர்ச்சி மலையின் கிழக்குப் பக்க சரிவுகளிலும் கிழக்குத் தொடர்ச்சி மலை சார்ந்த வறண்ட காட்டுப் பகுதிகளிலும் ஆங்காங்கே காணலாம். மலைகளில் 1000 மீட்டர் உயரம் வரை காணலாம்.

பழக்க வழக்கங்கள்: 5 முதல் 6 வரையான சிறு கூட்டமாகக் காணலாம். அச்சம் மிகக்கொண்டு மறைந்து திரிவது. வேட்டைக் காரர் துப்பாக்கியால் குறி பார்த்துச் சுடுவதற்கு ஏற்ற நிலையில் பறக்கவே செய்யாது. சற்று தூரம் பறந்தவுடன் மீண்டும் இறங் கிப் புதர்களில் மறைந்து ஓடவே செய்யும். வாலை விறைத்துத்

தூக்கியபடி சிறு குரலில் கத்தியபடியே ஓடும் முட் புதர்களிலோ, பாறைப் பொந்துகளிலோ சென்று மறைந்து கொள்ளுமாதலால் எவ்வளவு தான் ஆரவாரம் செய்தாலும் வெளிப்படாது. இதனை வேட்டைக்காரர்கள் குன்றுகளின் உச்சியில் ஆரவாரம் செய்து துரத்துவார்கள். அப்போது குன்றின் ஒரு பக்கம் இருந்து இன்னொரு பக்கம் செல்ல சற்று உயர எழுந்து பறக்கும். அப்போது இதனை எளிதாகச் சுடுவார்கள்.

விதைகள், முளைகள், இலந்தை, லாண்டானா, அத்தி போன்ற பழங்கள், புழு பூச்சிகள் முதலியன இதன் உணவு.

இனப்பெருக்கம் : காலம்: பிப்ரவரி முதல் ஜூன் வரை. கூடு : பாறை அடியில் அல்லது மூங்கிற் புதர்களிடையில் தரையில் குழியில் புல்லால் மெத்தென ஆக்கி முட்டையிடும். முட்டை: 3 முதல் 4 வரை. லேசான வெளிர் மஞ்சள் நிறத்தில் இருக்கும்.

குஞ்சுகளைக் காக்க ஆணும் பெண்ணும் பலவகையான கருத்தை மாற்றி ஈர்க்கும் செயல்களைக் (Diversion display) காட்டும்.

85. காட்டுக் கோழி

301. Grey Junglefowl

Gallus sonneratti (Temminck)

தோற்றம் : வீட்டுச் சேவல் அளவிருக்கும் இதன் ஆண் சுமார் 70 செ. மீ. நீளமும் பெண் 45 செ. மீ. நீளமும் இருக்கும்.

ஆண் : அலகு கொம்பு நிறமாகவும் விழிப்படலம் சிவப்பாகவும், கால்கள் பழுப்புக் கலந்த மஞ்சளாகவும் இருக்கும். இனப்பெருக்கக்காலத்தில் : உடலின் மேற்பகுதி வெண் கோடுகளோடு கூடிய ஆழ்ந்த சாம்பல் நிறமாக இருக்கும். ஊதா நிறங்கலந்த கருத்த இறக்கைகளும் அரிவாள் போல் வளைந்து நீண்ட கருப்பு வாலும் இதனை அடையாளம் காட்டும். கழுத்தைச் சூழ்ந்த பெரிய தூவிகளும், முன் உடலும் பளபளக்கும் ஆரஞ்சு நிறத்தில் அரக்கினை ஒத்த புள்ளிகளையும் கோடுகளையும் பெற்றிருக்கும். உடலின் கீழ்ப் பகுதி கருஞ் சாம்பல் நிறமாக இருக்கும். மார்பில் நெருக்கமான நீள் வெண் கோடுகளைக் காணலாம். வயிற்றின் பக்கங்கள் கருஞ் சிவப்பு நிறமாகவும் வயிறு பழுப்புக் கலந்த நிறமாகவும் இருக்கும். இனப்பெருக்கம் செய்யாத காலத்தில் கழுத்தில் தூவிகள் இரா. அரிவாள் போன்ற கறுத்த வாலிறகுகளுக்குப் பதிலாக

சிறு இறகுகளே இருக்கும். சிவப்பு நிறத்தலைக் கொண்டை மிகச் சிறுத்துக் காணப்படும்.

பெண்; உச்சந் தலையும் கழுத்தும் புள்ளிகளோடு கூடிய பழுப்பு நிறம்; இறக்கைகள் வரி வரியான கோடுகளோடு காணப் படும்; உடலின் மேற் பகுதி சிறு கரும் பழுப்பும், வெளிர் மஞ்சளு மான புள்ளிகளோடும் வெண்மையான சிறு கோடுகளோடும் காணப்படும். மோவாயும் தொண்டையும் வெண்மை நிறம். மார் பின் மேற் பகுதி சீரான கருங் கோடுகளோடு கூடிய வெண்மை நிறம். கால்களில் சிறு முள் முளைகள் காணப்படும்.

காணப்படும் இடங்கள்: தென்னிந்தியாவிற்கே உரிய காட்டுக் கோழி இது. வடக்கே சிவப்புக் காட்டுக் கோழியே காணலாம். வறண்ட காடுகளிலும் பசுங் காடுகளிலும் மலைகளிலும் காணலாம். தொட்ட பெட்டா, ஆனைமுடி போன்ற மிக உயர்ந்த மலைச் சிகரங் களில் கூடக் காணப்படுவது. மூங்கிற் புதர்களிலும் கைவிடப் பட்ட காபி தேயிலைத் தோட்டங்களிலும் சாதாரணமாகக் காண லாம்.

பழக்க வழக்கங்கள்: 4 முதல் 5 வரையான சிறு கூட்டமாகக் காலை மாலை நேரங்களில் புதர்களிலிருந்து வெளிப்பட்டு இரை தேடும். குறிஞ்சி யினச் செடிகள் மலர்ந்து காய்க்கும் பருவங்க ளில் அதன் விதையை விரும்பித் தின்னும் இவை அப்போது பெருங் கூட்டமாகச் சேர்வதும் உண்டு. பகல் வெயிலின் போது புதர்களின் நிழலில் பதுங்கி யிருக்கும். காட்டுப் பாதைகளில் சாணத்திலும் பகுதியிலும் இரை தேடும் பழக்கமும் உண்டு. எதிர் பாராது மனிதர்கள் எதிர்பட்டால் வேகமாக இறக்கையை அடித்துச் சப்தமிட்டபடி பறந்து மரத்தில் இலைகளிடையே சென்று அமர்ந்து கொள்ளும். ஆபத்தில்லை என்று அறிந்த பின்னரே மெல்ல கீழே இறங்கும். மனிதர்களால் ஆபத்தில்லை என்ற நம்பிக்கை ஏற்பட் டால் காட்டில் இருக்கும் கிராமங்களையும் தோட்ட வீடுகளையும் தைரியமாக நெருங்கி வந்து மேயும். ஆனல் இப்போது காடுகள் அழிந்து இதன் எண்ணிக்கை வேகமாகக் குறைந்து வருவதால் மனித நடமாட்டமுள்ள இடங்களின் அருகே இவற்றைக் காண்பது அரிதே. இரவில் மரங்களில் மேல் அமர்ந்தோ அல்லது மூங்கிற் புதரிடையே மூங்கிலின் மேல் வரிசையாக அமர்ந்தோ இரவைக் கழிக்கும்.

தானியங்கள், புல் முளை, கிழங்குகள், பழங்கள், (இலந்தை, லாண்டானு, அத்தி முதலியன) புழு பூச்சிகள், கரையான், சிறு பாம்புகள் முதலியன உணவாகும். மனிதர் மலத்தைத் தின்பதும் உண்டு.

இனப்பெருக்கம்: காலம்: ஜனவரி முதல் மே வரை. சில பகுதிகளில் ஆண்டு முழுதும். கூடு: அடர்ந்த புதர்களிடையே தரையில் சிறு குழியில் காய்ந்த புல்லும் மூங்கில் இலைகளும் கொண்டு மெத்தென ஆக்கி முட்டையிடும். முட்டை: 5 முதல் 6 வரை. வீட்டுக் கோழியின் முட்டையைப் பெரிதும் ஒத்திருக்கும். பெண்ணே பெரிதும் அடைகாக்கும். அடைகாக்கும் காலம் 20 முதல் 21 நாட்கள் வரை.

86. மயில்

311. Indian Peafowl

Pavo cristatus (Linnaeus)

தோற்றம்: வீட்டில் வளர்க்கும் வான் கோழியின் அளவு இருக்கும் (தோகையின்றி). ஆணின் நீளம் சுமார் 95 முதல் 120 செ. மீ. வரை இருக்கும் (தோகையின்றி) பெண் சுமார் 85 செ. மீ. நீளமிருக்கும்.

அலகு கொம்பு நிறமாக இருக்கும்; கீழலகில் சிறிது மஞ்சள் நிறம் தோய்ந்திருக்கக் காணலாம். விழிப்படலம் ஆழ்ந்த பழுப்பு நிறம். கால்கள் பழுப்பு நிறம்.

ஆண் மயிலின் பசு நீலத் தோகையும் நீலக் கழுத்தும் மார்பும் எல்லோரும் அறிந்ததே. பறப்பதற்குப் பயன்படும் இறக்கைகள் செம்பழுப்பு நிறமாக இருக்கும்.

பெண் மயில் உருவத்தில் ஆணைவிடச் சற்றுச் சிறியது. ஆணைப் போல இதற்கும் தலையில் கொண்டை உண்டு. ஆயினும் நீண்ட அழகிய தோகை இதற்குக் கிடையாது. இதன் தலையும் கழுத்தும் கருஞ் சிவப்புக் கலந்த பழுப்பு நிறமாக இருக்கும். உடலின் மேற் பகுதி பழுப்பாக வெளிர் புள்ளிகளோடு காணப்படும். பெண்ணின் கழுத்து நீலத்திற்குப் பதிலாகக் கரும் பச்சையாக இருக்கும். மார்பு வெளிர் மஞ்சளும் பச்சையும் கலந்த வெண்மையாக இருக்கும். பறக்கும் இறக்கைகள் ஆணுக்கு இருப்பதைப் போலச் செம்பழுப்பாக இல்லாமல் ஆழ்ந்த பழுப்பு நிறமாக இருக்கும்: குஞ்சுகள்—ஆணும் பெண்ணும்—பெண் மயிலைப் போலக் காட்சி தரும்.

காணப்படும் இடங்கள்: தென்னிந்தியா முழுதும். பல விடங்களில் கோயில்களிலும் மடங்களிலும் மக்கள் இதனைப் பேணி வளர்க்கின்றனர். இயற்கையில் வறண்ட காடுகளிலும் காட்டாற்றின் கரைகளிலும் மலைச் சரிவுகளிலும் காணலாம்.

பழக்க வழக்கங்கள் : ஓர் ஆணும் அதற்குத் துணையான மூன்று முதல் ஐந்து வரையான பெண்ணுமாகச் சிறு கூட்டமாகக் காண லாம். இனப்பெருக்கக் காலத்திற்குப் பின் ஆண் பறவைகளும் பெண் பறவைகளும் தனித்தனியே பிரிந்து வாழத் தொடங்கும் தானியங்கள் விதைத்த விளை நிலங்களிலும் விளைந்த வயல்களிலும் காலை மாலை நேரங்களில் மேய்ந்து வெயில் மிகுந்த பகல் நேரத்தில் மரங்களிலும் புதர்களிலும் அமைதியாக அமர்ந்து பொழுதைக் கழிக்கும். காலையில் இரை தேடிய பின்னும் மாலையில் மரங்களில் அடையும் முன்னும் நீர் நிலைகளைத் தேடிச் சென்று நீர் குடிக்கும் பழக்கம் உடையது இது.

மயிலின் பார்வையும், கேட்கும் ஆற்றலும் மிக நுட்பமானது. அரவம் கேட்டாலும் கழுத்தை நீட்டித், தலையைத் தூக்கிச் சுற்றி லும் கவனமாக நோட்டம் விட்டுப் பார்க்கும். ஆபத்து என்று உணர்ந்தால் வேகமாக ஓடித் தப்ப முயல்வதே இதன் இயல்பு. வேலிகளும் புதர்களும் எதிர்ப்படும் போதே இறக்கைகளின் துணை யால் பறந்து கடக்க முற்படும். எனினும் இதன் பறக்கும் ஆற்றலை நாம் குறைத்து மதிப்பிடக் கூடாது. மரங்களிடையேயும் எளிதாக அப்படியும் இப்படியுமாகத் திரும்பித் திரும்பிப் பறந்து தப்பிக்கும் ஆற்றலும் இதற்கு உண்டு.

இரவில் உயர்ந்த மரங்களில் தனித்தும், கூட்டமாகவும் தங்கும். இரவில் அடிக்கடி 'மியாவோவ்', மியாவோவ் எனக் கத்தியபடி இருக்கும். ஒரு மயில் கத்தத் தொடங்கியவுடன் எல்லா மயில் களும் தொடர்ந்து குரல் கொடுக்கும். காடுகளில் புலி முதலான விலங்குகளின் வருகையைக் கண்டு ஆபத்துக் குரல் கொடுத்து, குரங்கு முதலான விலங்குகள் பாதுகாபபான இடங்களைத் தேடிக் கொள்ள உதவுபவை மயில்களே. ஊர்ப் புறங்களில் இவை கூட்ட மாகத் தங்கும். தென்னை மரங்களில் திருடர்கள் தேங்காய் திருட ஏற முடியாது.

விதைகள், தானியங்கள், நிலக்கடலை, பயிர்களின் முளை இளந் தளிர்கள். பூவரும்பு, தக்காளி போன்ற பழங்கள் ஆகியவற்றை உணவாகக் கொள்ளும் இது விளை நிலங்களில் கூட்டமாகப் புகுந்து மிகுந்த கேடு செய்தாலும் மக்கள் குரங்கைப் போல இதனையும் தெய்வீகத் தொடர்புடையதாகக் கருதுவதால் இது செய்யும் கேட் டினைப் பொருட்படுத்துவதில்லை. பூரான், பல்லி, தேள், ஓணான் சிறு பாமபுகள் ஆகியவற்றையும் இது உணவாகக் கொள்ளும்.

இனப்பெருக்கம் : காலம் : ஏப்ரல் முதல் செப்டம்பர் வரை. கோடை மழை பெய்யத் தொடங்கிய பின்னரே இனப்பெருக்கம்

செய்யும். நல்ல மழை இருக்குமானால் ஜனவரியிலேயே இனப் பெருக்கம் தொடங்கும். கூடு: பெரும்பாலும் தரையில் குழியில் புல்லால் மெத்தென ஆக்கி முட்டையிடும். கரும்புத் தோட்டம் போன்ற அடர்த்தியான விளை நிலங்களிலும், கற்றாழைப் புதர்களி லும், முட் புதர்களிடையேயும் இது இனப்பெருக்கம் செய்யும். பாழடைந்த வீட்டுக் கூறைகள் மேலும், தாழ்வான புதர்கள் மேலும் முட்டையிட்டதைக் கண்டு குறித்துள்ளனர். முட்டை: 3 முதல் 5 வரை. வெளிர் மஞ்சளும் கிரீமுமான நிறத்தில் இருக் கும். பெண்ணே அடைகாக்கும். அடைகாக்கும் காலம் 28 நாட்கள்.

ஆண் மயில் பல துணைகளை நாடும் பழக்க முடையது. இனப் பெருக்கக் காலத்தில் ஆண் மயில் தோகை விரித்தாடும். அப்போது இதன் செம்பழுப்பு இறக்கைகள் உடலின் பக்க வாட்டில் தொங்கக் காணலாம். பெண் மயிலைப் பார்த்தபடி பக்க வாட்டிலும் முன்பும் பின்னும் அடியெடுத்து வைத்து நகரும். தோகையைச் சிலிர்க் கும்போது 'ஜ ஜ ஜ' என்ற சப்தம் வரும். பெண் ஆணின் ஆட்டத் திலோ அழகிலோ ஈடுபாடு கொள்வதாகக் காட்டிக் கொள்ளாது. சில சமயங்களில் பெண்ணும் ஆணைப் போல ஆட முற்படும். ஒரு ஆண் மயில் அது ஆடும் சுற்று வட்டாரத்தில் இன்னொரு ஆண் புக அனுமதிக்காது.

மயில் 1963-ஆம் ஆண்டில் தேசியப் பறவையாக்கப் பட்டது. இப்போது இதன் தோகை ஏற்றுமதி செய்ய அனுமதிக்கப் படுவதில்லை.

வரிசை : க்ருஸிஃபார்மிஸ்

Order : Gruciformes

Family : Turnicidae

(BUTTON AND BUSTARD QUAILS)

87. குறுங் காடை

318. Indian Bustard Quail

Turnix suscitator taigoor (Sykes)

தோற்றம் : இது கருங்காடை அளவு இருக்கும். ஆணைவிடப் பெண் சற்றுப் பெரியது. சுமார் 15 செ. மீ. நீளமிருக்கும்.

அலகு சிலேட் நீலமாகவும், விழிப்படலம் வெண்மையாகவும் கால்கள் சிலேட் சாம்பல் நிறமாகவும் இருக்கும்.

ஆண் : உச்சந்தலை அடர்ந்த பழுப்பாக நடுவில் தெளிவற்ற கோட்டினைப் பெற்று இருக்கும். தலையின் பக்கங்கள் சிறு கரும் புள்ளிகளோடு கூடிய வெண்மை நிறமாகக் காட்சி தரும். உடலின் மேற் பகுதி கருஞ் சிவப்பான பழுப்பும், கருப்பும், வெள்ளையும் கலந்து காணப்படும். இறகுகளின் போர்வைச் சிறகுகள் தெளிவான கருப்பும், வெளிர் மஞ்சளுமான புள்ளிகளோடு காணப்படும். மோவாயும் தொண்டையும் வெண்மை. மார்பும், வயிறும் மங்கிய மஞ்சள் நிறம். மார்பில் சிறு சிறு கருப்பு நிற வளையங்கள் காணப்படும்.

பெண்: ஆணைக் காட்டிலும் ஆழ்ந்த வர்ணங்களோடு உருவில் சற்றுப் பெரிதாகவும் காட்சி தரும். தொண்டை, கழுத்து, நடு மார்பு ஆகியன நல்ல கருப்பாக இருக்கும்.

காணப்படும் இடங்கள்: தென்னிந்தியா முழுதும் விளை நிலங்களை அடுத்த புல் வெளிகளிலும், வறண்ட காடுகளிலும் காணலாம்.

பழக்க வழக்கங்கள்: மற்றக் காடைகளைப் போல இதனை எப்போதும் கூட்டமாகக் காண முடியாது. தனித்தோ இணையாகவோ தான் திரியும். புதர்களிலும் புல்லிலும் மறைந்து திரியும் இது ஆள் மிதிப்பது போல நெருங்கிச் செல்லும் போதே 'விர்ர்ர்' என்ற இறக்கை ஒலியுடன் எழுந்து பறந்து செல்லும். யாரும் தொந்தரவு செய்யவில்லையானால் அமைதியாகத் தரையில் இலை தழைகளைக் கிளறியபடி இரை தேடும். காடுகளில் பழுத்து விழுந்து அழுகிய இலைகள் புதிதாகக் கிளரப்பட்டிருப்பது கொண்டு இது அருகே இருக்கிறது எனத் தெரிந்து கொள்ளலாம். மற்றக் காடைகளைப் போல மண்ணைக் கிளறிப் புழுதியில் குளிக்கும் பழக்கம் இதற்கும் உண்டு.

புல்விதை, தானியம், பசு முளைகள், சிறு புழு, பூச்சிகள் கரையான் ஆகியவை இதன் உணவு.

ட்டிர்ர்ர்ர், ட்டிர்ர்ர், ட்டிர்ர்ர் என மோட்டார் சைகிள் எழுப்பும் ஒலியைப் போலத் தொடர்ந்து பதினைந்து விநாடிகள் பெண் உரக்க ஒலித்து ஆணுக்குத் தன் இருப்பிடத்தை உணர்த்தும், இனப்பெருக்க சமயத்தில் நாள் முழுதும் விட்டு விட்டு இக்குரல் ஒலிப்பதைக் கேட்கலாம். லூன், லூன், லூன் எனத் தொடர்ந்து ஐந்து விநாடிகள் வரை மார்பைத் தரையோடு சேர்த்து வைத்து இறக்கையை விரித்தபடி கத்துவதும் உண்டு.

இனப்பெருக்கம்: காலம்: ஜுன் முதல் செப்டம்பர் வரை. கூடு: விளைந்த தானியங்களுக்கிடையே புதர்களிலோ, புல் வெளிகளிலோ தரையில் சிறு குழியில் புல்லால் மெத்தென ஆக்கி முட்டையிடும். முட்டை: 4 மட்டும். சிவப்புத் தோய்ந்த பழுப்பு நிற, கறுத்த ஊதா நிறக் கறைகளோடு கூடிய கருஞ் சாம்பல் நிற வெண்மை (Greyish White) நிறங் கொண்டவை.

88. மஞ்சள்கால் குறுங்காடை

314 Indian Yellowlegged Button-Quail

Turnix tanki tanki (Blyth)

தோற்றம்: குறுங்காடை அளவிருக்கும். சுமார் 15 செ. மீ. நீளம் இருக்கும். பெண் ஆணைவிடச் சற்றுப் பெரியது.

அலகு ஊன் நிறந் தோய்ந்த வெண்மை. விழிப் படலம் மங்கிய வைக்கோல் நிறம். கால்கள் மஞ்சள் நிறம்.

ஆண் : உச்சந்தலை கருஞ் சிவப்பும் வெளிர் மஞ்சளும் கலந்த கருப்பு நிறம். தலையின் பக்கங்கள் வெளிர் மஞ்சள். உடம்பின் மேற் பகுதி கருஞ் சாம்பல் நிறந் தோய்ந்த பழுப்பு நிறம். இடையிடையே சிறிய கருப்புப் பட்டைக் கோடுகளும் நெளிகோடுகளும் ஒழுங்கின்றி இடம் பெற்றிருக்கக் காணலாம். போர்வை இறகுகள் (Wing-Coverts) வெளிர் மஞ்சளாகக் கரும் புள்ளிகளோடு காணப் படும். மோவாயும், தொண்டையும் வெண்மை நிறம். மார்பு, வயிறு ஆகியன வெளிர் மஞ்சள். நடு மார்பில் கருஞ் சிவப்பும் துரு நிறமும் தோய்ந்திருக்கக் காணலாம். வயிற்றின் பக்கங்களில் தெளிவான கருப்புக் கதைகளைக் காணலாம்.

பெண் : சற்றுப் பெரிதாகப் பின் கழுத்தில் அகன்ற ஆரஞ்சுக் கருஞ் சிவப்புக் கழுத்துப் பட்டை (Collar)யுடன் காட்சி தரும்.

காணப்படும் இடங்கள் : தென்னிந்தியா முழுதும் சமவெளிகளிலும், மலைகளிலும் காணலாம். வறண்ட பகுதிகளையும் புல் வெளிகளையும் சார்ந்து திரியும்:

பழக்க வழக்கங்கள் : பழக்க வழக்கங்கள் முந்தைய குறுங் காடையைப் போன்றனவே.

இனப்பெருக்கம் : காலம் : தென் மேற்குப் பருவ மழை தொடங்கியபின் ஜுன் முதல் செப்டம்பர் வரை. கூடு : தரையில் சிறு குழியில் உயர வளர்ந்த புல் கூட்டையும் முட்டைகளையும் வளைந்து மூடிக் கொண்டிருக்கக் காணலாம். முட்டை : 4 ; நிறம் முன்னதன் முட்டையைப் போலவே.

Family : Gruidae

நெட்டைக் கொக்குகள்
(CRANES)

வட இந்தியாவில் மிகுதியும் குளிர் காலத்து வலசை வரும் இந்த நெட்டைக் கொக்குகள் தென்னாட்டில் மிக அபூர்வமாகவே காணப் படுகின்றன. அப்படிக் காணப்படும் பறவைகளுள்ளும் ஒரே ஓர் இனம் மட்டும் தென்னாட்டுக்கு முறையாக வருவதாகக் குறிப் புள்ளது. தமிழ் நாட்டில் இவை மிகுதியாகக் காணப்படுவதில்லை. காணப்படும் ஓர் இனமும் வடக்கு மைசூர் வடக்கு ஆந்திரா பகுதி களில் மட்டுமே காணப்படுகிறது.

89. நெட்டைக் கொக்கு

326. Demoiselle Crane
Anthropoides virgo (Linnaeus)

தோற்றம் : கரண்டி மூக்கு வாயன் அளவு இருக்கும். அலகு மட்டும் சிறியது. நிற்கும்போது 76 செ. மீ. உயரம் இருக்கும்.

அலகு மங்கிய பச்சை நிறம், முனை வெளிர் சிவப்பாக இருக்கும். விழிப்படலம் நல்ல சிவப்பு ; கால்கள் கருப்பு.

தோற்றத்தில் பெரிய நாரையை ஒத்துச் சற்றுப் பருமனாகக் காட்சி தரும் இதன் உடல் சாம்பல் நிறமாக இருக்கும். காதோடு வெள்ளைக் கோடு செல்லக் காணலாம். கழுத்து கருப்பு நிறம். கழுத்திலிருந்து நீண்ட தூவிகள் மார்பு வரை தொங்கக் காணலாம். அரிவாள் போல நீண்ட பழுப்பான சாம்பல் நிறத் தூவிகள் வாலின் கீழும் தொங்கக் காணலாம்.

காணப்படும் இடங்கள் : குளிர் காலத்தில் இந்தியாவிற்கு வரும் இவை மைசூர் மாநிலத்தில் கொள்ளேகாலத்திற்கு வடக்கே முறையாக மிகுதியாகக் காணப்படுவதாகவும், திருநெல்வேலியில் காணப்பட்டதாகவும், குறிப்பு உள்ளது. ஆகஸ்டு மாதத்தில் ஆப்கானிஸ்தானம், பாகிஸ்தான் வழியாக இந்தியாவிற்கு வரத் தொடங்கி ஏப்ரல் மாதத்தில் மீண்டும் வடக்கு நோக்கிச் செல்கிறது.

பழக்க வழக்கங்கள் : மற்ற வகை நெட்டைக் கொக்குகளுடன் (Cranes) சேர்ந்து காணப்படுவது இது. வெப்பம் மிகுந்த பகல் நேரத்திலும் இரவிலும் ஆற்றங்கரை மணலில் ஒற்றைக் காலில் கழுத்தை வளைத்துத் தலையை இறக்கைகளுக்குள் வைத்தபடி கூட்டமாக நின்றிருக்கக் காணலாம். ஆனால் சில பறவைகள் இது போலக் கூட்டமாக நின்று தூங்குவதுபோல் பாசாங்கு செய்யும் பறவைகளிடையே காவல் காப்பவர்களைப் போல விழிப்புடன் சுற்றும் முற்றும் பார்த்தபடி இருக்கும். யாரேனும் நெருங்கி வந்தவுடன் இவை பெருங் கூட்டமாக எழுந்து பறக்கத் தொடங்கும். அப்போது இவை இறக்கை அடிப்பதால் உண்டாகும் ஒலி கடலலையோசையினைத் தூரத்திலிருந்து கேட்பது போலக் கேட்கும் என சலீம் அலி அவர்கள் குறிப்பிடுகிறார். மேய்ச்சல் நிலங்களில் நெடுநேரம் வட்டமிட்டுப் பறந்து ஆபத்தில்லை என உணர்ந்த பின்னரே கீழே கூட்டமாக இறங்கும். இவை வடநாட்டில் ஆயிரக் கணக்கில் கூட்டமாகக் காணப்பட்டாலும் இவற்றை வேட்டையாடுவது கடினம். இதன் ஊன் சுவையுடையது.

தானியங்கள், பருப்பு வகை முதலியவற்றையே விரும்பி உண்ணும் இவை விளை நிலங்களில் மிகுதியும் கேடு செய்பவை.

உரத்த குரலில் க்ரோக், க்ரோக் எனக் கத்தும்.

இனப்பெருக்கம் : வடக்கு ஆசியாவிலும் ஐரோப்பாவிலும்.

Family: Rallidae

நீர்க் கோழிகள்

(RAILS, COOTS, CRAKES)

90. நீல மார்புக் கானுங் கோழி

323. Indian Bluebreasted Banded Rail

Rallus striatus albiventus (Swainson)

தோற்றம் : இது கௌதாரியை விடச் சிறியது. சுமார் 27 செ. மீ. நீளமிருக்கும்.

இதனுடைய அலகு தொடக்கத்தில் சற்று குழிந்திருக்கும். அலகின் நிறம் சிவப்பு. விழிப்படலம் வெளிர் மஞ்சள். கால்கள் ஆலிவ் கலந்த பச்சை நிறம்.

தலையும் கழுத்தும் கருஞ் சிவப்புக் கலந்த பழுப்பு நிறம்; உடலின் மேற் பகுதி கரும் பழுப்பாக நெளிநெளியான வெள்ளை வளையங்களுடனும் கறைகளுடனும் காணப்படும்; மோவாயும் தொண்டையும் வெள்ளை நிறம்; முன் கழுத்தும் மார்பும் சாம்பல் நிறங்கலந்த நீல நிறம்; வயிறும் பக்கங்களும் வெள்ளைப் பட்டைகளோடு கூடிய நீல நிறம். பெண் பறவையின் உடலின் மேற் பகுதி நிறங் குன்றிக் காணப்படும். வயிறு வெண்மையாக இருக்கும்.

காணப்படும் இடங்கள் : நீர் வளம் மிக்க இடங்களில் தென்னிந்தியா முழுதும் ஆங்காங்கே காணலாம்.

பழக்க வழக்கங்கள் : நாணல் புதராக வளர்ந்திருக்கும் ஏரிக் கரைகள், ஆற்றங்கரைகள், உப்பங்கழிகள் ஆகிய இடங்களில் தனித்தோ ஆணும் பெண்ணுமான இணையாகவோ காணலாம். பெரும்பாலும் புதர்களில் மறைந்து காணும் சுபாவம் உடைய தாகையால் கண்ணிற் படுவது கடினம். குறுகிய வாலை அசைத்த

படி தலையை நிமிர்த்தி மெல்ல நடக்கும் இது ஆளரவம் கேட்டவுடன் நாணல் புதர்களிடையே மறைந்துவிடும். இதனுடைய கால் விரல்கள் மிக நீண்டிருப்பதால் இது குளங்களில் இலைகள் மீதும் நடந்து இரை தேடுகிறது. பறக்கும் போது நீண்ட விரல்களோடு கூடிய கால்கள் பின்னே தொங்கும். நீரில் நன்றாக நீந்தும் ஆற்றல் பெற்று இது முக்குளிக்கவும் செய்யும்.

விதைகள், நீர் நிலைகளில் வளரும் செடி கொடிகள், நத்தை, புழு பூச்சி முதலியன இதன் உணவு.

பெரும்பாலும் அமைதியாகவே திரியும் இது சிலபோது மெல் லிய சிறு குரலில் சீழ்க்கை அடிப்பது போலக் கத்தும்.

இனப்பெருக்கம்: காலம்: ஜூன் முதல் அக்டோபர் வரை. கூடு: சுமார் 20 முதல் 25 செ. மீ. குறுக்களவு உள்ளதாக நீர்த் தாவரங்களைக் கொண்டு நீர் நிலையருகே நாணல் புதரிலோ வேறு புதர்களிலோ கூடு கட்டும். முட்டை: 5 முதல் 7 வரை; பசு மஞ்சள் நிறத்தில், சிவப்பு ஆழ்ந்த பழுப்புக் கரைகளோடு காணப் படும்.

ஆணும் பெண்ணும் சேர்ந்தே கூடு கட்டி மாறி மாறி அடை காக்கும். காதலூடாட்டத்தின் போது ஆண் பெண்ணிடம் தலை யைத் தாழ்த்தி முன் நீட்டியபடி வாலை நிமிர்த்தி இறக்கையை விரித்து விரைவாக அசைத்து அழகு காட்டும்.

91. கருங்கால் கானாங் கோழி

332. Indian or Slatylegged Banded Crake

Rallina eurizonoides amauroptera (*Jerdon*)

தோற்றம்: காடைக்கும் கௌதாரிக்கும் இடைப்பட்டது சுமார் 25 செ. மீ. நீளமிருக்கும்.

அலகு அடிப்பகுதி பசுமையாகவும் முனை ஆழ்ந்த பழுப்பாகவும் இருக்கும்; விழிப்படலம் இரத்தச் சிவப்பு; கால்கள் சிலேட் நிறம்.



கருங்கால் கானாங் கோழி

தலையும், கழுத்தும், மார்பும் மஞ்சள் கலந்த சாக்லெட் பழுப்பு நிறம். இறக்கைகளும் மேற் போர்வை இறக்கை களும் நன்றாகக் கறுத்துக் காணப்படும். வயிறும் வாலடியும் தெளி

வான வெள்ளையும் கருப்புமான வளையங்களால் அலங்கரிக்கப் பட்டிருக்கும்.

காணப்படும் இடங்கள் : ராமேசுவரம் தீவு உட்பட தென்னிந் தியா முழுதும் காணப்படும் இது நீர் வளம் மிகுந்த காடான பகுதி களை அடுத்து வாழ்கிறது.

பழக்க வழக்கங்கள் : இரவு நேரத்திலேயே வெளிப்பட்டு இரை தேடும் பழக்க முடையது. சிறு சந்தடி ஏற்பட்டாலும் புதர்களுள் மறைந்துவிடும் அடிக்கடி வாலை ஆட்டியபடி தலையை நிமிர்த்தி இறக்கைகளைப் பக்கங்களில் சற்றுத் தாழ்த்தியபடி கம்பீரமாக நடக்கும். மரங்களில் ஏறி அமர்ந்திருக்கவும் நீரில் நீந்திக் கொண் டிருக்கவும் காணலாம்.

நீர் தாவரங்களின் விதைகள், நத்தை, சிறு புழு பூச்சி முதலி யன இதன் உணவு.

இனப்பெருக்கம் : காலம்: ஜுன் முதல் செப்டம்பர் வரை. கூடு: பழுத்து உதிர்த்த இலைகள், புல், சிறு குச்சி ஆகியவற்றால் மூங்கில் புதரின் இடையிலோ, புதராக வளர்த்திருக்கும் கொடிக ளிடையேயோ தரையிலிருந்து ஒரு மீட்டர் உயரத்தில் கூடு அமைக்கும். மலைகளில் 1600 மீட்டர் உயரம் வரை இதன் கூடு களைக் காணலாம். முட்டை : 4 முதல் 8 வரை. கிரீம் நிற வெண் மையாகப் பளபளப்போடு காட்சி தரும். ஆணும் பெண்ணும் அடைகாக்கும். இனப்பெருக்கக் காலத்தில் காலை மாலை நேரங்களில் தொடர்ந்து கத்தியபடி இருக்கும் ஆந்தை போலக் குரல் கொடுக் கும்; பூனை போலக் கத்தும், பாம்பு சீறுவது போலக் குரல் கொடுக் கும் என இதன் குரல் பற்றிக் குறித்துள்ளனர்.

92. செம்பழுப்பு மார்புக் காணங் கோழி

340 Southern Rudd Crake

Amaurornis fuscus zeylonicus (*Baker*)

தோற்றம் : காடை அளவு உருவம் உடையது. சுமார் 23 செ. மீ. நீளமிருக்கும்.

இதன் அலகு ஆலிவ் பச்சை நிறம்; விழிப்படலம் மஞ்சட் பழுப்பு நிறம்; கண்ணைச் சுற்றிய வளையம் நல்ல சிவப்பு; கால்கள் சிவப்பு நிறம்.

வெள்ளை மார்பு நீர்க் கோழியைப் போலப் பொதுவில் தோற் றம் தருவது. இது. உச்சந்தலை, நெற்றி, முகத்தின் பக்கங்கள்

ஆகியன 'வைன்' போன்ற செம்பழுப்பு நிறம்; உடலின் மேற் பகுதி ஆலிவ் நிறம் தோய்ந்த செம்பழுப்பு நிறம்; மோவாயும் தொண்டையும் வெண்மை; கீழ்த் தொண்டை மார்பு ஆகியன 'வைன்' செம்பழுப்பு நிறம். வயிறும் பக்கங்களும் ஆலிவ் நிறம் தோய்ந்த பழுப்பு; வாலடி வெள்ளைக் கரையோடு கூடிய பழுப்பு பறக்கும்போது தொங்கும் கால்களின் சிவப்பு நிறம் தெளிவாகத் தெரியும். ஆணும் பெண்ணும் ஒன்று போன்ற தோற்றம் கொண் டவை.

காணப்படும் இடங்கள்: கேரளா மைசூர் மாநிலங்களில் மேற் குத் தொடர்ச்சி மலைச் சார்ந்த பகுதிகளில் நீர் நிலைகளின் கரை களில் நாணல் புதர்களிலும் நெல் வயல்களிலும் காணலாம். மலை களில் 2000 மீட்டர் உயரம் வரை இது காணப்படும்.

பழக்க வழக்கங்கள்: மற்றக் காணுங் கோழிகளைப் போன்றதே.

இனப்பெருக்கம்: காலம்: ஜூன் முதல் செப்டம்பர் வரை. கூடு: புல், நெற்பயிர், நாணல் ஆகியவற்றினிடையே தரையில் புல்லால் சிறு மேடையிட்டு முட்டையிடும். முட்டை: 6 முதல் 9 வரை வெளிர் காபிப் பொடி நிறம். செம்பழுப்பு ஊதா நிறப் புள்ளி கள் முட்டையின் பெரும் முனையில் நிறைந்திருக்கக் காணலாம்.

கூடு கட்டி, அடைகாத்து, குஞ்சுகளைப் பேணும் பணியை ஆணும் பெண்ணும் பகிர்ந்து கொள்ளும்.

93. பழுப்புநிறக் காணுங் கோழி

342. Brown Crake

Amaurornis akool akool (Sykes)

தோற்றம்: கௌதாரியை விட இது அளவில் சிறியது. சுமார் 28 செ. மீ. நீளமிருக்கும்,

இதன் அலகு பச்சை நிறம்; விழிப்படலம் கரும்பழுப்பு நிறம் கால்கள் வெளிர் சிவப்பு நிறம்.

மிகக் குறுகிய வாலுடைய பழுப்பு நிறக் காணுங்கோழி இது. தலையின் பக்கங்களும் கழுத்தும் சாம்பல் நிறம்; முதுகும் இறக்கை களும் வாலும் ஆலிவ் நிறங் கலந்த பழுப்பு நிறமாக இருக்கும்; மார்பும் வயிறும் கருஞ்சாம்பல் நிறம்; வாலடிப் பகுதி சற்றுப் பழுப் பாக இருக்கும். ஆணும் பெண்ணும் தோற்றத்தில் ஒன்று போல இருந்தாலும் பெண் உருவில் சற்று சிறியது.

காணப்படும் இடங்கள் : ஆந்திராவிலும் மைசூரிலும் இதனைக் கண்டு குறித்துள்ளனர். தென்னிந்தியாவின் கிழக்குக் கடற்கரையிலும் மலைகளிலும் இது வாழ்வது பற்றிய குறிப்புக்கள் இன்னமும் தெளிவாக அறியப்படவில்லை.

பழக்க வழக்கங்கள் : மற்றக் காணுங் கோழிகளைப் போலவே அஞ்சி மறைந்து திரிவது. பெரும்பாலும் காலை மாலை நேரங்களில் மேய்ச்சலுக்காக வெளிப்படும். நாணல், நீர்க் கொடிகள் ஆகியவற்றின் மீது நீர்க்கோழியைப் போல ஏறி நடக்கும். பறக்கும் ஆற்றல் ஓரளவே கொண்டது.

புழு பூச்சிகள். அவை நீரில் இடும் முட்டை, நத்தை நீர்த் தாவரங்களின் விதைகள் ஆகியன இதன் உணவாகும்.

இனப்பெருக்கம் : காலம் : மே முதல் ஆகஸ்ட் வரை கூடு நீர்த்தாவரங்கள் அல்லது புல்லினிடையே சிறு மேடை போல அமைத்து முட்டை இடும். முட்டை : 5 முதல் 6 வரை. வெளிர் மஞ்சள் நிறம். பெரிய முனையில் செம்பழுப்பு செங்கல் சிவப்புக் கறைகளைக் காணலாம்.

ஆணும் பெண்ணும் அடைகாத்துக் குஞ்சுகளைப் பேணும்.

94. காணுங் கோழி

344. Ceylonese Whitebreasted Waterhen

Amaurornis phoenicurus phoenicurus (*Pennant*)

தோற்றம் : கௌதாரி அளவுள்ள இது சுமார் 32 செ. மீ, நீளமிருக்கும்.

இதன் அலகு ஆலிவ் பச்சை நிறம்; விழிப்படலம் இரத்தச் சிவப்பு; கால்கள் பசுமை கலந்த மஞ்சள்.

நெற்றியும், தலையின் பக்கங்களும் வெண்மை நிறம்; தலை உச்சி, பிடரி, உடலின் மேற்பகுதி ஆகியன கருஞ் சிலேட் நிறம்; மார்பிலிருந்து அடிவயிறு வரை நல்ல வெண்மை நிறம்; வாலடி இறகுகள் கருஞ் சிவப்பாக இருக்கும். ஆணும் பெண்ணும் ஒன்று போலவே காட்சி தரும்.

காணப்படும் இடங்கள் : தென்னிந்தியா முழுதும் 20° நிரை கோட்டிற்குத் தெற்கே காணலாம். நெல் வயல்கள், குளங்கள் ஏரிகள், உப்பங்கழிகளில் ஆகியவற்றைச் சார்ந்து திரிவது மலைகளில் 1500 மீட்டர் உயரம் வரைக் காணலாம்,

பழக்க வழக்கங்கள் : எங்கும் சாதாரணமாகக் காணப்படும் நீர்க்கோழி இதுவே. ஊர்ப் புறங்களை அடுத்துச் சாலைகளிலும் வயல்களிலும்' கள்ளி கற்றாழை வேலிகள் உள்ளும் திரியக் காண லாம். நகரங்களில் மக்கள் நடமாட்டம் மிக்க பூங்காக்களில் கூடத் தாராளமாக வந்து பழகும் இயல்புடையது இது. அடிக்கடி தன் குறுகிய வாலை மேலே நிமிர்த்தும்போது, வாலடிச் செம்பழுப்பு நிறம் தெளிவாகத் தெரியும். மூங்கில் புதர்களிலும் முட் புதர்களி லும் எளிதாக உயர ஏரி அமர்ந்து இனப்பெருக்கக் காலத்தில் அடிக் கடி கத்தும். யாரேனும் நெருங்கி வந்தால் தரையில் இறங்கி ஓடிவிடும். இதன் பறக்கும் ஆற்றல் வலிமை வாய்ந்ததன்று. கால்கள் தொங்க தத்தளித்துத் தவித்தபடி பறக்கும். நீரில் நன் ருக மிதந்து நீந்தும்.

புழு பூச்சிகள், அவற்றின் முட்டை, நத்தை, நீர்த் தாவரங் களின் விதைகள், கொழுந்துகள் ஆகியவை இதன் உணவாகும்.

பருவமழை தொடங்கியவுடன் உரத்த குரலில் ஓயாது கத் தும். கரகரப்பான குரலில் கத்தத் தொடங்கி க்ர்ர்... க்வாக் என்ரு குக்குருவான் (Coppersmiths) போல உரத்த குரலில், க்கோக் க்கோக் கோக் என்ரு தொடர்ந்து இரவு முழுவதும் கத்தியபடி இருக்கும்.

இனப்பெருக்கம் :- காலம் : ஏப்ரல் முதல் அக்டோபர் வரை. கூடு : குளக்கரைகளில் புதர்களிலோ, வயல் வரப்புகளிலோ தரையில் நீர்த்தாவரங்களின் இழைதழைகளைக் கொண்டு கோப்பை வடிவிலான சிறு கூட்டினை அமைக்கும். சில சமயங் களில் மூங்கிற் புதர்களில் 2-3 மீட்டர் உயரத்தில் கூடு அமைப் பதும் உண்டு. முட்டை : 6 முதல் 7 வரை; இளஞ்சிவப்பு வெண்மை ஆகிய நிறங்களில் காணப்படும். ஆணும் பெண் ணும் அடைகாத்துக் குஞ்சுகளைப் பேணும். ஆண்கள் இனப் பெருக்கக் காலத்தில் ஒன்ரோடு ஒன்று அடிக்கடி சண்டையிடும்.

95. தண்ணீர்க் கோழி

346. Kora or Watercock

Gallicrex cinerea cinerea (Gomelin)

தோற்றம் : கௌதாரியை விட இது அளவில் பெரியது. ஆண் சுமார் 43 செ. மீ. நீளமும் பெண் 36 செ. மீ. நீளமும் ருக்கும்.

அலகு பசுமை கலந்த மஞ்சளாகவும், விழிப்படலம் சிவப்பாகவும், கால்கள மங்கிய சிவப்பாகவும் இருக்கும்.



தண்ணீர்க் கோழி

உடலின் மேற்பகுதி கரும்பழுப்பாக, அகன்ற ஒரே சீரான மஞ்சள் கலந்த சிவப்புப் பட்டைகளோடும், உடலின் அடிப் பகுதி வெளிர் மஞ்சளான பழுப்பு நிறமாக, நெளி நெளியான கருப்புக் கோடுகளோடும் காட்சி தரும். நெற்றியில் முக்கோண வடிவமான மஞ்சள் நிறக்கேடயம் காணப்படும். பெண்ணுக்கும் ஆணுக்கும் இனப்பெருக்கம் செய்யாத காலத்தில் அதிக வேறுபாடில்லை.

இனப்பெருக்கக் காலத்தில் ஆணின் தோற்றத்தில் சில மாற்றங்கள் ஏற்படும். உடலின் மேற்பகுதி முழுவதும் கருப்பாக மாறும். சில சாம்பல் நிற வளை கோடுகள் அதனிடையே காணப்படும். நெற்றியில் காணப்படும் மஞ்சள் கேடயம் சிவப்பு நிறமாக மாறிப் பின்னுக்கிக் கொம்புபோல வளரும். கண்களும் கால்களும் நல்ல சிவப்பு நிறமாக மாறும்.

காணப்படும் இடங்கள் : தென்னிந்தியா முழுதும் நீர்வளம் மிகுந்த பகுதிகளில் காணலாம். நாணல் புதர்கள், நெல் வயல்கள், கரும்புத் தோட்டங்கள் நிறைந்த பகுதிகளிலும் வாய்க்கால் கரை ஏரிக்கரைகளிலும் திரியக் காணலாம்.

பழக்க வழக்கங்கள் : காலை மாலை அந்திகளில் மேய்ச்சலுக்காகப் பகலில் தங்கியிருக்கும் புதர்களிலிருந்து வெளிவரும். வானம் மப்பும் மந்தாரமுமாக இருக்கும் நாட்களில் நாள் முழுவதும் மேய்ந்து திரிந்து கொண்டிருக்கக் காணலாம். வாலை ஆட்டியபடி புதர் ஓரங்களிலேயே மேயும். இது சிறு அரவம் ஏற்பட்டாலும் புதரிடையே ஓடி மறையும். ஆண் பறவைகள் இனப்பெருக்கக் காலத்தில் மற்ற ஆண் பறவைகளோடு கடுமையாகச் சண்டையிடும். எதிரியின் கழுத்தை அலகால் கவ்வி கீழே அமிழ்த்தப்

பார்க்கும். ஒன்றின் மேல் ஒன்று தாவிக் குதித்தும் கால்களால் ஒன்றை ஒன்று தாக்கியும் சண்டையிடுவதுண்டு.

தாவரங்களின் விதைகள், முளைகள், நெல், நீர்வாழ் பூச்சிகள் முதலியன இதன் உணவு. நெல் வயல்களில் மிகுந்த சேதம் செய்வது இது,

கோக், கோக், கோக், எனவும் உடும்ப், உடும்ப், உடும்ப் எனவும் குளுக் குளுக் எனவும் பலவகைக் குரல் ஒலிகள் எழுப்ப வல்லது.

சிலபகுதிகளில் சேவலைப்போல இதனையும் சண்டையிடப் பழக்கிப் போட்டிகள் வைத்துப் பந்தயம் கட்டுகின்றார்கள்.

இனப்பெருக்கம்: காலம்: ஜூன் முதல் செப்டம்பர் வரை கூடு: நெல்வயல், நாணல் புதர் ஆகியவற்றில் நீர்த்தாவரங்களால் கோப்பை வடிவிலான கூடு அமைக்கும். முட்டை: 3முதல் 6 வரை; வெண்மையாக பெருமுனையில் சிவந்த கறைகளோடு காட்சி தரும்.

96. தாழைக் கோழி

347. Indian Moorhen

Gallinula chloropus indica (Blyth)

தோற்றம்: இது கௌதாரி அளவு இருக்கும். சுமார் 32 செ. மீ. அளவுள்ளது.

அலகும் நெற்றிக் கேடயமும் சிவப்பு நிறம் விழிப்படலம் சிவப்பு; கால்கள் பசுமையாக நீண்ட விரல்களோடு இருக்கும்.

தாழைக் கோழி

தண்ணீரில் நீந்தும்போது வாத்துப் போலவும், தரையில் திரியும்போது காணுங் கோழி போலவும் தோற்றம் தருவது இது. உடலின் மேற்பகுதி கருப்பாகவும் சிலேட் சாம்பல் நிறமாகவும் பழுப்பாகவும் இருக்கும். அடிப்பகுதி சிலேட் சாம்பல் நிறமாக இருக்கும். வாலடி இறகுகள் வெண்மையாக நடுவில் கருப்புப் பகுதியோடு காணப்படும். ஆணும் பெண்ணும் ஒரே மாதிரி தோற்றம் தரும்.

காணப்படும் இடங்கள் : தென்னிந்தியா முழுவதும் நீர்வளம் மிக்க பகுதிகளில் காணலாம். மலைகளில் 2000 மீட்டர் உயரம் வரை காணலாம். தாமரை அல்லிக்குளங்களில் கரைகளிலும், தாழை நாணல் புதர்களடர்ந்த ஏரி, குளக்கரைகளிலும் விரும்பி வாழும் இயல்புடையவை. நீர்நிலைகள் வற்றும்போது நீர்வள முள்ள பகுதிகளுக்கு வலசை போகும்.

பழக்க வழக்கங்கள் : ஆணும் பெண்ணுமான இணையாகவோ, சிறு கூட்டமாகவோ திரியும் இது குளிர்காலத்தில் ஐம்பது பறவைகள் வரை கூடக் கூடுவது உண்டு. பெரும்பாலும் நீர் பரப்பின் மீது வாலை அசைத்துத் தலையை ஆட்டி வாத்துப்போல நீந்திக் கொண்டிருக்கக் காணலாம். கரையோரத்திலுள்ள நாணல், தழை முதலியவற்றை விட்டு நீங்கி நீரில் நெடுந்தூரம் நீந்திச் செல்லும் பழக்கமில்லை. அஞ்சிப் பறக்க முற்படும்போது முதலில் சற்று நேரம் இறக்கை அடித்துப் பின்னரே எழுந்து பறக்கும். வேகமாகப் பறக்கும் ஆற்றல் வாய்ந்தது அல்ல வென்றாலும் பெரிய மலைகளையும் பறந்து கடந்து வலசை போகும் திறன் வாய்ந்தது. நீரில் மூழ்கி மறைந்து தப்பிச்செல்லவும் முயலும்.

தாவர விதைகள், பழங்கள், நத்தை, புழுபூச்சி ஆகியவற்றின் முட்டை, சிறு தவளை, மீன் ஆகியன இதன் உணவு.

க்ரீக் - க்ரெக் ரெக் ரெக் என இனப்பெருக்கக் காலத்தில் மட்டும் கத்தக் கேட்கலாம்.

இனப்பெருக்கம் : காலம் : ஜூன் முதல் செப்டம்பர் வரை இருமுறை முட்டையிடுவதும் உண்டு கூடு : நீர்த்தாவரங்களால் நீரருகே நாணல் புதரில் மேடையிட்டு முட்டையிடும். நீரருகே வளர்ந்துள்ள மரங்களில் கூடமைப்பது உண்டு. முட்டை : 5முதல் 12 வரை; வெளிர் மஞ்சளாகச் செம்பழுப்புப் புள்ளிகள் கொண்டது. ஆணும் பெண்ணும் கூடுகட்டி, அடைகாத்துக் குஞ்சுகளைப் பேணும் பொறுப்பைப் பகிர்ந்து கொள்ளும். அடைகாக்கும் காலம் 21 நாட்கள்.

97. நீலத் தாழைக் கோழி

349. Indian Purple Moor Hen

Porphyrio porphyrio poliocephalus (*Latham*)

தோற்றம் : வீட்டுக் கோழி அளவுள்ள இது சுமார் 43 செ மீ. இருக்கும்.

இதன் அலகு சிவப்பு நிறமாகத் தடித்துக் குறுகியதாக இருக்கும். விழிப்படலம் வெளிர் சிவப்பு; கால்கள் நீண்ட விரல்களோடு கூடச் செங்கல் சிவப்பாக இருக்கும்.

குறுகிய வாலின் அடியே உள்ள வெண்மை நிறப்பகுதி இது வாலை உயர்த்தி நடக்கும்போது தெளிவாகப் புலனாகும் உடல் முழுவதும் ஊதா நிறங்கலந்த நீல நிறமாக இருக்கும். ஆணும் பெண்ணும ஒன்றுபோலக் காட்சிதரும் என்றாலும் இறக்கையற்ற சிவந்த தலைப்பகுதி பெண்ணிற்குச் சற்றுச் சிறியதாக இருக்கும்.

காணப்படும் இடங்கள் : தென்னிந்தியா முழுதும் நீர்வளமிக்க பெரிய ஏரிகளில் நாணல் புதர்களையும். சதுப்பு நிலங்களையும் அடுத்துக் காணலாம். வேடந்தாங்கல், தலை ஞாயிறு போன்ற இடங்களில் காணலாம்.

பழக்க வழக்கங்கள் : 5 முதல் 10 வரையான சிறு கூட்டமாகவே இது பெரும்பாலும் காணப்படுகிறது. பெரிய ஏரிகளில் 50 வரையான கூட்டமாகக் கூடக் காணலாம். காலை நேரத்தில் உயர வளர்ந்த நாணலின் மேல் ஏறி அமர்ந்து இது வெயில் காய்ந்தபடி இருப்பதைப் பனி மிகுந்த நாட்களில் காணலாம் கால் விரல்களால் மெல்லிய நாணலைத் தடுமாறி விழாமல் இறுகப் பற்றியபடி மேலே ஏறிச் செல்வது இதற்கு விளையாட்டுப்போல. பத்துப் பன்னிரண்டு பறவைகள் இப்படி ஒரு சேர நாணல் மீது ஏறி விளையாடிக்கொண்டிருக்கக் காணலாம். இதற்கு நன்றாக நீந்தத் தெரியும் என்றாலும் இது அதிகம் நீரில் இறங்குவதில்லை. குறுகலான வாய்க்காலைக் கூடப் பறந்தே கடக்கக் காணலாம். இப்படிப் பறந்து கடப்பதோடு கூட வாய்க்காலின் குறுக்கே சாய்ந்து கிடக்கும் நாணலின் மீது லாவகமாக நடந்து கடப்பதைக் காண்பவர்கள், மனிதர்கள் கால்வாய்களுக்குக் குறுக்கே தென்னை பனை மரங்களைப் போட்டு வாய்க்காலைக் கடந்து செல்வதை நினையாமல் இருக்க முடியாது. இனப்பெருக்கக் காலத்தில் பெருத்த ஆரவாரம் செய்தபடி ஒன்றோடு ஒன்று சண்டையிடக் காணலாம். மற்ற நீர்க் கோழிகளைப் போல மனிதர்களைக் கண்டவுடன் புதர்களில் பதுங்கும் பழக்கம் இதற்குக் கிடையாது. பறக்கத் தொடங்கும் போது தத்தளிப்பது போலத் தோன்றினாலும் கொஞ்சதூரம் பறந்தவுடன் நன்றாகப் பாய்ந்து பறப்பதைக் காணலாம். சிலர் இதன் இறைச்சியை விரும்பி உண்பர்.

சிறு விதைகள், தானியங்கள். தாவரப் பொருள்கள் சிறு புழு பூச்சிகள், நத்தைகள் முதலியன இதன் உணவாகும். நெல் வயல்களில் மிகுந்த சேதம் செய்யும் பழக்க முடையது இது.

உரத்த குரலில் கரகரப்பாகவும், ஒலித்தும் கத்தும் பழக்க முடையது இது. மேயும் போது 'சகி' 'சக்' என மெல்லொலி எழுப்பிக் கூட்டத்தோடு தொடர்பு கொண்டபடி இருக்கும்.

இனப்பெருக்கம் : காலம்: ஜூன் முதல் நவம்பர் வரை. கூடு: வைக்கோல், புல் முதலியன கொண்டு நீர்த் தாவரங்களி னிடையே கூடமைக்கும். நாணல் புதரில் ஒரு மீட்டர் உயரத்தில் கூடமைப்பதும் உண்டு. முட்டை: 3 முதல் 7 வரை ; மஞ்சளும் சிவந்த வெளிர் மஞ்சளும் கலந்த நிறத்தில் செம்பழுப்பு புள்ளி களுடன் காணப்படும். ஆணும் பெண்ணும் கூடு கட்டுவதில் பங்கு ஏற்கும். காதலூடாட்டத்தின் போது ஆண் சிறு நீர்த்தாவரங்களை அலகில் கொத்திக்கொண்டு வந்து நின்று பெண்ணின் முன் தலை தாழ்த்தித் தாழ்த்திக் காதல் காட்டும்.

98. நாமக் கோழி

350: Coot

Fulica atra atra (Linnaeus)

தோற்றம் : வாத்தின் அளவில் முக்கால் பங்குள்ள இது சுமார் 42 செ மீ. நீளமிருக்கும்.

அலகு வெண்மை ; நெற்றிக் கேடயம் நாமம் போல வெண்மை யாகக் கெட்டியாக இருக்கும். விழிப்படலம் இரத்தச் சிவப்பு; கால் கள் மங்கிய பச்சை நிறம்.

தண்ணீரில் நீந்தும்போது வாத்தைப் போலக் காட்சி தரும் இதன் உடல் முழுதும் சிலேட் நிறக் கருப்பாக இருக்கும். நெற் றியில் இருக்கும் வெள்ளை நாமம் போன்ற கேடயம் இதனைப் பிற பறவைகளிலிருந்து எளிதில் வேறுபடுத்தி அறிய உதவுகிறது. ஆணும் பெண்ணும் தோற்றத்தில் ஒன்று போலவே இருக்கும்.

காணப்படும் இடங்கள் : இந்தியாவில் தங்கி வாழ்ந்து இனப் பெருக்கம் செய்கின்றது என்றாலும் குளிர் காலத்தில் ஆப்கானிஸ் தான் வழியாக வடக்கே இருந்து கூட்டமாக இந்தியாவிற்கு வலசை வருகிறது. தென்னிந்தியா முழுதும் நீர்வளமிக்க பகுதிகளில் குளிர் காலத்தில் தாராளமாகவும் மற்றப் பருவங்களில் அரிதாகவும் காணலாம்.

பழக்க வழக்கங்கள் : எப்போதும் கூட்டமாகவே காணப்படும் இது நீரில் கூட்டமாக நீந்தியும் முக்குளித்தும் விளையாடிக் கொண் டிருக்கக் காணலாம். ஆளரவம் கேட்டவுடன் நீரின்மேல் தாவித்

தாவி நீந்தியும், சற்று தூரம் பறந்தும், சற்று தூரம் நீந்தியும் நடு ஏரியை அடைந்து விடும். வாத்து வேட்டையாடும் வேட்டைக்காரர்களுக்கு இதன் செயல்கள் எரிச்சல் ஊட்டுபவை. வேட்டைக்காரர்


நாமக் கோழி.

துப்பாக்கியால் சுட்டவுடனே அல்லது வல்லூறுகள் ஏரியின் மீது வட்டம் இடும்போதோ அத்தனை பறவைகளும் கடலைப்போல் ஆரவாரம் உண்டாக்கியபடி எழுந்து பறக்கும் காட்சி பார்ப்போருக்குப் பரவச மூட்டுவதாகும். சற்று தூரம் நீரில் இறக்கையால் அடித்துக்கொண்டு தத்தித் தாவிய பின்னரே மேலெழுந்து பறக்க வல்லது. முறையாகப் பறக்கத் தொடங்கி விட்டால் மிக உயரமான மலைகளையும் தாண்டி நெடுந்தூரம் பறக்கும் ஆற்றல் வாய்ந்தது. கால்கள் பின்னரே தொங்க, கழுத்தை முன்னே நீட்டிக் குறுகிய இறகுகளை விரைந்து அடித்தபடி பறக்கும். வட நாட்டில் மீனவர்கள் இதன் இறைச்சியை விரும்பி உண்பதாகவும் இதனைப் பிடிக்கப் பல நூதனமான வழிகளைக் கையாளுவதாகவும் திரு, சலீம் அலி ‘சிந்து மாநிலத்தில் ஒரு ஏரியில்’ (JBNHS 37-460-70) என்ற கட்டுரையில் குறித்துள்ளார். குளிர் காலத்தில் வல்லூறுகள்

கழுகுகள் ஆகியவற்றின் வேட்டைக்கு இவை மிகுதியும் இரையா கின்றன.

நீர்த் தாவரங்கள், நெல், புழு பூச்சி முதலியன இதன் உணவு. சில சமயம் சிறு மீன்களையும் உணவாகக் கொள்ளும்.

இனப்பெருக்கம் : காலம் : நவம்பர் முதல் டிசம்பர் வரை; கூடு : நீர்ப் பரப்பிலிருந்து சிறிது உயரத்தில் நாணல் புதரின்மீது நீர்த்தாவரங்களால் கூடு அமைக்கும். முட்டை : 6 முதல் 10 வரை. மஞ்சள் அல்லது சாம்பல் பழுப்பு நிறத்தில் செம்பழுப்பு, ஊதா, கருப்புக் கோடுகளோடும் புள்ளிகளோடும் காணப்படும். இனப்பெருக்கக் காலத்தில் மிகுந்த ஆரவாரம் செய்யும் இவை அப்போது யாராவது கூட்டை நெருங்கினால் கழுத்தை நீட்டி இறக்கையை உயரத் தூக்கிக் கோபங் காட்டும். ஆணும் பெண் ணும் கூடு கட்டி அடைகாத்துக் குஞ்சுகளைப் பேணும் பொறுப்பைப் பகிர்ந்து செய்யும். அடை காக்கும் காலம். 21 நாட்கள்.

Family : Otididae

கானல் மயில்கள்

(BUSTARDS)

99. கானல் மயில்

354. Great Indian Bustard

Choriotis nigriceps (Vigors)

தோற்றம் : அளவில் இது கழுகைவிடப் பெரியது. நிமிர்ந்து நிற்கும்போது ஆண் 122 செ. மீ. உயரமும் பெண் 92 செ. மீ. உயர மும் இருக்கும்.

இதன் அலகு, விழிப்படலம், கால்கள் ஆகியன வெளிர் மஞ்ச ளாக இருக்கும்.

நெருப்புக் கோழியைப் போன்ற நீண்ட தடித்த கால்களோடு கூடிய பறவை இது. ஆணின் உடம்பின் மேற்பகுதி மணற் பழுப் பான நிறத்தில் சிறு கருங்கோடுகளோடு காணப்படும். உச்சந்தலை கருப்பு நிறம். உடலின் கீழ்ப்பகுதி வெண்மையாக இருக்கும். கீழ் மார்பில் அகன்ற பெரிய கருப்பு வளையம் காணப்படும். பெண் ஆணைவிட உருவில் சிறியது. பெண்ணின் உடம்பின் மேற்பரப்பில்

கருங்கோடுகள் மிகுந்தும் மார்பு, கழுத்துப் பகுதிகளில் வெண்மை நிறம் தூய்மையற்றும் காணப்படும்.

காணப்படும் இடங்கள் : ஒரு காலத்தில் தமிழ் நாட்டில் மிகுதியாகக் காணப்பட்ட இதனை இன்று தென்னிந்தியாவில் மைசூர் மாநிலத்தின் வடபகுதியில் மட்டுமே ஓரளவு காணமுடிகிறது. திருச்சிராப்பள்ளி, நெல்லூர் ஆகிய பகுதிகளில் கூட இப்பொழுது அழியும் நிலையில் உள்ள இப்பறவையினைச் சென்ற நூற்றாண்டில் ஆங்கிலேயர் வேட்டையாடியுள்ளனர். இந்தியாவில் வேட்டைக்காரர்கள் கொடுமையால் வேகமாக அழிந்த பறவைகளுள் இதுவும் ஒன்று. புல் வெளியான வறள் காடுகளில் இது விரும்பி வாழ்கிறது.

பழக்க வழக்கங்கள் : சற்று இடைவெளி விட்டுப் பிரிந்து திரியும் ஆணும் பெண்ணுமாகவோ 5 முதல் 6 வரையான சிறு கூட்டமாகவோ இதனைக் காணலாம். சென்ற நூற்றாண்டில் 25 முதல் 30 வரையான கூட்டமாகத் திரிந்ததும் உண்டு. மனிதர் நடந்து வருவதைக் கண்டால் அஞ்சியோடும் சுபாவம் உடைய இது கட்டை வண்டியிலோ ஒட்டகத்திலோ ஏறி வருபவர்களைக் கண்டு அஞ்சாமல் நிற்கும் விசித்திர சுபாவம் உடையது. ஜீப் முதலியன நவீன வாகனங்களின் ஆரவாரம் கேட்டாலும் அஞ்சி ஓடாது நிற்கும் இதன் மடமை அதன் அழிவிற்கே காரணமாயிற்று எனலாம். வேகமாக ஓடக் கூடிய ஆற்றலுடையதேனும் தப்பிப் பறக்கவோ ஓடவோ முடியாமல் புதர்களின் மறைவில் மறைந்து நின்று வேட்டைக்காரர்களிடமிருந்து தப்பப் பார்க்கும் முட்டாள்தனம் மிகுந்தது. சில அடி தூரம் தரையில் ஓடிய பிறகே இதனால் எழுந்து பறக்க இயலும். கழுகுகள் பறப்பதைப் போல ஒரே சீராக இறக்கை அடித்துத் தரையை விட்டு மிக அதிக உயரம் மேற் செல்லாமல் பறக்கும்.

தானியங்கள், புழு பூச்சிகள், பழங்கள் முதலியன இதன் உணவு.

யாரோ வருகிறார்கள் என்பதை உணர்த்த 'ஹோக்' எனக் குரல் கொடுக்கும். ஆறலைக் கள்வர் வருகையை வழிப் போக்கர்களுக்கு உணர்த்தும் பறவை இது என இலக்கியம் குறிப்பது இதனால்தான் போலும். இனப்பெருக்கக் காலத்தில் உறுமுவது போல இது எழுப்பும் ஒலி சுமார் 500 மீட்டர் தூரம் வரை கேட்கும் எனக் குறித்துள்ளனர்.

இனப்பெருக்கம்: காலம்: மார்ச் முதல் செப்டம்பர் வரை. கூடு: தரையில் குழியில் புல் புதர்களின் ஓரமாகப் புல்லால் மெத்தெனச் செய்து முட்டையிடும். முட்டை: 1 மட்டும் ஆலிவ் நிறப் பழுப்பின்மேல் ஆழ்ந்த பழுப்புக் கறைகள் கொண்டதாக இருக்கும்.

ஒரு ஆண் 3 முதல் 5 வரையான பெண்களைத் துணையாகக் கொள்ளும்.

100. வரகுக் கோழி

357. Leekh or Lesser Florican

Sypheotides indica (J. F. Miller)

தோற்றம்: வீட்டுக் கோழி அளவு இருக்கும்; ஆண் 46 செ மீ. நீளமும் பெண் 51 செ. மீ. நீளமும் இருக்கும்.

மேல் அலகு கொம்பு நிறமான பழுப்பு; கீழ் அலகு மஞ்சள் கலந்த ஊன் நிறம்; விழிப்படலம் மஞ்சள் அல்லது பழுப்பு; கால்கள் அழுக்கு மஞ்சள்.

ஆண்: இனப்பெருக்கக் காலத்தில் கருப்பும் வெண்மையுமாகத் தலையில் வளர்ந்த கருப்புக் கொண்டையோடு காட்சிதரும். குளிர்காலத்தில் ஆண் பெண்ணின் தோற்றத்தை ஒத்திருக்கும்.

பெண்: மணல் நிறம் தோய்ந்த வெளிர் மஞ்சள் நிறமான முதுகில் கருப்புநிற அம்பு வடிவமான சிறு கோடுகளைக் காணலாம். தொண்டையிலும் மார்பிலும் இரு கருங்கோடுகள் காணப்படும் உச்சியும் நெற்றியும் கருப்பாக இருக்கும். ஆணைவிடச் சற்றுப் பருத்துக் காணப்படும்.

காணப்படும் இடங்கள்: மைசூர் மாநிலத்தில் ஓரளவு காணலாம். கேரளா, தமிழ்நாடு ஆகியவற்றில் அபூர்வமாகக் காணலாம். ஒரு காலத்தில் கானல் மயில்கள் போல இதுவும் மிகுந்த அளவில் காணப்பட்டது. புன்செய் விளை நிலங்களில் விரும்பித் திரிந்ததால் வரகுக்கோழி எனப் பெயர் பெற்றது போலும்.

பழக்க வழக்கங்கள்: வேட்டைக்காரருக்கு அகப்படாமல் பறந்து, பின் தரை இறங்கி ஓடும் பெரும்பாலும் தனித்தே திரியும். காலை மாலை நேரங்களில் புல் நிலங்களில் மேய்ந்து வெயில் நேரத்தில் புதர்களில் மறைந்திருக்கும். ஆண்களும் பெண்களும் தனித்தனியே பிரிந்து மேயும் பழக்க முடையவை. பறக்கும்போது

ஒரே சீராக இறக்கை அடித்துப் பறந்தாலும் கழுத்தை மட்டும் நீட்டிக் கால்களை உள்ளிழுத்து உடம்போடு ஒட்ட வைத்துக் கொண்டு பறக்கும் பழக்க முடையது.

இலை, பூ, விதை, தானியங்கள், புழுபூச்சி ஆகியவை இதன் உணவு.

இனப்பெருக்கம்: காலம்: ஜூன் முதல் ஆகஸ்ட் வரை கூடு: தரையில் சிறு குழியில் புதர்களிடையே முட்டையிடும். முட்டை: 2 மட்டும்; ஆலிவ் பச்சையாக ஊதாநிற, பழுப்புநிறப் புள்ளிகளுடன் காட்சிதரும்.

வரிசை : கெராட்ரிஃபார்மிஸ்
Order : Charadriiformes

Family : Jacanidae

தாமரைக் கோழிகள்
(JACANAS)

101. தாமரைக் கோழி

358. Pheasant-Tailed Jacana

Hydrophasianus chirurgus (Scopoli)

தோற்றம் : கருங் கௌதாரியின் அளவு இருக்கும். வாலின்றி 31 செ. மீ. நீளம்.

அலகு ஈயநிறம் முனை பசுமை; விழிப்படலம் ஆழ்ந்த பழுப்பு; கால்கள் நீலங் கலந்த பசுமை.

இனப்பெருக்கக் காலத்தில் : முகமும் முன் கழுத்தும் வெள்ளை நிறம். பின் கழுத்து பொன் நிறமான மஞ்சள்; உடலின் மேற் பகுதியும் கீழ்ப்பகுதியும் சாக்லெட் நிறப் பழுபபு; வால் நீண்டு அரிவாள்போல வளைந்து காணப்படும் கால் விரல்கள் மிக நீண் டவை. ஆணும் பெண்ணும் தோற்றத்தில் ஒன்றுபோல என்றா லும் பெண் உருவில் சற்றுப் பெரியது.

இனப்பெருக்கஞ் செய்யாத காலத்தில் : நீண்ட வால் இருக் காது உடலின் சாக்லெட் பழுப்பு நிறம் மங்கிய பழுப்பு நிறமாகக் காணப்படும். மேல் மார்பில் ஒரு கருப்பு வளையம் காணப்படும்.

காணப்படும் இடங்கள் : தென்னிந்தியா முழுவதும் நீர்வள மிகுந்த பகுதிகளில் தாமரை, அல்லி முதலான நீர்த்தாவரங்கள் மிகுந்துள்ள குளங்கள் ஏரிகளில் காணலாம்.

பழக்க வழக்கங்கள்; மிக நீண்டு வளர்ந்துள்ள கால் விரல்களின் துணையால் கோயில் குளங்களிலும் ஏரிகளிலும் வளர்ந்துள்ள தாமரை, அல்லி ஆகியவற்றின் மிதக்கும் இலைகள் மீது நடந்து சென்று இரை தேடிக் கொண்டிருக்கக் காணலாம். பரந்து பட்ட நீண்ட விரல்கள் இதன் உடல் கனத்தை இலைப் பரப்பு முழுவதும் தாங்கிக் கொள்ளும்படி பகிர்ந்து அளிக்கின்றது. ஒரு இலை மெல்ல இதன் பாரத்தால் நீரில் அமிழுமானால் கழுத்தளவு நீரில் ஆழ்ந்தவுடன் மெல்ல அடுத்த இலைக்குத் தாண்டிச் செல்லும். மற்ற நீர்ப் பறவைகளைப்போல அஞ்சி ஓடாமல் மக்கள்



தாமரைக் கோழி



தாமரைக் கோழியின் விரல்கள்

குளித்துக்கொண்டும் துவைத்துக் கொண்டும் இருக்கும் குளங்களில் கூட இது தைரியமாகத் திரிவதைக் காணலாம். குளிர்காலத்தில் சில குளங்களில் இவை பெருங்கூட்டமாக இருப்பதாலும் காய்ந்த தாமரை இலைகளின் நிறத்தோடு கூட இதன் நிறமும் ஒத்துப்போவதால் நிறையப் பறவைகள் இருப்பதைக் கூர்ந்து கவனிப்பவர்களே கண்டு கொள்ள முடியும் ஆனால் இவை பறக்கத் தொடங்கியவுடன் கருப்பு முனையோடு கூடிய வெள்ளை இறக்கைகள் இவற்றைக் காட்டிக் கொடுத்துவிடும். கால்கள் தொங்கத் தண்ணீரிலிருந்து சுமார் 2 மீட்டர் உயரத்தில் நீர் நிலைகளில் இங்கும் அங்கும் பறக்கும். இவை பறப்பது ஆள்காட்டி பறப்பதை ஓரளவு ஒத்திருக்கும்.

நீர்த்தாவரங்களின் விதைகள், வேர்கள், நீரில் வாழும் புழு பூச்சிகள் இதன் உணவாகும்.

குளிர்காலத்தில் டீவின் டீவின் என்றும் இனப்பெருக்கக் காலத்தில் மீ.. இ.. வு மீ.. இ.. வு என்றும் கத்தும்.

இனப்பெருக்கம் காலம்: ஜூன் முதல் செப்டம்பர்வரை மழை பெய்யத் தொடங்கியவுடன். கூடு: நீர்த்தாவரங்களின் மீது மிதக்கும் படியாகப் புல்லால் அமைத்த மேடையில் முட்டையிடும். சில போது அல்லி, தாமரை இலைகளின் மீதும் முட்டை இடுவதும் உண்டு. முட்டை: 4 மட்டும்; பச்சை கலந்த பழுப்பாகவோ கருஞ்சிவப்பான பழுப்பாகவோ இருக்கும்.

ஆணே அடைகாக்கும். அடை காக்கும் காலம் 26 நாட்கள். பெண் முட்டையிட்டவுடன் அடைகாத்துக் குஞ்சுகளைப் பேணும் பொறுப்பை ஆணிடம் விட்டு விட்டு வேறு ஆண் பறவையின் துணை நாடிச் செல்லும் இயல்புடையது என நம்பப்படுகிறது.

102. கருப்புத் தாமரைக் கோழி

359 Bronzewinged Jacana (359)

Metopidius indicus (Latham)

தோற்றம்: இது கருங் கௌதாரி அளவிருக்கும். ஆண் 28 செ. மீ. நீளமும பெண் 31 செ. மீ நீளமும் இருக்கும்.

அலகு வெளிர் மஞ்சள் நிறம்; விழிப்படலம் ஆழ்ந்த பழுப்பு. கால்கள் பசுமை கலந்த சாம்பல் நிறம்.

முன்னைய தாமரைக் கோழியைப் போலவே நீண்ட கால்களும் நீண்ட விரல்களும் கொண்டது. ஆனால் அதனைப் போன்ற நீண்ட வால் இதற்குக் கிடையாது. உருவம் முக்குளிப்பானைப்போல இருக்கும். தலை, கழுத்து, மார்பு ஆகியன பளபளக்கும் கருப்புநிறம். முதுகும் சிறகுகளும் பச்சை கலந்த வெண்கல நிறம். குறுகலான வாலின் நிறம் செம்பழுப்பு. கண்ணிலிருந்து அகன்ற வெண்மையான புருவக்கோடு கழுத்துவரை செல்லக் காணலாம் பெண் தோற்றத்தில் ஆணை ஒத்தது எனினும் உருவில் சற்றுப் பெரியது.

காணப்படும் இடங்கள்: தென்னிந்தியா முழுவதும் முந்திய தாமரைக் கோழியைப் போலவே நீர்வளமும் நீர்த்தாவரங்களும் மிகுந்த குளங்களிலும் ஏரிகளிலும் காணலாம்.

பழக்க வழக்கங்கள்: இதன் பழக்க வழக்கங்களும் முந்திய தாமரைக்கோழியின் பழக்க வழக்கங்களைப் போன்றதே. நீர்நிலை

களில் இதனை விடாது துரத்தினால் நெல் வயல்களிடையே ஓடித் தப்ப முயலும். நன்றாக நீந்தவும் நீரில் மூழ்கவும் வல்லது. பறக்கும் ஆற்றல் அதிகம் இல்லாதது இது.

இனப்பெருக்கம் : காலம் : ஜூன் மாதத்திற்குப் பின் பருவ மழை தொடங்கிய பின். கூடு : தாமரைக் கோழியைப் போலவே புல்லால் மிதக்கும் மேடையிட்டு முட்டையிடும். முட்டை : 4 மட்டும். பம்பரம் போன்ற உருவம் உடையது. வெண்கலப் பழுப்பு நிற மாகக் குறுக்கு மறுக்குமான கருப்புக் கோடுகளோடு காட்சிதரும். ஆணே அடைகாத்துக் குஞ்சுகளைப் பேணும்.

Family : Haimatopodidae

103. கிளிஞ்சல் கொத்தி

368. Oystercatcher or Sea-Pie

Haematopus ostrolegus ostralegus (Linnaeus)

தோற்றம் : அளவில் கருங் கௌதாரியை ஒத்தது. சுமார் 42 செ. மீ.



கிளிஞ்சல் கொத்தி

இதன் அலகு நீண்டு, நடுப்பகுதி சற்று அமுங்கி ஆரஞ்சு சிவப்பாக இருக்கும்; விழிப்படலம் சிவப்பு; கால்கள் சிவப்புநிறம்.

கருப்பும் வெண்மையுமான மணல் பரந்த கடற்கரையில் காணப்படும் பறவை இது. பறக்கும்போது கருத்த இறக்கைகளில் காணப்படும் வெள்ளைப்பட்டையும் வெண்மையான கீழ் முதுகும் வயிறும் நல்ல கருப்பு நிறமான தலையோடும் மார்போடும் மாறு பட்டுக் காட்சிதரும். ஆணும் பெண்ணும் ஒன்றுபோலத் தோற் றம் தரும்.

காணப்படும் இடங்கள்: குளிர்காலத்தில் நம் நாட்டுக் கடற் கரைக்கு வலசை வரும் பறவை இது. தென்னிந்தியக் கடற்கரை நெடுகக் காணலாம். கிழக்குக் கடற்கரையை விட மேற்குக் கடற் கரையில் அதிக எண்ணிக்கையில் காணப்படுவது. தமிழ் நாட்டில் கோடிக் கரையில் காணலாம்.

பழக்க வழக்கங்கள்; சிறு கூட்டமாகக் கடற்கரை மணலில் திரியும் பிற பறவைகளோடு சேர்ந்து மேயக் காணலாம். அலை ஏற் றத்தின் போது கடற்கரையை அடுத்த பாறைகளிலும் மணல் மேடுகளிலும் கூட்டமாக அமர்ந்திருக்கக் காணலாம்.

கடற்கரையில் காணப்படும் நத்தை, கிளிஞ்சல், மணலில் திரி யும் புழு பூச்சிகள் இதன் உணவு. இதன் அலகு நத்தைகளைக் கொத்தித்தின்ன ஏற்றவகையில் நீண்டு உறுதியாக அமைந்துள் ளது.

உரக்க ஒற்றைக் குரலில் கிளுவைத் தாராவைப் போலக் கத் தும்.

இனப்பெருக்கம்: காலம்: மே முதல் ஜூன்வரை. இந்திய எல்லைக்கு அப்பால் வடக்கே இனப்பெருக்கம் செய்வது.

Family: Charadriidae

உப்புக் கொத்திகள்
(PLOVERS)

உள்ளான்கள்
(SANDPIPERS AND SNIPES)

செப்டம்பர் மாதத் தொடக்கத்தில் தென்னிந்தியாவின் கடற் கரை சார்ந்த மாவட்டங்களிலும், மருதவளம் சார்ந்த பகுதிகளி லும் வாழும் மக்கள் கொஞ்சம் உன்னிப்பாகப் பார்க்கும் இயல் புடையவர்களாக இருந்தால், பறவைகளின் காட்சியில் சில புது

மைகளை நிச்சயம் கண்டு வியந்திருப்பர். கோடைப் பருவம் முழுதும் அவர்கள் கண்ணில்படாத உப்புக் கொத்திகளும் உள்ளான்களும் இப்படிக் கார்காலத் தொடக்கத்தில் திடீரென அவர்கள் கண்களில் கூட்டமாகப் படும்போது அவர்கள் வியப்படையாமல் இருக்க முடியுமா? கோடையின் வெப்பத்தைத் தாங்க முடியாமல் செல்வர்களைப்போல இந்தப் பறவைகளும் குளிர்கால வாசஸ்தலங்களுக்குச் சென்று திரும்பியிருக்கின்றனவோ என்று கூட அவர்கள் எண்ணக்கூடும். அந்த எண்ணத்திலும் கொஞ்சம் உண்மை இருக்கத்தான் செய்கின்றது.

உப்புக் கொத்திகள் (Plovers), உள்ளான்கள் (Sandpipers and Snipes) ஆகியவை தங்கள் பிறப்பிடமாகிய வடமண்டலப் பகுதிகளில் குளிர்காலம் தொடங்குவதால் வெப்ப மண்டலப் பகுதிகளை நோக்கி வலசை வந்துள்ளன என்பதே முழு உண்மை. குளிர்காலத் தொடக்கத்தில் வலசை வரும் இப்பறவைகளில் சில இமயமலைப் பகுதிகளிலிருந்தும், திபேத் பீடபூமியிலிருந்தும் பாமீர் மலைப் பகுதிகளிலிருந்தும் வருபவை. சில மத்திய ஆசியாவிலிருந்து வருகின்றன. சில சைபீரியா, வடதுருவ மண்டலப்பகுதி, வடக்கு ஐரோப்பா முதலான பகுதிகளிலிருந்து நெடுந்தூரப் பயணம் வருபவை. 5000 கிலோ மீட்டருக்கு மேற்பட்ட இந்த தூரத்தை சில நான்கு நாட்களுக்குக் கடந்து வந்துள்ளன என்பதற்கு ஆதாரம் உண்டு. சில மிக உயரப் பறந்து நேரே எவரெஸ்ட் சிகரத்தைக் கடந்து இமயமலையைத் தாண்டி வருகின்றன. சில கணவாய்ப் பகுதிகள் வழியாகவும், சில கடற்கரை ஓரமாகவேயும் வரும் பழக்கம் உடையவை. பெரும்பாலான பறவைகள், சிந்து, கட்சு, குஜராத் போன்ற பகுதிகளில் முதலில் நுழைந்து பின், தென்னிந்தியா முழுவதும் பரவுகின்றன. சில பஞ்சாப், ராஜஸ்தான் போன்ற உள்நாட்டு மாநிலங்கள் வழியாக இந்தியாவில் நுழைந்து கன்னியாகுமரிவரை பரந்து பட்ட அளவில் பிரிந்து செல்கின்றன. செப்டம்பரில் வரும்போது கூட்டமாக வந்து பிரியும் இவை ஏப்ரலில் திரும்புமுன் பெரும் கூட்டமாகத் திரண்டே வடக்கு நோக்கிச் செல்கின்றன. 1971 ஏப்ரலில் 2000 க்கும் மேற்பட்ட பறவைகள் அதுபோலத் திரண்டு ஒரு மாலை நேரத்தில் சுற்றிச் சுற்றி வட்டமிட்டுப் பறப்பதை இராமநாதபுரத்தில் கண்டேன்.

இவ்வாறு வலசை வந்து திரும்பும் உப்புக் கொத்திகளும் உள்ளான்களும் அளவில் காடை, கௌதாரியைவிடச் சிறியனவே. சேற்றிலும் மணலிலும் புதைந்து இரைதேட ஏற்ற வகையில் இவற்றின் அலகு சிறுத்து நீண்டு அமைந்திருக்கக் காணலாம். பலவகை உள்ளினங்களைச் சார்ந்த உள்ளான்களையும் உப்புக் கொத்திகளையும் இயற்கைச் சூழலில் வேறுபடுத்தி அறிவது கடி

ணம். பலவகை உள்ளின உப்புக் கொத்திகளும் உள்ளான்களும் ஒன்ருக மேயும்போது மனிதர்கள் நெருங்கினுல் எழுந்து பறந்து விடும் இயல்புடையவை. ஆகவே தூர இருந்து பைனுகுலர் மூல மாக ஓரளவு இவற்றைக் கவனித்து வேறுபாடு அறியலாம். கடற் கரைப் பகுதிகளில் காற்று வேகமாக வீசுவதாலும், மிகுந்த வெளிச் சம் (Glare) இருப்பதாலும் அவ்வாறு பார்த்து அடையாளம் காண் பது கூடக் கடினமானதே.

இனப்பெருக்கக் காலமாகிய கோடை காலத்திற்குரிய அழகிய வண்ண நிறங்களை இழந்து, சாதாரண வெண்மையும், பழுப்பு மான தோற்றத்தோடுதான் இவை இங்கு வருகின்றன. உடலின் மேற்பகுதி பெரும்பாலும் பழுப்பாகவோ, ஆழ்ந்த பழுப்பாகவோ சாம்பல் நிறமாகவோ தோற்றம்தரும். உடலின் கீழ்ப்பகுதி இவை களுக்குப் பெரும்பாலும் வெண்மை நிறமே வாலின் நிற, உருவ வேறுபாடுகள் காலின் நிறம் ஆகியவற்றைக் கொண்டுதான் இவற்றின் உள்ளின வேறுபாடுகளைப் பிரித்துணர்ந்து அடையா ளம் கண்டுகொள்ள முடியும். கருப்பு வால் மூக்கான், விசிறிவால் உள்ளான், கூரிய முனை வால் உள்ளான், பட்டை வால் உள் ளான், பவளக்காலி, பச்சைக்காலி போன்ற இவற்றின் பெயர்களே இந்த உண்மையை விளக்கப் போதுமானவை.

மேய்ந்து கொண்டிருக்கும் இவை பறக்க எழும்போது கத்திய படி எழும் பழக்கமுடையவை. ஓரளவு ஒத்தக் குரலுடையவை என் ருலும் நுட்பமாகக் கேட்கும்போது வேறுபாடு உணரலாம். இவற் றின் குரலோசை பெரும்பாலான இடங்களில் இயன்ற அளவு தமிழ் ஒலிக்கேற்ப மாற்றித் தரப்பட்டுள்ளது. இவை பறக்கும்போது குர லொலியோடு கூட இறக்கைகளிலும் வாலிலும் காணப்படும் நிறங் களைக் கொண்டும் பட்டைகளைக் கொண்டும் ஓரளவு இவற்றை அடையாளங் காணலாம். பறக்கும் முறையும் அடையாளம் கண்டு கொள்ளத் துணை செய்யும். கூட்டமாகச் சுற்றி வளைத்துப் புருக் கூட்டம் போல எழுந்து திரும்பித் திருப்பிப் பறக்கும் பழக்கமுடை யவை இவை. இப்படி நேராகப் பறக்காமல் அடிக்கடி திசை திரும் பித் திரும்பிப் பறக்கும் இவற்றை வேட்டைக்காரர்கள் சுட்டு வீழ்த்துவதைப் பெருமையாகக் கருதுவர். கூட்டமாக மேயும் இவை எழுந்து பறக்கும்போது சொல்லிவைத்தாற்போல எல்லாம் ஒருசேர எழுந்து பறப்பது வியப்புக்குரியது.

தமிழ்நாட்டில் குளிர்காலத்தில் கோடிக்கரையில் இந்தக் குடும் பத்தைச் சேர்ந்த பறவைகளுள் பெரும்பாலானவற்றைத் தப்பாது காணலாம். தென்னிந்தியாவில் வேறு எங்கும் காணமுடியாத உள்ளினங்கள் சிலவற்றையும் இங்கு காணலாம். நண்டு - தின்னும்

உப்புக்கொத்தி, கோணமூக்கு உள்ளான் ஆகியவை இவைகளில் குறிப்பிடத் தக்கவை.

இவை வலசை வருவது பற்றி வடநாட்டினர் முறையாகக் குறிப்பு வைத்துள்ளனர். சென்ற நூற்றாண்டில் தென்னிந்தியாவில் வாழ்ந்த ஆர்வங்கொண்ட ஆங்கிலேயர் விட்டுச் சென்ற குறிப்புகள் தவிர வேறு குறிப்புக்கள் தென்னாட்டில் இவை வலசை வருவது பற்றி இல்லாதது. பெருங்குறை இவை ஆகஸ்ட், செம்டம்பரில் முதன் முதல் காணப்படும் தேதி, ஏப்ரல், மேயில் கடைசியாகக் காணப்பட்ட தேதி ஆகியவற்றைப் பற்றித் தொடர்ந்து சில ஆண்டுகள் ஆர்வமுடைய பலர் குறிப்பு வைப்பது இன்றியமையாதது—மேல் தொடரப்படவேண்டிய ஆய்வுகளுக்கு,

இக் குடும்பத்தைச் சேர்ந்த பறவைகள் காணப்படும் இடங்கள் தென்னிந்தியா முழுதும் எனக் கொடுக்கப்பட்டிருந்தாலும் நான் என்னுடைய சென்ற பத்தாண்டு காலப் பறவைகள் பார்க்கும் அநுபவத்தில் இவற்றை எங்கும் மிகுந்த அளவில் காணவில்லை. கொள்ளிடக்கரை, அணைக்கரை, கோடிக்கரை ஆகிய பகுதிகளிலும் இராமநாதபுரம் மாவட்டத்திலும் ஓரளவு இவற்றைக் காணலாம். சேலம், கோயமுத்தூர் போன்ற உள்நாட்டு மாவட்டங்களில் இவற்றைக் காண்பது முடியாத ஒன்றே.

இப் பறவைகளைப் பற்றிய தோற்ற விளக்கம் குளிர்காலத்தில் இவை இங்கு வரும்போது காணப்படும் தோற்ற விளக்கமே. கோடைகாலத் தோற்றம் இடச்சுருக்கம் கருதியும் தேவை இல்லாதது கருதியும் தரப்படவில்லை. இவை இங்கு 'ஒன்று இரண்டு உள்ளினம்) தவிர இனப்பெருக்கம் செய்வதில்லையாகையால் அந்த விபரமும் மிகச் சுருக்கமாகத் தொகுத்தே தரப்பட்டுள்ளது.

Sub-family Charadriinae

உப்புக் கொத்திகள்
(PLOVERS)

104. சிவப்பு மூக்கு ஆள்காட்டி

366. Red Wattled Lapwing

Vanellus indicus indicus (Boddaert)

தோற்றம் : கருங் கௌதாரி அளவுள்ள இது சுமார் 33 செ. மீ. நீளமிருக்கும்.

அலகு சிவப்பாக முனை மட்டும் கருப்பாகக் காணப்படும்; விழிப்படலம் செம்பழுப்பாக இருக்கும்; கால்கள் மஞ்சள் நிறம்.



சிவப்பு மூக்கு ஆள்காட்டி

இதன் உடலின் மேற்பாகம் வெண்கலப் பழுப்பாக இருக்கும்; மார்பும் தலையும் கழுத்தும் கருட்பு நிறம்; வயிறு வெண்மையாக இருக்கும்; சிவந்த சிறு முனைகள் இரண்டு கண்ணுக்கு மேல் கொம்புபோல நீட்டிக்கொண்டிருக்கக் காணலாம். பெரிய வெண்மை நிறப் பட்டை கண்ணுக்குப் பின்னேயிருந்து தொடங்கிக் கீழ் நோக்கிச் சென்று வயிற்றின் வெண்மையோடு கலக்கும். ஆணும் பெண்ணும் ஒன்று போன்ற தோற்றம் உடையவை.

காணப்படும் இடங்கள்: தென்னிந்தியா முழுதும் மலைகளில் 1800 மீட்டர் உயரம் வரை காணலாம். நீர்வளம் மிகுந்த இடங்களில் ஏரிகள், குளங்கள், ஆறுகள் இவற்றை அடுத்துக் காணலாம். மழைக்காலங்களில் நெடுஞ்சாலைகளின் ஓரங்களிலும் புல்வெளிகளிலும் அதிக எண்ணிக்கையில் காணலாம். தென்னிந்தியாவில் மேற்பகுதியைவிட கிழக்குப் பகுதியில் அதிக எண்ணிக்கையில் காணலாம்.

பழக்க வழக்கங்கள்: பெரும்பாலும் ஆணும் பெண்ணும் சேர்ந்த இணையாகவோ மூன்று முதல் ஆறு வரையான சிறு கூட்டமாகவோ காணலாம். திறந்த நீர்வளம் மிக்க புல் நிலங்களிலும் புல்வளர்ந்த கரையோடு கூடிய காட்டாற்றின் கரைகளிலும் நீர்க்குட்டைகளின் அருகிலும் காணலாம். வேட்டைக்காரர்களின் வருகையை மற்ற விலங்குகளுக்கும் பறவைகளுக்கும் உரக்கக் கிறீச்சிட்டுக் கத்திக் காட்டிக் கொடுக்கும் பழக்கம் இதற்கு இருப்பதாலேயே ஆள்காட்டி எனப் பெயர் வந்தது. பெரும்பாலும் காலை மாலை அந்திகளில் சுறுசுறுப்பாக சுற்றும் இது பகலில் ஆற்றங்கரைகளிலோ வயற்கரைகளிலோ சோர்ந்தது போல நின்று கொண்டிருப்பதைக் காணலாம். இறக்கைகளை வேகமாக அடித்து மெல்லவே பறக்கும். கூடுகளை நாடிவரும் திருட்டுப் பறவைகளைத் துரத்தும் ஆற்றல் வாய்ந்தது. பருந்துகள் இதனைத் துரத்தும்போது இது அப்படியும் இப்படியுமாகத் திரும்பியும், சுழித்துப் பறந்து தப்பிவிடும்.

வண்டுகள், கம்பளிப் பூச்சிகள், பிற பூச்சிகள், நத்தை எலும்பு முதலியன இதன் உணவு.

Did you do it?, — Pity to do it எனக் கூறுவது போல கத்தும் ஒலி கேட்கும். பறக்கும் போது டிட், டிட் டிட்' எனவும் காப், காப், காப் எனவும் குரல் கொடுக்கும்.

இனப்பெருக்கம்: காலம்: மார்ச் முதல் செப்டம்பர் முடிய; கூடு: தரையில் குழிவான பகுதியில் காய்ந்து உலர்ந்த ஆட்டுப் புழுக்கை, காயந்த சாணம், சேற்றுருண்டை ஆகியவற்றினைக் கொண்டு விளிம்பு அமைத்து முட்டையிடும். முட்டை: 4 மட்டும். சாம்பல் பழுப்பு நிறம் முதலிய பல நிறங்களில் கருப்புக் கறையோ காணப்படும்; அடைகாக்கும் சமயத்தில் ஆணும் பெண்ணும் அடிக்கடி மார்பை நீரில் நனைத்து ஈரமாக்கிக் கொள்ளும் பழக்கம் இதற்கு உண்டு. இதன் முட்டை அது இடப்படும் நிலத்தின் சூழலை ஒட்டிய நிறம் பெற்று விளங்குவது குறிப்பிடத் தக்கது. பார்க்க' மஞ்சள் மூக்கு ஆள்காட்டி.

105. மஞ்சள் மூக்கு ஆள்காட்டி

370. Yellow-Wattled Lapwing

Vanellas malabaricus (Boddaert)

தோற்றம்: கருங் கௌதாரியைவிட அளவில் சிறியது; சுமார் 27 செ. மீ. நீளமிருக்கும்.

அலகு கருப்பு நிறம்; விழிப்படலம் வெளிர் மஞ்சள்; கண்ணின் மேல் நீட்டியிருக்கும் தோலி நல்ல மஞ்சள்; கால்கள் மஞ்சளாக மூட்டுக்களில் பசுமை தோய்ந்திருக்கும்.

நீண்ட கால்களோடு கூடிய இதனை மணல் பழுப்பு நிறமான உடலின் மேற்பகுதியும், வெள்ளை வயிறும், கருப்புத் தலையும், கண்ணுக்குமேல் துருத்தியபடி இருக்கும் மஞ்சள் தோலும் கொண்டு எளிதில் அடையாளங் கண்டு கொள்ளலாம். தலை உச்சியின் கருப்புக்கு எல்லை கட்டியது போலச் சிறிது வெள்ளைக் கோடு செல்லும்; மார்பு மணல் பழுப்பாக இருக்கும். வால் வெண்மையாக நுனியில் பெரிய கருப்புப் பட்டை பெற்றிருக்கும். ஒரு கறுப்புக் கோடு மார்பின் நடுவில் குறுக்கே செல்லக் காணலாம். பறக்கும் போது கருப்பு நிறமான இறக்கைகளில் வெள்ளைப் பட்டை தெளிவாகப் புலனாகும்.

காணப்படும் இடங்கள் : தென்னிந்தியா முழுதும் காணலாம். சிவப்பு மூக்கு ஆள்காட்டி சற்று நீர்வளமிக்க பகுதிகளில் காணப் படும் என்றால் இது வறண்ட பகுதிகளிலும், பாறைகள் நிறைந்த காடுகளிலும் அதிக அளவில் காணப்படுகிறது.

பழக்க வழக்கங்கள் : முன்னைய சிவப்பு மூக்கு ஆள்காட்டியின் பழக்க வழக்கங்கள் போன்றவை இதன் பழக்க வழக்கங்களும். பெரும்பாலும் இணையாகவே காணப்படும். சிவப்பு மூக்கு ஆள் காட்டியைப் போல அதிக ஆரவாரம் செய்யாது.

பூச்சிகள், வெட்டுக்கிளிகள், வண்டுகள் முதலியன இதன் உணவு.

இனப்பெருக்கம் : காலம்: மார்ச் முதல் ஜூலை வரை ; கூடு: எத்தகைய துணைப் பொருள்களும் இன்றி உழுத நிலத்தில் முட்டை யிடும். முட்டை : 4 மட்டும். இது முட்டையிடும் மண்ணின் நிறத் தில் முட்டையிடும் உயிரியல்பூக்க வளர்ச்சி பெற்ற பறவை. கரிசல் மண் நிறத்தில் வாழும் பறவைகள் கருப்பு நிறங் கலந்ததாகவும், செம்மண் நிறத்தில் வாழும் பறவைகள் சிவப்பாகவும் தோற்றம் தரும் முட்டைகளை இடுகின்றது. கூடு கட்டாது கட்டாந்தரையில் முட்டையிடும் இது, பகைவர்களிடமிருந்து முட்டையைக் காக்க இந்த நிறவேறுபாட்டைத் தோற்றுவிக்கும் ஆற்றலான உயி ரியல்பு ஆக்கம் பெற்றுள்ளது உயிரியல் உலக வியப்புக்களுள் ஒன்றாகும்.

106. சாம்பல் உப்புக் கொத்தி

371. Blackbellied or Grey Plover

Pluviolis squatarola (Linnaeus)

தோற்றம் : கௌதாரி அளவுடையது இது சுமார் 31 செ. மீ. நீளமிருக்கும்.

அலகு கருப்பு நிறம் ; விழிப்படலம் மங்கிய பழுப்பு ; கால்கள் கருஞ்சாம்பல் நிறம்.

குளிர் காலத்தில் நம் நாட்டுக்கு வரும்போது இதன் தோற்றம்: நெற்றி கரும்புள்ளிகளோடு கூடிய வெண்மை நிறம் ; தலையின் பக்கங்களும் கழுத்தும் பழுப்பு நிறக் கோடுகளோடு கூடிய வெண் மை நிறம் ; பின் முதுகு, வாலடி இறகுகள், வால் ஆகியன வெண்மையாக பழுப்புக் குறுக்குப் பட்டைகளோடு காணப்படும் ; மற்ற உடலின் மேல் பகுதிகள் ஆழ்ந்த பழுப்பாக வெளிர் பழுப்புச்

சாம்பல் நிறக் கோடுகளுடன் காணப்படும். மார்பும் பக்கங்களும் பழுப்புக் கோடுகளோடும் பழுப்புப் புள்ளிகளோடும் காணப்படும்; வயிறும் வாலடியும் தூய வெண்மையாக இருக்கும்.

காணப்படும் இடங்கள்: குளிர்காலத்தில் தென்னிந்தியாவின் மேற்கு, கிழக்குக் கடற்கரைகளில் காணலாம்; உப்பங்கழிகள், மணல் வெளிகள் ஆகியவற்றில் காணலாம். ஒன்றிரண்டு உள் நாட்டு நீர் நிலைகளுக்கும் வருதல் உண்டு. ஆகஸ்டு மாதத்தில் வரத்தொடங்கி ஏப்ரலில் இந்தியாவை விட்டுச் சென்று விடுகின்றன. இனப்பெருக்கம் செய்யாத சில பறவைகள் குளிர் காலத் தோற்றத்தோடு (in winter plumage) கோடை காலம் முழுதும் இங்கே தங்கித் திரிவதும் உண்டு.

பழக்க வழக்கங்கள்: 20 முதல் 30 வரையான கூட்டமாகக் கடற்கரைகளில் பிற கடல் பறவைகளோடு கலந்து மேய்ந்து திரியக் காணலாம். தாவித் தாவி ஓடி உடலை முன்னே சாய்த்து இரையை எடுத்துத் தின்பது பார்க்க வேடிக்கையாக இருக்கும். மனிதர்கள் நெருங்கி வருவதை இது விரும்புவதில்லை. எழுந்து பறந்து செல்லும்போது நேர் கோட்டில் பறக்காது. அப்படியும் இப்படியுமாகத் திரும்பித் திரும்பிப் பறக்கும். இதன் சுவையான மாமிசத்திற்காக வேட்டைக்காரர்கள் இதனை விரும்பி வேட்டையாடுவர்.

புழு, பூச்சி, நத்தை, நண்டு முதலிய கடற்கரையில் காணப்படும் உயிரினங்கள் இதன் முக்கிய உணவு.

பறக்கும்போது கல் பொறுக்கி உள்ளானைப் போலக் கத்தியபடி பறக்கும்.

இனப்பெருக்கம்: வடக்கு, கிழக்கு ஐரோப்பா, வடக்கு ஆசியா ஆகிய பகுதிகளில் ஜூன் ஜூலை மாதங்களில் இனப்பெருக்கம் செய்கிறது. நான்கு முட்டைகள் இடும்

107. கல் பொருக்கி உப்புக்கொத்தி

373. Eastern Golden Plover

Fluvialis dominica fulva (*Gmelin*)

தோற்றம்: கொளதாரியைவிட அளவில் சிறியது. சுமார் 24 செ. மீ. நீளமிருக்கும்.

அலகு கருப்பு நிறம், விழிப்படலம் பழுப்பு, கால்கள் சிலேட் சாம்பல் நிறம்.

குளிர் காலத்தில் வலசை வரும்போது: உடலின் மேற்பகுதி பழுப்பு, வெண்மை, பொன் நிறம் ஆகிய மூன்று வண்ணங்கள் கலந்த தோற்றம். மார்பு பழுப்பும், சாம்பல் தோய்ந்த மஞ்சளும் கலந்த நிறம். கீழ் மார்பு, வயிறு, வாலடி ஆகியன வெண்மையாக இருக்கும். இறக்கை விரித்துப் பறக்கும்போது இறக்கை முனைகள் குவிந்து கூர்மையாகக் காட்சித் தரும். சாம்பல் உப்புக் கொத்திக்கு இறக்கையில் இருப்பது போன்ற வெள்ளைப் பட்டை இதற்குக் கிடையாது.

காணப்படும் இடங்கள்: தென்னிந்தியா முழுதும் குளிர் காலத்தில் காணலாம். ஏரிகளின் சேற்றுத் திட்டுகளிலும், வெள்ளம் வடித்த வயல்களிலும், ஈரமுள்ள மேய்ச்சல் நிலங்களிலும் கடற்கரையை அடுத்து சேற்று நிலங்களிலும் காணலாம். செப்டம்பர் முதல் மே வரை வலசை வருபவை தங்கி இருக்கும். எங்கும் தங்காமல் நெடுந்தூரம் பறக்கும் ஆற்றல் வாய்ந்தவை. 3200 கி. மீ. தூரத்தை 35 மணி நேரத்தில் கடந்ததற்கான சான்று வளையம் பூட்டிய பறவைகள் பிடிபட்டதிலிருந்து கிடைத்துள்ளது. சில பறவைகள் கோடையிலும் இங்கே தங்குவது உண்டு.

பழக்க வழக்கங்கள்: 20 முதல் 50 வரையான கூட்டமாக மற்ற இன உப்புக் கொத்திகள், உள்ளான்கள் ஆகியவற்ளேடு சேர்ந்து கலந்து மேய்ந்து கொண்டிருக்கக் காணலாம். சில சமயங்களில் கிழக்குக் கடற்கரை சார்ந்த பகுதிகளில் நூற்றுக்கணக்கான பறவைகள் கூடுவதும் உண்டு. எப்பொழுதும் மனிதர்கள் நெருங்கி வருகிறார்களா எனக் கவனித்தபடியே மேயும் இதனை நெருங்கிக் காண முடியாது. பெருங் கூட்டமாக மேயும்போது சில பறவைகள் இரை தேடாமல் காவலர்களைப் போல நாலாப் புறமும் நோட்டம் விட்டபடி இருக்கும். ஆட்கள் நெருங்கி வருவதைக் கண்டு அவை ஆபத்துக் குரல் கொடுக்க உடனே எல்லாப் பறவைகளும் சொல்லி வைத்தாற்போல ஒரு சேர எழுந்து தரையோடு ஒட்டியது போலத் தாவிப் பறக்கும் காட்சி அழகாக இருக்கும். சற்று தூரம் பறந்து திடீரென எல்லாப் பறவைகளும் இறக்கையை மடக்கிக் கொண்டு ஒரே சமயத்தில் மீண்டும் தரையில் அமரும். தரையில் மேயும் போது கவனமாக இருக்கும். இவை பறக்கும்போது அவ்வளவு கவனமாக இருப்பதில்லை. துப்பாக்கியோடு நிற்கும் வேட்டைக்காரர்களின் தலைக்கு மேலேயே பறந்து சென்று ஆபத்தையும் அழிவையும், தேடிக்கொள்பவை. இதன் இறைச்சி சுவையானது.

வெட்டுக்கிளி, வண்டு, புழு பூச்சி, சிறு நத்தை, முதலியவை இதன் உணவு.

ட்யுஇஇ......ட்டீ ட்இயு என ஆழ்ந்த குரலில் கத்தும்.

இனப்பெருக்கம்: கோடைக் காலத்தில் சைபீரியா சார்ந்த பகுதிகளில் இனப்பெருக்கம் செய்கின்றது.

108. மணல் உப்புக் கொத்தி
374. Large Sand Plover
Charadrius leschenaultii [Lesson)

தோற்றம்: கௌதாரியைவிட அளவில் சிறியது. சுமார் 22 செ. மீ. நீளமிருக்கும்.

அலகு கருப்பு நிறம்; விழிப்படலம் பழுப்பு; கால்கள் கரும் பச்சை நிறமுடையது.

குளிர் காலத்தில் வலசை வரும்போது: நெற்றியும் கண்ணின் மேற்பகுதியும் சிவந்த மஞ்சள் தோய்ந்த வெண்மை நிறம். அலகடி யிலிருந்து கண்ணின் கீழ்ப் பகுதி வழியாக காதுவரை அகன்ற பழுப்பு நிறக்கோடு செல்லக் காணலாம். உடலின் மேற்பகுதி சாம்பற் பழுப்பு நிறம். மார்பும் வயிறும் வெண்மை நிறம். மார் பில் தெளிவற்ற பழுப்பு நிற வளையம் மிக மங்கலாகத் தெரியும்.

காணப்படும் இடங்கள்: குளிர் காலத்தில் வலசைவரும் இவை ஆகஸ்ட் முதல் ஏப்ரல் வரை தென்னிந்தியா முழுதும் ஆங்காங்கே காணப்படும். கேரளா, மைசூர் மாநிலங்களைச் சேர்ந்த மேற்குக் கடற்கரைப் பகுதிகளில் மிகுதியாகவும், தமிழ்நாடு, ஆந்திரா மாநிலங்களைச் சேர்ந்த கிழக்குக் கடற்கரைப் பகுதிகளில் ஆங் காங்கே ஓரளவு காணலாம்.

பழக்க வழக்கங்கள்: கடற்கரைகளில் கூட்டமாகக் காணப் படும் இவற்றின் பழக்க வழக்கங்கள் பிற உப்புக் கொத்திகளின் பழக்க வழக்கங்களைப் போன்றதே.

இனப்பெருக்கம்: கோடைக்காலத்தில் இந்தியாவிற்கு வடக்கே.

109. சின்னப் பட்டாணி உப்புக் கொத்தி
380. Indian Little Ringed Plover
Charadrias dubius jerdoni (Legge)

தோற்றம்: காடை அளவு இருக்கும் இது சுமார் 17 செ. மீ. நீளம் இருக்கும்.

அலகு கருப்பு நிறம் ; விழிப்படலம் ஆழ்ந்த பழுப்பு ; கால்கள் ஆழ்ந்த பசுமை கலந்த மஞ்சள் நிறம். விரல்கள் கருஞ்சாம்பல் நிறம். கண்ணைச் சுற்றித் தடித்த மஞ்சள் வளையம் இருக்கக் காண லாம்.



சின்னப் பட்டாணி
உப்புக் கொத்தி

இதன் அலகு புருவின் அலகைப்போலச் சிறியதாக இருக்கும் நெற்றி வெண்மையாகவும் முன் தலை கருப்பாகவும் இருக்கும். பின் தலைக்கும் முன் தலைக்கும் இடையே ஒரு மணல் பழுப்பான சிறு வெண்கோடு செல்லக் காணலாம். அலகிலிருந்து தொடங்கும் கருப்பு வளையம் மஞ்சள் நிறக் கண்களைச் சுற்றிச் செல்லும். வெள்ளையும் கருப்புமாக ஒன்றை அடுத்து ஒன்றாக இரு வளையங்கள் கழுத்தைச் சுற்றிச் செல்வதைக் காணலாம். பட்டாணிக் குருவியைப் (Grey Tit) போன்ற இத்தகைய தலை அலங்காரமே இதற்குப் பட்டாணி உப்புக்கொத்தி என்ற பெயரமையக் காரணம்.

உடலின் மேற்பகுதி மணல் பழுப்பு நிறமாக இருக்கும். மோவாய், தொண்டை, முன் மார்பு ஆகியன வெள்ளை நிறம். கழுத்தின் கருப்பு வளையம் அகன்று மார்பில் பெரிய கருப்புப் பட்டையாக இடம் பெற்றிருக்கும் கீழ்மார்பும் வயிறும் வாலடியும் வெண்மை நிறம்.

பறக்கும்போது இறக்கைகளில் வெள்ளைப் பட்டையில்லாதிருப்பதும் கால்கள் மஞ்சளாக இருப்பதும் கொண்டு இதனைச் சின்ன உப்புக் கொத்தியிலிருந்து பிரித்து அறியலாம்.

ஆணும் பெண்ணும் ஒன்று போன்ற தோற்றம் கொண்டவை.

காணப்படும் இடங்கள் : தென்னிந்தியா முழுதும் நீர்வள நிலைமைக்கேற்ப ஆண்டு முழுதும் காணலாம். ஆற்றங்கரைகள், காட்டாறுகள், ஏரிகள் ஈரம் செறிந்த மேய்ச்சல் நிலங்கள், கடற்கரைப் படுகைகள், உப்பங்கழிகள் ஆகியவற்றைச் சார்ந்து திரியக் காணலாம்.

பழக்க வழக்கங்கள் : 6 முதல் 12 வரையான சிறு கூட்டமாகத் தலையை மார்புக்குள் இழுத்து வைத்துக் கொண்டு குறுகுறு எனத் தாவித்தாவி குறுக்கு மறுக்குமாக ஓடி இரை தேடும். தரையிலிருந்து இரையை எடுக்கும்போது உப்புக் கொத்திகளுக்கே உரிய பாணியில் தலை குப்புற விழுவதுபோல முன்புறம் சாயும். ஒரு

காலால் தரையில் அல்லது ஈரமணலில் புதைந்து கிடக்கும் சிறு நத்தை முதலியவற்றை வேகமாகக் கிளறித் தின்னும் இதன் உடலின் தோற்றம் இது மேயும் நிலத்தோடு மிகப் பொருந்திக் காணப்படுவதால் பெருங்கூட்டமாக இது மேய்ந்தாலும் நாம் அருகே நெருங்கும் வரை இதனைக் கண்டு கொள்ள முடியாது. ஆபத்து என உணர்ந்தால் ஒரே சமயத்தில் எல்லாப் பறவைகளும் ஒருசேர எழுந்து தரையோடு ஒட்டியபடி அப்படியும் இப்படியுமாகத் திரும்பித் திரும்பிப் பறந்து மறையும்.

வண்டுகள், புழுக்கள், சிறுநண்டுகள், நத்தைகள் முதலிய நீர்ப்பரப்பைச் சார்ந்த உயிரினங்கள் இதன் உணவு.

பியூ, பீஹிஓ எனப் பறக்கும்போது கத்தும்,

இனப்பெருக்கம்: காலம்: டிசம்பர் முதல் ஜூலை வரை. கூடு: ஆற்றுப் படுகைகளில் சிறு கூழாங்கற்களிடையே சிறு புதர்கள் ஓரத்திலோ வளர்ந்த புல்லின் ஓரத்திலோ தரையில் முட்டையிடும். முட்டை: 4 மட்டும்; பம்பர வடிவில் பசுமை கலந்த சாம்பல், கருஞ்சாம்பல், முதலான பல நிறங்களில் பலநிறக் கறைகளோடும் கோடுகளுடனும் காணப்படும்.

110. சின்ன உப்புக் கொத்தி

382. Ceylon Kentish Plover

Charadrius alexandrinus seebohmi (Harbert and Jackson)

தோற்றம்: காடையைவிட அளவில் சிறியது இது. சுமார் 17 செ. மீ. நீளமிருக்கும்.

அலகு கருப்பு நிறம்; விழிப்படலம் பழுப்பு; கால்கள் கருஞ்சாம்பல் நிறம்.

பெரும்பாலும் சின்னப்பட்டாணி உப்புக் கொத்தியை ஒத்த தோற்றம் கொண்டதே இது. இதனை அதனிலிருந்தும் பிரித்துக் காண்பது அரிது. இதன் கால்கள் கருஞ்சாம்பல் நிறமாக இருப்பது கொண்டும் வால் இறகுகளில் இருபுறமும் மூன்று இறகுகள் வெண்மையாக இருப்பது கொண்டும் வேறுபாடு உணரலாம் பட்டாணி உள்ளானின் வாலில் இரு புறமும் ஓரத்தில் ஒவ்வொரு இறகுதான் வெண்மையாக இருக்கும். இதன் வாலிறகுகளில் நுனிப்பகுதி மட்டும் வெண்மை நிறங்கொண்ட வாலிறகுகள் இல்லை. இதன் கண் வழியாகச் செல்லும் கருப்புப் பட்டை அகலம் குறைந்து நிறங் குன்றிப் பழுப்பாகக் காணப்படும். இனப்பெருக்கக் காலத்தில் கழுத்

தின் வெள்ளை வளையத்தைச் சார்ந்த கருப்பு வளையம் இதற்கு மறைந்துவிடும்.

காணப்படும் இடங்கள்: தென்னிந்தியக் கடற்கரை நெடுகவும், உள் நாட்டு நீர் நிலைகளைச் சார்ந்த படுகைகளிலும் ஆண்டு முழுதும் காணலாம்.

பழக்க வழக்கங்கள்: *சின்னப் பட்டாணி உள்ளானைப் போன்றனவே.*

இனப்பெருக்கம்: காலம்: ஏப்ரல் முதல் ஆகஸ்ட் வரை. கூடு: ஆற்றுப் படுகைகளிலும் கடற்கரை மணலிலும் சற்றுக் குழிவான இடத்தில் முட்டையிடும். சில சமயம் கிளிஞ்சலைக் கொண்டு முட்டையிடும் இடத்தைச் சுற்றி எல்லை கட்டும். முட்டை: சாதாரணமாக 3; சிலபோது 42ம் சிலபோது 42-ம் இடுவது உண்டு. பசுமை கலந்த மணற் பழுப்பு நிறம்; கரும் பழுப்புக் கறைகளும் மெல்லிய கோடுகளும் காணப்படும். ஆணும் பெண்ணும் அடை காத்துக் குஞ்சுகளைப் பேணும். 15-17 நாட்கள் வரை அடைகாக்கும் காலம். ஆணும் பெண்ணும் இறக்கை ஒடிந்தது போலப் பாவனை செய்து முட்டையை நெருங்குபவர்களின் கருத்தைத் (distraction display) தங்கள் பால் ஈர்க்க முயலும்.

111. பாமிர் மணல் உப்புக் கொத்தி

384 Pamirs Lesser Sand Plover

Charadrius mongolus atrifrons (Wagler)

தோற்றம்: காடை அளவுள்ள இது சுமார் 19 செ. மீ. நீளமிருக்கும்.

அலகு கருப்பு நிறம்; விழிப்படலம் பழுப்பாக இருக்கும்; கால்கள் ஆலிவ் நிறந்தோய்ந்த கரும்பலகை நிறம்.

மற்ற உப்புக் கொத்திகளைவிடச் சற்றுப் பருத்த குறுகிய அலகினை உடைய உள்ளான் இது.

குளிர்காலத் தோற்றம்: நெற்றி கருஞ்சிவப்பு. வெண்மையான தலையில் காது வழியாகச் செல்லும் கரும்பட்டை எடுப்பாகத் தெரியும். உடலின் மேற்பாகம் மணற் பழுப்பாக இருக்கும். தொண்டை, மார்பு, வயிறு ஆகியன தூய வெண்மையாக இருக்கும்.

காணப்படும் இடங்கள் : தென்னிந்தியாவில் அபூர்வமாகக் கடற்கரைகளில் குளிர் காலத்தில் காணப்படும் உப்புக் கொத்தி இது. ஆகஸ்ட் தொடக்கத்தில் பாமீர் பீடபூமிப் பகுதியிலிருந்து வலசை வந்து மே மாதத்தில் திரும்பி விடுகிறது இது.

பழக்க வழக்கங்கள் : மற்ற உள்ளான்களோடு சேர்ந்து கடற்கரையில் இரை தேடும். அலை பின்னோக்கிச் சென்றவுடன் ஈர மணல் பரப்பில் குறு குறு என ஓடி இரைதேடும். அலை ஏற்றத்தின் போது உயர்கரையில் கூட்டமாக அமர்ந்து அலை பின்னோக்கிய வுடன் ஈரமணலில் இரை தேடும். ஓய்வாக இருக்கும்போது ஒற்றைக் காலில் நிற்கும் பழக்க முடையது. இரவில் தங்கும் இடத்திற்குச் செல்லும்முன் கடற்கரைப் பரப்பில் பல பறவைகள் பெருங் கூட்டமாகக் கூடும். மற்ற உப்புக் கொத்திகளைப் போலவே ஆபத்து என அறிந்தால் ஒன்றாக எழுந்து பறக்கும்.

இனப்பெருக்கம் : இந்திய எல்லையில் லடாக்கில் மட்டும்.

Sub-Famiiy Scolopacinae

மூக்கான்கள் உள்ளான்கள்

(GODWITS, SANDPIPERS AND SHANKS)

112. குதிரைமலைக் கோட்டான்

385. Whimbrel

Numenius phaeopus phaeopus (Linnaeus)

தோற்றம் : வீட்டுக் கோழி அளவுடையது. சுமார் 43 செ. மீ. நீளமிருக்கும்.

அலகு கரும்பழுப்பு ; கீழ் அலகின் அடிப்பாகம் மட்டும் இளஞ் சிவப்பு ; விழிப்படலம் ஆழ்ந்த பழுப்பு கால்கள் பசுமை தோய்ந்த சாம்பல் நிறமாக இருக்கும்.

பெரிய குதிரைமலைக் கோட்டானை விடச் சிறியது. இதன் அலகு நீண்டு கீழ்நோக்கி வளைந்திருக்கும். நெற்றியும் உச்சந் தலையும் கரும் பழுப்பு நிறம். நடுத்தலையில் நெடுக்க ஒரு வெள்ளைக் கோடு செல்லும். அலகடியிலிருந்து கண்கள் வழியாக வெண்மை நிறக்கோடுகள் காதுகள் வரை செல்லக் காணலாம். உடலின் மேற்பகுதி மணல் பழுப்பாக வெள்ளைக் கறைகளோடு காட்சி தரும் கீழ் முதுகும் பிட்டமும் வெண்மையாக இருக்கும். வால் மேற்

போர்வை இறகுகள் வெளிர் பழுப்பான பட்டைகளுடன் காணப் படும்.வால் சாம்பல் பழுப்பாகக் கருபபுப் பட்டைகளோடு இருக்



குதிரைமலைக் கோட்டான்

கும். மோவாயும், தொண்டையும், வயிறும் நல்ல வெண்மை நிறங் கொண்டவை. முன் கழுத்தும் மார்பும் தெளிவற்ற வெள்ளை நிறத் தில் நீண்ட கருங்கோடுகளுடன் காணப்படும.

காணபபடும் இடங்கள் : குளிர் காலத்தில் தென்னிந்தியாவின் மேற்குக் கடற்கரையில் ஓரளவும் மேற்குத் தொடர்ச்சி மலைப்பகுதி சார்ந்த காடுகளில் இங்கும் அங்குமாகவும் காணலாம். கிழக்குக் கடற்கரையில் கோடிக்கரையில் காணப்பட்ட குறிப்பு உள்ளது. செப்டம்பரில் வலசை வந்து ஏப்ரலில் திரும்பிவிடுகின்றது.

பழக்க வழக்கங்கள் : இதனை 5 முதல் 10 வரையான சிறு கூட்டமாகக் காணலாம். கடற்கரை மணலில் நண்டு வளைகளில் அலகைச் செலுத்தி நண்டுகளைப் பிடிக்கும். அலகால் நண்டின் கையினைப்பற்றி வெளியே இழுத்து ஒரு உலுக்கு உலுக்கும்போது நண்டின் கை முறிந்துவிடும். கை முறிந்து விழும் நண்டு ஓடப் பார்க்கும்போது அலகில் இருக்கும் நண்டின் முறிந்த கையைக் கீழே போட்டு ஓடும் நண்டினைப் (Uca Spp.) பிடித்துத் தின்னும்.

கடல் ஏற்றத்தின்போது கடற்கரை அருகே உள்ள புதர்களின் மேல் அமர்ந்து கடல் இறக்கத்திற்காகக் காத்தபடி இருக்கும். வேட்டைக்காரர்கள் மறைந்திருந்து இதனைப் போலவே குரல் கொடுத்துக் கத்தும்போது கிட்ட நெருங்கி வரும் இதனை எளிதாகச் சுடுவார்கள்.

நண்டுகளும் நத்தைகளுமே இதன் முக்கிய உணவு.

பறக்கும்போது, ட்டீட்டீ, ட்டீட்டீ, ட்டீட்டீ என ஏழெட்டு முறை தொடர்ந்து இனிமையான குரலில் கத்தும். இருளில் கூட இவற்றின் குரல் ஒலி கேட்டு இவை தலைக்குமேல் பறந்து செல்வதைக் கண்டு கொள்ளலாம்.

இனப்பெருக்கம்: வடக்கு ஐரோப்பாவில் மே, ஜுன் மாதங்களில் சதுப்பு நிலங்களில் புல்லால் தரையில் மெத்தெனச் செய்து ஆலிவ் பச்சை நிறமும் பழுப்புப் புள்ளிகளோடும் கூடிய 3 அல்லது 4 முட்டையிடும்.

113. பெரிய குதிரைமலைக் கோட்டான்

388. Eastern Curlew

Numenius arquata orientalis (*L, Brehm*)

தோற்றம்: பெரிய வீட்டுக் கோழி அளவு இருக்கும். சுமார் 58 செ. மீ.



பெரிய குதிரைமலைக் கோட்டான்

அலகு கரும்பழுப்பு நிறம்; விழிப்படலம் பழுப்பு; கால்கள் நீலங் கலந்த சாம்பல் நிறம்;

இதன் அலகும் நீண்டு கீழ் நோக்கி வளைந்திருக்கும். உடலின் மேற்பகுதி மணல் பழுப்பான நிறத்தில் ஒரே சீரான செம்மஞ்சள்

கோடுகளோடு விளங்கும். மார்பும் வயிறும் வெண்மை நிறமாக கருப்புக் கோடுகளோடு காட்சி தரும் பறக்கும் போது வெண்மையான பின் முதுகும் பிட்டமும் தெளிவாகத் தெரியும்.

காணப்படும் இடங்கள் : குளிர் காலத்தில் தென்னிந்தியா முழுதும் கடற்கரைப் படுகைகளிலும் உப்பங்கழிகளை அடுத்தும் காணலாம். செப்டம்பரில் மத்திய ஆசியாவிலிருந்து வலசை வரத் தொடங்கி ஏப்ரலில் திரும்புகின்றன.

பழக்க வழக்கங்கள்: சின்னக் குதிரை மலேக்கோட்டானைப் போல இது கூட்டமாகத் திரிவதில்லே. தனித்தோ இரண்டு மூன்று சேர்ந்த சிறு கூட்டமாகவோ திரியக் காணலாம். மூக்கானேடும் மற்ற உள்ளான்கள் உப்புக் கொத்திகள் ஆகியவற்ருேடும் கலந்து திரியும். சில சமயங்களில் உள்நாட்டு ஏரிப் படுகைகளில் கூடக் காணலாம். ஏப்ரலில் வடக்கே திரும்பும் சமயத்தில் 200க்கு மேற்பட்ட பெருங் கூட்டமாகத் திரளும். உடல் கனம் காரணமாக இதனுல் திடீரென எழுந்து பறக்க முடியாது. சற்று ஓடிய பின்னரே எழுந்து பறக்கும். வேட்டைக்காரர்கள் இதனை வீழ்த்துவதைப் பெருமையாகக் கருதுகின்றனர். இதன் இறைச்சியும் சுவையானதே.

கடல் நத்தைகள் நண்டுகள் முதலியவற்ருேடு புழு பூச்சிகள், பழங்கள் முதலியவற்றையும் தின்னும் பழக்கம் இதற்கு உண்டு.

குளிர் காலத்தில் பறக்கும்போது ஆழ்ந்த குரலில் க்ளோயிட் லூர் லீ போன்ற குரல்களில் கத்தும்.

இனப்பெருக்கம் : மத்திய ஆசியாவில்.

114. கருவால் மூக்கான்

389 Blacktailed Godwit

Limosa limosa limosa (*Linnaeus*)

தோற்றம் : வீட்டுக்கோழி அளவுடைய சின்னக் குதிரை மலேக் கோட்டானை ஒத்த பறவை; ஆண் சுமார் 41 செ. மீ. அளவும் பெண் 50 செ. மீ. அளவு இருக்கும்.

இதன் அலகு குதிரை மலேக் கோட்டானின் அலகு போல் கீழ் நோக்கி வளையாமல். நீண்டு மெலிந்து மங்கிய ஆரஞ்சு நிறமாக இருக்கும்; விழிப்படலம் பழுப்பு; கால்கள் சாம்பல் கலந்த பச்சை நிறம்.

உடலின் மேற்பாகம் மணற் பழுப்பாக இருக்கும். கீழ்ப்பாகம் வெண்மை. பறக்கும்போது இறக்கைகளின் கருப்புநிற விளிம்பில் காணப்படும் வெண்பட்டைகளும் வெள்ளைநிறப் பிட்டமும் அடை



கருவால் மூக்கான்

யாளம் ஆகும். வாலில் அகலமான கரும்பட்டை காணப்படுவது இதன் சிறப்பு அடையாளம். அடுத்த பட்டைவால் மூக்கனோடு மேயும் அதனை நீண்ட கால்களையும் நல்ல உயரத்தையும் கொண்டு பிரித்து அறியலாம்.

காணப்படும் இடங்கள்: குளிர்காலத்தில் தென்னிந்தியா முழுதும் பெரும்பாலும் உள்நாட்டு ஏரிகளையும் ஆற்றங்கரைகளையும் அடுத்து அபூர்வமாகக் காணலாம். கடற்கரையிலும் சிலபோது காணப்படுவது உண்டு. கோடிக்கரையில் காணப்பட்ட குறிப்பு உண்டு. செப்டம்பரில் மேற்கு ஆசியாவிலிருந்து வலசை வரத் தொடங்கி ஏப்ரலில் திரும்புகின்றன.

பழக்க வழக்கங்கள்: வழக்கமாக உப்புக் கொத்திகளோடு சேர்ந்து மேயும் இது அங்குமிங்குமாக ஓடிச் சேற்றில் அலகை முழுவதுமாகச் செலுத்திப் புழுப் பூச்சிகளைப் பிடித்துத் தின்னும். சிலசமயங்களில் ஆழமற்ற நீரில் வயிற்றளவு உடற்பகுதி தண்ணீரில் மறையும்படி இறங்கித் தலையையும் அலகையும் முழுவதுமாக நீருக்குள் விட்டு இரை தேடிக்கொண்டிருப்பதைக் காணலாம். ஓய்வாக அமர்ந்திருக்கும்போது எல்லாப் பறவைகளும் ஒரே திசையைப் பார்த்தபடி கழுத்தைத் தோளுக்குள் இழுத்து வைத்துக் கொண்டிருக்கும். கூட்டமாக வேகமாக இறக்கையடித்துப் பறக்

கும் இவற்றின் இறக்கைகளில் உள்ள வெள்ளைப்பட்டை இவை நெடுந்தூரம் சென்று மறையும் வரை பளிச்சிடக் காணலாம்.

நீர்வாழ் உயிர்களான நத்தைகள், நண்டுகள், புழுபூச்சிகள் ஆகியவை இதன் உணவு.

பறக்கத் தொடங்கும்போது விட், விட், விட், எனச் சிறு குரலில் கத்தும்.

இனப்பெருக்கம்: மேற்கு ஆசியா, ஐரோப்பா முதலிய இடங்களில் மே, ஜூன் மாதங்களில் புல்வெளியில் 4 முட்டையிடும்.

115. பட்டை வால் மூக்கான்

391. Bartailed Godwit

Limosa lapponica lapponica (*Linnaeus*)

தோற்றம்: பெரும்பாலும் முன் கண்ட கருவால் மூக்கானை ஒத்தது. ஆனால் அளவில் சிறியது. ஆண் 36 செ மீ. நீளமும் பெண் 41 செ. மீ. நீளமும் இருக்கும். பறக்கும்போது இதன் இறக்கையில் வெள்ளைப்பட்டை பளிச்சிடாது. வால், கருப்பும் வெள்ளையுமான பட்டையாகமாறி அமைந்திருப்பது (படம் பார்க்க) இதனை வேறுபடுத்தும் அடையாளம்.



பட்டைவால் மூக்கான் கருவால் மூக்கான்

காணப்படும் இடங்கள்: குளிர்காலத்தில் வடக்கு ஆசியா ஐரோப்பா ஆகிய பகுதிகளிலிருந்து வலசை வரும் இதனைத் தென்னிந்தியக் கடற்கரைகளில் சிறு எண்ணிக்கையில் காணலாம். கோடிக்கரையில் குறிப்புண்டு.

பழக்க வழக்கங்கள்: முன்னதைப்போல.

இனப்பெருக்கம்: முன்னதைப்போல.

116. பவளக்காலி

394. Eastern Redshank

Tringa totanus eurhinus (Oberholser)

தோற்றம்: கௌதாரி அளவுள்ள இது சுமார் 28 செ. மீ. நீளம் இருக்கும்.

அலகு கருப்பு நிறம்; கீழ் அலகில் சிறிது சிவப்புத் தோய்ந்திருக்கக் காணலாம். விழிப்படலம் பழுப்பு; கால்கள் ஆரஞ்சு சிவப்பு நிறம்.

குளிர் காலத்தில்: உடலின் மேற்பகுதி சாம்பல் பழுப்பாக இருக்கும். பின் முதுகும் பிட்டமும் வெள்ளை நிறம். வால் வெண்மையாகப் பழுப்பு நிறப் பட்டைகளோடு காட்சிதரும். உடலின் கீழ்ப் பகுதி வெண்மையாக இருக்கும். மார்பில் சிறு சிறு பழுப்பு நிறக் கோடுகள் அழகு செய்யும் பறக்கும்போது வெள்ளை நிறப் பிட்டமும் வெள்ளை நிற வால் முனையும் பின் நீட்டியபடி இருக்கும் சிவந்த கால்களும் அடையாளம் காணத் துணை செய்வன.

காணப்படும் இடங்கள்: ஆகஸ்ட், செப்டம்பர் மாதங்களில் தென்னாட்டுக்குப் பெரும் அளவில் வந்து ஏப்ரல் மே மாதங்களில் திரும்பச் செல்பவை இவை. தென்னிந்தியா முழுதும் உள்நாட்டு நீர்நிலைகளிலும் கடற்கரைகளிலும் காணலாம். குளிர்காலம் முடிந்து திரும்பும்போது பெருங்கூட்டமாகத் திரளும்.

பழக்க வழக்கங்கள்: தனித்தும், சிறு கூட்டமாகவும், பெருங் கூட்டமாகவும் இதனைக் காணலாம். நீர்நிலைகளை அடுத்த சேற்று நிலங்களில் அங்கும் இங்கும் ஓடி சிறு புழுபூச்சிகளைப் பிடித்துத் தின்னும். சிலபோது ஆழமற்ற நீரில் இறங்கித் தலையும் அலகும் நீரில் மூழ்க இரை தேடுவதும் உண்டு. நீரில் நீந்திக்கொண்டிருக்கவும் காணலாம். ஆபத்து என உணரும்போது உள்ளான்களைப் போலத் தலையை மேலும் கீழும் ஆட்டும்.

நத்தைகள், நண்டுகள், நீர்வாழ் புழுபூச்சிகள், அவற்றின் முட்டைகள் ஆகியன இதன் உணவு. மணலையும் சேற்றையும் இதன் வயிற்றில் எப்போதும் காணலாம்.

பறக்கத் தொடங்கும்போது, ட்டீவீ ட்டீவீ ட்டீவீ எனச் சிறு கீச்சுக் குரலில் கத்தும்.

இனப்பெருக்கம்: தென்னிந்திய எல்லைக்கு வெளியே மே, ஜூன் மாதங்களில் திபேத், லடாக், காஷ்மீர் பகுதிகளில் இனப்

பெருக்கம் செய்கிறது. சதுப்பு நிலத்தில் புல்தரைகளிடையே நல்ல மஞ்சள் கலந்த சிவப்பு நிறத்தில் பழுப்பு, கரும் பழுப்புப் புள்ளிகளுடன் கூடிய 4 முட்டைகள் இடும்.

117. சின்னப் பச்சைக்காலி
395. Marsh Sandpider or Little Greenshank
Tringa stagnatilis (*Bechstein*)

தோற்றம்: கௌதாரியை விட அளவில் சிறியதான இது சுமார் 25 செ. மீ. நீளமிருக்கும்.

அலகு நீண்டு நேராகக் கருப்பு நிறத்தோடு காணப்படும் விழிப்படலம் பழுப்பு; கால்கள் மங்கிய நீலங் கலந்த பச்சை நிறம்.

உடலின் மேற்பகுதி சாம்பல் நிறந் தோய்ந்த பழுப்புத் தலையும் பின் முதுகும் பிட்டமும் வெள்ளை நிறம். வாலில் பழுப்பு பட்டைகள் காணலாம். உடம்பின் கீழ்பாகம் நல்ல வெண்மை.

காணப்படும் இடங்கள்; குளிர்காலத்தில் தென்னிந்தியா முழுதும் காணலாம். செப்டம்பர் மாதத்தில் தென் கிழக்கு ஐரோப்பா, ரஷியா முதலிய பகுதிகளிலிருந்து வந்து ஏப்ரல் மே மாதங்களில் திரும்புகின்றன. உள்நாட்டு நீர் நிலைகளை அடுத்து மிகுதியாகவும் கடற்கரைகளில் ஓரளவாக ஆங்காங்கேயும் காணலாம்.

பழக்க வழக்கங்கள்: சிறு கூட்டமாக மற்ற உள்ளான்களுடன் சேர்ந்து சேற்றில் அங்கும் இங்குமாக ஓடி இரை தேடும். ஆழமில்லாத நீரில் இறங்கி அலகும் தலையும் மூழ்கச் சேற்றில் துழாவும்.

நத்தைகள், நண்டுகள், புழுபூச்சிகள் இதன் உணவு.

இனப்பெருக்கம்: முன்னதைப்போல.

118. பச்சைக்காலி
396. Greenshank
Tringa nebulario (*Gunnerus*)

தோற்றம்: கௌதாரியை விட அளவில் பெரியது. சுமார் 36 செ. மீ. நீளமிருக்கும்.

அலகு ஆழ்ந்த பச்சை நிறம்; விழிப்படலம் பழுப்பு; கால்கள் மஞ்சள் கலந்த பச்சை.

உள்ளான்களிலேயே அளவில் பெரியது. உடம்பின் மேலெல்லாம் சாம்பல் கலந்த பழுப்பு; தலையும் பின் முதுகும் பிட்டமும் வாலும் வெண்மை நிறம்; கீழ்ப்பாகம் முழுதும் வெண்மை; தலையின் பக்கங்களிலும் முன் கழுத்திலும் லேசான சாம்பல் நிறம் தோய்ந்திருக்கும்; கோடையில் இந்தப் பழுப்பு நிறம் ஆழ்ந்ததாக மாறக் காணலாம்; முன்னதைவிட அளவில் பெரியது; இதன் பச்சைக் கால்கள் இதனை எளிதில் பவளக்காலியிலிருந்து பிரித்தறிய உதவும்.

காணப்படும் இடங்கள் : ஆகஸ்ட் மாதத்தில் வலசை வரத் தொடங்கி ஏப்ரலில் திரும்புகின்றது. குளிர்காலத்தில் தென்னிந்தியா முழுதும் ஏரிப்படுகைகளிலும் கடற்கரைகளிலும் காணலாம்.

பழக்கவழக்கங்கள் : தனித்தோ 3 முதல் 5 வரையான சிறு கூட்டமாகவோ காணலாம். சிலபோது 15 முதல் 20 வரையான கூட்டமாகத் திரள்வதும் உண்டு. நீரில் இறங்கி இரை தேடும் இது மற்ற உள்ளான்களைப் போலத் தலையை அப்படியும் இப்படியும் திருப்புவதில்லை. அலகை நேராக நீட்டிக்கொண்டு நீரில் ஒரே சீராக நடந்து செல்லும்.

நத்தை, நண்டு, புழுபூச்சி, தவளைக்குஞ்சு முதலியன இதன் உணவு.

பறக்குமுன்' ட்டீவீ, ட்டீவீ, ட்யூ ட்யூட்யூ எனக் கத்தும்.

இனப்பெருக்கம் : பவளக்காலியைப்போல.

119. ஆற்று உள்ளான்

397. Green Sandpiper

Tringa ochropus (*Linnaeus*)

தோற்றம் : காடையின் அளவுள்ளது; சுமார் 24 செ. மீ. நீளமிருக்கும்.

அலகு முனை கருத்து தெளிவற்ற பசுமையாக இருக்கும். கால்கள் ஆலிவ் பச்சை நிறம்; விழிப்படலம் ஆழ்ந்த பழுப்பு.

தலையும் கழுத்தும் சாம்பல் பழுப்பு நிறம்; உடலின் மேற்பகுதி வெண்கலப் பசுமை தோய்ந்த ஆழ்ந்த பழுப்பு நிறம்; வாலின் லேசான கரும்பட்டைகள் தென்படலாம்; உடலின் கீழ்ப் பகுதி முழுதும் வெண்மை நிறம்; கழுத்து, மார்பு, பக்கங்கள் அழகிய பழுப்புநிறக் கோடுகளோடு காட்சி தரும்; பறக்கும்போது இறக்கையின் கீழுள்ள கருப்புப் பகுதிகள், வால், பிட்டம் ஆகிய

பகுதிகளோடு மாறுபட்டுத் தென்படும். இது குளிர்காலத் தோற் றம்.

காணப்படும் இடங்கள்: செப்டம்பர் முதல் ஏப்ரல் வரை தென்னிந்தியா முழுதும் கடற்கரைகளிலும் ஏரிப்படுகைகளிலும் காணலாம். 1929-ல் ரஷ்யாவில் காசானில் வளையம் மாட்டப் பட்ட ஆற்று உள்ளான் 1933-ல் கோட்டயத்தில் 5600 கி. மீ. தள்ளிக் காணப்பட்டது குறிப்பிடத்தக்கது.

பழக்க வழக்கங்கள்; உள்ளான்களைப்போல இதனையும் நீர் நிலைகளை அடுத்துக் காட்டலாம். தனித்தோ இணையாகவோதான் இதனைக் காணலாம். மற்றப் பறவைகளைப்போலக் கூட்டமாகக் காணப்படுவதில்லை. வலசை போகும்போது மட்டும் 15 முதல் 20 பறவைகள் வரை திரளும். நீர்ப்பரப்பின் மேல் எல்லையில் படுகை யில் அங்கும் இங்கும் ஓடி இரைதேடும். ஆழமற்ற நீரில் இறங் கிச் சேற்றில் அலகால் துழாவி இரைதேடுவதும் உண்டு. கிட்ட நெருங்கினுல் தலையை மேலும் கீழும் தன் அதிருபதியைத் தெரி விப்பதைப்போல ஆட்டிவிட்டு எழுந்து பறந்துவிடும்.

நத்தைகள், நண்டுகள், நீர்வாழ் புழுபூச்சிகள், கொசுவின் முட்டைகள் முதலியன இதன் உணவு.

ட்டீவீ, ட்டீவீ, ட்டீவீ எனப் பறக்கும்போது கிரீச் குரலில் கத் தும்.

இனப்பெருக்கம்: வடக்கு ஆசியாவிலும் ஐரோப்பாவிலும் இனப்பெருக்கம் செய்வது இது. மற்ற உள்ளான்களைப் போல் அல்லாமல் மரங்களில் கூடுகளில் முட்டையிடுவது இது.

120. பொரி உள்ளான்

398. Wood or Spooted Sandpiper

Tringa glareola (Linnaeus)

தோற்றம்: காடை அளவுள்ள இது சுமார் 21 செ, மீ. நீளம் இருக்கும்.

அலகு கரும்பழுப்பு; விழிப்படலம் பழுப்பு' கால்கள் ஆலிவ் பச்சை நிறம்.

உடலின் மேற்பகுதி சாம்பற் பழுப்பும் கரும்பழுப்பும் கலந்த தாக வெள்ளைப் புள்ளிகளுடன் காணப்படும்; பின் முதுகும், பிட்ட

மும், வாலும் வெண்மை நிறம்; வாலில் கருப்புப் பட்டைகள் காணப்படும். மார்பு சற்றுக் கருத்துச் சாம்பல் நிறமாகக் காணப் படும். வயிறும், வாலடியும் வெண்மை நிறம்; ஆணும் பெண்ணும் ஒன்று போலவே இருக்கும். பறக்கும்போது இறக்கைகளின் அடிப்பகுதி கரும்பழுப்பாகக் காணப்படுவதும் வெள்ளையும் பழுப்பு மான பட்டைகள் வாலில் காணப்படுவதும் இதனை அடையாளங் காண உதவும்.

கோடை காலத்தில் நிறங்கள் நன்ருகப் பளிச்செனத் தெரியும். பட்டைகளின் நிறங்கள் ஆழ்ந்து காணப்படும்.

காணப்படும் இடங்கள் : குளிர் காலத்தில் தென்னிந்தியா முழு வதும் காணலாம். ஏரிகள், ஆற்றங்கரைகள், வயல்கள், குளங்கள் ஆகியவற்றைச் சார்ந்து காணப்படும். மலைகளில் 2000 மீட்டர் உயரம் வரை இதனைக் காணலாம். கடற்கரைகளிலும் காணலாம். வட ஐரோப்பா, வட ஆசியா முதலிய பகுதிகளிலிருந்து செப்டம் பரில் வலசை வந்து ஏப்ரலில் திரும்புகின்றது.

பழக்க வழக்கங்கள் : உள்ளான்களைப்போல நீர் நிலைகளை அடுத்து 20 முதல் 30 வரையான கூட்டமாகக் காணலாம். வலசை திரும்பும்போது பெருங் கூட்டமாகத் திரளும். மார்புவரை நீரில் இறங்கி இரை தேடுவதைப் பார்த்தால் நீந்தி இரை தேடுவது போலவே தோன்றும். வலசை வந்தவுடனும் திரும்பு முன்னும் இட உரிமைக்காக (territory) இவை ஒன்ருேடு ஒன்று போராடு வதைக் காணலாம். ஒரு பறவை இன்ெெரு பறவையைக் கழுத் தையும் தலையையும் பிடித்து நீரில் அமிழ்த்தியைக் கண்டு குறித் துள்ளனர்.

சிறு நத்தைகள், நண்டுகள், நீரில் வாழும் புழு பூச்சிகள் சிறு மீன்கள் முதலியன இதன் உணவு.

சிப், சிப், சிப், சிப், என தரையில் அமர்ந்து கத்தும். பறக்கும் முன் பல பறவைகள் ஒன்ருக 'ப்பீஇ. ப்பீஇ, ப்பீஇ' என்ற கிறீச் குரலில் கத்தும். இதன் இந்தக் குரல் ஆற்று உள்ளானின் குரலை ஒத்திருக்கும்.

இனப்பெருக்கம் : வடக்கு ஆசியா, ஐரோப்பாவில் பிற உள் ளான்களைப் போல இனப்பெருக்கம் பெய்வது. இப் பறவைகளில் பெண் பறவைகளே முதலில் காதலூடாட்டத்திற்கான செயல் களைத் தொடங்கும்.

121. டெரெக் உள்ளான்

400. Terek Sandpiper or Avocet Sandpiper

Tringa tereck (Lutham)

தோற்றம்: காடையைவிட அளவில் சிறியது இது. சுமார் 24 செ. மீ. நீளமிருக்கும்.

மேல் நோக்கி வளைந்த நீண்ட மெலிந்த அலகின் அடிப்பகுதி மஞ்சளாக இருக்கும்; விழிப்படலம் பழுப்பு; கால்கள் ஆரஞ்சு மஞ்சள் நிறம்.

குளிர் காலத்தில் இதன் தலை வெள்ளையாகவும் மேற்பகுதி முழுதும் சாம்பற் பழுப்பாகவும் இருக்கும். உடலின் கீழ்ப்பகுதி முழுதும் வெண்மை நிறம்.

கோடையில் உடலின் மேற்பகுதியில் நல்ல தடித்த கருப்புக் கோடுகள் V வடிவில் அமைந்திருக்கக் காணலாம். மார்பிலும் கழுத்திலும் அப்போது பழுப்புக் கோடுகளைக் காணலாம்.

காணப்படும் இடங்கள்: குளிர் காலத்தில் தென்னிந்தியக் கடற்கரை முழுவதும் காணலாம். சதுப்புக் காடுகள் உப்பங்கழிகள், சேற்றுத் துறைகள், ஆகியவற்றுக்குச் செப்டம்பரில் வரத் தொடங்கி ஏப்ரலில் இது திரும்புகின்றது.

பழக்க வழக்கங்கள்: 10 முதல் 15 வரையான சிறு கூட்டமாகச் சேற்றிலும் ஈரமணலிலும் சுறுசுறுப்பாக ஓடி இரைதேடக் காண லாம். மணலில் அலகை முழுவதுமாகச் செலுத்தி இரை தேடுவ தால் மோவாயில் உள்ள தூவிகள் எல்லாம் விழுந்து அப்பகுதி மொட்டையாகக் காணப்படும். பெரும்பாலும் மணலில் பிடித்த இரையைக் கடல் நீரில் கழுவிய பின்னரே இது விழுங்கும். கடல் ஏற்றத்தின்போது இப்பறவைகள் மணல் மேடுகளின் மீதோ பாறைகள் மீதோ ஒற்றைக் காலில் நின்று ஓய்வெடுத்துக் கொண் டிருப்பதைக் காணலாம்.

சிறு நத்தைகள், நண்டுகள், கடல்வாழ் புழு பூச்சிகள் இதன் உணவாகும்.

பறக்க எழும்போது சிறு குரலில் கத்துவதைத் தவிர வேறு ஒலியில்லை.

இனப்பெருக்கம்: சைபீரியாவில் கோடை காலத்தில் இனப் பெருக்கம் செய்கிறது.

122. உள்ளான்

401. Comman Sandpiper

Trina hypoleucos (Linnaeus)

தோற்றம்: காடை அளவுள்ள உள்ளான் இது. சுமார் 21 செ. மீ. நீளமிருக்கும்.

அலகு கருப்பு; விழிப்படலம் பழுப்பு; கால்கள் தெளிவற்ற பழுப்பு நிறமாக இருக்கும்.

குளிர்காலத் தோற்றம்: தலை சாம்பல் பழுப்பாக ஆழ்ந்த பழுப்புக் கோடுகளோடு காணப்படும்; கண்ணுக்குமேல் அகன்ற



உள்ளான்

வெண் புருவத்தைக் காணலாம்; உடலின் மேற்பகுதி ஆலிவ் கலந்த பழுப்பு நிறமாக இருக்கும்; பிட்டமும் வாலும் பழுப்பாக வெளி ஓர இறகுகள் வெண்மை கலந்து தோன்றக் காட்சி தரும். உடலின் கீழ்ப்பகுதி வெண்மையாக இருக்கும்; மார்பில் மட்டும் கருஞ்சாம்பல் நிறக் கோடுகள் சில அழகு செய்யக் காணலாம் பறக்கும்போது குறுகலான வெள்ளைப் பட்டை இறக்கைகளில் காணப்படுவது கொண்டும், 'ட்டீஇ, ட்டீஇ: ட்டீஇ' எனக் கிறிச் குரலில் கத்திக் கொண்டே பறப்பது கொண்டும் இதனை அடையாளம் காணலாம்.

கோடையில் நிறங்கள் ஆழ்ந்து காணப்படும்.

காணப்படும் இடங்கள்: குளிர் காலத்தில் தென்னிந்தியா முழுவதும் காணலாம். எங்கும் காணப்படும் உள்ளான் இதுவே. ஆகஸ்ட் வலசை வந்து எப்ரலில் திரும்புகிறது இது. ஆகஸ்ட் தொடக்கத்திலேயே காணப்படும் வலசை வரும் பறவைகளுள் இதுவும் ஒன்று. உள்நாட்டில் ஆற்றங் கரைகள், ஓடைகள்,

குளக்கரைகள், ஏரிப்படுகைகள் ஆகியவற்றிலும், கடற்கரையில் துறை முகங்கள், உப்பங்கழிகள், படுகைகள், சதுப்புக் காடுகள் ஆகியவை சார்ந்த இடங்களிலும் காணலாம்.

பழக்க வழக்கங்கள்: தனித்தோ, இரண்டு மூன்று பறவை களாகச் சேர்ந்தோ நீர் நிலைகளை அடுத்துச் சிறு புழு பூச்சிகளைப் பிடித்தபடி இருப்பதைக் காணலாம். வாலை ஓயாது அசைத்தபடி தலையை மேலும் கீழும் உள்ளான்களுக்கே உரிய பாணியில் ஆட்டிக் கொண்டிருக்கக் காணலாம். கடற்கரைகளில் அலை ஏற்றத்தின் போது மட்டும் 30 முதல் 50 வரையான பறவைகள் பாறைகள் மீதோ மணல் மேடுகள் மீதோ திரளக் காணலாம். அலை பின் னேக்கிச் செல்லும்போது தாவிச் சென்று ஈரமணல் பரப்பில் காணப்படும் பூச்சியைப் பிடித்துக்கொண்டு மீண்டும் அலை மேலேறி வருவதற்குள் இது திரும்பத் தாவிக் கரையேறுவது பார்க்க வேடிக் கையாக இருக்கும். கெட்டிப்பட்ட நிறங்களில் மற்ற உள்ளான் களைப் போல அலகால் தரையைக் குத்தி இரை தேடாமல் தரை யின் மேல் காணப்படும் புழு பூச்சிகளை மட்டுமே இது பிடிக்கிறது. வாலாட்டிகளோடு சேர்ந்து வாலை அசைத்தபடி இரைதேடுவதை யும் காணலாம். ஆகஸ்டில் வந்தவுடன் இரை தேடும் நிலத்தின் எல்லையை வரையறுக்க, இவை சில நாட்கள் ஒன்ருேடு ஒன்று இடையிடையே சண்டையிடக் காணலாம்.

சிறு நத்தை, நண்டு, புழு பூச்சி ஆகியன இதன் உணவு.

இனப்பெருக்கம்: மே, ஜூன் மாதங்களில், காஷ்மீர், லடாக் கால்வாய் ஆகிய இமயமலை சார்ந்த பகுதிகளில், ஆற்றிடை வெளி களில் தரையில், சிவப்பும் பழுப்புமான புள்ளிகளோடு கூடிய வெளிர் மஞ்சள் நிற முட்டைகள் 4 இடும்.

123. கல் திருப்பி

402. Turnstone

Arenaria interpres interpres (Linnaeus)

தோற்றம்: காடை அளவுள்ள இது சுமார் 22 செ. மீ. நீளம் இருக்கும்.

அலகு கருப்பாகவும், விழிப்படலம் பழுப்பாகவும், கால்கள் ஆரஞ்சு சிவப்பாகவும், கால் விரல்கள் கருப்பாகவும் இருக்கும்.

இதன் உடலின் மேற்பகுதி ஆழ்ந்த பழுப்பாகவும் வெண்மை யாகவும் இருக்கும். பின் முதுகு, பிட்டம், வால்மேல் இறகுகள்

ஆகியன தூய வெள்ளை. வால் கரும்பழுப்பாக வெண்மையாக இருக்கும். முன் கழுத்தும், மார்பின் பக்கங்களும் பழுப்பு நிறம். உடலின் மற்றக் கீழ்ப்பகுதி வெண்மை.

கோடைக்காலத்தில் தலை நன்ருகக் கருத்தும் கரும் புருவத் தோடு காணப்படும். உடலின் நிறம் ஆழ்ந்ததாகக் காணப்படும்.

காணப்படும் இடங்கள்: குளிர் காலத்தில் தென்னிந்தியக் கடற்கரை நெடுகிலும் காணலாம். ஆசியாவின் வடதுருவக் கடற் கரைப் பகுதியிலிருந்து செப்டம்பர் மாதத்தில் வரத் தொடங்கி, பின் மே மாதத்தில் திரும்புகின்றது.

பழக்க வழக்கங்கள்: சிறு கூட்டமாகவும், தனித்தும், மற்ற உள்ளான்களோடு சேர்ந்து இதுவும் கடற்கரைகளில் திரியக் காண லாம். கடற்கரையில் சிறு கற்களைப் புரட்டி அவற்றின் அடியே இருக்கும் புழு பூச்சிகளைச் சுறுசுறுப்பாகப் பிடித்துத் தின்பதால் இதற்குக் கல் திருப்பி என்ற பெயர் அமைந்தது பொருத்தமே. நீந்தும் ஆற்றலும் உடையது.

கடல் நத்தை, நண்டு, மணலில் காணப்படும் தத்துக்கிளி கடலில் வாழும் பூச்சி புழு முதலியன இதன் உணவு.

பறக்கத் தொடங்கும்போது சிறு குரலில் கத்தும்.

இனப்பெருக்கம்: வடக்கு ஆசியா, வட ஐரோப்பா, வட துருவக் கடற்கரை சார்ந்த பகுதிகள் ஆகியவற்றில் தரையில் புல் லால் மெத்தெனச் செய்து மே, ஜூன் ஜூலை மாதங்களில் 4 முட்டைகளிடுகின்றது.

124. பெரிய மலை உள்ளான்

405. Wood Snipe

Capella nemoricola (Hodgson)

தோற்றம்: காடையை விடச் சற்றுப் பெரியதாக இருக்கும் இதன் நீளம் சுமார் 31 செ. மீ.

அலகும், விழிப்படலமும் பழுப்புநிறம்; கால்கள் ஈயநிறம் தோய்ந்த பச்சை நிறம்.

உடலின் மேற்பகுதி ஆழ்ந்த பழுப்பாகத் தெளிவற்ற கருப்பு, கருஞ்சிவப்பு, வெளிர்மஞ்சள் பட்டைகளுடன் காணப்படும். மார்பு சிவப்புக் கலந்த மஞ்சளாகப் பழுப்புப் பட்டைகளுடன் இருக்கும். உடலின் பிற அடிப்பகுதிகள் வெண்மையாக நெருக்கமான பழுப்

புப் பட்டைகளுடன் விளங்கக் காணலாம். ஆணும் பெண்ணும் ஒன்று போன்ற தோற்றமுடையவை.

காணப்படும் இடங்கள்: குளிர்காலத்தில் தென்னிந்திய மலைப் பகுதிகளைச் சார்ந்த காடுகளில் ஓரளவு குறைந்த எண்ணிக்கையில் காணலாம்.

பழக்க வழக்கங்கள்: மலைகளைச் சார்ந்த புல்வெளிகளில் இதனைத் தனித்தே காணலாம். வெளவாலைப் போலவும், ஆந்தையைப் போலவும் மெல்லவே தத்தளித்தபடி மேலுங் கீழுமாக வீழ்ந்தும் எழுந்தும் பறக்கும் தன்மை கொண்ட இதனை எளிதில் அடையாளம் கண்டு கொள்ளலாம். வேட்டைக்காரர்கள் சுடும்போது சுமார் 50 மீட்டர் தூரம் பறந்து மீண்டும் தரை இறங்கிப் புதர்களில் மறைந்து கொள்ளும்.

புல்நிலங்களில் காணப்படும் புழுபூச்சிகளே இதன் உணவு பொடிக் கற்கள் வயிற்றில் காணப்படுவது உண்டு.

இனப்பெருக்கம்: தென்னிந்தியாவிற்கு வெளியே.

125. கூரியவால் உள்ளான்

406. Pintail Snipe

Capella Stenura (Bonaparte)

தோற்றம்: காடையின் அளவுடைய இது சுமார் 27 செ. மீ. அளவு இருக்கும்.

அலகு பழுப்பாக முனை கருப்பாக இருக்கும்; விழிப்படலம் ஆழ்ந்த பழுப்பு நிறம்; கால்கள் மஞ்சள் தோய்ந்த பசுமை நிறம்.

மெலிந்த கூர்மையான அலகுடைய இது, தரையோடு தரையாக அசையாமல் உட்கார்ந்திருப்பதைக் கண்டு கொள்வது கடினம்.

உடலின் மேற்பகுதி ஆழ்ந்த பழுப்பாகக் கருப்பு, கருஞ்சிவப்பு வெளிர் மஞ்சள் கோடுகளோடு காணப்படும். உடலின் கீழ்ப்பகுதி முழுதும் வெண்மையாக இருக்கும். வாலில் கூரிய ஊசிபோன்ற இறக்கைகள் காணப்படும்.

காணப்படும் இடங்கள்: தென்னிந்தியா முழுதும் காணலாம். செப்டம்பரில் வரத்தொடங்கி ஏப்ரல் இறுதியில் திரும்புகின்றது. இதனை அபூர்வமாகவே தமிழ் நாட்டில் காணலாம். மைசூர் ஆந்திராவில் ஓரளவு மிகுதியாகக் காணலாம்.

பழக்க வழக்கங்கள் : வேட்டைக்காரர்கள் விரும்பித் தேடித் திரியும் பறவைகளுள் இதுவும் ஒன்று. தனித்தோ மூன்று அல்லது நான்கு சேர்ந்த சிறு கூட்டமாகவோ காணலாம். சேற்றுத் தரையின் நிறமும் இதன் உடல் நிறமும் பெரிதும் ஒத்திருப்பதால் இது ஆடாமல் அசையாமல் இருக்கும்போது கண்டு கொள்வது கடினம். கிட்ட நெருங்கியவுடன் திடீரெனக் கத்தியபடி எழுந்து குறுக்கும் மறுக்குமாகப் பறந்து செல்வது இதன் சிறப்பான குணம். இப்படி எதிர்பாராது எழுந்து பறப்பதே இதனை அடையாளம் கண்டுகொள்ள உதவும். வேட்டைக்காரர்களின் திறமைக்கு இப்படித் திடீரென எழுந்து பறக்கும் பண்பு ஒரு சோதனை. காற்று வீசும் குளிர்நாட்களில் நாள் முழுதும் சுறுசுறுப்பாக மேயும். அலகைச் சேற்றினுள் செலுத்தி இரைதேடும். இதன் அலகின் முனை சேற்றினுள் இரையைப் பிடிப்பதற்கேற்ப உணர்ச்சியுடையதாய், விரியும் தன்மையும் பெற்று அமைந்துள்ளது. பறக்கும்போது கத்தியபடியே பறக்கும்.

இனப்பெருக்கம் : இந்தியாவிற்கு வெளியே.

126. சுவின்ஹோ உள்ளான்

407. Swinehoe's Snipe

Capella megala (Swinhoe)

தோற்றம், பழக்கவழக்கம், இனப்பெருக்கம் ஆகிய எல்லாவற்றிலும் கூரியவால் உள்ளானைப் பெரிதும் ஒத்த இது மிகக்குறைந்த எண்ணிக்கையில் ஆந்திராவிலும் வடமைசூரிலும் குளிர்காலத்தில் காணப்படுகிறது. சற்று அளவில் பெரியதாகக் காணப்படும் இதன் வால் இறகுகள் முன்னதன் வாலிறகுகளைப் போலன்றி வேறுபட அமைந்திருப்பதால் தனி உள்ளினமாகப் பகுக்கப்பட்டுள்ளது.

விசிறிவால் உள்ளான்

409. Common or Fantail Snipe

Capella gallinago gallinago (Linnaeus)

தோற்றம் : காடை அளவுடைய இது சுமார் 27 செ. மீ. நீளமிருக்கும்.

அலகு ஆழ்ந்த பழுப்பு நிறமாக முனை கருப்பாக இருக்கும். விழிப்படலம் நல்ல பழுப்பு நிறம், கால்கள் மஞ்சள் கலந்த பச்சை நிறம். கூரியவால் உள்ளானிலிருந்து இதனை வேறுபாடு காண்பது இயற்கைச் சூழலில் மிகவும் கடினமானது. உடலின் மேற்

பகுதி கூரியவால் உள்ளானைவிட சற்று நிறங்குன்றிக் காணப்படும். அதனைக் காட்டிலும் வேகமாகப் பறக்கும் ஆற்றல் வாய்ந்தது. இதன் வாலில் கூரிய ஊசிபோன்ற இறகுகள் காணப்படுவதில்லை.

காணப்படும் இடங்கள்: குளிர்காலத்தில் தென்னிந்தியா முழுதும் காணலாம். கிராமங்களை அடுத்த நீர்நிலைகளில் மக்கள் நடமாட்டத்தையும் பொருட்படுத்தாமல் மேய்ந்து கொண்டிருக்கக் காணலாம்.

பழக்க வழக்கங்கள்: கூரியவால் உள்ளானைப் போன்றனவே.

இனப்பெருக்கம்: மே, ஜூன் மாதங்களில் காஷ்மீர் பள்ளத் தாக்கில் இது இனப்பெருக்கம் செய்கிறது.

127. சின்னக் கோரை உள்ளான்

410. Jack Snipe

Capella minima (**Brunnich**)

தோற்றம்: காடை அளவுள்ள இது விசிறிவால் உள்ளானை விடச் சிறியது. சுமார் 21 செ. மீ. நீளம் உள்ளது.

அலகு பழுப்பு நிறம்; விழிப்படலம் பழுப்பு நிறம் கால்கள் வெளிப்பச்சையாக இருக்கும்.

தோற்றத்தில் பொதுவில் மற்ற உள்ளான்களை ஒத்தது என்றாலும் அளவில் சற்றுச் சிறியது. உடலின் மேற்பகுதி பசுமையும் ஊதாவுங் கலந்து ஆழ்ந்த பழுப்புக் கோடுகளோடு காணப்படும். வால் ஆப்பு வடிவமாகக் கருப்பு நிறத்தோடு காட்சி தரும். உச்சந் தலையில் மற்ற உள்ளான்களுக்கு இருப்பது போன்ற நடுக்கோடு இருக்காது. முன்பு கண்ட உள்ளான்களைப் போலக் குறுக்கும் மறுக்குமாகப் பறக்கும் பழக்கமும் இதற்கு இல்லை. பறக்க எழும்போது சப்தமிடும் பழக்கமும் இதற்கு இல்லை.

காணப்படும் இடங்கள்: குளிர்காலத்தில் தென்னிந்தியா முழுதும் சமவெளிகளில் ஓரளவும், மலைப்பகுதிகளில் அபூர்வமாகவும், காணலாம். செங்கல்பட்டில் காணப்பட்ட குறிப்பு உள்ளது. அக்டோபரில் வந்து ஏப்ரலில் திரும்புகிறது.

பழக்கவழக்கங்கள்; மனிதர் நெருக்கும்போது மற்ற உள்ளான்களைப் போலக் கூட்டாக எழுந்து பறக்காது. தனித்து ஒன்றிரண்டாவே எழுந்து பறக்கும். புதரில் மறைந்திருக்கும்போது எளிதில் வெளியே வராது. மெல்லவே பறப்பதாலும், குறுக்கு

மறுக்குமாகப் பழக்கமில்லாததாலும் வேட்டைக்காரர்கள் இதனை எளிதில் வீழ்த்துகின்றனர்.

புழுபூச்சிகள், நத்தைகள், முதலியன உணவாகக் கொள்ளும்.

இனப்பெருக்கம் : இந்தியாவிற்கு வெளியே.

கூரியவால் உள்ளான், விசிறி வால் உள்ளான் கோரை உள்ளான் ஆகிய மூன்றும் தென்னிந்தியாவில் காணப்படும் அளவுப் பற்றிய தெளிவிற்கு திரு. ஆர். எப். ஸ்டோனி என்ற வேட்டைக்காரர் வைத்திருந்த குறிப்புக்கள் மிகவும் உதவுகின்றன. 1898 முதல் 1935 வரை அவர் 13530 கூரியவால் உள்ளான்களையும் 2312 விசிறிவால் உள்ளான்களையும் 126 கோரை உள்ளான்களையும் வீழ்த்தியிருப்பதாகக் குறித்துள்ளார். இப் பறவைகள் தென்னிந்தியாவில் காணப்படும் அளவு இக் குறிப்பு ஓரளவு தெளிவாக்குகின்றன (Handbook of Birds of India and Pakistan Vol 2 Page 292)

128. மலை மூக்கான்

411. Wood Cock

Scolopax rusticola rusticola (*Linnaeus*)

தோற்றம்: *கௌதாரியை விட அளவில் சற்றுச் சிறியது.*

அலகு ஊன் நிறந் தோய்ந்த பழுப்பு நிறம்; விழிப்படலம் ஆழ்ந்த பழுப்பு; கால்கள் ஊன் நிறந் தோய்ந்த ஈய நிறம்;

முன்னைய உள்ளான்களை விட அளவிற் பெரியதான இதன் உடம்பின் மேற்பகுதி முழுதும் பழுப்பும், கருப்பும், வெண்மையுமான நிறங்கள் கலந்து காணப்படும். இதன் அலகு முனையில் கடினமற்றுச் சற்றுப் பருத்துக் காணப்படும். இதன் கால்கள்: மற்ற உள்ளான்களின் கால்களைவிட சற்றுக் குறுகியது. பின் தலையும், கழுத்தும், பிட்டமும் கருப்பும் கருஞ் சிவப்புமான குறுக்குக் கோடுகளோடு காணப்படும். உடலின் கீழ்ப்பகுதி முழுதும் வெளிர் பழுப்பு நிறத்தில் நல்ல ஆழ்ந்த பழுப்புக்கோடுகளோடு காணப்படும். இதன் கண்கள் தலையில் உயரப் பின்தள்ளி அமைந்திருக்கக் காணலாம்.

காணப்படும் இடங்கள் : குளிர்காலத்தில், பழநி, நீலகிரி மலைகளைச் சார்ந்த சரிவுகளிலும் மழைவளமிக்க மேற்குமலைத் தொடர் சரிவுகளிலும் காணலாம். மலைகளில் சதுப்புக் காடுகள் இது விரும்பித் திரியும் இடம். இப்பொழுது நீலகிரியில் காடுகள் அழிக்கப்பட்டு வருவதால் இதன் எண்ணிக்கையும் குறைந்து வரு

கிறது. அக்டோபர் இறுதியில் வலசை வந்து மார்ச் மத்தியிலேயே திரும்பிவிடும் இயல்புடையவை இவை.

பழக்கவழக்கங்கள்: தனித்தோ, தூரத்தூரப் பிரிந்து திரியும் ஆணும் பெண்ணுமாகவோ இவற்றைக் காணலாம். காலை மாலை அந்திகளிலும் இரவு நேரங்களிலுமே வெளிப்பட்டு இரைதேடும். பகல் முழுதும் புதர்களில் பதுங்கியிருக்கும். அலகை சதுப்பு நில மான சேற்றில் நுழைத்து இரைதேடும். இப்படி இது அலகை நுழைத்த குழிகளில் சேற்றில் அதிகம் இருப்பதைக் கண்டு வேட்டைக்காரர்கள் சுற்றிலும் உள்ள புதர்களில் இதனைத் தேடி வீழ்த்துவர். மெல்லவே பறக்கும் இயல்புடையது என்றாலும் குறுக்கும் மறுக்குமாக மரங்களிடையே எளிதாக நுழைந்தும் பக்கங்களில் எதிர்பாராது திரும்பியும் பறக்கும் பழக்கமுடையது. ஆகையால் இதனை வீழ்த்துவது கடினம்.

சிறு புழுபூச்சிகளோடு விதைகளையும் உணவாகக் கொள்ளும்.

இனப்பெருக்கம்: இமயமலைப் பகுதிகளில் ஏப்ரல் முதல் ஜூலை மாதம் வரை இனப்பெருக்கம் செய்கிறது. புதர்களிடையே தரையில் உதிர்ந்த இலைதழைகளால் மெத்தென ஆக்கி 4 முட்டையிடும். முட்டை வெளிர் மண் நிறம் வெளிர் மஞ்சள் நிறங்களில் சிவப்புக் கறைகள் கொண்டிருக்கும்.

129. வெள்ளை உள்ளான்

414. Sanderling

Calidris albus (Pallas)

தோற்றம்: காடை அளவுள்ள இது சுமார் 19 செ. மீ. நீளம் இருக்கும்.

அலகு கருப்பு நிறம்; விழிப்படலம் பழுப்பு நிறம். கால்கள் கருப்பு நிறம்.

தலை, கழுத்து, முதுகு, உடலின் கீழ்ப்பகுதி ஆகிய அனைத்தும் வெண்மையாக இருப்பது இதனை மற்ற உள்ளான்களிலிருந்து தெளிவாக வேறுபடுத்திக் காட்டும். பறக்கும்போது இறக்கைகளில் தெளிவான வெண்மையான பட்டை காணப்படும்.

காணப்படும் இடங்கள்: தென்னிந்தியாவின் கிழக்குக் கடற்கரையில் சிறிய எண்ணிக்கையில் காணலாம். மேற்குக் கடற்கரையில் காணப்படுவதில்லை. கோடிக்கரை, இராமேஷ்வரம் ஆகிய இடங்களில் காணப்பட்ட குறிப்பு உள்ளது. செப்டம்பரில் வலசை வந்து ஏப்ரலில் திரும்புகின்றது.

பழக்க வழக்கங்கள் : பிற உள்ளான்களோடு சேர்ந்து கடற் கரைப்படுகைகளில் மேயும் என்றாலும் இதனுடைய வெண்மையான தோற்றமும் சுறுசுறுப்பும் இதனை மற்ற உள்ளான்களிடமிருந்து தெளிவாக வேறுபடுத்திக் காட்டும். அலையோடு முன்னும் பின்னும் ஓடும் கூட்டமாக இறக்கை அடியில் காணப்படும் வெள்ளைப் பட்டைகள் பளிச்சிடப் பறக்கும்.

சிறு நத்தைகள், நண்டுகள், புழுபூச்சிகள் ஆகியவை இதன் உணவு.

பறக்க எழும்போது விக், விக், விக் எனக் கத்தும்.

இனப்பெருக்கம் : வட சைபீரியாவின் கடற்கரைகளிலும் அக் கரையை அடுத்த தீவுகளிலும் இனப்பெருக்கம் செய்கிறது.

130. கொசு உள்ளான்

416. Little Stint

Calidris minutus (Leisler)

தோற்றம் : அளவில் காடையை விடச் சிறியது. சுமார் 15 செ. மீ. நீளமிருக்கும்.



அலகு கருப்பு நிறம்; விழிப்படலம் ஆழ்ந்த பழுப்பு: கால்கள் ஈயநிறம்.

நம் நாட்டிற்குக் குளிர்காலத்தில் வலசை வரும் உள்ளான், உப்புக்கொத்திகளில மிகச் சிறியது. சிட்டுக் குருவியைவிடச் சற்றே பெரியதான இதன் உடலின் மேற்பகுதி சாம்பல் பழுப்பாகக் கறைகளும் புள்ளிகளும் கொண்டதாயும் கீழ்ப்பகுதி தூய வெண்மையாகவும் இருக்கும். இது தோற்றத்தில் டன்லின் உள்ளானை ஒத்ததாயினும் இதன் அலகு அதன் அலகைவிடச் சிறியதாக நேராக இருக்கும்.

காணப்படும் இடங்கள் : செப்டம்பரில் வரத்தொடங்கும் இது ஏப்ரல் வரை தென்னிந்தியக் கடற்கரைப் படுகைகள், உப்பங்கழிகள், கழிமுகங்கள் ஆகியவற்றில் திரியக் காணலாம்.

பழக்க வழக்கங்கள் : சிறு கூட்டமாகவும், அபூர்வமாக நூறு வரையான பெருங் கூட்டமாகவும் இது மற்ற கடற்கரை சார்ந்து திரியும் பறவைகளோடு சேர்ந்து திரியக் காணலாம். இரை தேடும் போது பிரிந்து செல்பவை ஓய்வாக இருக்கும்போது மீண்டும் கூட்டமாகக் கூடிவிடும். எப்பொழுதும் அங்கும் இங்கும் தாவித் தாவி ஓடி அலைந்தபடி இருக்கும். ஆபத்து என அறிந்தால் சொல்லி வைத்தாற்போல எல்லாம் ஒன்றாக எழுந்து அப்படியும் இப்படியும் திரும்பித் திரும்பி இறக்கையில் உள்ள வெண்மை நிறம் பளிச்சிடப் பறந்து வெகு தூரத்தில் சென்று தரை இறங்கும்.

சிறு நத்தைகள், நண்டுகள், கடற்கரையில் காணப்படும் புழு பூச்சிகளோடு நீர்த்தாவரங்களின் விதைகளையும் தின்னும்.

இனப்பெருக்கம் : வட சைபீரியாவில்.

131. பச்சைக்கால் கொசு உள்ளான்
417. Temminck's Stint
Calidris temminckii (Leisler)

தோற்றம் : ஊர்க்குருவி அளவுள்ள இது சுமார் 15 செ. மீ. நீளமிருக்கும்.

கொசு உள்ளானைப் பெரும்பாலும் எல்லாவகையிலும் ஒத்த இதனுடைய கால்கள் மட்டும் ஆலிவ் பச்சையாக (கொசு உள்ளானின் கால்கள் கருப்பு நிறம்) இருக்கும். உடலின் மேற்பகுதியின் நிறமும் மார்பின் வெண்மையும் கொசு உள்ளானின் நிறம்போல அவ்வளவு பளிச்சென்று தெரியாது.

காணப்படும் இடங்கள்: குளிர்காலத்தில் தென்னிந்தியாவில் ஆங்காங்கே மிகக் குறைந்த எண்ணிக்கையில் காணலாம். கடற் கரைகளிலும் உள்நாட்டு நீர்நிலைகளைச் சார்ந்த படுகைகளிலும் காணலாம்.

பழக்க வழக்கங்கள்: கொசு உள்ளானைப் போன்றவை.

இனப்பெருக்கம்: வட சைபீரியாவில்.

132. டன்லின் உள்ளான்
420. Dunlin
Calidris alpinus alpinus (Linnaeus)

தோற்றம்: காடையைவிட அளவில் சிறியது. சுமார் 19 செ. மீ. நீளமிருக்கும்.

அலகு கருப்பு; விழிப்படலம் ஆழ்ந்த பழுப்பு; கால்கள் கருப்பு.

உடலின் மேற்பகுதி சாம்பல் பழுப்பாகக் கருப்புக் கறைகளு டன் காணப்படும். உடலின் கீழ்ப்பகுதி வெண்மையாக இருக்கும். மார்பில் சாம்பல் நிற நெடுக்குக் கோடுகள் வளையமாக அமைந்திருக் கக் காணலாம். பறக்கும்போது இறக்கைகளில் வெள்ளைப்பட்டை புலனாகும். வால் போர்வை இறகுகள் ஒருசில கருப்பாக இருக்கக் காணலாம்.

காணப்படும் இடங்கள்: குளிர்காலத்தில் தென்னிந்தியக் கடற் கரைகளில் குறைந்த எண்ணிக்கையில் காணலாம். கோடிக்கரை யில் காணப்பட்ட குறிப்புள்ளது. ஆகஸ்டில் வந்து மே மாதத்தில் திரும்புகின்றது. ஒருசில திரும்பாமல் தங்குவதும் உண்டு. அவை இங்கு கோடைக்கால நிறங்களைப் (Summer plumage) பெறுகின் றன.

பழக்க வழக்கங்கள்: சிறு கூட்டமாக மற்ற உள்ளான்களோ டும் உப்புக் கொத்திகளோடும் சேர்ந்து கடற்கரைகளில் திரியக் காணலாம். மணலில் அலகை நுழைத்து இரைதேடும்; மனிதர் நெருங்கினால் கூட்டமாக எழுந்து பறக்கும்; அலை ஏற்றத்தின் போது கூட்டமாக மணல் மேடுகளில் அலை இறக்கத்தை எதிர் பார்த்து அமர்ந்திருக்கக் காணலாம்.

நத்தைகள், நண்டுகள், புழுபூச்சிகள் முதலியன இதன் உணவு. மணலும் ஓரளவு இதன் வயிற்றில் காணப்படுவதுண்டு.

ட்டீவீஇ.. ஈப்.. வ்வீஇ.. வ்வீஇ.. ட்ட் எனப் பறக்கத்தொடங் குகையில் கத்தும்.

இனப்பெருக்கம்: இந்தியாவிற்கு வெளியே.

133. கர்லூ உள்ளான்

422. Curlew Sandpiper

Calidris testaceus (Pallas)

தோற்றம் : காடையை விட அளவில் சிறிய இது சுமார் 20 செ. மீ. நீளமிருக்கும்.

அலகு கருப்பு; விழிப்படலம் பழுப்பு; கால்கள் கருப்பு நிறம்.

குளிர்காலத்தில் இது பெரும்பாலும் தோற்றத்தில் டன்லினை ஒத்திருக்கும். அதைவிட அளவில் சிறிது பெரிதாகத் தோன்றும். கால்கள் சற்று நீண்டிருக்கும். வால் போர்வை இறகுகள் வெண்மையாக இருப்பது கொண்டு (டன்லின் வால் போர்வை இறகுகள் கருப்பு). இதனைப் பறக்கும்போது டன்லினிலிருந்து வேறுபடுத்தி அறியலாம். கோடைக் காலத்தில் இதன் தோற்றம் டன்லின் தோற்றத்தில் பெரிதும் மாறுபடும்.

காணப்படும் இடங்கள் : குளிர்காலத்தில் தென்னிந்தியக் கடற்கரைகளிலும், மணற் படுகைகளிலும், உப்பங்கழிகளிலும் கழிவுத் துறைகளிலும் ஆங்காங்கே மிகக் குறைந்த எண்ணிக்கையில் காணலாம்.

பழக்கவழக்கங்கள் : டன்லின் உள்ளானைப் போன்றவை.

இனப்பெருக்கம் : சைபீரியாவில்.

134. அகன்ற அலகு உள்ளான்

424. Broad-billed Sandpiper

Limicola falcinellus falcinellus (Pontoppidan)

தோற்றம் : காடையை விட அளவில் சிறியது. சுமார் 17 செ மீ. நீளமிருக்கும்.

அலகு ஆலிவ் நிறந் தோய்ந்த பழுப்பு; விழிப்படலமும் பழுப்பு; கால்கள் ஆலிவ் பழுப்பு நிறம்.

இது தோற்றத்தில் குளிர்காலத்தில் டன்லின் உள்ளானை ஒத்தது. இயற்கையில் ஒன்றுக்கொன்று வேறுபடுத்துவது அரிது டன்லினை விடச் சற்றுச் சிறியதாகக் குறுகிய கால்களோடும் கன்னத்திலும் மார்பிலும் பழுப்புக் கறைகளுடன் காணப்படுவது கொண்டு இதனைப் பிரித்துணர முடியலாம்.

காணப்படும் இடங்கள் : குளிர்காலத்தில் தென்னிந்தியக் கடற்கரை நெடுக மிகக் குறைந்த எண்ணிக்கையில் காணலாம். கோடிக்கரையில் காணப்பட்ட குறிப்புஉள்ளது. ஆகஸ்டில் வலசை வரத் தொடங்கி மே மாதத்தில் திரும்புகிறது.

பழக்க வழக்கங்கள் : பெரும்பாலும் மற்ற உள்ளான்களின் பழக்கவழக்கங்களை ஒத்ததே. இரையைத் தரையில் அலகால் பொறுக்கித் தின்னுமே அன்றி அலகை மணலில் செலுத்தி இரை தேடுவதில்லை.

நத்தைகள், புழுபூச்சிகள் ஆகியவற்றோடு விதைகளையும் தின்னும்.

பறக்க எழும்போது, வ்விட், வ்விட், வ்விட், வ்விட் எனக் கத்தும்.

இனப்பெருக்கம் : நார்வே, ஸ்வீடன், வடக்கு ரஷ்யா போன்ற பகுதிகளில்.

135. பேதை உள்ளான்
426 Ruff
Philomaehus pugnax (Linnaeus)

தோற்றம் : ஆண் கௌதாரியை ஒத்த அளவினை உடையதால் சுமார் 31 செ. மீ. நீளமிருக்கும்.

பெண் காடையைவிடச் சற்றுப் பெரிதாக சுமார் 25 செ. மீ. நீளமிருக்கும்.

அலகு கருப்பு நிறம்; விழிப்படலம் பழுப்பு; கால்கள் சிவப்பு நிறம்.

உடலின் மேற்பகுதி சாம்பல் பழுப்பான தோற்றம் கொண்டது. பெரிய கருப்புநிற வட்டமான கறைகள் உடம்பின் மேற்பகுதியில் காணப்படும். பறக்கும்போது இறக்கைகளில் காணப்படும் குறுகிய வெள்ளைப்பட்டையும், கருப்பு நிறப் பிட்டமும், வெள்ளை விளிம்போடு கூடிய வாலும் இதனை அடையாளங் கண்டுகொள்ள உதவும். கால்கள் சிவப்பாக இருப்பதால் பவளக்காலியோடு குழப்பிக்கொள்ள நேரும். கோடைக் காலத்தில் நல்ல செம்பழுப்பு நிறமாக உடலின் மேல் தோற்றம் மாறும். ஆணுக்குக் கொண்டையும் வளரும்:

காணப்படும் இடங்கள் : குளிர் காலத்தில் தென்னிந்தியக் கடற்கரைகளிலும் வயல் வெளிகளிலும் ஆங்காங்கே சிறிய எண்ணிக்கை

யில் காணலாம். கோடிக்கரையில் காணப்பட்ட குறிப்பு உண்டு. செப்டம்பரில் வந்து மார்ச்சில் திரும்புகின்றன. ஆண் பறவை களே முதலில் வலசை வருகின்றன. பெண் பறவைகள் சற்றுக் காலந் தாழ்த்தி வரும்.

பழக்க வழக்கங்கள் : 5 முதல் 8 வரையான சிறு கூட்டமாகக் காணலாம். அபூர்வமாக 25 வரையான கூட்டமாகத் திரள்வதும் உண்டு. மற்ற உள்ளான்களோடு சேர்ந்து கடற்கரையில் மேயும் இது வலசை வரும்போதும், திரும்பும்போதும் ஆயிரக்கணக்கில் திரண்டே வந்து போகும். தென்னிந்தியாவில் இத்தகைய கூட்டங் களைக் காண முடியுமா என்பது சந்தேகத்திற்குரியதே. புல்வெளி களிலும் வயற் புறங்களிலும் விதைகள் முதலியவற்றை உணவாகக் கொள்வதோடு சேற்றில் அலகை முழுவதுமாக நுழைத்துப் புழு பூச்சிகளைப் பிடித்துத் தின்னவும் காணலாம். பெரும்பாலும் இரவி லேயே இரைதேடும் இது சூரியன் மறைந்தவுடன் இரை தேடும். நில உரிமைக்காக ஒன்றோடு ஒன்று போரிடக் காணலாம். வேக மாகக் சீராக இறக்கை அடித்துப் பறந்து செல்லும்.

இனப்பெருக்கம் : வடக்கே ஐரோப்பா, வடக்கு ஆசியா முதலிய பகுதிகளில் கோடைக் காலத்தில் இனப்பெருக்கம் செய் கிறது.

காதலூடாட்டத்தின்போது ஆண், பெண்ணைக் கவரப் பல வகை விளையாட்டுக்களை நிகழ்த்தும். பலவகை நிறங்களில் அழகிய இறகுகளைத் தேடிக் கொணர்ந்து குவித்து வைத்துப் பெண்ணை மகிழச் செய்யும். பின்னர் ஆண் எந்த விதக் குடும்பப் பொறுப்பும் ஏற்றுக் கொள்வதில்லை.

Sub-Family : Phalaropinae

136. செங்கழுத்து ஃபாலரோப்

428. Rednecked Phalarope

Phalaropus lobatus (Linnaeus)

தோற்றம் : காடை அளவுள்ள இது சுமார் 19 செ. மீ. நீள மிருக்கும். பெண்ணைவிட ஆண் சற்றுச் சிறியது.

அலகு கருப்பு ; விழிப்படலம் பழுப்பு ; கால்கள் நீலங் கலந்த கருப்பு நிறமாக இருக்கும்.

கோடைக் காலத்தில் இதன் கழுத்துச் செம்பழுப்பு நிறமாகத் திகழ்வதால் இது இப் பெயர் பெற்றது. என்றாலும் குளிர் காலத்

தில் நம் நாட்டுக்கு இது வலசை வரும்போது இதன் கழுத்தில் அந்த நிறத்தைக் காண முடியாது. குளிர் காலத்தில் இங்கு வலசை வரும்போது தோற்றத்தில் வெள்ளை உள்ளானை ஒத்திருக்கும். உடம்பின் மேற்பகுதி வெள்ளையும் சாம்பலுமாக இருக்கும். கண்ணின் வழியாக ஒரு கரும் புருவக்கோடு செல்லும். மறக்கும்போது இறக்கைகளில் வெள்ளைப் பட்டை தெளிவாகத் தெரியும்.

காணப்படும் இடங்கள் : தென்னிந்தியக் கடற்கரையில் கடலில் கடலோரப் பகுதிகளில் ஓரளவு காணலாம். குளிர் காலத்தில் கோடிக்கரையில் காணப்பட்ட குறிப்பு உண்டு. செப்டம்பரில் வரத் தொடங்கி மே மாதத்தில் திரும்பி விடுகின்றன.

பழக்க வழக்கங்கள் : இவை மற்ற உள்ளான்களைக் கடற்கரை மணலில் மேய்வதில்லை. கடலில் 20 முதல் 100 வரையான கூட்டமாக நீந்திக் கொண்டிருக்கக் காணலாம். படகில் செல்பவர்கள் நெருங்கு முன்பே எழுந்து அஞ்சிப் பறக்கும் சுபாவமுள்ளவை. உள்நாட்டு நீர் நிலைகளில் நீந்திக் கொண்டிருக்கும் பறவைகள் மனிதர்களைக் கண்டு அஞ்சுவதில்லை. கடலில் 10 முதல் 40 மீட்டர் தூரம் வரை இதனைக் காணலாம். உள்நாட்டு நீர் நிலைகளில் அசைவின்றித் தன்னைத்தானே சுற்றியபடி மிதந்து இரைதேடும். அல்லது ஒன்றன்பின் ஒன்றாக வரிசையாக நீர்த் தாவரங்களிடையே நீந்திச் செல்லக் காணலாம். ஒன்றை ஒன்று நெருங்கிக் கூட்டமாக வேகமாகப் பறக்கும் இயல்புடையவை.

கடற்பாசி (Plankton) புழு பூச்சிகள், நத்தை, சிறு நண்டு முதலியன இதன் உணவு.

இனப்பெருக்கம் : இந்தியாவிற்கு வெளியே; காதலூட்டாட்ட விளையாட்டுக்களை மிகுதியும் பெண்ணே நிகழ்த்தும்; அடை காத்துக் குஞ்சுகளைப் பேணுவது ஆணின் கடமை.

Family : Rostratulidae

137. மயில் உள்ளான்

429. Painted Snipe

Rostratula benghalensis benghalensis (Linnaeus)

தோற்றம் : காடையைவிட அளவில் பெரியது. சுமார் 25 செ. மீ. நீளமிருக்கும்.

அலகு சிறுத்து நேராக நுனியில் சற்று வளைந்து பழுப்பு நிற



மயில் உள்ளான்

மாக இருக்கும்; விழிப்படலம் பழுப்பு; கால்கள் பச்சை நிறம்.

பெண்: உடலின் மேற்பகுதி பசுமை கலந்த ஆலிவ் நிறமாக அல்லது வெண்கலப் பச்சை நிறமாக இருக்கும். வெளிர் மஞ்சளும் கருப்புமான கோடுகளும் புள்ளிகளும் உடலின் மேற்பகுதியை அழகு செய்யும், கண்களைச் சுற்றிக் கண்ணாடி அணிந்தது போன்ற வெள்ளை வளையங்கள் காணப்படும். தோளின் மேற்பகுதியில் ஒரு வெள்ளை வளையம் மார்பு வரை வரும். மோவாய் தொண்டை, மேல் மார்பு ஆகியன செம்பழுப்பு நிறமாக இருக்கும்; கீழ் மார்பு கருப்புக் கலந்த செம்பழுப்பு நிறம்; வயிறு, பக்கங்கள், வாலடி ஆகியன நல்ல வெண்மை. இனப்பெருக்கம் செய்யாத காலத்தில் பெண்ணின் இந்த அலங்காரத் தோற்றம் மறைந்து ஆணின் தோற்றத்தைப் பெறும்.



மயில் உள்ளான்

ஆண்; தோற்றத்தில் பெண்ணை ஒத்து, கழுத்திலும் மார்பிலும் காணப்படும் செம்பழுப்புக்கும் கருப்புக்கும் பதிலாகச் சாதாரணச் சாம்பல் பழுப்பு நிறம் பெற்றிருக்கும்.

காணப்படும் இடங்கள்: தென்னிந்தியா முழுதும் ஆண்டு முழுதும் மிகச் சிறு எண்ணிக்கையில் காணலாம். தாவரங்கள்

நிறைந்த ஏரிகள், குளங்கள், அவற்றை அடுத்த சதுப்பு நிலங்கள் ஆகியவற்றில் விரும்பித் திரியும்.

பழக்க வழக்கங்கள்: தனித்தோ, சிறு கூட்டாகவோ காண லாம். காலை, மாலை அந்திகளிலும் இரவிலும் சுறுசுறுப்பாக இரை தேடித் திரியும். தேவை ஏற்பட்டால் அன்றிப் பறக்காது. பறப்பது காணங்கோழி பறப்பதைப் பெரிதும் ஒத்திருக்கும். பறக்கத் தொடங்கியவுடன் சற்று நேரம் கால்கள் தொங்கியபடி இருக்கும்; பின் வாலடியில் இழுத்து நீட்டிக் கொள்ளும். சற்றுத் தூரம் பறந்த வுடன் மீண்டும் நாணற் புதர்களில் இறங்கி மறையும். வேகமாக நெடுந்தூரம் ஓடும் ஆற்றல் வாய்ந்தது. குண்டடிபட்ட பறவைகள் நீரில் நன்றாக நீந்தி வேட்டைக்காரர்களிடம் இருந்து தப்பியுள்ள தாகக் குறிப்பு உள்ளது. அலகைச் சேற்றில் செலுத்தியும் நீரில் அலகை விட்டுத் தேடியும் இரை தேடும். இரை தேடும்போது உடலின் பின்பகுதியை மேலும் கீழும் ஆட்டியபடி இருக்கும்.

நத்தை, நண்டு, புழு பூச்சி, தாவரப் பொருள்கள் ஆகியன இதன் உணவாகும்.

இனப்பெருக்கம்: இனப்பெருக்கக் காலத்தில் பெண் இரவு முழுதும் ஒஒக்கூ (Oook) என்ற உரத்த குரலில் கத்தியபடி இருக் கும். ஒரு செகண்டுக்கு ஒரு குரலொலி அல்லது இரண்டு செகண் டுக்கு மூன்று குரலொலி என்ற கணக்கில் தொடர்ந்து 20 முதல் 80 வரையான ஒக்கூக்களை எழுப்பும். பின்னர் சில நிமிடங்கள் இடை வெளி விட்டு மீண்டும் கத்தும்.

பெண் பல ஆண்களைத் தேடி உறவு கொள்வது. அது காதலில் முற்பட்டு நின்று காதலூடாட்டங்களை நிகழ்த்தி ஆணைக் கவரும். போட்டிக்கு வரும் பிற பெட்டைகளைச் சண்டையிட்டுத் துரத்தும். முட்டையிட்டவுடன் அடை காக்கும் பொறுப்பையும், குஞ்சுகளைப் பேணும் பொறுப்பையும் ஆணின் தலையில் சுமத்தி வேறு ஆண் துணையை நாடிச் செல்லும். பெண் பல ஆண் துணைகளை நாடும் பண்புடையது.

காலம்: ஆண்டு முழுதும்; சிறப்பாக ஜூலை முதல் செப்டம்பர் வரை. கூடு: புல்லால் மேடை போல நடுவில் சற்றுப் பதிவாக தரையிலோ அல்லது வயல் வரப்புக்களிலோ கட்டும். கூடு கட்டும் பொறுப்பும் ஆணுக்கே உரியது. முட்டை: 4 மட்டும். மஞ்சள் நிறத்தில் கரும் பழுப்புக் கறைகளோடு காணப்படும்.

Family: Recurvirostridae

138. கருப்பு உள்ளான்

430. Indian Blackwinged Stilt

Himantopus himantopus htmantopus (Linnaeus)

தோற்றம்: கௌதாரி அளவுள்ள இது சுமார் 25 செ. மீ. நீளமிருக்கும்.

அலகு சிறுத்துக் கருப்பாகக் காணப்படும்; விழிப்படலம் இரத்தச் சிவப்பு; கால்கள் பவளச் சிவப்பு நிறம்.

உடலின் மேற்பகுதியான பின் முதுகும், இறக்கைகளும் கருப்பாக இருக்கும். தலை, கழுத்து, மார்பு, வயிறு ஆகியன நல்ல வெண்மை; பறக்கும்போது கூரிதான கறுத்த இறக்கைகளும்,



கருப்பு உள்ளான்

பின் தொங்கும் பவளச் சிவப்பு நிறக் கால்களும் தூரத்திலிருந்தும் கூட அடையாளம் கண்டுகொள்ள உதவும்.

பெண்ணின் இறக்கைகளும் பின் முதுகும் கருப்புக்குப் பதிலாகக் கரும் பழுப்பு நிறங்கொண்டு திகழும். கோடையில் சில நிற வேறுபாடுகள் தோன்றுவது உண்டு.

காணப்படும் இடங்கள்: கேரளம் தவிர தென்னிந்தியா முழுதும். மைசூர் மாநிலத்தில் குளிர் காலத்தில் மட்டும் காணலாம். வேடந்தாங்கல், கோடிக்கரை ஆகிய இடங்களில் காணப்பட்ட குறிப்பு உண்டு. உள்நாட்டு நீர்நிலைகள், ஏரிகள், நீர் தேங்கிய வயல்கள் ஆகியவற்றை அடுத்துக் காணலாம். தென்னிந்தியாவில் இதனையும் முன் கண்ட மயில் உள்ளான், ஃபாலரோப் போல மிகக் குறைந்த எண்ணிக்கையில் அபூர்வமாகத்தான் காண முடியும்.

பழக்க வழக்கங்கள்: தனித்தும் கூட்டமாகவும் காணலாம். வயிறுவரை நீரில் மூழ்கத் தண்ணீரில் கால்களைத் தூக்கித் தூக்கி வைத்து நடந்து இரைதேடும். தலையை முழுவதுமாக நீரில் ஆழ்த்தி அலகால் துழாவிப் புழுபூச்சிகளைப் பிடிக்கும. கால்கள் தொங்க, கருப்பு நிறங்கொண்ட கூர்த்த இறக்கைகளை (Pointed wings) மெல்ல அசைத்துச் சாதாரணமாகவே பறக்கும்.

நீர்த்தாவரப் பொருள்கள், நத்தை, நண்டு, புழுபூச்சி முதலியன இதன் உணவு.

பறக்க எழும்போது, க்கிப், க்கிப் எனக் கத்தும். ஆபத்து என உணர்ந்தால், ச்சீக் ச்சீக் ச்சீக் எனக் குரல் கொடுத்தபடி சுற்றிச் சுற்றிப் பறக்கும்.

இனப்பெருக்கம்: இது தென்னிந்தியாவில் இனப்பெருக்கம் செய்வதற்கான ஆதாரங்கள் இன்னமும் கண்டு குறிக்கப்படவில்லை. வடநாட்டில் ஏப்ரல் முதல் ஆகஸ்ட் வரை தரையில் ஏரிப் படுகைகளிலும் ஆற்றிடைத் தீவுகளிலும் கூழாங்கற்களுக்கிடையே சேற்றுப் பழுப்பான கருப்புக் கரையோடு கூடிய 4 முட்டைகள் இடுகின்றது. ஆணும் பெண்ணும் குடும்பப் பொறுப்பேற்கின்றன.

139. நெட்டைக்கால் கோணமூக்கு உள்ளான்

432. Avocet

Recurvirostra avosetta (Linnaeus)

தோற்றம்: கௌதாரியை விட அளவில் பெரியது. நீண்ட கால்களுடன் சுமார் 46 செ. மீ. நீளம் இருக்கும்.

அலகு கருப்பு; விழிப்படலம் சிவந்த பழுப்பு நிறம், கால்கள் நீலங் கலந்த சாம்பல் நிறமாக இருக்கும்.

கருப்பும் வெண்மையுமான தோற்றம் கொண்ட இந்த உள்ளானை மேல் நோக்கி வளைந்த கோண மூக்கையும் நீண்ட கால்

களையும் கொண்டு மற்ற உள்ளான்களிலிருந்து எளிதில் பிரித்து அறியலாம்.



நெட்டைக்கால் சோணமுக்கு உள்ளான்

காணப்படும் இடங்கள் : தென்னிந்தியாவில் சிற் சில இடங்களில் குறைந்த எண்ணிக்கையில் குளிர் காலத்தில் மட்டும் காணலாம். கேரளாவில் காணப்பட்ட குறிப்பு இல்லை. கோடிக்கரை இராமேஸ்வரம் தீவு ஆகிய இடங்களில் காணப்பட்ட குறிப்பு உண்டு. ஏரிகள், சதுப்பு நிலங்கள், உப்பங்கழிகள், கடற்கரை சார்ந்த படுகைகள் ஆகியவற்றைச் சார்ந்த இடங்களில் காணலாம்.

பழக்க வழக்கங்கள் : இணையாகவோ, சிறு கூட்டமாகவோ காணலாம். சேற்றில் ஓடியாடியும் ஆழமற்ற நீரில் இறங்கியும் இரைதேடும். மேல் நோக்கி வளைந்த அலகை ஹாக்கி மட்டையைப்போல தரையில் வைத்துத் தரையைக் கிளறி புழுப்பூச்சிகளை வெளிப்படுத்திப் பிடிக்கும். வாத்துப் போல நீரில் மிதந்து நீந்தி இரைதேடுவதும் உண்டு.

சிறு நத்தைகள், கடல் வாழ் உயிர்கள், புழு பூச்சிகள் ஆகியன இதன் உணவு.

பறக்கும்போது, ச்கிலோயிட் என்ற ஒலிக் குறிப்பில் தொடர்ந்து பல முறை கத்திக் கேட்கலாம்.

இனப்பெருக்கம்: ஹாலண்ட், நார்வே டென்மார்க் போன்ற ஐரோப்பிய நாடுகளில் இனப்பெருக்கம் செய்யும் இது இந்தியாவில் கட்சுப் பகுதியில் இனப்பெருக்கம் செய்வதையும் அண்மையில் கண்டுபிடித்துள்ளனர். தரையில் அல்லது சேற்றுருண்டைகளான மேடையில் கருப்புக் கறைகளுடன் கூடி ஆலிவ் நிறந்தோய்ந்த பழுப்பான முட்டைகள் 4 இடும்.

Family: Dromandidae

140. நண்டு தின்னும் உப்புக்கொத்தி

434. Crab Plover

Dromas ardeola (Paykell)

தோற்றம்: கௌதாரியைவிட அளவில் சற்றுப் பெரியது. சுமார் 41 செ. மீ. நீளமிருக்கும்.



நண்டு தின்னும் உப்புக்கொத்தி.

அலகு நன்றாகத் தடித்துக் குறுகி கருப்பாக இருப்பதால் இதை வேறு உப்புக் கொத்திகளிலிருந்து எளிதில் பிரித்தறியலாம். கால்கள் சாம்பல் கலந்த வெண்நிறமாக இருக்கும். விழிப்படலம் பழுப்பு நிறம்.

பருத்த வெள்ளையும் கருப்புமான பறவை. பறக்கும்போது வெள்ளையான உடம்பும் கருப்பு நிறமான முதுகும் இறக்கைகளும் நன்கு மாறுபட்டுக் காட்சி தரும்.

காணப்படும் இடங்கள்: தென்னிந்தியாவில் இங்கும் அங்குமாக மிகக் குறைந்த எண்ணிக்கையிலேயே காணப்படுவது. கோடிக்கரையில் காணப்பட்ட குறிப்புண்டு. கடற்கரைப் படுகைகள், உப்பங்கழிகள், பவழத்திட்டுகள் ஆகியவற்றைச் சார்ந்து காணலாம்.

பழக்க வழக்கங்கள்: பெரும்பாலும் கடற்கரையை அடுத்துக் கூட்டமாகக் காணலாம். வடநாட்டில் 60 முதல் 70 வரையான பெருங் கூட்டமாகத் திகழ்வதும் உண்டு. சிலபோது தனித்தும் திரியும். மிகவும் அஞ்சும் சுபாவமுடைய இது காலை, மாலை அந்திகளில் தாவித் தாவி விரைந்து ஓடி உப்புக் கொத்தியைப்போல இரைதேடும். இது பறப்பது தாமரைக் கோழி பறப்பதைப் பெரிதும் ஒத்திருக்கும்.

கடற்கரையில் வாழும் நண்டுகளே இதன் முக்கிய உணவு.

இட்சுக் இட்சுக், ச்சுக்கு, ச்சுக்கு ச்சுக்கு எனக் கத்தும் குரலொலியுடையது இது.

இனப்பெருக்கம்: தென்னிந்தியாவிற்கு வெளியே மே ஜூன் மாதங்களில் பெர்சியன் வளைகுடாப் பகுதியில் பவளத் திட்டுகளில் நண்டு வளைகளை ஒரு மீட்டர் ஆழமுடையதாகத் தோண்டி ஒரே ஓர் முட்டையிடும்.

Family: Burhinidae

கண்கிலேடிகள்

(STONE GURLEWS)

141. கண்கிலேடி

436. Indian Stone Curlew

Burhinus Oedicnemus indicus (Salvadori)

தோற்றம்: கௌதாரியைவிட அளவில் பெரியது. சுமார் 41 செ. மீ. நீளம் இருக்கும்.

அலகு மஞ்சள் நிறம்; விழிப்படலம் மஞ்சள்; கால்கள் மஞ்சள் நிறம்; நீண்ட கால்களின் மூட்டுக்கள் சற்றுப் பருத்திருக்கும். கண்கள் பெரிதாக உருண்டு காணப்படும்.

உடலின் மேற்பகுதி கருங்கோடுகளோடு கூடிய மணல் பழுப்பாக இருக்கும். தலை சற்றுப் பருத்திருக்கும். மூடிய இறக்கைகளின் மேல் ஒரு வெளிர் மஞ்சள் பட்டை காணப்படும். பறக்கும்போது, இரண்டு குறுகிய வெள்ளைப் பட்டைகளும், வெண்மையான கறையும் கருத்த இறக்கைகளில் காணப்படும்.

காணப்படும் இடங்கள் : தென்னிந்தியா முழுதும் ஆங்காங்கு சமவெளிகளிலும், மாலைகளில் 1000 மீட்டர் உயரம் வரையும் காணலாம். மலைப் பகுதிகளைச் சார்ந்த கல்லும் முள்ளுமான வறள் காடுகளிலும், காய்ந்த காட்டாற்றுப் படுகைகளிலும், கருவேலந் தோப்புக்களிலும் காணலாம்.

வழக்கங்கள் : பெரும்பாலும் காலை மாலை அந்திகளிலும், இரவு நேரத்திலுமே வெளிப்பட்டு மேய்வது இது. இணையாகவோ, 5 முதல் 6 வரையான சிறு கூட்டமாகவோ திரியும். குளிர்காலத்தில் 50 வரையான கூட்டமாகவும் காணலாம். ஒரு குறிப்பிட்ட பகுதியில் இரை தேடிப் பழக்கப்பட்ட பறவைகள் திரும்பத் திரும்ப அப் பகுதிக்கே வரக்காணலாம். குளிர் காலத்தில் இவை இடம் விட்டுப் பெயர்தலும் உண்டு. வெயில் நேரத்தில் புதர்களின் இடையிலோ மரத்தடியிலோ பதுங்கிப் படுத்திருக்கும். வேட்டை நாய்களோ வேட்டைக்காரர்களோ துரத்தும்போது சற்றுத் தூரம் தரையை ஒட்டித் தாழப் பறந்து மீண்டும் புதர்களில் மறையும். தரையோடு தரையாகப் படுத்துக் கொண்டு கண்களை மட்டும் உருட்டித் தன்னைத் தொடர்பவர்களைக் கவனிக்கும். அப்படி இது படுத்திருக்கும் போது இதன் நிறமும் தரையின் நிறமும் ஒன்றுபோலவே ஒற்றுமைப்பட்டு விளங்கக் காணலாம். உப்புக் கொத்தியைப் போல வேகமாகப் பறக்கும் ஆற்றல் வாய்ந்தது இது.

புழு பூச்சிகள், ஊர்வன, விதைகள் முதலியன இதன் உணவு. பொடி மணல் இதன் வயிற்றில் ஓரளவு சாதாரணமாகக் காணப் படும்.

பிக், பிக், பிக், பிக் எனத் தொடர்ந்து கத்தி இறுதியில் பிக்விக் பிக்விக் என முடிக்கும். காலை, மாலை அந்தியிலும் நிலவு வீசும் இரவுகளிலும் இதன் குரலைத் தொடர்ந்து கேட்கலாம்.

இனப்பெருக்கம் : காலம் : பிப்ரவரி முதல் ஆகஸ்ட் வரை. கூடு : கற்கள் நிறைந்த தரையில் குழியில் புதர்களின் ஓரத்தில் அல்லது மண் மேட்டின் ஓரத்தில் முட்டை இடும். முட்டை : 2; வெளிர் மஞ்சள் நிறத்தில் சிவப்புக் கறைகளோடு காணப்படும்.

142 முசல் கின்ஞந்தி

437. Great Stone Plover

Esacus magnirostris recurvirostris (Cuvier)

தோற்றம் : அளவில் இது வீட்டுக் கோழியை ஒத்திருக்கும். சுமார் 51 செ. மீ. நீளமிருக்கும்

அலகு கருப்பு நிறம். அடிப் பகுதி பசுமை தோய்ந்த மஞ்சள் நிறம்; அலகு சற்று மேல் நோக்கி வளைந்திருக்கும். விழிப்படலம் வெளிர் மஞ்சள் நிறம்; கால்கள் மஞ்சள் நிறம்.

தோற்றத்தில் இது முன்னதை ஒத்து அளவில் சற்றுப் பெரியதாக இருக்கும். பெரிய உருண்டையான கண்களுக்கு மேலும் கீழுமாக இரண்டு கருப்புப் பட்டைகள் காணப்படும். இறக்கைகள் மடக்கி அமர்ந்திருக்கும்போது முதுகு பக்கத்தில் கருப்பு வண்ணம் தெளிவாகக் காணலாம். மற்றபடி உடலின் மேற்பகுதி சாம்பல் நிறங்கலந்த மணல் நிறமாகக் காணப்படும். உடலின் கீழ்ப்பகுதி தெளிவாகப் பளிச்சிடும். இது பறக்கும் விதம் தூரத்திலிருந்து பார்த்தால் வாத்துப் பறப்பது போல இருக்கும்.

காணப்படும் இடங்கள் : தென்னிந்தியா முழுதும் ஆங்காங்கு காணலாம். பேராறுகளின் பாறைகள் மிகுந்த படுகைகளிலும் அந்த ஆறுகளை அடுத்த வறள் காடுகளிலும் காணலாம். சில போது கடற்கரைப் படுகைகள், உப்பங்கழிகள் ஆகிய இடங்களிலும் காணலாம். கோடிக் கரையில் காணப்பட்ட குறிப்பு உண்டு (Check list of Birds of Tamil Nadu). இராமேசுவரம் தீவில் அக்டோபர் முதல் டிசம்பர் வரை மிகுதியாகக் காணப்படுகிறது Biddulph; JBNHS: Vol. 40 : 250).

பழக்க வழக்கங்கள் : முந்தையக் கண்கிலேடியைப் போலவே காலை, மாலை அந்திகளில் வெளிப்பட்டு மேயும் பழக்க முடையது. ஆனால் கண்கிலேடியைப் போல இது பகல் நேர வெயிலை வெறுப்பதில்லை. ஆற்றின் இடையில் பாறைகள் மீது இவை வெயில் காய்ந்தபடி தூங்கியபடி நிற்கக் காணலாம். பெரும்பாலும் சிறு கூட்டமாக 4 முதல் 6 வரையான பறவைகள் சேர்ந்து திரியும். மற்றப் பழக்க வழக்கங்கள் முன்னதைப் போலவே.

இதன் அலகு கற்களை நகர்த்தி அவற்றின் அடியே மறைந்திருக்கும் நண்டுகளைப் பிடித்துத் தின்ன ஏற்ற வகையில் பெரிதாக உறுதியாக அமைந்துள்ளது. நண்டுகளோடு கூட நத்தைகள், தவளை, புழு பூச்சி முதலியவற்றையும் தின்னும். உள்ளான்

(Kentish Plover) கூட்டிலிருக்கும் முட்டையை இது திருடித் தின்பதும் கண்டு குறிக்கப்பட்டுள்ளது.

இனப்பெருக்கம் காலம்: பிப்ரவரி முதல் ஜூன் வரை. கூடு: ஆற்றில் மணல் மேட்டில் வெட்ட வெளியில் குழிவான இடத்தில் முட்டையிடும். பாறைமீது முட்டையிடுவதும் உண்டு; பல ஆண்டுகள் தொடர்ந்து ஒரே இடத்தில் முட்டையிடக் காணலாம். முட்டை: 2 மட்டும்; பலவகை நிறங்களில் காணப்படுகிறது. சிவப்பு முதலான கறைகள் கொண்டிருக்கும்.

Family: Glareolidae

143. செங்காட்டுக் கல்குருவி

440. Indian Courser

Cursorius coromandelieus (*Gmelin*)

தோற்றம்: அளவில் கௌதாரியை விடச் சிறியது. சுமார் 21 செ. மீ. நீளமிருக்கும்.

அலகு கருப்பு நிறம்; விழிப்படலம் ஆழ்ந்த பழுப்பு; கால்கள் தந்த வெண் நிறமாகச் சாம்பல் நிற விரல்களோடு காட்சி தரும்.

ஆள்காட்டியை ஒத்த மணல் பழுப்பான இதன் அலகு சிறிதாக மெலிந்து சற்று வளைந்து காணப்படும். தலை உச்சி கருஞ் சிவப்பாக இருக்கும். கண்கள் வழியாகப் பின் கழுத்தை நோக்கிக் கருப்பும் வெள்ளையுமான இரு கோடுகள் செல்லக் காணலாம். தொண்டை, கழுத்து ஆகியன வெண்மையாகவும், மேல் மார்பு செம்பழுப்பாகவும், வயிறு கருப்பாகவும், வாலடி வெண்மையாகவும் தோற்றம் தரும். பறக்கும்போது இது தோல் குருவி உள்ளானைப் போலக் காட்சி தரும். பறகும்போது இறக்கையின் அடிப்பாகம் கறுத்துக் காணப்படும்.

காணப்படும் இடங்கள்: தென்னிந்தியா முழுவதும் ஆங்காங்கே காணலாம். வறண்ட மேய்ச்சல் நிலங்களிலும், கிராமங்களை அடுத்த சிறு காடுகளிலும் காணலாம். நீர்வளமிக்க பகுதிகளை இது விரும்புவது இல்லை.

பழக்க வழக்கங்கள்: ஆணும் பெண்ணுமான இணையாகவோ, சிறு கூட்டமாகவோ காணலாம். இது விரும்பி வாழும் தரையின் நிறமும் இதன் நிறமும் மிக ஒத்துப் போவதால், இது அசையாது நிற்கும்போது இதனைக் கண்டு கொள்வது கடினம். அடிக்கடி தலை

தாழ்த்திப் புழுப் பூச்சிகளைப் பிடித்துத் தின்னும் இதன் செயல் உள்ளான் இரை தேடும் முறையை நினைவூட்டும். மனிதர்கள் நெருங்கினால் அஞ்சியோடும் இது, நின்று, நின்று திரும்பிப் பார்த்துச் செல்லும். விடாது துரத்தினால் எழுந்து தரையை ஒட்டி 50 முதல் 100 மீட்டர் தூரம் வரை பறந்து, மறுபடியும் தரையில் இறங்கித் திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொண்டே ஓடும். விடாது துரத்தும்போது உயரப் பறந்து வெகு தூரம் சென்று விடுவதும் உண்டு.

வண்டுகள், அவற்றின் முட்டை, வெட்டுக்கிளி, சில் வண்டு ஆகியவை இதன் உணவு.

கத்தும் பழக்கம் இதற்கு இல்லை; பறக்க எழும்போது மட்டும் சிறு குரல் கொடுக்கும்.

இனப்பெருக்கம்: காலம்: மார்ச் முதல் ஆகஸ்ட் வரை. கூடு: பொட்டல் நிலத்தில் கட்டாந்தரையில் சற்றுக் குழிவான இடத்தில் முட்டையிடும். முட்டை: 2 அல்லது 3; நல்ல வெளிர் மஞ்சள் நிறமாக இருக்கும்; கருப்புப் புள்ளிகளும் கறைகளும் பெற்று விளங்கும், பெண்ணே பெரும்பாலும் அடைகாத்துக் குஞ்சுகளைப் பேணும்.

144. பெரிய தோல் உப்புக் கொத்தி

443. Large Indian Pratincole or Swallow Plover

Glareola pratincola maldivarum (J. M. Forster)

தோற்றம்: மைனா அளவுள்ள இது சுமார். 24 செ. மீ. நீளமிருக்கும்.

அலகு கருப்பு நிறம்; விழிப்படலம் பழுப்பு; கால்கள் இளஞ்சிவப்புக் கலந்த பழுப்பு நிறம்.

குறுகிய கால்களோடு கூடிய ஆலாவைப் போல் உருவங் கொண்ட உப்புக் கொத்தி இது. உட்கார்ந்திருக்கும்போது குவிந்த வால் பிளவுபட்ட வால் வரை நீளும். தலையும் முதுகும் ஆலிவ் பழுப்பு நிறம். வால் போர்வை இறகுகள் வெண்மையாக இருக்கும். மோவாயும், தொண்டையும் கருஞ்சிவப்பாக வெளிர் மஞ்சள் வளையத்தோடு காணப்படும். மேல் மார்பு பழுப்பாகவும், அடிமார்பு கருஞ்சிவப்பாகவும். வயிறும் வாலடியும் வெண்மையாகவும் இருக்கும். இறக்கை அடிப் போர்வை இறகுகள் (Under Wing-Coverts) இறக்கை விளிம்பு ஆகியன செம்பழுப்பு நிறம்.

காணப்படும் இடங்கள்: தென்னிந்தியாவின் சில பகுதிகளில் மட்டும் குளிர் காலத்தில் காணலாம். காய்ந்த ஆற்றும் படுகைகள் சதுப்பு நிலங்கள், உழுத நிலப்பகுதிகள் ஈரமிகுந்த மேய்ச்சல் நிலங்கள், கடற்கரைப் பகுதிகள் ஆகிய இடங்களில் காணலாம்.

பழக்க வழக்கங்கள்: 40 முதல் 50 பறவைகள் வரை கூட்ட மாக மாலை நேரங்களில் சுறு சுறுப்பாகப் பறந்து பூச்சிகளைத் தகைவிலான் (Swallows) களைப் போலப் பிடிக்கக் காணலாம். மேக மூட்டமான நாட்களில் நாள் முழுவதும் சுறு சுறுப்பாக இருக்கும். தகைவிலான் குருவியைப் போல உயரப் பறந்து பறக்கும் பூச்சிகளைப் பிடித்துத் தின்னும். வளைந்து வளைந்தும் வட்டமிட்டும் பறந்து திறமையாகப் பாய்ந்து பூச்சிகளைப் பிடிக்கும். புல் வெளி கள், வயல்கள் ஆகியவற்றின் மீது தாழ்வாகப் பறந்தும் இரை தேடக் காணலாம். சிலபோது தரையில் நடந்து ஓடியும் இரை தேடும். இது வெயில் நேரத்தில் ஆற்றிடை மணல் மேடுகளிலோ சோர்வாகக் கூட்டமாக நின்றபடி பகல் முழுவதையும் கழிக்கக் காண லாம்

பறக்கும் பூச்சிகள், வண்டுகள், கரையான் முதலியவை முக்கிய உணவு.

பறக்கும்போது, க்கிர்ர்ர், க்கிர்ர்ர் எனக் கத்தியபடி இருக்கும்.

இனப்பெருக்கம்: தென்னிந்தியாவிற்கு வெளியே — ஏப்ரல் ஜூன் மாதங்களில் புல் வெளிகளில் கூட்டமாக அருகருகே வெளிர் மஞ்சள் நிறமான 2 அல்லது 3 முட்டைகள் இடும்.

145. சின்னத் தோல் உப்புக்கொத்திக் குருவி

444. Small Indian Pratincole or Swallow Plover

Glareola lactea (Temminck)

தோற்றம்: ஊர்க்குருவியை விடச் சற்றுப் பெரியதாக இருக்கும் இது சுமார் 17 செ. மீ. நீளமிருக்கும்.

அலகு கருப்பு நிறம்; விழிப்படலம் ஆழ்ந்த பழுப்பு; கால்கள் நல்ல பச்சை நிறம்.

முன்கண்ட தோல் உப்புக் கொத்தியை விட அளவில் மிகச் சிறியது. இதன் வால் சற்றுப் பிளவுபட்டிருக்கும். உடலின் மேற் பகுதி சாம்பல் நிறந் தோய்ந்த மணல் நிறமாக இருக்கும். நெற்றி பழுப்பு நிறம். கண்ணிலிருந்து அலகின் அடிப்பாகம் வரை கருப் பான ஒரு கோடு செல்லும். வால்மேல் இறகுகள் வெண்மையாக

வும் வால் நுனி கருப்பாகவும் இருக்கும். மேல் மார்பு கருஞ்சிவப்புக் கலந்த புகைப் பழுப்பாகவும், அடி மார்பும் வயிறும் வெண்மையாக வும் காணப்படும். மாலை மங்கிய பிறகு, இது பறக்கும்போது வௌ வால் எனத் தவருகப் புரிந்துகொள்ள நேரிடும்.

காணப்படும் இடங்கள் : தென்னிந்தியாவில் சில பகுதிகளில் காணலாம். தமிழகத்தில் பாலாற்று மணற்பரப்பில் செங்கல்பட்டு மாவட்டத்தில் காணப்பட்ட குறிப்பு உண்டு (Check list of birds of Tamil Nadu). ஆற்றங்கரை சார்ந்த மணல் திட்டுக்களிலும் சதுப்பு நிலங்களிலும் காணலாம்.

பழக்க வழக்கங்கள் : முன்கண்ட தோல் குருவியை விட நீர் வளம் மிக்க பகுதியை விரும்புவது இது. ஆறு, ஏரி சார்ந்த வயல் வெளிகளிலும், படுகைகளிலும் சிறு கூட்டமாகவும் பலநூறு பற வைகள் சேர்ந்த பெருங் கூட்டமாகவும் காணலாம். காலை, மாலை அந்திகளில் பறந்து புழுபூச்சிகளைப் பிடிக்கும். வானம் நன்ருக இருட்டும்வரைப் பறந்து கொண்டிருக்கக் காணலாம். தண்ணீரின் மேல் பறக்கும் பூச்சிகளையும் வயல்களின் மேல் பறக்கும் பூச்சிகளையும் தாழப் பறந்து லாவகமாகப் பிடிக்கும் கூட்ட மாகப் பறந்து இரைதேடும் இவை சற்றைக்கொருதரம் களைத்துப்போனவை போல மணல்மேடுகளில் வந்து அமர்ந்து கொள்ளும். பின் சொல்லி வைத்தாற்போல் எல்லாம் கூட்ட மாக எழுந்து பறந்து இரை தேடத் தொடங்கும். சுற்றிச் சுற்றி வளைத்தும், மேலும் கீழுமாகவும் பறந்து தகை விலான் களோடு கூடி இது பூச்சி பிடிக்கும்போது, மாலை நேரத்தில் இதனை வௌவால்களிலிருந்தும் தகைவிலான்களிலிருந்தும் பிரித்து அறி வது கடினம்.

வண்டுகள், கரையான், பறக்கும் பூச்சி முதலியன இதன் முக் கிய உணவு.

ட்டுக்.. ட்டுக்,... ட்டுக் எனவும் ட்டிரிட்ரிட் ட்டிரிட்ரிட் எனவும் கத்தும்.

இனப்பெருக்கம் : காலம் : பிப்ரவரி முதல் ஏப்ரல் வரை. கூடு : ஆற்றில் மணல் திட்டுக்களின் மேல் கூட்டமாகப் பல பறவைகள் அருகருகே சிறு குழியில் வெறுந்தரையில் முட்டையிடும். முட்டை : 2 அல்லது 3; மணல் நிறங் கலந்த வெளிர் மஞ்சள் நிறத்தில் சாம்பற் பழுப்பு செம்பழுப்புக் கறைகளோடு காணப்படும்.

ஆணும் பெண்ணும் குடும்பப் பொறுப்பு ஏற்கும்.

Family: Laridae

கடற்காக்கைகளும் ஆலாக்களும்
(GULLS AND TERNS)

146. கருமுதுகுக் கடற்காக்கை

452. Lesser Blackbacked Gull

Larus fuscus fuscus (*Linnaeus*)

தோற்றம் : வீட்டு வாத்து அளவுள்ள இது சுமார் 60 செ. மீ. நீளமிருக்கும்.

அலகு மஞ்சள் நிறம்; விழிப்படலம் வெண்மை; கால்கள் ஆரஞ்சு மஞ்சள் நிறம்.

தலை, கழுத்து, உடலின் கீழ்ப்பகுதி ஆகியன வெண்மையாக இருக்கும். முதுகும், தோள் பட்டையும்' கறுத்த சாம்பல் நிறமாக ஓரளவு கருப்பு என்று சொல்லும்படியாகவே தோற்றம் தரும். பறக்கும்போது இறக்கைகளின் வெள்ளை விளிம்புகளும். கருத்த முதுகும் மற்ற கடற்காக்கைகளிலிருந்து இதனை வேறுபடுத்திக் காட்டும். குளிர்காலத்தில் இது இங்கே வலசை வரும்போது தலை யில் பழுப்பு நிறமான கோடுகள் மிகுதியாகக் காணலாம்.

காணப்படும் இடங்கள்: தென்னிந்தியாவில் மேற்குக் கிழக்குக் கடற்கரைப் பகுதிகளில் செப்டம்பர் முதல் மே வரை காணலாம். கோடிக்கரையில் காணப்பட்ட குறிப்புண்டு.

பழக்க வழக்கங்கள் : எப்பொழுதும் கூட்டமாகவே காணப் படும். கடற்கரைகளிலும் துறைமுகங்களிலும், மீன் பிடிக்கும் துறைகளிலும், கருடனோடும் பிற கடற்காக்கைகளோடும் சேர்ந்து பறக்கக் காணலாம் நீரில் மிதக்கும் 'கழிவு உணவுப் பொருள்கள், மற்ற உணவுப் பண்டங்களைப் பறந்து பாய்ந்து கவ்வியோ, நீரில் அவற்றின் அருகே அமர்ந்தோ தின்னக் காணலாம். அலைகள் மோதும் கடற்கரை ஓரத்தில் மெல்ல நடந்து நண்டு முதலான கடல்வாழ் உயிர்களைப் பிடித்துத் தின்பதும் உண்டு. இறந்து கரையில் ஒதுங்கிய மீன், அழுகிய உணவுப் பண்டங்கள், நண்டு கள், புழுக்கள் முதலியவை இதன் உணவு. இனப்பெருக்கம் செய் யும் இடத்தில் ஆலாவின் முட்டைகளையும், சிறு கடற் காகங்களின் முட்டைகளையும் திருடித் தின்னும்.

கீஓவ்.. கீஓவ்... என உரத்த குரலில் கத்தும்.

இனப்பெருக்கம் : இந்தியாவிற்கு வெளியே.

147. பெரிய கருந்தலைக் கடற்காக்கை
453. Great Blackheaded Gull
Larus ichthyaetus (Pallas)

தோற்றம் : வீட்டு வாத்தை விட அளவிற் பெரியது. 65 முதல் 72 செ. மீ. நீளமிருக்கும்.

அலகு மஞ்சள் நிறமாக சிவப்பு முனையோடு காணப்படும் விழிப்படலம் பழுப்பு; கால்கள் வெளிர் மஞ்சள் நிறம்.

தலையும், கழுத்தும் கருப்பாகக் காணப்படும். கண்ணுக்கு மேலும் கீழுமாக இரண்டு வெள்ளை வளையங்கள் அழகு செய்யும். முதுகு சாம்பல் நிறமாகச் சிலேட் நிறம் தோய்ந்தது போல இருக்கும். உடலின் கீழ்ப்பகுதி வெள்ளை. இறக்கைகள் வெள்ளை விளிம்புகளோடும் கருப்புப் பட்டைகளோடும காட்சி தரும்.

குளிர்காலத்தில் தென்னிந்தியாவிற்கு வலசை வரும்போது இதன் தலை வெண்மையாகப் பழுப்புக் கோடுகளோடு காணப்படும். பிப்ரவரி மாத வாக்கில் தலை முழுதும் கருமை நிறம் பெறும்.

காணப்படும் இடங்கள் : தென்னிந்தியக் கடற்கரை சார்ந்த பகுதிகளில் குளிர்காலத்தில் காணலாம். அதே காலத்தில் சில பகுதிகள் உள்நாட்டில் பெரிய ஏரிகளையும் ஆற்றுக் கழி துறைகளையும் சார்ந்து காணலாம். செப்டம்பரில் வலசை வந்து மே மாதத்தில் திரும்புகின்றன.

பழக்க வழக்கங்கள் : இதனைப் பெரும்பாலும் தனித்தே காணலாம். சிலபோது அபூர்வமாகக் கூட்டமாகக் காணலாம். கேரளாவில் உபபங்கழிகளின் மேல் 50 வரையான கூட்டம் பறக்கக்கண்ட குறிப்பு உண்டு. மீன்பிடிப்பவர்களின் கட்டுமரங்களைத் தொடர்ந்து மீனவர்கள் உதவாதவை என எறியும் மீன்களை விழுங்கி வரும். துறைமுகங்களில் எறியப்படும் அழுகிய பண்டங்களை நாடி மற்றக் கடற் காகங்களைப்போல இது வருவதில்லை. கடல் நீரில் அலைகள் மேல் மிதந்து அமர்ந்தபடி கரையைவிட்டு வெகுதூரம தள்ளி இது ஓய்வு கொள்வது போல இருப்பதைக் காணலாம்.

மீன்கள், நண்டுகள் முக்கிய உணவு. முட்டைகளைத் திருடித் தின்னும் பழக்கமுள்ளவை.

க்க்ரா என உரத்த முரட்டுக் குரலில் கத்தும்.

இனப்பெருக்கம் : இந்தியாவிற்கு வெளியே.

148. பழுப்புத் தலைக் கடற்காக்கை

454. Brownheaded Gull

Larus brunnicephalus (Jerdon)

தோற்றம்: அண்டங்காக்கையின் அளவுடையது. சுமார் 46 செ. மீ. நீளமிருக்கும்.

அலகும், கால்களும் நல்ல சிவப்பாக இருக்கும்; விழிப்படலம் வெண்மை.



பழுப்புத் தலைக் கடற்காக்கை

பெரிய கருந்தலைக் கடற்காக்கையை விட அளவில் சற்றுச் சிறியது. உடலின் மேற்பகுதி சாம்பல் நிறமாகவும், கீழ்ப்பகுதி வெண்மையாகவும் இருக்கும். கோடைக் காலத்தில் இதன் தலை காபிப் பவுடர் நிறமாக மாறும். அடுத்த இனமான கருந்தலைக் காக்கையை விடப் பெரியது. எப்போதும் அதனையும் இதனையும் நம் பகுதிகளில் ஒன்றாகவே காணலாம். பறக்கும்போது வேறுபாடு அறியத் துணை செய்வது இறக்கை

பழுப்புத்தலைக்கடற்காக்கை



இனப்பெருக்கம்   குளிர்காலத்தில் வலசை போதல்

களில் கண்ணுடி பதிந்தது போலக் காணப்படும் வெண்மை நிறப் பட்டைகளே. அடுத்த கருந்தலைக் காக்கைக்கு இந்த வெண்மை நிறப் பட்டைகள் கிடையாது.

குளிர்காலத்தில் இதன் தலை சாம்பல் நிறங் கலந்த வெண்மை யாகக் காட்சி தரும். காதுகளின் மேல் கீழ்நோக்கி வளைந்த கருப்பு வளையங்கள் காணலாம். மார்ச் இறுதியில் தலை காபி பவுடர் நிறப் பழுப்பாக மாறும்.

காணப்படும் இடங்கள்: குளிர்காலத்தில் தென்னிந்தியக் கடற்கரைப் பகுதிகள் நெடுகக் காணலாம். உப்பங்கழிகள், மீனவர் வாழும் கிராமங்கள், கழிமுகத்துறைகள் ஆகியவற்றைச் சார்ந்து பறக்கும். உள்நாட்டில் பெரிய ஏரிகளின் மீதும் ஒன்றிரண்டு பறக் கக் காணலாம்.

பழக்க வழக்கங்கள்: கூட்டமாகச் செம்பருந்து, பாப்பருந்து ஆகியவற்ருேடும், கருந்தலைக் கடற்காக்கையோடும் சேர்ந்து துறை முகங்களில் வட்டமிட்டுப் பறந்து கொண்டிருக்கக் காணலாம். கப்ப லிலிருந்து எறியப்படும் அழுகல் உணவுப் பொருள்களை உணவா கக் கொள்ளும். துறைமுகத்திலிருந்து புறப்பட்டுச் செல்லும் கப் பல்களைச் சற்று தூரம் வரை தொடர்ந்து செல்லும். கடலின் நீரின் மேல் அமர்ந்து இரையைத் தின்று பின் மறுபடியும் பறந்து கப்பலைப் பின்பற்றும்.

மீன்கள், புழு பூச்சிகள், அழுகல் பண்டங்கள் முதலியன உணவு.

க்கியா என அண்டங் காக்கையைப் போலக் கத்தும்.

இனப்பெருக்கம்: தென்னிந்தியாவிற்கு வெளியே; லடாக் பகுதியில் ஏரிகளில் நீரில் மிதக்கும் புல் கற்றைகளாலான கூட் டில், பச்சை நீல நிறங்களில், கருப்புப் புள்ளிகளோடு கூடிய 3 முட்டைகள் இடும்.

149. கருத்தலைக் கடற்காக்கை

455. Blackheaded Gull

Larus ridibundus ridibundus (*Linnaeus*)

தோற்றம்: காக்கை அளவுடைய இது சுமார் 43 செ. மீ. நீளம் இருக்கும்.

அலகும் கால்களும் நல்ல சிவப்பு. விழிப்படலம் ஆழ்ந்த பழுப்பு நிறம்.

கோடைக் காலத்தில் இதன் தலை கரும்பழுப்பாக இருக்கும். குளிர்காலத்தில் இங்கு வரும்போது சாம்பல் நிறமாக இருக்கும். தலை மார்ச் வாக்கில் கருப்பாக மாறத் தொடங்கும்.

உடலின் மேற்பகுதி சாம்பல் நிறமாகவும் கீழ்ப் பகுதி வெண்மையாகவும் இருக்கும். குளிர்காலத்தில் பெரும்பாலும் பழுப்புத் தலைக் கடற் காக்கையைத் தோற்றத்தில் ஒத்திருக்கும் இதனைப் பறக்கும்போது இறக்கைகளில் கண்ணாடி பதித்தது போன்ற வெள்ளைப் பட்டைகள் இல்லாதிருப்பது கொண்டு வேறுபடுத்தி அறியலாம். மேலும் இதன் இறக்கை வெளி விளிம்பு வெள்ளையாக இருப்பதும் அடையாளங் கண்டு கொள்ளத் துணை செய்யும்.

காணப்படும் இடங்கள் : குளிர்காலத்தில் தென்னிந்தியக் கடற்கரை நெடுகக் காணலாம்; மேற்குக் கடற்கரையில் மிகுதியாகக் காணலாம். துறைமுகங்கள், நகர்ப்புறக் கடற்கரைகள், உப்பங்கழிகள் ஆகியவற்றைச் சார்ந்து பறக்கக் காணலாம்.

பழக்க வழக்கங்கள் : பெரும்பாலும் முந்தைய பழுப்புத்தலைக் காக்கையைப் போன்றனவே.

இனப்பெருக்கம் : இந்தியாவிற்கு வெளியே.

150, சேற்று ஆலா

458. Indian Whiskered Tern

Chlidonias hybrida indica (Stephens)

தோற்றம் : புறாவைவிட அளவில் சற்றுச் சிறியது. சுமார் 35 செ. மீ. நீளமிருக்கும்.

அலகு நல்ல சிவப்பு; விழிப்படலம் பழுப்பு; கால்கள் வெளிர் சிவப்பு நிறம். குளிர் காலத்தில் அலகு கருப்பாக மாறும்.

சற்றே பிளவு பட்ட வாலும், நீண்டு குவிந்த (pointed) வாலை விட நீண்டு செல்லும் இறகுகளும் கொண்டது இது. உடலின் மேற்பகுதி வெளிர் சாம்பல் நிறம்; கீழ்ப்பகுதி வெண்மை.

கோடையில் தலை முழுதும் கருப்புத் தொப்பி அணிந்தது போலக் கருப்பாகக் காட்சி தரும். வயிறும் கறுப்பு நிறமாக மாறும். மோவாய் வெள்ளையாக இருக்கும்.

குளிர் காலத்தில் தலையில் சிறிய கருப்புப் புள்ளிகள் மட்டுமே காணப்படும்.

காணப்படும் இடங்கள் : தென்னிந்தியா முழுதும் எப்போதும் காணலாம். குளிர் காலத்தில் மிகுந்த எண்ணிக்கையில் காண லாம். உள்நாட்டு ஏரிகள், நீர் நிறைந்த வயல்கள், கடற்கரைப் படுகைகள், ஆற்றுக் கழிமுகங்கள் ஆகியவற்றின் மீது பறந்து திரியக் காணலாம்.

பழக்க வழக்கங்கள் : நீர்ப்பரப்பிற்குமேல் 3 முதல் 6 மீட்டர் உயரத்தில் குறுக்கும் மறுக்குமாகக் கூட்டமாகப் பறந்து கொண் டிருக்கக் காணலாம். நீர்ப் பரப்பில் ஏதேனும் சலனம் தென்படு கின்றதா என ஆவலோடு பார்த்தபடியே பறக்கும் இது, திடீரென நீர்ப்பரப்பின் மீது தாழப் பறந்து, அலகால் மீனைக் கொத்தி எடுத் துக் கொண்டபின் மீண்டும் பழையபடியே பறக்கத் தொடங்கும் சிலபோது நீரில் பாய்ந்து கடல் ஆலாவைப் போல மீனைப் பிடிப் பதும் உண்டு. விளை நிலங்களின் மேல் பறக்கும் புழு பூச்சிகளையும் இவை துரத்திப் பிடிப்பதைக் காணலாம்.

மீன், நண்டு, தவளை, தட்டாம் பூச்சி, வெட்டுக்கிளி முதலியன இதன் உணவாகும்.

இனப்பெருக்கம் : தென் இந்தியாவிற்கு வெளியே— நீர் நிலை களில் தாமரைக் கொடிகளிடையே கூட்டமாகச் சேர்ந்து இனப் பெருக்கம் செய்யும்.

151. பெரிய அலகு ஆலா

460. Gullbilled Tern

Gelochelidon nilotica nilotica (Gmelin)

தோற்றம் : காக்கையைவிட அளவில் சற்றுச் சிறியது. சுமார் 38 செ. மீ. நீளமிருக்கும்.

அலகுப் பருத்துக் கடற்காக்கையின் அலகுபோல் இருக்கும். நிறம் கருப்பு; விழிப்படலம் பழுப்பு; கால்கள் கருப்பு நிறம்.

வெளிர் சாம்பல் நிறமான தோற்றம் கொண்டது; சேற்று ஆலாவை விடச் சற்றுப் பெரிய ஆலா இது. இதன் வால் நன்றாகப் பிளவு பட்டிருக்கும். குளிர்காலத்தில் தலை வெள்ளையும் கருப்புமான கோடுகளோடு காட்சி தரும். கண்ணைச் சுற்றிக் கருப்புப் பட்டை மட்டும் காணலாம்.

கோடையில் கழுத்து, உச்சந்தலை, நெற்றி ஆகியன நல்ல கருப்பாக மாறும்.

காணப்படும் இடங்கள் : குளிர்காலத்தில் தென்னிந்தியா முழுதும் உப்பங்கழிகள், ஆற்றுக்கழிமுகம், கடல் துறைகள், பெரிய ஏரிகள், ஆறுகள் இவற்றைச் சார்ந்து காணலாம்.



பெரிய அலகு ஆலா

பழக்க வழக்கங்கள் : தனித்தும், இரண்டு, மூன்று பறவைகளாகச் சேர்ந்தும் பறந்து திரியும். மற்ற ஆலாக்களின் கூட்டங்களிலும் காணலாம். தரையோடு தாழ்ந்து பறந்து மணல், சேற்று நிலங்களிலிருந்து இரையை அலகால் எடுத்துத் தின்னும். விளை நிலங்களின் மீது பறந்து, பறக்கும் பூச்சிகள், வெட்டுக்கிளிகள் ஆகியவற்றையும் பிடித்துத் தின்னும். கடற்கரைகளில் அலை ஏற்றத்தின்போது அலை பின்னேக்கிச் செலவதை எதிர்பார்த்து மற்ற ஆலாக்களோடு சேர்ந்து மணல் மேடுகளில் அதிர்ந்திருக்கக் காணலாம்.

நண்டுகள், மீன்கள், புழுபூச்சிகள் முதலியன இதன் உணவாகும்.

அவசரத் தொனியில் அலறுவது போல விரைந்து கத்தும்.

இனப்பெருக்கம் : தென்னிந்தியாவிற்கு வெளியே.

152. காஸ்பியன் ஆலா

462. Caspian Tern

Hydroprogne caspia caspia (Pallas)

தோற்றம்: அண்டங்காக்கை அளவுள்ளது இது. சுமார் 51 செ. மீ. நீளமிருக்கும்.

அலகு ஆரஞ்சு அல்லது பவளச் சிவப்பு; விழிப்படலம் பழுப்பு, கால்கள் கருப்பு நிறமாக இருக்கும்.

தென்னிந்தியாவில் காணப்படும் ஆலாக்களுள் பெரியது இதுவே. உடலின் மேற்பகுதி குளிர்காலத்தில் வெளிர் சாம்பல் நிறமாக இருக்கும். தலையும் கழுத்தும் வெள்ளை நிறம். உச்சந் தலையில் சில கருப்புக் கோடுகளைக் காணலாம். மார்பும், கழுத்தும், வயிறும் தூய வெண்மை. கோடைக்காலத்தில் நெற்றியும், உச்சந் தலையும் நல்ல கருப்பு நிறமாக மாறும்.

காணப்படும் இடங்கள்: குளிர்காலத்தில் தென்னிந்தியா முழுதும் காணலாம். உப்பங்கழிகள், சேற்றுப் படுகைகள், ஆற்றுத் துறைகள் ஆகியவற்றிலும் உள்நாட்டுப் பெரிய ஏரிகளிலும் காணலாம்.

பழக்க வழக்கங்கள்: தனித்தோ, ஒன்றிரண்டாகவோ அலகு கீழ்நோக்கி இருக்க நீர்ப்பரப்பின் மீது பறந்தபடி இருக்கும். இரை தென்பட்டவுடன் நீரில் பாய்ந்து பிடிக்கும். அப்படி நீரில் பாயும் இது நீரில் முழுவதுமாக மூழ்குவதுண்டு. சிலபோது கடலின் மேல் நீரில் கடற்காக்கைகளைப்போல அமர்ந்திருக்கக் காணலாம். மணல் மேட்டிலேயே பெரும்பாலும் ஓய்வாக அமர்ந்திருக்கும்.

மீனே முக்கிய உணவு. கடலில் நீந்தும் நண்டுகளையும் பிடிக்கும்.

இனப்பெருக்கம்: மன்னார் வளைகுடாவில் சிறு தீவுகளில் இது இனப்பெருக்கம் செய்கிறது. காலம்: மே முதல் ஜூன் முடிய. கூடு: மணற்பரப்பில் சிறு சிறு தாழ்வுகளில் அரை மீட்டர் தூரத்தில் அடுத்தடுத்துக் கூட்டமாக முட்டையிட்டிருக்கக் காணலாம். முட்டை: நீண்ட ஓவல் வடிவில் மஞ்சள், சாம்பல் முதலான நிறங்களில் ஊதா நிறம் தோய்ந்து காணப்படும். ஆணும் பெண்ணும் அடைகாக்கும். அடைகாக்கும் காலம் 20 முதல் 22 நாட்கள் வரை.

153. ஆற்று ஆலா

463. Indian River Tern

Sterna aurantia (J. E. Gray)

தோற்றம்: காக்கை அளவிருக்கும். சுமார் 40 செ. மீ. நீளம் இருக்கும்.

அலகு ஆரஞ்சு நிறம்; விழிப்படலம் பழுப்பு; கால்கள் பவளச் சிவப்பாக இருக்கும்.



ஆற்று ஆலா

உடலின் மேற்பகுதி பளபளப்பற்ற வெளிர் சாம்பல் நிறம். மார்பும் வயிறும் வெண்மை; இறக்கைகள் நீண்டு குவிந்து காணப்படும். வால் தகைவிலான் குருவியின் வாலைப்போல மிகப் பிளவுபட்டிருக்கும். குளிர்காலத்தில் தலை உச்சியில் காணப்படும் கருங்கோடுகளும் கோடைக்காலத்தில் தலை முழுவதும் பரவிக் கருந்தொப்பி போலக் காட்சிதரும்.

காணப்படும் இடங்கள்: தென்னிந்தியா முழுவதும் பேராற்றுப் படுகைகளைச் சார்ந்து காணலாம். தென்னிந்தியா முழுவதும் அதிகமாகக் காணப்படும் ஆலா இதுவே.

பழக்க வழக்கங்கள்: தனித்தே, 2 முதல் 5 வரையான சிறு கூட்டமாகவோ ஆறுகளின் மீதும் ஏரிகளின் மீதும் பறந்தபடி இருக்கும். நீரில் இரை தென்படின் இறக்கைகளை மடக்கி நீரில் பாய்ந்து இரையைப் பிடிக்கும். அப்படி இரை தேடும் போது நீரில் மூழ்கி விடும். நீரில் இருந்து வெளிப்படும் இதன் அலகில் ஒரு சிறு மீன் இருக்கக் காணலாம் அப்படி வெளிப்பட்ட இது இறக்கைகளில் உள்ள நீரை உதறியபடி பறந்துகொண்டே மீனைத் தலைப்பகுதியை உள்ளே செல்லும்படியாக விழுங்கும். வயிறு நிரம்பிய பின், ஆற்று மணல் மேடுகளில் எல்லா ஆலாக்களும் காற்று வீசும் திசையைப் பார்த்தபடி கூட்டமாக அமர்ந்திருக்கக் காணலாம். இரவிலும் ஆற்று மணல் மேடுகளில் அமர்ந்து இரவைக் கழிக்கும் ஓர் ஆலாவைச் சுட்டு வீழ்த்தினால், மற்ற ஆலாக்கள் கூட்டமாகக் கூடிக் காகங்கள் இறந்த காகத்தைச் சுற்றிச் சுற்றிப் பறந்து வட்டமிடுவது போலச் சுற்றிச் சுற்றிப் பறந்து வட்டமிடும்.

மீன், நண்டு முதலிய நீர்வாழ் உயிர்களே இதன் முக்கிய உணவு.

இனப்பெருக்கம்: காலம்: மார்ச் முதல் மே வரை. கூடு: பேராறுகளில் மணல் மேடுகளில் சிறு சிறு குழிகளில் வெறுந்தரையில் கூட்டமாக முட்டையிடும். முட்டை: 3 அல்லது 4; பெரியதாக ஓவல் வடிவமாக வெளிர் மஞ்சள் முதல் பசுஞ்சாம்பல் நிறமான பல நிறங்களில்; பழுப்பு, ஊதாப் புள்ளிகளோடும் கோடுகளோடும் காணப்படும். ஆணும் பெண்ணும் அடைகாக்கும். அடைகாக்கும் காலம் 18 முதல் 19 நாட்கள். பெரும்பாலும் இவை முதன் முறை இடும் முட்டைகள் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட மீண்டும் இரண்டாம் முறை முட்டை இடும். தமிழ் நாட்டில் கொள்ளிடத்தில் அணைக்கரை அருகே முட்டையிடுதல் வேண்டும். ஏப்ரல், மே மாதங்களில் அவை அங்கு பெருங் கூட்டமாகத் திரள்கின்றன.

154. ரோஜா மார்பு ஆலா
466. Roseate or Rosy Tern
Sterna dougallii korustes (Hume)

தோற்றம்: காக்கையை விட இது அளவில் சிறியது. சற்று மெலிந்தாற்போற் காணப்படும். சுமார் 38 செமீ நீளம் இருக்கும்.

அலகு குளிர்காலத்தில் கருப்பாகவும், கோடைக் காலத்தில் சிவப்பாகவும் இருக்கும்; விழிப்படலம் பழுப்பு; கால்கள் நல்ல சிவப்பு நிறம் (Scarlet).

உடலின் மேற்பகுதி சாம்பல் நிறம்; கீழ்ப்பகுதி வெண்மையாக இருக்கும். பெரும்பாலும் ஆற்று ஆலாவை ஒத்த இனம் வாலில் சாம்பல் நிறத்தைக் காண முடியாது. வால் தூய வெண்மையாக இருக்கும். குளிர்காலத்தில் நெற்றியிலும் உச்சியிலும் கருங்கோடுகளைக் காணலாம் உச்சியும் கழுத்தும் கருப்பாக இருக்கும். உடலின் அடிப்பாகம் ரோஜா நிறந் தோய்ந்த வெண்மையாக இருக்கும்.

காணப்படும் இடங்கள்: அந்தமான் தீவுகளிலும் இலங்கையிலும் காணப்படுவது இது. தென்னிந்தியாவில் இராமேஸ்வரம் தீவிலும் மேற்குக் கடற்கரை அடுத்த வெங்குர்லா பாறைகளிலும் இவை இனப்பெருக்கம் செய்கின்றன. குளிர்காலத்தில் தென்னிந்தியக் கடற்கரை நெடுகக் காணலாம்.

பழக்க வழக்கங்கள்: கடற்கரை சார்ந்த மற்ற ஆலாக்களின் பழக்க வழக்கங்களை ஒத்ததே இதனுடைய பழக்க வழக்கங்களும்.

கடல் பரப்பின்மீது அமர்ந்து இரை தேடவும், கடலில் முக்களிக்கவும் வல்லது எனக் கூறுகின்றனர்.

இனப்பெருக்கம்: கருங்கழுத்து ஆலா; கொண்டை ஆலா ஆகியவற்றோடு சேர்ந்து கூட்டமாக இனப்பெருக்கம் செய்கின்றது. காலம்: ஏப்ரல் முதல் ஜூன் வரை. ஆண்டுக் காண்டும், இடத்திற்கு இடமும் காலம் வேறுபடுவது உண்டு. கூடு; மணலில் சிறு குழியில் சங்கு, சோழி முதலியவற்றால் கரையிட்டு முட்டையிடும். கடற்கரை நீரில் நிற்கும் பாறைகள் மீது முளைத்த புல்லின் இடையிலும் முட்டையிடுவது உண்டு: முட்டை: 1 அல்லது 2; அபூர்வமாக 3 முட்டைகள் இடுவதும் உண்டு. மங்கிய மஞ்சள், சாம்பல் நிறங்களில் பழுப்பு, செம்பழுப்பு. கருப்புக் கறைகளுடன் காணப்படும். ஆணும் பெண்ணும் மாறி மாறி அடைகாக்கும்.

155. வெள்ளை மோவாய் ஆலா

467. White Cheeked Tern

Srerna repressa (Hartert)

தோற்றம்: காகத்தைவிட அளவில் சற்று சிறியது; சுமார் 35 செ. மீ. நீளமிருக்கும்.

அலகு கருப்பு நிறம் அடிப்பகுதி சிவப்பு; விழிப்படலம் பழுப்பு; கால்கள் ஆரஞ்சு நிறம்.

கோடையில்: கண்ணுக்கு மேலான முன்னிடமும் உச்சியும் கருப்பு. வால்மேல் இறகுகள், வால் இறக்கைகள் ஆகியன நல்ல சாம்பல் 'கிரே' நிறம். மோவாய் மட்டும் வெண்மை. மார்பும் வயிறும் ஊதா நிறந் தோய்ந்த கருஞ்சாம்பல் நிறம்.

குளிர்காலத்தில்: தலை வெண்மையாக இருக்கும்; கண்ணைச் சுற்றியுள்ள தூவிகள், பிடரி, கழுத்து ஆகியன சாக்லெட் பழுப்பாக இருக்கும். பின் கழுத்தின் கீழ்ப் பகுதியும் உடலின் அடிப்பாகமும் வெண்மையாக இருக்கும்.

காணப்படும் இடங்கள்: இது மேற்குக் கடற்கரை சார்ந்த வெங்குர்லர் பாறைகளில் இனப்பெருக்கம் செய்யும். இது மேற்குக் கடற்கரையில் காணப்படுகிறது. சென்னையில் காணப்பட்ட குறிப்பும் உண்டு. குளிர் காலத்தில் கிழக்குக் கடற்கரைப் பகுதிகளிலும் காணலாம்.

பழக்க வழக்கங்கள்: கடற்கரையைச் சார்ந்த மற்ற ஆலாக்களைப் போன்றனவே.

இனப்பெருக்கம்: காலம்: மே முதல் ஜூன் வரை வெங்குர்லா பாறைகளில் கூடு: பாறைகளின் மேல் கடல் அலை குவிந்த மணலில் முட்டை: 2 முதல் 5 வரை; பல நிறங்களில் காணப்படும்.

156. கருப்பு வயிற்று ஆலா

470. Blackbellied Tern

Sterna acuticaundo (*T. E. Gray*)

தோற்றம்: காக்கையைவிட அளவில் சற்று சிறியது. சுமார் 33 செ. மீ. நீளமிருக்கும்.

அலகு ஆரஞ்சு நிறம்; விழிப்படலம் கரும்பழுப்பு; கால்கள் நல்ல சிவப்பு நிறம்.

கோடையில்: உடலின் மேற்பகுதி கருஞ் சாம்பல் நிறமாகவும், வயிறும் மார்பும் கருப்பாகவும் இருக்கும். நெற்றி, உச்சி, பிடரி, கொண்டை ஆகியன பளப்பளக்கும் கருநிறமாக இருக்கும். கண்ணின் முன்னிடம், கன்னம், மோவாய், தொண்டை ஆகியன நல்ல வெண்மை நிறம். வால் நீண்டு நன்றாகப் பிளவு பட்டிருப்பது கொண்டு இதனைச் சேற்று ஆலாவிலிருந்து வேறுபடுத்தி அறியலாம்.

குளிர்காலத்தில்: தலை வெண்மையாகச் சிறு கருப்புக் கோடுகளோடு காட்சி தரும். மார்பும் கழுத்தும் வெண்மை தோய்ந்த சாம்பல் நிறமாக இருக்கும். இப் பருவத்தில் இதனை இதன் மெலிந்த தோற்றம் கொண்டும் ஆரஞ்சுச் சிவப்பான சிறுத்த அலகு கொண்டும் ஆற்று ஆலாவிலிருந்து வேறுபடுத்தி அறியலாம்.

காணப்படும் இடங்கள்: தென்னிந்தியா முழுவதும் கோடை, குளிர் ஆகிய எல்லாப் பருவங்களிலும் உள் நாட்டு நீர் நிலைகளையும் ஆறுகளையும் சார்ந்து காணலாம். கடற்கரைகளில் காணப்படுவதில்லை.

பழக்க வழக்கங்கள்: இது ஆற்றின் நீர்ப் பரப்பின் மீது குறுக்கு மறுக்குமாகச் சிறு கூட்டமாகப் பறந்து கொண்டிருக்கக் காணலாம். அலகும் கண்களும் கீழ் நோக்கிப் பார்க்க நீர்ப்பரப்பை ஆராய்ந்தபடி, சீராக இறக்கை அடித்துக் காற்றை எதிர்த்துப் பறந்தபடி இருக்கும். மீண்டும் திரும்பிக் காற்றோடு முதலில் புறப்பட்ட இடத்திற்கே சென்று மீண்டும் மெல்லப் பறந்து நீர்ப்பரப்பை ஆராய்ந்தபடி பறக்கும். தலை கீழாகப் பாய்ந்து மீன் முதலிய இரையைப்

பிடிக்கப்போகும் சில சமயம் முழுவதுமாக நீரில் மூழ்குவதும் உண்டு. பெரும்பாலும் மீனே இதன் உணவு எனினும் பூச்சிகள், நண்டு முதலியவற்றைப் பிடித்துத் தின்பதும் உண்டு.

பறக்கும்போது கெர்க் கெர்க் எனக் குரல் கொடுக்கும்.

இனப்பெருக்கம்: காலம்: பிப்ரவரி முதல் ஏப்ரல் வரை. கூடு: பல பறவைகள் கூட்டமாகச் சேர்ந்து முட்டையிடும். ஆற்று ஆலா முதலான பறவைகளோடு சேர்ந்து முட்டையிடுவதும் உண்டு. ஆற்று மணல் பரப்பில் சிறு குழிகளில் தரையில் அருகருகே முட்டையிடும். கொள்ளிடத்தில் அணைக்கரை அருகே மார்ச் ஏப்ரலில் பெருங் கூட்டமாகக் காணப்படும் இது அங்கு இனப் பெருக்கம் செய்தல் கூடும். முட்டை: பொதுவாக 3; சிலபோது 2 அல்லது 4; பெருமுனை நன்றாகப் பருத்தும், சிறுமுனை மிகச் சிறுத்தும் பசுமை கலந்த கருமணல் நிறமாக சிவப்பு ஊதாப் புள்ளிகளோடு காட்சி தரும்.

இது முட்டைகளை அடைகாக்கும் போது இறக்கைகளை அடிக்கடி நீரில் நனைத்து வந்து முட்டைகளைக் கடுஞ் சூரிய வெப்பத்திலிருந்து காக்கும்.

157. பழுப்பு நிற இறக்கை ஆலா

473. Southern Brownwinged Tern

Sterna anaethetus antarctica (*Lesson*)

தோற்றம்: காகத்தைவிட அளவில் சற்றுச் சிறியது. சுமார் 37 செ. மீ. நீளமிருக்கும்

அலகு கருப்பு நிறம். விழிப்படலம் ஆழ்ந்த பழுப்பு; கால்கள் கருப்பு நிறம்.

முதுகு தோள்பட்டை, இறக்கை, வால் ஆகியன சாம்பல் கலந்த பழுப்பு நிறமாக இருக்கும். மார்பும், வயிறும் வெண்மை இருக்கும். உச்சி, பிடரி, கண்ணோடு ஒட்டிய ஒரு பட்டை ஆகியன கருப்பாகவும், நெற்றி, கண்ணின் மேற்பகுதி ஆகியன வெண்மையாகவும் இருக்கும். குளிர் காலத்தில் உச்சி பழுப்பு நிறமாக மாறும்.

காணப்படும் இடங்கள்: தென்னிந்தியாவின் மேற்குக் கடற்கரையைச் சார்ந்த வெங்குர்லா பாறைகளில் இனப்பெருக்கம் செய்கின்றது. கடற்கரைக்கு அப்பால் நெடுந்தொலை தள்ளிக் கடலின் மேல் பறக்கக் காணலாம்.

பழக்க வழக்கங்கள்: கடலின்மேல் கூட்டமாகப் பறந்து மீன் பிடிக்கும். கப்பல்களின்மீது அமர்ந்து பயணம் செய்வதும் உண்டு. நீரில் பாய்ந்து மூழ்கி மீன் பிடிக்கும். இரவில் கடலிடையில் பாறைகள் மீதோ கப்பல்களின் பக்கங்களில் தொங்கும் மீட்புப் படகுகளின் மீதோ அமர்ந்து ஓய்வு கொள்ளும்.

மீனே இதன் முக்கிய உணவு.

கெர்க், கெர்க் எனக் கத்தும்.

இனப்பெருக்கம்: காலம்: ஜூன் ஜூலை மாதங்கள்; மேற்குக் கடற்கரைப் பகுதிக்கப்பால் பவளத் திட்டுகளிலும் வெங்குர்லா பாறைகளிலும் இனப்பெருக்கம் செய்கிறது. கூடு: மணலில் சிறு குழிவில்; முட்டை: 1 மட்டும்; அபூர்வமாக 3; வெளிர் மஞ்சளான வெந்தா நிறத்தில் அல்லது கிரீம் நிறத்தில் நல்ல சிவப்புப் புள்ளிகளுடன் காணப்படும்.

158. புகைப் பழுப்பு நிற ஆலா

474. Sooty Tern

Sterna fuscata nubilosa (*Sparsman*)

தோற்றம்: காக்கையின் அளவிருக்கும்; 43 செ. மீ. நீளமிருக்கும்.

தோற்றத்தில் பெரும்பாலும் முன்னதை ஒத்த இதுவும் மேற்குக் கடற்கரையை அடுத்த தீவுகளிலும், வெங்குர்லா பாறைகளிலும், அந்தமானிலும் இனப்பெருக்கம் செய்யும். இதனையும் கரையை விட்டுத் தூரக் கடலிலேயே காணலாம். மற்றப் பழக்க வழக்கங்கள் முன்னதைப் போன்றனவே.

159. சிறிய கடல் ஆலா

475. Little Tern or Ternlet

Sterna albifrons albifrons (*Pallas*)

தோற்றம்: இது மைனா அளவு இருக்கும். சுமார் 23 செ. மீ. நீளமிருக்கும்.

அலகு ஆரஞ்சு நிறம்; விழிப்படலம் பழுப்பு; கால்கள் ஆரஞ்சு நிறமான மஞ்சள் நிறம்.

மற்ற ஆலாக்களிலிருந்து இதனுடைய சிறிய உருவம் இதனை எளிதாக வேறுபடுத்திக் காட்டும். கோடையில் தலையில் கருந்-

தொப்பி போன்ற கருப்பு நிறம் பளிச்செனத் தெரியும் நெற்றி வெண்மையாக இருக்கும்.

குளிர்காலத்தில் தலை உச்சி கருப்பும் வெண்மையுமாக இருக்கும். அலகு கருப்பாக மாறும். கால்களும் நிறம் குன்றும்.

காணப்படும் இடங்கள்: கேரளாவிலும் ராமேஷ்வரம் தீவிலும் இதனைக் காணலாம். கடற்கரைகளிலும் உள்நாட்டு நீர்நிலைகளிலும் இதனைக் காணலாம்.

பழக்க வழக்கங்கள்: தனித்தோ, ஒரு சில சேர்ந்த சிறு கூட்டமாகவோ, நீர்ப்பரப்பின் மீது அலகும் கண்ணும் கீழ்நோக்கிப் பார்க்க விரைவாக இறக்கையடித்துப் பறக்கக் காணலாம். வெள்ளையும் கருப்புமான மீன் கொத்தியைப் போல இரையை ஆராய ஆகாயத்தில் அசைவின்றிச் சில விநாடிகள் அப்படியே நிற்பது உண்டு. நீரில் பாயும் இது முழுவதுமாக மூழ்காமல் இரையைக் கொத்தியபடி எழும். இவை கூட்டமாகப் பறக்கும்போது ஒன்றன்பின் ஒன்றாக நீரில் பாய்ந்து மீனோடு எழும் காட்சி காணத் தக்கது.

சிறு மீன்கள், நண்டுகள், நீரில் வாழும் புழுபூச்சிகள் முதலியவற்றை இது உணவாகக் கொள்ளும்.

கருப்பும் வெள்ளையுமான மீன் கொத்தியைப் போல க்ரீக் க்ரீக் க்ரீக், எனத் தொடர்ந்து கத்தும்.

இனப்பெருக்கம்: தென்னிந்திய எல்லைக்கு வெளியே.

160. கருப்பு இறக்கைத் தண்டு சிறிய ஆலா
476. Blackshafted Ternlet
Sterna albifrons saundersi (*Hume*)

தோற்றத்தில் இது சிறிய கடல் ஆலாவை ஒத்தது. இதன் பறக்கும் இறக்கையின் தண்டுகளில் சில கருப்பு நிறமாக இருக்கும்.

தென்னிந்தியக் கடற்கரையை அடுத்த இராமேஸ்வரம் தீவிலும் காரைத் தீவிலும் காணப்படும் குறிப்பு உண்டு.

இனப்பெருக்கமும் பழக்க வழக்கங்களும் சிறிய கடல் ஆலாவைப் போன்றனவே.

161. வெள்ளை இறக்கைத்தண்டு சிறிய ஆலா

477. Whiteshafted Ternlet

Sterna albifrons sinensis (Gmelin)

இதுவும் தோற்றத்தில் முழுவதும் சிறிய கடல் ஆலாவையும் கருப்பு இறக்கைத் தண்டுக் கடல் ஆலாவையும் ஒத்ததே. இதன் இறக்கைத் தண்டுகள் அனைத்தும் வெண்மையானவை சில இறக்கைகள் கருஞ்சாம்பல் நிறமானவை. முழுவதும் கருப்பான இறக்கைகள் இதற்குக் கிடையாது.

காணப்படும் இடங்கள்: தென்னிந்தியக் கிழக்குக் கடற்கரை சார்ந்த தீவுகளில் இவற்றைக் காணலாம். இராமேஸ்வரம், காரைத் தீவு, சேதுக்கரை ஆகிய பகுதிகளில் இவற்றைக் காணலாம இதனையும் முன் கண்ட ஆலாவையும் உள்நாட்டுப் பகுதிகளில் காண முடியாது.

பழக்க வழக்கங்கள்: சிறிய கடல் ஆலாவின் பழக்க வழக்கங்களைப் போன்றவையே இதன் பழக்க வழக்கங்களும்.

இனப்பெருக்கம்: காலம்: மே முதல் ஆகஸ்ட் வரை. இலங்கையில் இனப்பெருக்கம் செய்யும் இது இராமேஸ்வரத்திலும் இனப்பெருக்கம் செய்கின்றது. கூடு: பாறைகள், கூழாங் கற்கள் நிறைந்த மணற் பரப்பில் முட்டையிடும். முட்டை: 2 அல்லது 3; நீலங் கலந்த வெண்மை நிறமாக இருக்கும்.

162. பெரிய செங்கடல் கொண்டை ஆலா

478. Red Sea Large Crested Tern

Sterna bergii velox (Cretzschmar)

தோற்றம்: அளவில் இது பரப் பருந்தைக் காட்டிலும் சற்றுச் சிறியது. சுமார் 53 செ. மீ. நீளமிருக்கும்.

உருவில், அடுத்த உள்ளினமான கொண்டை ஆலாவைக் காட்டிலும் மிகப் பெரியது. தோற்றத்திலும், பழக்க வழக்கங்களிலும் அதனின்றும் வேறுபாடு ஏதும் இல்லை.

தென்னிந்தியக் கடற்கரை நெடுகக் குறைந்த எண்ணிக்கையில் அபூர்வமாகக் காணப்படும் இது வெங்குர்லா பாறைகளில் இனப்பெருக்கம் செய்கின்றது எனக் கூறுகின்றனர். தக்க ஆதாரங்கள் இன்னமும் திரட்டப்படவில்லை.

163. சிறிய இந்தியக் கொண்டை ஆலா

479. Indian Lesser Crested Tern

Sterna bengalensis bengalensis (*Lesson*)

தோற்றம்: காக்கையை விட அளவில் பெரியது. சுமார் 43 செ. மீ. நீளமிருக்கும்.

அலகு ஆரஞ்சு மஞ்சள் நிறம்; விழிப்படலம் பழுப்பு; கால்களும் விரல்களும் கருப்பு நிறம்.

தலை உச்சியும், கழுத்தும், கழுத்தின் மீது நீண்டிருக்கும் கொண்டையும் நல்ல வெல்வெட் கருப்பு நிறம்; கழுத்தும் மார்பும் வெள்ளை; உடலின் மேற்பகுதி இளஞ் சிவப்புக் கலந்த சாம்பல் நிறம். வால் சாம்பல் நிறங்கலந்த வெண்மை. குளிர்காலத்தில் உச்சந்தலையும் நெற்றியும் கருங்கோடுகளோடு கூடிய வெண்மை நிறமாக மாறும்.

காணப்படும் இனங்கள்: இராமேஸ்வரம் தீவிலும் லட்சத் தீவு, மால்டைவ் தீவு முதலிய தீவுகளிலும் இனப்பெருக்கம் செய்யப்படுவதாகக் கருதப்படும் இதனைக் குளிர்காலத்தில் தென்னிந்தியக் கடற்கரை நெடுக ஆங்காங்கே காணலாம்.

பழக்க வழக்கங்கள்: கடலைச் சார்ந்து வாழும் ஆலா இது. கரையைவிட்டு, நெடுந்தூரம் உள்ளே தள்ளியும் காணலாம். கடற்பரப்பிலிருந்து சுமார் ஒரு மீட்டர் உயரத்தில் சீராக இறக்கையடித்துப் பறக்கும் இது சில விநாடிகள் அப்படியே நின்று நீர்ப்பரப்பை ஆராயும் திறமை வாய்ந்தது. பின்னர் நீரில் நெடுங்குத்தாகப் பாயாமல் வீச்சுப் போக்கில் பாய்ந்து அலகில் மீனைக் கொத்தியபடி மேலே வரும். வயிறு நிரம்பிய பின், கடலில் மிதக்கும் வழிகாட்டிக் கட்டைகள் மீது மற்ற ஆலாக்களோடும், கடற்காகங்களோடும் அமர்ந்து இளைப்பாறும்.

மீனே இதன் முக்கிய உணவு.

நீரில் பாயுமுன் கிரோக் எனக் கத்தும்.

இனப்பெருக்கம்: காலம்: மே முதல் ஜூன் முடிய; கூடு. கடலில் உயர்ந்து நிற்கும் பாறைகள் மீது அருகருகே நெருக்கமாக முட்டையிடும்; முட்டை: 1 அல்லது 2; வெள்ளை முதல் ஊதாவரையான பல நிறங்களில்.

வரிசை : கொலம்பிஃபார்மிஸ்

Order: Columbiformes

Family: Pteroclididae

கல்கௌதாரிகள்
(SANDGROUSES)

164. கல்கௌதாரி

487. Indian Sandgrouse

Pterocles exustus erlangeri (*Newmann*)

தோற்றம்: புரு அளவுடையது இது. 12 செ. மீ. நீளமுடைய வாலோடு கூட மொத்தம் 40 செ. மீ நீளமிருக்கும்.

அலகு நீல நிறம்; விழிப்படலம் பழுப்பு; கால்கள் ஈய நிறம்.



கல் கௌதாரி

வறண்ட நிலங்களில் காணப்படும் புருவை ஒத்த பறவை இது. வால் ஊசி போல சுமார் 12 செ. மீ. நீளம் இருக்கும் உடலின் நிறம் பொதுவாக மஞ்சள் கலந்த மணல் சாம்பல் நிறமாக இருக்கும் மார்பில் ஆணுக்கும் பெண்ணுக்கும் குறுகிய கருப்புப் பட்டை காணப்படும்.

ஆண்: உடலின் மேற்பகுதி மணல் நிறங்கலந்த சாம்பல் நிறமாகவும், வெளிர் மஞ்சள் நிறமாகவும் கருத்த சிறு பிறை

வடிவ வளை கோடுகளோடும் காட்சி தரும். கன்னம், மோவாய், தொண்டை முதலிய மங்கிய மஞ்சள் நிறமாகவும், வயிறு சாக்லெட் கருப்பாக இருக்கும்.

பெண்; உடலின் மேற்பகுதி நிறங்குன்றி வெளிர் மஞ்சள் கோடுகளோடும் புள்ளிகளோடும் கரும்பழுப்புப் பட்டைகளுடனும் காட்சி தரும்; மேல் மார்பில் கரும் புள்ளிகள் காணலாம். கீழ் மார்பு வெளிர் மஞ்சளாக இருக்கும். வயிறும் பக்கங்களும் கருஞ் சிவப்புக் கலந்த மஞ்சளாக இருக்கும். நெருக்கமான சிறு கருப்புப் பட்டைகள் அதில் அழகு செய்யக் காணலாம்.

காணப்படும் இடங்கள்: தென்னிந்தியாவில் வறண்ட பகுதிகளில் காணலாம். பொட்டல் நிலங்களிலும், உழுது பின் காய்ந்தபடி தரிசாகக் கிடக்கும் புழுதி நிலங்களில் காணலாம். காடுகளையும் கடற்கரைப் பகுதிகளையும் இது விரும்புவதில்லை. இராமநாதபுரம் திருச்சிராப்பள்ளி மாவட்டங்களில் காணப்பட்ட குறிப்புண்டு.

பழக்க வழக்கங்கள்: 3 முதல் 5 வரையான சிறு கூட்டங்களாக 10 முதல் 30 வரையான பெருங் கூட்டமாகவோ காணலாம். அபூர்வமாக நூற்றுக் கணக்கில் காணப்படுவதும் உண்டு. சிறு கால்களால் தரையோடு ஒட்டியபடி நடந்து புல் விதைகளையும் தான்யங்களையும் பொறுக்கும். தரையோடு ஒட்டியபடி இருக்கும் பறவையின் நிறம் தரையின் நிறத்தோடு மிக ஒத்து அதற்குப் பாதுகாப்பாக விளங்குவதால் ஓரிரு மீட்டர் தூரத்திலிருக்கும் போது கூட இதனைக் கண்டு கொள்வது கடினம். குறிப்பிட்ட நேரத்தில் நாளும் நீர் நிலைகளை நோக்கிக் கூட்டமாக வரும் பழக்கமுடையவை. நீரில் சில பறவைகள் இறங்கி ஓரிரு வாய் நீர் குடித்தபின் கரைக்கு வர அடுத்து வரிசையில் காத்து நிற்கும் பறவைகள் நீரில் இறங்கும். வெயில் மிகுந்த நாட்களில் பிற்பகல் நேரத்திலேயே நீர் நிலைகளை நோக்கி வரும். வேட்டைக்காரர்கள் நீர் நிலை அருகே காத்திருந்து இதனை எளிதாக வீழ்த்துவர்.

தானியங்கள், புல் விதைகள் முதலியவற்றை மணலோடு கூடத் தின்னும். இது புழு பூச்சிகளைத் தின்பதில்லை.

பறக்கும்போது குட்ரோ என்ற குரலில் உரத்துக் கத்தும்.

இனப்பெருக்கம்: காலம்: ஜனவரி முதல் மே வரை. கூடு: விளை நிலங்களுக்கு இடையே கட்டாந் தரையில் முட்டையிடும். முட்டை: 2 அல்லது 3. நீள் உருண்டை வடிவில் சாம்பலும் மஞ்சளுமான பலவகை நிறங்களில் பல சிறு புள்ளிகளோடு காட்சி தரும். அடைகாக்கும் காலம் 20 நாட்கள்,

165. வர்ணக் கல்கௌதாரி
492. Painted Sandgrouse
Pterocles indicus indicus (Gmelin)

தோற்றம்: புறாவைவிட அளவில் சிறியது. சுமார் 28 செ.மீ. நீளமிருக்கும்.

அலகு வெளிர்த்த செம்பழுப்பு நிறம்; விழிப்படலம் பழுப்பு; கால்கள் மஞ்சள், கால் விரல்கள் கருப்பு.

ஆண்: தலையில் கருப்புக் கோடுகள் நிறைந்திருக்கும். வெண்மையான நெற்றியின் மேல் குறுக்காக ஒரு கருப்புப் பட்டை காணலாம். பழுப்பு, மஞ்சள், கருப்பு ஆகிய மூன்று நிறப் பட்டைக் கோடுகள் அடுத்தடுத்து அமைய உருவான வளையம் மார்பில் காணப்படும். மோவாய், தொண்டை, முன் கழுத்து ஆகியன எத்தகைய கோடுகளும் இன்றித் தெளிவற்ற மஞ்சள் நிறமாக இருக்கும்.

பெண்: தலையில் கருப்புக் கோடுகளும் மார்பில் வளையமும் ஆணுக்கு இருப்பது போல இதற்கு இல்லை. உடல் முழுதும் கருப்புப் பட்டைகள் நெருக்கமாகக் காணப்படும். தொண்டையும் தலையும் கருப்புப் புள்ளிகள் நிறைந்தனவாக இருக்கும். மோவாய் வெளிர் மஞ்சளாக இருக்கும்.

காணப்படும் இடங்கள்: தென்னிந்தியாவில் பொட்டல் வெளியான மலையடிவாரங்களிலும், பேட்டுப் பாங்கான நிலங்களிலும் காணலாம். திருச்சிராப்பள்ளி, இராமநாதபுரம் மாவட்டங்களில் காணப்பட்ட குறிப்பு உண்டு.

பழக்க வழக்கங்கள்: இரண்டோ மூன்றோ சேர்ந்து மலை அடிவாரத்தைச் சார்ந்த கல்பாங்கான நிலங்களில் மேயக் காணலாம். தீ வைக்கப்பட்ட புல் நிலங்களில் தீ அணைந்த பின் கூட்டமாக மேயவரும். மனிதரைக் கண்டால் அஞ்சியோடும் பழக்கம் இதற்கில்லை. தரையோடு தரையாகப் பதுங்கி நின்று நிற ஒற்றுமையைப் பயன்படுத்தித் தப்ப முயலுமே அன்றி ஓட இயலாது. மிக அருகில் நெருங்கிய பின்னரே இறக்கையைச் சிலிர்த்தபடி, சிறு குரல் கொடுத்து எழுந்து 40—50 மீட்டர் தூரம் பறந்து பின் தரையில் இறங்கும். வேகமாக ஓடக் கூடிய ஆற்றலும் பெற்றது. சூரியன் மறைந்த பின்னும், சூரியன் உதிக்கும் முன்னும் நீர்நிலைகளை நோக்கி நெடுந்தூரத்திலிருந்தெல்லாம் பறந்து வரும். கூட்டம் கூட்டமாகப்பறவைகள் வந்துஇறங்குவதும் நீர்நிலைகளின் அருகே

அவற்றின் ஆரவாரமும் ஒரே பரபரப்பாக இருக்கும். மிகத் தாழ்வாகத் தரையை யொட்டிப் பறந்து வருபவை ஆகையால் இவற்றின் குரலைக் கேட்கலாமே யன்றி இவை பறந்து வருவதைப் பார்க்க முடியாது.

தானியங்கள், விதைகள், சிலவகைச் சிறு பழங்கள் முதலியன இதன் உணவு.

நீர் குடிக்கப் பறந்து வரும்போது ச்செரிக், ச்செரிக், எனக் கத்தும்.

இனப்பெருக்கம்: காலம்: மார்ச் முதல் ஜூன் வரை. கூடு: கல் தரையில் புல்தூரை அடுத்தோ அல்லது புதர் நடுவிலோ முட்டையிடும். முட்டை: 3; சிலபோது 2 மட்டும்; கிரீம் நிறத்தில் செம்பழுப்பு மைச்சாம்பல் கறைகளுடன் காணப்படும். ஆணும் பெண்ணும் அடைகாக்கும்.

Family: Columbidae

புருக்களும் கள்ளிப்புருக்களும்
(PIGEONS AND DOVES)

166. சாம்பல்தலைப் பச்சைப் புரு

496. Greyfronted Green pigeon

Treron pompadora affinis (*Jerdon*)

தோற்றம்: புருவை விட அளவில் சற்றுச் சிறியது. சுமார் 24 செ. மீ. நீளமிருக்கும்.

அலகு நீலங்கலந்த வெண்மை நிறம். விழிப்படலம் வெளி வட்டம் இளஞ் சிவப்பு; உள் வட்டம் பளபளப்பான வெளிர் நீலம். கால்கள் இளஞ் சிவப்பு.

ஆண்: நெற்றி, உச்சி, பிடரி ஆகியவை கருஞ் சாம்பல் நிறமாக இருக்கும். முதுகும் தோள் பட்டையும் செம்பழுப்புச் சிவப்பாக இருக்கும். இறக்கை விளிம்புகள் கருப்பு; உடலின் எஞ்சிய மேற்பகுதி ஆலிவ் நிறமாகவோ மஞ்சள் கலந்த பச்சையாகவோ இருக்கும். வாலிறகுகளில் நடுவில் உள்ள இரண்டு இறகுகள் ஆலிவ் பச்சையாக இருக்கும், இறக்கைகளில் அகன்ற மஞ்சள் பட்டை காணலாம். வயிறும் மார்பும் பச்சை கலந்த மஞ்சளாக

இருக்கும். மேல் மார்பில் அந்த மஞ்சளோடு சிறிது ஆரஞ்சு நிறமும் தோய்ந்திருக்கக் காணலாம்.

பெண் : ஆணின் உடலின் மேற்பகுதியில் காணப்படும் தோள் பட்டைப் பழுப்பு நிறமும், மார்பில் காணப்படும் ஆரஞ்சு நிறத் தோய்வும் பெண்ணின் உடலில் இல்லை. இறக்கை விளிம்பு கருமை மங்கிச் சாம்பல் நிறமாக இருக்கும். வாலடி வெளிர் மஞ்சள் கலந்த வெண்மையாக இருக்கும், அதில் சிறு பசுங் கோடுகளையும் காணலாம். ஆரஞ்சு மார்புப் புருவிற்கும் இதற்கும் அதிக வேறுபாடு இல்லை. இதன் வாலின் நடு இறகுகள் இரண்டும் ஆலிவ் பச்சையாக இருக்க ஆரஞ்சு மார்புப் புருவின் வாலின் நடு இறகுகள் சிலேட் நிறமாக இருக்கும்.

காணப்படும் இடங்கள் : தென்னிந்தியாவில் மேற்குத் தொடர்ச்சி மலை சார்ந்த பகுதிகளில், பழங்கள் பழுக்கும் பருவங்களுக் கேற்பச் சமதரை முதல் 1200 மீட்டர் உயரம் வரை மாறாத பசுங்காடுகளில் காணலாம்.

பழக்க வழக்கங்கள் : மற்றப் பச்சைப் புறாக்களின் பழக்க வழக்கங்களை ஒத்ததே இதனுடையதும். பெரும்பாலும் 12 வரையான கூட்டமாகக் காணலாம். பழ மரங்களில் சிலபோது பெருங் கூட்டமாகக் காணலாம். சூரிய உதயத்தின் போதும் சூரியன் மறைவதற்கு முன்பும் இலைகள் அற்ற மரக்கிளைகளில் உச்சியில் அமர்ந்து சீழ்க்கைக் குரலில் ஒன்றை ஒன்று கூப்பிடுவதைக் காணலாம். கேரளாவிலும் மைசூரிலுள்ள காபி தோட்டங்களில் நிழலில் உள்ள வெள்ளையடிக்கப்பட்ட பங்களாக்களின் சுவர்களில் இதுவும் பஞ்ச வர்ணப் புறாவும் குன்று முட்டிய குருவிபோல மோதி உயிர் விடுவதாகக் கூறப்படுகிறது.

அத்தி, இலந்தை, முதலான மரங்களின் பழங்களே முக்கிய உணவு. உப்புக் கலந்த சேற்று மண்ணையும் தின்னும்.

தென்னாட்டுப் பச்சைப் புறாவைப் போல நீண்ட மெல்லிய சீழ்க்கைக் குரலில் பலவிதமாகக் குரல் கொடுக்கும்.

இனப்பெருக்கம் : காலம் டிசம்பர் முதல் மார்ச் வரை. கூடு : சாதாரண உயரமுள்ள மரங்களில் இலைகளிடையே தரையிலிருந்து சில மீட்டர் உயரத்தில் குச்சிகளால் மேடையிட்டு முட்டையிடும். முட்டை : 2 மட்டும், நீள் வட்ட வடிவமாக வெண்மை நிறத்தோடு காட்சி தரும். கூடு கட்டி அடைகாத்துக் குஞ்சுகளைப் பேணும் பணியில் ஆணும் பெண்ணும் பங்கு பெறும். அடைகாக்கும் காலம் 12 முதல் 14 நாட்கள் வரை.

167. ஆரஞ்சு நிற மார்புப் புறா

501. Indian Orangebreasted Green Pigeon

Treron bicincta bicincta (Jerdon)

தோற்றம்: புறா அளவு உள்ள இது சுமார் 29 செ. மீ. நீள மிருக்கும்.

அலகு வெளிர் நீல நிறம்; விழிப்படலம்: உள் வட்டம் ஆழ்ந்த நீலம், வெளி வட்டம் நல்ல சிவப்பு; கால்கள் பவளச் சிவப்பு.



ஆரஞ்சு நிற மார்புப் புறா

ஆண்: முன்னைய புறாவுக்குரிய தலையின் சாம்பல் நிறமும் செம்பழுப்புத் தோள் பட்டையும் இதற்கு ஆலிவ் கலந்த பச்சையாகவே இருக்கும். மேல் மார்பில் இளஞ் சிவப்புப் பட்டையும் அதன் கீழ் ஆரஞ்சு நிறமும் காணலாம். வயிறு முதலியன மஞ்சள் கலந்த பச்சையாக இருக்கும். வாலடி மஞ்சள் கலந்த பழுப்பாக இருக்கும். வால் வெளிர் மஞ்சள் புற இறகுகளுடன் காணப்படும் வாலின் மேற்பகுதி சிலேட் சாம்பல் நிறமாக இறுதியில் கறுப்புப் பட்டையோடு முடியும்.

பெண்: ஆலிவ் மஞ்சளான மேல் தோற்றமும், மஞ்சள் கலந்த பச்சை நிற மார்பும், வயிறும் கொண்டு காட்சி தரும் ஆணுக்கு இருப்பது போன்ற இளஞ் சிவப்பு ஆரஞ்சு நிறப்பட்டைகளை மேல் மார்பில் காண முடியாது, வாலடி நிறம் மங்கிய மஞ்சள் பழுப்பாக இருக்கும். முந்தைய பெண் புறாவின் நடுவால் இறகுகள் பச்சையாகவும் இதன் நடுவால் இறகுகள் சிலேட் சாம்பல் நிறமாகவும் இருப்பதுதான் இரண்டிற்கும் உள்ள வேறுபாடு.

காணப்படும் இடங்கள்: பசுமையான அடர்ந்த காடுகளில் கிழக்கு மேற்கு மலைத் தொடரைச் சார்ந்த பகுதிகளில் சமதரையிலிருந்து 1000 மீட்டர் உயரம் வரை காணலாம்.

பழக்க வழக்கங்கள்: பெரும்பாலும் முந்தியதைப் போன்றவையே.

இனப்பெருக்கம்: காலம்: மார்ச் முதல் செப்டம்பர் வரை. கூடு: மரங்களில் குச்சிகளில் பரப்பி இலைகளிடையே 2 முதல் 8

மீட்டர் வரை உயரத்தில் கூடு கட்டும். முட்டை : 2 மட்டும்; ஓவல் வடிவத்தில் வெண்மையாக இருக்கும். ஆணும் பெண்ணும் கூடு கட்டி அடைகாக்கும். அடைகாக்கும் காலம் 12 முதல் 14 நாட்கள் வரை.

168. தென்னிந்தியப் பச்சைப் புறா
504. Southern Green Pigeon
Treron phenicoptera chlorigator (*Blyth*)

தோற்றம் : புறாவை விடச் சற்றுப் பெரிய இது சுமார் 33 செ. மீ. நீளமிருக்கும்.

அலகு வெண்மையாக அடிப் பகுதி நீலமாக இருக்கும்; விழிப் படலம் சிவப்பு நிறமாக இருக்கும். கால்கள் வெளிர் மஞ்சள் நிறம்.

உடலின் மேற்பகுதி ஆலிவ் பச்சையாகவும், சிலேட் நிறங் கலந்த சாம்பல் நிறமாகவும் இருக்கும். உடலின் கீழ்ப்பகுதி நல்ல மஞ்சள் நிறம். தோள்பட்டையில் இளஞ் சிவப்புப் பகுதியைக் காணலாம். கருத்த இறகுகளில் தெளிவான மஞ்சள்பட்டை தென்படும். மற்ற பச்சைப் புறாக்களின் கால்கள் சிவப்பாக இருக்க இதன் கால்கள் மஞ்சளாக இருப்பதைக் கொண்டு இதனைத் தெளிவாக அடையாளம் காணலாம். பெண் பறவை பெரிதும் ஆணின் தோற்றத்தை ஒத்துச் சற்று நிறம் மங்கியது போலத் தோன்றும்.

காணப்படும் இடங்கள் : தென்னிந்தியா முழுதும் வறள் பசுங் காடுகளில் காணலாம். ஆலமரங்கள் பழுக்கும் பருவங்களில் ஆலமரங்களில் கூட்டமாகக் காணலாம். சாலை ஓர ஆல், அத்தி மரங்களில் இவற்றைச் சாதாரணமாகக் காணலாம்.

பழக்க வழக்கங்கள்: இதனை எப்போதும் மரங்களில் உயரவே காணலாம். நீர் குடிக்கவோ உப்பு மண்ணைத் தின்னவோ தான் தரையில் இறங்கும். 5 முதல் 10 வரையான சிறு கூட்டமாகவே பழமரங்களில் திரியும். பழந்தின்னும் பிற பறவைகளோடு இதுவும் சேர்ந்து ஆல், அத்தி மரங்களில் கூட்டமாக இருக்கக் காணலாம். பழமரச் சிமிர்களில் கிளியைப்போலத் தொற்றி மேலே ஏறியும், கீழே இறங்கியும், தூரியாடியும் பழங்களைத் தின்றபடி இருக்கக் காணலாம். இது கூட்டமாக இருக்கும் மரங்களை மனிதர்கள் நெருங்கும்போது, ஆடாமல் அசையாமல் இலைகளிடையே தன்னை மறைத்துக் கொண்டு. பச்சை நிறப் போர்வையில் ஒன்றி விடும்.

அப்படி ஒன்றிவிடும் இது இலைகள் ஊடே பார்வையைச் செலுத்தி மரத்தை நெருங்கி வரும் மனிதர்களின் நடவடிக்கையைக் கூர்ந்து கவனிக்கும். வேட்டைக்காரர்களின் வெடிச் சப்தம் கேட்டவுடன், இவை பெருங்கூட்டமாக மரங்களிலிருந்து எழுந்து செல்லும் போதுதான் இவை எவ்வாறு சாமர்த்தியமாகத் தங்களை இலைகளினூடே மறைத்துக் கொண்டிருந்திருக்கின்றன என்பது புலனாகும். மரங்களிலிருந்து பறந்து சென்ற அவை மீண்டும் அதே பழமரங்களை நோக்கி இரண்டு மூன்றாகச் சற்று நேரத்தில் தைரியமாகத் திரும்பி வரும். இது தொண்டைப் பையில் நிறையப் பழங்களை அடுக்கிக் கொள்ளும். சுடப்பட்ட ஒன்றின் தொண்டைப் பையில் 12 முழு ஆலம் பழங்கள் இருந்ததைக் கண்டு குறித்துள்ளனர். இலையற்ற மரக்கிளைகளில் உயர ஜோடியாகவோ கூட்டமாகவோ அமர்ந்து மற்றப் புருக்களைப்போல இதுவும் காலை மாலை நேரங்களில் வெயில் காயும்.

பலவகைப் பழங்களே இதன் முக்கிய உணவு.

மெல்லிய நீண்ட சீழ்க்கை ஒலி எழுப்பும்.

இனப்பெருக்கம் காலம்: மார்ச் முதல் ஜுன் வரை. **கூடு:** மரங்களில் இலைகளிடையே குச்சிகளில் சிறு மேடை போல அமைத்து முட்டையிடும். கரிச்சான் கூடுகட்டியுள்ள இடத்துக் கருகே கூடு அமைத்துக் கொள்ளும் பழக்கமுடையது. **முட்டை:** 2 மட்டும்; பளபளக்கும் வெண்மை நிறங் கொண்டிருக்கும்.

169. தென்னிந்தியப் பெரிய பச்சைப் புரு
507. Southern Green Imperial Pigeon
Ducula aenea pusilla (Blyth)

தோற்றம்: காக்கை அளவுள்ள இது சுமார் 43 செ. மீ. நீளமிருக்கும்.

அலகு சாம்பல் நிறந் தோய்ந்த பசுமை; விழிப்படலம் ஆழ்ந்த சிவப்பு; கால்கள் ஆழ்ந்த சிவப்பு நிறம்.



புருவின் பாதம்

மரங்களின் மேலேயே வாழும் புருக்களில் இதுவே அளவில் மிகவும் பெரியது. உடலின் பெரும் பகுதி இளஞ் சிவப்புத் தோய்ந்த சாம்பல் நிறமாக இருக்

கும். முதுகும், வாலின் மேற்பகுதியும் பளபளக்கும் வெண்கலப் பச்சை நிறமாக இருக்கும். வாலின் கீழ்ப்பகுதி மஞ்சள் தோய்ந்த கருஞ் செம்பழுப்பாக இருக்கும். ஆணும் பெண்ணும் ஒன்று போலத் தோற்றம் கொண்டவை.

காணப்படும் இடங்கள்: தென்னிந்தியாவில் கிழக்கு மேற்கு மலைத் தொடர் சார்ந்த பகுதிகளில், என்றும் பசுமை மாறாத ஈர வள மிகுந்த சமவெளிப் பகுதிகளில் உள்ள காடுகளில் காணலாம். மலைகளில் 300 மீட்டர் உயரத்திற்கு மேல் பெரும்பாலும் காணப் படுவதில்லை. அத்தி, ஆலமரங்கள் மிகுந்த இரண்டாந்தரக் காடு களையே விரும்பி வாழ்வது இது.

பழக்க வழக்கங்கள்: தனித்தும், ஆணும் பெண்ணுமான இணையாகவும், 5 முதல் 6 வரையான சிறு கூட்டமாகவும் காண லாம். பழமரங்களில் அபூர்வமாக 20 வரையான கூட்டமாகக் கூடுவது உண்டு. என்றாலும் இதனை எப்போதும் பச்சைப் புறா வைப்போலப் பெருங் கூட்டமாகக் காண முடியாது. பழமரங் களில் பழங்களுக்காக இவை பச்சைப் புறாவைப்போல ஆரவார மாக ஒன்றோடு ஒன்று சண்டையிட்டுக் கொள்வதும் இல்லை. காலை மாலை வேளைகளில் மரக்கிளைகளில் உச்சியில் அமர்ந்து வெயில் காயும் பழக்கம் இதற்கும் உண்டு. இறக்கைகளை மெல்ல அடித்து மர உச்சிகளின் மேல் மரம் விட்டு மரம் தாண்டிப் பறந்து செல் லும் பழக்கம் உடையவை. உப்பு மண் உருண்டைகளைத் தின்ன வும் தண்ணீர் குடிக்கவுமே தரையில் இறங்கும். காதலாட்டத் தின் போது பனங்காடையைப்போல ஆண் மேலும் கீழுமாகப் பறந்து வேடிக்கை காட்டும். மேலும் பெண்ணின் அருகே அமர்ந்து தலையைத் தாழ்த்தி மார்பில் புதைத்துக் கொண்டு உச்சந்தலை, கழுத்து ஆகியவற்றின் அழகைக் காட்டும்.

அத்தி, ஆல் முதலியவற்றின் பழங்களோடு கூட, பிற காட்டு மரங்களில் அவ்வப்போது பழுக்கும் பழங்களையும் தின்னும்.

ஆழ்ந்த தொனியில் சிரிப்பது போல உ, உ, உ, என்றோ ஹூஉக், ஹூஉக், ஹூஉக், ஹூஉர்ர் என்றோ ஹூஉக், ஹூர், ஹூர், ஹூர் என்றோ கத்தும்.

இனப்பெருக்கம்: காலம்: பிப்ரவரி முதல் ஜுன் வரை கூடு: மரங்களில் சாதாரண உயரத்தில் குச்சிகளால் மேடை அமைத்து முட்டையிடும். முட்டை: 1 மட்டும், சீரான நீள் வட்டமாக வெண்மை நிறத்தில் காட்சிதரும்.

170. தென்னிந்திய செம்முதுகுப் பெரிய பச்சைப் புரு
511. Jerdon's or Southern Maroonheaded Imperial Pigeon
Ducula badia cuprea (Jerdon)

தோற்றம் : காக்கை அளவுள்ள இது சுமார் 43 செ. மீ. நீள மிருக்கும்.

அலகு இளஞ் சிவப்பாக இருக்கும்; கண் விளிம்பு சிவப்பாக வும் விழிப்படலம் பழுப்பாகவும் இருக்கும்; கால்கள் ஆழ்ந்தசிவப்பு நிறம்.

தலையும், கழுத்தும், மார்பும், வயிறும் சாம்பல் நிறம் தோய்ந்த இளஞ் சிவப்பாக இருக்கும். முதுகும் மற்ற உடலின் மேற்பகுதியும் பழுப்பு நிறங்கலந்த சிவப்பாக இருக்கும். ஆணும் பெண்ணும் ஒன்றுபோல இருக்கும்.

காணப்படும் இடங்கள் : நீலகிரி, பழநி மலைகளைச் சார்ந்த மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதிகளிலும், மைசூர் மாநிலத்தில் மேற்குத் தொடர்ச்சி மலை சார்ந்த பகுதிகளிலும் என்றும் பசுமை யான காடுகளில் 2000 மீட்டர் உயரம் வரை காணலாம்.

பழக்க வழக்கங்கள் ; அடர்ந்த காடுகளை விட்டுச் சிறு புதர் களை என்று நாடிவராத இதனைச் சிறு கூட்டமாகவே எப்போதும் காணலாம். நீர் குடிக்கவும் உப்பு மண்ணைத் தின்னவுமே இது மரத்தை விட்டுத் தரையில் இறங்கும். மரங்களில் உயர இலைக ளிடையே அமர்ந்திருக்கும் இதனை அபூர்வமாகவே காணமுடியும். மரம் விட்டு மரம் பழங்களைத் தேடிச் செல்லும்போது கண்ணில் பட லாம். பறக்கும்போது இதன் தோற்றம் காக்கையின் தோற்றத்தைப் பெரிதும் ஒத்திருக்கும் காலையிலும் மாலையிலும் இலைகளற்ற மரக் கிளைகளில் உயர உட்கார்ந்து மற்றக் காட்டுப் புறாக்களைப் போல வெயில்காயும் பழக்கம் இதற்கு உண்டு. காதலூடாட்டத்தின் போது ஆண் பெண்ணிடம் பலவகையாகக் குரல் கொடுத்துக் காதல் புரி வதும், உயர எழுந்து பறந்தபின் இறக்கைகளை மடக்கி வீழ்ந்து வேடிக்கை காட்டுவதும் உண்டு.

பழங்களே இதன் முக்கிய உணவு. சாதிக்காயை விரும்பித் தின்னும். ஒரு பறவையின் தங்கு பையில் நான்கு சாதிக்காய்கள் இருந்திருக்கின்றன.

தொண்டை உப்பிக் கொள்ள, தலை தாழ்த்தி, வாலைக் கீழ் நோக்கி மடக்கியபடி உரத்த குரலில் ஹூக் ஹூக்க், ஹூக் எனத் துயரந் தோய்ந்தது போன்ற குரலில் கத்தும்.

இனப்பெருக்கம் : காலம் : ஜனவரி முதல் மே வரை. கூடு : கீழிருந்து பார்த்தால் முட்டை கண்ணுக்குத் தெரியும்படியாக குச்சிகளை லேசாக மேடைபோல் பரப்பி முட்டையிடும். கூடுகளை 5 மீட்டர் முதல் 8 மீட்டர் உயரத்தில் சிறிய மரங்களிலேயே அமைக்கும். முட்டை: 1 மட்டும். சீரான நீள் வட்ட வடிவில் வெண்மையாக இருக்கும்; ஆணும் பெண்ணும் அடைகாத்துக் குஞ்சுகளைப் பேணும் பணியில் பங்கு கொள்ளும்.

171. மாடப் புறா

517. Indian Rock Pigeon

Columba livia intermedia (Strickland)

தோற்றம் : சாதாரணமாக எங்கும் காணப்படும் எல்லோருக்கும் அறிமுகமான இது சுமார் 33 செ. மீ. நீளமிருக்கும்.

அலகு கருப்பு, அடிப்பகுதி வெள்ளையாக இருக்கும். விழிப் படலம் ஆரஞ்சு நிறம் ; கால்கள் நல்ல இளஞ் சிவப்பு.

உடலின் மேற்பகுதி நீலங் கலந்த சாம்பல் நிறமாக இருக்கும். கரும் பச்சை ஊதா, கருஞ் சிவப்பு நிறப் பளபளப் போடு கூடிய மேல் மார்பையும் கழுத்தையும் கொண்டு இதனைச் சுலபமாக அடையாளம் கண்டு கொள்ளலாம். இறக்கைகளில் இரண்டு கருப்புப் பட்டைகள் தெளிவாகத் தெரியும். ஆணும் பெண்ணும் ஒன்று போன்ற தோற்றம் கொண்டவை.

செயற்கை முறையில் பல நிறங்களில் இவற்றை இனப் பெருக்கம் செய்துள்ளனர்.

காணப்படும் இடங்கள் : தென்னிந்தியா முழுதும் மலைப் பகுதிகளிலும், பாறை இடுக்குகளிலும் காணலாம். பழைய கோட்டை கொத்தளங்கள், கோபுரங்கள், கோவில் மாடங்கள் பெரிய ரயில் நிலையங்கள், தொழிற் கூடங்கள் ஆகியவற்றில் தைரியமாகத் தங்கி வாழும். மசூதிகள், சர்ச்சுகள் ஆகியவற்றின் மீதும் இவை நிரந்தரமாக வாழும் பழக்கமுடையது.

பழக்க வழக்கங்கள் : கோட்டை, கோபுரம் போன்ற மாடங்களில் தங்கி வாழ்வது இது. அத்தகைய இடங்கள் கிடைக்காத போது பனை மரங்கள், ஈச்ச மரங்கள் போன்றவற்றைக் கூடக் குடியிருப்பு இடமாக மாற்றிக் கொள்ளும். தங்கும் இடங்களிலிருந்து சிறு கூட்டமாகவோ, நூற்றுக்கணக்கான பெருங் கூட்டமாகவோ, காலையும் மாலையும் வயற் புறங்களையும் புன்செய் நிலங்களை நோக்

கிச் சென்று, பின் கூட்டமாகவே திரும்புவதைக் காணலாம். உழவர் நிலத்தில் விதைத்த தானியங்களைப் பொறுக்கித் தின்று உழவருக்கு மிகுந்த சேதம் விளைவிப்பவை இவை. வேகமாகப் பறக்கும் ஆற்றல் பெற்ற இது ஓரிடத்தில் இறங்கும்போதும், ஓரிடத்தை விட்டுப் புறப்படும் போதும் சுற்றி வளைத்துப் பறப்பதைக் காணலாம். நகரங்களில் மக்கள் சந்தடி மிகுந்த இடங்களில் கூட அச்சமின்றி வந்து தங்கிப் பழகக் கூடியவை.

தானியங்கள், நிலக்கடலை, முளைத்த பயிர்களின் முளை ஆகியவை இதன் முக்கிய உணவு.

ஆழ்ந்த குரலில் குட்ரோகூ, குட்ரோகூ எனக் கத்தும். சிலபோது குரல் கிணற்றின் ஆழத்திலிருந்து கேட்பது போலக் கேட்கும்.

இனப்பெருக்கம் : காலம் : ஆண்டு முழுதும் கூடு : பாறை இடுக்கு, கோபுரங்கள், மாடங்கள் முதலியவற்றில் காணப்படும் புழை ஆகியவற்றில் குப்பை கூளங்களை இட்டு இறகுகள் முதலியவற்றால் மெத்தென ஆக்கி முட்டையிடும். முட்டை : 2 மட்டும். வெண்மையாக சீரான நீள் வட்ட உருவம் கொண்டது. ஆணும் பெண்ணும் அடைகாக்கும். அடைகாக்கும் காலம் 16 நாட்கள்.

அறுவடை சமயத்தில் விளை நிலங்களிலிருந்து நிறைய நெல் மணிகளைக் கொண்டுவந்து சேர்த்து வைத்துக் கொள்ளும் பழக்கம் இவற்றிற்கு உண்டு எனக் கூறுகின்றனர்.

172. நீலகிரிக் காட்டுப் புறு
521. Nilgiri Wood Pigeon
***Columba elphinstonic* (*Sykes*)**

தோற்றம்: புறுவைவிடச் சற்றுப் பெரிய இது சுமார் 42 செ. மீ. நீளமிருக்கும்.

அலகு சிவப்பு நிறம்; விழிப்படலம் மஞ்சள் நிறம்; கால்கள் வெளிர் இளஞ் சிவப்பாக இருக்கும்.

காடுகளில் வாழும் பழங்களைத் தின்னும் பெரிய புறு இது. தலை கருஞ் சாம்பல் நிறம். பின் கழுத்தில் வெண்மையும் கருப்புமான சதுரங்கப் பலகை போன்ற புள்ளிகள் காணப்படும். உடலின் மேற்பகுதி சிவப்புத் தோய்ந்த பழுப்பாக இருக்கும். முதுகில் பச்சையும் ஊதாவுமான பளபளப்பான பகுதியைக் காணலாம். மோவாயும் தொண்டையும் வெண்மையாக இருக்கும். மார்பும் வயிறும் கருஞ்

சாம்பல் நிறம். வயிற்றில் சிறிது இளஞ் சிவப்புத் தோய்ந்திருக்கக் காணலாம். வாலடியும் இறக்கையின் அடிப் பகுதியும் சிலேட் நிறம்.



S₁

நீலகிரிக் காட்டுப் புறா

காணப்படும் இடங்கள்: நீலகிரி, ஆனைமலை, பழநி மைசூர் மலைப்பகுதிகளில் பசுமரங்கள் நிறைந்த காடுகளில் காணலாம். கேரளாவில் ஏலக்காய்த் தோட்டங்களில் நிழல் செய்யும் மரங்களி லும் காணலாம். பழ மரங்கள் பழுக்கும் பருவங்களில் அவற்றை நாடி இடம் விட்டும் இடம் செல்லும்.

பழக்க வழக்கங்கள்; தனித்தோ, ஆணும் பெண்ணுமான இணையாகவோ, சிறு கூட்டமாகவோ காணலாம். பழ மரங்களி லும், பழங்கள் உதிர்ந்திருக்கும் மரத்தடியிலும் இவை திரியக் காண லாம். பழங்கள் பழுத்து முடிந்தவுடன் அந்தப் பகுதியை விட்டுச் சென்று விடும். மரங்களில் இலை மறைவில் அமர்ந்து ஓய்வு கொள் ளும். நன்கு மரங்களிடையே நுழைந்து திரும்பித் திரும்பிப் பறக்கும் ஆற்றல் வாய்ந்தது.

பழ வகைகளோடு, சிறு நத்தையையும் உணவாகக் கொள் ளும்.

க்ஃகூ...உ, க்ஃகூ...உ என ஆழ்ந்த குரலில் நான்கு முறை கத்தும்.

இனப்பெருக்கம்: காலம்: மார்ச் முதல் ஜூலை வரை. கூடு: மலைப்பகுதியில் சுமார் 1000 மீட்டர் உயரத்திற்கு மேல் அடர்ந்த சோலைகளில் உள்ள மரங்களில் குச்சிகளால் சிறு மேடையிட்டு முட்டையிடும். முட்டை 1 மட்டும் தூய வெண்மையாக இருக்கும்.

173. தென்னிந்தியப் புதுப்பானைக் கள்ளிப் புறு

533. Peninsular Turtle.Dove

Streptopelia orientalis erythrocephala (*Bonaparte*)

தோற்றம்: புறு அளவு உள்ளது இது. சுமார் 33 செ. மீ. நீளமிருக்கும்.

அலகு கொம்பு நிறமாக இருக்கும்; விழிப்படலம் வெளிர் ஆரஞ்சு நிறம். கால்கள் ஊதா நிறம்.

நெற்றியும், உச்சந்தலையும் இளஞ் சிவப்புத் தோய்ந்த சாம்பல் நிறமாக இருக்கும். கழுத்தின் இருபுறமும் கருப்பும் வெள்ளையு மான, சதுரங்கப் பலகையினை ஒத்த கட்டங்களைக் காணலாம். முதுகு கருஞ்சிவப்பான பழுப்பாக இருக்கும். இறக்கைகளின் நடுப்பகுதிகளில் பட்டை பட்டையான தோற்றம் காணலாம். பின் முதுகும் பிட்டமும் சிலேட் சாம்பல் நிறமாக இருக்கும். வால் கருப்புக் கலந்த பழுப்பு நிறமாக சிலேட் நிற விளிம்புப் பட்டை களோடு இருக்கும். மோவாயும், தொண்டையும் வெண்மையாக இருக்கும். முன் கழுத்தும் மார்பும் சிவப்புத் தோய்ந்த பழுப்பாக இருக்கும். வாலும் வாலடியும் வெண்மை நிறம். ஆணும் பெண் ணும் ஒன்று போன்ற தோற்றங் கொண்டவை.

காணப்படும் இடங்கள்: தென்னிந்தியா முழுதும் இலையுதிர் காடுகளிலும், மூங்கில் காடுகளிலும், விளை நிலங்களை அடுத்தும் ஆங்காங்கே காணலாம்.

பழக்க வழக்கங்கள்: தரையில் மேயும் கள்ளிப் புறு இது. இணை யாகவோ சிறு கூட்டமாகவோ காணலாம். காட்டுப் பாதைகளிலும் காட்டு நிலங்களிலும் தானியங்களையும் விதைகளையும் பொறுக்கித் தின்னும். கிராமப் புறங்களில் வண்டிப் பாதைகளில் இரவில் சென்ற தானியங்களைக் காலையில் பொறுக்கிக் கொண்டிருக்கக் காணலாம். விரைந்து நேராகப் பறக்கும். தொண்டையை உப்பி வைத்தபடி உரக்கக் குரல் கொடுத்து ஆண் பறவை பெண்

பறவையை நெருங்கிக் காதல் புரியும். உயரப் பறந்து பின் இறக்கையடித்தபடி வாலை விரித்துக் கொண்டு வட்டமிட்டுக் கீழே விழுவது போல வரும்.

கோர் . . . கோஉருக்குருஉ கோரு ஓ எனத் திரும்பத் திரும்ப வருத்தம் தோய்ந்த குரலில் மூச்சை உள்ளே இழுத்தபடி கத்தும்.

இனப்பெருக்கம் : காலம்: நவம்பர் முதல் பிப்ரவரி வரை. கூடு: மரங்களில் தரையிலிருந்து 2 முதல் 4 மீட்டர் உயரத்தில் குச்சிகளால் சிறு மேடை அமைத்து முட்டையிடும். முட்டை: 2 : அபூர்வமாக 3.

174. கருவளையக் கழுத்துக் கள்ளிப் புரு

534. Indian Ring Dove

Streptopelia decaoto decaoto (Frivaldszky)

தோற்றம்: புருவை விடச் சற்றுச் சிறியது. சுமார் 32 செ. மீ. நீளமிருக்கும்.

அலகு கருப்பு; விழிப்படலம் சிவப்பு; கால்கள் ஊதா நிறம்.

வெளிர்த்த சாம்பல் நிறமும் பழுப்பு நிறமும் கொண்ட கள்ளிப் புரு இது. பின் கழுத்தில் தெளிவான பிறை போன்ற கருப்பு நிற வளையம் (Collar) காணப்படும் மார்பு இளஞ் சிவப்பாகவும், வயிறு கருஞ் சாம்பல் நிறமாகவும், வாலடி மேலும் சற்றுக் கருத்த சாம்பல் நிறமாகவும் இருக்கும். பறக்கும் போதும், தரையில் இறங்கும் போதும் கருத்த வாலின் இறக்கைகளின் நுனியில் உள்ள வெள்ளை நிறத்தைத் தெளிவாகக் காணலாம்.

காணப்படும் இடங்கள் : தென்னிந்தியா முழுவதும் அடர்த்தியற்ற சிறு காடுகளிலும், இலையுதிர் காடுகளிலும், மழை குறைவாகப் பெய்யும் வறள் நிலங்களிலும், புன்செய் விளை நிலங்களிலும், அதனை அடுத்த வேலிகளிலும் காணலாம். நீர் வளமிக்க பசுங் காடுகளில் காணப்படுவதில்லை.

பழக்க வழக்கங்கள் : எங்கும் மிகுதியாகக் காணப்படும் கள்ளிப் புரு இதுவே. சில விடங்களில் மிகுதியாகக் காணப்படும். இதனைச் சற்று தள்ளியிருக்கும் மாறுபட்ட சூழலில் ஒன்று கூடக் காண முடியாது போகலாம். இணையாகவோ, சிறு கூட்டமாகவோ மற்றக் கள்ளிப் புருக்களோடு சேர்ந்தோ இது மேயக் காணலாம். கிராமங்களை அடுத்த புதிதாக விதைத்த காடுகளில் தானியங்களைப்

பொறுக்கித் தின்னும். மனிதர்களைக் கண்டு அஞ்சும் பழக்கம் இதனிடம் இல்லை. வீடுகளின் அருகிலும், மாட்டுத் தொழுவம் முதலிய மக்கள் புழக்கமுள்ள இடங்களிலும் தைரியமாக நெருங்கி வந்து இரை தேடும். புருவைப் போலவே வேகமாக, நேராக, விரைவாக இறக்கை அடித்துப் பறக்கும். வலசை போகும் சமயங்களில் மிக உயரப் பறப்பதும் உண்டு. இனப்பெருக்கக் காலத்தில் காதலூடாட்டத்தின் போது ஆண் மரக்கிளைகளின் உச்சி அல்லது கம்பங்களின் உச்சியிலிருந்து இறக்கையை மடக்கியபடி, 'க்கோன் க்கோன்' எனக் கத்தியபடி கீழே விழும். அடை காக்கும் பறவை கூட்டை நெருங்கும் மற்றப் பறவைகளோடு கோபமாகச் சண்டையிட்டு விரட்டும்.

பலவகை தானியங்களே முக்கிய உணவு.

க்ர்ஊஉ க்ர்கோ ஓஉ. ர்க்கோக்ர் எனத் திரும்பத் திரும்பக் கத்தும்.

இனப்பெருக்கம் : காலம் : ஆண்டு முழுதும். கூடு : புதர்களில் அல்லது கருவேல மரங்களில் குச்சிகளால் மேடைபோல இட்டு முட்டையிடும். முட்டை : 2 ; சிலபோது 3 ; வெண்மையாக வளவளப்பாக இருக்கும். ஆணும் பெண்ணும் அடை காக்கும்.

175. இந்தியச் சிவப்புக் கள்ளிப் புரு
535. Indian Red Durtle-Dove
Streplopelia tranquebarica tranquebarica (*Hermann*)

தோற்றம் : மைனா அளவு உள்ள இது சுமார் 23 செ. மீ. நீளமிருக்கும்.

தலையும் பிடரியும் வெளிர் சாம்பல் நிறமாக இருக்கும். கழுத்தில் ஒரு கருப்புக் கோடு காணப்படும். உடலின் மேற்பகுதி 'வைன்' நிறச் சிவப்பாக இருக்கும். போர்வைச் சிறகுகள் கருஞ்சாம்பல் நிறம். வால் பழுப்பும் சாம்பலும் கலந்து காணப்படும். வாலின் ஓர இறகுகளும் முனையும் வெண்மையாக இருக்கும். மார்பு, வயிறு ஆகியவை, 'வைன்' சிவப்பு நிறம்.

பெண் பழுப்புக் கலந்த சாம்பல் நிறமாக கருவளையக் கழுத்துக் கள்ளிப் புருவைப் பெரிதும் ஒத்துக் காட்சி தரும்.

காணப்படும் இடங்கள் : தென்னிந்தியாவின் வடக்குப் பகுதிகளில் ஆங்காங்கே சிறு புதர்க் காடுகளிலும், விளை நிலங்களின்

இடையே உள்ள இலையுதிர் காடுகளிலும் காணலாம். தென் பகுதிகளில் அபூர்வமாகக் காணலாம்.

பழக்க வழக்கங்கள்: முன்னேய கருவலேயக் கழுத்துக் கள்ளிப் புருவைப் போன்றவை. அதனைப் போல மிகுதியாக இதனைக் காணமுடியாது. மேலும் மனித நடமாட்டமுள்ள இடங்களை அச்சமின்றி நெருங்கி வரும் பழக்கமும் இதற்கு இல்லை.

தானியங்களே இதன் முக்கிய உணவு.

க்ரூஉ கூக், க்ரூஉ உ குரூர் என விரைவாக உரத்த குரலில் கத்தும்.

இனப்பெருக்கம்: காலம்: ஆண்டு முழுதும்; கூடு: மரங்களில் 7 முதல் 8 மீட்டர் உயரத்தில் குச்சிகளைப் பரப்பி முட்டை இடும். முட்டை: 2; அபூர்வமாக 3; வெண்மை நிறமாக இருக்கும். ஆணும் பெண்ணும் கூடு கட்டி அடை காக்கும் பொறுப்பில் பங்கேற்கும்.

176. புள்ளிக் கள்ளிப் புரு
537. Indian Spotted Dove
Streplopelia chinensis suratensis (Gmelin)

தோற்றம்: புருவை விட அளவில் சற்றுச் சிறியது. சுமார் 30 செ. மீ. நீளமிருக்கும்.

அலகு கருப்பு; விழிப்படலம் இளஞ்சிவப்பு; கால்கள் ஆழ்ந்த ஊதா நிறங் கலந்த சிவப்பு,

சற்று மெலிந்த தோற்றம் கொண்ட கள்ளிப் புரு இது. உடலின் மேற்பகுதி இளஞ்சிவப்புக் கலந்த பழுப்பாகவும். சாம்பல் நிறமாகவும் இருக்கும். உடலின் மேற்பகுதியில் வெள்ளைப் புள்ளிகளைப் பரவலாகக் காணலாம். கழுத்தில் வெள்ளையும் கருப்புமான சதுரங்கப் பலகைக் கட்டங்களை ஒத்த புள்ளிகள் இருக்கும். வால் கரும்பழுப்பாகவும், சிலேட் நிறத்திலும் அகன்ற வெள்ளை விளிம்போடு காட்சி தரும். பறவை தரையிறங்கும்போது வால் இறகுகளின் வெள்ளை விளிம்புகள் தெளிவாகத் தெரியும். தொண்டை இளஞ்சிவப்பாகவும், வயிறு, வாலடி, வால் கீழ்றகுகள் ஆகியன வெள்ளையாகவும், மார்பு இளஞ்சிவப்புக் கலந்த சாம்பல் நிறமாகவும் இருக்கும்.

காணப்படும் இடங்கள்: தென்னிந்தியா முழுதும் மலைகளில் 1500 மீட்டர் உயரம் வரைக் காணலாம். நீர் வளமிக்க காடுகளையும்,

தோட்டங்களையும், விளைநிலங்களையும், ஈரமிக்க இலையுதிர் காடுகளையும் அடுத்துத் திரியும்



புள்ளிக் கள்ளிப் புறா

பழக்க வழக்கங்கள் : மற்றக் கள்ளிப் புறாக்களைப் போலன்றி இது நீர்வளமிக்க இடங்களைச் சார்ந்து வாழ்வது இணையாகவோ, சிறு கூட்டமாகவோ. காட்டுப் பாதைகளிலும் அறுவடை முடிந்த வயல்களிலும் மேயக் காணலாம். மனிதர் நெருங்கினால் இறக்கைகள் விர்ரெனப் படபடக்க எழுந்து பக்க வாட்டில் வளைந்து பறந்து செல்லும் மரங்களில் அமரும்போது உயர இருந்து படிப்படியே தாழ்ந்து இறக்கையை விரித்து அமரும்.

தான்யங்களும் புல் விதைகளுமே இதன் முக்கிய உணவு.

இனிய, துயரந் தோய்ந்தது போன்ற குரலில் க்ரூஉ ஒக்ரூஉக். க்ரூஊக் ஒஉ . . க்ரூஊஓ க்ரூஊஓ எனக் கத்தும். மேலும் பலவகை குரல்களிலும் கத்த வல்லது.

இனப்பெருக்கம் : காலம் : ஆண்டு முழுதும். கூடு : மரங்களில் கீழாகவும், பாறை இடுக்குகள், வீட்டுத் தாழ்வாரங்கள் ஆகிய இடங்களிலும் சிறு குச்சிகள் புல் ஆகியன கொண்டு சற்றுக் குழிவான மேடை அமைத்து முட்டையிடும் முட்டை : 2; அபூர்வமாக 3; வெண்மையாக இருக்கும். ஆணும் பெண்ணும் கூடு கட்டிக் குஞ்சுகளைப் பேணும் பொறுப்பேற்கும். அடை காக்கும் காலம் 13 நாட்கள்.

177. சிறிய தவிட்டுக் கள்ளிப் புறு

541. Indian Little Brown or Senegal Dove

Streptopelia senegalensis cambayensis (Gmelin)

தோற்றம் : மைனா அளவுள்ள இது சுமார் 27 செ. மீ. நீளம் இருக்கும்.

அலகு கருப்பு நிறம் ; விழிப்படலம் ஆழ்ந்த பழுப்பு ; கால்கள் ஊதா தோய்ந்த சிவப்பு.

இளஞ் சிவப்பும் சாம்பல் பழுப்புமான மேல் தோற்றம் கொண்ட கள்ளிப் புறு இது. தலை, கழுத்து இரண்டும் நல்ல இளஞ்சிவப்பாக இருக்கும். முன் கழுத்தில் கீழே கருப்பும், கருஞ் சிவப்புமான சிறு சிறு புள்ளிகளைக் காணலாம். இவை தோற்றத் தில் சதுரங்கப் பலகையின் கட்ட அமைப்பை ஒத்திருக்கும். மார்பு இளஞ்சிவப்புக் கலந்த பழுப்பாகவும் உடலின் பிற அடிப்பகுதிகள் வெண்மையாகவும் இருக்கும்.

காணப்படும் இடங்கள் : தென்னிந்தியா முழுவதும் காணலாம். இலையுதிர் காடுகளைச் சார்ந்த கல்லு முள்ளுமான சிறு காடுகளிலும், கள்ளி வேலிகள் ஆகியவற்றிலும் காணலாம். மலைகளில் 1500 மீட்டர் உயரம் வரை இது காணப்படும்.

பழக்க வழக்கங்கள் : இந்தியக் கருவளையக் கள்ளிப் புறுவின் பழக்க வழக்கங்கள் போன்றனவே இதன் பழக்க வழக்கங்களும்.

தானியங்களே இதன் முக்கிய உணவு.

கோ ..க்ரூஉ...க்ரூஉ...க்ரூஊரூஉ என்றோ க்ரோஓ...ரூஉ ரூஉ...ரூஉ என்றோ மென்மையான குரலில் கத்தும்.

இனப்பெருக்கம் : காலம் : ஆண்டு முழுதும் ; சிறப்பாக ஜனவரி முதல் அக்டோபர் வரை. இரு முறை முட்டையிடுவதும் உண்டு. கூடு : சிறு குச்சிகள், புல் ஆகியன கொண்டு புதர்கள், வீட்டுத் தாழ்வாரம், சிறு மரங்கள், ஆகியவற்றின் மீது கூடு அமைக்கும். முட்டை : 2 மட்டும் ; வெண்மையான நிறத்தில், சீரான நீள் வட்ட உருவில், மென்மையான தோற்றத்தோடு விளங்கக் காணலாம்.

178. பச்சை வர்ணக் கள்ளிப் புறா

542. Indian Emerald Dove

Chaleophaps indica indica (Linnaeus)

தோற்றம் : மைனா அளவுள்ளது இது; சுமார் 27 செ. மீ. நீளமிருக்கும்.

அலகு பவளச் சிவப்பாக இருக்கும்; விழிப்படலம் பழுப்பு; கால்கள் வெளிர் ஊதா நிறம்.

உடலின் மேற்பகுதி நல்ல மரகதப் பச்சையாக இருக்கும். உச்சியும் கழுத்தும் சாம்பல் நிறம். நெற்றி, கண்புருவங்கள் ஆகியன வெண்மையாக இருக்கும். தோள்பட்டை இறக்கைகள் வெள்ளைப் பட்டையோடு கூடிய 'வைன்' சாம்பல் நிறமாக இருக்கும். பிட்டம் சாம்பல் நிறம். வால் பழுப்பும் சாம்பல் நிறமும் கலந்து நல்ல கருப்புப் பட்டையோடு காணப்படும். வாலின் கரும் பட்டை இடையே துண்டுபட்டது போல சற்று விட்டிருக்கும்.

காணப்படும் இடங்கள் : தென்னிந்தியா முழுதும் நீர்வளம் மிக்க மாருப் பசுங்காடுகளிலும், ஈரமிக்க இலையுதிர் காடுகளிலும் காணலாம். மலையடிவாரங் கள், மூங்கில் காடுகள், காட்டு விளிம்பை அடுத்த நிலங்கள் ஆகியவற்றில் இதனைக் காணலாம். 2000 மீட்டர் உயரம் வரை மலைகளில் காணலாம்.

பழக்க வழக்கங்கள் : தனித்தோ, ஆணும் பெண்ணுமான இணையாகவோ தரையில் அமர்ந்து இரைதேடக் காணலாம். காட்டுப் பாதைகளிலும், தேயிலைத் தோட்டங்களிடையே செல்லும் வழிகளிலும் கால்களால் நடந்து குறுகுறு என ஓடித் தானியங்களை பொறுக்கிக் கொண்டிருக்கக் காணலாம். பகல் நேரத்தில் காட்டா மணக்குச் செடிகளின் நிழலில் ஓய்வு கொள்ளும். பறக்கும்போது ஆரவாரமின்றி, நேராக, வேகமாக இறக்கை அடித்துப் பறக்கும் இயல்புடையதாயினும் மற்றக் கள்ளிப்புறாக்களைப் போல லாவகமாகப் பறக்கும் ஆற்றல் இதற்கு இல்லை. இதுவும் காபி, தேயிலைத் தோட்டங்களின் சுவர்களில் சாம்பல் தலை பச்சைப் புறாவைப் போல மோதி உயிர் துறப்பதுண்டு.

தான்யங்களோடு, லாண்டானா முதலான காட்டுச்செடிகளின் பழங்களையும் கரையான்களையும் உணவாகக் கொள்ளும்.

மென்மையான, ஆழ்ந்த, ஒற்றைக் குரலில் 'ஹூன்' 'ஹூன்' எனக் கத்தும்.

இனப்பெருக்கம் : காலம் : மார்ச் முதல் மே வரை. கூடு : மரங்களில் 2 முதல் 3 மீட்டர் உயரத்தில் மற்றப் புறாக்களின் கூடு களை விடச் சற்றுத் திருத்தமாகக் குச்சிகள், புல் முதலியவற்றால் கூடு அமைக்கும். கூடு பெரும்பாலும் இலைகளிடையே மறைவா கவே இருக்கும். முட்டை : 2 அல்லது 3; வெளிர் மஞ்சளான கிரீம் நிறம் கொண்டது. ஆணும் பெண்ணும் அடைகாத்துக் குஞ்சுகளைப் பேணும். அடைகாக்கும் காலம் 12 நாட்கள்.

வரிசை : சிட்டாசிஃபார்மிஸ்

Order : Psittaciformes

Family : Pssittacidae

கிளிகள்

(PARROTS)

நெடுங்காலமாக இலக்கியங்களில் சிறப்பாகப் பேசப்படும் பறவைகளுள் கிளியும் ஒன்று. உழவன் பகையாக விளைநிலத்தி லும், பழத் தோட்டத்திலும் பெரும் சேதம் விளைவிக்கும் இதனைப் புலவர்கள் போற்றிப் புகழ்வானேன்? வீட்டில் வளர்க்கும் பறவை களுள் இது சிறப்பிடம் பெற்றமையே அத்தகைய புலவர்கள் பாராட்டு உரைக்குக் காரணமாதல் வேண்டும்.

சுமார் 50 ஆண்டுகள் வரை வாழும் ஆற்றல் வாய்ந்தவை கிளிகள். மனிதர்களின் பேச்சுகளை அப்படியே கேட்டுச் சில சொற்களைத் திரும்பச் சொல்லும் ஆற்றல் இவற்றிற்கு உண்டு. பேசும் திறனும், நீண்ட வாழ்நாளும், சாதாரண பழங்கள் தானி யங்கள் ஆகியவற்றை உணவாகக் கொள்ளும் பழக்கமும் இவற் றிற்கு இருப்பதால் பெண்கள் எளிதாக இவற்றை அன்பாகப் பேணி வளர்க்கின்றனர்.

"செந்தார்ப் பைங்கிளி முன்கை ஏந்தி
இன்றுவரல் உரைமோ சென்றிசினோர் திறத்தென"

தலைவி தன் வளர்ப்புக் கிளியைப் பார்த்துத் தலைவன் வரவு பற்றி வினவுவதாக அமைத்துள்ள அகநானூற்றுப் பாடல் பழங்காலத்தி லேயே இவை பெண்களின் அன்புக்கு உரியன என்பதனை உணர்த்துகின்றது.

ராமனிடம் சீதை நான் வளர்க்கும் கிளிக்கு என்ன பெயரிடுவது என்று கேட்க, ராமன், 'என் அன்னை கைகேயியின் பெயரை இடுக' எனக் கூறியதாகக் கம்பர் பாடியுள்ளமையால் வளர்ப்புக் கிளிகளுக்குப் பெயரிடும் பழக்கமும் உண்டு என அறியலாம்.

பறம்புமலை முற்றுகையின் போது கபிலர் ஏராளமான கிளிகளைப் பழக்கி நெற்கதிர்களைக் கொண்டுவரச் செய்ததாக நக்கீரர் அகநானூற்றில் பாடியுள்ள செய்தி போர்க்காலங்களில் செய்தியனுப்பப் புருக்கள் பயன்படுத்தப்பட்டதைப் போல முற்றுகைக் காலங்களில் கிளிகளும் பயன்படுத்தப்பட்டிருக்குமோ என எண்ண வேண்டியுள்ளது.

உலகில் நூற்றுக்கு மேற்பட்ட கிளி இனங்கள் உள்ளன. பெரும்பாலானவை வெப்ப மண்டலப் பகுதிகளுக்குரியவை. ஆஸ்திரேலியாக் கண்டமே கிளியின் பிறப்பிடம் எனக் கருதப்படுகிறது. பெரிய அலகுடையே பஞ்சவர்ணக் கிளிகள் நம் நாட்டில் காணப்படுவதில்லை. தென்னிந்தியாவில் ஒரு சில பச்சைக்கிளி இனங்களே காணப்படுகின்றன.

கவிதையிலும் காவியத்திலும் சிறப்பிடம் பெற்றிருந்தாலும் கிளிகளால் மனிதனுக்கு வேறு பறவைகளைப் போல எத்தகைய வகையிலும் உதவ முடிவதில்லை என்றே கருத வேண்டியுள்ளது. இரவில் மறைந்து திரியும் கொடூரமான குரலை உடைய ஆந்தை வயலில் பயிர்களை நாசம் செய்யும் எலிகளை ஒழித்து உதவுவது போலவோ, ஆயிரக்கணக்கில் கம்பளிப் பூச்சிகளைப் பிடித்துத் தின்னும் பட்டாணிக் குருவிகளைப் போலவோ கிளிகள் நன்மையேதும் விவசாயிகளுக்குச் செய்வதில்லை. மாருகப் பழத்தோட்டங்களிலும் விளைநிலங்களிலும் பெருஞ்சேதம் செய்யும் பறவையாகவே கிளி விளங்குகின்றது.

179. பெரிய பச்சைக் கிளி

546. Large Ceylonese Parakeet

Psittacula eupatria eupatria (Linnaeus)

தோற்றம்: புரு அளவுடைய இது நீண்ட வாலுடன் 53 செ. மீ. நீளமிருக்கும். பெண் ஆணைவிடச் சற்றுச் சிறியது.

அலகு வளைந்து சிவப்பாக இருக்கும். விழிப்படலம் வெளிர் மஞ்சளாக நீலச் சாம்பல் வண்ண உள்வட்டத்தோடு காட்சிதரும். கால்கள் ஈய நிறமாக இருக்கும்.

புல் பச்சை நிறக் கிளி இது. இதன் தோள்பட்டையில் தெளிவான சிவப்பு நிறத் திட்டுக் காணப்படும். கழுத்தில் இளஞ்சிவப்பு ரோஜா நிறத்தில் ஒரு வளையம் காணப்படும். கீழ் அலகிலிருந்து கழுத்துக் கோடுவரை ஒரு கரும்பட்டைக்கோடு வரும். பெண்ணுக்கும், நன்ருக வளராத ஆண் பறவைக்கும் கழுத்தில் வளையமும் கரும்பட்டைக் கோடும் இருக்காது.

காணப்படும் இடங்கள் : தென்னிந்தியா முழுதும் காணலாம். மரங்களடர்ந்த தோப்புக்கள், இலையுதிர் காடுகள், ஈரவள மிகுந்த காடுகள் ஆகியவற்றைச் சார்ந்து திரியும். மலைகளில் 900 மீட்டர் உயரம் வரை காணலாம்.

பழக்க வழக்கங்கள் : 3 முதல் 4 வரையான கிளிகள் ஒன்ருகத் திரியும். இரவில் இலைகளடர்ந்த மரங்களில் 5 முதல் 50 வரையான பறவைகள் கூட்டமாக மற்றப் பறவைகளோடு சேர்ந்து தங்கும். எப்பொழுதும் ஆரவாரத்துடன் கத்தியபடி இருக்கும். மெல்ல இறக்கை அடித்து வேகமாகச் சீராகப் பறக்கும். பழத்தோட்டங்களில் இவை பெரும் அழிவு செய்கின்றன. பழங்களைப் பழமரங்களில் உண்பதோடு கூடக் கொத்திச் சென்று வீணுக்கவும் செய்கின்றன. பறித்துச் சென்ற பழங்களில் ஒன்றிரண்டு வாய் கடித்தவுடன் அதனைக் கீழே போட்டுவிட்டு மீண்டும் புதிய பழத்திற்காக பழமரத்தை நாடி வரும். தானியங்கள் விளையும் பருவத்தில் கதிர்களை முழுவதுமாகக் கொத்திச் சென்று உண்ணுமல் வீணுக்கும்.

பழங்களும் தானியங்களுமே இதன் முக்கிய உணவு. பலாசு, முள்முருக்கம் ஆகிய மரங்கள் மலரும் பருவத்தில் அம் மரங்களின் மலர்களில் உள்ள தேனை விரும்பிப் பிற பறவைகளோடு சேர்ந்து உண்ணும். அம்மலர்களின் இதழ்களை அலகால் வெட்டியெறிந்த பின்னரே இதனுல் உள்ளே இருக்கும் தேனினைக் குடிக்க முடியும். மற்றப் பறவைகளைப் போல அலகை மலருள் செலுத்தித் தேன் குடிக்க இதனுல் இயலாது, எவ்வகையிலும் இது உழவனுக்குப் பகைவனே.

உரத்த பெருந்தொனியில் கியாக், கியாக் கியார் என்ருே கியார் என்ருே கத்தும். சில சொற்களைப் பேசக் கற்றுக் கொள்ளும் ஆற்றல் வாய்ந்தது. சில வேடிக்கைகளைச் செய்து காட்டவும் பழகிக் கொள்ளும். மனிதர்கள் விரும்பி வளர்க்கும் பறவைகளுள் முதலிடம் பெறும் இதனைப் புலவர்களும் இலக்கியங்களில் அதிகம் பாடியுள்ளனர். காதல் தூது செல்வதற்குரிய பறவைகளுள் கிளிக்குச் சிறப்பிடம் தந்துள்ளனர் புலவர்கள். காதல் கடவுளான மன்மதனின் வாகனமாகவும் இதனைக் கூறியுள்ளனர்.

இனப்பெருக்கம் : காலம் : டிசம்பர் முதல் ஏப்ரல் வரை. கூடு : தென்னை முதலிய மரங்களில் குடைந்து பொந்து செய்து முட்டையிடும். மரங்கொத்தி, குக்குறுவான் ஆகியவற்றின் பழைய கூடுகளையும் பயன்படுத்திக் கொள்ளும். மனிதர் நடமாட்டமுள்ள இடங்களில் பழைய கோபுரங்கள், கோட்டைகள், வீடுகள் ஆகியவற்றில் பொந்துகளில் முட்டையிடும். முட்டை : 3 முதல் 4 வரை வெண்மை நிறமாக இருக்கும். ஆணும் பெண்ணும் கூடமைத்து அடைகாத்து, குஞ்சுகளைப் பேணும் எல்லாப் பணிகளிலும் பொறுப்பேற்கும். அடைகாக்கும் காலம் 19 முதல் 21 நாட்கள் வரை.

180. பச்சைக் கிளி

550. Roseringed Parakeet

Psittacula krameri manillensis (Bechstien)

தோற்றம் : மைனாவை விடச் சற்றுப் பெரியதான இது நீண்ட, கூரிய வாலுடன் சுமார் 42 செ. மீ. நீளமிருக்கும்.

மேல் அலகு செர்ரி சிவப்பாக முனை கருத்துக் காணப்படும். கீழ் அலகு சாம்பல் நிறமான பழுப்பு நிறம். விழிப்படலம் மஞ்சள் தோய்ந்த வெண்மை நிறம்; கால்கள் பசுமை தோய்ந்த சிலேட் நிறம்.

முன்னதைவிடச் சற்று மெலிந்த தோற்றம் கொண்டது. ஆணுக்குக் கழுத்தில் கருப்பும் ரோஜா நிறமும் இணைந்த நிறத்தில் கோடு காணப்படும். பெண்ணுக்கு அத்தகைய கோட்டுக்குப் பதிலாக நல்ல மரகதப் பச்சை நிறக்கோடு காணப்படும். தோள் பட்டையில் சிவப்புத் திட்டு இல்லாததை வைத்து இதனை முந்தை பெரிய பச்சைக்கிளியிலிருந்து வேறுபடுத்தி அறியலாம்.

காணப்படும் இடங்கள் : தென்னிந்தியா முழுதும் மிகுதியாகக் காணப்படும் கிளி இதுவே. இலையுதிர்காடுகளைச் சார்ந்த விளை நிலங்களை அடுத்தும், மக்கள் வாழ்விடங்களை அடுத்தும் காணலாம்.

பழக்க வழக்கங்கள் : முந்தைய பெரிய பச்சைக்கிளியைப் போன்ற பழக்க வழக்கங்கள் கொண்டதே இதுவும். பழங்களையும், தானியங்களையும் தின்பதைவிடக் கொத்தி வீண் செய்வதே அதிகம்.

இனப்பெருக்கக் காலத்தில், காதலூடாட்டத்தின்போது ஆண் தன் அலகைப் பெண்ணின் அலகோடு பிணைத்துக் கொள்ளும்;



பச்சைக் கிளிகள்

பெண்ணுக்குப் பழங்கள் கொண்டு வந்து தரும்; இறக்கையால் அணைத்துக் கொள்ளும்; சற்றுத் தூர அமர்ந்து தலையைச் சாய்த்துப் பெண்ணை ரசிப்பது போலப் பார்க்கும்.

தானியங்கள், மிளகாய், வேர்க்கடலை மலர் மரங்களில் தேன், பழங்கள், கொட்டைகைகள் ஆகியன இதன் உணவு.

'கியாக், கியாக்' என உரத்த குரலில் கத்தும்.

இனப்பெருக்கம்: காலம்: ஜன்வரி முதல் ஏப்ரல் வரை. கூடு: *மரங்களில் 3 முதல் 10 மீட்டர் உயரத்தில் பொந்துகளிலும்,* சுவர், பாறை, பாழடைந்த கோபுரம், கோட்டை ஆகியவற்றில் காணப்படும் பொந்துகளிலும் முட்டையிடும். பல பறவைகள் அருகருகே முட்டையிட்டிருக்கக் காணலாம். முட்டை: 3 அல்லது 4; அபூர்வமாக 5 அல்லது 6 வரை இடுவதும் உண்டு. நிறம் வெண்மை. ஆணும் பெண்ணும் அடைகாத்துக் குஞ்சுகளைப் பேணும். முட்டையைக் கவர வரும் பாம்பு, மற்றப் பறவைகள் ஆகியவற்றைப் பல பறவைகள் சேர்ந்து ஆரவாரமாகக் கத்தி விரட்டும்.

181. செந்தலைக் கிளி

558. Southern Blossomheaded Parakeet

Psittacula cyanocephala cyanocephala (Linnaeus)

தோற்றம்: மைனாவைவிட அளவில் சற்றுச் சிறியது இது. நீண்ட வாலுடன் சுமார் 36 செ. மீ. நீளமிருக்கும்.

மேல் அலகு ஆழ்ந்த மஞ்சளாகவும் கீழ் அலகு கருப்பாகவும் இருக்கும்; விழிப்படலம் மஞ்சள் கலந்த வெண்மை நிறம்; கால்கள் பச்சை நிறமாக இருக்கும்.

மங்கிய புல் பச்சை நிறக்கிளி இது. தலை நீலங்கலந்த சிவப்பு நிறமாக இருக்கும். கருப்பும் செம்புக் களிம்பின் நிறமுமான கோடு கழுத்தைச் சுற்றி வளையம் போலச் செல்லும். தோள் பட்டைகளில் கருஞ்சிவப்பான திட்டுக்களைக் காணலாம். வாலின் நடு இறகு நீல நிறமாக வெள்ளை நுனியோடு இருக்கும். மற்ற வாலிறகுகள் நீலமும் பசுமையும் தோய்ந்த வெள்ளை நுனியோடு காட்சி தரும்.

பெண்ணின் தலை மங்கிய சிவப்பாக இருக்கும். கழுத்தில் வளையமோ தோள்பட்டையில் சிவப்புத் திட்டோ இராது.

காணப்படும் இடங்கள்: தென்னிந்தியாவில் மேற்குக்கிழக்குத் தொடர்ச்சி மலை சார்ந்த காடுகளில் பெரும்பாலும் காணலாம். மரங்களடர்ந்த சோலைகளில் விளைநிலங்களை அடுத்தும் காணப் படுவதுண்டு. பச்சைக் கிளியைப் போல மனித நடமாட்டமிக்க இடங்களை நெருங்கி வருவதில்லை.

பழக்க வழக்கங்கள்: காடுகளில் 5 முதல் 10 வரையான கூட்டங்களாகக் காணலாம். சிலபோது விளை நிலங்களில் கதிர் முற்றும்போது நூற்றுக் கணக்கில் திரள்வதும் உண்டு. வேகமாக அம்பு போலப் பாய்ந்து பறந்து கிளைகளிடையே திறமையாக நுழைந்து செல்லும். பறக்கும்போது 'ட்டோய். ட்டோய்' எனக் கத்தும். வெண்மையான வால் நுனியும் கத்தும் குரலும் பறக்கும் போது கூட அடையாளங் காட்டும். மூங்கிற் புதர்களிலும் பலாசு மரங்களிலும் இரவில் கூட்டமாகத் தங்கும்.

தானியங்களும் பழங்களும் இதன் சிறப்பான உணவு.

இனப்பெருக்கம்: காலம்: டிசம்பர் முதல் ஏப்ரல் வரை. கூடு: மரங்களில் உயரப் பொந்துகளில் முட்டையிடும். மற்றப் பறவைகள் குடைந்த பொந்துகளையும் பயன்படுத்தும். பொந்து குடையும் போது கூட்டினுள் உதிர்ந்த மரத்தூள் தவிர மெத்தை ஆக்க வேறு எதையும் பயன்படுத்துவதில்லை. முட்டை: 4 முதல் 6 வரை வெண்மை நிறமாக இருக்கும்.

காதலூடாட்டத்தின்போது இந்த இனத்தின் ஆணும் பச்சைக் கிளியைப் போலப் பல விளையாட்டுக்களைப் புரியுமேனும் அடை காத்துக் குஞ்சுகளைப் பேணுவதில் ஆண் பங்கு கொள்வதில்லை.

182. கருந்தலைக் கிளி

562. Himalayan Slatyheaded Parakeet

Psittacula himalayona (Lesson)

தலை முழுதும் சிலேட் கருப்பு நிறமாக இருக்கும் இது இமய மலைப் பகுதிக்கே உரியது என வரையறுக்கப்பட்டுள்ளது. திரு. M. A. பாத்சா தன்னுடைய "தமிழ் நாட்டுப் பறவை வரிசை" என்ற நூலில் இதனை முதுமலைக் காட்டில் கண்டதாகக் குறித்துள் ளார். மேலும் ஆய்வுக்குரியது இக் குறிப்பு.

183. நீல இறக்கைக் கிளி
564. Bluewinged Parakeet
Psittacula columboides (Vigors)

தோற்றம்: மைனா அளவுள்ள இது சற்று மெலிந்த தோற்றம் கொண்டது. நீண்ட, கூரிய, வாலுடன் சுமார் 38 செ. மீ. நீளம் இருக்கும்.

மேல் அலகு நல்ல ஆழ்ந்த சிவப்பு; கீழலகு கருத்த முனை யோடு மங்கிய சிவப்பாக இருக்கும். விழிப்படலம் மஞ்சள் நிறம். கால்கள் பசுமை தோய்ந்த ஈய நிறமாக இருக்கும்.

தலையும், முதுகும், மார்பும் இளஞ்சிவப்புத் தோய்ந்த சாம்பல் நிறமாக இருக்கும். நீலங்கலந்த பச்சையும், கருப்புமான கோடு பின் தலையில் இருக்கக் காணலாம். கீழ் முதுகும், பிட்டமும்; வால் மேல் இறகுகளும் பசுமை கலந்த நீலமாக இருக்கும். வாலின் நடு இறகும், இறக்கைகளும் நீல நிறம். வால்முனை மஞ்சளாக இருக்கும்.

பெண்ணுக்குப் பின் தலையில் கருப்புக்கோடு இராது. மார்பும் முதுகும் ஆணைவிடச் சற்று நிறங்குன்றிக் காணப்படும்.

காணப்படும் இடங்கள்: தென்னிந்தியாவில் மேற்குத் தொடர்ச்சி மலை சார்ந்த நீலகிரி, பழனி முதலிய மலைகளில் 500 மீட்டர் முதல் 1500 மீட்டர் வரையான உயரங்களில் பசுமை மாறாத காடுகளில் காணலாம். சிலபோது செந்தலைக் கிளிகளோடு சேர்ந்து மலையடி வாரங்களில் காணப்படுவதும் உண்டு.

பழக்க வழக்கங்கள்: 4 முதல் 5 வரையான சிறு கூட்டமாக மலைப் பகுதிகளில் காட்டு வாசிகளின் குடியிருப்பை ஒட்டிய காடு களிலும், பாழடைந்து பட்டுப்போன காபி, ரப்பர் தோட்டங்களிலும் திரியக் காணலாம். மற்றப் பழக்க வழக்கங்கள் செந்தலைக் கிளியின் பழக்க வழக்கங்களை ஒத்தனவே.

இனப்பெருக்கம்: காலம்: ஜனவரி முதல் மார்ச் வரை. கூடு: கெட்டியான ஈட்டி மரத்தில் 6 முதல் 30 மீட்டர் உயரத்தில் குடைந்து பொந்து செய்து முட்டையிடும். முட்டை: 4 மட்டும். வெண்மை நிறங் கொண்டவை.

184. குட்டைக் கிளி
566. Indian Lorikeet
Loriculus Vernalis (Sparrman)

தோற்றம்: ஊர்க்குருவி அளவுள்ள இது சுமார் 14. செ. மீ. நீளமிருக்கும்.

அலகு சிறுத்து ஆரஞ்சு நிறமாக இருக்கும். விழிப்படலம் மஞ்சள் நிறம். கால்கள் ஈய நிறம்.

குட்டையான புல் பச்சை நிறமான கிளி இது; இதன் வால் மற்றக் கிளிகளைப் போல நீண்டிராது; குறுகலாகச் சதுரமாக இருக்கும். பின் முதுகில் சிவப்புத் திட்டுக் காணலாம். ஆணின் தொண்டையில் சிறு நீல நிறப் பகுதியைக் காணலாம்.

காணப்படும் இடங்கள் : கிழக்கு, மேற்குத் தொடர்ச்சி மலை சார்ந்த பகுதிகளில் சமவெளி முதல் 1000 மீட்டர் உயரம் வரை காணலாம். மரங்களடர்ந்த காடுகள், இலையுதிர் காடுகள், பசுமை மாருத காடுகள் ஆகிய பகுதிகளைச் சார்ந்து திரியும்.

பழக்க வழக்கங்கள் : இணையாகவோ, சிறு கூட்டமாகவோ இதனைக் காணலாம். எப்போதேனும் 50 வரையான பெருங் கூட்ட மாகக் கூடும். மரங்களில் உயரத்தில் இலைகளினிறூடே இவை மறைந்திருக்கும்போது எளிதில் கண்டு கொள்ள முடியாது. ஒரு மரத்திலிருந்து இன்னொரு மரத்திற்குப் பறக்கும்போது காண வாய்ப்பு ஏற்படலாம். மரச் சிமிர்களிடையே சுற்றிச் சுற்றித் தொத்தி ஏறும். ச்சீ, ச்சீ, சீஇஇ எனக் கத்தியபடி வேகமாக இறக்கை அடித்துப் பறக்கும்.

இரவில் மரக்கிளைகளில் தலைகீழாக வெள்வாலைப் போலத் தொங்கியபடி தூங்கும். வேறு எந்தத் தென்னிந்தியப் பறவையும் இது போலத் தூங்குவதில்லை. இலங்கையில் குட்டைக் கிளி கூடு கட்டுவதற்கான புல்லை எடுத்து இறக்கைகளுக்கு இடையே வைத்துக் கொண்டு வருவது கண்டு குறிக்சப்பட்டுள்ளது.

பழங்கள் இதன் முக்கிய உணவு. மலர் மரங்கள் மலரும்போது மலர்களில் தேன் குடிக்கும். தென்னை மரங்களில் பத நீர்ப் பானை களில் பதநீரை விரும்பிக் குடிக்கும். அப்படிக் குடித்த காரணத்தால் சில பறவைகள் மயக்கம் கொள்வதும் உண்டு. பழத் தோட்டங் களில் மிகுந்த அழிவினைச் செய்வது இது.

இனப்பெருக்கம் : காலம்: ஜனவரி முதல் ஏப்ரல் வரை. கூடு : இற்றுப்போன மரங்களில் சுமார் ஒரு மீட்டர் வரை ஆழ முள்ள பொந்துக்களில் முட்டையிடும். கூட்டினைப் புல்லால் மெத் தென ஆக்கும். முட்டை : 3 முதல் 4 வரை; வெண்மை நிறமாக இருக்கும்.

வரிசை: குக்குலிஃபார்மிஸ்

Order: Cucliformes

Family: Cuculidae

குயில்கள்
(CUCKOOS)

185. செவ்விறக்கைக் கொண்டைக் குயில்

569. Redwinged Crested Cuckoo

Clamator coromandus (Linnaeus)

தோற்றம்: காக்கை அளவுள்ள இது காக்கையைவிடச் சற்று மெலிந்தது. குயில்கள் பொதுவில் மெலிந்த தோற்றம் கொண்டவை. சுமார் 47 செ. மீ. நீளமிருக்கும்.

அலகு கொம்பு நிறம், கீழே சற்று வெண்மையாயிருக்கும்; விழிப்படலம் கரும் பழுப்பு; கால்கள் ஈய நிறம்.

கொண்டைக் குயிலைப் போன்ற தோற்றமுடையது. இதன் இறக்கைகள் செம்பகத்தின் இறக்கைகளைப் போலச் செம்பழுப்பு நிறமாக இருக்கும்; பின் கழுத்தில் வெள்ளைக் கோடு காணப்படும்; முதுகு பளபளப்பான கருப்பு நிறம்; மோவாய், தொண்டை, மேல் மார்பு ஆகியன துருவினைப் போன்ற சிவப்பு நிறமாக இருக்கும்; கீழ் மார்பும் வயிறும் வெண்மை. பறக்கும்போது தலைக் கொண்டையும் கழுத்தில் காணப்படும் வெண்கோடும், செம்பழுப்பான இறக்கைகளும் வெள்ளை வயிறும் தெளிவாக அடையாளங் காணத் துணை செய்யும். ஆணும் பெண்ணும் ஒன்று போன்ற தோற்றம் கொண்டவை.

காணப்படும் இடங்கள்: தென்னிந்தியாவில் கேரளா, மைசூர், தமிழ் நாடு ஆகிய மாநிலங்களில் மலை சார்ந்த பசுங்காடுகளிலும், ஈரமிகுந்த காடுகளிலும் 1500 மீட்டர் உயரம் வரை மழைக்காலத்தில் மட்டும் காணலாம்.

பழக்க வழக்கங்கள்: தனித்தோ, 3 முதல் 4 வரையான சிறு கூட்டமாகவோ மரக்கிளைகளில் உயர இலைகளிடையே மறைவாகவே திரியும். அடிக்கடி கீழே தாழ வந்து புதர்களில் இரை தேடும். கொண்டைக் குயிலைப் போன்ற பழக்க வழக்கங்களே இதற்கும். கோகிலம் போல வேகமாக இறக்கையடித்தே நேராகப் பறந்து செல்லும்.

கம்பளிப் பூச்சிகளே இதன் முக்கிய உணவு.

இங்கு வலசை வரும் சமயங்களில் அதிகம் கத்துவதில்லை.

இனப்பெருக்கம்: காலம்: ஏப்ரல் முதல் ஆகஸ்ட் வரை. கூடு: கட்டுவதில்லை. பூங்குருவிகளின் (Thrushes) கூட்டில் முட்டையிடும் சிலபோது கூட்டிலுள்ள பூங்குருவிகளின் முட்டைகளை வெளியே தள்ளும். முட்டை: 2; வெளிர் நீல நிறமாக இருக்கும்.

186. கொண்டைக் குயில்

571. Ceylon Pied Crested Cuckoo

Clamator jacobinus jacobinus (Boddaert)

தோற்றம்: மைனா அளவுள்ள இது நீண்ட வாலுடன் சுமார் 33 செ. மீ. நீளமிருக்கும்.

அலகு கருப்பு விழிப்படலம் பழுப்பு நிறம். கால்கள் ஈய நிறம். விரல்கள் கருப்பாக இருக்கும்.

தலைக் கொண்டையுட்பட உடலின் மேற்பகுதி முழுதும் கருப்பாக இருக்கும். உடலின் மேற்பகுதி முழுதும் வெண்மை. இறக்கைகளில் வட்டமான வெள்ளைப் பட்டையும், வால் இறகுகளின் முனையின் மேற்பகுதியின் வெண்மையும் பறக்கும்போது தெளிவாகத் தெரியும். ஆணும் பெண்ணும் ஒன்று போல.

காணப்படும் இடங்கள்: தென்னிந்தியா முழுதும்—ஆந்திராவின் வடபகுதி தவிர—மழைக்காலத்தில் பரவலாகவும் கோடையில் ஆங்காங்கேயும் காணலாம். மலைகளில் 2000 மீட்டர் உயரம் வரை காணப்படும்.

பழக்க வழக்கங்கள் : மரக்கிளைகளினிடையேயும் புதர்களின் இடையேயும் பெரும்பாலும் தனித்துப் புழுப் பூச்சிகளைப் பிடித்துத்

கொண்டைக் குயில்

தின்றபடி திரியும். தரையில் ஓடியாடி இரை தேடுவதும் உண்டு. புதருக்குப் புதர் தாவிப் பறக்கும்போது எளிதாக அடையாளம் கண்டு கொள்ளலாம்.

கம்பளிப் பூச்சி, சிறு வண்டு, எறும்பு, நத்தை, கரையான் முதலியன இதன் உணவு.

பீஇயு பீஇயு ..பீஈஇ பீஈஇ. . . பீஇயு, பீஇயு, எனக் கத்தும். பறக்கும் போது இதன் குரலைக் கேட்கலாம்.

இனப்பெருக்கம் : காலம் : ஆண்டு முழுதும். கூடு : கட்டுவ தில்லை ; தவிட்டுக் குருவி, பூங் குருவி முதலிய பிற பறவைகளின் கூட்டில் முட்டையிடும். முட்டை: 1 அல்லது 2; எந்தப் பறவையின் கூட்டில் முட்டையிடுகிறதோ அந்தப் பறவையின் முட்டையின்

நிறத்தையும் உருவையும் ஒத்ததாக இருக்கும்படி முட்டையிடும் ஆற்றல் பெற்றது இப் பறவை.

187. பெரிய அக்காக் குயில்

572. Large Hawk Cuckoo

Cuculas sparverioides sparverioides (Vigors)

தோற்றம்: காக்கையைவிடச் சற்றுச் சிறியது. சுமார் 38 செ. மீ. நீளமிருக்கும்.

மேல் அலகு கரும்பழுப்பாகவும், கீழ் அலகு பச்சையாகவும் இருக்கும். விழிப்படலம் மஞ்சள் அல்லது ஆரஞ்சு நிறம். கால்கள் ஆழ்ந்த மஞ்சள் நிறம்.

உச்சி, பிடரி, கழுத்தின் பக்கங்கள் ஆகியன கருஞ் சாம்பல் நிறமாக இருக்கும். உடலின் மேற்பகுதி ஆழ்ந்த சாம்பல் பழுப்பாக இருக்கும். வாலின் மேற்பரப்பு பழுப்பு நிறமாகக் கருப்புப் பட்டைகளுடனும் வெள்ளை விளிம்போடும் காட்சி தரும். தொண்டை வெண்மையாகக் கருஞ்சிவப்பும் சாம்பலுமான கோடுகளோடு காட்சி தரும் மேல் மார்பு ஆழ்ந்த கருஞ்சிவப்பாக இருக்கும். கீழ் மார்பும், வயிறும் வெண்மையாகக் கருஞ்சிவப்புத் தோய்ந்து பழுப்பு நிறக் குறுக்குக் கோடுகளுடன் காணப்படும். இது ஓரளவு வல்லூறு போலவே காட்சி தருவதாலும், வல்லூறு போலப் பறப்பதாலும் சற்றுக் குழப்பம் ஏற்படுத்தும். ஆணும் பெண்ணும் தோற்றத்தில் ஒன்று போன்றன. உருவில் மட்டும் பெண் சற்றுச் சிறியது.

காணப்படும் இடங்கள்: குளிர்காலத்தில் வட இந்தியாவிலிருந்து தமிழ்நாடு, மைசூர், கேரளா மாநிலங்களுக்கு இது வலசை வருகின்றது. மரங்களடர்ந்த மலை சார்ந்த பள்ளத்தாக்குகளிலும் மலைகளிலும் காணலாம். நீலகிரி, பழனி மலைப்பகுதிகளில் தாராளமாகக் காணலாம்.

பழக்க வழக்கங்கள்: மரத்தில் உயர இலைகளிடையே தனித்து உட்கார்ந்திருக்கும் இதனை மரக்கிளைகளிலிருந்து பாய்ந்து பறந்து செல்லும்போது தான் கண்டு கொள்ளலாம். இது பறக்கும்போது இதன் வல்லூறு போன்ற தோற்றத்தையும் வல்லூறு போலப் பறக்கும் இயல்பையும் கண்டு மற்ற சிறு பறவைகள் அஞ்சி நடுங்கும்.

கம்பளிப் பூச்சி, வண்டு, வெட்டுக்கிளி, தத்துப்பூச்சி, சிலந்தி முதலியன இதன் உணவு.

இங்கு வலசை வரும் குளிர்காலத்தில் அதிகம் கத்துவதில்லை. கோடையில் சிறிய அக்காக் குயிலைப் போலத் தொடர்ந்து கத்தும்.

இனப்பெருக்கம் : வட இந்தியாவில் பிற பறவைகளின் கூடு களில்.

188. அக்காக் குயில்

573. Common Hawk Cuckoo or Brainfever Bird

Cuculus varius varius (Vahl)

தோற்றம் : புறு அளவுடைய இது புறாவைவிடச் சற்று மெலிந்த தோற்றமுடையது. நீளம் சுமார் 34 செ. மீ.

அலகு நீலங் கலந்த பசுமை; விழிப்படலம் மஞ்சள் அல்லது ஆரஞ்சு நிறம். கால்கள் மஞ்சள் நிறம். இது பெரும்பாலும் முன் கண்ட பெரிய அக்காக் குயிலைத் தோற்றத்தில் ஒத்தது. உடலின் மேற்பகுதி வெளிர் சாம்பல் நிறமாக இருக்கும். வாலில் வெள்ளை



அக்காக் குயில்

யும் கருப்புமான பட்டைகள் அடுத்தடுத்துக் காணப்படும். இறுதிப் பட்டை அகலமாக இருக்கும். வால் நுனி கருஞ்சிவப்பாக இருக் கும். உடலின் கீழ்ப்பகுதி வெள்ளையும் கருஞ்சிவப்பும் தோய்ந்து காணப்பட்டும் மார்பு மட்டும் சாம்பல் நிறம். வயிற்றிலும் பக் கங்களிலும் பழுப்பு நிறக் குறுக்குப் பட்டைகளைக் காணலாம்.

காணப்படும் இடங்கள் : தென்னிந்தியாவில் மரங்கள் அடர்ந்த காடுப் பகுதிகளிலும்; நீர்வள மிக்க தோட்டங்கள், சோலைகளைச்

சார்ந்தும்; பசுங் காடுகளிலும் காணலாம். குளிர்காலத்திலும் இங்கே தங்கியிருக்கும். இருந்தாலும் அப்போது இதன் இடைவிடாத குரலைக் கேட்பதில்லையாகையால் இது இருப்பதாகவே தோன்றுவதில்லை.

பழக்க வழக்கங்கள்; மரங்களில் உயரத் தனித்தோ, ஆணும் பெண்ணுமான இணையாகவோ சேர்ந்து இருக்கும். மார்ச் மாதத் தொடக்கத்தில் மெல்ல குரல் கொடுக்கத் தொடங்கும் இது மே, ஜுன் மாதங்களில் இடைவிடாது உரத்த குரலில் கத்தியபடி இருக்கக் கேட்கலாம். காலை, மாலை நேரங்களிலும், நிலா வீசும் இரவுகளிலும் ஓயாது கத்தும். செப்டம்பருக்குப் பிறகு இதன் குரலை அபூர்வமாகவே கேட்கலாம். தாழ்வான மரக்கிளைகளில் அமர்ந்திருக்கும்போது எதிர்பாராது நெருங்கி விட்டால் உறைந்தது போல அப்படியே உட்கார்ந்து விடும். பறப்பது வல்லூறு பறப்பதையே பெரிதும் ஒத்திருக்கும்.

கம்பளிப்பூச்சி, வெட்டுக்கிளி, தத்துப்பூச்சி, வண்டு முதலியன உணவு. அத்திப் பழத்தையும் தின்னும். சிலபோது ஓணான் போன்றவற்றையும் பிடிக்கும்.

உரத்த கிறீச் குரலில் இது கத்தும் ஒலி பலவகையாக மொழிப் படுத்தப்பட்டுள்ளது. Wee-pi-whit என்றும் Brainfever என்றும் ஆங்கிலேயர் மொழிப்படுத்தி உள்ளனர். நான்கிலிருந்து ஆறு முறை வரை உரக்கக் கத்திக் கொண்டே போய் பின்னர் திடீரெனக் கத்துவதை நிறுத்திக் கொள்ளும். ஓரிரு நிமிடங்கள் கழித்து மீண்டும் கத்தத் தொடங்கும். முடிக்கும் போது குரல் உச்சத் தொனி (High pitch) யை எட்டி விடும். ப்வீ இ...பி...விட்டுஉ என இதன் குரலைத் தமிழ்ப் படுத்தலாம்.

இனப்பெருக்கம்: காலம்: மார்ச்-ஜூன் சிறப்பாக; பொதுவாக ஆண்டு முழுதும்; கூடு: கட்டுவதில்லை; தவிட்டுக் குருவி, பூங்குருவி, கொண்டைக் குருவி ஆகியவற்றின் கூடுகளிலேயே முட்டையிடும். முட்டை: ஒவ்வொரு கூட்டிலும் ஒவ்வொன்று வெளிர் நீல நிறமாக இருக்கும். தவிட்டுக் குருவிகளின் கூட்டில் வளர்ந்த அக்காக் குயில் குஞ்சு பறக்கத் தொடங்கியவுடன் அதற்கு இரை கொண்டு வரும் தவிட்டுக் குருவி, வல்லூறினைக் கண்டால் எத்தகைய அச்சக் குரல் (Alarm call) கொடுக்குமோ அத்தகைய அச்சக் குரல் கொடுக்கும். ஆனால் இரை கேட்டு ஆவலோடு பறக்கும் அக்காக் குயில் குஞ்சு மரக்கிளையில் அமர்ந்தவுடன் முன்பு அச்சத்திற்குக் காரணமான அதனையே தாய்மை உணர்வோடு நெருங்கி இரை ஊட்டும்.

189. இந்தியக் குயில்

576. Indian Cuckoo

Cuculus micropterus micropterus (Gould)

தோற்றம்: புறா அளவுள்ள இது சற்று மெலிந்து நீண்ட வாலுடன் சுமார் 33 செ. மீ. நீளமிருக்கும்.

அலகு கருப்பு; விழிப்படலம் பழுப்பு, கண் விளிம்பு பசுமையும் மஞ்சளும் கலந்திருக்கும்; கால்கள் மஞ்சள் நிறம்.

பழுப்புத் தோய்ந்த, கருத்த சிலேட் சாம்பல் நிறமான, மேல் தோற்றம் கொண்டது இது. உடலின் அடிப்பாகம் வெளிர் சாம்பல் நிறமும் வெண்மையும் கலந்திருக்கும். அதனிடையே கருப்புப் பட்டைகள் இடைவெளி விட்டு அமைந்திருக்கும். வால் நுனியில் ஒரு கருப்புப் பட்டையையும் அதனை அடுத்து ஒரு வெள்ளைப் பட்டையையும் காணலாம்.

காணப்படும் இடங்கள்: குளிர்காலத்தில் தென்னிந்தியாவிற்கு வட இந்தியாவிலிருந்து வலசை வருவது. திருவாங்கூர் பகுதியில் மிகுதியாகவும் மற்றப் பகுதிகளில் ஆங்காங்கேயும் காணலாம். மரங்களடர்ந்த காடுகளிலும் இலையுதிர் காடுகளிலும் காணலாம்.

பழக்க வழக்கங்கள்: மரங்களின் உச்சியில் இலைகளிடையே தனித்து இது இரை தேடித் திரியக் காணலாம். மார்ச் முதல் ஆகஸ்ட் முடிய இதன் குரலைக் கேட்கலாம். நிலவு வீசும் இரவுகளில் இரவு முழுதும் பாடியபடி இருக்கும். வானம் மப்பும் மந்தாரமுமாக இருக்கும் நாட்களில் பகல் முழுதும் இதன் குரலைக் கேட்கலாம். துணையைத் துரத்திக் கொண்டே பறக்கும் ஆண் குரல் கொடுத்தபடியே பறக்கும்.

கம்பளிப் பூச்சி, வண்டு, புழுப்பூச்சி முதலியன உணவு.

நான்கு அசை கொண்ட குழலோசையை ஒத்த இதன் இனிய குரலைப் பலவிதங்களில் மொழிப்படுததுவர். ஆங்கிலத்தில், Kyphat - Pakka, Bo-kotako, Orange pekoe, Crossword-puzzle, What's your trouble எனப் பல ஒலி வடிவங்களில் மொழிப்படுத்தியுள்ளனர். தொடர்ந்து கூர்மையாகக் கேட்டுப் பழகினால் இதன் குரலோசையை அடையாளம் கண்டு கொள்ளலாம். 5 நிமிடம் தொடர்ந்து, நிமிடத்திற்கு 23 தரம் வரை கூவக் கேட்கலாம்.

பெண், தண்ணீர் சலசலப்பது போல மென்மையான குரலில் கத்தும்.

இனப்பெருக்கம் : காலம் : ஏப்ரல் முதல் ஜூன் வரை; கூடு கட்டுவதில்லை. கரிச்சான், ஈப்பிடிப்பான், மாம்பழக்குருவி ஆகிய சற்றுப் பெரிய பறவைகளின் கூட்டில் முட்டையிடும். முட்டை : சாம்பல் நிறம் தோய்ந்த நீலமாகவும், சிவப்புத் தோய்ந்த பழுப்பாகவும் இருக்கும்.

190. குயில்

578. Cuckoo

Cuculus canorus canorus (Linnaeus)

தோற்றம் : புரு அளவுள்ள இது மெலிந்து சுமார் 33 செ. மீ நீளமிருக்கும். குஞ்சிலிருந்து முழு வளர்ச்சியடையும் வரை பல வகை வேறுபாடான தோற்றங்களோடு காட்சி தருவது. இதனையும் சின்னக் கழுகை (Sparrow Hawk) யும் தோற்றத்தால் வேறு படுத்தி அறிவது கடினம். குரல் கொண்டே அறியலாம்.

உடலின் மேற்பகுதி சற்றுக் கறுத்த வெளிர் சாம்பல் நிறமாக இருக்கும். வால் கரும் பழுப்பாக வெள்ளைப் புள்ளிகளோடும் பட்டைகளோடும் காட்சி தரும். இந்தியக் குயிலுக்குரிய வால்நுனி கரும்பட்டை இதற்கில்லை. மோவாய், மேல் கழுத்து, மார்பு ஆகியன வெளிர் சாம்பல் நிறமாக இருக்கும். பெண் பறவையின் தொண்டையும் மேல் மார்பும் சற்றுக் கருஞ் சிவப்புத் தோய்ந்திருக்கும்.

காணப்படும் இடங்கள் : ஆகஸ்ட் முதல் மார்ச் வரை வட இந்தியாவிலிருந்து தெற்கே வலசை வருகிறது. மரங்கள் அடர்ந்த காடுகளிலும் மலைசார்ந்த பகுதிகளிலும் ஆங்காங்கு ஓரளவு காணலாம்.

பழக்க வழக்கங்கள் : தனித்து மரங்களின் உச்சியில் இலை மறைவில் இரை தேடும். சிலபோது தரையில் இறங்கிக் கம்பளிப் பூச்சிகளைப் பிடிக்கும். இங்கு வலசை வரும் பருவத்தில் அதிகம் கத்துவதில்லை. காலை மாலை நேரங்களில் மரத்தில் உச்சியில் அமர்ந்து ஆண் குக்கூ குக்குக்கூ எனக் கூவும் விநாடிக்கு ஒரு கூவுதல் வீதம் 170 தரம் தொடர்ந்து கத்துவதை எண்ணியுள்ளனர்.

கம்பளிப்பூச்சி, புழுபூச்சி, சில்வண்டு முதலியன உணவு.

இனப்பெருக்கம்: தென்னிந்தியாவிற்கு வெளியே.

இதன் முட்டையிலிருந்து பிற பறவைகளின் கூட்டில் வெளி வரும் குஞ்சு, தன் முதுகில் இருக்கும் உணர்ச்சிப் பகுதியினை அந்தக் கூட்டிற்குரிய குஞ்சுகளும் முட்டைகளும் தீண்டுவதால் ஏற்படும் உணர்வூக்கத்தால் கூட்டிலிருக்கும் குஞ்சுகளையும் முட்டைகளையும் மெல்ல மெல்லக் கூட்டின் விளிம்பிலேயோ கீழேயோ தள்ளிவிடும் ஆற்றல் வாய்ந்தது. பின் அடைகாத்த பறவை கொண்டு வரும் உணவத்தனையும் தானே விழுங்கி விரைவில் அத் தாய்ப் பறவையை விடப் பெரிதாக வளரும். கதிர்க் குருவி போன்ற சிறு பறவைகள் இக் குயில் குஞ்சின் முதுகில் அமர்ந்து வாயில் இரை போடுவதையும் கண்டு குறித்துள்ளனர்.

191. சின்னக் குயில்

581. Small Cuckoo

Cuculas poliocephalus poliocephalus (*Latham*)

தோற்றம்: மைனா அளவுள்ள இது சுமார் 26 செ. மீ. நீளமிருக்கும்.

அலகு கருப்பு; விழிப்படலம் பழுப்பு; கால்கள் மஞ்சள் நிறம்.



இதன் உடலின் மேற்பகுதி சிலேட் சாம்பல் நிறமாக இருக்கும். உடலின் கீழ்ப்பகுதி கருப்புப் பட்டைகளோடு கூடிய வெண்மை நிறம்; சற்று வெளிர் மஞ்சள் தோய்ந்ததுபோல இருக்கும் மார்பும் வயிறும் ஆணும் பெண்ணும் ஒன்று போன்ற தோற்றம் கொண்டவை.

காணப்படும் இடங்கள்: செப்டம்பர் முதல் மார்ச் முடிய குளிர் காலத்தில் வடக்கே இமயப்பகுதியிலிருந்து சிறியஅளவில் வலசை வருகின்றன. நீலகிரி, குடகு, கண்ணனூர், நெல்லூர் ஆகிய பகுதிகளில் காணப்பட்ட குறிப்பு உண்டு.

பழக்க வழக்கங்கள்: மற்றக் குயில்களின் பழக்கவழக்கங்களை ஒத்ததே இதனுடைய பழக்க வழக்கமும். 5 அல்லது 6 அசைகள் கொண்டது இதன் குரல். படிப்படியே குரல் ஆரோகணத்தில் செல்லும். பின்னர் வீழ்ந்து ஒலிக்கும். இதன் குரல் அவ்வளவு இனிமையுடையதன்று. ஆங்கிலத்தில் அக் குரலொலியை That's your choky Pepper ... choky Pepper என ஒலிப்படுத்துவர். தொடர்ந்து அவசரமாக ஐந்தாறு முறை இப்படிக் குரல் கொடுக்கும்.

இனப்பெருக்கம்: தென்னிந்தியாவிற்கு வெளியே.

192. செங்குயில்

582. Indian Baybanded Cuckoo

Cacomantis sonnerattii sonnerattii (*Latham*)

தோற்றம்: மைனாவை விடச் சற்றுப் பெரியது. சுமார் 24 செ. மீ. நீளமிருக்கும்.

அலகு கொம்பு நிறமான கருப்பு; விழிப்படலம் பழுப்பு; கால்கள் சாம்பல் தோய்ந்த பச்சை நிறம்.



செங்குயில்

மெலிந்த தோற்றமுடைய சிறிய குயில் இது. உடலின் மேற்பகுதி கருஞ்சிவப்பாகப் பழுப்பு நிறக் குறுக்குக் கோடுகளோடு காணப்படும். உடலின் அடிப்பகுதி வெண்மையாக நெளி நெளியான பழுப்பு நிறக் குறுக்குக் கோடுகள்

கொண்டு விளங்கும். வாலின் பெரும்பகுதி கருஞ்சிவப்பாக, வெள்ளை விளிம்போடும் கருப்புக் கரைகளோடும் காணப்படும். ஆணும் பெண்ணும் ஒன்றுபோன்ற தோற்றம் கொண்டவை.

காணப்படும் இடங்கள் : இனப்பெருக்கம் செய்யாத காலத்தில் மிக அமைதியாக இருக்கும் இதனைக் கண்டு கொள்வது கடினம். மழைக்காலத்தில் தென்னிந்தியா முழுதும் ஆங்காங்கே காண லாம். மரங்கள் நெருக்கமில்லாத இலையுதிர் காடுகளிலும், பசுமை யான காடுகளிலும், விளைநிலங்களை அடுத்தும் காணலாம்.

பழக்க வழக்கங்கள் : தனித்து மரங்களின் உயர்கிளைகளில் அமர்ந்திருக்கக் காணலாம். மற்றப் பழக்க வழக்கங்கள் பிற குயில் களைப் போன்றனவே.

நான்கு அசை கொண்ட, உரத்த, இனிய குரலில், 'Weeti tee-ti' எனத் தொடர்ந்து கத்தியபடி இருக்கும். அப்படிக் கத்தும் போது வாலைத் தாழ்த்திக் கீழ்முதுகு இறக்கைகளை 'புஸ்' சென உப்பிக் கொள்ளும். இறக்கைகள் அப்போது பக்கங்கள் தாழ்ந்து தொங்கும். இதன் குரல் தென்னிந்தியக் குயிலின் குரல்போலவே இருக்கும்.

இனப்பெருக்கம் : காலம் : பிப்ரவரி முதல் ஆகஸ்ட்வரை. கூடு : கட்டுவதில்லை; கொண்டைக்குயில், தவிட்டுக்குருவி ஆகிய வற்றின் கூடுகளில் முட்டையிடும்.

193. இன்னிசைக் குயில்
584. Indian Plaintive Cuckoo
Cacomantis merulinus passerinus (*Vahl*)

தோற்றம் : மைனா அளவுள்ள இது சுமார் 23 செ. மீ. நீளம் இருக்கும்.

அலகு செம்பழுப்பாக இருக்கும்; விழிப்படலமும் செம்பழுப்பு நிறம்; கால்கள் பழுப்புக் கலந்த மஞ்சள் நிறம்.

உடலின் மேற்பகுதி கறுத்த சாம்பல் நிறமும் பழுப்பு நிறமும் கலந்து காணப்படும். மோவாய், தொண்டை, மார்பு ஆகியன சாம்பல் நிறமாக இருக்கும். வயிறும், வாலடியும் வெண்மையாக இருக்கும். வால் கருப்பாக வெள்ளை விளிம்போடு காட்சிதரும். வால் ஓர இறகுகளில் வெள்ளைப் பட்டைகள் காணலாம். ஆணும் பெண்ணும் ஒன்றுபோல; பெண் முழு வளர்ச்சி பெறும் முன் சில காலம் செங்குயிலைப் போலக் காட்சிதரும்.

காணப்படும் இடங்கள்: தென்னிந்தியா முழுவதும் ஆங்காங்கே காணலாம். மலைகளில் 1700 மீட்டர் உயரம் வரை தென்படும். நெருக்கமற்ற திறந்த வெளிக்காடுகள், ஊரை அடுத்த தோப்புகள், காபி, டீத் தோட்டங்களில் திரியும். குளிர்காலத்தில் அமைதியாக இருக்கும் இதனைக் கண்டு கொள்வது கடினம்.

பழக்க வழக்கங்கள்: கீச்சான் போன்ற தோற்றமுடைய இது அதனைப் போன்ற பழக்கவழக்கங்களைக் கொண்டதே. மரங்களில் இலைகளுடேயும், புதர்களிலும் தனித்துத் திரியும். கூவும்போது இலைகளற்ற உயர்ந்த கிளைகளில் அமர்ந்து கூவும். சற்று நேரம் அமைதியாக இராமல் கிளைக்குக்கிளை தாவியபடி இருக்கும். பறக்கும் பூச்சிகளைப் பிடிக்கப் பஞ்சுருட்டானைப்போல அபூர்வமாகப் பாய்ந்து பறப்பதும் உண்டு. சிலபோது தரையில் அமர்ந்து கம்பளிப்பூச்சிகளைத் தேடிப்பிடிக்கும். கூவும்போது செங்குயிலைப் போல வாலைத் தாழ்த்தி, இறக்கைகளைத் தொங்கவிட்டு, உடம்பின் மேல் தூவிகளைப் புஸ்ஸென உப்பி வைத்துக் கொள்ளும்.

கம்பளிப்பூச்சி, வண்டு, புழுபூச்சி முதலியன உணவு.

மென்மையான சீழ்க்கை ஒலி போன்ற இனிய குரலில் Piteer-kiveer என்று விட்டு விட்டுக் கூவும். 'Weeti-teeti' எனவும் Pee-pipee-pee, p p e pee?' எனக் கேள்வி கேட்பது போல் முடியும் படியாகவும் கூவும். காலை மாலை நேரங்களிலும் நிலா வீசும் இரவு நேரங்களிலும் தலையை அப்படியும் இப்படியுமாகத் திருப்பியபடி தொடர்ந்து நெடுநேரம் பாடக் கேட்கலாம்.

இனப்பெருக்கம்: காலம்: ஜூன் முதல் செப்டம்பர் வரை. கூடு: கட்டுவதில்லை. கதிர்க்குருவி, ஈப்பிடிப்பான் போன்ற சிறு பறவைகளின் கூட்டில் முட்டையிடும். அலகால் முட்டையைக் கவ்வி எடுத்துச் சென்று மற்றப் பறவைகளின் கூட்டில் வைக்கும். முட்டை: பல நிறங்கள் கொண்டவை. ஒவ்வொரு கூட்டிலும் ஒன்றிரண்டு என வைக்கலாம்.

194. பச்சைக் குயில்

586. Emerald Cuckoo

Chalcites maulatus (Gmelin)

சிட்டுக் குருவியை விடச் சற்றுப் பெரிய இந்தக் குயில் மரகதப் பச்சை நிறமானது. சென்னையில் ஒரு முறையும், பழநி மலையில் ஒரு முறையும் பிடிக்கப்பட்ட குறிப்புண்டு. அவை வழி தவறி வந்தவையாக வேண்டும். இது இமயமலைப் பகுதிக்கே உரியது.

195. கரிச்சான் குயில்

588. Indian Drango-Cuckoo

Surniculus lugubris dicruroides (Hodgon)

தோற்றம்: கரிச்சான் அளவுள்ள இது சுமார் 25 செ. மீ. நீள மிருக்கும்.

அலகு கருப்பு, விழிப்படலம் ஆழ்ந்த பழுப்பு; கால்கள் ஈய நிறம்.

உடலின் மேற்பகுதி பளபளக்கும் நீலநிறம். தோற்றத்தில் பெரிதும் கரிச்சானை ஒத்து அதனைப்போலவே பிளவுபட்ட வாலுடன் காட்சி தரும். வாலடி இறகுகளும் வால் ஓர இறகுகளும் சிறிய வெண்மையான பட்டைகளோடு காணப்படுவது கொண்டே இதனைக் கரிச்சானிலிருந்து வேறுபடுத்தி அறியலாம்.

காணப்படும் இடங்கள் : தென்னிந்தியா முழுதும் ஆங்காங்கே மலைகளைச் சார்ந்த காடுகளில் காணலாம். கேரளாவில் ஓரளவு மற்றப் பகுதிகளை விட மிகுதியும் காணலாம். இரண்டாந்தரக் காடு கள், பழத்தோட்டங்கள், காபி, டீ எஸ்டேட்டுகள் ஆகியவற்றி லும் சிலபோது என்றும் பசுமை மாறாக் காடுகளிலும் காணலாம்.

பழக்க வழக்கங்கள் : தோற்றத்தில் கரிச்சானை ஒத்திருந்தா லும் இது அதனைப் போலச் சுறுசுறுப்பாக ஓடியாடித் திரியாது. மரங்களில் உயரத் தனித்து அமர்ந்திருக்கக் காணலாம். 'கரிச்சான் தாழ்ந்த புதர்களிலும் கிளைகளிலும் இணையாகவே இருக்கும். இலை களற்ற கிளைகளில் அமர்ந்து பாடும். பாடும்போது நெட்டுக் குத் தாகக் கரிச்சானைப்போல அமராது படுகிடையாகக் குயில்களைப் போல அமர்ந்து பாடுவது இன்னொரு அடையாளம். பறப்பதும் குயில்கள் பறப்பதை ஒத்திருக்கும். மழைக்காலத்தில் மிகுதியாகக் காணப்படும் இதனை மற்றப் பருவங்களில் அமைதியாக இருப் பதால் அத்தனை எளிதில் கண்டுகொள்ள முடியாது

கம்பளிப்பூச்சி, புழுபூச்சி முதலியவற்றோடு ஆல், அத்தி முத லான மரங்களில் பழங்களையும் தின்னும்.

தொடர்ந்து ஏழு அல்லது எட்டு முறை pip-pip-pip என எண்ணிப் பழகுவது போலப் பாடும். ஒவ்வொரு pip பின் போதும் குரலை உயர்த்திக் கொண்டே போய் திடீரென நிறுத்தி மீண்டும் தொடங்கும்.

இனப்பெருக்கம்: காலம்: ஜனவரி முதல் மார்ச் வரை. கூடு: கரிச்சான், குங்குமச்சிட்டு, கருந்தலைத் தவிட்டுக் குருவி ஆகியவற்றின் கூடுகளில் முட்டையிடும். முட்டை: வெளிர்சாம்பல் நிறமாக இருக்கும் எனக் கருதப்படுகிறது.

196. கோகிலம்

590 Indian Koel

Eudynamis scolopaceus scolopaceus (Linnaeus)

தோற்றம்: காக்காய் அளவுள்ள இது காக்கையைவிட மெலிந்து சற்று நீண்ட வாலுடன் காட்சி தரும். சுமார் 43 செ.மீ. நீளமிருக்கும்.

அலகு வெளிர் பச்சை நிறம். விழிப்படலம் சிவப்பு; கால்கள் ஈய நிறம்.



கோகிலம்

ஆண்: உடல் முழுதும் பளபளக்கும் கருநிறமாக இருக்கும்.

பெண்: உடலின் மேற்பகுதி ஆழ்ந்த பழுப்பு நிறமாக வெள்ளைப் புள்ளிகளும் பட்டைகளும் நிறைந்திருக்கும். உடலின் கீழ்ப்பகுதி வெண்மை நிறம். மோவாய், தொண்டை, முன் கழுத்து ஆகியவற்றில் கரும் புள்ளிகள் காணப்படும். மார்பிலும் வயிற்றிலும் கரும்பட்டைகள் காணப்படும்.

குயில் ஆண் பெண் வேறுபாடு உணராத மக்கள் ஆணைக் கருங்குயில் என்றும் பெண்ணை வரிக்குயில் என்றும் வேறு வேறு பெயரில் வழங்குவர்.

வளராத பெண் குஞ்சு சற்றுப் புகைக் கருப்புத் தோய்ந்து காணப்படும்.

காணப்படும் இடங்கள்: தென்னிந்தியா முழுதும் அடர்த்தியற்ற காடுகள், மாந்தோப்புக்கள், சோலைகள், சாலை ஓர மரங்கள் ஊரை அடுத்த தோப்புக்கள் ஆகியவற்றில் சாதாரணமாகக் காணலாம். மலைகளில் 1000 மீட்டர் உயரம் வரை காணப்படும்.

பழக்க வழக்கங்கள்: இலைகள் நிறைந்த மரங்களில் உயரத் தனித்திருக்கும். கோடை தவிர மற்றப் பருவங்களில் அமைதியாக

இருக்கும் இதனைக் கண்டு கொள்வது கடினம். மரத்திற்கு மரம் பறந்து செல்லும்போது சுலபமாகக் காணலாம். விரைந்து நேராகப் பறந்து செல்லும். கோடையில் காலையும் மாலையும் இடைவிடாது தொடர்ந்து கூவக் கேட்கலாம். அதிகாலையில் முதன் முதல் இதன் குரலே சோலைகளிலிருந்து வெளிப்படும்.

ஆல், அத்தி ஆகிய மரங்கள் பழுக்கும்போது அம் மரங்களில் 10 முதல் 12 வரையான கூட்டமாகத் திரளும்.

கூந்தல்பனையின் கொட்டை, சந்தனப் பழத்தின் கொட்டை, கொடிய நஞ்சுடையது எனக் கருதப்படும் பொன்னரளிக்கொட்டை ஆகியவற்றையும் தின்னும்.

கம்பளிப்பூச்சி, சிறு புழுபூச்சி, நத்தை, சிறு பறவைகளின் கூடுகளில் திருடிய முட்டை ஆகியன இதன் முக்கிய உணவு.

குக்கூ, குக்கூ, குக்கூ என ஆறு ஏழு முறை தொடர்ந்து விரைந்து காலை வேளையில் ஒரு பறவை கத்த அதற்கு அதே குரலில் வேறொரு பறவை சற்றுத் தூரத்திலிருந்து பதில் தரும். கூஉ கூஉ கூஉ கூஉ எனச் சாவகாசமாக ஆறு ஏழுமுறை இனிய குரலில் கூவுவதே இதன் பாட்டு. பெண் கோகிலம் கிக் கிக் கிக் கிக் என இனிமையின்றி மிக விரைந்து கத்தும். காக்கைபோல இனிமையற்ற குரலொலிகளையும் பெண் எழுப்பும்.

இனப்பெருக்கம்: காலம்: மார்ச் முதல் மே வரையும் மீண்டும் ஜூன் முதல் டிசம்பர் வரையும்; கூடு: கட்டுவதில்லை; பெரும்பாலும் காக்கை, அண்டங்காக்கை ஆகியவற்றின் கூட்டில் முட்டையிடும். ஒரே கூட்டிலிருந்து பதினொரு கோகிலத்தின் முட்டைகள் எடுக்கப்பட்டுள்ளன.

197. சிறிய பச்சை அலகுச் செம்பகம்

595. Small Greenbilled Malkoha

Rhopodytes viridirostris (Jerdon)

தோற்றம்: இது காக்கையைவிட அளவில் சிறியது: மெலிந்த தோற்றமுடையது; நீண்ட வாலுடன் சுமார் 39 செ. மீ. நீளம் இருக்கும்.

அலகு நல்ல ஆப்பிள் பச்சை நிறம்; கண்ணைச் சுற்றிய நீல நிறத் தூவியற்ற தோல் பகுதி இருக்கும். விழிப்படலம் இரத்தச் சிவப்பு; கால்கள் கரும் பச்சை நிறம்.

பசுமை கலந்த சாம்பல் நிற மேல் உடலும் கருஞ்சிவப்பான கீழ் உடலும் கொண்டிருக்கும். வாலின் விளிம்புகள் வெள்ளையாக இருக்கும்.



சிறிய பச்சை அலகுச் செம்பகம்

காணப்படும் இடங்கள் : தென்னிந்தியா முழுவதும், புதர் காடுகளிலும், மலைப்பகுதி சார்ந்த மூங்கிற் காடுகளிலும் காணலாம். மலைகளில் 1000 மீட்டர் உயரத்திற்குமேல் காண முடியாது.

பழக்க வழக்கங்கள் : தனித்தோ, இணையாகவோ முட் புதர்களினிடையே மறைந்து திரியும். செம்பகத்தை ஒத்த பழக்க வழக்கங்களை உடையதெனினும் அதனைப்போலத் தரையில் இறங்கி நடப்பதில்லை. பறக்கும் வல்லமை அதிகமில்லாத இது புதருக்குப் புதர் தத்தித் தடுமாறித் தாவித் தாவிப் பறந்து செல்லக் காணலாம். ஆட்கள் நடமாட்டத்தைக் கண்டால் முட்புதர்களிடையே மறைந்து தப்ப முயலுமே அன்றிப் பறந்து தப்ப முடியாது.

கம்பளிப் பூச்சி, வெட்டுக்கிளி, சிறு ஓணான் முதலியவற்றோடு கூட பழங்களையும் தின்னும்.

எத்தகைய குரலொலியையும் யாரும் கேட்டதாகக் குறிப்பில்லை.

இனப்பெருக்கம் : காலம் : ஆண்டு முழுதும். சிறப்பாக மார்ச் முதல் மே வரை. கூடு : புறாவின் மேடைக் கூடு (Platform Nest) போல முட்கொத்துக்களால் புதர்களில் தரையிலிருந்து 1 அல்லது 2 மீட்டர் உயரத்தில் கூடு அமைக்கும். முட்டை : 2; அபூர்வமாக 3 ; சாக்கட்டி போன்ற வெண்மை நிறத்தில் வட்டவடிவமாக இருக்கும்.

198. கள்ளிக் குயில்
598 Souther Sirkeer Cuckoo
Taccocua leschennaultii leschenaultii (Lesson)

தோற்றம் : காக்கை அளவுள்ள இது நீண்ட வாலுடன் 48 செ. மீ. நீளம் இருக்கும்.

அலகு நன்ருகப் பருத்து, மஞ்சள் முனையோடு, நல்ல சிவப்பு நிறமாக இருக்கும்; விழிப்படலம் சிவப்புத் தோய்ந்த பழுப்பு நிறம். கண் விளிம்பு ஊதாக் கலந்த கருப்பாக இருக்கும். கால்கள் ஈய நிறம்.



கள்ளிக் குயில்

செம்பகத்தோடும், பச்சை அலகுச் செம்பகத்தோடும் நெருங்கிய உருவ ஒற்றுமை உடையது. தலையின் மேலுள்ள தூவிகளிலும், மார்பில் காணப்படும் தூவிகளிலும் மெல்லிய பளபளக்கும் கருப்புக் கோடுகளைக் காணலாம். உடல் கருஞ்சிவப்பான நிறமாக இருக்கும். வால் நீண்டு வெள்ளை விளிம்புகளோடும் கருப்புப் பட்டைகளோடும் காட்சிதரும்.

காணப்படும் இடங்கள் : தென்னிந்தியா முழுதும் மலைப்பகுதி சார்ந்த இலையுதிர் காடுகளிலும் புதர்க் காடுகளிலும், கல்லும் முள்ளுமான மலைப் பக்கங்களிலும் காணலாம். மலைகளில் 1000 மீட்டர் உயரம் வரை காணலாம்.

பழக்க வழக்கங்கள் : தனித்தோ, ஆணும் பெண்ணுமான இணையாகவோ புதர்களிடையேயும் முட்செடிகளிடையேயும் இரை தேடித் திரியும். சிலபோது தரையிலும் ஓடி ஓடி இரை தேடும் செம்பகத்தைப் போலவே குத்துச் செடிகளிலும் புதர்களிலும் கிளைக்குக்கிளை தாவிக் கீழேயிருந்து உச்சிவரை செல்லும். இதற்கும் வேகமாகப் பறக்கும் ஆற்றல் இல்லை விடாது தூரத்திலுலன்றிப் புதர்களிடையே நுழைந்து ஒளிந்து தப்பவே முயலும். தலையைத் தாழ்த்தி, வாலை நேரே நிமிர்த்திக் கற்களுக்கும் முட்களுக்கும் இடையே சற்று தூரம் ஓடிப், பின் தலையை நிமிர்த்தி சுற்றும் முற்றும் பார்த்துப் பின் மீண்டும் தலை தாழ்த்தி ஓடும்.

கம்பளிப் பூச்சி, தத்துக்கிளி, கரையான், பழங்கள், கொட்டைகள் முதலியன இதன் உணவு.

இனப்பெருக்கம்: காலம்: மார்ச் முதல் ஜுன் வரை; கூடு: முந்தைய பச்சை அலகுச் செம்பகத்தைப் போல முட்புதர்க ளிடையே கோப்பை வடிவில் கூடு அமைத்து இலைகளால் மெத் தென ஆக்கும். கள்ளி வேலிகளிலும், சிறு புதர்களிலும் தரை யிலிருந்து 2 முதல் 3 மீட்டர் உயரத்தில் கூடு அமைக்கும். முட்டை: 2; அபூர்வமாக 3; சாக்கட்டி வெண்மை நிறம்.

காதலூடாட்டத்தின்போது ஆண் வாலை உயர்த்தி விசிறிபோல விரித்துத் தலை தாழ்த்தி பெண்ணுக்குத் தன் அன்பையும் அழகை யும் காட்டும்.

199. செம்முகச் செம்பகம்

599: Redfaced Malkoha

Phaenicophaeus pyrrhocephalus (Pennant)

தோற்றம்: செம்பகத்தைவிடச் சற்று சிறிய தோற்றம் கொண்ட இது மெலிந்து காணப்படும். நீண்ட வாலுடன் 46 செ மீ.

அலகு நல்ல பச்சை நிறம்; விழிப்படலம் பழுப்பு; கால்கள் நீலங் கலந்த சிலேட் நிறம். தூவிகளற்ற முகப் பகுதி சிவப்பாக இருக்கும்.

உடலின் மேற்பகுதி கருப்பாகப் பளபளக்கும் பச்சையும் நீல மும் தோய்ந்திருக்கும். உச்சி, பிடரி, கழுத்து ஆகியவற்றில் சிறிய வெண்மையான புள்ளிகளைக் காணலாம். வாலிறகுகள் வெண் கலப் பசுமையாக வெள்ளைப் பட்டைகளோடும் விளிம்புகளோடும் காணப்படும். தொண்டையும், மார்பும் கருப்பு நிறம். உடலின் பிற கீழ்ப் பகுதிகள் வெண்மை. ஆணும் பெண்ணும் ஒன்று போல.

வளராத பறவையின் முகச் சிவப்பு அகலம் குன்றி செங்கல் சிவப்பு நிறமாக இருக்கும்.

காணப்படும் இடங்கள்; கேரளாவின் தெற்குப் பகுதியில் மட்டும் மாருப் பசுங்கோடுகளில் அபூர்வமாகக் காணப்படும் பறவை. தமிழ் நாட்டில் மதுரைக்கு மேற்கே கம்பம் பள்ளத்தாக் கில் காணப்பட்ட குறிப்புண்டு. 1932க்குப் பிறகே இது தென்னிந்தி யாவில் இருப்பது கண்டு பிடிக்கப்பட்டது. அதற்கு முன்பு இலங்கைக்கே உரியதாகக் கருதப்பட்டு வந்தது. இப்போது காடு கள் வேகமாக அழிவதால் இதன் எண்ணிக்கை மீண்டும் குறைந்து வருகிறது.

பழக்க வழக்கங்கள் : முந்தைய பச்சை அலகு சண்பகத்தைப் போன்றவை.

இனப்பெருக்கம் : காலம் : ஏப்ரல் முதல் மே முடிய ; கூடு : காடுகளில் முட் புதர்களில், சிறு குச்சிகள், புல், வேர் ஆகியவற்றால் கோப்பை வடிவில் அமைக்கும். முட்டை : 2 அல்லது 3 ; சாக் வெண்மையாக வட்ட ஓவல் வடிவில் இருக்கும்.

200. செம்பகம்

602. Southern Crow Pheasant

Centropus sinensis parroti (Stresemann)

தோற்றம் : அண்டங் காக்கை அளவுள்ள இது நீண்ட வாலு டன் 48 செ. மீ. நீளமிருக்கும்.

அலகு கருப்பு ; விழிப்படலம் சிவப்பு ; கால்கள் கருப்பு நிறம்.



செம்பகத்தின் பாதம்

உடல் பளபளக்கும் கருப்பு நிறமாகவும், இறக்கைகள் செம் பழுப்பாகவும், வால் அகன்று நீண்டு கருப்பாகவும் இருக்கும். ஆணும் பெண்ணும் ஒன்றுபோல. பெண் உருவில் சற்றுப் பெரியது.

காணப்படும் இடங்கள் : தென்னிந்தியா முழுதும் சிறு காடு கள், புதர் காடுகள், புல்வெளிகள் விளை நிலங்கள் ஆகிய பகுதிகளை அடுத்து எங்கும் தாராளமாகக் காணலாம்.

பழக்க வழக்கங்கள் : தனித்தோ, ஆணும் பெண்ணுமான இணையாகவோ புதர்களிடையே மறைந்து ஒளிந்து திரியும். பெரும் பாலும் தரையில் ஓடியே இரை தேடும். வேலி ஓரங்களையும் புதர்களையும் அடுத்தே தரையில் நடமாடும். ஆட்கள் வருவது கண்டால் உடனே புதரில் மறையும். சிலபோது வாலை மேலே

தூக்கியும், வளைத்து முதுகின்மேல் வைத்துக் கொண்டிருக்கவும் காணலாம்: துளிர்களிலோ, கிளைகளிலோ அமர்ந்திருக்கும் தத்துக் கிளையைப் பிடிக்க ச்சற்று உயரம் தாவிப் பறக்கும். இனப்பெருக்கக் காலத்தில் தரையில் ஆண் பெண்ணைத் துரத்திச் செல்லும்.

எலிக் குஞ்சு, வௌவால், பாம்பு ஓணான், நண்டு, நத்தை ஆகியன இதன் உணவு.

கூப், கூப், கூப் எனத் தொடர்ந்து ஏழெட்டு முறை ஆழ்ந்த குரலில் கிணற்றின் ஆழத்திலிருந்து கூப்பிடுவது போலக் கத்தும். ஒன்று கத்தும்போது இன்னொன்று பதில் கொடுக்கும்.

இனப்பெருக்கம்: காலம்: ஆண்டு முழுதும்; சிறப்பாக நவம்பர் முதல் மே வரை. கூடு: உருண்டையான பெரிய கூட்டினை இலைகள், புல், குச்சிகள் முதலியன கொண்டு புதர்களிலோ, மரங்களிலோ கூடு அமைக்கும். முட்டை: 3—4; சாக் நிற வெண்மை நிறங் கொண்டவை. ஆணும் பெண்ணும் கூடு கட்டி அடை காக்கும்.

201. சின்னச் செம்பகம்

605. Lesser Coucal or Crow Pheasant

Centropus toulou henghalensis (Gmelia)

முன்னதைப் போன்ற ஆனால் அளவில் சற்றுச் சிறிய இதனை வாலிறகுகள் வெள்ளை முனையோடு இருப்பது கொண்டு வேறு படுத்தி அறியலாம்.

தமிழ் நாடு, கேரளா மைசூர் மாநிலங்களில் யானைப்புல் வளர்ந்துள்ள சதுப்புக் காடுகளில் காணலாம்.

தத்துக்கிளி இதன் முக்கிய உணவு.

பழக்க வழக்கம், இனப்பெருக்கம் முன்னதைப் போல.

வரிசை : ஸ்டிரிஜிஃபார்மிஸ்

Order : Strigiformes

Family : Strigidae

Sub-family : Tytoninae

சாக்குருவி ஆந்தைகள்
(BARN OWLS)

202. சாக்குருவி ஆந்தை

606. Indian Barn Owl

Tyto albo stertens (Hartcrt)

தோற்றம் : காக்கையைவிட அளவில் சற்றுச் சிறியது. சுமார் 36 செ. மீ. நீளமிருக்கும்.

சாக்குருவி ஆந்தை

அலகு இளஞ்சிவப்புத் தோய்ந்த வெண்மையாக இருக்கும் விழிப்படலம் ஆழ்ந்த பழுப்பு : கால்கள் பழுப்புக் கலந்த சாம்பல் நிறம்.

பெரிய வட்ட வடிவமான முகமுடையது ஆந்தை. இருதய வடிவமான வெண்மையான இதன் முகம் குரங்கு போன்ற தோற்றம் கொண்டது. முகத்தைச் சுற்றி விரைத்து நிற்கும் பலவகை நிறங்கள் கொண்ட தூவிகள் இருக்கும். உடலின் மேற்பகுதி பொன்னிறமான வெளிர் மஞ்சளாக சாம்பல் நிறந் தோய்ந்து காணப்

சாக்குருவி ஆந்தை

படும். உடலின் மேற்பரப்பில் கருப்பு, வெள்ளைப் புள்ளிகளால் ஆன கோடுகளைக் காணலாம். தோள்பட்டையும் இறகுகளும் மஞ்சள் கலந்த பழுப்பு நிறமாக இருக்கும். உடலின் கீழ்ப்பகுதி பட்டுநிற வெண்மையாக வெளிர் மஞ்சள் தோய்ந்து காணப்படும். உடலின் கீழ்ப்பகுதியில் ஆழ்ந்த பழுப்புப் புள்ளிகளைக் காணலாம். ஆணும் பெண்ணும் ஒன்று போன்ற தோற்றம் கொண்டவை.

காணப்படும் இடங்கள் : தென்னிந்தியா முழுதும் விளைநிலங்களையும் மக்கள் வாழ்விடங்களையும் அடுத்துக் காணலாம். மலைகளில் 1000 மீட்டர் உயரம் வரை ஆங்காங்கு தென்படும். பழைய கோட்டைகள், பாழடைந்த வீடுகள், பழக்கத்தில் இல்லாத கிணறு, குளங்கள் ஆகிய இடங்களைச் சார்ந்து பகலில் தங்கி இருக்கும்.

பழக்க வழக்கங்கள் : காலை, மாலை அந்திகளில் பகலில் தங்கியிருக்கும் இடங்களிலிருந்து வெளிப்படும். சூரிய வெளிச்சம் பளபளப்பான ஒளியைத் (Glare) தாங்கும் ஆற்றல் இதன் கண்களுக்

குக் கிடையாது. காகம் முதலான பிற பறவைகளுக்கு அஞ்சியும் இது பகலில் வெளிப்படுவதில்லை. இருந்தாலும் மக்கள் கருது வதைப்போலப் பகல் நேரத்தில் இதற்குக் கண் முழுவதும் தெரியாமல் போவதில்லை. சூரிய வெளிச்சத்தில் ஓரிடம் விட்டு ஓரிடம் இது பறந்து சென்றதையும் கண்டு குறித்துள்ளனர். இது தங்கும் இடத்தின் கீழே இதனுடைய எச்சம் ஜீரணமாகாத எலும்புகளோடும், இது பிடித்துத் தின்னும் எலி முதலியவற்றின் மண்டையோட்டுடனும் கலந்து கிடக்கக் காணலாம். மாலை மங்கியவுடன் அலறிக் கத்தியபடி, இறக்கைகளின் சப்தமின்றி பிசாசு போன்ற பாணியில் பறக்கும் இதனைக் கண்டு அஞ்சிய மக்கள் இதற்குச் சாக்குருவி என்ற பெயரைத் தந்திருக்க வேண்டும்.

சிட்டுக்குருவி, வௌவால் முதலியவற்றோடு, எலி, சுண்டெலி ஆகியவற்றை உணவாகக் கொள்ளும் இது உழவனுக்குச் சிறந்த உபகாரம் செய்கிறது.

பலவகையாகக் கிறீச் குரலில் உரக்கக் கத்தும். இதன் குரலொலி வைவது போல இருக்கும். மேல் அலகையும் கீழ் அலகையும் ஒன்றோடு ஒன்று தட்டி ஒலி உண்டாக்கித் தன் கோபத்தைக் காட்டும.

இனப்பெருக்கம் : காலம் : ஆண்டு முழுவதும். கூடு: மரங்களில் பொந்துகளிலும், பாழடைந்த கட்டிடங்களில் காணப்படும் புழைகளிலும் முட்டையிடும். முட்டையிட்டுக் குஞ்சு பொறிக்கும் பொந்தில் சிறு எலும்புகள் குவிந்து கிடக்கக் காணலாம். முட்டை: 4 முதல் 7 வரை வெண்மையாக வளவளப்பாக இருக்கும். 48 மணி நேர இடைவெளி விட்டு விட்டு ஒவ்வொரு முட்டையாக இடும். பெண்ணே அடைகாக்கும். அடைகாக்கும் காலம் 32 முதல் 34 நாட்கள் வரை.

203. புல் ஆந்தை
608. Grass Owl
Tyto capensis longimembris (*Jerdon*)

தோற்றம் : காக்கையை விட அளவில் சற்றுச் சிறியது. சுமார் 35 செ. மீ. நீளமிருக்கும்.

அலகு இளஞ் சிவப்புத் தோய்ந்த வெண்மை நிறமாக இருக்கும்; விழிப்படலம் ஆழ்ந்த பழுப்பு: கால்கள் பழுப்புக் கலந்த மஞ்சள்; கால் விரல்கள் கொம்பு நிறம.

சாக்குருவி ஆந்தையோடு தோற்றத்தில் பெரிதும் ஒற்றுமை உடைய இதனைக் காடுகளில் வளர்ந்திருக்கும் புல்களிடையே காணலாம். இதன் முகவட்டம் இளஞ் சிவப்புத் தோய்ந்த

வெண்மை நிறமாக இருக்கும். உடலின் மேற்பகுதி ஆழ்ந்த பழுப்பு நிறமாக, சிறு சிறு வெண்புள்ளிகள் பெற்றிருக்கும். உடலின் கீழ்ப்பகுதி வெண்மையாக அகன்ற பழுப்புக் கறைகள் உடையதாக இருக்கும். வால் வெண்மையாகப் பழுப்பு நிறக் குறுக்குப் பட்டையோடு காணப்படும். கால்கள் நீண்டு மெலிந்து நெருக்கமான தூவிகளால் போர்த்தப்பட்டிருக்கும் ஆணும் பெண்ணும் ஒன்று போன்ற தோற்றம் கொண்டவை.

காணப்படும் இடங்கள்: மலைகளைச் சார்ந்த, புல் உயரமாக வளர்ந்துள்ள காடுகளில் காணலாம். நீலகிரி, பழநி, மூணாறு மலைப்பகுதிகளில் 1800 மீட்டர் உயரம் வரை காணலாம்.

பழக்க வழக்கங்கள்: காலை மாலை அந்திகளில் பகல் முழுதும் மறைந்திருந்த புல் புதர்களிலிருந்து வெளிப்பட்டு இரை தேடும். பகலில் புல்லின் இடையே நிமிர்ந்து உட்கார்ந்தபடி தூங்கிக் கொண்டு இருக்கும். மனித நடமாட்டம் இருக்குமானால் எழுந்து சற்றுத் தூரம் பறந்து மீண்டும் புல்லிடையே மறைந்து அமர்ந்து கொள்ளும். இரவில் சப்தமின்றிப் பறந்து இரை தேடும். தனித்தோ, ஆணும் பெண்ணுமான இணையாகவோ, சிறு கூட்டமாகவோ காணலாம்.

காட்டுச் சுண்டெலி, கத்துக்கிளி, வண்டு முதலியன இதன் உணவு. காடை முதலிய சிறு பறவைகளையும் வேட்டையாடும்.

குரல் சாக்குருவி ஆந்தையின் குரலையொத்ததே.

இனப்பெருக்கம்: காலம்: அக்டோபர் முதல் மார்ச் வரை. கூடு: தரையில் சாய்ந்து கிடக்கும் புல் மீது முட்டையிடும். சுற்றிலும் வளர்ந்துள்ள புல் முட்டையை மூடி மறைத்தபடி சாய்ந்து நிற்கும். முட்டை: 4 முதல் 6 வரை; தூய வெண்மை நிறங் கொண்டது.

Family: Striginae

ஆந்தைகள்

(OWLS)

204. தென்னிந்தியச் சின்ன ஆந்தை

617. Peninsular Scops Owl

Otus scops rufipennis (Sharpe)

தோற்றம்: மைனாவை விடச் சற்றுச் சிறியது. சுமார் 19 செ. மீ. நீளமிருக்கும்.

அலகு பழுப்புக் கலந்த கொம்பு நிறம்; விழிப்படலம் மஞ்சள்; கால்கள் லேசான செம்மை கலந்த பழுப்பாக இருக்கும்.

இதன் தலையில் மேல் நோக்கி வளர்ந்த சிறிய கொம்புபோன்ற காது உண்டு. உடலின் மேற்பகுதி கருப்பும், கருஞ் சிவப்பும், சாமபல் நிறமும் கூடிக் கலந்த சாம்பல் பழுப்பாகக் காணப்படும். சிறு பழுப்புக் கோடுகள் மேல்கீழாக மார்பிலும் வயிற்றிலும் காணப் படும்.

காணப்படும் இடங்கள் : தமிழ்நாடு, கேரளா, மைசூர் மாநிலங் களில் மேற்குக் கிழக்குத் தொடர்ச்சி மலைகளைச் சார்ந்த இலையுதிர் காடுகளிலும் மாருப் பசுங்காடுகளிலும் காணலாம். மலைவாசி களின் குடியிருப்பையும் மலைக்காட்டு விளைநிலங்களையும் சார்ந்து திரியும்.

பழக்க வழக்கங்கள் : பகல் முழுதும் மரப்பொந்துகளிலோ அடர்த்தியாக வளர்ந்துள்ள இலைகளிடையோ நேரே நிமிர்ந்தபடி உட்கார்ந்து பொழுதைக் கழிக்கும். இதன் தோற்றம் பின்னணி யோடு பெரிதும் ஒத்திருப்பதால் கண்களில் எளிதில் படாது. இர வில் வெளிப்பட்டு இரை தேடும் இதன் பழக்க வழக்கங்கள் முழு தும் ஆராயப்படவில்லை.

சிறு பறவைகள், எலி, வண்டு, தத்துக்கிளி முதலியன இதன் உணவு.

இதன் குரல் வெண்கல மணி ஒலிப்பது போலக் கேட்கும்.

இனப்பெருக்கம் : விவரம் அறியப்படவில்லை.

205. வெண்பட்டைக் கழுத்துச் சின்ன ஆந்தை

623. Ceylon Collared Scops Owl

Otus bakkamoena bakkamoena (Pennant)

தோற்றம் : மைனா அளவுள்ள இது சுமார் 25 செ. மீ. நீளம் இருக்கும்.

அலகு கொம்பு நிறம்; விழிப்படலம் பழுப்புக் கலந்த மஞ்சள் நிறம்; கால்கள் அழுக்கு மஞ்சள் நிறம்.

தலையில் காதுபோல் அமைந்த சிறு கொம்புகள் இருக்கும். பின் கழுத்தில் ஒரு வெளிர்பட்டை இருப்பது இதனைத் தென்னிந் தியச் சின்ன ஆந்தையிலிருந்து வேறுபடுத்திக் காட்டும். உடலின்

மேற்பகுதி சாம்பல் பழுப்பும் கருஞ்சிவப்பும் கலந்து காணப்படும். வெள்ளைப் புள்ளிகளும் கோடுகளும் உடலின் மேற்பகுதியில் காண லாம். மோவாய் வெண்மை; தொண்டை கருப்புக் கோடுகள்

வெண்பட்டைக் கழுத்துச் சின்ன ஆந்தை

கலந்த வெண்மை; மார்பும் வயிறும் நல்ல வெளிர் மஞ்சளாகக் கருங்கோடுகளோடும் தெளிவான செம்பழுப்புப் பட்டைகளோடும் காணப்படும்.

காணப்படும் இடங்கள் : தென்னிந்தியா முழுதும் இலையுதிர் காடுகளையும், மாருப் பசுங்காடுகளையும் அடுத்தும், தோப்புக்கள், விளைநிலங்கள், ஊர்ப்புறவயல் ஆகியவற்றைச் சார்ந்து காண லாம்.

பழக்க வழக்கங்கள் : இரவிலேயே வெளிப்படும். குரல் கொண்டுதான் இது இருப்பதை அறிய முடியும். பகல் முழுதும் மரக்கிளைகளில் இலைகளிடையே நிமிர்ந்து அமர்ந்திருக்கும்.

சிறு பறவைகள், எலி, ஓணான், தத்துக்கிளி, வண்டு முதலி யன இதன் உணவு.

வாஉட்? வாஉட்? எனக் கேள்வி போலக் கத்தும். அக்க், அக்க், அக்க் எனக் குரல் கொடுப்பதும் உண்டு.

இனப்பெருக்கம் : காலம் : ஜனவரி முதல் பிப்ரவரி வரை. கூடு : மரங்களில் பொந்தில் முட்டையிடும். காபி, டீ தோட்டங் களை அடுத்து நிற்கும் மரங்களைத் தேர்ந்தெடுக்கும். வீட்டுக்கூரை, சுவர் ஆகியவற்றில் உள்ள பொந்துகளிலும் சிலபோது முட்டை யிடும். முட்டை : 3 முதல் 5 வரை; வெண்மையாக வளவளப் போடு உருண்டை வடிவில் இருக்கும்.

206. கொம்பன் ஆந்தை

627. Indian Great Horned or Eagle Owl

Bubo bubo bengalensis (Franklin)

தோற்றம்: பருப்பருந்து அளவுள்ள இது அதனை விடப் பருமனான தோற்றம் கொண்டது. சுமார் 56 செ. மீ. நீளமிருக்கும்.

அலகு கொம்பு நிறமான பழுப்பு; விழிப்படலம் ஆரஞ்சு நிறம்; கால்கள் தூவிகளோடு கூடி வெண்மையாக இருக்கும்.

பழுப்பு நிறமான பெரிய ஆந்தை இது; கருப்பும், வெளிர் மஞ்சளும், ஆழ்ந்த பழுப்பான கோடுகளும் புள்ளிகளும் உடல் முழுதும் காணப்படும் தலையில் இரண்டு கொம்புகள் கருப்பு நிறத்தில் உயர எழுந்து நிற்கும். கண்கள் வட்டவடிவமாகப் பெரிதாக ஆரஞ்சு நிறங்கொண்டு காணப்படும். இதன் உருவமும் கொம்புகளும் மரக்கிளையில் அமர்ந்திருக்கும் பூனையோ என ஐயங்கொள்ளச் செய்யும்.

மீன் தின்னும் ஆந்தையும் பெரும்பாலும் இது போன்றதே இருந்தாலும் அதன் கால்களில் தூவிகளாலான போர்வை இல்லாதது கொண்டும், அதன் தலையில் உள்ள கொம்புகள் இதன் கொம்புகளைச் செங்குத்தாக இல்லாது சற்றுப் பக்கவாட்டில் சாய்ந்திருப்பது கொண்டும் இதனை அதனின்றும் எளிதில் வேறுபடுத்தி அறியலாம்

காணப்படும் இடங்கள்: தென்னிந்தியா முழுதும் புதர் நிறைந்த, பாறைகளோடு கூடிய மலைப்பக்கங்களிலும், காடுகளிலும், பழைய பெரிய மாந்தோப்புக்களிலும், ஊரை அடுத்த தோப்புக்களிலும் காணலாம். மாறாப் பசுங்காடுகளையோ, நீர்வளமே இல்லாத வறள் காடுகளையோ இது விரும்புவதில்லை.

பழக்க வழக்கங்கள்: இரவில் வெளிப்படும். காலை மாலை நேரங்களில் மறைவிடத்திலிருந்து வெளிப்பட்டுப் பாறைகள் மீது அமர்ந்திருக்கக் காணலாம். பாறை இடுக்குகளிலோ, புதர்களிலோ, மரக்கிளைகளில் இலைகளிடையேயோ மறைவாக அமர்ந்து பொழுதைக் கழிக்கும். திடீரென மனிதர்கள் எதிர்ப்பட்டால் சிரமமில்லாமல் சூரிய வெளிச்சத்தில் கூடப் பறந்து செல்வதைக் காணலாம். மெல்ல இறக்கை அடித்தும், இடையிடையே இறக்கையைப்

பரப்பி, மிதந்தும் பறக்கும். பகலில் பிற பறவைகள் இதனைத் துன்புறுத்த முற்படுவதாலேயே இது மறைந்து வாழ்கிறது.

எலி, சுண்டெலி, தவளை, நண்டு ஆகியன உணவு.

ஆழ்ந்த தொனியில் ப்பூஉ-பூஒ என விட்டு விட்டுக் கத்தும். கூட்டை நெருங்கினால் அலகை ஒன்றோடு ஒன்று தட்டி ஓசை எழுப்புவதோடு கூடத் தூவிகள் புஸ்ஸென உப்ப இறக்கையையும் சற்று விரித்து 'உஷ்' எனச் சப்தம் செய்யும்.

இனப்பெருக்கம் : காலம் : நவம்பர் முதல் மே வரை. கூடு: பாறைகள் மீதும், மண்மேடுகளிலும், தரையில் புதர் ஓரங்களிலும் அகன்ற குழிகளில் முட்டையிடும். முட்டை : 4; சிலபோது 2 அல்லது 3; வெண்மை நிறமாக இருக்கும்.

207. பெரிய காட்டு ஆந்தை

628. Forest Eagle Owl

Bubo nipalensis nipalensis (Hodgson)

தோற்றம் : பரப்பருந்து அளவுள்ள இது அதனை விடவும் பருமனான தோற்றம் கொண்டது. சுமார் 93 செ. மீ. நீளமிருக்கும்.

அலகு மஞ்சள் நிறம்; விழிப்படலம் பழுப்பு; கால் விரல்கள் மஞ்சள் நிறம்.

உடலின் மேற்பகுதி ஆழ்ந்த பழுப்பாக சீரான வெளிர் மஞ்சள் கோடுகளோடு காணப்படும். தலையில் கருப்பும் வெள்ளையுமாகக் கலந்த நிறத்தில் இரண்டு கொம்புகள் செங்குத்தாக நிற்கக் காணலாம். உடலின் கீழ்ப்பகுதி சிவப்பும் மஞ்சளும் தோய்ந்த வெண்மையாக இருக்கும். தொண்டையிலும் மார்பிலும் கருப்புப் பட்டைக் கோடுகளைக் காணலாம். வயிற்றில் கருப்புப் பட்டை இடைவெளி விட்டு விட்டுத் தெளிவாகக் காணப்படும். கால்கள் தூவிகளால் முழுதும் மூடப்பட்டிருக்கும். இதன் கண்கள் பழுப்பு நிறமாகவும் கொம்பன் ஆந்தையின் கண்கள் ஆரஞ்சு நிறமாகவும் இருப்பதைக்கொண்டு இரண்டையும் வேறுபடுத்தி அறியலாம்.

காணப்படும் இடங்கள் : மேற்கு, கிழக்குத் தொடர்ச்சி மலை சார்ந்த 'சோலைகள்' எனப்படும் மாருப் பசுங்காடுகளில் மட்டும் காணலாம்.

பழக்க வழக்கங்கள் : அடர்ந்த காடுகளில் மரங்களில் உயர இலைகளிடையே அமர்ந்து பகல் முழுதும் தூங்கியபடி இருக்கும். இரவு வந்ததும் வெளிபபட்டு இரை தேடத் தொடங்கும். மாலை நேரங்களில் சோலையின் விளிம்புகளில் காணலாம். மிக ஆற்றல் வாய்ந்த இது மிகப் பெரிய பறவைகளான காட்டுக் கோழி, மயில் ஆகியவற்றைக் கூடத் தூக்கிச் செல்லும். காட்டுவாசிகளின் கிராமங்களில் வந்து பூனைகளையும், கோழிகளையும், புருக்களையும் இரவு நேரங்களில் தூக்கிச் செல்லும். புலி முதலான இறந்து விழ்ந்த விலங்குகளின் மாமிசத்தை இது தின்பதைக் கண்டு குறித்து உள்ளனர்.

காட்டுக்கோழி, காடை, கௌதாரி, முயல், ஓணன், பாம்பு முதலான பலவற்றையும் வேட்டையாடித் தின்னும்.

ஆழ்ந்த குரலில், நெடுந்தூரம் கேட்கும்படியாக ஹூட், ஹூட் எனக் கத்தும்.

இனப்பெருக்கம் : காலம் : டிசம்பர் முதல் ஜனவரி முடிய. கூடு : வயதான, பெரிய, மரங்களின் பொந்துகளிலும், பெரிய கழுகுகள் கட்டிய பழைய கூடுகளிலும், பாறை இடுக்குகளிலும், குகைகளில் தரையிலும் முட்டையிடும். முட்டை: 1 மட்டும்; வெண்மையாக வட்டமான ஓவல் வடிவில் இருக்கும். கூட்டை நெருங்கினல் மிகக் கோபங் காட்டும்.

208. புகைக் கருப்புக் கொம்பன் ஆந்தை

630. Dusky Horned Owl

Bubo coromandus coromandus (Latham)

தோற்றம் : பரப் பருந்தின் அளவிருக்கும் இது அதைவிட மேலும் சற்றுப் பருமனுக சுமார் 58 செ. மீ நீளமிருக்கும்.

அலகு சாம்பல் நிறந் தோய்ந்த வெண்மை நிறம். விழிப்படலம் ஆழ்ந்த பஞ்சள் (ஆரஞ்சு நிறமன்று) கால் விரல்கள் கருப்பு நிறம்.

மரத்தில் உட்கார்ந்திருக்கும் போது இதன் தலையில் கொம்புகள் ஒன்றருகே ஒன்ருக விரைப்பாக நிற்கும். உடலின் மேற்பகுதி புகைக் கருப்புத் தோய்ந்த பழுப்பு நிறமாக சிறு வெண்புள்ளி

களோடும் கோடுகளோடும் காட்சி தரும். இறக்கைகளும், வாலும் பழுப்பு நிறமாக வெளிர் புள்ளிகளாலான பட்டைகளோடும் காணப்படும்.

காணப்படும் இடங்கள்: மைசூர் கேரளா மாநிலங்களில் பழைய மாந்தோப்புகளிலும், நெடுஞ்சாலைகளின் ஓரத்தில் உள்ள வயதான புளிய மரங்களிலும், நீர்நிலைகளைச் சார்ந்த தோப்புகளிலும் காணலாம்.

பழக்க வழக்கங்கள்: ஆணும் பெண்ணுமான இணையாக இது ஒரே இடத்தில் பல ஆண்டுகள் தங்கி வாழும் பழக்கமுடையது. பிற்பகல் நேரத்தில் சூரியன் மறையும் முன்பே வெளிப்பட்டு இரை தேடத் தொடங்கி விடும். மேக மூட்டமான நாட்களில் நாள் முழுதும் இரை தேடித் திரியும்.

முயல், சிறு பறவைகள், பாம்பு, பெரிய புழுபூச்சிகள், தவளை, மீன் முதலியன இதன் உணவு.

வ்ஊஓ, வ்ஊஓ, வ்ஊஓஓ ஓ என ஆழ்ந்த குரலில் கத்தும். முதலில் உரக்கக் கத்தத் தொடங்கி போகப் போக மெல்லிய குரலில் ஒலித்து முடிக்கும்.

இனப்பெருக்கம்: காலம்: ஜனவரி முதல் மார்ச் முடிய கூடு: நீரருகே நிற்கும் ஆல், அத்தி, அரசு, முதலான பெரிய மரங்களில் உயரே குச்சிகளால் கூடு அமைக்கும். பருந்து: கழுகு ஆகியவைகளின் பழைய கூடுகளையும் பயன் படுத்தும். மனித நடமாட்டமுள்ள இடங்களின் அருகேயே இதன் கூடுகளைக் காணலாம். முட்டை: 2; சிலபோது 1 மட்டும். கிரீம் வெண்மையாக உருண்டு திரண்ட ஓவல் வடிவத்தில் இருக்கும் முதல் முட்டையிட்டுப் பின் பல நாட்கள் கழித்தே இரண்டாம் முட்டையை இடுகின்றது. பின்னர் வைக்கப்படும் முட்டையிலிருந்து வரும் குஞ்சு முழு வளர்ச்சி பெறுமலேயே பெரும்பாலும் இறக்க நேரிடுகிறது.

209. பூமன் அல்லது மீன் தின்னும் ஆந்தை

631. Brown Fish Owl

Bubo zeolonensis lesehenault (Temmick)

தோற்றம்: பராப் பருந்து அளவுள்ள இது சற்றுப் பருமனாக 56 செ. மீ. நீளமிருக்கும்.

அலகு பசுமை தோய்ந்த வெளிர் மஞ்சள் நிறம்; விழிப்படலம் நல்ல பொன் மஞ்சள் நிறம்; கால்கள் ஆழ்ந்த மஞ்சள் அல்லது பசும் நிறம்.



பழுமன் அல்லது மீன் தின்னும் ஆந்தையின் பாதம்

கருஞ் சிவப்புக் கலந்த பழுப்பு நிறமான ஆந்தை. தலையில் கொம்புகள் இருக்கும். உடலின் மேற்பகுதியில் நெருக்கமான கருப்புக் கோடுகளைக் காணலாம். உடலின் கீழ்ப்பகுதி மஞ்சளும், இளஞ்சிவப்பும் தோய்ந்த வெண்மை நிறமாக இருக்கும். நெளி நெளியான பழுப்பு நிறக் குறுக்குப் பட்டைக் கோடுகளும், பெரிய கருப்புக் கோடுகளும் காணப்படும். தொண்டையும் முன் கழுத்தும் எத்தகைய கறையும் இன்றி நல்ல வெண்மை நிறமாக இருக்கும். கால்களில் தூவி போர்வை இராது.

குஞ்சுகள் வளர்ந்து பெரிய பறவைகளுக்குரிய ஆழ்ந்த நிறங்களைப்பெற மூன்றுண்டுகள் செல்ல வேண்டும்.

காணப்படும் இடங்கள்: நீலகிரி, பழநி மலைகளில் 1400 மீட்டர் உயரம் வரையும் காணலாம். சமவெளிகளில் நீர்வள மிகுந்த பகுதிகளில் அடர்ந்த மாந்தோப்புகளிலும், பெரிய சாலை ஓர மரங்களிலும் காணலாம்.

பழக்க வழக்கங்கள்: நீர்நிலைகளை அடுத்து நிற்கும் மரங்களிலோ, பாறைகளிலோ அமர்ந்து நீர்ப்பரப்பை நோட்டம் விட்டபடி இருந்து மீன் பிடிக்கும். நீர்ப்பரப்பை ஒட்டிக் குறுக்கும் நெடுக்குமாகப் பறந்து மீன் பிடிப்பதும் உண்டு. நீரில் பாயாமல் மீன்களைக் கால் விரல்களால் லாவகமாகப் பற்றிப் பிடிக்கும். ஆழமற்ற நீரில் இறக்கிக் குளிக்கும் பழக்கம் இதற்கு உண்டு.

மீன், தவளை, நண்டு முதலியன முக்கிய உணவு.

'பூம்ம், பூம்ம்' எனச் சற்று நேரத்திற்கொரு முறை கத்தும்.

இனப்பெருக்கம்: காலம்: டிசம்பர் முதல் மார்ச் வரை; கூடு: மா, அத்தி, அரசு முதலிய மரங்களில் கிளைகளிடையே கூடு கட்டும். பாறை இடுக்குகளிலும் முட்டையிடும். எப்படியும் நீரருகேயே இனப்பெருக்கம் செய்யும். முட்டை: 1 அல்லது 2; வெண்மையாக வட்ட வடிவில் இருக்கும்.

210. மலபார் சிறிய காட்டு ஆந்தை

637. Malabar Barred Jungle Owlet

Glaucidium radialum malabaricam (Blyth)

தோற்றம்: மைனா அளவுள்ள இது சுமார் 20 செ. மீ. நீளம் இருக்கும்.

அலகு மஞ்சள் தோய்ந்த கொய்பு நிறம்; விழிப்படலம் நல்ல மஞ்சள்; கால்கள் மஞ்சள் நிறம்.

சிறிய, குறுகலான, வட்டமான தலையோடு கூடிய உடலின் மேல் பட்டைகளை உடைய ஆந்தை உடலின் மேற்பகுதி ஆழ்ந்த பழுப்பு நிறமாகத் தெளிவான இளங் கருஞ்சிவப்புப் பட்டைகளுடன் காணப்படும். மோவாய், நடுமார்பு, வயிறு ஆகியன



மலபார்-சிறிய காட்டு ஆந்தை

வெண்மை நிறம். உடலின் பிற கீழ்ப்பகுதிகள் நல்ல ஆலிவ் பழுப்பு நிறப் பட்டைகளோடு கூடிய வெண்மை நிறம். இறக்கை அடியில் காணப்படும் கருஞ்சிவப்புப் பகுதி பறக்கும்போது தெளிவாகத் தெரியும். ஆணும் பெண்ணும் ஒன்று போல.

காணப்படும் இடங்கள்: மைசூர் கேரளா மாநிலங்களில் மேற்குத் தொடர்ச்சி மலை சார்ந்த பகுதிகளில் தேக்கு, மூங்கில் மரக் காடுகளைச் சார்ந்து திரியும்.

பழக்க வழக்கங்கள் : தனித்தோ, ஆணும் பெண்ணுமான இணையாகவோ காலை மாலை அந்திகளில் மறைவிடத்திலிருந்து வெளிவந்து இரை தேடும். மேகமூட்டமான மழை தூறும் நாட்களில் நாள் முழுதும் சுறுசுறுப்பாக இருக்கும். பகலில் மரக்கிளைகளில் இலைகளிடையோ, பொந்துகளிலோ மறைந்து இருக்கும். கண் தெரியாததால் பகலில் இவ்வாறு பதுங்கி அடங்கி இருக்கிறது என்பதை விட மற்றப் பறவைகள் தரும் தொல்லைகளுக்கு அஞ்சியே இவ்வாறு மறைந்திருக்கிறது எனலாம். யாரேனும் நெருங்கினால் வேகமாக இறக்கை அடித்துப் பறந்து இன்னொரு மரத்தில் சென்று அமர்ந்து பின் பக்கமாகத் தலையைத் திருப்பி வந்தவரின் நடவடிக்கையைக் கவனிக்கும். வால் குருவி, நீண்ட வால் கரிச்சான் ஆகியவற்றோடு கலந்து திரியக் காணலாம்.

தத்துக்கிளி, வெட்டுக்கிளி, சில்வண்டு, பெரிய பூச்சிகள் நத்தை, சிறுபறவைகள் ஆகியன முக்கிய உணவு.

Kao- Kuk, Kao-Kuk, Kao-Kuk, Kao-Kuk Kook-uk என ஐந்து விளிகள் தொடர்ந்து கத்தும்.

இனப்பெருக்கம் : காலம்: மார்ச் முதல் மே முடிய; கூடு: மரங்கொத்தி, குக்குறுவான் ஆகியவை முன்பே குடைந்த பொந்துகளில் முட்டையிடும். கூடு தரையிலிருந்து 3 முதல் 5 மீட்டர் உயரத்தில் இருக்கும். முட்டை: 3; வெண்மை நிறங் கொண்டது.

211. தென்னிந்தியப் பழுப்பு நிற வல்லூறு ஆந்தை

644. South Indian Brown Hawk Owl

Ninox scutulata hirsuta (Temmick)

தோற்றம் : புறா அளவுடைய இது சுமார் 32 செ. மீ. நீளமிருக்கும்.

அலகு கருப்பு; விழிப்படலம் நல்ல மஞ்சள்; கால்கள் மஞ்சள் தோய்ந்த பச்சை நிறம்,

உடலின் மேற்பகுதி ஆழ்ந்த கருஞ்சாம்பல் நிறமாக இருக்கும். நெற்றியிலும் தோள்பட்டையிலும் வெண்மை நிறம் காணலாம். தொண்டையும் முன் கழுத்தும் சிவப்புக் கலந்த மஞ்சள் நிறமாக பழுப்புக்கோடுகளோடு காணப்படும், உடலின் பிற கீழ்ப்பகுதிகள் வெண்மையாகச் சிவப்புக் கலந்த பழுப்புப் புள்ளிகளோடு காணப்படும். வால் கருப்புப் பட்டைகளுடனும், வெள்ளை விளிம்புடனும்

காட்சி தரும். பொதுத் தோற்றம் வல்லூறுபோல இருக்கும். ஆணும் பெண்ணும் ஒன்று போன்றன.

காணப்படும் இடங்கள்: மைசூர், மேற்குத் தமிழ்நாடு, கேரளப் பகுதிகளில் ஆங்காங்கே சமவெளிகளிலும், மலைகளிலும் 1300 மீட்டர் உயரம் வரையும் காணலாம். காடுகளிலும், மரங்களடர்ந்த தோப்புகளிலும் சிறப்பாகக் காணலாம்.

பழக்க வழக்கங்கள்: காலை மாலை அந்திகளிலும், இரவிலும் வெளிப்பட்டுத்திரியும். தனித்தோ இணையாக நெருக்கி அமர்ந்தோ பகல் நேரத்தை மரப் பொதும்புகளிடையே கழிக்கும். பகலில் சூரிய வெளிச்சத்திலும் சிரமமின்றிப் பறக்கும் ஆற்றல் வாய்ந்தது. வேகமாக இறக்கை அடித்தும் மிதந்தும் பறக்கும். பறந்து சென்று மரக்கிளையில் அமரும்போது, வல்லூறுகளைப்போல மேல் நோக்கித் தாவியே மரக்கிளைகளில் அமரும். மாலை நேரத்தில் மரக்கிளையின் மீது அல்லது கம்பத்தின் மீது அமர்ந்து தாவித் தாவிப் பறந்து, பறக்கும் பூச்சிகளைக் கால் விரல்களால் பிடித்துக் கொண்டு மீண்டும் முன்பு உட்கார்ந்திருந்த அதே இடத்திற்குத் திரும்பும். அந்திக் குருவியைப்போல மாலை அந்தியில் சுற்றிச் சுற்றிப் பறந்து வண்டுகளைப் பழக்கமும் இதற்கு உண்டு.

பூச்சிகள், வண்டுகள், தத்துக்கிளி முதலியன இதன் முக்கிய உணவு. தவளை, ஓணான், சிறு பறவைகள், சுண்டெலி முதலியவற்றையும் வேட்டையாடித் தின்னும்.

சற்று இனிமையான மென்மையான குரலில் OO...uk, OO...uk, OO...uk என விநாடிக்கொரு தரம் வீதம் தொடர்ந்து பதின்மூன்று முறை வரை கத்தும். ஒன்றுக்கொன்று குரல் கொடுப்பது உண்டு.

இனப்பெருக்கம்: காலம்: ஜனவரி முதல் மே வரை. கூடு: மரப்பொந்துகளில். முட்டை: 2 அல்லது 3; வெண்மையாக இருக்கும்.

212. சிறிய புள்ளி ஆந்தை அல்லது கூகை

652. Southern Spotted Owlet

Athana brama brama (Timmick)

தோற்றம்: மைனா அளவுள்ள இது சுமார் 21 செ. மீ. நீளம் இருக்கும்.

அலகு பச்சை நிறந் தோய்ந்த மஞ்சள் நிறம்; விழிப்படலம் நல்ல மஞ்சள்; காலின்மேல் தூவிகள் வெண்மையாகவும் கால் அழுக்கு மஞ்சளாகவும் இருக்கும்.

வெள்ளைப் புள்ளிகளோடு கூடிய கருஞ்சாம்பல் பழுப்பு நிறங் கொண்ட பருந்து ஆந்தை. தலை வட்ட வடிவமாக இருக்கும் உடலின் கீழ்ப்பகுதி வெண்மையாக பழுப்புப் பட்டைகளோடு காணப்படும். வயிற்றிலும் வாலடியிலும் பட்டைகள் தெளிவாகத் தெரியாது. ஆணும் பெண்ணும் ஒன்றுபோல.

காணப்படும் இடங்கள்: தென்னிந்தியா முழுதும் காணலாம். மாந்தோப்புக்கள், வயதான சாலை மரங்கள், பாழடைந்த கட்டிடங்கள்; கோயில்கள் கோட்டைகள் ஆகியவற்றில் குடி கொண்டு வாழும். நகரங்களிலும் கிராமங்களிலும் மனிதர்கள் வாழ்விடத்தை அடுத்துமவிளை நிலங்களைச் சார்ந்தும் காணப்படும்.

பழக்க வழக்கங்கள்: ஆணும் பெண்ணுமாகவோ, 3 முதல் 4 வரையான குடும்பக் கூட்டமாகவோ வாழும். காலை மாலை அந்திகளிலும் இரவிலும் வெளிப்பட்டு இரை தேடும். பகலில் இதற்குக் கண் தெரியும் என்றாலும் மற்ற பறவைகளின் தொந்தரவுக்கு அஞ்சியே மறைந்திருக்கிறது. பகலில் இது உட்கார்ந்திருக்கும் இடத்தை நாம் நெருங்கினால் வேடிக்கையான முறையில் முறைத்தும் தலையைச் சுற்றி வளைத்தும் பார்க்கும். மாலை அந்தியில் வழக்கமான ஓரிடத்தில் தந்திக் கம்பங்கள், வேலிக்கம்பங்கள் ஆகியவற்றின் மீது அமர்ந்து எழுந்தெழுந்து தாவிப் பறந்து பூச்சிகளைப் பிடிக்கும். வேகமாக இறக்கை அடித்து மேலும் கீழுமாகத் தாழ்ந்தும் எழுந்தும் பறக்கும்.

நண்டு, தத்துக்கிளி, புழு பூச்சி, ஓணான், சுண்டெலி, சிறிய பறவை ஆகியவற்றைப் பிடித்துத் தின்னும்.

குழறுவது போன்ற தொனியில் விட்ச்விலூ விட்ச்விலூ என்றும் ச்சீர்ர்இர் ச்சீக்ர்இர் என்றும் கத்தும். ஒன்று கத்தத் தொடங்கியவுடன் மற்றவைகளும் சேர்ந்து கொள்ளும். இதன் குரல் இரவு நேரங்களில பெருந் தொல்லை தருவது.

இனப்பெருக்கம்: நவம்பர் முதல் மார்ச் வரை; கூடு: மரப் பொந்துகள், அவர்களில் உள்ள துவாரங்கள், வீட்டுத் தாழ்வாரம் ஆகிய இடங்களில் கொஞ்சம் புல்லும் தூவிகளும் கொண்டு மெத்தென ஆக்கி முட்டையிடும். காலம்: 3 முதல் 4 வரை. முட்டைகளை ஒவ்வொன்றாக மிக்க கால வெளியிட்டே இடும். அதனால் பின்னர் பொறிக்கப்படும் குஞ்சுகள் முழு வளர்ச்சி பெறாமல் இருக்கின்றன. முட்டையின் நிறம் வெண்மை.

213. பல வண்ண ஆந்தை
657. Southern Mottled Wood Owl
Strix ocellata ocellata (Lesson)

தோற்றம்: பரப்பருந்து அளவுள்ள இது சுமார் 48 செ. மீ. நீளமிருக்கும்.

அலகு கருப்பு; விழி இமைகள் வெளிர் ஆரஞ்சு நிறம்; விழிப் படலம் ஆழ்ந்த பழுப்பு:

கொம்புகள் இல்லாத பெரிய ஆந்தை இது. உடலின் மேற் பகுதியில் பல நிறங்களில் சிறியதும் பெரியதுமான புள்ளிகளும், சிறிய கோடுகளும் ஒழுங்கின்றிப் பரந்திருக்கக் காணலாம். முக வட்டம் வெண்மையாகக் கருப்புக் கோடுகளோடு காணப்படும். கழுத்தைச் சுற்றிலும் சாக்லெட் நிறந் தோய்ந்த கருப்பு வெள்ளைக்



பல வண்ண ஆந்தை.

கோடுகள் காணப்படும். தொண்டை செம்பழுப்பாகவும் கருப்பாக வும் வெள்ளைப் புள்ளிகள் பெற்றிருக்கும். முன் கழுத்தில் ஒரு வெள் ளைக்கோடு காணலாம். மார்பும் வயிறும் பொன்னிற மஞ்சள் தோய்ந்த வெண்மையாகச் சிறுத்த கருப்புப் பட்டைகளுடன் காணப்படும்.

காணப்படும் இடங்கள்: தென்னிந்தியா முழுதும் பரவலாக மரங்களடர்ந்த சமவெளிகளிலும், மாந் தோப்புகளிலும், புளியந் தோப்புகளிலும் விளை நிலங்களையும் கிராமங்களையும் அடுத்துக் காணலாம்.

பழக்க வழக்கங்கள்: ஆணும் பெண்ணுமாக இணையாகப் பகல் முழுதும் மரங்களில் இலைகளிடையே அருகருகே உட்கார்ந்திருக் கும். இரவில் வெளிப்பட்டு இரை தேடும் இதனால் பகலில் வெயில்

நேரத்தில் கூடச் சிரமமின்றிப் பறக்க முடியும். மரக்கிளைகளில் அமரும்போது மேல் நோக்கித் தாவியே அமரும். Bobo போல மேலிருந்து கீழே பறந்து அமராது.

எலிகளும் சுண்டெலிகளும் அணில்களும் இதன் முக்கிய உணவு. பெரிய பறவைகள், ஓணான், நத்தை நண்டு முதலியவற்றையும் தின்னும். பெரிய கருந்தேள் ஒன்றும் வயிற்றில் காணப் பட்டுள்ளது.

சாக்குருவி ஆந்தையைப் போல ஒற்றைக் குரலில் கத்தும். இனப்பெருக்கக் காலத்தில் கூஉஹூ-அ-எஏ என நடுங்கும் குரலில் கத்திய பின் பகலில் வாழும் மறைவிடத்திலிருந்து வெளிப்படும். இரவிலும் இக் குரலைக் கேட்கலாம்.

இனப்பெருக்கம் : காலம் : நவம்பர் முதல் ஏப்ரல் வரை: கூடு : மரப் பொந்துகளில் புல்லையும் பயன்படுத்தி மெத்தென ஆக்கி முட்டையிடும். அபூர்வமாகக் குச்சிகளால் மரங்களில் கூடு கட்டுவதும் உண்டு. முட்டை 2 மட்டும். கிரீம் நிற வெண்மையாக வட்டமாக இருக்கும்.

214. பழுப்பு நிறக் காட்டு ஆந்தை

659. Brown Wood Owl

Strix leptogrammatica indranee (Sykes)

தோற்றம் : பரப் பருந்தைவிடச் சற்றுச் சிறியது. சுமார் 47 செ. மீ. நீளமிருக்கும்.

அலகு நீலந் தோய்ந்த கொம்பு நிறம் ; விழிப்படலம் ஆழ்ந்த பழுப்பு; கால்கள் நீலந்தோய்ந்த வெளிர் சிவப்பு.

உடலின் மேற்பகுதி சாக்லெட் பழுப்பாக இருக்கும். தோள் பட்டை இறக்கைகள், வால்மேல் இறகுகள் ஆகியவற்றில் வெள்ளைப் பட்டைகளைக் காணலாம். வால் பழுப்பு நிறமாக மஞ்சள் கலந்த சிவப்பு நிறப் பட்டைகளோடும், வெள்ளை விளிம் போடும் காட்சி தரும். மோவாய் சாக்லெட் நிறமும் வெண்மை நிறமும் கலந்து காட்சி தரும். தொண்டையில் தூய வெண்மை நிறக் கறை காணலாம். மற்றக் கீழ்ப்பகுதிகள் வெண்மை தோய்ந்த வெளிர் மஞ்சள் கலந்த சிவப்பு நிறம் ; மார்பில் மட்டும் பழுப்புச் சாயல் தென்படும். மார்பு முழுதும் நல்ல பழுப்பு நிறப் பட்டைகள் நிரம்பி இருக்கும்.

காணப்படும் இடங்கள் : மேற்குக் கிழக்குத் தொடர்ச்சி மலைப் பகுதிகளில் அடர்ந்த பசுமை மாறாக் காடுகளிலும், நீர்வளமிக்க இலையுதிர் காடுகளிலும் காணலாம்.

பழக்க வழக்கங்கள் : இணையாகப் பகலில் காடுகளில் மறைந்து அமர்ந்திருக்கும். இரவில் வெளிப்பட்டு இரை தேடும். சிறு காலடி ஓசை கேட்டாலும் சப்தமின்றி விரைந்து மறையும். விடாது தொடர்ந்தால் தூரச் சென்றபடி இருக்கும்.

சிறுபறவைகள், பாம்பு, ஓணான், எலி, முயல் முதலியன இதன் உணவு.

டொக் டூ டொக் என மென்மையான குரலில் சில வினாடிகளுக் கொருமுறை கத்தும்.

இனப்பெருக்கம் : காலம் : ஜனவரி முதல் மார்ச் வரை. கூடு ; மரக்கிளைகள் பிரியும் குழிவிலும், பாறை இடுக்குகளிலும், பாறை ஓரமாகத் தரையிலும் முட்டையிடும். முட்டை : 2; சில போது 1 மட்டும் ; வெண்மை நிறத்தில் நீள் வட்டமாக இருக்கும்.

215. சிறிய காது ஆந்தை

664. Short Eared Owl

Asio flammeus flammeus (Poutoppidan)

தோற்றம் : புறாவை விடச் சற்று பெரியது. சுமார் 39 செ. மீ. நீளமிருக்கும்.

அலகு கருப்பு ; விழிப்படலம் மஞ்சள் ; கால் விரல்கள் கருப்பு.

ஆந்தைகளுள் மெலிந்த தோற்றம் கொண்டது இது. இதன் தோற்றம் வெளிர் மஞ்சள் கலந்த பழுப்பாக நல்ல கருப்புக் கோடுகள் நிறைந்து காணப்படும். முக வட்டம் வெண்மையாக விறைப்பாக நிற்கும் கருப்பு நிறத் தூவிகள் நிறைந்து காணப்படும். இறக்கைகளும் வாலும் கருஞ்சிவப்பும் கருப்புமான பட்டைகளோடு காணப்படும். உடலின் மேற்பகுதி வெளிர் மஞ்சள் கலந்த பழுப்பாக மார்பில் நீண்ட பழுப்புக் கோடுகளோடு இருககும்.

காணப்படும் இடங்கள் : குளிர்காலத்தில் தென்னிந்தியா முழுதும் சமவெளிகளிலும் மலைகளில் 1400 மீட்டர் உயரம் வரையும் காணப்படும். புல் வெளிகளையும் புதர்க் காடுகளை விரும்பி வாழ்வது. செப்டம்பரில் வலசை வந்து ஏப்ரலில் திரும்புகின்றது.

பழக்க வழக்கங்கள் : குளிர் காலத்தில் 5 முதல் 6 வரையான சிறு கூட்டமாகவோ தனித்தோ புல் நிலங்களில் பகல் நேரம் முழுதும் அமர்ந்திருக்கும். சிலபோது இறக்கைகளைத் தரையோடு விரித்து வைத்து வயிறு தரையில் பொருந்தப் படுத்தபடி வெயில் காய்ந்து கொண்டிருக்கக் காணலாம். மெல்ல இறக்கையடித்தும் மிதந்தும் ஒழுங்கின்றிப் பறக்கும். கடலில் கரையிலிருந்து ஓரிரு கிலோ மீட்டர் தள்ளி நீர்ப்பரப்பின்மேல் காணப்பட்ட குறிப்புண்டு. ஐரோப்பா வடக்கு ஆசியா முதலிய பகுதிகளிலிருந்து வலசை வரும்போது கடலின் மேலும் பறந்து வருவதாகக் கருதப் படுகிறது.

இனப்பெருக்கம் : இந்தியாவிற்கு வெளியே ஐரோப்பாவிலும் வடக்கு ஆசியாவிலும் இனப்பெருக்கம் செய்கிறது.

வரிசை: கேப்ரிமுல்ஜிஃபார்மிஸ்

Order : Caprimulgiformes

Family : Podargidae

தவளைவாயன்கள்

(FROGMOUTHS)

216. இலங்கைத் தவளைவாயன்

616. Ceylon Frogmouth

Batrachostomus moniliger (Blyth)

தோற்றம் : மைனா அளவுள்ள இது சுமார் 23 செ. மீ. நீளம் இருக்கும்.

அலகு ஆலிவ் பழுப்பு நிறம்; விழிப்படலம் மஞ்சள்; கால்களில் தூவிகள் பெரும் பகுதியை மறைந்திருக்கும். கால்களின் நிறம் லேசான சிவப்புத் தோய்ந்த கருஞ்சாம்பல் நிறம்.

இதன் அலகு அகன்று தவளை போன்ற தோற்றத்தை இதற்குத் தருகிறது.

ஆணின் உடலின் மேல் தோற்றம் கரும் சாம்பல் நிறப் பெரும்புள்ளிகளாக அமைந்திருக்கும். கழுத்தில் ஒரு வெள்ளைப் பட்டை காணலாம். தோள்பட்டை இறகுகள் வெண்மையாக இருக்கும். வால் வெளுத்துக் குறுக்குப் பட்டைகளோடு காணப்படும். உடலின் கீழ்ப்பகுதி கருஞ்சாம்பல் நிறப் பெரும் புள்ளிகளோடு காணப்படுமேனும் வயிறு சற்று வெளுத்துக் காணப்படும்.

பெண்ணின் மேல் தோற்றம் வெளிர் கருஞ்சிவப்பாக இருக்கும். வயிறு ஆணைக் காட்டிலும் வெளுத்திருக்கும்.

காணப்படும் இடங்கள்: கேரள மாநிலத்தில் திருவாங்கூர் வயநாடு பகுதியிலும் மைசூர் மாநிலத்தில் கன்னட மாவட்டங்களிலும் மட்டும் காணலாம்.

பழக்க வழக்கங்கள்: அடர்ந்த, என்றும் மாறாத பசுங்காடுகளிலே வாழும் இதன் பழக்க வழக்கங்கள் அறிவதற்கு அரியன. இரவிலேயே இரை தேடுவதற்காக வெளிப்படும் இது பகல் முழுதும் உயர்ந்த மரங்களின் உயர் கிளைகளில் உட்கார்ந்திருக்கும். மனிதர்கள் வருவதை உணர்ந்தால் தலையையும் கழுத்தையும் உயர்த்திக், கண்ணை இடுக்கி வருபவர்களைப் பார்க்கும். இதனை இது உட்கார்ந்திருக்கும் பாசி பிடித்த மரக்கிளையிலிருந்து பிரித்து அறிவது கடினம். வந்தவர் பக்கத்தில் நெருங்கும்வரை ஆடாது அசையாது இருக்கும் இது பின்னர் தலையை மெல்ல ஆந்தையைப் போலத் திருப்பி அவர் மறைவதை விடாது கவனிக்கும்.

இதன் அகன்ற அலகும் அதைச் சுற்றி அமைந்திருக்கும் மயிர் போன்ற தூவிகளும் பூச்சிகளைப் பிடிக்க நன்கு உதவுகின்றன.

வண்டு, பட்டாம்பூச்சி (Moths) தத்துக்கிளி முதலியன இதன் உணவு.

இனப்பெருக்கம்: காலம்: ஜனவரி முதல் ஏப்ரல் வரை; கூடு: தரையிலிருந்து 2 முதல் 5மீட்டர் உயரத்தில் மரக்கிளைகளிடையோ, நீண்ட கிளைகளின் மீதோ, இலை, தழை, பாசி, மரப்பட்டை, சிறு இறகுகள் ஆகியன கொண்டு சிறு மேடை போன்ற கூடு அமைக்கும். முட்டை: 1; சற்றுப் பெரியதாக வெண்மையாக இருக்கும்.

Family: Caprimulgidae

பக்கிக் குருவிகள்
(NIGHTJARS)

217. கேரளப் பெருங்காதுப் பக்கிக் குருவி
669. Bourdillon's or Kerala Great Eared Nightjar
Eurortopodus macrotis bourdilloni (Hume)

தோற்றம்: காக்கையை விடச் சற்றுச் சிறியது இது. சுமார். 40 செ. மீ. நீளம் இருக்கும்.

அலகு கொம்பு நிறம்; விழிப்படலம் ஆழ்ந்த பழுப்பு; கால்கள் இளஞ்சிவப்புத் தோய்ந்த பழுப்பு நிறம்.



கேரளப் பெருங்காதுப் பக்கிக் குருவி

காதுகள் போலத் தூவிகள் கண்களுக்குப் பின்னால் நீட்டிக்கொண்டிருப்பது கொண்டு, இதனை எளிதில் அடையாளம் கண்டுகொள்ளலாம். கறுத்த இதன் உடலில் பழுப்பு, வெள்ளை, கருப்பு, செம்பழுப்பு நிறக்கறைகளையும் கோடுகளையும் காணலாம். பறக்கும் போது நீண்ட வாலும், பெரிய உருவமும், சீரான இறக்கை அடித்தாலும் இதனைக் கண்டு கொள்ளத் துணை செய்பவை.

காணப்படும் இடங்கள் : கேரளாவில் கோட்டயம், கொல்லம், திருவனந்தபுரம் ஆகிய மாவட்டங்களில் காணலாம்.

பழக்க வழக்கங்கள் : சமவெளி முதல் மலைகளில் 1000 மீட்டர் உயரம் வரை பசுமை மாறாக் காடுகளிலும் மலை அடிவாரங்களிலும் காணலாம். காலை மாலை அந்திகளிலும், இரவு நேரங்களிலுமே இரை தேட வெளிப்படும். பகலில் வயிற்றைத் தரையோடு பொருத்தி தைத்துப் படுத்தபடி இருக்கும். கதிரவன் மறைந்ததும் ‘வீஇ-வீஇஇய்வி’ எனக் குரல் கொடுத்தபடி வெளிப்படும். முட் காடுகளில் மரங்களுக்கு மேல் வட்டமாகச் சுற்றிச் சுற்றி மெல்ல இறக்கையடித்தபடி பறக்கும். இருள் மிக மிக மரங்களுக்கிடையே தாழப் பறந்து பூச்சிகளைப் பிடிக்கும். சிலபோது ஏழெட்டுப் பறவைகள் கூட்டமாக எதிரும் புதிருமாகப் பறந்து இரை தேடுவதையும் காணலாம்.

வண்ணத்துப்பூச்சி, வண்டு, கரையான் முதலிய பறக்கும் பூச்சிகள் இதன் முக்கிய உணவு.

இனப்பெருக்கம் : காலம்: ஜனவரி முதல் மே வரை; கூடு தரையில் புல், புதர் முதலியவற்றினிடையே மறைவில் முட்டையிடும். கூடு கட்டுவதில்லை. திரும்பத் திரும்பப் பல ஆண்டுகள் ஒரே இடத்தில் முட்டையிடும். முட்டை: 1; பல நிறப் புள்ளிகளோடு கூடிய கிரீம் நிறம்.

218. இந்தியக் காட்டுப் பக்கிக் குருவி
671. Indian Jungle Nightjar
Caprimulgus indicus indicus (Lathum)

தோற்றம் : புறாவைவிடச் சற்றுச் சிறிய இது சுமார் 28 செ.மீ. நீளமிருக்கும்.

அலகு கருப்பு நிறம்; விழிப்படலம் ஆழ்ந்த பழுப்பு; கால்கள் பழுப்பு.

உடலின் மேற்பகுதி சாம்பல் பழுப்பாக இருக்கும். வெளிர் பழுப்பு, சாம்பல், இளஞ்சிவப்பு, கருப்பு, வெள்ளை ஆகிய பல நிறப் புள்ளிகளையும் கோடுகளையும் உடம்பின் மேற்பரப்பில் காண லாம், தரையில் காய்ந்து உதிர்ந்த இலைகளிடையே படுத்து உறங்கும் இதன் நிறமும் சூழலின் நிறமும் மிகவும் ஒத்துப் போகும். பலவகை உள்ளின பக்கிக் குருவிகளை எளிதில் பிரித்துக் கொள்ள முடியாது. குரல்களாலேயே இவற்றின் வேறுபாடு அறியப்படுகிறது.

காணப்படும் இடங்கள் : தென்னிந்தியா முழுதும் சமவெளிப் பகுதிகள் தொடங்கி மலைகளில் 2300 மீட்டர் உயரம் வரையில் காணலாம்.

பழக்க வழக்கங்கள் : தேக்கு மரக்காடுகளையும், மூங்கிற் காடு களையும் விரும்பி வாழும் இது இரைதேட இரவிலும் காலை மாலை அந்திகளிலும் வெளிப்படும். இலை சருகுகளுக்கிடையேயோ, மரக் கட்டை மீதோ பகல் முழுவதும் படுத்துக் கிடக்கும் இதனைச் சூழ் நிலையிலிருந்து வேறுபடுத்தி அறிவது கடினம். தரை ஒட்டியும் சற்று மேலெழுந்தும் சுற்றிச் சுற்றிப் பறந்து பூச்சிகளைத் திறமை யாகப் பிடிக்கும். பறக்கும் போது சப்தமின்றிப் பறக்க ஏற்றபடி இதன் மென்மையான இறக்கைகள் அமைந்துள்ளன.

பறக்கும் பூச்சிகள், வண்டு முதலியன இதன் உணவு.

இனப்பெருக்கம் : காலம் : பிப்ரவரி முதல் மே வரை; கூடு: கட்டுவதில்லை; தரையில் முட்டைகளை இடும். முட்டை: 2; செம் பழுப்பு, கருப்புப் புள்ளிகளோடு கூடிய கிரீம் நிறம்.

219. நீண்ட வால் பக்கிக் குருவி
675. Jerdon's or Southern Longtailed Nightjar
Caprimulgus macrourus atripennis (Jerdon)

தோற்றம் : புறாவை விடச் சற்றுச் சிறிய இது சுமார் 28 செ.மீ நீளமிருக்கும்.

அலகு கருப்பு; விழிப்படலம் நல்ல பழுப்பு ; கால்கள் செம்மை தோய்ந்த பழுப்பு.

ஆந்தை போன்ற தோற்றம் கொண்ட இதன் தொண்டையும் கழுத்தும் வெண்மை நிறம். மார்பு மங்கிய மஞ்சள் நிறமாக, பழுப்புப் புள்ளிகளும் கோடுகளும் கொண்டிருக்கும். வாலின் ஓர இறகுகளில் கருப்பு வெள்ளைப் பட்டைகள் அடுத்தடுத்து இருக்கக் காணலாம். உடலின் மேற்பகுதி மஞ்சள் பழுப்பாகப் பலநிறக் கறைகளும் கோடுகளும் கொண்டு காணப்படும். இறக்கைகளில் வெள்ளைப் புள்ளிகள் காணலாம். பெண்ணின் உடல் தோற்றம் சற்றுக் கறுத்த வெள்ளைப் புள்ளிகளன்றி இருக்கும்.

காணப்படும் இடங்கள் : தென்னிந்தியக் காடுகளிலும் மலைச் சரிவுகளிலும் மலைகளில் 2000 மீட்டர் உயரம் வரையும் காணலாம்.

பழக்க வழக்கங்கள் : பகல் முழுதும் காடுகளில் தரையிலோ, கற்கள் மீதோ, மரக்கிளைகள் மீதோ படுத்து உறங்கி இரவில் இரைதேட வெளிப்படும். மாலை மயங்கும் நேரத்தில் இது பறப்பது வௌவால் பறப்பது போன்ற தோற்றம் தரும். இரவில் காட்டுப் பாதைகளில் காரில் செல்லும்போது, கார் வெளிச்சத்தில் இது பாதையை ஒட்டினாற் போலச் சுற்றிச் சுற்றிப் பறந்துகொண்டிருப்பதையும் பின் துரிதமாக விலகிக் கொள்வதையும் காணலாம். கார் வெளிச்சத்தில் இதன் கண்கள் கருஞ்சிவப்பாகப் பளிச்சிடுவதைக் காணலாம்.

மரத்தில் சமட்டியால் தட்டுவது போல, ச்சாங், ச்சாங், சாங் சாங் எனக் கத்துவதைக் கேட்கலாம். முதல் நான்கைந்து முறை வேகமாகத் தவளை கத்துவது போலக் கத்தும். பின்னர் தொடர்ந்து ஐம்பது முறை வரை ச்சாங், ச்சாங் என்ற ஒலியைக் கேட்கலாம். 4 விநாடிகளில் ஐந்து முறை கத்தும் குரலைக் கேட்கலாம். இனப்பெருக்கக் காலத்தில் மாலை தொடங்கி விடியும் வரை சற்று இடைவெளி விட்டுத் தொடர்ந்து கத்தியபடி இருக்கும்.

இரவில் பறக்கும் பலவகைப் பூச்சிகள் இதன் உணவு.

இனப்பெருக்கம் : காலம் : மார்ச் முதல் ஜுலை வரை. கூடு : கட்டுவதில்லை; தரையிலேயே முட்டையிடும். முட்டை : 2; நல்ல ஆழ்ந்த கருப்புக் கறைகளோடு கூடிய கிரீம் நிறமாக இருக்கும்.

220. பக்கிக் குருவி

680. Indian Little Nightjar

Caprimulgus asiaticus asiaticus (*Latham*)

தோற்றம்: மைனா அளவுள்ள இது சுமார் 22 செ. மீ. நீளம் இருக்கும்.

அலகு கறுத்த முனையோடு பழுப்பு நிறமாக இருக்கும். விழிப் படலம் பழுப்பு; கால் வெளிர் பழுப்பு.



பக்கிக் குருவி

உடல் முழுதும் கருப்புக் கோடுகளோடு கூடிய சாம்பல் பழுப்பு நிறம். தோள் பட்டை இறகுகள் கருப்பாக வெல்வெட்போல இருக்கும். வெண்மையான மீசைக் கோடும் தொண்டையின் இருபக்கமும் வெண்மையான கறைகளும் காணலாம். மோவாய், தொண்டை கழுத்து ஆகியன பழுப்புப் பட்டைகளோடு கூடிய கருஞ்சிவப்பு நிறம். மார்பும் வயிறும் வெளிர் பழுப்புப் பட்டைகளோடு கூடிய கருஞ்சிவப்பு நிறம். வயிற்றில் பட்டைகள் குறைந்து காணப்படும்.

காணப்படும் இடங்கள்: தென்னிந்தியா முழுதும் சமவெளிப் பகுதிகளில் காணலாம். மலைகளில் காணப்படுவதில்லை.

பழக்க வழக்கங்கள்: இணையாகவோ சிறு கூட்டமாகவோ மாலை மயங்கியதும் வெளிப்பட்டுச் சாலைகளிலும், மைல் கல்களின் மீதும், வீட்டுத் தோட்ட வேலிக் கம்பிகளின் மீதும் அமர்ந்து 'ட்சக், ட்சக், ட்சக்' எனக் கத்துவதைக் கேட்கலாம். பாதைகளில் புழுதியில் புரண்டு விளையாடும். இனப்பெருக்கக் காலத்தில் நெடு நேரம் தொடர்ந்து கத்தும்.

சுவர்கோழி, பறக்கும் பூச்சிகள், சாணத்தில் காணப்படும் வண்டுகள், புழுக்கள் முதலியன இதன் உணவு.

இனப்பெருக்கம்: காலம்: பிப்ரவரி முதல் செப்டம்பர் வரை. கூடு: கட்டும் பழக்கம் இல்லை; புதர்க் காடுகளில் தரையில் முட்டை யிடும். முட்டை: 2; ஊதாப் புள்ளிகளோடு கூடிய கிரீம் நிறம்.

வரிசை : அபோடிஃபார்மிஸ்

Order : Apodiformes

Family : Apodidae

Sub-family : Apodidae

உழவாரன்கள்
(SWIFTS)

உழவாரக் குருவிகள் தோற்றத்தில் தகைவிலான் (Swallows) களை ஒத்தன போலக் காட்சி தரும். ஆனால் இவை இரண்டும் மிகுந்த வேறுபாடுடையவை. உழவாரக் குருவிகளின் இறக்கை கள் மிக நீளமானவை. விரல்கள் முன்னோக்கி வளைந்திருக்கக் காணலாம்.

எப்பொழுதும் வேகமாக இறக்கையடித்துச் சுற்றிச் சுற்றிப் பறந்தபடி இருப்பவை இவை. வேகமாகப் பறக்கும் ஆற்றல் வாய்ந்த இவை சில மணி நேரங்களில் பல நூறு கிலோ மீட்டர் களைக் கடந்து சென்றுவிடக் கூடியவை. இதனால் இவை காணப் படும் இடங்களை வரையறுப்பது கடினமாகின்றது. காலையில் ஓர் ஊரில் காணப்படும் உழவாரக் குருவிகளின் கூட்டம் பகலில் பல நூறு மைல்களுக்கு அப்பால் நெடுந்தொலைவு கடந்தும் காணப் படுவதால் இவை காணப்படும் இடங்களை (Distribution) வரை யறை செய்வது இயலாததாகின்றது.

கோபுரங்கள், பெரிய கோவில்கள், மலைக்குகைகள், பாறை இடுக்குகள் ஆகிய இடங்களில் பெருங் கூட்டமாகத் தொங்கும் கூடுகளை உமிழ் நீரைப் பயன்படுத்தி அமைத்துக்கொண்டு வாழ் பவை. பல்லாயிரக் கணக்கில் பகல் நேரத்தில் வௌவால்கள் தங்கி வாழும் மலைக்குகைகளில் மாலையில் அவை வெளியேறியவுடன்,

உழவாரக் குருவிகள் சென்று தங்குகின்றன. தமிழ் நாடெங்கும் பெரிய கோயில்களின் கோபுரங்களில் இவற்றின் கூடுகளைக் காண லாம். ஜோக் நீர் வீழ்ச்சியின் பின்னர் பாறைகளில் இவை பெரும் அளவில் கூடமைத்து வாழ்கின்றன. சிறு உழவாரக் குருவிகளில் ஓர் இனம் பனை மரங்களில் பனை ஓலை இடுக்குகளில் கூடமைத்து இனப்பெருக்கம் செய்வது. பறக்கும்போது குரல் கொடுத்தபடியே பறக்கும் இயல்புடைய இதனைத் 'தற்பாடி' என்ற பெயரால் தமிழ் இலக்கியங்களில் குறித்துள்ளனர். மழைத்துளிகளையே உணவாகக் கொள்பவை இவை என்றும் நம்பினர். "தற்பாடிய தளி உணவிற் புட்டேம்பப் புயல் மாறினும்" என்பது பட்டினப்பாலை. இவ் வரியில் குறிக்கப்பட்ட தற்பாடிதான் உழவாரக் குருவி என திரு. பி. எல். சாமி அவர்கள் தம் கட்டுரையில் செந்தமிழ்ச் செல்வியில் குறித்துள்ளார்.

ஒரு வகை உழவாரக் குருவியின் கூட்டைச் சீனர்கள் விரும்பி உண்பர். 19-ஆம் நூற்றாண்டில் இவற்றின் கூடுகள் சீனா போன்ற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட குறிப்பு உள்ளது.

இதன் உள்ளினங்களைப் பறக்கும் பறவைகளை இயற்கைச் சூழலில் பார்த்து வேறுபடுத்தி அறிவது கடினம். ஒவ்வொரு உள் ளினமும் ஒவ்வொரு வகைக் கூடுகளைக் கட்டுவதால் கூடுகளின் அமைப்புக் கொண்டு ஓரளவு இவற்றைப் பிரித்து உணரலாம். உழவாரக் குருவிகளுள் வலசை வருவனவும் இருக்கின்றன.

221. உண்ணை ஏற்றக் கூட்டு உழவாரன்

685. Indian Edible-Swiftlet

Collocalia unicolor (Jerdon)

தோற்றம்: ஊர்க்குருவியை விடச் சிறியதான இது சுமார் 18 செ. மீ. நீளமிருக்கும்.

அலகு மிகச் சிறியதாக வலுவின்றிக் கருப்பு நிறமாக இருக்கும்; விழிப்படலம் பழுப்பு; கால்கள் வெளிர் சிவப்புத் தோய்ந்த சாம்பல் நிறம்.

உடலின் மேற்பகுதி கரும் பழுப்பாகப் பளபளக்கும் பசுமை தோய்ந்து காணப்படும். இறக்கைகளில் சற்றுக் கரு நீலம் தோய்ந் திருக்கும். மார்பும் வயிறும் சாம்பல் நிறமாக இருக்கும்.

காணப்படும் இடங்கள்: தென் கொங்கணம், மேற்கு மைசூர், மேற்குத் தமிழ்நாடு, கேரளா ஆகிய பகுதிகளில் மலைகளைச் சார்ந்து

திரியக் காணலாம். மலைகளில் 1000 மீட்டர் உயரம் முதல் 2200 மீட்டர் உயரம் வரை காணலாம்.

பழக்க வழக்கங்கள்: மலைகளில் பெரும் பாறைகளையும் குகைகளையும் சார்ந்து பெருங் கூட்டமாகத் திரியும். மாலை நேரத்தில் பெருங் கூட்டமாக மலைக் குகைகளுக்கு இவை திரும்புவதைக் காணலாம். அக் காட்சி பழுத்த சிறிய இலைகள் காற்றில் உதிர்வது போல இருக்கும். அப்பொழுது அதே குகைகளிலிருந்து வௌவால்கள் இரைதேட வெளியே புறப்படும்.

பறக்கும் பூச்சிகளே இதன் உணவு.

சிட், சிட், சிட் எனக் சிறு குரலில் கத்தியபடி பறக்கும்.

இனப்பெருக்கம்: காலம்: மார்ச் முதல் ஜூன் வரை. கூடு: குகைகளிலும் பாறை இடுக்குகளிலும் பாசி, புல், இறகுகள் முதலிய வற்றை உமிழ் நீரால் ஒட்டிக் கூடு அமைக்கும். நூற்றுக் கணக் கான கூடுகள் ஒழுங்கின்றி நெருக்கமாகக் கட்டப்பட்டிருப்பதைக் காணலாம். முட்டை: 2; வெண்மையாக நீள் வட்டவடிவில் இருக்கும்.

222. பழுப்பு நிறத் தொண்டை உழவாரன்
691. Brownthroated Spinetail Swift
Chatura gigantica indica (Hume)

தோற்றம்: மைனா அளவுள்ள இது சுமார் 23 செ. மீ. நீள மிருக்கும்.



பழுப்பு நிறத் தொண்டை உழவாரனின் இறகமைப்பு.

அலகு கருப்பு; விழிப்படலம் ஆழ்ந்த பழுப்பு; கால்கள் இளஞ் சிவப்பு நிறம். வாலிறகுகளின் தண்டு ஊசி முனைபோல் ஒரு செ. மீ. நீளம் நீட்டிக்கொண்டிருக்கும்.

முதுகு இறக்கைகள், வால் ஆகியன தவிர மற்ற உடலின் மேற்பகுதி முழுதும் பசுமை தோய்ந்த கரும் பழுப்பு நிறமாக இருக்கும். முதுகு லேசான பழுப்பு நிறம். உடலின் அடிப்பகுதி முழுதும் பழுப்பு நிறம். வாலடியும் வாலடி இறகுகளும் வெண்மை.

காணப்படும் இடங்கள்: மேற்கு மைசூர், மேற்குத் தமிழ் நாடு, கேரளம், நீலகிரி, பழனிமலை ஆகிய பகுதிகளில் காடுகளிலும் மலைகளிலும் காணலாம்.

பழக்க வழக்கங்கள்: 4 முதல் 5 வரையான சிறு கூட்டமாகவோ 50 வரையான பெருங் கூட்டமாகவோ காடுகளின் மேலே வேகமாக முன்னும் பின்னுமாகச் சுழித்துச் சுழித்துப் பறந்து திரியக் காணலாம். பிற உள்ளின உழவாரக் குருவிகளோடும் சேர்ந்து இரைதேடும். மணிக்கு 200 முதல் 250 கி. மீட்டர் வேகத்தில் பறக்கும் ஆற்றல் வாய்ந்த இவை தலைக்குமேல் பறக்கும்போது இவற்றின் இறக்கை அடிக்கும் ஒலி வீணையில் தந்தி மீட்டுவது போலக் கேட்கும்; ஆறுகளிலும் குளங்களிலும் மாலையில் நீர் குடிக்கும் நீர்ப் பரப்பின் மேல் பறந்து பல பறவைகள் நீர் குடித்து மேலெழும் காட்சி மீன்கள் கூட்டமாக நீர்ப் பரப்புக்கு மேலே தாவி எழுவது போல இருக்கும்.

பறக்கும் வண்டுகள், தத்துப் பூச்சி, எலும்பு, தேனீ முதலியன இதன் உணவு.

பறக்கும் போது ஒருவகைக் 'கிரீச்' ஒலி எழுப்பியபடி இருக்கும்.

இனப்பெருக்கம்: காலம்· பிப்ரவரி முதல் ஏப்ரல் வரை; கூடு: இற்றுப் போனதால் பொந்துகளை உடைய பெரிய மரங்களின் அடிமரப் பொந்துகளில் இலை சருகுகளால் கூடு அமைக்கும். முட்டை: 3 அல்லது 4; வெண்மை நிறம்.

223. வெள்ளைப்பிட்ட உழவாரன்

692. Whiterumped Spinetail Swift

Chatura sylvatica (Tickell)

தோற்றம்: ஊர்க்குருவியை விட அளவில் சிறியது. சுமார் 11 செ. மீ. நீளமிருக்கும்.

அலகு கருப்பு; விழிப்படலம் ஆழ்ந்த பழுப்பு; கால்கள் கருப்பு நிறம்.

உடலின் மேற்பகுதி கருப்பாகவும் பிட்டம் (Rump) வெள்ளையாகவும் அமைந்த சிறு பறவை. மோவாய், தொண்டை, மார்பு ஆகியன சாம்பல் பழுப்பாக இருக்கும். அடி வயிறும் வாலடியும் வெண்மையாக இருக்கும். பொதுத் தோற்றத்தில் வீட்டு உழவாரக் குருவியை ஒத்திருக்கும் இதனை வெண்மையான பிட்டமும் வாலடியும் கொண்டு பிரித்து அறியலாம்.

காணப்படும் இடங்கள்: மேற்குத் தொடர்ச்சி மலை சார்ந்த பகுதிகளில் சமவெளி முதல் மலைகளில் 1800 மீட்டர் உயரம் வரை காடுகளைச் சார்ந்து காணலாம்.

பழக்க வழக்கங்கள்: 20 முதல் 50 வரையான பறவைகள் கூட்டமாகப் பறந்து இரைதேடும். காடுகளின் மேலும், புல்வெளிகளையடுத்தும், காட்டாறுகளைச் சார்ந்தும் இவை திரியக் காணலாம். அடி மரங்களில் காணப்படும் பெரிய பொந்துகளில் இவை இரவில் கூட்டமாகச் சென்று அடையும்.

பறக்கும் பூச்சிகள், வண்டுகள் முதலியன இதன் உணவு.

பறக்கும்போது சிக், சிக் எனக் கத்தியபடி பறக்கும்.

இனப்பெருககம்: காலம்: பிப்ரவரி முதல் மே முடிய; கூடு: இலைகளை உமிழ் நீரால் கோப்பை போல ஒட்டிக் கூடு அமைக்கும். மரப்பொந்துகளில் தரையிலிருந்து 1 முதல் 14 மீட்டர் உயரபவரை இவற்றின் கூடுகளைக் காணலாம். கூந்தல் பனை மரத்தில் (Fish-tail palm) இது விரும்பிக் கூடமைக்கும்; முட்டை: 3 முதல் 5 வரை; தல்ல வெண்மை நிறத்தில் நீள் வட்ட வடிவமாக இருக்கும்.

224. இந்திய ஆல்பைன் உழவாரன்

694. Indian Alpine Swift

Apus nubifuga (Koelz)

தோற்றம்: கொண்டைக் குருவி அளவுள்ள இது சுமார் 21 செ. மீ. நீளமிருக்கும்.

அலகு கருப்பு நிறம்; விழிப்படலம் ஆழ்ந்த பழுப்பு; கால்கள் கருப்பு நிறம்.

புகை நிறப் பழுபபான மெலிந்த தோற்றம் கொண்ட இதன் இறகுகள் நீண்டு கூர்மையாக (Long and pointed) இருக்கும். வால் பிளவுபட்டதாக இருப்பது கொண்டு இதனை எளிதாக அடையாளம் காணலாம். மார்பும், அடி வயிறும் வெண்மையாக இருக்கும். மார்பில் ஒரு பழுப்புப் பட்டையைக் காணலாம். மார்பில் காணப்படும் பழுப்பு நிறப் பட்டையும், பழுப்பும் வெண்மையுமான வில் வடிவிலான இறக்கைகளும் பறக்கும் போது இதனை அடையாளங் கண்டு கொள்ளத் துணை செய்யும்.

காணப்படும் இடங்கள்: இராமேஸ்வரம் தீவு உட்படத் தென்னிந்தியா முழுதும் காணலாம்.

பழக்க வழக்கங்கள்: பெருங் கூட்டமாகப் பகல் முழுதும் பறந்தபடியே இருக்கும். வயல்கள், காடுகள் ஆகியவற்றின் மீது மிக உயரத்தில் பறந்து பூச்சிகளைப் பிடிக்கும். வானம் மப்பும் மந்தாரமுமாக இருக்கும் நாட்களில் உயரப் பறவாமல் தாழ்ந்து பறக்கக் காணலாம். காட்டுத் தீயின்போதோ, புல்வெளிகளில் தீ வைக்கும் போதோ மிகுதியாக வெளிப்படும் பூச்சிகளைப் பிடிக்கக் கூட்டமாக வரும். மாலை நேரங்களில் பல நூறு பறவைகள் நெருக்கமாக ஒன்றை ஒன்று சுற்றியபடி வட்ட வடிவமாகப் பெரிய கரிய பந்து போல மிதந்து செல்வதைக் காணலாம். அந்தக் கூட்டம் ஒழுங்கின்றி அப்படியும் இப்படியுமாகப் பறப்பது புயலால் அலைபுரண்டு தடுமாறுவதைப் போல இருக்கும். குளிர் காலங்களில் பொழுது சாயும் போது இந்தக் கூட்டம் உயர உயர எழுந்து பறந்து ஒரு கரும்புள்ளி போலக் கண்ணுக்குத் தோற்றம் தந்து, பின் அடியோடு மறைந்து விடக் காணலாம். இறக்கைகளை வண்ணத்துப் பூச்சிகளைப் போல அசைத்தபடி நீர்நிலைகளிலும் ஆறுகளிலும் இவை கூட்டமாக வந்து நீர் குடிப்பதைக் காணலாம்.

பறக்கும் பூச்சிகள், எறும்புகள், வண்டுகள் முதலியன இதன் உணவு.

கூட்டமாகச் சேர்ந்து பறக்கும்போது, ச்சீ, ச்சீச்சீ எனத் தொடர்ந்து கீச்சுக் குரலில் கத்தக் கேட்கலாம்.

இனப்பெருக்கம்: காலம்; டிசம்பர் முதல் பிப்ரவரி வரை; கூடு: சிறு தூவிகள், இறக்கைகள், வைக்கோல் ஆகியன கொண்டு உமிழ் நீரைப் பயன்படுத்தி அரை வட்ட வடிவமான கோப்பை வடிவில் பாறைகளிலும் கூட்டமாகக் கூடு அமைக்கும். முட்டை: 3; வெண்மையாக இருக்கும்.

225. இந்திய வீட்டு உழவாரக் குருவி

703. Indian House Swift

Apus affinis affinis (*J. E. Gray*)

தோற்றம்: ஊர்க்குருவி அளவுள்ள இது சுமார் 13 செ. மீ. நீளமிருக்கும்.

அலகு கருப்பு; விழிப்படலம் பழுப்பு; கால்கள் கருப்பு நிறம். புகை நிறப் பழுப்பு நிறங் கொண்ட இதன் தொண்டையும் பிட்டமும் வெண்மையாக இருக்கும். குறுகிய சதுரமான வாலும் அரிவாள் போன்ற வளைந்த இறகுகளும் கொண்டவை.



இந்திய வீட்டு உழவாரக் குருவி

காணப்படும் இடங்கள்: கேரளம் தவிர தென்னிந்தியா முழுதும் காணலாம். மலைகளில் 2000 மீட்டர் உயரம் வரை காணலாம்.

பழக்க வழக்கங்கள்: சிறு கூட்டமாக நகரங்களிலும் கிராமங்களிலும் பறந்து திரிந்தபடி இரை தேடுவதைக் காணலாம். சில சமயங்களில் நூற்றுக் கணக்கில் கூட்டமாகச் சேர்ந்து பறக்கும். வேகமாகப் பறக்கும் ஆற்றல் வாய்ந்தவை. மாலையில் கூடுகளுக்குத் திரும்பும்போது பந்துபோலப் பெருங் கூட்டமாகத் திரண்டு சுற்றிச் சுற்றிப் பறந்தபடி கத்தியபடியே வரும். காற்று பலமாக வீசும்போது இறக்கையைத் தொங்க விட்டுக் காற்றில் மிதப்பதையும் காற்றின் வேகத்தில் பின்னால் செல்வதையும் காணலாம். குளிர்காலத்தில் இவற்றின் உணவான பறக்கும் பூச்சிகள் குறையும் போது இவை காணப்படுவது இல்லை.

ச்சிக், ச்சிக், ச்சிக், ச்சிக் எனக் கிரீச் குரலில் பறக்கும் போது கத்தும். கூடு இருக்கும் இடத்தில் ஒரு பறவை சக், ச்செர்ன் எனக் கத்தத் தொடங்கியவுடன் ஒன்றை அடுத்து ஒன்று எல்லாம் ஒரே கூட்டமாகக் கத்தத் தொடங்கிவிடும்.

இனப்பெருக்கம்: காலம்: ஆண்டு முழுவதும்; கூடு: வைக்கோல், இறகுகள் முதலியவற்றால் உமிழ் நீரால் கோபுரங்கள், மாடங்கள், கூடங்கள், பழைய வீடுகள் ஆகியவற்றில் மேல் தளத்தில் அரை வட்டவடிவமான கோப்பை வடிவில் கூடு அமைக்கும். ஜன நடமாட்டம் எப்போதும் உள்ள புகைவண்டி நிலையங்கள்,

அஞ்சல் நிலையங்கள் போன்ற பொது இடங்களிலும் இவற்றின் கூடுகளைக் காணலாம். முட்டை: 2 முதல் 3 வரை; வெண்மை யாக இருக்கும்.

Apus affinis singalenis என்ற உள்ளினம் கேரளத்திலும் இலங்கையிலும் காணப்படுகிறது. மேற்கண்ட இந்திய வீட்டு உழவாரக் குருவியை விட இது சற்று ஆழ்ந்த புகை நிறப் பழுப்புக் கொண்டது. பழக்க வழக்கங்களும் இனப்பெருக்க முறையும் முன்னதைப் போன்றனவே.

226. பனை உழவாரன்

707. Indian Palm Swift

Cypsiurus parvus batassiensis (J. E. Grey)

தோற்றம்: ஊர்க்குருவியை விட அளவில் சற்றுச் சிறியது. மிக மெலிந்து சுமார் 12 செ. மீ. நீளமிருக்கும்.

அலகு கருப்பு; விழிப்படலம் பழுப்பு; கால்கள் சிவப்புத் தோய்ந்த ஊதா நிறம்.

உடல் முழுதும் புகைச் சாம்பல் நிறமாக இருக்கும். மார்பும் வயிறும் சற்று வெளிரிக் காணப்படும். விரிந்த இறக்கை பறக்கும் போது வில் வடிவமாகவும் உடம்பு அம்பு போலவும் தோற்றம் தரும். வால் மிகச் சிறுத்துப் பிளவுபட்டிருக்கும்.

காணப்படும் இடங்கள்: தென்னிந்தியா முழுதும். மலைகளில் 1000 மீட்டர் உயரம் வரை காணலாம்.

பழக்க வழக்கங்கள்: வீட்டு உழவாரக் குருவியைப் போலக் கூட்டமாகச் சேர்ந்து பறக்கும் பழக்கம் இதற்கு இல்லை. தனித் தனியே ஆனால் பல பறவைகள் அங்குமிங்குமாகப் பறந்து கொண்டிருப்பதைக் காணலாம். பனை மரங்கள் உள்ள பகுதிகளில் காலை முதல் மாலை வரை தரையிலிருந்து 5 முதல் 15 மீட்டர் உயரத்தில் பறந்து திரியக் காணலாம். பனை ஓலையின் அடிப்பக்க மடிப்புகளுக்கிடையே இரவில் தங்கும். மற்ற உழவாரக் குருவிகளைப் போலவே ஆகாயத்திலேயே இணை சேரும்.

ஈசல் முதலிய பறக்கும் பூச்சிகளே இதன் உணவு.

ட்டீ ட்டீ ட்டீ எனக் கிறீச்சுக் குரலில் கத்தியபடியே பறக்கும்.

இனப்பெருக்கம் : காலம் : ஆண்டு முழுதும்; கூடு : அரை வட்ட வடிவமான தட்டுவடிவில் காய்ந்த சருகுகள் முதலியவற்றை உமிழ் நீரைக் கலந்து ஒட்டிப் பனை ஓலைகளின் அடிப்பக்கத்தில் கூடு அமைக்கும். முட்டை : 2 அல்லது 3; வெண்மை நிறமாக நீள் வட்ட வடிவில் இருக்கும்.

Sub-family : Hemiprocinae

கொண்டை உழவாரன்கள்
(CRESTED SWIFTS)

227. கொண்டை உழவாரன்
709. Crested Swift
Cypsiurus parvus batariensis (J. E. Grey)

தோற்றம் : கொண்டைக் குருவி அளவுள்ள இது சுமார் 23 செ. மீ. நீளமிருக்கும்.



கொண்டை உழவாரன்

அலகு கருப்பு நிறம்; விழிப்படலம் ஆழ்ந்த பழுப்பு; கால்கள் இளஞ் சிவப்புத் தோய்ந்த பழுப்பு நிறம்.

பசுமை பளபளக்கும் நீல நிறம் தோய்ந்த கருஞ் சாம்பல் நிற உழவாரன் இது. தலைக் கொண்டை இது உட்கார்ந்திருக்கும்

போது விறைப்பாக நிற்கும். மோவாயும், தொண்டையும் முகத்தின் பக்கங்களும் செம்பழுப்பு நிறமாக இருக்கும். மார்பு கருஞ்சாம்பல் நிறம். வயிறும் வாலடியும் வெண்மை நிறம். பறக்கும் போது பனை உழவாரனை ஒத்திருந்தாலும் அளவில் அதைவிடப் பெரியது. வெண்மையான உடம்பின் கீழ்ப்பகுதியும் தெளிவாகப் பிளவுபட்ட வாலும் இதனை வேறுபடுத்தி அறிய உதவும். உட்கார்ந்திருக்கும் பறவையின் வால் இறக்கைகளுக்கிடையே கம்பி போலச் சிறுத்துக் காட்சி தரும். பெண் பறவையின் தொண்டையில் செம்பழுப்பு நிறத்தைக் காண முடியாது. சற்று ஆணைவிடச் சிறியது.

காணப்படும் இடங்கள்: தென்னிந்தியா முழுவதும் காட்டுப் பகுதிகளிலும் மலைச்சரிவுகளிலும் ஆங்காங்கே காணலாம்.

பழக்க வழக்கங்கள்: 6 முதல் 8 வரையிலான சிறு கூட்டமாகக் காடுகளில் மரங்களுக்கு மேலே வட்டமாகச் சுற்றிச் .சுற்றிப் பறந்து பூச்சிகளைப் பிடிக்கும். அதிக உயரம் பறப்பதோ மற்ற உழவாரக் குருவிகளைப் போல வேகமாகப் பறப்பதோ இதற்குப் பழக்கமில்லை. இடையிடையே இலைகளற்ற நுனிக் கொம்பில் அமர்ந்து ஓய்வு கொள்ளும். நீர் நிலைகளில் தாழ்ந்து பறந்து நீர் குடிக்கும்.

காடுகளின் மீது பறக்கும் பூச்சிகளே இதன் முக்கிய உணவு

பறக்கும் போது விட்-டக், விட்-டக் என இரு அசைக் குரலில் கத்தியபடியே பறக்கும். உட்கார்ந்திருக்கும் போது க்கிப்-க்கோ-தெப் என மூன்றசைக் குரலில் நடு அசையில் சற்று அழுத்தம் தந்து பாடும்.

இனப்பெருக்கம்: காலம்: ஜனவரி முதல் மார்ச் வரை; கூடு: நுட்பமான அமைப்புடையது இதன் கூடு. மரத்தில் உயரக் குறுக்காகச் செல்லும் கிளையின் மேலே மெல்லிய மரப்பட்டை, தூவி, ஆகியவற்றை உமிழ் நீரால் ஒட்டிச் சிறு தட்டு வடிவிலான கூடு அமைக்கும். கீழே இருந்து பார்ப்பவர்களுக்கு அப்படி ஒரு கூடு இருப்பதே தெரியாது. முட்டை: 1 மட்டும்; வெண்மை நிறமாக இருக்கும்.

வரிசை: ட்ரோகோனிஃபார்மிஸ்
Order : Trogoniformes

Family : Trogonidae

தீக்காக்கைகள்

228. தீக்காக்கை

711. Malabar Tragon

Harpactes fasciatus malabaricus (Gould)

தோற்றம் : மைனா அளவுள்ள இதன் வால் மட்டும் 16 செ.மீ. நீளமிருக்கும். மொத்தத்தில் 30 செ. மீ. நீளம் இருக்கும்.

அலகு நீல நிறம்; விழிப்படலம் ஆழ்ந்த பழுப்பு; கால்கள் ஊதாக் கலந்த நீல நிறம்.

ஆணின் தலை, கழுத்து, மார்பு ஆகியன புகை நிறக் கருப்பாக இருக்கும். புதுகு மஞ்சள் கலந்த பழுப்பு நிறம் இறக்கைகள் வெள்ளைப் பட்டைகளோடு கூடிய கருப்பு நிறம். வயிறு இளஞ்சிவப்பு நிறம். மார்பின் கருப்பையும் வயிற்றின் சிவப்பையும் பிரிக்கும் வகையில் மார்பிற்கும் வயிற்றுக்கும் இடையே தெளிவான வெள்ளைப் பட்டை காணப்படும். வால் இறகுகளில் செம் பழுப்புக் கறை காணலாம்.

பெண்ணின் தலை, கழுத்து ஆகியன மங்கிய கருப்பு நிறமாக இருக்கும். வயிற்றின் நிறம் ஆரஞ்சு கலந்த பழுப்பாக இருக்கும். மார்பிற்கும் வயிற்றுக்கும் இடையே வெள்ளைப் பட்டை இராது.

காணப்படும் இடங்கள் : மைசூர், தமிழ்நாடு, கேரளா மாநிலங்களில் மேற்குத் தொடர்ச்சி மலை சார்ந்த காடுகளில் மலைகளில் 1500 மீட்டர் உயரம் வரை காணலாம்.

பழக்க வழக்கங்கள் : காடுகளிலும் மூங்கில் புதர்களிலும் பெரும்பாலும் காணலாம். மரங்களை விட்டுத் தரைக்கு வரும் பழக்கம் இதற்குக் கிடையாது. காலை மாலை நேரங்களில் சுறுசுறுப்பாக இரை தேடும் பிற நேரங்களில் மரக்கிளைகளில் தனித்து நிமிர்ந்து அமர்ந்திருக்கக் காணலாம். பெரும்பாலும் இது முதுகுப் புறத்தைப் பார்ப்பவர்களுக்குக் காட்டி அமர்ந்திருக்கவே காணலாம். மனிதர்கள் நடமாட்டத்தை விரும்பாத இது யாராவது நெருங்கக் கண்டால் குனிந்து, வாலை விரித்து ஆட்டியபடி 'ம்யூ' எனக் குரல் கொடுத்தபடி பறந்து ஓடிவிடும். ஈப்பிடிப்பானைப் போலத் தாவிப் பறந்து புழுபூச்சிகளைப் பிடித்துத் தின்னும்.

கம்பளிப்பூச்சி, வண்டு, வெட்டுக்கிளி, சில்வண்டு ஆகியன இதன் உணவு.

க்..ய்...உ, க்...ய்...உ, க்...ய்...உ என மாம்பழச் சிட்டைப் போல மும்முறை கத்தும்.

இனப்பெருக்கம் : காலம் : பிப்ரவரி முதல் மே வரை; கூடு : காடுகளில் முறிந்த மரங்களில் உள்ள பொந்துகளில் கூடு கட்டும். குச்சிகளால் சிறு மேடைபோல் சுமார் 6 மீட்டர் உயரத்தில் அமையும் கூடு புறாக்களின் கூட்டினைப் பெரிதும் ஒத்திருக்கும். முட்டை: 2 முதல் 4 வரை; தந்த நிற வெண்மையாக இருக்கும்.

வரிசை : கொராசிஃபார்மிஸ்
Order : Coraciiformes
Family : Alcedinidae
மீன்கொத்திகள்
(KINGFISHERS)

229. இந்திய வெள்ளை மீன்கொத்தி
719 Indian Pied King fisher
Ceryle rudis leucomelanura (Reithenbach)

தோற்றம் : மைனாவைவிடச் சற்றுப் பெரியது. சுமார் 29 செ. மீ நீளமிருக்கும்.

அலகு கருப்பு நிறம். விழிப்படலம் ஆழ்ந்த பழுப்பு; கால்கள் கருப்பு நிறம்.

தலை, பிடரி, பக்கங்கள் ஆகியன கருப்பாக வெள்ளைச் சிறு கோடுகளுடன் காட்சி தரும். உடலின் மேற்பகுதி கருப்பாகப் பக்கங்களில் வெண் கோடுகளோடு காட்சி தரும். உடலின் கீழ்ப்பகுதி வெண்மை. கழுத்தின் பக்கங்களில் வெண் கோடுகளுடனும் வயிற்றின் பக்கங் கங்களில் வெள்ள கறைகளுடனும் காட்சி தரும். மார்பில் அகன்ற கருப்பு வளையம் காணப்படும். வயிற்றில் குறுகிய கருப்பு வளையம் இடம் பெற்றிருக்கும்.



இந்திய வெள்ளை மீன் கொத்தி

வால் வெண்மையாக அகன்ற கருப்புப் பட்டையுடன் காட்சி தரும்.

பெண் தோற்றத்தில் ஆணை ஒத்ததே எனினும் அதன் மார்பில் தெளிவற்ற முறிந்த ஒரு கருப்பு வளையம் மட்டுமே காணப்படும்.

காணப்படும் இடங்கள்: கேரளா நீங்கலாகத் தென்னிந்தியா முழுவதும் நீர்வளம் மிக்க பகுதிகளில் காணலாம்.

பழக்க வழக்கங்கள்: நீர்வளமிக்க பகுதிகளில் உள் நாட்டிலும் கடற்கரையினைச் சார்ந்தும் தனித்தோ, இணையாகவோ காணலாம் இது மீன் பிடிக்கும் முறை தனிச் சிறப்பு வாய்ந்தது. நீர்ப்பரப்பின் மீது சுமார் 10 மீட்டர் உயரத்தில் பறக்கும் இது இறக்கைகளை வேகமாக அடித்தபடி அந்தரத்தில் அப்படியே முன்னும் பின்னும் செல்லாமல் நின்று நீர்ப்பரப்பினை ஆராயும். வாலை அசைத்தும் தலையை மேலும் கீழும் ஆட்டியும் தன் நிலையினைச் சரி செய்து கொள்ளும். பின் நீரில் மீன் தென்பட்டவுடன் இறக்கைகளை மடக்கிக் கொண்டு செங்குத்தாக நீரில் பாய்ந்து நீண்ட அலகில் ஒரு மீனுடன் வெளிப்படும். இப்படிப் பாயும் இது பெரும்பாலும் குறி தவறுவதில்லை. பின்னர் வசதியான இடத்தில் சென்று அமர்ந்து பிடித்த மீனை வழங்கும்.

மீன், தவளை முதலியன இதன் உணவு.

நீர்ப் பரப்பின்மீது இடம் விட்டு இடம் பறக்கும்போது சீரி.. ர் . ச்சீர்...ர் எனக் கத்தியபடி பறக்கும்.

இனப்பெருக்கம்: காலம்: அக்டோபர் முதல் ஏப்ரல் வரை. கூடு: கிணறு, ஏரி, ஆறு ஆகியவற்றின் கரைகளில் நேராக ஆழமாக வங்கு குடைந்து அதில் அறை அமைத்து முட்டையிடும். முட்டை: 4 முதல் 6 வரை; பளபளக்கும் வெண்மை நிறங் கொண்டது. ஆணும் பெண்ணும் வங்கு குடையும், குஞ்சுகளைப் பேணும்.

230. கேரள வெள்ளை மீன்கொத்தி

720 Kerala Pied Kingfisher

Cryle rudis travancoreansis (Whistler & Kinnear)

பெரும்பாலும் எல்லா வகையிலும் முன் கூறிய இந்திய வெள்ளை மீன் கொத்தியை ஒத்த இதன் உடல் நிறம் சற்று ஆழ்ந்த

கறுப்பாக இருக்கும். வெள்ளைக் கோடுகள் தடிப்பின்றிக் காணப் படும். இது கேரளாவில் முந்தைய உள்ளினத்திற்குப் பதிலாகக்

கேரள வெள்ளை மீன் கொத்தி

காணப்படுகிறது. பழக்க வழக்கங்கள் முதலியன முன்னையது போன்றனவே.

231. சிறிய நீல மீன்கொத்தி

724. Ceylon Small Blue Kingfisher

Alcedo athis taprobana (*Kleinschmidt*)

தோற்றம்: சிட்டுக் குருவியைவிடச் சற்று பெரியதான இது சுமார் 18 செ. மீ. நீளமிருக்கும்.

அலகு 5 செ. மீ. நீளம் இருக்கும் ; நிறம் கருப்பு ; விழிப் படலம் பழுப்பு; கால்கள் பவளச் சிவப்பு.



சிறிய நீல மீன் கொத்தி

உடலின் மேற்பகுதி நல்ல நீல நிறமாகப் பசுமை தோய்ந்து காணப்படும். அலகின் அடிப்பகுதியிலிருந்து ஒரு பசுங்கோடு கழுத்தின் பக்கங்களில் செல்லக் காணலாம். காதுகளின் மேல் வெள்ளைப் பகுதி காணலாம். தலையும் கழுத்தும் சற்றுக் கறுத்துக் காணப்படும். உடலின் அடிப்பகுதி துருச் செந் நிறமாக இருக்கும். வால் குறுகலாகத் தடித்து மேலே நீல நிறமாகவும் கீழே பழுப்பாகவும் இருக்கும். தொண்டை வெண்மை நிறம்.

பெண் ஆணைப் போன்றதே எனினும் அலகின் அடிப்பகுதி சற்று ஆரஞ்சு நிறம் தோய்ந்திருக்கும்.

காணப்படும் இடங்கள் : தென்னிந்தியா முழுதும் காணலாம்.

பழக்க வழக்கங்கள் : நீர் வளம் மிக்க இடங்களில் தனித்துக் காணலாம். தாழ்வான மரக்கிளையிலோ, வரப்பிலோ, கற்களின் மீதோ அமர்ந்து நீரில்மேற் பாய்ந்து அலகால் மட்டும் மீனைக் கொத்தி எடுத்துப் போய் மீண்டும் அமர்ந்து பிடித்த மீனை விழுங்கும். இதன் நீளத்தில் பாதி அளவு நீளமுள்ள மீனைக் கூடப் பிடித்துத் தலையை அப்படியும் இப்படியும் ஆட்டி மீனைச் செய விழக்கச் செய்து விழுங்கும். முந்தைய வெள்ளை மீன் கொத்தியைப் போலச் சில சமயங்களில் நீர்ப் பரப்பின்மீது ஆடாது அசையாது பறந்து நின்று பின் நீரில் பாய்ந்து மீன் பிடிப்பதும் உண்டு. ஆனல் அதனைப்போல அவ்வளவு உயரத்தில் பறக்காது நீரிலிருந்து 2 முதல் 3 மீட்டர் உயரத்திலேயே பறக்கும்.

மீன், தவளை, நீர் வாழ் புழு பூச்சிகள் முதலியன இதன் உணவு.

இடம் விட்டு இடம் செல்லும்போது ச்சிச்சீ, ச்சிச்சீ எனக் கத்தியபடியே பறந்து செல்லும்.

இனப்பெருக்கம் : காலம் : மார்ச் முதல் மே முடிய. கூடு : ஆற்றங்கரைகளில் நீளவாக்கில் வங்கு செய்து இறுதியில் அறை அமைத்து முட்டையிடும். வங்கு ஒரு மீட்டர் நீளம் வரை செல்

லும் முட்டை : 4 முதல் 6 வரை ; பளபளக்கும் வெண்மை நிறம். ஆணும் பெண்ணும் அடைகாத்துக் குஞ்சுகளைப் பேணும்.

232. அசாம் நீலக்காது மீன்கொத்தி

725. Assam Blue-Eared Kingfisher

Alcedo menintin coltarti (Baker)

தோற்றத்தில் பெரிதும் முன்னையதை ஒத்த இது தென்னிந்தியக் காடுகளில் அபூர்வமாகக் காணப்படுவது. மேற்குத் தொடச்சி மலைசார்ந்த காட்டுப் பகுதிகளில் காட்டாறுகளைச் சார்ந்து காணலாம். பிற பழக்க வழக்கங்கள் பெரும்பாலும் முன்னையதைப் போல.

233. மூன்று விரல் மீன்கொத்தி

727. Indian Three-Toed Forest Kingfisher

Ceyx erithacus erithacus (Linnaeus)

தோற்றம் : சிட்டுக் குருவியைவிடச் சிறியதான இது சுமார் 12 செ. மீ. நீளமிருக்கும்.

அலகு பவளச் சிவப்பாக இருக்கும் ; விழிப்படலம் பழுப்பு ; கால்களும் விரல்களும் சிவப்பு ;

தலை, கழுத்து, பிட்டம் வால் போர்வை இறகுகள் ஆகியன ஆரஞ்சு நிறந் தோய்ந்த கருஞ்சிவப்பு நிறம் காதுகளின் மேல் ஊதா, நீலக் கறைகள் காணலாம். இறக்கைகள் நீலந் தோய்ந்த பழுப்பு நிறம். மோவாயும், தொண்டையும் வெண்மை ; மார்பு, வயிறு ஆகியன ஆரஞ்சு கலந்த மஞ்சள் நிறமாக இருக்கும்.

காணப்படும் இடங்கள் : தென்னிந்தியாவில் மேற்குத் தொடச்சி மலை சார்ந்த பகுதிகளில் காட்டாறுகளைச் சார்ந்தும் கரைகளில் மரங்கள் அடர்ந்த உப்பங்களிகளைச் சார்ந்தும் அபூர்வமாகவே காணலாம்.

பழக்க வழக்கங்கள் : காட்டாறுகளைச் சார்ந்து திரியும் இது சிலந்தி முதலான புழு பூச்சிகளையே பெரும்பாலும் உணவாகக் கொள்கிறது. தனித்துக் காட்டாற்று ஓரப் பாறைகளில் நிழலில் அமர்ந்திருக்கக் காணலாம். மனிதர் நெருங்கியவுடன் எழுந்து வேகமாக நேர்க் கோட்டில் பறந்து செல்லும். சுவர்களிலும் கண்ணாடி ஜன்னல்களிலும் மோதி இது உயிர் துறப்பதும் உண்டு. ஆண்கள் இனப்பெருக்கக் காலத்தில் உரிமையாட்சி எல்லைப்

போராட்டங்களில் ஈடுபடுவது உண்டு. மற்றப் பழக்க வழக்கங்கள் சிறிய நீல மீன் கொத்தியைப் போன்றவை.

நத்தை, சிறு மீன்கள், பூச்சிகள், முதலியன இதன் உணவு,

ச்சீச்சீ, என்றோ ச்சீச்சீச்சீ என்றோ பறந்து செல்லும் போது கத்தும்.

இனப்பெருக்கம் காலம்: ஜூலை முதல் செப்டம்பர் வரை; கூடு: 4 செ. மீ. அளவுள்ள ஒரு மீட்டர் நீளமுள்ள வங்கினைக் காட்டு ஆற்றங்கரைகளில் குடைந்து முட்டையிடும். அறை அமைத்து முட்டையிடும். முட்டை 5 முதல் 6 வரை; பளபளக்கும் வெண்மை நிறமாக இருக்கும்.

234. பழுப்புத் தலை பருத்த அலகு மீன்கொத்தி

730. Brownheaded Storkbilled Kingfisher

Pelargopsis capensis capensis (Linnaeus)

தோற்றம்: புறாவை விடச் சற்றுச் சிறிய இது சுமார் 40 செ. மீ. நீளம் இருக்கும்.

அலகு நாரையின் அலகு போல பருத்து நீண்டு இரத்தச் சிவப்பாகச் சுமார் 10 செ. மீ. நீளமிருக்கும்; விழிப் படலம் பழுப்பு; கால்கள் பவளச் சிவப்பு.



பழுப்புத் தலை பருத்த அலகு மீன் கொத்தி

தலை பழுப்பு நிறமாக இருக்கும். உடலின் மேற்பகுதி பசுமை தோய்ந்த நீல நிறம். உடலின் கீழ்ப்பகுதி மஞ்சள் தோய்ந்த பழுப்பு நிறம். வாலின் மேற்பகுதி நீலமாகவும் அடிப்பகுதி கருப்பாகவும் இருக்கும். இதன் தடித்த அலகு கொண்டு இதனை மற்ற மீன் கொத்திகளிலிருந்து எளிதில் பிரித்து அறியலாம்.

காணப்படும் இடங்கள்: தென்னிந்தியா முழுவதும் நீர்வள மிக்க பகுதிகளில் காணலாமேனும் கேரளாவில் மிகுதியும் காணப் படுவது. தமிழ் நாட்டில் கன்னியாகுமரியிலும் சாத்தனூர் அணைக் கட்டுப் பகுதியிலும் காணப்பட்ட குறிப்பு உண்டு.

பழக்க வழக்கங்கள்: ஆற்றங்கரைகளைச் சார்ந்த காடுகளில் நிழலில் மேலும் கீழுமாக அலைந்து திரியும். உப்பங்கழிகளை அடுத்த தோப்புக்களிலும் மரங்கள் மீதும் காணலாம். மரக்கிளைகளில் உட்கார்ந்திருந்தே நீரில் பாய்ந்து இரைகளைப் பிடிக்கும். மரத்தில் மைனாவின் பொந்தருகே காத்திருந்த இது வளையில் இருந்த மைனாவைப் பிடித்துச் சென்ற குறிப்புள்ளது.

மீன், நண்டு, ஊர்வன, தவளை முதலிய பலவற்றையும் பிடித்துத் தின்னும்.

இனப்பெருக்கம் காலம்: ஜனவரி முதல் ஜுலை வரை. கூடு: காட்டாற்றின் கரைகளில் நீளமாகக் குடைந்து வங்கு செய்து முட்டையிடும். முட்டை: 4 முதல் 5 வரை; வெண்மையாக இருக்கும்.

235. சிவப்பு மீன்கொத்தி

733. Indian Ruddy Kingfisher

Halayon coromondo coromonda (Latham)

தோற்றம்: மைனா அளவுள்ள இது சுமார் 25 செ. மீ. நீளம் இருக்கும்.

அலகு சிவப்பு; விழிப்படலம் பழுப்பு; கால்கள் சிவப்பு.

உடலின் மேற்பகுதி கத்தரிப்பூ நிறம் தோய்ந்த செம்பழுப்பாக இருக்கும். உடலின் கீழ்ப்பகுதி கருஞ்சிவப்பாக இருக்கும். மோவாய், வயிறு, தொண்டை ஆகியன சற்று நிறங்குன்றிக் காணப்படும்.

காணப்படும் இடங்கள்: சென்னையிலும் சென்னையைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் காணப்பட்ட குறிப்பு உண்டு.

பழக்க வழக்கங்கள்: தனித்தோ இணையாகவோ காணப்படும் இது அஞ்சி மறையும் இயல்புடையது. தென்னிந்தியாவில் இதனைப் பற்றிய குறிப்புக்கள் மிகக் குறைவு. குரல் வெள்ளைமார்பு மீன் கொத்தியின் குரலை ஒத்தது.

இனப்பெருக்கம்: தென்னிந்தியாவில் இனப்பெருக்கம் பற்றிய குறிப்பு இல்லை. மற்ற மீன் கொத்திகளைப் போன்றனவே.

236. வெண்மார்பு மீன்கொத்தி

736. Indian Whitebreasted Kingfisher

Halcyon smyrnensis fusca (*Boddaert*)

தோற்றம்: மைனா அளவுள்ள இது சுமார் 25 செ. மீ. நீளம் இருக்கும்.

அலகு பவளச் சிவப்பு; விழிப்படலம் பழுப்பு; கால்கள் நல்ல சிவப்பு.

தலை, கழுத்து, அடி மார்பு, வாலடி, வாலடி இறகுகள் ஆகியன நல்ல ஆழ்ந்த சாக்லெட் பழுப்பு நிறம். முதுகு, பிட்டம், வால் மேல் போர்வை இறகுகள் ஆகியன நல்ல நீலம்; மோவாய், தொண்டை, மார்பு ஆகிய மூன்றும் வெண்மை. பறக்கும்போது மைனாவின் இறக்கைகளில் வெண்மை பளிச்சிடுவது போல் இதன் இறக்கைகளிலும் வெண்மை பளிச்சிடக் காணலாம்

காணப்படும் இடங்கள்: தென்னிந்தியா முழுவதும் மிகுதியாகக் காணப்படும் மீன் கொத்தி இதுவே. தென் திருவாங்கூரில் மட்டும் மிகுதியாகப் காணப்படுவதில்லை.

பழக்க வழக்கங்கள்: நீர்வளம் இல்லாத பகுதிகளில் கூட இதனைக் காணலாம். ஏரிகள், குளங்கள், வயல்கள் ஆகியவற்றைச் சார்ந்து தரையிலும், வேலிகளிலும் மின்சாரக் கம்பிகளிலும் உட்கார்ந்திருக்கக் காணலாம். நீரிலும் தரையிலும் ஒப்ப இரை தேடித் தின்னும் ஆற்றல் வாய்ந்தது.

மீன், தவளை, ஓணான், வெட்டுக்கிளி, பூச்சிகள் முதலியன இதன் உணவு.

ஓரிடம் விட்டு இன்னொரு இடம் பறக்கும்போது உரத்த கிறீச் குரலில் கத்தியபடி பறக்கும். இனப்பெருக்கக் காலத்தில் குறிப்பிட்ட ஓரிடத்தில் அமர்ந்து தொடர்ந்து விட்டு விட்டு கிறீச்சிட்டுக் கத்தும்.

இனப்பெருக்கம்: காலம்: மார்ச் முதல் ஜூலை வரை. கூடு: கிணறுகள், வாய்க்கால் கரைகள் ஆகியவற்றில் வங்கு குடைந்து முட்டையிடும்: முட்டை: 4 முதல் 6 வரை; சிலபோது 8 வரை; தூய வெண்மையாகக் கிட்டத்தட்ட வடிவமாக இருக்கும்.

237. கருந்தலை மீன்கொத்தி
739. Blackcapped Kingfisher
Halcyon pileata (Boddaert)

தோற்றம்: மைனாவை விடச் சற்றும் பெரியது இது. சுமார் 28 செ. மீ. நீளமிருக்கும்.

அலகு பவளச் சிவப்பு; விழிப்படலம் செம்பழுப்பு; கால்கள் பழுப்புத் தோய்ந்த சிவப்பு.



கருந்தலை மீன் கொத்தி

தலை, கழுத்து, கன்னம் ஆகியன கருப்பு; உடலின் மேற்பகுதி கத்தரிப்பூ நிறம் தோய்ந்த நீலம். கழுத்தின் மேல் அகன்ற வெண்பட்டை காணலாம் இறக்கைகள் கருப்பு; மோவாய் தொண்டை, கழுத்தின் பக்கங்கள், மார்பு ஆகியன வெண்மை வயிறும் வாலடியும் கருஞ்சிவப்புத் தோய்ந்த மஞ்சள் நிறம்.

காணப்படும் இடங்கள்: தென்னிந்தியக் கடற்கரை நெடுகிலும் ஆற்றுக் கழிமுகங்களிலும் உப்பங்கழிகளைச் சார்ந்தும் காணலாம்.

பழக்க வழக்கங்கள்: கடற்கரை, ஆற்றுக்கழிமுகம் சார்ந்த சதுப்பு நிலக் காடுகள், உப்பங்கழிகளில் ஆகியவற்றைச் சார்ந்து திரியக் காணலாம். நீர்வளமற்ற பகுதிகளில் காணமுடியாது.

கருந்தலை மீன்கொத்தி

இதன் பழக்க வழக்கங்கள் மற்ற வகையில் வெண்மார்பு மீன் கொத்தியின் பழக்க வழக்கங்களை ஒத்தனவே.

இனப்பெருக்கம்: காலம்: மே முதல் ஜூலை முடிய. கூடு: ஆற்றங்கரை முதலியவற்றில் நீளமாகத் தோண்டப்பட்ட வங்கில் இறுதியில் அறைபோல அமைத்து முட்டையிடும். முட்டை: 4 முதல் 5 வரை: வட்டவடிவமாக வெண்மையாக இருக்கும்.

238. மலபார் வெண்பட்டைக் கழுத்து மீன்கொத்தி

740. Malabar White Collared Kingfisher

Halcyon chloris vidali (*Sharpe*)

தோற்றம்: மைனு அளவுள்ள இது சுமார் 30 செ. மீ. நீள மிருக்கும்.

அலகு முனை கருப்பாகவும் அடிப்பாகம் வெளிர் மஞ்சளாகவும் இருக்கும். விழிப்படலம் ஆழ்ந்த பழுப்பு; கால்கள் சிலேட் கருப்பு நிறம்.

உச்சந்தலை, பிடரி, தலைப்பக்கங்கள் ஆகியன நீலங்கலந்த பசுமை. கழுத்தின் பக்கங்களும் கழுத்தின் மேல் பகுதியில் ஒரு பெரிய பட்டையும் வெண்மை நிறம். மேல் முதுகு பசுமை கலந்த நீலம். முதுகின் அடிப்பகுதி, பிட்டம், வால் மேல் இறகுகள் நல்ல நீல நிறம். வால் பசுமை தோய்ந்த கரு நீல நிறம். உட லின் கீழ்ப்பகுதி வெண்மை.

காணப்படும் இடங்கள்: இந்தியாவின் மேற்குக் கடற்கரைப் பகுதியில் அபூர்வமாகக் கேரளாவில் காணப்பட்ட குறிப்பு உண்டு. இன்னமும் உறுதிப்படுத்தப்படவில்லை.

Family : Meropidae

பஞ்சுருட்டான்கள்
(BEE-EATERS)

239 செம்பழுப்புத் தலைப்பஞ்சுருட்டான்

744. Chestnut headed Bee-Eater

Merops leschenaulti leschenaulti (*Vieillot*)

தோற்றம்: கொண்டைக் குருவியை விடச் சற்றுச் சிறியது. சுமார் 21 செ. மீ. நீளம் இருக்கும்.

அலகு கருப்பு; விழிப்படலம் ஆழ்ந்த சிவப்பு; கால்கள் நல்ல கருப்பு.

தலையும் மேல் முதுகும் செம்பழுப்பு நிறம். எஞ்சிய உடலின் மேற்பகுதிகள் புல் பச்சை நிறம். மோவாயும் தொண்டையும் மஞ்சள் நிறம். மேல் மார்பில் ஒரு செம்பழுப்பு வளையம் காணலாம். உடலின் பிற கீழ்ப்பகுதிகள் நீலங் கலந்த பச்சை.

காணப்படும் இடங்கள்: தென்னிந்தியாவில் மேற்குத் தொடர்ச்சி மலைசார்ந்த பகுதிகளில் காடுகளில் காணலாம்

பழக்க வழக்கங்கள்: அடர்ந்த காடுகளில் சமவெளிப் பகுதிகளிலிருந்து மலைகளில் 1000 மீட்டர் உயரம் வரை காணலாம். இரவில் கூட்டமாக இலைகளடர்ந்த மரங்களில் தங்கும். மற்றப் பழக்க வழக்கங்கள் அடுத்த பஞ்சுருட்டான்களைப் போல.

இனப்பெருக்கம்: காலம்: பிப்ரவரி முதல் ஏப்ரல் முடிய; கூடு: மண் திட்டுக்களிலும், மணல் திட்டுக்களிலும் காட்டாறுகளை ஒட்டி வங்கு குடைந்து முட்டையிடுகின்றது. முட்டை: 5 அல்லது 6; பளபளக்கும் வெண்மை நிறங் கொண்டிருக்கும்.

240. நீலவால் பஞ்சுருட்டான்

748. Blue-Tailed Bee-Eater

Merops philippinus philippinus (*Linnaeus*)

தோற்றம்: கொண்டைக் குருவியை விடச் சற்றுப் பெரியது. சுமார் 30 செ. மீ. நீளம் இருக்கும்.

அலகு கருப்பு; விழிப்படலம் நல்ல சிவப்பு; கால்கள் கருப்பு நிறம்.



நீல வால் பஞ்சருட்டான்

தலை, கழுத்து, மேல் முதுகு ஆகியன பழுப்புத் தோய்ந்த தெளிவற்ற பச்சை நிறம். வால் மேல் இறகுகள், வால் இறக்கைகளின் வெளி விளிம்பு ஆகியன நீலம். அலகடியிலிருந்து கண்கள் வழியாகக் காதுகள் வரை

கருப்புப்பட்டைக் கோடுகள் செல்லும். இக் கோடுகளின் மேலும் கீழும் சிறு நீலக் கோடுகள் விளிம்பு போல இருக்கும். மோவாய் மஞ்சள் தோய்ந்த வெண்மை, தொண்டை துருச் செந்நிறம்; மேல் மார்பு பசுமை தோய்ந்த பொன் நிறம். கீழ் மார்பும், வயிறும் பசுமை கலந்த நீலநிறம் கொண்டிருக்கும்.

காணப்படும் இடங்கள் : தென்னிந்தியா முழுதும் சற்று நீர் வளம் மிகுந்த பகுதிகளில் ஆங்காங்கே காணலாம்.

பழக்க வழக்கங்கள் : அடுத்த பச்சைப் பஞ்சுருட்டானைப் போன்ற பழக்க வழக்கங்களைக் கொண்ட தெனினும் அதனைப் போல வரள் காடுகளை இது விரும்புவதில்லை. நீர்வளமிக்க பகுதிகளைச் சார்ந்து சிறு கூட்டமாகவே திரியக் காணலாம்.

இனப்பெருக்கம் : காலம் : ஏப்ரல் முதல் ஜூன் முடிய கூடு; கூட்டமாக ஆற்றங்கரைத் திட்டுகளில் வங்கு குடைந்து முட்டையிடும். முட்டை : 4 முதல் 7 வரை பளபளக்கும் வெண்மை நிறங் கொண்டது.

241. சின்னப் பச்சைப் பஞ்சுருட்டான்

750. Indian Small Green Bee-Eater

Merops orientalis orientalis (Latham)

தோற்றம் : சிட்டுக் குருவி அளவுள்ள இது சுமார் 23 செ. மீ. நீளம் இருக்கும்.

அலகு கருப்பு; விழிப்படலம் சிவப்பு; கால்கள் கருப்பு நிறம்.

நெற்றி பச்சை; தலையும் பிடரியும பொன் நிறம். உடலின் மேற்பகுதி பச்சை; மோவாயும் கண்ணுக்குக் கீழ் ஒரு சிறு கோடும் நீலம். தொண்டை நீலங் கலந்த பசுமை; மார்புக்கும் கழுத்துக்கும் இடையே சிறு கருவளையம் காணப்படும். மார்பும் வயிறும் பச்சை நிறம். 5 செ. மீ. நீளமுள்ள வாலின் நடு இறகுகள் மேலும் 5 செ. மீ. அளவிற்குக் கம்பி போல நீண்டிருக்கும்.

காணப்படும் இடங்கள் : தென்னிந்தியா முழுவதும் காணலாம் மலைகளில் 2000 மீட்டர் உயரம் வரை காணலாம்.

பழக்க வழக்கங்கள் : காக்கை, மைனு போல எங்கும் சாதாரணமாகக் காணப்படும் பறவைகளுள் இதுவும் ஒன்று. வேலிகளிலும், தந்தி, மின்சாரக் கம்பிகளிலும் அமர்ந்திருக்கக் காண

லாம். உட்கார்ந்திருக்கும் இடத்திலிருந்து தாவிப் பறந்து பூச்சிகளைப் பிடித்து மீண்டும் வந்து அமர்ந்து விழுங்கும். மின்சாரக் கம்பியில் அமர்ந்திருக்கும் பறவை தான் பிடித்த பறவையைக் கொல்வதற்காக அலகோடு கூட அந்தப் பூச்சியை மின்சாரக் கம்பியில் மோதும்போது 'டிரிங்' 'டிரிங்' என ஒலி எழுவதைக் கேட்கலாம். கடற்கரைப் பகுதிகளிலும் இதனைக் காணலாம். அங்கு மணல் வெளிகளில் தரையில் அமர்ந்து புழுபூச்சிகளைப் பிடிக்கும். பறக்கும் பூச்சிகளை விடாது துரத்தி லாவகமாகப் பிடிக்கும் ஆற்றல் வாய்ந்தது.

வண்டுகள், பூச்சிகள் முதலியன இதன் உணவு.

ட்ரீஇ, ட்ரீஇ, ட்ரீஇப் என பறக்கும்போதும் அமர்ந்திருக்கும் போதும் கத்தும்.

இனப்பெருக்கம்: காலம்: மார்ச் முதல் மே முடிய; கூடு, ஆற்றங்கரையின் மண் திட்டுகள், சாலையோரக் கால்வாய்க்கரைகள் மணல் திட்டுக்கள் ஆகியவற்றில் வங்கு குடைந்து முட்டையிடும். முட்டை: 4 முதல் 7 வரை; வட்டவடிவமாக வெண்மை நிறமாக இருக்கும். ஆணும் பெண்ணும் வங்கு குடைவது குஞ்சுகளைப் பேணுவது ஆகியவற்றில் பொறுப் பேற்கும்.

242. காட்டுப் பஞ்சுருட்டான்
753. Blue Bearded Bee-Eater
Nyctyornis athertoni athertoni (Jerdon & Selby)

தோற்றம்: புறுவை விடச் சற்றுப் பெரியது. சுமார் 35 செ. மீ நீளம் இருக்கும்.

அலகு கொம்பு நிறம்; விழிப்படலம் மஞ்சள்; கால்கள் பசுமை கலந்த மஞ்சள்.

உடலின் மேற்பகுதி பச்சை நிறமாகச் சற்று நீலந் தோய்ந்து காணப்படும். நெற்றி நீல நிறம்; கழுத்துப் பச்சையாக நீண்ட நீல நிறத் தூவிகளோடு காட்சி தரும். உடலின் கீழ்ப்பகுதி வெளிர் பச்சையாக இருக்கும். வாலடி, வால் கீழ் இறகுகள் ஆகியன மஞ்சள் தோய்ந்த வெளிர் பழுப்பு நிறம்.

காணப்படும் இடங்கள்: தென்னிந்தியாவில் மலைப் பகுதி சார்ந்த காடுகளிலும் மலைகளிலும் ஆங்காங்கே காணப்படும். மேற்குத் தொடர்ச்சி மலைப்பகுதிகள், பழநி, சேரவராயன் மலைப் பகுதிகள் ஆகியவற்றைச் சார்ந்து காணப்படும்.

பழக்க வழக்கங்கள் : இலையுதிர் காடுகளையும், பசுங்காடுகளையும் சார்ந்தே காணப்படுவது இது. பெரிய மரங்களும் புதர் காடுகளும் கலந்து காணப்படும் மலைப்பக்கங்களிலும் இதனைக் காணலாம். இணையாகவோ சிறு கூட்டமாகவோ மரங்களில் உயர இலைப் புதர்களிடையே காணலாம். எழுந்து பறந்து வண்டு, பூச்சி முதலியவைகளைப் பிடித்து மீண்டும் சென்று மரக்கிளைகளிடையே அமர்ந்து கொள்ளும். இலவ மரங்கள் மலரும்போது இலைகளற்ற அந்த மரத்தில் மலர்களில் தேன் உண்ண வரும் பூச்சிகளைப் பிடிக்க அந்த மரங்களைச் சார்ந்து திரியும்போது இவற்றை நன்கு காணலாம். பறக்கும் இவற்றின் தன்மை பச்சைக் குக்குறுவானை ஒத்தது.

புழு பூச்சிகள், வண்டுகள் முதலியன இதன் உணவு.

கூர்ர்ட் - கூர்ர்ட் எனத் தொடர்ந்து குரல் கொடுக்கும்.

இனப்பெருக்கம் காலம் : மார்ச் முதல் ஆகஸ்ட் முடிய; கூடு : காட்டாற்றங்கரைகள், மலைப்பாதைச் சரிவுகள் ஆகியவற்றில் வங்கு குடைந்து அறை அமைத்து முட்டையிடும். முட்டை : 4- முதல் 6 வரை; பளபளக்கும் வெண்மையாக வட்ட வடிவமாக இருக்கும்.

Family : Coraciidae

பனங்காடைகள்
(ROLLERS)

243. பனங்காடை
756. Southern Roller
Coracias benghalensis Indica (Linnaeus)

தோற்றம் : புறா அளவினதான இது சுமார் 30 செ. மீ. நீளமிருக்கும்.

அலகு கருப்பு நிறம். கால்கள் ஆழ்ந்த ஆரஞ்சு மஞ்சள் நிறம் ; விழிப்படலம் ஆழ்ந்த பழுப்பு நிறம் ;



பனங் காடை

தலையும் பிடரியும் பசுமை கலந்த நீல நிறம். பின் கழுத்தில் ஊதா நிறப்பட்டை காணலாம. மேல் முதுகு பளபளக்கும் பசுமை தோய்ந்த பழுப்பு நிறம். கீழ் முதுகு நீலம், பிட்டமும் வால்மேல் இறகு

களும் பசுநீலம். மோவாய், தொண்டை, மார்பு, ஆகியன வெண் நிறம். கழுத்தில் சிறு கோடுகள் காணலாம். பக்கங்களும் வாலடி இறகுகளும் வெளிர் நீலம். வயிற்றின் நிறம் நீலமும் பசுமையும் கலந்து காணப்படும்.



பனங் காடை

காணப்படும் இடங்கள் : தென்னிந்தியா முழுவதும் சமவெளி களில் எங்கும காணலாம். மலைகளில் 1000 மீட்டர் உயரம் வரை தென்படும்.

பழக்க வழக்கங்கள் : தனித்தோ, இணையாகவோ, தந்திக் கம்பங்கள் மீதும், இலை தழைகள் மிக்கி லாத மரக்கிளைகளிலும் அமர்ந்து சுற்றிலும நோட்டம் விட்டபடி இருக்கும். அப்படி அமர்ந்திருக்கும் போது சற்றைக் கொருதரம் வாலை மட்டும் அசைக் கும். தரையில் இரையைக் கண்டவுடன் மெல்லப் பறந்து அதனைப் பிடித்து அங்கேயோ அல்லது முன்பு உட்கார்ந்திருந்த இடத்தில் சென்று அமர்ந்தோ விழுங்கும்.

காதலூடாட்டத்தின் போது ஆண் பறவை உயரப் பறந்து பின் இறக்கையை மடித்துக் கொண்டு தலை கீழாக விழுந்தும், சுற்றிப் பறந்தும் பெருத்த ஆரவாரம் செய்து பெண்ணுக்கு விளை

யாட்டுக் காட்டும். இனப்பெருக்கம் செய்யாத காலத்தில் கூடத் தனித்து இப் பறவை பொழுது போக்காக இப்படி விளையாடுவதும் உண்டு.

பூச்சிகள், வண்டு, ஓணான், சிறு பறவைக் குஞ்சுகள் முதலியன இதன் உணவு.

சிலபோது பெருத்த ஆரவாரக் குரலில் தொடர்ந்து, காக், காக், காக் எனக் கத்தியபடி இருக்கும்.

இனப்பெருக்கம்: காலம்: பிப்ரவரி முதல் ஆகஸ்ட் வரை; ஜூலை மாதத்தில் பனை மரத்தில் ஆணும் பெண்ணும் சேர்ந்ததை இராமநாதபுரத்தில் நேரில் பார்க்க நேர்ந்தது. கூடு: பனைமரப் பொந்துகளிலும கட்டிடங்களில் பொந்துகளிலும், புல், வைக்கோல் குப்பை ஆகியவற்றைப் போட்டு அதன்மேல் முட்டை இடும் முட்டை: 3 அல்லது 4; பளபளாக்கும் வெண்மை நிறம்.

Family : Upupidae

கொண்டலாத்தி

(HOOPOES)

244. சிலோன் கொண்டலாத்தி
765. Ceylon Hoopoe
Upupu epops ceylonensis (Reicherbach)

தோற்றம்: மைனா அளவுள்ள இது சுமார் 23 செ. மீ. நீள மிருக்கும்.

அலகு கருப்பு; விழிப்படலம் பழுப்பு; கால்கள் ஈய நிறம்.

இதன் உடலின் மேற்பகுதி கருப்பும் வெள்ளையுமான பட்டைகளோடு வரிக் குதிரை போல இருக்கும். விசிறிபோன்ற தலைக் கொண்டை கருஞ்சிவப்பு நிறத்தில் கருப்பு விளிம்போடு காட்சி தரும். மார்பு மேலசான கருஞ்சிவப்பு; வயிறும் வாலடியும்; வெண்மை; தலை முழுதும் நல்ல கருஞ்சிவப்பாக இருக்கும்.

காணப்படும் இடங்கள்: தென்னிந்தியா முழுதும் எங்கும் காணலாம். மலைகளில் 3000 மீட்டர் உயரம் வரை காணப்படும்.

பழக்க வழக்கங்கள்: சிற்றூர் புறங்களிலும் நகரங்களிலும் எங்கும் காணலாம். தோட்டங்கள், விளை நிலங்கள் ஆகியவற்றைச்

சார்ந்து தனித்தும் இணையாகவும் காணலாம். நீண்ட அலகால் தரையைக் கிளறிப் பூச்சி புழுக்களைப் பிடித்தபடி இங்கும் அங்கும்

சிலோன் கொண்டலாத்தி

ஓடித் திரியக் காணலாம். வேலிகளில் அமர்ந்து கரிச்சானைப் போலப் பாய்ந்து பறக்கும் பூச்சிகளைப் பிடிப்பதும் உண்டு. ஒன்று சேர்ந்து கூராக அமைந்த கொண்டை அடிக்கடி விசிறி போல விரியக் காணலாம்.

புழு பூச்சிகள், அவற்றின் முட்டைகள் இதன் உணவு.

இனப்பெருக்கம் : காலம்: ஜனவரி முதல் மே வரை; கூடு: மரங்கள், சுவர்கள் ஆகியவற்றில் இயற்கையாகக் காணப்படும். பொந்துகளில், வைக்கோல் முதலியவற்றால் மெத்தென ஆக்கி முட்டையிடும்; முட்டை: 4 முதல் 7 வரை; பசுமை கலந்த வெளிர் நீலம்.

Family : Bucerotidae

மலைமொங்கன்கள்
(HORNBILLS)

245. கருஞ்சாம்பல் நிற இருவாயன்
767. Grey H r bill
Tokus birost (Scopoli)

தோற்றம் : பாப் பருந்து அளவுள்ள இது சுமார் 62 செ. மீ நீளமிருக்கும்.

அலகு 10 செ. மீ. நீளமிருக்கும். நிறம் கருப்பு ; மேல் அலகின் மேல் பழங்கால வீரர்களின் தொப்பிபோலே ஓர் அமைப்புப் பாதியளவிற்கு கூரிய முனையோடு அமைந்திருக்கும். விழிப்படலம் செம்பழுப்பு நிறம். கால்கள் கருஞ்சிலேட் நிறம்.



கருஞ்சாம்பல் நிற இருவாயன்

உடலின் மேற்பகுதி. கழுத்து, மேல் மார்பு ஆகியன கருஞ்சாம்பல் நிறம். எஞ்சிய உடலின் அடிப்பாகம் வெண்மை; வால் கருஞ்சாம்பல் நிறமாக நுனி மட்டும் வெண்மையாக இருக்கும்.

காணப்படும் இடங்கள் : தென்னிந்தியா முழுதும் ஆங்காங்கே கேரளப் பகுதி நீங்கலாகக் காணலாம். மலைகளில் 1000 மீட்டர் உயரம் வரை காணலாம்.

பழக்க வழக்கங்கள் : அடுத்த மலபார் கருஞ்சாம்பல் நிற இருவாயனின் பழக்க வழக்கங்களை ஒத்தனவே. பொந்தில் இருந்த கிளியை இது கொன்றதைக் கண்டு குறித்துள்ளனர்.

பலவகைக் குரல்களில் கத்தும் இயல்பினது. க்க...க்க...க்க மஇஇ எனவும் ப்பீஇ...ப்...பீ...இஇ எனவும் கத்தும்.

பழக்கங்கள் முக்கிய உணவு. புழு பூச்சிகளையும் தின்னும்.

இனப்பெருக்கம் : காலம் : ஏப்ரல் முதல் ஜுன் வரை. கூடு : மரப் பொந்துகளில் (பார்க்க பெரிய இருவாயன்); முட்டை : 2 அல்லது 3; பளபளப்பற்ற வெண்மை நிறமாக இருக்கும்.

246. மலபார் கருஞ்சாம்பல் நிற இருவாயன்

768. Malabar Grey Hornbill

Tokus griseus griseus (Latham)

தோற்றம் : பரப்பருந்து அளவுள்ள இது சுமார் 60 செ. மீ நீளமிருக்கும்.

அலகு செம்பழுப்புத் தோய்ந்த லேசான மஞ்சள் நிறம். விழிப் படலம் செம்பழுப்பு; கால்கள் பச்சை. பெண்ணின் அலகு நிறங் குன்றிக் கருப்புக் கறைகளுடன் காட்சி தரும். இதற்கு அலகின் மேல் துணை அலகு போன்ற தொப்பி இல்லை.



மலபார் கருஞ்சாம்பல் நிற இருவாயன்

தலை பழுப்புத் தோய்ந்த வெண்மை நிறமாக இருக்கும். உடலின் மேற்பகுதி ஈய நிறமான கருஞ்சாம்பல் நிறம். மேற்போர்வை இறகுகளில் சற்று பசுமை பளிச்சிடும். உடலின் கீழ்ப்பகுதி வெளிர் கருஞ்சாம்பல் நிறமாக வெண்பழுப்புக் கோடுகளுடன் காணப்படும். வாலடி இறகுகள் கருஞ்சிவப்பு நிறமாக இருக்கும். வால் பசுமை பளபளக்கும் கருப்பு நிறம். பெண் சற்று நிறம் மங்கிக் காணப்படும்.

காணப்படும் இடங்கள்: கேரளாவிலும் மைசூரிலும் மேற்குத் தொடர்ச்சி மலைசார்ந்த மழை மிகுந்த பகுதிகளில் காணலாம்.

பழக்க வழக்கங்கள்: அத்தி, ஆல் முதலான பழமரங்கள் பழுக்கும்போது அவற்றில் இதனைச் சிறு கூட்டமாகக் காணலாம். மற்ற இருவாயன்களைப் போல அடர்ந்த காடுகளிலேயே மறைந்து திரியாமல் சாலை ஓர மரங்கள், கிராமப் புறத் தோப்புக்கள், மூங்கில் காடுகள் ஆகியவற்றைச் சார்ந்து இது திரியக் காணலாம். ஆனால் மனிதர்களைக் கண்டவுடன் மறைந்து பறந்துவிட முயலும் ஓயாது ஒன்றை அடுத்து ஒன்று க்க க்க க்க க்யாப் என குரல் கொடுத்தபடி இருப்பதால் இது இருக்கும் இடத்தைக் கண்டு கொள்ளலாம். கூட்டமாக அன்றி ஒன்றிரண்டாகவும் சிலபோது காணப்படுவது உண்டு. சிரமப்பட்டு, சப்தம் உண்டாகும்படியாக இறக்கை அடித்து, ஒன்றைத் தொடர்ந்து ஒன்றாகப் பறக்கும். இறக்கைகளைச் சில முறை அடித்துப் பின் மிதந்து பறக்கும்.

பழங்களே முக்கிய உணவு. பெரும் புழு பூச்சிகள், ஓணான், எலி முதலியவற்றையும் தின்பதுண்டு.

இனப்பெருக்கம்: காலம்: ஜனவரி முதல் மே வரை; கூடு: பெரிய இருவாயனைப் போலவே; முட்டை: 2 முதல் 4 வரை; தெளிவற்ற வெண்மை நிறமாக இருக்கும்.

247. மலபார் கருப்பு வெள்ளை இருவாயன்
775. Malabar Pied Hornbill
Anthracoceros coronatus coronatus (*Boddaert*)

தோற்றம் : பிணந்தின்னிக் கழுகு அளவுள்ள இது சுமார் 90 செ. மீ. நீளமிருக்கும்.

அலகின்மேல் அமைந்த தொப்பியும் மெழுகு மஞ்சள் நிறமாக இருக்கும் ; தொப்பி பருத்து அமுங்கி ஒரு முனையுடன் காணப்படும்; அலகின் அடிப்பகுதி கருப்பாக இருக்கும். தொப்பியில் பெரிய கருப்புக் கறை காணலாம். விழிப்படலம் ஆணுக்கு ஆரஞ்சுச் சிவப்பாகவும் பெண்ணுக்குப் பழுப்பாகவும் இருக்கும். கண்ணைச் சுற்றியுள்ள தூவியற்ற தோல் ஆணுக்குக் கருப்பாகவும் பெண்ணுக்கு வெண்மையாகவும் இருக்கும். தொண்டையில் தூவியற்ற பகுதி ஊன் (Flesh) நிறமாக இருக்கும். கால்கள் கருஞ்சாம்பல் நிறம்.

தலை, கழுத்து உடலின் மேற்பகுதி இறக்கைகள் ஆகியன எல்லாம் கருப்பு நிறம். மார்பு, வயிறு, வால் கீழ்ப்போர்வை இறகுகள் வாலிறகுகள் ஆகியன (நடு இரண்டு இறகுகள் தவிர) வெண்மை நிறம்.

காணப்படும் இடங்கள் : தென்னிந்தியா முழுவதும் மழைவளம் மிகுந்த மலைச்சாரல்களில் ஆங்காங்கே காணலாம். மலைகளில் 300 மீட்டர் உயரம் வரை,

பழக்க வழக்கங்கள் : பழமரங்களை விரும்பி வாழ்வது. 4 முதல் 5 வரையான கூட்டமாக மற்ற இருவாயன்களோடும் பச்சைப் புறாக்களோடும் வேறு பழந் தின்னும் பறவைகளோடும் சேர்ந்து திரியக் காணலாம். சிலமுறை இறக்கை அடித்துப்பின் இறக்கை விரித்து மிதந்து பறக்கும். தரையில் இறங்கிப் பழங்களை எடுத்துத் தின்பதோடு கூடப் புழுதியில் புரள்வதும் (Dust bathing) உண்டு,

சிறு பறவைக் குஞ்சுகள், ஓணான், பாம்பு, பழங்கள் ஆகியன உணவு.

காக்-காக், காக்-காக் என உரத்த குரலில் கத்தும்.

இனப்பெருக்கம் : காலம் : மார்ச் முதல் மே வரை ; கூடு : பெரிய இருவாயனைப் போலவே ; முட்டை : 2 அல்லது 3 ; வெண்மை நிறமாக பெரிய கருப்பு வெள்ளை இருவாயன் முட்டையைப் போல ஆனால் அளவில் சிறியதாக இருக்கும்.

248. பெரிய கருப்பு வெள்ளை இருவாயன்
776. Great Pied Hornbill
Buceros biornis bromari (Hodgson)

தோற்றம்: கழுகு அளவு உள்ளது. ஆண் 130 செ. மீ. பெண் சற்றுச் சிறியது.



பெரிய கருப்பு வெள்ளை இருவாயன்

கொம்பு வடிவமான பெரிய அலகு மஞ்சளும் கருப்புமாக இருக்கும். மேல் தொப்பி பெரிதாகக் குதிரைலாட வடிவில் மஞ்சள் நிறமாக இருக்கும்; விழிப்படலம் இரத்தச் சிவப்பு; கால்கள் பசுமை கலந்த ஈய நிறம்.

முகம், முதுகு, உடலின் கீழ்ப்பகுதி, இறக்கைகள் ஆகியன கருப்பு நிறம். இறக்கைகளில் இரண்டு வெள்ளைப் பட்டைகள்

பெரிய கருப்பு வெள்ளை இருவாயன்

காணலாம். கழுத்து, கீழ் வயிறு, வாலின் மேல், கீழ்ப்போர்வை இறகுகள் வால் ஆகியன வெண்மை. வாலில் ஒரு பெரிய கருப்புப் பட்டை காணலாம்.

வளராத பறவைகளின் அலகின் மேல் தொப்பி இராது.

காணப்படும் இடங்கள்: மேற்குத் தொடர்ச்சி மலைசார்ந்த பகுதிகளில் பசுமை மாறாத காடுகளிலும் ஈரமிக்க இலையுதிர் காடுகளிலும் சமவெளி முதல் 1500 மீ. உயரம் வரை காணலாம்.

பழக்க வழக்கங்கள்: பெரும்பாலும் இணையாகவோ, 3 முதல் 5 வரையான சிறு கூட்டமாகவோ காணலாம். ஆல் அத்தி மரங்கள் பழுக்கும்போது 20 முதல் 30 வரையான கூட்டமாகக் காணலாம். பக்க வாட்டில் கிளைக்குக் கிளை தாவிப் பழங்களை உண்ணும் இது ஒரே நாளில் பல பழமரங்களுக்குக் குறிப்பிட்ட நேரந் தவறாது இரை தேடச் செல்லும் பழக்கம் உடையது. இரண்டு மூன்று முறை இறக்கை அடித்தபின் இறக்கை விரித்து மிதந்து பறக்கும். பறக்கும்போது இறக்கை அடிக்கும் ஓசை வெகு தொலை கேட்கும். சூரியன் மறையும்போது ஒவ்வொன்றாகத் தங்கும் மரங்களை நாடி நாடி வந்து அடைவதுண்டு. பெரிய மரங்களின் உயர்கிளைகளில் மரத்துக்கு நாளைந்து பறவைகளாகக் கழுத்தைத் தோள்களுக்குள் இழுத்து வைத்து அலகு வானோக்கி இருக்க அமர்ந்து தூங்கும்.

பழங்களே முக்கிய உணவு. மரப் பொந்துகளில் காணப்படும் ஓணான், பாம்பு, சிறு பறவைகள் முதலியவற்றையும் தின்னும்.

குரைப்பதும் உறுமுவதும் போன்ற பெருங் குரலில் கத்தும்.

இனப்பெருக்கம்: காலம்: பிப்ரவரி முதல் ஏப்ரல் வரை; கூடு: பெரிய மரப் பொந்துகள் பெண் உள்ளே இருந்து அலகை மட்டும் வெளியே நீட்டும் அளவு துவாரம் விட்டுப் பொந்தினை எச்சத்தால் பூசி அடைத்து விடும். ஆண் அதற்கு இரை தரும் பொறுப்பு ஏற்கும். குஞ்சு வளர்ந்து பதினைந்து நாட்கள் ஆன பின் பெண் சுவரை உடைத்துக் கொண்டு வெளிப்படும். முட்டை: 2; *கிரீம் வெண்மை நிறம்.*

வரிசை : பிஸிஃபார்மிஸ்

Order : Piciformes

Family : Capitonidae

குக்குறுவான்கள்

(BARHETS)

249. மேற்கத்திய பச்சைக் குக்குறுவான்

781. Western Green Barbet

Megalaima zeylanica inornata (Walden)

தோற்றம் : மைனாவைவிடச் சற்றுப் பெரியது. சுமார் 28 செ. மீ. நீளமிருக்கும்.



மேற்கத்திய பச்சைக் குக்குறுவான்]

அலகு பழுப்புத் தோய்ந்த சிவப்பு நிறம்; விழிப்படலம் பழுப்பு; கால்கள் வெளிர் மஞ்சள் நிறம்.

தலை, கழுத்து, மோவாய், தொண்டை, மார்பு, வயிறு, ஆகியன பழுப்பு நிறம். உடலின் மேற்பகுதி வெளிர் பச்சை நிறம்.

காணப்படும் இடங்கள்: தென் கேரளம் நீங்கலாகத் தென்னிந்தியா முழுவதும் மலைசார்ந்த பகுதிகளில் காணலாம்.

பழக்க வழக்கங்கள்: பச்சைக் குக்குறுவான் பழக்க வழக்கங்களை ஒத்தவை. குரல் மட்டும் கோ...ர், குட்...ரு, குட்.ரு... என ஒலிக்கும்.

இனப்பெருக்கம்: காலம். மார்ச் முதல் ஜூன் வரை. கூடு மரங்களில் மரங்கொத்தியைப் போல பொந்து குடைந்து முட்டையிடும். முட்டை: 2 அல்லது 3; தெளிவற்ற வெண்மையாக இருக்கும்.

250. சிலோன் பச்சைக் குக்குறுவான்

782. Ceylon Green Barbet

Megalaima zeylanica zeylanica (Gmelin)

தோற்றத்தில் பெரிதும் முன்னதை ஒத்த இது. உடலின் மேற் பச்சை நிறம் சற்று ஆழமாக இருக்கும். கழுத்திலும் மார்பிலும் சிறு கோடுகள் காணப்படும். மேல் வயிறுவரை மட்டுமே பழுப்பு நிறம் காணப்படும். இறக்கைகளில் தூய்மையற்ற வெள்ளைப் புள்ளிகள் காணப்படும்.

இது தென் கேரளத்திலும் இலங்கையிலும் முன்னைய உள்ளினத்திற்குப் பதிலாகக் காணப்படுவது. பழக்க வழக்கங்களும் இனப்பெருக்கமும் பெரும்பாலும் சின்னப் பச்சைக் குக்குறுவானை ஒத்தன.

251. சின்னப் பச்சைக் குக்குறுவான்

755. Small Green Barbet

Megalaima viridi (Boddaert)

தோற்றம்: மைனா அளவுள்ள இது சுமார் 26 செ. மீ. நீளம் இருக்கும்.

அலகு அடிப்பகுதி நீலமாக ஊன் நிறமாக இருக்கும். விழிப் படலம் பழுப்பு; கால்கள் பச்சை நிறம்.

தலையும் பிடரியும் பழுப்பு நிறம். உடலின் மேற்பகுதி நல்ல பச்சை நிறம். மோவாய் வெண்மை; தொண்டை, கழுத்து, மேல் மார்பு ஆகியன பழுப்பு நிறம்; கீழ் மார்பும், வயிறும் பச்சை; வாவின் அடிப்பக்கம் நீலந் தோய்ந்த பசுமை.

காணப்படும் இடங்கள் : தென்னிந்தியாவில் மேற்குத் தொடர்ச்சிமலை சார்ந்த பகுதிகளிலும சேரவராயன், சித்தேரி ஆகிய கிழக்குத் தொடர்ச்சி மலைப்பகுதிகளிலும் 500 மீட்டர் முதல் 1000 மீட்டர் உயரம் வரை மழை மிகுந்த பகுதிகளில் காணலாம்.

பழக்க வழக்கங்கள்; இலையுதிர் காடுகள், பசுமைமாறுக் காடுகள் ஆகிய இரண்டையும் சார்ந்து திரிவது. இணையாகவோ, சிறு கூட்டமாகவோ மரங்களின் உச்சியில் காணலாம். பழமரங்கள் பழுக்கும்போது பெருங் கூட்டமாகத் திரள்வது உண்டு. ஊர்ப் புறத்தோபபுகளில் மரங்கள் பழுக்கும்போதும் கூட்டமாக வரும். காபித் தோட்டங்களில் பெருத்த சேதம் விளைவிப்பது இது எனக் கருதுகின்றனர். ஆப்பிள் பழங்கள் முதலிய பெரும் பழங்களையும் கவரும். பழங்களோடு கூடப் பூச்சி புழுக்களையும தின்னும்.

க்கூ ..ர்...க்கோர்...ஹூக்கி.. ர்...ரூஉக்கு ரூஉக்கு என்பது போன்ற குரலில் ஒரு பறவை கத்தத் தொடங்கியவுடன் மற்றப் பறவைகளும் எதிர்குரல் கொடுக்கும். கோடை காலத்தில் விடாது தொடர்ந்து பகல் முழுதும் கத்தக் கேட்கலாம்.

இனப்பெருக்கம் : காலம் பிப்ரவரி முதல் ஜூன் வரை. கூடு : மரங்களில் காய்ந்த கிளைகளில் மரங்கொத்தியைப் போலப் பொந்து குடைந்து முட்டையிடும்; முட்டை : 3; வெண்மை நிறங் கொண்டவை.

252. மலபார் சிவப்புத் தொண்டைக் குக்குறுவான்
790. Malabar Crimson-throated Barbet
Megalaima rubricapilla malabarica (*Blyth*)

தோற்றம்: சிட்டுக்குருவி அளவுள்ள இது சுமார் 15 செ. மீ. நீளம் இருக்கும்.

அலகு கருப்பு; விழிப்படலம் சிவந்த பழுப்பு; கால்கள் சிவப்பு.

உடலின் மேற்பகுதி புல் பச்சை நிறமாக இருக்கும். உடலின் கீழ்ப் பகுதியான கழுத்து, மார்பு வயிறு ஆகியன வெளிர் பச்சை நிறம். உச்சி, கண்ணின் மேற்புருவம், கீழ்ப்புருவம், கீழ் அலகின் அடிப்பகுதியின் இருபக்கமும் இரு பெரும் புள்ளிகள், மோவாய், தொண்டை முன் கழுத்து ஆகியன எல்லாம் ஆழ்ந்த சிவப்புநிறமாக இருப்பது கொண்டு இதனை அடுத்த குக்குறுவானிலிருந்து வேறுபடுத்தி அறியலாம். ஆணும் பெண்ணும் ஒன்று போல.

காணப்படும் இடங்கள் : கேரளாவின் தெற்குக் கோடி தொடங்கி வடக்கே ரத்னகிரி வரை மேற்குத் தொடர்ச்சி மலை சார்ந்த பகுதிகளில் காணலாம். பழநி மலையிலும் காணப்படுகிறது.

பழக்க வழக்கங்கள் : அடுத்த சிவந்த மார்புக் குக்குறுவானைப் போன்றனவே.

இனப்பெருக்கம் : அடுத்த சிவந்த மார்புக் குக்குறுவானைப் போல.

253. சிவந்த மார்புக் குக்குறுவான்

792. Crimson-Breasted Barbet or Coppersmith

Megalaima haemacephala indica (*Latham*)

தோற்றம் : சிட்டுக்குருவியை விடச் சற்றுப் பெரிய இது பருத்த தோற்றத்துடன் சுமார் 16 செ. மீ. நீளம் இருக்கும்.



சிவந்த மார்புக் குக்குறுவான்

அலகு கருப்பாகப் பருத்து இருக்கும். அலகடிக் கம்பித் தூவிகள் நீளமாக இருக்கும். விழிப்படலம் பழுப்பு; கால்கள் பவளச் சிவப்பு.

நெற்றியும், மார்பும் ஆழ்ந்த சிவப்பாக இருக்கும். உடலின் மேற்பகுதி புல் பச்சை நிறம். தொண்டை மஞ்சள் நிறம் உடலின் கீழ்ப்பகுதி பசுங் கோடுகள் நிறைந்த வெளிர் மஞ்சள் நிறம். வால் குறுகலாக நுனி உட் குழிந்து காணப்படும்.

காணப்படும் இடங்கள் : தென்னிந்தியா முழுதும் சமவெளிகளில் எங்கும் சாதாரணமாகக் காணப்படும் குக்குறுவான் இதுவே.

பழக்க வழக்கங்கள் : சமவெளிப் பகுதிகளில் மரங்களில் உயரத் தனித்தோ, இணையாகவோ சிறு கூட்டமாகவோ அமர்ந்திருக்

கும். 'டொக்.. டொக்.. டொக்கு' என்ற குரல் கேட்டாலும் இதன் நிறம் பசுமையாக இருப்பதாலும், உருவில் சிறியதான இது மரங்களில் உயர அமர்ந்து கத்துவதாலும், மற்றப் பறவைகளைப்போல கிளைக்குக் கிளை தாவி ஆர்ப்பாட்டம் செய்யாமல் ஒரே இடத்தில் நெடுநேரம் தொடர்ந்து அமர்ந்திருப்பதாலும் இதனைக் கண்டு கொள்வது கடினம். காலை வெயிலில் சிவப்பு மார்பு பளிச்செனப் புலனாகும். ஆல், அத்தி மரங்கள் பழுக்கும்போது அந்த மரங்களில் கூட்டமாகப் பிற பறவைகளோடு சேர்ந்து பழங்கள் உண்ணும்போது தாழ்வான கிளைகளிலும் காணலாம்.

சிறு பழங்களே முக்கிய உணவு. சிலபோது பூச்சிகளைப் பிடித்துத் தின்னவும் காணலாம்.

டொக்கு, டொக்கு, டொக்கு என்ற இதனுடைய தொடர்ந்த குரல் சுத்தியால் பாத்திரவேலை செய்வோர் தகட்டினைத் தட்டும் தொடர்ந்த ஓசையை ஒத்திருப்பதால் இதற்கு ஆங்கிலத்தில் Coppersmith என்ற பொருத்தமான பெயர் அமைந்துள்ளது. அவ்வாறு ஒவ்வொரு முறை கத்தும் போதும் தலையை அப்படியும் இப்படியும் ஆட்டும்.

இனப்பெருக்கம்: காலம்: பிப்ரவரி முதல் ஏப்ரல் வரை. கூடு: முள்முருங்கை, முருங்கை போன்ற மரங்களின் காய்ந்த கிளைகளில் சாதாரண உயரத்தில் பொந்து குடைந்து முட்டையிடும். முட்டை: 3 அல்லது 4; வெண்மையாக இருக்கும். ஆணும் பெண்ணும் அடைகாக்கும் பணியிலும் குஞ்சுகளைப் பேணும் பணியிலும் ஈடுபடும்.

Family: Picidae

மரங்கொத்திகள்

(WOODPECKERS)

254. ஐரோப்பிய புள்ளிக்குருவி
796. European Wryneck
Iynx torquilla torquilla Linnaeus)

தோற்றம்: கொண்டைக் குருவியை விடச் சற்றுச் சிறியது இது சுமார் .8 செ. மீ. நீளம் இருக்கும்.

அலகு, விழிப்படலம், கால்கள் ஆகியன யாவும் பழுப்பு நிறம்.

உடலின் மேற்பகுதி கருஞ்சாம்பல் பழுப்பு நிறமாய்ப் பழுப்பு நிறப் பட்டைகளோடும் மென் கோடுகளோடும் காட்சி தரும். பிடரியிலிருந்து கரும் பட்டைக்கோடுகள் இருபுறமும் முதுகு நோக்கிச் செல்லும். கண்ணின் வழியாக ஒரு பழுப்புக்கோடு பின்னோக்கிச் செல்லக் காணலாம். அதற்கு மேல் ஒரு சிறு வெள்ளைக்கோடும் காணப்படும். இறக்கைப் போர்வை இறகுகளின் மேல் வெண் புள்ளிகளும் பழுப்புக் கறைகளும் காணலாம். மோவாய், தொண்டை ஆகியன ஆழ்ந்த வெளிர் மஞ்சளாக நெருக்கமான சிறு கருப்புப் பட்டைகளோடு காணப்படும். மார்பும் வயிறும் சிவப்புத் தோய்ந்த மஞ்சள் நிறமான வெண்மை. மார்பில் பழுப்புப் பட்டைகளோடு காட்சி தரும். ஆணும் பெண்ணும் ஒன்று போல.

காணப்படும் இடங்கள்: குளிர்காலத்தில் ஐரோப்பாவிலிருந்து வலசை வருபவை; மேற்குத் தொடர்ச்சி மலை சார்ந்த கேரளப் பகுதியில் காணப்பட்ட குறிப்பு உண்டு.

பழக்க வழக்கங்கள்: வலசை வரும் இவை தனித்தும் இணையாகவும் திரியக் காணலாம். மரங்கொத்திக் குடும்பத்தைச் சேர்ந்த தாயினும் தரையிலும் இரைதேடும் பழக்கமுடையது. மரங்களில் இரை தேடும் போது மரங்கொத்தியைப்போல கிளிகளில் நெடுக்கு வாக்கில் தொங்குவதோடு கூடக் குருவிகளைப்போலக் குறுக்கு வாக்கில் சிறுசிமிர்களில் அமர்ந்திருக்கவும் காணலாம். மரப் பட்டைகளையிடையே உள்ள புழுபூச்சிகள், எறும்புகள் ஆகியவற்றைப் பிடித்தாலும் மரங்கொத்தியைப்போல அலகால் மரத்தைத் தட்டும் பழக்கம் இதற்கு இல்லை. கரிக்குருவியைப்போல தரையில் இரைதேடும் போது வாலை மேலே நிமிர்த்திக் கொள்ளும்.

எறும்புகளும் எறும்புகளின் முட்டையுமே முக்கிய உணவு.

குளிர்காலத்தில் வலசை வரும்போது அதிகம் குரல் கொடுப்பதில்லை.

இனப்பெருக்கம்: ஐரோப்பிய நாடுகளில்.

255. சிறு புள்ளிக் குருவி மீன்கொத்தி

789 Southern Speckled Piculet

Picumnus innominatus malayorum (Hartert)

தோற்றம்: சிட்டுக் குருவியை விடச் சிறியதான இது சுமார் 10 செ. மீ. நீளம் இருக்கும்.

அலகு சிலேட் கருப்பு நிறம்; விழிப்படலம் சிவந்த பழுப்பு நிறம்; காலகள் ஆழ்ந்த ஈய நிறம்.

சிறு புள்ளிக் குருவி மீன் கொத்தி

உடலின் மேற்பகுதி மஞ்சள் தோய்ந்த ஆலிவ் நிறம். உச்சந்தலை ஆரஞ்சும் கருப்பும் கலந்த நிறமாக இருக்கும். கண்கள் வழியாகக் கருப்புத் தோய்ந்த அகன்ற ஆலிவ் நிறப் பட்டை மேலும் கீழும் வெள்ளைக் கரைகள் அழகு செய்யக் கீழ் நோக்கிக் கழுத்துவரை செல்லக் காணலாம். உடலின் கீழ்ப்பகுதி மஞ்சள் கலந்த வெண்மையாகப் பெரிய கருப்புக் கறைகளுடன் காட்சி தரும். வயிற்றிலும் வாலடியிலும் கருப்புக் கறை கருப்புப் பட்டையாக நீண்டு காட்சி தரக் காணலாம். பெண்ணின் தலை உச்சி மஞ்சள் கலந்த ஆலிவ் நிறமாக முதுகின் நிறத்தைப் போன்றதாகவே இருக்கும்.

காணப்படும் இடங்கள்: மேற்கு, கிழக்கு தொடர்ச்சி மலை சார்ந்த பகுதிகளில் ஈரமிகுந்த இலையுதிர் காடுகளிலும், மூங்கிற் காடுகளிலும் காணலாம்.

பழக்க வழக்கங்கள்: கதிர்க்குருவி, பட்டாணிக்குருவி பசையெடுப்பான் போன்ற சிறு பறவைகளின் இரைதேடும் பட்டாளத்துடன் இதனையும் காணலாம். தனித்தும் இணையாகவும் மரக்கிளைகளைச் சுற்றியும், தாழ்வான சிமிறுகளில் அமர்ந்தும், இரைதேடும் இது அடிக்கடி மரங்கொத்தியைப் போல மரப்பட்டைகளை சப்தம் உண்டாகும்படி அலகால் தட்டவும் செய்யும். விரைந்து நேராகப் பறக்கும் இயல்பு கொண்டது.

எறும்புகளும் அவற்றின் முட்டைகளுமே முக்கிய உணவு.

ஸ்பிட், ஸ்பிட் என மென் குரல் கொடுப்பதோடு அலகால் மரப்பட்டைகளையும் மூங்கிலையும் தட்டி உரத்த சப்தம் எழுப்பும்.

இனப்பெருக்கம்: காலம்: ஜனவரி முதல் மார்ச் வரை; கூடு: மூங்கில்கள் அல்லது காய்ந்து இற்ற மரங்களில் அலகால்

பொந்து குடைந்து முட்டையிடும். பொந்துகள் 1 முதல் 5 மீட்டர் உயரத்தில் 3 செ. மீ. க்கும் குறைவான விட்ட முடையதாக அமைந்திருக்கும். முட்டை: 3 அல்லது 4; பளபளக்கும் வெண்மை நிறங் கொண்டவை.

256. தெற்கத்திய கருஞ்சிவப்பு மரங்கொத்தி

804 Southern Rufous Woodpecker

Micropternus brachyurus jerdonii (*Malherbe*)

தோற்றம்: மைனா அளவுள்ள இது சுமார் 25 செ. மீ. நீளம் இருக்கும்.

மேல் அலகு கருப்பு; கீழ் அலகு வெள்ளை; விழிப்படலம் பழுப்புத் தோய்ந்த சிவப்பு; கால்கள் நீலந் தோய்ந்த பச்சை நிறம்.

உடலின் மேற்பகுதி கருஞ்சிவப்பாகக் கருப்புக் குறுக்குக் கோடுகளுடன் காணப்படும். கழுத்தின் தூவிகள் செதிள் போன்ற தோற்றம் தரும். மார்பும் வயிறும் கருஞ்சிவப்பாகக் குறுக்குக் கோடுகளின்றி இருக்கும். ஆணுக்குக் கண்களின் கீழ் பிறை வடிவமாக ஆழ்ந்த சிவப்பு நிறத் தூவிகள் வளர்ந்திருக்கும்,

காணப்படும் இடங்கள்: மைசூர், தமிழ்நாடு, கேரள மாநிலங்களில் மலைத் தொடர்களைச் சார்ந்த மூங்கிற் காடுகளோடு கூடிய இலையுதிர் காட்டுப் பகுதிகளில் சமவெளி முதல் மலைகளில் 1000மீட்டர் உயரம் வரை.

பழக்க வழக்கங்கள்: மரத்தில் பட்டைகளிடையே கூடுகட்டும் எறும்புகள் நிறைந்த காடுகளில் இதனை இணையாகக் காணலாம். அத்தகைய எறும்புக் கூடுகளை சற்று நேரம் கலைத்துக் கொத்திய பின் பறந்துபோய் பக்கத்துக் கிளைகளில குருவிகள் போல அமர்ந்து இறக்கைகளில் ஒட்டிக்கொண்டிருக்கும் எறும்புகளைப் பிடித்துத் தின்னும். இதன் தலை, வயிறு, வால் முனை ஆகியவற்றில் ஒருவகை நாற்றம் வீசும் பசை ஒட்டிக்கொண்டிருக்கிறது. அந்தப் பசையில் எறும்புகள் ஒட்டிக்கொள்ள அவற்றை இது பிடித்துத் தின்னக் காணலாம்.

எறும்புகளும் எறும்புகளின் முட்டைகளுமே இதன் முக்கிய உணவு. Cremastogaster subnuda இன எறும்புகளே சிறப்பாக இதனால் தின்னப்படுகின்றன. ஒன்றன் வயிற்றில் 2600 எறும்புகள் இருந்ததை எண்ணி உள்ளனர். சிலபோது பழங்களையும் தின்னும்.

மூங்கில்களையும் அடிமரங்களையும் அலகால் விடாது தட்டி அதிர்வொலி உண்டாக்கும்.

இனப்பெருக்கம்: காலம்: பிப்ரவரி முதல் ஏப்ரல் வரை. கூடு: எறும்புகள் கூடு கட்டி வாழும் மரங்களில் எறும்புகள் கூடுள்ள பகுதியிலேயே குடைந்து பொந்து செய்து முட்டையிடும். சிலபோது மரங்களில் மற்ற மரங்கொத்திகளைப் போல பொந்து குடைவதும் உண்டு. முட்டை: 2 அல்லது 3; வெண்மையாகப் பளபளப்பின்றிக் காட்சிதரும்.

257. செதிள்வயிற்றுப் பச்சைச் சின்ன மரங்கொத்தி

808. Little Scalybellied Green Woodpecker

Picus myrmecophoneus (Stresemann)

தோற்றம்: மைனாவை விடச் சற்றுப் பெரியதான இது சுமார் 29 செ. மீ. நீளமிருக்கும்.

அலகு சிலேட் கொம்பு நிறம்; விழிப்படலம் இளஞ்சிவப்பான வெள்ளை நிறம், உள் வட்டம் பழுப்புத் தோய்ந்த சிவப்பு; கால்கள் சாம்பல் தோய்ந்த பச்சை நிறம்.

உடலின் மேற்பகுதியில் புல் பச்சை நிறம். பிட்டம் நல்ல மஞ்சள் நிறம். வால் பசுமை தோய்ந்த பழுப்பு நிறம்; வாலில் இடையிடையே முறிந்த சில வெண்பட்டைகள் காணலாம். உச்சந்தலையும் கொண்டையும் ஆழ்ந்த சிவப்பு நிறம்; பிடரியில் ஆரஞ்சும் கருப்புமான நிறங்கொண்ட சிறுபகுதி காணலாம். கண் வழியாக மேலே கருப்பு விளிம்பு கொண்ட வெண்புருவம் பின்னோக்கிச் செல்லும். காதின் மேற் தூவிகள் கருஞ்சாம்பல் பழுப்பு நிறம். கன்னங்கள் சாம்பல் கலந்த வெண்நிறமாகக் கருங்கோடுகளுடன் காட்சி தரும். உடலின் கீழ்ப்பகுதி வெளிர் பசுமை தோய்ந்த செம்மஞ்சளாகக் கரும்பு நிற அம்பு முனைக் கறைகளுடன் காட்சி தரும்.

பெண்ணின் உச்சந்தலையும் கொண்டையும் ஆழ்ந்த சிவப்பு நிறத்திற்குப் பதிலாகக் கருப்பாக இருக்கும்.

காணப்படும் இடங்கள்: தென்னிந்தியா முழுதும் சிறப்பாக மலைப்பகுதி சார்ந்த ரப்பர் தோட்டங்கள், மூங்கில காடுகள், பசுங்காடுகள் ஆகியவற்றைச் சார்ந்து சமவெளி முதல் மலைகளில் 1800 மீட்டர் உயரம் வரை காணலாம்.

பழக்க வழக்கங்கள்: இணையாக, பருத்த அடிமரங்களில் தொற்றிச் சுற்றியபடி இரை தேடக் காணலாம். அப்போது வால் மரப்பட்டைகளோடு பொருந்தி மூன்றாவது கால்போல் உதவும். நேராகத் தொற்றியும் சுற்றியும் மரத்தில் ஏறும் இது அப்படியே பின்னோக்கி இறங்கவும் வல்லது. அலகால் மரப்பட்டையை அமுக்கடி தட்டிப் புழுபூச்சிகளை விரட்டிப் பிடிக்கும். வண்டுகள் மரத்தில் முட்டையிட்டிருக்கும் இடத்தைக் கண்டு அந்த முட்டைகளை உண்ணும். நீண்ட புழுப்போன்ற முள் முடிச்சுப் போன்ற முனையுடைய நாக்கினால் மரப்பட்டைகளிடையேயும், வண்டுகளின் துளையிடையேயும் துழாவிப் புழு பூச்சிகளை வெளிக்கொண்டு வந்து தின்னும், தரையில் தாவித் தாவிப் பறந்து எறும்புகளையும் கரையான்களையும் பிடித்துத் தின்னும். நான்கைந்து முறை ஒலி உண்டாகும்படியாக வேகமாக இறக்கை அடித்துப் பின் தாழ்வாக மிதந்து பறக்கும்.

எறும்புகளும் கரையான்களும் அவற்றின் முட்டைகளுமே இதன் முக்கிய உணவு.

கிலீ-கூ; கிலீ-கூ எனக் குரல் கொடுப்பதோடு அலகால் மரங்களில் அதிர்வுண்டாகும்படியாகத் தட்டி ஒலி எழுப்பும்.

இனப்பெருக்கம்: காலம்: மே முதல் ஜூன் வரை; கூடு: மரங்களில் 6 செ. மீ. விட்டமுள்ள பொந்து குடைந்து முட்டையிடும். பொந்து பெரிய அடி மரங்களில் தரையிலிருந்து 2 முதல் 6 மீட்டர் உயரம் வரை அமைந்திருக்கக் காணலாம். பொந்து 15 முதல் 30 செ. மீ. ஆழமுள்ளதாக அகன்ற முட்டையிடும் அறை கொண்டதாக இருக்கும். முட்டை: 5 அல்லது 6; வெண்மை நிறங்கொண்டவை.

258. தென்னிந்திய மஞ்சள்பிடரிச் சின்ன மரங்கொத்தி

816. South Indian Small Yellownaped Woodpecker

Picus chlorolophus chlorolophus (*Jerdon*)

தோற்றம்: மைனாவைவிடச் சற்றுப் பெரியதான இது சுமார் 27 செ. மீ. நீளம் இருக்கும்.

அலகு பழுப்புத் தோய்ந்த கருப்பு; விழிப்படலம் ஆழ்ந்த சிவப்பு; கால்கள் ஆலிவ் பச்சை நிறம்.

நெற்றி, புருவம், மீசைக்கோடு ஆகியன ஆழ்ந்த சிவப்பு; உச்சி ஆலிவ் பச்சை நிறம். கழுத்தின் மேல் நீட்டியபடி இருக்கும்

கொண்டை பொன்னிற மஞ்சள். உடலின் மேற்பகுதி நல்ல மஞ்சள் தோய்ந்த பசுமை; வால் பழுப்புத் தோய்ந்த கருப்பு; வால் நடு இறகுகள் வெண்கலப் பசுமை; மோவாய், தொண்டை, ஆகியன வெண்மையாகப் பட்டைகளோடு காட்சி தரும். மார்பு ஆலிவ் பழுப்பு நிறம். வயிறும் வாலடியும் வெண்மையும் பழுப்பு மான பட்டைகளோடு காட்சி தரும். பெண்ணின் நெற்றியில் ஆழ்ந்த சிவப்பு நிறம் காணமுடியாது.

காணப்படும் இடங்கள்: மேற்குத் தொடர்ச்சிமலை சார்ந்த பகுதிகளிலும், நீலகிரி, பழநி மலைப்பகுதிகளிலும், சேரவராயன் மலைப்பகுதிகளிலும் ஆந்திராவில் கிழக்குத் தொடர்ச்சி மலைப்பகுதி களிலும் காணலாம்.

பழக்க வழக்கங்கள்; இணையாக மற்ற மரங்கொத்திகளோடு சேர்ந்து திரியும். மற்ற சிறு பறவைகளோடு கலந்து திரிவதும் உண்டு. பழக்க வழக்கங்கள் முன்கண்ட மீன் கொத்தியைப் போல.

எறும்பு முதலிய பூச்சிகளும் அவற்றின் முட்டைகளும் முக் கிய உணவு.

ச்சீஇங்.. ச்சீஇங் என நீட்டி முழக்கி 10 விநாடிக்கொரு முறை தொடர்ந்து 10 நிமிடங்கள் வரை கத்தும்.

இனப்பெருக்கம்: காலம்: ஜனவரி முதல் மே வரை; கூடு: மரங்களில் பொந்து குடைந்து முட்டையிடும். முட்டை: 2; வெண்மை நிறம்.

259. தென்னிந்தியப் பொன்முதுகு மரங்கொத்தி
8.0. Southern Goldenbacked Woodpecker
Dinopium benghalense puncticolle (Malherbe)

தோற்றம்: மைனாவை விடப் பெரியதான இது சுமார் 29 செ. மீ. நீளமிருக்கும்.

அலகு கொம்பு போன்ற கருப்பு நிறம்; விழி படலம் சிவந்த பழுப்பு நிறம். கால்கள் சாம்பல் தோய்ந்த இலைப பச்சை நிறம்.

உச்சியும் கொண்டையும் ஆழ்ந்த சிவப்பு; உடலின் மேற் பகுதி பொன் நிறமான மஞ்சள் ஓரங்கள் கருப்பு; உடலின் கீழ்ப் பகுதி வெண்மையாகக் கருப்புக் கோடுகளோடு காட்சி தரும். தொண்டையும் தலையின் பக்கங்களும் கருப்பாகச் சிறு வெண் புள்ளிகளோடு காட்சி தரும்.

காணப்படும் இடங்கள்: கேரளா நீங்கலாகத் தென்னிந்தியா முழுவதும் இலையுதிர்காடுகளிலும் தோப்புக்கள், தோட்டங்கள், சாலை ஓரங்கள் ஆகியவற்றைச் சார்ந்தும் எங்கும் சாதாரணமாகக் காணப்படும் மரங்கொத்தி இதுவே.

பழக்க வழக்கங்கள்: இணையாக மரத்திற்கு மரம் தாவி மரங்களில் தொத்தி இரை தேடுவதைக் காணலாம். கரிச்சான் முதலிய பிற பூச்சி பிடிக்கும், இரைதேடும் பட்டாளங்களுடன் சேர்ந்து இரை தேடுவதும் உண்டு. தாவித் தாவி அடிமரங்களில் தொத்தி மரப்பட்டைகளை அலகால் தட்டி இரைதேடும் இது பின்னோக்கி இறங்கவும் வல்லது. நேராகச் சற்று இறக்கை அடித்துப் பறந்து பின் கீழாகச் சாய்ந்து நிலநோக்கிச் சாய்வது போல மிதந்து பறக்கும். அப்படிப் பறக்கும்போது கிறீச்சிட்டுச் சிரிப்பது போலக் கத்தியபடி பறக்கும்.

எறும்பு முதலிய பூச்சிகளும் அவற்றின் முட்டைகளும் முக்கிய உணவு. பழங்களையும் உணவாகக் கொள்ளும். மலர்களில் தேன் உண்பதையும் கண்டு குறித்துள்ளனர்.

இனப்பெருக்கம்: காலம்: பிப்ரவரி முதல் ஜுலை வரை. கூடு: மரங்களில் 3 முதல் 6 மீட்டர் வரையான உயரத்தில் பொந்து குடைந்து முட்டையிடும். மா, இலந்தை, முள்முருங்கை, தென்னை, பனை முதலான மரங்களில் வங்கு குடையும். முட்டை: 3; சீனக் களிமண் வெண்மையாகச் சற்றுப் பளபளப்பாக இருக்கும்.

260. கேரளப் பொன்னிற முதுகு மரங்கொத்தி
Kerala Goldenbacked Woodpecker
Dinopium benghalense techminae (*Whistler & Kinnear*)

தோற்றத்திலும் அளவிலும் முன்னதைப் பெரும்பாலும் ஒத்த இது கேரளாவிலும் மைசூரிலும் காணப்படுகிறது. இதன் முதுகு ஆலிவ் கலந்த பொன் மஞ்சளாக இருக்கும். முன்னதன் முதுகு ஆரஞ்சு தோய்ந்த பொன் மஞ்சளாக இருக்கும். பழக்க வழக்கங்கள் இனப்பெருக்கம் முதலியன முன்னதைப் போன்றனவே.

261. மலபார் பொன்முதுகு மூன்று விரல் மரங்கொத்தி
825· Malabar Goldenbacked Threetoed Woodpecker
Dinopium javanense malabaricum (Whistler & Kinnear)

தோற்றம்: மைனாவை விடச் சற்றுப் பெரியதான இது சுமார் 28 செ. மீ. நீளமிருக்கும்.

அலகு சிலேட் பழுப்பு நிறம்; விழிப்படலம் சிவந்த பழுப்பு நிறம். கால்கள் சாம்பல் தோய்ந்த பச்சை நிறம்.

பொதுவில் தென்னிந்திய, கேரள, பொன்னிற முதுகு மரங்கொத்திகளை ஒத்த தோற்றம் கொண்ட இதன் முதுகின் பொன் மஞ்சள் நிறத்தில் ஆழ்ந்த சிவப்புத் தோய்ந்திருக்கக் காணலாம். இதன் கீழ் முதுகும் பிட்டமும் ஆழ்ந்த சிவப்பாக இருக்கும். முன் கண்டவையின் கீழ் முதுகும் பிட்டமும் கருப்பாக இருக்கும். பெண்ணின் உச்சந்தலையும் கொண்டையும் கருப்பு நிறம்.

கேரளப் பொன்னிற முதுகு மரங்கொத்தி காணப்படும் பகுதிகளிலேயே இதுவும் காணப்படுகிறது.

பழக்க வழக்கங்களும் இனப்பெருக்கமும் மற்ற முன்கண்ட மரங்கொத்திகளுக்கு உரியன போன்றனவே.

262. பெரிய கருப்பு மரங்கொத்தி

830. Indian Great Black Woodpecker

Dryocopus javensis hodgsonii (Jerdon)

தோற்றம்: காக்கையை விடப் பெரியது சுமார் 48 செ. மீ. நீளமிருக்கும்.

அலகு சிலேட் கருப்பு நிறம்; விழிப்படலம் மஞ்சள் தோய்ந்த வெண்மை நிறம்; கால்கள் சாம்பல் சிலேட் நிறம்.



பெரிய கருப்பு மரங்கொத்தி

ஆணின் நெற்றி, உச்சி, கொண்டை, கன்னங்கள் ஆகியன நல்ல ஆழ்ந்த சிவப்பு நிறம்; உடலின் மேற்பகுதி வெண்பிட்டம் தவிர கருப்பு நிறம்; கீழ்ப்பகுதியான வயிறும் வாலடியும் வெண்மை; மற்றப் பகுதிகள் கருப்பு நிறம். பெண்ணின் பிடரியில் மட்டும்

ஆழ்ந்த சிவப்பு நிறம் காணலாம். எஞ்சிய தோற்றம் ஆணினைப் போலவே.



பெரிய கருப்பு மரங்கொத்தி

காணப்படும் இடங்கள்: மேற்குத் தொடர்ச்சி மலைப்பகுதி சார்ந்த ஆங்காங்கே மழை மிகுந்த மூங்கிற் காடுகளிலும் காடா ஏலக்காய்த் தோட்டங்களிலும் காணலாம். மலைகளில் 1200 மீட்டர் உயரம் வரை காணப்படுகிறது.

பழக்க வழக்கங்கள்: இணையாகவோ, மூன்று நான்கு சேர்ந்த குடும்பக் கூட்டமாகவோ திரியக் காணலாம். தனித்து மரக்கிளைகளில் இரைதேடும் இவை ஒன்றுக்கொன்று குரல்கொடுத்தபடி தொடர்பு கொண்டனவாக இருக்கும். ஒன்றன் பின் ஒன்றாக மரம் விட்டு மரம் பறந்து செல்லும். சீராக இறக்கையடித்துக் காக்கை போலப் பறக்கும்.

எறும்புகள் கரையான் ஆகியவையும் அவற்றின் முட்டைகளும் முக்கிய உணவு. ஒன்றன் வயிற்றிலிருந்து தேனீக்கள் எடுக்கப்பட்ட குறிப்பு உண்டு.

ச்சியாங் என ஒற்றைக் குரலில் கணீர் என உரத்துக் கத்தும். மரங்களை அதிர்வுண்டாகும்படியாக இனப்பெருக்கக் காலத்தில் தட்டி ஒலி உண்டாக்கும் பழக்கமும் உண்டு. ஒரு பறவை இப்படி அலகால் மரத்தில் தட்டும்போது அதற்குப் பதில் சொல்வது போல வேறொரு பறவை தூரத்தில் தட்டுவதும் உண்டு.

இனப்பெருக்கம்: காலம்: ஜனவரி முதல் மார்ச் வரை; கூடு: மரங்களில் 14 செ. மீ. விட்டமுள்ள பொந்துகளைக்

குடைந்து முட்டையிடும். வங்குகள் 50 முதல் 60 செ. மீ. ஆழமுள்ளவையாக மரங்களில் 8 முதல் 16 மீட்டர் உயரத்தில் அமைந்திருக்கக் காணலாம். முட்டை : 2 வெண்மை நிறங் கொண்டவை.

263. மஞ்சள் நெற்றிக் கருப்புவெள்ளை மரங்கொத்தி
847. Yellow Fronted Pied or Mahratta Woodpecker
Picoides mahrattensis mahrattensis (Latham)

தோற்றம் : கொண்டைக் குருவியை விடச் சிறியதான இது சுமார் 18 செ. மீ. நீளம் இருக்கும்.

அலகு ஈய நிறம்; விழிப்படலம் சிவப்புத் தோய்ந்த பழுப்பு நிறம். கால்கள் சிலேட் நிறம்.

உடலின் மேற்பகுதி பழுப்புத் தோய்ந்த கருப்பு நிறமாக ஒழுங்கற்றுச் சிதறிக் கிடக்கும் வெண் புள்ளிகளோடு காட்சிதரும். நெற்றியும் உச்சந்தலையும் பழுப்புத் தோய்ந்த மஞ்சள் நிறம். சிறு கொண்டை ஆழ்ந்த சிவப்பு நிறம்; மோவாய், தொண்டை முன் கழுத்து ஆகியன வெண்மை; எஞ்சிய உடலின் கீழ்ப்பகுதிகள் சிவப்புத் தோய்ந்த மஞ்சள் நிறமாக பழுப்புக் கோடுகளோடு காட்சி தரும். வயிற்றில் தெளிவான, பெரிய, ஆழ்ந்த சிவப்புக் கறை காணப்படும். பெண்ணின் தலை முழுதும் பொன்னிறப் பழுப்பாக இருக்கும்.

காணப்படும் இடங்கள் : தென்னிந்தியா முழுதும் மாந்தோப்புக்கள், கள்ளி வேலிகள், சால மரங்கள் ஆகியவற்றைச் சார்ந்து காணலாம். பசுமை மாறாக் காடுகளில் காணப்படுவதில்லை. சமவெளி முதல் மலைகளில் 1500 மீட்டர் உயரம் வரை காணலாம்.

பழக்க வழக்கங்கள் : இணையாகவோ, மூன்று நான்கான குடும்பமாகவோ மற்ற புழுபூச்சி தேடும் பறவைப் பட்டாளங்களுடன் சேர்ந்து திரியக் காணலாம். மரத்தின் கீழ்ப்பகுதியில் பறந்து சென்று அமர்ந்து தாவித் தாவிச் சுற்றி மேலே ஏறும். அலகால் மரத்தைத் தட்டிப் பூச்சிகளை விரட்டிப் பிடிக்கும். அலகால் இற்ற மரத்தைத் தட்டி மரக்கிளைகள் காற்றில் உராய்வது போன்ற ஓசை உண்டாக்கும்.

பூச்சிகள், புழுக்கள், கரையான், எறும்பு இவற்றின் முட்டைகள் ஆகியன முக்கிய உணவு.

க்கிளிக் க்கிளிக் க்கிளிக் எனக் குரல் கொடுக்கும்.

இனப்பெருக்கம்: காலம்: பிப்ரவரி முதல் மே வரை; கூடு: மரங்களில் மற்ற மரங்கொத்திகளைப் போல பொந்து குடையும். முட்டை: 3; வெண்மை நிறம்.

264. பழுப்புத்தலைச் சின்ன மரங்கொத்தி
852. Southern Browncrowned Pygmy Woodpecker
Picoides nanus hardwickii (Jerdon)

தோற்றம்: சிட்டுக் குருவியை விடச் சிறியதான இது சுமார் 13 செ. மீ. நீளம் இருக்கும்.

அலகு கொம்பு நிறமான சாம்பல் நிறம்; விழிப்படலம் வெளிர் எலுமிச்சை மஞ்சள்; கால்கள் ஆழ்ந்த சிலேட் நிறம்.

பழுப்புத் தலைச் சின்ன மரங்கொத்தி

உடலின் மேற்பகுதி ஆழ்ந்த பழுப்பாக வெண் பட்டைகளுடன் காட்சி தரும். உச்சி மஞ்சள் கலந்த பழுப்பு; பின் தலையில் ஆழ்ந்த சிவப்புக் கோடு ஒன்று காணப் படும். கண்ணுக்கு மேல் தெளிவாகத் தெரியும் ஒரு வெள்ளைப்பட்டை கீழே கழுத்தை நோக்கிச் செல்லும். உடலின் கீழ்ப்பகுதி பழுப்புத் தோய்ந்த வெண்மையாகக் கருப்புக் கோடுகளோடு காணப்படும். பெண்ணின் பின் தலையில் ஆழ்ந்த சிவப்புக் கோடு காணப்படாது.

காணப்படும் இடங்கள்: தென்னிந்தியா முழுவதும் அடர்த்தியற்ற காடுகளிலும் மூங்கிற் காடுகளிலும் விளை நிலங்களை அடுத்த தோப்புகளிலும் காணலாம். மலைகளில் 1200 மீட்டர் உயரம் வரை.

பழக்க வழக்கங்கள்: இணையாகவும் தனித்தும், பூச்சி, புழுக்களை வேட்டையாடும் சிறு பறவைப் பட்டாளங்களுடன் (hunting parties) சேர்ந்து திரியக் காணலாம். இதன் செயல்கள் பெரும்பாலும் பசையெடுப்பானின் செயல்களை ஒத்தவை. சிறு மரங்கள் புதர்செடிகள், ஆகியவற்றின் அடி மரங்களின் அடியில் தொத்தித் திரியக் காணலாம். பெரிய மரங்களின் அடி மரங்களில் இது இரை தேடுவதில்லை. மிகச் சிறு கிளைகளில் தொத்தி அலகால் தட்டும். இது பறப்பது சிட்டுக்குருவி பறப்பதை ஒத்திருக்கும்.

மற்ற மரங்கொத்திகளைப் போல எழுந்தும் தாழ்ந்தும் பறக்கும் பழக்கம் இதற்கு இல்லை. காலை வேளைகளில் உயரமரங்களின் கிளைகளில் அமர்ந்து வெயில் காய்ந்தபடி இருக்கக் காணலாம்.

சிறு பூச்சிகளே இதன் முக்கிய உணவு.

க்கிளிக் ர்ர் என ஒன்றோடு ஒன்று தொடர்பு கொள்ளக் குரல் கொடுக்கும்.

இனப்பெருக்கம்: காலம்: பிப்ரவரி முதல் ஜூலை வரை; கூடு: காய்ந்து போன சிறுகிளைகளில் தரையிலிருந்து 2 முதல் 12 மீட்டர் உயரத்தில் 3 செ. மீ. விட்டமுடைய பொந்து குடையும். முட்டை: 3 அல்லது 4. வெண்மையாக பளபளப்போடு காட்சி தரும். ஆணும் பெண்ணும் கூடு அமைத்துக் குஞ்சுகளைப் பேணுவதில் பங்கு கொள்ளும்.

265. கேரள பழுப்புத்தலைச் சின்ன மரங்கொத்தி
853. Kerala Browncrowned Pygmy Woodpecker
Picoides nanus cinercigula (Malherbe)

தோற்றத்திலும் அளவிலும் பழக்க வழக்கங்கள் இனப்பெருக்கம் ஆகியவற்றிலும் முன்னதை ஒத்த இது மைசூர் மாநிலத்தில் குடகிலும் நீலகிரி, பழநி மலைகளிலும், கேரளத்திலும் மட்டும் மலைசார்ந்த காடுகளில் காணப்படுகிறது.

இதன் தலை உச்சி ஆழ்ந்த பழுப்பாக இருப்பதும் உடலின் கீழ்ப்பகுதியில் கோடுகள் தெளிவாக, அழகாக, சற்று வெளிர் கருப்பாக அமைந்திருப்பதுமே வேறுபாடுகள்.

266. இருதய உருக்கறை மரங்கொத்தி
856. Heartspotted Woodpecker
Hemicircus canente (Lesson)

தோற்றம்: சிட்டுக் குருவியைவிடச் சற்றுப் பெரியதான இது சுமார் 16 செ. மீ. நீளமிருக்கும்.

அலகு கொம்பு நிறந் தோய்ந்த பழுப்பு; விழிப்படலம் ஆலிவ் பழுப்பு; கால்கள் பழுப்புத் தோய்ந்த கருப்பு.

நெற்றி, உச்சி, கொண்டை ஆகியன கருப்பு; நெற்றியிலும் உச்சியிலும் வெண் சிறு புள்ளிகளைக் காணலாம்; முதுகு கருப்பு; இறக்கைகளில் வெளிர் மஞ்சள் பட்டைகள் காணலாம். முதுகின் பக்கங்களில் வெளிர் மஞ்சள் நிறத்திடையே இருதய உருவக்

கருப்புக் கறைகள் காணலாம். மோவாய், தொண்டை, முன் கழுத்து, கழுத்தின் பக்கங்கள் ஆகியன மஞ்சள் தோய்ந்த வெண்



இருதய உருக் கறை மரங்கொத்தி

மை நிறம். எஞ்சிய உடலின் கீழ்ப்பகுதிகள் ஆலிவ் கருப்பு நிறம் பெண்ணின் நெற்றியும் உச்சியும் மஞ்சள் தோய்ந்த வெண்மையாக இருக்கும். கொண்டை கருப்பு நிறம். மற்றபடி பெண் தோற்றத்தில் ஆணை ஒத்திருக்கும்.

காணப்படும் இடங்கள்: மேற்குத் தொடர்ச்சி மலை சார்ந்த பகுதிகளில் தேக்கு மூங்கில் மரக் காடுகளிலும் காபித் தோட்டங்களிலும் ஆங்காங்கே காணலாம்.

இருதய உருக் கறை மரங்கொத்தி.

பழக்க வழக்கங்கள் : இரை தேடும் மற்றப் பறவைப் பட்டாளங்களுடன் கலந்து தனித்தோ இணையாகவோ திரியக் காணலாம். சின்ன மரங் கொத்தியைப் போல மரங்களின் சிறு கிளைகளைத் தொற்றி ஏறி இரை தேடும். சிலபோது மரக்கிளைகளில் குறுக்காகக் குருவிகளைப் போல அமர்ந்திருக்கும் இதனை இதன் பெரிய தலையும் வட்டமான வால் முனையும் கொண்டு குருவி இனத்தைச் சேர்ந்த பறவை என முடிவுக்கு வருவோம். மெல்ல மேலும் கீழுமாகத் தாழ்ந்து எழுந்து மரங் கொத்திகளைப் போலவே பறக்கும்.

கரையான், எறும்பு முதலிய பூச்சிகள் இதன் உணவு.

ட்வீ, ட்வீ, ட்வீ என்றும், ட்ச்லிக், ட்ச்லிக், என்றும் பல வகைக் குரல்கள் கொடுப்பதோடு கூட இனப்பெருக்கக் காலத்தில் மற்ற மரங் கொத்திகளைப் போல மரங்களில் அலகால் தட்டவும் செய்யும்.

இனப்பெருக்கம் : காலம் : நவம்பர் முதல் ஏப்ரல் வரை; கூடு : காய்ந்த மரக்கிளைகளில் 5 செ. மீ. விட்டமுடைய பொந்து குடையும். ஆழம் 15 முதல் 20 செ. மீ. வரை இருக்கும். முட்டை 3 அல்லது 2; வெண்மை நிறம்.

267. கருமுதுகு மரங்கொத்தி
858. Indian Blackbacked Woodpecker
Chrysocolaptes festivus festivus (Boddaert)

தோற்றம் : புறாவைவிடச் சிறிய இதன் நீளம் 29 செ, மீ.

உச்சந்தலையும் கொண்டையும் ஆழ்ந்த சிவப்பு நிறம். கழுத்தின் இரு பக்கங்களிலும் காணப்படும் வெண்மை முதுகு நோக்கிச் சென்று மேல் முதுகில் இணைந்து V போன்ற தோற்றம் தரும். கீழ் முதுகும் வாலும் கருப்பு நிறம். இறக்கைகள் பொன்னிறம் தோய்ந்த ஆலிவ் நிறம். உடலின் கீழ்ப்பகுதியான கன்னங்கள், மோவாய், தொண்டை. முன் கழுத்து ஐந்து நெடுக்குக் கருப்புக் கோடுகளோடு கூடிய செம்மஞ்சள் தோய்த்த வெள்ளை நிறம். மார்பும் வயிறும் மஞ்சள் தோய்ந்த வெள்ளை நிறம். மார்பின் தூவிகள் கருப்பு விளிம்பு பெற்று மார்பில் செதில்கள் அமைந்தது போன்ற தோற்றத்தை உண்டாக்கும். பெண் தோற்றத்தில் ஆணை ஒத்து உச்சந்தலையும் கொண்டையும் மட்டும் பொன்னிற மஞ்சளாக (ஆழ்ந்த சிவப்பிற்குப் பதிலாக) இருக்கும்.

காணப்படும் இடங்கள் : தென்னிந்தியா முழுவதும் இலையுதிர் காடுகளிலும், புதர்களிலும், மரங்கள் விரவிய காடுகளிலும் காணலாம்.

பழக்க வழக்கங்கள் : தனித்தும், இணையாகவும் திரிந்து மரங்களில் அலகால் தட்டியும், தரையிலும் இரை தேடும். காட்டுத் தீ மூட்டி எரித்த புல் நிலங்களில் இவை விரும்பித் திரியக் காணலாம். இனப்பெருக்கம் செய்யாத காலங்களில் இரவில் முன்பு குடைந்த பழைய மரப் பொந்துகளில் தங்கும்.

எறும்புகளும், மரத்தைத் துளைக்கும் வண்டுகளும் இதன் முக்கிய உணவு,

பொன் முதுகு மரங் கொத்தியினைப் போலச் சிரிக்கும் குரலில் கிறீச் எனக் கத்தும்.

இனப்பெருக்கம் : காலம் : நவம்பர் முதல் ஏப்ரல் வரை; கூடு ; மற்ற மரங் கொத்திகளைப் போல. முட்டை : 1 அல்லது 2 ; வெண்மையாக இருக்கும்.

268. தெற்கத்திய பெரிய பொன்முதுகு மரங்கொத்தி
862. Southern Large Goldenbacked Woodpecker
Chrysocoloptes lucidus chersonesus (Kloss)

தோற்றம் : புறாவை விடப் பெரியதான இது சுமார் 31 செ.மீ. நீளமிருக்கும்,



தெற்கத்திய பெரிய பொன் முதுகு மரங்கொத்தி

அலகு கொம்பு நிறமான பழுப்பு ; விழிப்படலம் வெளி வட்டம் சிவப்பு, உள் வட்டம் கிரீம் இளஞ் சிவப்பு நிறம் ; கால்கள் கருஞ் சாம்பல் நிறம் தோய்ந்த பசுமை.

உச்சந்தலை கொண்டையும் ஆழ்ந்த சிவப்பு நிறம். பிடரியும் பின் கழுத்தும் வெள்ளை ; முதுகும் தோள்பட்டையும் பொன் நிறந் தோய்ந்த ஆலிவ் நிறம் ; பிட்டமும் ஆழ்ந்த சிவப்பு ; வால் மேல் போர்வை இறகுகளும் வாலும் கருப்பு நிறம். கன்னங்களும் மோவாயும் வெண்மை நிறம். கன்னங்களின் மீது இரு கருப்புச்

கோடுகள் தொடங்கி அவை தொண்டையின் பக்கங்களில் சேரக் காணலாம். மோவாய் முன் கழுத்து வழியாக அகன்ற கருப்புக் கோடு செல்லக் காணலாம். பெண் தோற்றத்தில் ஆணை ஒத்திருக்கும் எனினும் உச்சந்தலையும் கொண்டையும் மட்டும் கருப்பாக வெண்புள்ளிகளோடு காட்சி தரும்.

காணப்படும் இடங்கள்: மேற்குத் தொடர்ச்சி மலை சார்ந்த பகுதிகளில் பசுமை மாறாக் காடுகளிலும் புதர்க் காடுகளிலும், சிறு காடுகளிலும் காணலாம். கடற்கரையை ஒட்டிய பகுதிகளில் காணப்படுவதில்லை.

பழக்க வழக்கங்கள்: இரைதேடி இணையாகப் பறந்து திரியும். மரத்திற்கு மரம் வேகமாகச் சப்தம் இட்டபடி பறக்கும். அடிமரத்தில் இறங்கி மேல் நோக்கித் தாவித் தொற்றி ஏறும் மற்ற மரங்கொத்திகளைப் போலத் தரையில் இறங்குவதில்லை. மரங்களின் பின் திறமையாக மறைத்துக் கொள்ளும் இதனைக் கண்டு கொள்வது கடினம். மரங்களின் பின்னாலிருந்து தலையையும் கழுத்தையும் மட்டும் காட்டும் இதனைக் கன்னங்களில் காணப்படும் வெண்கோடுகளைக் கொண்டு அடையாளம் காணலாம்.

பூச்சிகளும் அவற்றின் முட்டைகளும் முக்கிய உணவு.

அலறும் குரலில் சிரிப்பது போலக் கத்தும்.

இனப்பெருக்கம்: காலம்: டிசம்பர் முதல் மார்ச் வரை; கூடு: மரங்களில் தரையிலிருந்து 2 முதல் 20 மீட்டர் உயரத்தில் 8 செ.மீ. விட்டமுள்ள நீள் வட்டமான துளையோடு கூடிய பொந்து குடையும். பொந்து முதலில் நீள வாக்கில் சென்று பின் கீழ் நோக்கித் திரும்பி 30 செ. மீ. வரை ஆழ்ந்து செல்லும். முட்டை: 1 மட்டும்; அபூர்வமாக 2; வெண்மையாக இருக்கும்.

வரிசை : பேஸ்ஸரிஃபார்மிஸ்

Order: Passeriformes

Family: Pittadae

ஆறுமணிக்குருவிகள்

(PITTAS)

269. ஆறுமணிக் குருவி

367. Indian Pitta

Pitta brachyura brachyura (Linnaeus)

தோற்றம் : காடை அளவுள்ள இது சுமார் 19 செ. மீ. நீளம் இருக்கும்.

அலகு ஆரஞ்சு தோய்ந்த பழுப்பு நிறம் ; விழிப்படலம் பழுப்பு; கால்கள் இளஞ்சிவப்பு ஊன் நிறம்.

தலை ஆலிவ் பழுப்பு நிறம் ; அலகிலிருந்து கண்கள் வழியாகப் பிடரி நோக்கிக் கரும்பட்டைக் கோடுகள் செல்லக் காணலாம். வெண்புருவக் கோடுகள் கண்களுக்கு மேல் பிடரி நோக்கிச் செல்லும். முதுகு, தோள் பட்டை, இறக்கைப் போர்வைச் சிறகுகள் பிட்டம் ஆகியன வெளிர் நீலந் தோய்ந்த பசுமை ; வால் போர்வை இறகுகளும் தோள் பட்டையில் ஒரு பகுதியும் நல்ல நீலம், வால் கருப்பாக நீல முனையுடன் காட்சி தரும் ; இறக்கைகளில் காணப்படும் வெள்ளைப் பட்டை பறக்கும்போது சிறு வட்டமாகத் தெரியும் மோவாய், தொண்டை, கழுத்தின் பக்கங்கள் ஆகியன வெண்மை. மார்பும் மார்பின் பக்கங்களும் பழுப்புத் தோய்ந்த மஞ்சள் நிறம். வயிறு வாலடி, வால் கீழ் போர்வை இறகுகள் ஆழ்ந்த சிவப்பு; ஆணும் பெண்ணும் ஒன்று போல.

காணப்படும் இடங்கள்: தென்னிந்தியா முழுதும் குளிர் காலத்தில் மிகுதியும் காணலாம். அக்டோபர் முதல் ஏப்ரல் வரை இலங்கைக்கு வலசை செல்லும் இது தமிழ் நாட்டின் கிழக்குக்கரை சார்ந்த பகுதிகளில் மிகுதியாக அக்காலததில் காணப்படுகிறது. சில பறவைகள் ஆண்டு முழுதும் தங்கியிருக்கக் காணலாம்.

பழக்க வழக்கங்கள்: எப்பொழுதும் தரையிலேயே நீர்க்கோழி களைப் போலத் திரியும் இது இரவில் தாழ்ந்த மரக்கிளைகளில் சென்று அடையும். தரையில் காய்ந்து உதிர்ந்த சருகுகளுக் கிடையே ஓடியாடி அலகால் ஈரமண்ணைக் கிளறிப் பூச்சிகளையும் அவற்றின் முட்டைகளையும் உண்ணும். ஆள் அரவம் கேட்ட வுடன் இறக்கையடித்தபடி தாவிப் பறந்து ஏறி மரக்கிளையில் அமர்ந்து கொள்ளும். அப்பொழுது அதனுடைய குறுகிய வால் மட்டும் அசைவதைக் காணலாம்.

புழுபூச்சிகள், பூச்சிகளின் முட்டைகள் ஆகியவை இதன் உணவு. கிராமப்புறங்களில் மனிதர் மலத்தையும் தின்பது உண்டு.

'வீஇஇட்-ட்டீஇயு' என இரட்டை அசை குரலில் காலை மாலை வேளைகளில் கத்தும். மேக மூட்டமான நாள்களில் பகல் முழுதும் இப்படிக் கத்தக் கேட்கலாம்.

இனப்பெருக்கம்: காலம்: மே முதல் ஆகஸ்ட் வரை. கூடு: இலை, தழை, புல், வேர் முதலியவற்றால் பந்துபோல கூடு கட்டும். முட்டை: 4 முதல் 6 வரை சீனக் களிமண் வெண்மையாக இருக் கும். வட இந்தியாவில் இனப்பெருக்கம் செய்யும் இது தென்னிந் தியாவில் இனப்பெருக்கம் செய்வதற்கான சான்றுகள் இல்லை.

Family: Alaudidae

வானம்பாடிகள்
(LARKS)

270. சிலோன் புதர் வானம்பாடி
874. Ceylon Bush-Lark
Mirafra assamica affinis (Blyth)

தோற்றம்: சிட்டுக்குருவி அளவுள்ள இது சுமார் 5 செ. மீ. நீளம் இருக்கும்.

அலகு கொம்பு நிறமான பழுப்பு; விழி படலம் பழுப்புத் தோய்ந்த வைக்கோல் நிறம்; கால்கள் பழுப்புத் தோய்ந்த ஊன் நிறம்.

தோற்றத்தில் பெண் சிட்டுக் குருவியை ஒத்த இதன் உடலின் மேற்பகுதி கருஞ்சிவப்புத் தோய்ந்த சாம்பற் பழுப்பாகக் கருங் கோடுகளோடு காட்சி தரும். மோவாயும் தொண்டையும் வெண்மை நிறம். கண்ணுக்கு மேல் சிவப்புத் தோய்ந்த மஞ்சள் நிறப் புருவம் இருக்கும். பறக்கும்போது இறக்கைகளின் செம் பழுப்புத் தெளிவாகத் தெரியும். மார்பும் வயிறும் சிவப்புத் தோய்ந்த மஞ்சளாகக் கரும்பழுப்பு முக்கோண வடிவப் புள்ளிகளு டன் இருக்கும்.

காணப்படும் இடங்கள்: தென்னிந்தியா முழுவதும் விளை நிலங் களைச் சார்ந்த புதர்காடுகள் மேய்ச்சல் நிலங்கள், குன்று சார்ந்த செஞ்சரள் கற்களோடு கூடிய மேட்டு நிலங்கள் ஆகியவற்றில் காணலாம்.

பழக்க வழக்கங்கள் : வானம்பாடி என்ற பெயருக்கு ஏற்ப இது மென்குரலில் ட்ரீஇ-ரீ-ரீ-ரீ எனக் கத்தியபடியே உயர மேலே செங்குத்தாக முப்பது அடி வரை இறக்கை அடித்து எழுந்து பறந்து பின் இறக்கையை V வடிவில் மேல் நோக்கி விரித்தபடி நேரே கீழே இறங்கிப் புதர்ச்செடிகளின் மீதோ, வரப்பின் மீதோ, கல்லின் மீதோ அமரும். மீண்டும் மறுபடியும் பாடியபடி உயர் எழுந்து பின் தாழ வரும். மேலே சென்று பின் கீழ் இறங்க ஆகும் காலம் 20 விநாடிகள். இனப்பெருக்க காலத்தில் ஆண் பறவை நாள் முழுதும் இப்படிப் பாடி எழுந்து வீழ்ந்தபடி இருக்கக் காணலாம். உயரச் சென்ற பின் வ்வீ...சீஇ வ்வீ...சீஇ எனச் சீழ்க்கைக் குரலில் பாடும். பிற பழக்க வழக்கங்கள் மற்ற வானம் பாடிகளைப் போன்றனவே.

புழுபூச்சிகளோடு தானியங்களையும் உணவாகக் கொள்ளும்.

இனப்பெருக்கம் : காலம் : ஏப்ரல் முதல் ஜூன் வரை; கூடு: புல்லால் உருண்ட கோப்பை வடிவக் கூட்டினைப் புதர்கள் மறை வில் தரையில் அமைக்கும். முட்டை : 3 அல்லது 4, சாம்பல் நிற வெண்மையாகப் பல நிறப் பழுப்புக் கறைகள் மிக்கிருக்கக் காண லாம்.

271. கருவயிற்று வானம்பாடி

878. Blackbellied Finch-Lark

Eremopterix grisea (Scopoli)

தோற்றம் : சிட்டுக் குருவியை விடச் சற்றுச் சிறிய இது சுமார் 14 செ. மீ. நீளம் இருக்கும்.

பருத்த அலகு சாம்பல் நிறந் தோய்ந்த வெண்மை; விழிப் படலம் பழும்பு; கால்கள் பழுப்புத் தோய்ந்த ஊன் நிறம்.

ஆண்: தலை உச்சி சாம்பல் நிறம்; கன்னங்கள் வெண்மை; கண் வழியாகக் கருங்கோடு செல்லக் காணலாம். உடலின் மேற் பகுதி மணற் பழுப்பாக இருக்கும். மார்பும் வயிறும் பழுப்புத் தோய்ந்த கருப்பு நிறம். பெண்: பெண் சிட்டுக் குருவியைப் போல ஆழ்ந்த நிறங்களன்றி மேலும் கீழும் மணற் பழுப்பாக இருக்கும்.

காணப்படும் இடங்கள்: தென்னிந்தியா முழுதும் விளை நிலங் களையும் மேய்ச்சல் நிலங்களையும் சார்ந்து காணப்படும். கடற்கரை சார்ந்த மணற்பாங்கான புல்நிலங்களில் மிகுதியும் காணலாம்.

பழக்க வழக்கங்கள்: தரையில் ஓடியாடி இரை தேடும். பாதை ஓரப் புழுதியில் காலை நேரங்களில் இணையாகவும் சிறு கூட் டமாகவும் திரிந்து இரைதேடக் காணலாம். இனப்பெருக்கக் காலத்தில் ஆண் சுமார் 30 மீட்டர் உயரம் வரை செங்குத்தாக மேலெழுந்து பின் நேரே கீழே இறங்கும். அப்போது மென்மை யான இனிய குரலில் கத்தும். திடீரெனத் திரும்பித் திரும்பி மேலும் கீழுமாக எழுந்து வீழ்ந்து பறக்கும்.

புல்விதை, தானியங்கள், பூச்சிகள் முதலியன இதன் உணவு.

வீஇஇச்; வீஇஇச் என நீட்டி முழக்கி மென்மையான குரலில் கத்தும்.

இனப்பெருக்கம்: காலம்: ஆண்டு முழுதும் பொதுவாக; டிசம்பர் முதல் மே வரை சிறப்பாக; கூடு: புல், மயிர் முதலியவற் றால் சிறிய தட்டு வடிவிலான கூட்டினைத் தரையில் குழியான பகுதி யில் அமைக்கும். முட்டை: 2 அல்லது 3; மஞ்சள் தோய்ந்த வெண்மையாகப் பழுப்புப் புள்ளிகளோடும் கறைகளோடும் காட்சி தரும்.

272. கருஞ்சிவப்பு வானம்பாடி

886. Rufous Short-Toed Lark

Calandrella cinerea dukhunensis (Sykes)

தோற்றம்: சிட்டுக்குருவியின் அளவுள்ள இதன் நீளம் சுமார் 15 செ. மீ.

அலகு கொம்பு நிறமான பழுப்பு; விழிப்படலம் வெளிர் செம் பழுப்பு; கால்கள் பழுப்புத் தோய்ந்த ஊன் நிறம்.

உடலின் மேற்பகுதி சாம்பற் பழுப்பாகக் கரும்பழுப்புக் கோடுகளோடு காட்சி தரும். கழுத்தின் பக்கங்கள் வெளிர் பழுப்பாக இருக்கும். உடலின் கீழ்ப்பகுதி மஞ்சள் தோய்ந்த பழுப்பாக வயிறு சற்று ஆழ்ந்த நிறங் கொண்டதாகக் காணப்படும்.

காணப்படும் இடங்கள்: குளிர்காலத்தில் வடக்குக் கேரளா மைசூர் வடக்கு ஆந்திராப் பகுதிகளுக்கு லடாக் திபேத் பகுதிகளிலிருந்து வலசை வருகிறது. ஆங்காங்கே ஓரளவு காணலாம்.

பழக்க வழக்கங்கள்: கூட்டமாகப் புல் நிலங்களில் பரவலாக அமர்ந்து மேயக் காணலாம். நீர்நிலைகளில் காலை நேரங்களில் நீர் குடிக்கக் கூட்டமாக வரக் காணலாம்.

புல் விதைகளே முக்கிய உணவு.

இனப்பெருக்கம்: திபேத் லடாக் பகுதிகளில்.

273. மலபார் கொண்டை வானம்பாடி
901. Malabar Crested Lark
Galetida malabarica (Scopoli)

தோற்றம்: சிட்டுக்குருவி அளவுள்ள இதன் நீளம் சுமார் 17 செ. மீ.

அலகு கொம்பு நிறமான பழுப்பு; விழிப்படலம் வெளிர் செம் பழுப்பு; கால்கள் பழுபபுத் தோய்ந்த ஊன் நிறம்.

தலையில் கூர்மையான நீண்ட கொண்டையோடு கூடிய இதன் உடலின் மேற்பகுதி கருங்கோடுகளோடு கூடிய கருஞ்சிவப்புத் தோய்ந்த பழுப்பாக இருக்கும். மார்பு கருங்கோடுகளோடு கூடிய வெளிர் கருஞ்சிவப்பாக இருக்கும் வயிறு கறைகளின்றிச் சற்று வெளுத்துக் காணப்படும்.

காணப்படும் இடங்கள்: மேற்குத் தொடர்ச்சி மலை சார்ந்த கேரளா, மைசூர். நீலகிரிப் பகுதிகளிலும் அதனை ஒட்டிய பீடபூமிப் பகுதிகளிலும் விளை நிலங்களைச் சார்ந்த புல்நிலங்களிலும் மலைச் சரிவில் புல்வெளிகளிலும் காணலாம். மலைகளில் 1800 மீட்டர் உயரம் வரை காணப்படும்.

பழக்க வழக்கங்கள்: தனித்தும் சிறு கூட்டமாகவும் காணப்படும் இது இனப்பெருக்கக் காலத்தில் புதர்களில் உயர அமர்ந்து டீஇ-ஷர், டீஇ-ஷர் எனப் பாடுமேயன்றி மற்ற வானம்பாடிகளைப்

போல உயரப் பறந்து பாடாது. சுற்றிச் சுற்றி சற்று உயரமாக எழுந்து பறக்கும்போது ஓரிரு முறை குரல் கொடுப்பதுண்டு.



மலபார் கொண்டை வானம்பாடி

புல்விதைகளும் பூச்சிகளுமே முக்கிய உணவு.

இனப்பெருக்கம்: காலம்: ஜனவரி முதல் ஏப்ரல் வரை; கூடு: தரையில் குழிவான பகுதியில் புல்லால் கோப்பை வடிவான கூட்டினை புல்புதர் அருகிலோ கற்பாறை ஓரங்களிலோ அமைக்கும். முட்டை: 2 அல்லது 3; மஞ்சள் தோய்ந்த கிரீம் நிறத்தில் பலவிதப் பழுப்புநிறப் புள்ளிகளும் கறைகளும் கொண்டிருக்கும்.

274. தெற்கத்திய கொண்டை வானம்பாடி

902. Syke's Crested Lark

Galerido deva (Sykes)

அளவில் முன்னதை விடச் சற்றுச் சிறியது. இதன் மார்பில் காணப்படும் கோடுகள் தடிப்பின்றி முன்னதைப் போல ஆழ்ந்த நிறங்கொண்டனவாக இராமல் சற்று மங்கிக் காணப்படும். தென்னிந்தியா முழுவதும் காணப்படும் இது தென் கேரளத்திலும் மேற்குத் தொடர்ச்சி மலை சார்ந்த பகுதிகளிலும் மிகுதியும் காணப்படாமல் தென்னிந்தியாவின் கிழக்குப் பகுதிகளில் மிகுதியாகக் காணப்படுவது. மற்றபடி தோற்றமும் பழக்க வழக்கங்களும் இனப்பெருக்கமும் முன்னதைப போன்றனவே.

275. நீலகிரி சின்ன வானம்பாடி

908. Nilagiri Small Skylark

Alauda gulgula australis (Brooks)

தோற்றம்: சிட்டுக்குருவி அளவுள்ள இது சுமார் 15 செ. மீ. நீளம் இருக்கும்.

அலகு கொம்பு நிறமான பழுப்பு; விழிப்படலம் வெளிர் செம் பழுப்பு; கால்கள் பழுப்புத் தோய்ந்த ஊன் நிறம்.

சிவப்புத் தோய்ந்த மஞ்சள் நிறமான இதன் உடலின் மேற் பகுதியில் தடித்த கருத்த கோடுகள் காணலாம். இதன் புறவால் இறகுகள் வெண்மையாக இருக்கும். இதன் பொதுத் தோற்றம் நெட்டைக் காலியின் தோற்றத்தை ஒத்தது எனினும் பருத்த தோற்றமும் குறுகிய வாலும் கொண்டு இதனை எளிதாக் வேறு படுத்தி அறியலாம்.

காணப்படும் இடங்கள்: மேற்குத் தொடர்ச்சி மலை சார்ந்த பகுதிகளை ஒட்டிய விளை நிலங்களையும் புல்வெளியான மலைப் பள் ளத்தாக்குகளிலும் எங்கும் காணலாம். (வடக்கு மைசூர், ஆந்திரா தமிழ்நாடு முதலான பகுதிகளில் A. G Gulgula என்ற சிறப் பினம் இதற்குப் பதிலாகக் காணப்படுகிறது.)

பழக்க வழக்கங்கள்: இணையாகவும் சிறு கூட்டமாகவும் புல் வெளிகளிடையே ஓடியாடி இரைதேடக் காணலாம். உயரப் பறந்து ஆண் பறவை இறக்கை அடித்தபடி வானில் மிதந்து தொடர்ந்து பத்து நிமிடங்கள் வரை இனிமையான குரலில் பாடும் இயல்புடையது. ஆண்டு முழுதும் இப்படிப் பாடுமேனும் இனப் பெருக்கக் காலத்தில் அடிக்கடி இப்படி வானில் மிதந்து பாடக் கேட் கலாம். அவ்வாறு பாட மிக உயரச் செல்லும் இது ஒரு புள்ளி போலத் தோற்றம் தந்து பின் அவ்வளவு உயரத்திலேயே இறக்கை அடித்தபடி மிதந்து பாடக் கேட்கலாம்.

ஈரமிகுந்த புல்வெளிகளிலும் குளங்கள் வாய்க்கால் கரைகள் ஆகியவற்றைச் சார்ந்த பகுதிகளிலும் பூச்சி புழுக்களைப் பிடித்துத் தின்பதோடு புல்விதைகளையும் உண்ணும்.

இனப்பெருக்கம்: காலம்: நவம்பர் முதல் மே முடிய; கூடு: சிறு புதர்கள் புல்தூறுகள் ஆகியவற்றின் ஓரமாகத் தரையின் குழி யில் புல்லால் கோப்பை போலக் கூடமைக்கும். முட்டை: 2 முதல் 4 வரை; மஞ்சள் தோய்ந்த வெண்மையாக ஊதாப் பழுப்பான கறைகளோடும் புள்ளிகளோடும் காட்சி தரும்.

276. கருஞ்சிவப்பு வால் வானம்பாடி
Rufous tailed Finch-Lark
Ammomanes phoenicurus phoenicurus (*Franklin*)

தோற்றம்: சிட்டுக்குருவியை விடச் சற்றுப் பெரிய இது சுமார் 16 செ. மீ. நீளமிருக்கும்.

அலகு கொம்பு நிறமாக அடிப்பகுதி ஊன் நிறமாக இருக்கும். விழிப்படலம் பழுப்பு; கால்கள் வெளிர் பழுப்பு நிறம்.

உடலின் மேற்பகுதி பழுப்பாகச் சற்றுச் சிவப்புத் தோய்ந்து காணப்படும். பிட்டம், வாலடி, இறக்கைகளின் உள் இறகுகளும் கருஞ்சிவப்பாக இருக்கும். இறக்கையின் பிற இறகுகளும் வால் முனையும் ஆழ்ந்த பழுப்பாக இருக்கும். மோவாயும் தொண்டையும் வெளிர் கருஞ் சிவப்பு நிறம். மார்பும் வயிறும் கருஞ்சிவப்பாக இருக்கும். மார்பில் ஆழ்ந்த பழுப்புக் கோடுகளைக் காணலாம்.

காணப்படும் இடங்கள்: கேரளம் நீங்கலாகத் தென்னிந்தியா முழுதும் வறண்ட மணற்பாங்கான பகுதிகளில் காணலாம். புதர் காடுகள் விளைநிலங்கள் ஆகியவற்றைச் சார்ந்து ஆங்காங்கே திரியக் காணலாம்.

பழக்க வழக்கங்கள்: இணையாகவும் சிறு கூட்டமாகவும் திரியும் இது தரையில் குறுக்கு மறுக்குமாக ஓடியாடி இரைதேடும். நெல் முதலான தானியங்களோடு புல்விதைகளையும் உணவாகக் கொள்ளும் இது வானில் பாய்ந்து பாய்ந்து உயரப் பாடியபடியே எழுந்து பறந்து திரியும். இச் செயல் பெரிதும் கருப்பு வயிற்று வானம்பாடியின் செயலை ஒத்திருக்கும்.

இனப்பெருக்கம்: காலம்: மார்ச் முதல் ஜூன் முடிய; கூடு: தரையில் குழிவில் மற்ற வானம்பாடிகளைப் போலவே புல்லால் கோப்பை வடிவிலான கூடு அமைக்கும். முட்டை: 3 அல்லது 4; கிரீம் வெண்மையாக செம்பழுப்புப் புள்ளிகள் கறைகளோடு காட்சி தரும்.

Family : Hirundinidae

தகைவிலான்களும்
நெடும்பாறைத் தகைவிலான்களும்
(SWALLOWS AND MARTINS)

இந்தக் குடும்பத்தைச் சேர்ந்த பறவைகள் பெரும்பாலும் சிட்டுக் குருவி அளவுடையனவாகவோ. சற்றுச் சிறியனவாகவோ

பருத்த தோற்றம் கொண்டிருக்கும். இவை சுமார் 12 முதல் 15 செ. மீ. நீளம் உள்ளவை. இவற்றின் விழிப்படலம் பழுப்பாக வும் அலகு கரும்பழுப்பாகவும் கால்கள் கொம்பு நிறமான கரும்பழுப் பாகவும் இருக்கும்.

277. நெடும்பாறைத் தகைவிலான்

913, Crag Martin

Hirundo rupestris (Scopoli)

அடுத்த உள்ளினத்தைவிடச் சற்று வேறுபட்டது. குளிர் காலத்தில் நீலகிரி, மைசூர் மலைப்பகுதிகளில் காணலாம். உடலின் மேல் தோற்றம் சற்று மங்கியும் அடிப்பகுதி கருஞ்சிவப்புத் தோய்ந்த வெண்மையாகவும் காணப்படும். சுற்றிச் சுற்றிப் பறந்து பறக்கும் பூச்சிகளைப் பிடித்துத் தின்னும்.

278. புகைக் கருப்பு நெடும்பாறைத் தகைவிலான்

914. Dusky Crag Martin

Hirundo concolor concolor (Sykes)

தோற்றம்: புகைப் பழுப்பான தகைவிலானை ஒத்த இதன் வால் குறுகலாகச் சதுரமாக இருக்கும். மோவாய், தொண்டை, முன் கழுத்து ஆகியன கருஞ் சிவப்புக் கோடுகளோடு கூடிய கரும் பழுப்பாக இருக்கும். வால் இறகுகளில் (நடுவால் இறகும் ஓரே வால் இறகுகளும் நீங்கலாக) வெண் கறைகள் காணலாம்.

காணப்படும் இடங்கள்: தென்னிந்தியா முழுதும் ஆங்காங்கே சிறு மலைகளையும் பெரும் மலைகளையும் அடுத்துக் காணலாம்.

பழக்க வழக்கங்கள்: தகைவிலானோடு மிகுந்த உறவுடைய இது எப்போதும் அவற்றோடு சேர்ந்து திரியக் காணலாம். பறந்து பூச்சிகளை வேட்டையாடும் இது பாறைகளில் துருத்திக் கொண் டிருக்கும் விளிம்புகளில் அமர்ந்து ஓய்வு கொள்ளும். பறக்கும் போதும் உட்கார்ந்திருக்கும் போதும் ச்சிட்-ச்சிட் என மென் குர லில் முனகுவது போலக் கத்தியபடி இருக்கும்.

பறக்கும் பூச்சிகளே இதன் முக்கிய உணவு.

இனப்பெருக்கம்: காலம்: பிப்ரவரி மார்ச் மாதங்களில், கூடு: பாறைகளின் துருத்திக் கொண்டிருக்கும் விளிம்புகளின் அடியில் நீள் வட்டமான தட்டு வடிவில் சேற்று மண்ணால் கூடு அமைத்து

மென்மையான புல்லாலும் இறகுகளாலும் மெத்தெனச் செய்யும்; முட்டை: 2 அல்லது; வெண்மையாக செம்பழுப்பு நிறச் சிறு புள்ளிகளுடனும் கறைகளுடனும் காட்சி தரும்.

279. தகைவிலான்
916. Common Swallow
Hirundo rustica rustica (Linnaeus)

தோற்றம்: உடலின் மேற்பகுதி பளபளக்கும் கரு நீல நிறமாக இருக்கும். உடலின் கீழ்ப்பகுதி இளஞ்சிவப்புத் தோய்ந்த வெண்மையாக இருக்கும். நெற்றியும் தொண்டையும் செம்பழுப்பாக இருக்கும். தொண்டையின் செம்பழுப்பைச் சுற்றி ஒரு கருப்பு வளையம் சூழ்ந்திருக்கும். நன்றாகப் பிளவு பட்ட வால் பறக்கும் போது தெளிவாகத் தெரியும்.

காணப்படும் இடங்கள்: குளிர்காலத்தில் வடக்கே சைபீரியா, ஐரோப்பா முதலான குளிர் பிரதேசங்களிலிருந்து வலசை வருவது. செப்டம்பர் இறுதியில் வரத் தொடங்கி மே மாதத்தில் திரும்புகின்றன. தென்னிந்தியா முழுதும் காணலாம். நீர்வளம் மிக்க பகுதிகளில் பெருங் கூட்டமாகத் திரியும்.

பழக்க வழக்கங்கள்: தரையோடு ஒட்டித் தாழ்வாகப் பறந்தும் உயர வானத்தில் ஒழுங்கற்ற முறையில் வட்டம் சுற்றிப் பறந்தும் பறக்கும் பூச்சிகளைப் பிடித்து உண்ணும். நீரிடையே வளர்ந்துள்ள நாணல் புதர்களில் இரவில் கூட்டமாக அடையும். அக்டோபரில் வலசை வந்தவுடனும் ஏப்ரலில் திரும்பப் புறப்படும் போதும் காலை நேரங்களில் பெரும் கூட்டமாகத் திரண்டு தந்திக் கம்பிகளிலும் மின்சாரக் கம்பிகளிலும் உட்கார்ந்திருக்கக் காணலாம். சில முறை இறக்கை அடித்துப் பின் மிதந்து பறக்கும் இதன் நீண்ட வால் ஏற்றபடி விரைந்து திரும்ப உதவுகிறது.

பறக்கும் பூச்சிகளே முக்கிய உணவு.

இனப்பெருக்கம்: தென்னிந்தியாவிற்கு வெளியே; இந்தியாவில் காஷ்மீரிலும் இமயமலை சார்ந்த பகுதிகளிலும் ஏப்ரல் முதல் ஜூலை வரை இனப்பெருக்கம் செய்கிறது.

280. கிழக்கத்திய தகைவிலான்
917. Eastern Swallow
Hirundo rustica guthutalis (Scopoli)

தோற்றத்திலும் அளவிலும் பழக்க வழக்கங்களிலும் முன்னதை ஒத்த இது அளவில் சற்றுச் சிறியது. குளிர்காலத்தில் வலசை

வந்து தென்னிந்தியா முழுவதும் கூட்டமாகத் திரியக் காணலாம். கடற்கரை சார்ந்த பகுதிகளில் எங்கும் காணலாம். சற்று அளவில் சிறிதாக இருப்பதாலும் தொண்டையின் செம்பழுப்பைச் சுற்றி அமைந்து வளையம் நடுவில் முறிந்திருப்பதாலும் தனி உள்ளின மாகப் பகுக்கப் பட்டுள்ளது.

281. நீலகிரி வீட்டுத் தகைவிலான்
919. Nilagiri House Swallow
Hirundo tahitica domicola (Jerdon)

தோற்றம் : உடலின் மேற்பகுதி பசுமை தோய்ந்த பளபளக்கும் கருப்பாக இருக்கும். நெற்றியில் ஒரு பட்டை, மோவாய், தொண்டை, மேல் மார்பு ஆகியன செம்பழுப்பு நிறமாக இருக்கும்.

காணப்படும் இடங்கள் : மேற்குத் தொடர்ச்சி மலைசார்ந்த பகுதிகளில் 900 மீட்டருக்கு மேற்பட்ட பகுதிகளில் புல் வெளியான மலைப் பக்கங்களிலும் காபி, தேயிலைத் தோட்டங்களிலும் திரியக் காணலாம். ஆண்டு முழுதும் தங்கி வாழ்வது.

பழக்க வழக்கங்கள் : பெரும்பாலும் மற்ற தகைவிலான்களை ஒத்தனவே. காபித் தோட்டங்களில் உள்ள தொழிலாளர் குடியிருப்பையும் அலுவலகங்களையும் சார்ந்து இதனை மிகுதியாகக் காணலாம். மனிதர்களிடம் அச்சமின்றி வீட்டினுள் தாராளமாக வந்து பழகும் இது வீடுகளுக்குள்ளேயே கூடு கட்டுவதும் உண்டு. கூட்டிலிருந்து வெளிப்பட்ட குஞ்சுகளுக்குத் தாய்ப் பறவை ஆகாயத்தில் பறக்கும்போதே இரை ஊட்டும். அப்போது இரு பறவைகளும் வேகமாக இறக்கை அடித்து ஆகாயத்தில் சற்று நேரம் மிதந்தபடி நிற்கக் காணலாம்.

இனப்பெருக்கம் : காலம் : மார்ச் முதல் மே முடிய. கூடு : அரை வட்டமான தட்டு உருவில் சேற்று உருண்டைகளைக் கொண்டு சுவர்களிலும், பாறைகளிலும், பாலங்களின் அடியிலும் கூடு அமைக்கும். ஒரே இடத்தில் இரண்டு மூன்று கூடுகளைக் கூட அருகருகே காணலாம். முட்டை : 2 முதல் 4 வரை ! வெண்மையாக செம்பழுப்புப் புள்ளிகளோடும் கறைகளோடும் காட்டித் தரும்.

282. கம்பிவால் தகைவிலான்
921. Indian Wiretailed Swallow
Hirundo smithii filifera (Stephens)

தோற்றம் : வாலில் நீண்ட இரண்டு கம்பிகளோடு கூடிய இதனை மற்ற தகைவிலான்களிலிருந்து எளிதாகப் பிரித்துணர

லாம். உடலின் மேற்பகுதி பளபளக்கும் கரு நீலமாக இருக்கும். உச்சந்தலையும் நெற்றியும் செம்பழுப்பு நிறம். தொண்டை, மார்பு, வயிறு ஆகியன எல்லாம் நல்ல பளபளக்கும் வெண்மை. பெண்ணின் வாலில் கம்பி சற்றுக் குறுகலாக இருக்கும்.

காணப்படும் இடங்கள்: நீலகிரிக்கு வடக்கே மட்டும் காணப்படுவதாகக் குறித்துள்ளனர். கும்பகோணத்தில் காவிரிக் கரையில் காணப்படுகிறது. கோடிக்கரையில் காணப்பட்டதாக தமிழகப் பறவைகள் வரிசை நூலாசிரியர் திரு. எம். ஏ. பாத்சா குறித்துள்ளார். இதன் தெற்கெல்லையை நீர்வளமிக்க திருச்சி தஞ்சாவூர் மாவட்டங்கள் வரை எனக் கொள்ளலாம்.

பழக்க வழக்கங்கள்: மற்ற தகைவிலான்களைப் போலவே. நீர் வளம் மிகுந்த பகுதிகளைச் சார்ந்தே திரியும்.

இனப்பெருக்கம்: காலம்: ஆண்டு முழுதும்; கூடு: புகை நிறத் தகைவிலான் கூட்டினைப் போல சேற்று மண்ணால் தட்டு வடிவில் நீரின்மேல் தொங்கும் பாறைகள் பாலங்கள் அணைக்கட்டுக் கால்வாய்கள் ஆகியவற்றின் அடியே அமைக்கும். முட்டை: 3 முதல் 5 வரை; வெண்மையாகச் செம்பழுப்புப் புள்ளிகளோடும் கறைகளோடும் காட்சி தரும்.

283: மலைமுடித் தகைவிலான்
922. Indian Cliff Swallow
Hirundo fluvicola (Blyth)

தோற்றம்: இதன் உடலின் மேற்பகுதி பளபளக்கும் கரு நீலமாக இருக்கும். தலையுச்சியும பிடரியும் சற்றுச் செம்பழுப்பாக இருக்கும். உடலின கீழ்ப்பகுதி வெண்மை. தொண்டையிலும் மேல் மார்பிலும் பழுப்புநிறக் கோடுகள் காணலாம்.

காணப்படும் இடங்கள்: ஆண்டு முழுதும் தங்கி வாழும் இது கோயமுத்தூர் வரை தெற்கே காணப்படுகிறது வடக்குத் தமிழ் நாடு ஆந்திரா, மைசூர்ப் பகுதிகளில் நீர்வளமிக்க இடங்களைச் சார்ந்து காணலாம் கூட்டமாகத் திரியும்.

பழக்க வழக்கங்கள்; முன் கண்ட தகைவிலான்களைப்போல.

இனப்பெருக்கம்: காலம்: ஜனவரி முதல் மார்ச் வரையிலும் பின் ஜூலை முதல் அக்டோபர் வரை. கூடு: பாறைகள், பாலங்கள் ஆகியவற்றின் கீழ் மண்ணால் தட்டு வடிவில் அமைத்து நீண்ட நுழைவாயிலும் அமைக்கும். முட்டை: 3; வெண்மையாக மஞ்சள் தோய்ந்த பழுப்புப் புள்ளிகளோடு காட்சி தரும்.

284. சிவந்த பிட்டத் தகைவிலான்

927. Sykes's Striated or Redrumped Swallow

Hirundo daurica erythropygia (Sykes)

தோற்றம்: உடலின் மேற்பகுதி பளபளக்கும் ஆழ்ந்த நீல நிறம். பிடரியில் செம்பழுப்புப் பட்டைக் கறை காணலாம். பிட்டம் சிவந்த பழுப்பு நிறமாக இருக்கும். பறக்கும்போது பிட்டத்தின் செம்பழுப்பு நன்றாகப் புலனாகும். வால் நன்றாகப் பிளவுபட்டிருக்கும். உடலின் கீழ்ப்பகுதி செம்மை தோய்ந்த வெண்மையாகச் சிறு கரும் பழுப்புச் கோடுகள் நிறைந்து காணப்படும்.

காணப்படும் இடங்கள்; தென்னிந்தியா முழுதும் காண லாம். குளிர் பருவத்தில் மிகுதியும் மற்றப் பருவங்களில் ஓரளவும் காணலாம்.

பழக்க வழக்கங்கள்: மற்றத் தகைவிலான்களைப் போன்றதே. உழவாரக் குருவி, புகைக் கருப்புத் தகைவிலான் ஆகியவை களோடு சேர்ந்து மலைப் பக்கங்களிலும் பள்ளத்தாக்குகளிலும் திரியும்.

இனப்பெருக்கம்: காலம்: பிப்ரவரி முதல் ஏப்ரல் வரை; கூடு: வீட்டு முற்றம், பாலங்கள், பாறையின் அடிப்பக்கம் ஆகிய வைகளில் மண் உருண்டைகள் கொண்டு கோப்பை போலக் கூடு அமைத்து நீண்ட நுழைவாயிலும் அமைக்கும். முட்டை: 3 அல்லது 4; வெண்மையாக எத்தகைய கறைகளும் இன்றிக் காணப் படும். ஆணும் பெண்ணும் கூடு கட்டுவதிலும் அடை காப்பதிலும் குஞ்சுகளைப் பேணுவதிலும் பொறுப் பேற்கும்.

Family : Laniidae

கீச்சான்கள்
(SHRIKES)

285. செம்பழுப்பு முதுகுச் கீச்சான்

940. Baybacked Shrike

Lanius vittatus vittatus (Valenciennes)

தோற்றம்: கொண்டைக்குருவி அளவுள்ள இது சுமார் 19 செ. மீ. நீளமிருக்கும்.

அலகு கருப்பு; விழிப்படலம் பழுப்பு; கால்கள் சிலேட் பழுப்பு நிறம்.

பருத்த தலையும் வளைந்த பெரிய அலகும் நீண்டு குறுகிய வாலும் உடைய இதன் நெற்றியும் கண் பட்டையும் கருப்பாக இருக்கும். உச்சந்தலை வெண்மை; பிடரி கருஞ்சாம்பல் நிறம்; மேல் முதுகு கருஞ்சாம்பல் நிறங்கலந்த வெண்மை; தோள்பட்டையும் நடுமுதுகும் செம்பழுப்பு நிறம்; வாலும் இறக்கைகளும் கருப்பு நிறம்; மார்பு சிவப்புத் தோய்ந்த பழுப்பு; வயிறு வெண்மை.

காணப்படும் இடங்கள்: உணவு நிலைக் கேற்ப அண்டை அயல் பகுதிகளுக்கு வலசை போகும் இதனைத் தென்னிந்தியா வெங்கும் ஆங்காங்கே, முள்மரங்களோடு கூடிய இலையுதிர்காடுகளிலும், வேலிகளிலும் காணலாம்.

பழக்க வழக்கங்கள்: தனித்துப் புதர்களின் உச்சியிலோ மரங்களின் நீண்ட கிளைகளிலோ அமர்ந்து ஊர்ந்து செல்லும் உயிர்களை நோட்டம் விட்டபடி இருக்கும். தக்க இரை கண்டவுடன் உடனே பாய்ந்து பற்றி மீண்டும் மரத்தில் சென்று அமரும். இரையைக் காலில் பற்றி வளைந்த அலகால் கிழித்து விழுங்கும். ஒரு குறிப்பிட்ட பகுதியில் ஒவ்வொரு பறவையும் மற்றப் பறவைகளை அண்ட விடாது தொடர்ந்து அப் பகுதியைத் தனக்குரியதாக ஆக்கிக் கொண்டு வாழும்.

'ச்சோ...ர்' என உரத்த குரலில் கத்தும்.

தத்துக்கிளி, சிள்வண்டு, ஓணான் முதலியன இதன் உணவு'

இனப்பெருக்கம்: காலம்: பிப்ரவரி முதல் மே முடிய கூடு: புல், கிழிந்த துணி, இறகுகள் முதலியவற்றால் கோப்பை வடிவமான கூடு அமைக்கும். வேலியிலோ, சிறு மரங்களிலோ சிலந்தி நூல் கொண்டு கூட்டினைத் தரையிலிருந்து சாதாரண உயரத்தில் அமைக்கும். முட்டை: 3 முதல் 5 வரை; பசுமை தோய்ந்த வெண்மையாக ஊதாப் பழுப்புக் கறைகளோடும் புள்ளிகளோடும் காணப்படும்.

286. தெற்கத்திய கருஞ்சாம்பல் முதுகுக் கீச்சான்

947. Southern Greybacked Shrike

Lanius schach caniceps (Blyth)

தோற்றம்: மைனாவைவிடச் சிறியதாக நீண்ட வாலுடன் காட்சி தரும் இதன் நீளம் 25 செ. மீ.

அலகு கொம்பு நிறமான கருப்பு; விழிப்படலம் பழுப்பு; கால்கள் கருப்புத் தோய்ந்த பழுப்பு.

பெரிய தலையோடும், பருத்த வளைந்த அலகோடும் கூடிய இதனை நீண்ட நுனி நோக்கிக் குறுகிச் செல்லும் வாலைக்கொண்டு எளிதில் அடையாளம் காணலாம்; நெற்றியும் கண் வழியாகச் செல்லும் பட்டையும் கருப்பு நிறம்; தலையும் முதுகும் கருஞ்சாம்பல்



தெற்கத்திய கருஞ்சாம்பல் முதுகுக் கீச்சான்

நிறம். பிட்டம் நல்ல கருஞ்சிவப்பு நிறம்; உடலின் கீழ்ப்பகுதி கருஞ்சிவப்புத் தோய்ந்த வெண்மை நிறம்; வால் கருப்பும் வெளிர் கருஞ்சிவப்பும் கலந்து காணப்படும்; இறக்கைகளில் வெள்ளைத் திட்டுக்கள் (Mirrors) காணலாம்.

காணப்படும் இடங்கள்: தென்னிந்தியா முழுதும் விளை நிலங்கள், மேய்ச்சல் நிலங்கள் ஆகியவற்றைச் சார்ந்து காணப்படும். மலைகளில் 1200 மீ. உயரம் வரை காணலாம். முன்னதைப்போல் வறள் நிலங்களைச் சார்ந்து காணுமல் சற்று நீர்வளம் மிகுந்த பகுதிகளைச் சார்ந்த இலையுதிர் காட்டுச் சூழலில் காணப்படுவது இது.

பழக்க வழக்கங்கள்: பெரும்பாலும் முன்னதைப் போன்றவைகளே. ஓணன், தவளை போன்ற இரைகளைப் பிடித்து முள்ளில் குத்திவைத்திருந்து பின் ஓய்வாக உண்ணும் பழக்கம் உண்டு.

மற்றப் பறவைகளைப் போலக் கத்திக் காட்டும் ஆற்றல் வாய்ந்தது.

இனப்பெருக்கம்: காலம்: மார்ச் முதல் ஜூன் முடிய; கூடு: முள் மரங்களில் தரையிலிருந்து 4 அல்லது 5 மீ. உயரத்திற்குள்ளாகக் குச்சிகள், வேர், புல், மற்றும் பல பொருள்களைக்கொண்டு கோப்பை வடிவான கூட்டினைச் சிறுகிளைகளின் பிரிவில் அமைககும்; முட்டை: 3 முதல் 6 வரை; வெளிர் பசுமை தோய்ந்த வெண்மையாகச் செம்பழுப்புக் கறைகள் நிறைந்து காணப்படும்.

287. பழுப்புநிறக் கீச்சான்

949. Brown Shrike

Lanius cristatus cristatus (*Linnaeus*)

தோற்றம் : கொண்டைக் குருவி அளவுள்ள இது சுமார் 20 செ. மீ. நீளம் இருக்கும்.

மேல் அலகு கொம்பு நிறமான பழுப்பு; கீழ் அலகு ஊன் நிறம் (முனை தவிர;) விழிப்படலம் பழுப்பு; கால்கள் சிலேட் பழுப்பு நிறம்.

கண் வழியாகச் செல்லும் கரும்பட்டைக்கு மேல் நெற்றி சார்ந்த பகுதி வெண்மையாக இருக்கும். மோவாய், கன்னம் தொண்டை ஆகியவையும் வெண்மை. உடலின் மேற்பகுதி கருஞ்சிவப்புத் தோய்ந்த பழுப்பு நிறம். கீழ்ப்பகுதி செம்மஞ்சள் தோய்ந்த வெண்மை; இறக்கைகளில் வெண்பகுதி இதற்குஇல்லை.

காணப்படும் இடங்கள் : குளிர்காலத்தில் தென்னிந்தியாவிற்கு வடக்கு ஆசியாவிலிருந்து வலசை வருவது. பசுமை மாறுக்காடு களிலும், இலையுதிர்காடுகளிலும் காணலாம். காடுகளை அடுத்த திறந்த வெளிகளிலும் திரிவதுண்டு. மலைகளில் 2000 மீ. உயரம் வரை காணலாம்.

பழக்க வழக்கங்கள் : தனித்துக் காலை மாலைகளில் இரை தேடும். மற்றபடி முன்கண்ட கீச்சான்களின் பழக்க வழக்கங் களைக் கொண்டதே.

இனப்பெருக்கம் : இந்தியாவிற்கு அப்பால்.

Family : Oriolidae

மாங்குயில்கள்

(ORIOLES)

288. மாங்குயில்

953. Indian Oriole

Oriolus oriolus kundoo (*Sykes*)

தோற்றம் : மைனா அளவுள்ள இதன் நீளம் சுமார் 25 செ.மீ.

அலகு சிவந்த பழுப்பு; விழிப்படலம் பழுப்புத் தோய்ந்த ஆழ்ந்த சிவப்புக் கால்கள் சிலேட் நிறம்.

இதன் உடல் முழுதும் நல்ல பொன் மஞ்சளாக இருக்கும். இறக்கைகளும் வாலும் கருப்பும் மஞ்சளும் கலந்து இருக்கும். அலகடியிலிருந்து கண் வழியாக சிறிய கரும்பட்டைப் புருவம் செல்லக் காணலாம். பெண் பறவையின் மஞ்சள் நிறம் பசுமை தோய்ந்து மங்கலாகக் காணப்படும்.



மாங்குயில்

காணப்படும் இடங்கள்: தென்னிந்தியா முழுவதும் இதனைக் காணலாம். சில பகுதிகளில் ஆண்டு முழுதும் காணப்படும் இது சில பகுதிகளில் குளிர்காலத்தில் மட்டுமே காணப்படுகிறது. மலைகளில் 1000 மீட்டர் உயரம் வரை காணலாம்.

பழக்க வழக்கங்கள்: எப்பொழுதும் மரங்களின் உயரத்தில் தனித்தோ இணையாகவோ திரியக் காணலாம். அபூர்வமாகப் புதர்களிலும், லாண்டானக்காடுகளிலும் இரைதேடுவதும் உண்டு. அடிக்கடி மரம் விட்டு மரம் பறந்து இரை தேடும். அம்பு போலப் பாய்ந்து பறக்கும். அரசமரங்கள், மாமரங்கள் ஆகியவற்றில் சில சமயங்களில் நான்கைந்து பறவைகளைக்கூட ஒன்ருகக் காணலாம்.

பழங்கள், சிறுபழங்கள், பூச்சிகள் ஆகியவற்ரேடு மலர் மரங்களில் தேனையும் உண்ணும்.

ச்சீஇ-ஆ, ச்சீஇ-ஆ எனக் குரல் கொடுக்கும் இது பீ-லோ-லோ எனக் குழல் ஒலி போலத் தொடர்ந்து கத்தியபடி இருப்பதும் உண்டு. காலை, மாலை நேரங்களில் இது பாடுவதைக் கேட்கலாம்

இனப்பெருக்கம்: காலம்: பிப்ரவரி முதல் ஜூன் வரை; கூடு: புல், வேர், நார் முதலியவற்ருல் இரு சிறு கிளைகளுக்

கிடையே தொட்டில் போலத் தொங்கும் கூட்டினைச் சிலந்தி நூல் முதலியன கொண்டு அமைக்கும். முட்டை : 2 அல்லது 3; வெண்மையாகச் செம்பழுப்புக் கறைகளோடு காட்சி தரும்.

289. கரும்பிடரி மாங்குயில்

954. Indian Blacknaped Oriole

Oriolus chinensis diffuses (Sharpe)

தோற்றத்திலும் அளவிலும் முன்னதை ஒத்த இதன் கண்வழியாக வரும் கருப்புப் புருவங்கள் பின் பக்கமாகக் கருப்பாக நீண்டு பிடரியில் சென்று இருபக்கப் புருவங்களும் இணைந்து கருப்பாகக் காட்சி தரும். மற்றபடி தோற்றத்தில் முன்னதை ஒத்ததே. குளிர்காலத்தில் வடக்கே இருந்து வலசை வரும் இது தென்னிந்தியா முழுவதும் ஆங்காங்கே சமவெளிகளில் காடான பகுதிகளில் தனித்துத் திரியக் காணலாம். தோட்டங்கள், மாந்தோப்புக்கள் முதலியவற்றை விரும்பி வாழும் இது மலைகளில் 500 மீ. உயரத்து மேல ஏறுவதில்லை. பழக்க வழக்கங்கள் முன்னதைப் போலவே. இனப்பெருக்கம் தென்னிந்தியாவிற்கு வெளியே.

290. கருந்தலை மாங்குயில்

959. South Indian Blackheaded Oriole

Oriolus xanthornus maderaspatanus (Pranklin)

தோற்றம் : மைனா அளவுள்ள இதன் நீளம் சுமார் 25 செ. மீ.

அலகு இளஞ் சிவப்பு நிறம்; விழிப்படலம் ஆழ்ந்த சிவப்பு; கால்கள் நீலங்கலந்த பழுப்பு நிறம்.

இதன் தலை நல்ல கருப்பாக இருக்கும் தொண்டையும் மேல் மார்பும் கருப்பு நிறம். வாலிலும் இறக்கைகளிலும் கருப்புப்பகுதி காணலாம். மற்றப் பகுதிகள் நல்ல மஞ்சளாக இருக்கும். ஆணும் பெண்ணும் ஒன்றுபோல. முழுவளர்ச்சி பெறாத பறவைகளின் தலையில் கருப்பிடையே மஞ்சள் கோடுகள் காணப்படும்.

காணப்படும் இடங்கள் : தென்னிந்தியா முழுவதும் ஆங்காங்கே மரங்களடர்ந்த காடான சமவெளிப் பகுதிகளில் ஆண்டு முழுதும் காணலாம், மலைகளில் காணப்படுவதில்லை.

பழக்க வழக்கங்கள் : மரங்களில் உயரத் தனித்தோ இணையாகவோ திரியக் காணலாம். நகர்புறத் தோட்டங்களிலும் கிராமப்

பக்கங்களிலும் தோப்புகளிலும் காணலாம். தரையில் இறங்கும் பழக்கமில்லாத இது மரங்களில் உயர இருந்து இனிய குரலில் முன்னைய மாங்குயில்களைப் போலவே கத்தும்.

பழங்கள், சிறு பழங்கள், பூச்சிகள் ஆகியன இதன் உணவு.

இனப்பெருக்கம் : காலம் : மார்ச் முதல் ஜூலை வரை; கூடு : நார், வேர், சிலந்தி நூல் முதலியன கொண்டு இரு சிறுகிளைகளுக் கிடையே தொட்டில் போலத் தொங்கும் கூடமைக்கும். முட்டை : 2 அல்லது 3; இளஞ் சிவப்புத் தோய்ந்த வெண்மையாக இருக்கும்: கருப்பும் செம்பழுப்புமான புள்ளிகளை மிகுதியாகக் காணலாம்.

Family : Dicruridae

கரிச்சான்கள்

(DRONGOS)

291. கருங்கரிச்சான்

963. Black Drongo

Dicrurus adsimilis macrocercus (*Vieillot*)

தோற்றம்: கொண்டைக் குருவி அளவுள்ள இது சற்று நீண்ட வாலுடன் சுமார் 28 செ. மீ. நீளம் இருக்கும்.

அலகும் கால்களும் கருப்பு நிறம்; விழிப்படலம் சிவந்த பழுப்பு நிறம்; பிளவுபட்ட வாலோடு கூடிய உடல் முழுதும் பளபளக்கும் கருத்த இதனை எல்லோரும் எங்கும் கண்டிருப்பர்.

காணப்படும் இடங்கள் : தென்னிந்தியா முழுதும் சமவெளிப் பகுதிகளிலும் இலையுதிர் காடுகளிலும் விளை நிலங்கள், மேய்ச்சல் நிலங்கள், வேலிகள் ஆகியவற்றைச் சார்ந்து காணலாம். மலை களில் காணப்படுவதில்லை.

பழக்க வழக்கங்கள்: புகைவண்டிப் பாதையோரத் தந்திக் கம்பங்களிலும் தனித்து உட்கார்ந்திருக்கக் காணலாம். அவ்வாறு அமர்ந்து கவனமாகப் பார்த்தபடி இருக்கும் இது தரையில் காணப் படும் தத்துக்கிளி முதலான சிறு பூச்சிகளைப் பாய்ந்து பற்றும். பறந்து செல்லும் ஈசல்களையும் லாவகமாக எழுந்து பறந்து விடாது துரத்திப் பிடிக்கும். மாலை நேரத்தில் இவ்வாறு பறக்கும் பூச்சி களையே குறிப்பாக வேட்டையாடுவதைக் காணலாம். கரையான்

புற்றில் கரையான் இறக்கை முளைத்துக் கிளம்பும்போது அங்கு இவை சிறு கூட்டமாகக் கூடி ஈசல்களைச் சுறுசுறுப்பாகப் பற்றி விழுங்குவதைக் காணலாம். ஆடு மாடுகள் மேயும் மேய்ச்சல் நிலத்தில் அவற்றின் காலடியிலோ அல்லது முதுகின் மீதோ அமர்ந்து புல் தரையிலிருந்து வெளிப்படும் பூச்சிகளைக் கவனமாகப் பிடிக்கும். உழவருக்குப் பகையாக இருக்கும் தத்துக்கிளி, வெட்டுக்கிளி, போன்ற பூச்சிகளை வேட்டையாடி உழவனின் நண்பனாக விளங்குவது இது எனலாம். விழுங்க முடியாத பெரிய பூச்சிகளைக் கால் விரல்களால் அழுத்திப் பிடித்துக் கொண்டு அலகால் கொத்தித் தின்னும்.

மிக்க நெஞ்சுரமும் ஆற்றலாம் வாய்ந்தது இது. அளவில் சிறியதாயினும் காகம், பரப்பருந்து, வல்லூறு போன்ற பெரிய பறவைகள் இதன் கூட்டை நெருங்கும்போது அவற்றை அண்ட விடாது துரத்தும். மற்ற சிறு பறவைகள் இதன் பாதுகாப்பில் நம்பிக்கை வைத்து இது கூடு கட்டும் மரத்திலேயே கூடு கட்டிக் கொள்வதைக் காணலாம். வலியன், ஆனைச் சாத்தான், கரிக் குருவி, இரட்டைவால் குருவி போன்ற பல பெயர்களால் இதனைப் பல பகுதி மக்களும் அழைக்கின்றனர்.

பூச்சிகளே இதன் முக்கிய உணவு.

அதிகாலையில் குரல் கொடுக்கத் தொடங்கும் பறவை இதுவே. வைவது போல இனிமையற்ற குரலில் கரிச்சுக் கொட்டுவதால் இது கரிச்சான் எனப் பெயர் பெற்றது எனக் கூறுகிறார், திரு. ஏ.எல். சாமி. இனப்பெருக்கக் காலத்தில இடைவிடாது தொடர்ந்து கத்தியபடி இருக்கும்.

இனப்பெருக்கம் : காலம் : மார்ச் முதல் ஜூன் வரை ; கூடு : சிறு குச்சிகள், புல், நார் முதலியனவைகளைச் சிலந்தி நூலால் இணைத்துக் கோப்பை போல் அமைக்கும். மாமரம், மூங்கில், கருவேல் போன்றவற்றில தரையிலிருந்து 10 மீட்டர் உயரத்திற்குள்ளாக வெளி நீட்டிக் கொண்டிருக்கும் கிளைகளின் நுனியில் கூடு அமைக்கும். பனை மரங்களிலும் கூடு அமைப்பது உண்டு. விளை நிலங்களிடையே தனித்து நிற்கும் மரங்களையே கூடமைக்கப் பெரிதும் பயன்படுத்தும் முட்டை: 3 முதல் 5 வரை ; வெண்மையாகப் பழுப்புத் தோய்ந்த செந்நிறக் கறைகளுடன் காணப்படும் வேறு பல நிறங்களிலும் காணப்படுவது உண்டு. ஆணும் பெண்ணும் கூடு கட்டி, அடைகாத்துக் குஞ்சுகளைப் பேணும் பணிகளில் பங்கு கொள்ளும்.

292. கருஞ்சாம்பல்நிறக் கரிச்சான்
965. Indian Grey Drongo
Dicrurus leucophaeus longicandatus (*Hay*)

தோற்றம் : கருங்கரிச்சான் அளவுள்ள இது சற்று நீண்ட வால் கொண்டது.

பளபளக்கும் சிலேட் கருப்பான மேல் தோற்றம் கொண்ட பறவை இது. உடலின் அடிப்பகுதி சற்று மங்கிப் பளபளப்பின்றி இருக்கும். விழிப்படலம் ஆழ்ந்த சிவப்பாக இருக்கும்; கால்களும் அலகும் கொம்பு நிறமான கருப்பு.



கருஞ்சாம்பல் நிறக் கரிச்சான்

காணப்படும் இடங்கள் : இமயமலைப் பகுதியிலிருந்து வலசை வரும் இதனைக் குளிர் காலத்தில் தென்னிந்தியா முழுவதும் பசுங் காடுகளிலும் இலையுதிர் காடுகளிலும் காணலாம். முன்னதைப் போலன்றி இது மரங்களடர்ந்த காடுகளில் திரியக் காணலாம்.

காபி, தேயிலைத் தோட்டங்களில் சிறப்பாகக் காணலாம். மலைகளில் 1500 மீட்டர் உயரம் வரைக் காணப்படும்.

பழக்க வழக்கங்கள் : இதன் பழக்க வழக்கங்கள் பெரும்பாலும் முன்கண்ட கருங்கரிச்சான் பழக்கங்களை ஒத்தனவே. மாலை நேரங்களில் மரங்களின் உச்சியில் அமர்ந்து பாய்ந்து பறந்து ஈப்பிடிப்பான்களைப் போலப் பறக்கும் பூச்சிகளை வேட்டையாடும். கரையான் புற்றுகளில் ஈசல் வெளிப்படும்போது இருபது பறவைகள் வரை அங்குக் கூட்டமாகத் திரளும். காபித் தோட்டங்களில் முள் முருங்கை மலரும் போது அதில் வந்து தேனினை விரும்பி உண்ணும்.

பறக்கும் பூச்சிகளே முக்கிய உணவு.

வைவது போலக் கத்தினாலும் கிலி—லீ—லீ—லீ என அணில் போலக் குரல் கொடுக்கவும் கேட்கலாம்.

இனப்பெருக்கம் : தென்னிந்தியாவிற்கு வெளியே.

293. வெள்ளை வயிற்றுக் கரிச்சான்
967. White Bellied Drongo
Dicrurus caerulescens caerulescens (*Linnaeus*)

தோற்றம் : கருங் கரிச்சான் அளவுள்ள இது சுமார் 24 செ.மீ. நீளமிருக்கும்.

விழிப்படலம் செம்பழுப்பான சிவப்பு நிறம் ; கால்களும் கருப்பான பழுப்பு நிறம்.

இதுவும் நீண்ட பிளவுபட்ட வால் கொண்டது. உடலின் மேற்பகுதி பளபளக்கும் கருப்பாக இருக்கும். தொண்டையும் மார்பும் பழுப்புத் தோய்ந்த கருஞ்சாம்பல் நிறமாக இருக்கும். வயிறும் வாலடியும் வெண்மை.

காணப்படும் இடங்கள் : தென்னிந்தியா முழுவதும் மேற்குக் கிழக்குத் தொடர்ச்சி மலைசார்ந்த இலையுதிர் காடுகளில் சமவெளி முதல் மலைகளில் 1000 மீ. வரை காணலாம். நடுக் காடுகளிலன்றி காடுகள் வழியிலே செல்லும் காட்டுப் பாதைகளைச் சார்ந்து திரிவது.

பழக்க வழக்கங்கள் : தனித்து மரங்களில் உயரே வீற்றிருக்கக் காணலாம். இரை தேடும் பிற பறவைப் பட்டாளங்களோடு கலந்து பூச்சிகளை வேட்டையாடித் திரிவதும் உண்டு. மலர் மரங்

கள் மலரும் பருவத்தில் அவற்றில் தேன் உண்ணும். சற்று இனிய குரலில் கத்தும் இது பிற பறவைகளின் குரலைப் போலப் போலி யாகக் கத்துவதும் உண்டு.

இனப்பெருக்கம்: காலம்: மார்ச் முதல் ஜூன் வரை; கூடு: கருங்கரிச்சான் கூட்டினைப்போல இலையுதிர் காடுகளிலோ மூங்கிற் காடுகளிலோ கூடு அமைக்கும். முட்டை: 2 அல்லது 3; பெரிதும் கருங்கரிச்சான் முட்டையில் ஒத்திருக்கும்.

294. சின்னக் கரும்பச்சைக் கரிச்சான்

971. Bronzed Drongo

Dicrurus aeneus aeneus (Vieillot)

தோற்றம்: கொண்டைக் கரிச்சானைவிட அளவில் சிறிய இது சுமார் 25 செ. மீ. நீளமிருக்கும்.

அலகும் கால்களும் கருப்பு; விழிப்படலம் ஆழ்ந்த சிவப்பு திறம்.

கருங்கரிச்சானைவிட அளவில் சிறிய இதன் உடலின் மேற் பகுதி நன்கு பளபளக்கும் வெண்கலப் பசுமை கலந்த நீல நிறமாக இருக்கும். வால் முன் கண்ட கரிச்சான்களைப் போல ஆழமாகப் பிளவுபட்டிருக்காது. உடலின் அடிப் பகுதியில் பளபளப்பு அவ் வளவு அதிகமாக இராது.

காணப்படும் இடங்கள்: தென்னிந்தியா முழுவதும் மேற்குக் கிழக்குத் தொடர்ச்சி மலை சார்ந்த மாருப் பசுங்காடுகளிலும் ஈர மிகுந்த இலையுதிர் காடுகளிலும் சமவெளி முதல் மலைகளில் 1000 மீ. உயரம் வரை காணலாம் மூங்கில் காடுகள், காபி, தேயிலை, ரப்பர் தோட்டங்கள், பழத் தோட்டங்கள் ஆகியவற்றைச் சார்ந்தும் காட்டு வழிப் பாதைகளைச் சார்ந்தும் காணலாம்.

பழக்க வழக்கங்கள்: தனித்தும், இடையிட்டுப் பிரிந்த இணை யாகவும் மரங்களில் உயர வீற்றிருக்கக் காணலாம். பூச்சிகளை வேட்டையாடும் பறவைப் பட்டாளங்களோடு கலந்து வேட்டை யாடும். மற்றப்பறவைகளின் குரலில் போலியாகக் கத்திக் காட்டும். மற்றப் பழக்க வழக்கங்கள் பிற கரிச்சான்களுக்கு உரியனவற்றைப் போன்றனவே.

இனப்பெருக்கம்: காலம்: மார்ச் முதல் மே முடிய; கூடு: தேக்குக் கன்றுகளின் புறக்கிளைகளில் கருங் கரிச்சானின் கூட்டினை

ஒத்த இதன் கூட்டினைத் தரையிலிருந்து 3 அல்லது 4 மீட்டர் உயரத்தில் காணலாம். முட்டை: 3 அல்லது 4; வெளிர் இளஞ் சிவப்பாக ஆழ்ந்த சிவப்புக் கறைகளோடு காட்சி தரும்.

295. வளைந்தவால் கொண்டைக் கரிச்சான்

973. Haircrested or Spangled Drango

Dicrurus hottentottus hottentottus (*Linnaeus*)

தோற்றம்: மைனா அளவுள்ள இது சுமார் 25 செ. மீ. நீளம் இருக்கும்.

வளைந்தவால் கொண்டைக் கரிச்சான்

அலகும் கால்களும் கருப்பு; விழிப்படலம் செம்பழுப்பு நிறம்;

அலகு நீண்டு கூர்மையாகச் சற்று கீழ் நோக்கி வளைந் திருக்கும்.

இதன் உச்சந்தலையில் சுமார் 5 செ. மீ. நீளமுள்ள மயிர் போன்ற சில தனித்தூவிகள் பின்னோக்கி வளைந்திருக்கும். உட

லின் மேற்பகுதி பளபளக்கும் கருப்பு நிறம். வால் பிளவு படாமல் சதுரமாக இருக்குமேனும் வாலின் புற இறகுகள் மேல் நோக்கி வளைந்து திருகிக் கொண்டிருக்கக் காணலாம். ஆணும் பெண்ணும் ஒன்றுபோல.

காணப்படும் இடங்கள்: தென்னிந்தியாவில் மேற்குத் தொடர்ச்சி மலைசார்ந்த பகுதிகளில் பசுங் காடுகளைச் சார்ந்து ஆங்காங்கே சமவெளி முதல் மலைகளில் 900 மீட்டர் உயரம் வரை காணலாம்.

பழக்க வழக்கங்கள்: காடுகளில் தனித்தும் இணையாகவும் சிறு கூட்டமாகவும் மரங்களின்மேல் திரியும். பறக்கும் பூச்சிகளைப் பிடித்துத் தின்னும் இது மலர்களில் தேனை விரும்பி உண்ணும். முள் முருங்கை, யூக்லப்டிஸ் முதலான மரங்களில் இதனைக் கூட்ட மாகக் காணலாம். 8 முதல் 10 வரையான பறவைகள் கூட்டமாகச் சேர்ந்து அத்தகைய மரங்களில் தேன் உண்ண வரும் பிற பறவை இனங்களைத் துரத்தி விரட்டியடிக்கக் காணலாம்.

வைவது போன்ற குரலில் உரக்கக் கத்தும்.

இனப்பெருக்கம்: காலம்: பிப்ரவரி முதல் ஜூன் முடிய; கூடு: கருங் கரிச்சான் கூட்டினைவிடச் சற்று பெரியதாகக் கோப்பை வடிவில் மரக்கிளைகளின் புறவெளி நுனியில் அமைக்கும் கூட்டினைக் காடுகளில் உள்ள மரங்களிலேயே காணலாம். முட்டை: 3 அல்லது 4; வெளிக் கிரீம் நிறத்தில் சிவப்புக் கோடுகளோடு காணப்படும். ஆணும் பெண்ணும் கூடு கட்டுவதிலும் அடைகாப்ப திலும் இனப்பெருக்கம் செய்வதிலும் பங்கு கொள்ளும்.

சாதாரணமாகக் காணும் போது மெல்லிய இம் மயிர் கம்பித் தூவிகள் தெரிவது கடினம். பைனகுலர் வழியே பார்க்கும்போதே தெளிவாகப் புலனாகும்.

296. துடுப்புவால் கரிச்சான்
977. Large Racket-Tailed Drongo
Dicrurus paradiscus paradiscus (*Linnaeus*)

தோற்றம்: மைனா அளவுள்ள இது. நீண்ட துடுப்பு வாலு டன் இதன் நீளம் சுமார் 60 செ. மீ.

அலகும் காடுகளும் கருப்பு; விழிப்படலம் செம்பழுப்பு.

பளபளக்கும் கருப்பு நிறமான தோற்றம் கொண்ட இதன் தலையில் சிறிய பின் வளைந்த கொண்டையைக் காணலாம். வாலின் புற இறகுகள் இரண்டும் (Outer tail feathers) மெல்லிய கம்பி

போல நீண்டு முடிவில் துடுப்புப் போல அகன்று திருகிக் கொண்டு முடிந்திருக்கக் காணலாம்.



துடுப்புவால் கரிச்சான்

காணப்படும் இடங்கள்: மேற்குக் கிழக்குத் தொடர்ச்சி மலை சார்ந்த பகுதிகளில் பசுங் காடுகளைச் சார்ந்த பகுதிகளிலும் இலையுதிர் காடுகளிலும் சமவெளி முதல் மலைகளில் 1200 மீ. உயரம் வரை காணலாம். மூங்கில் காடுகள், பாழடைந்த ரப்பர் தோட்டங்கள் ஆகியவற்றில் காணலாம்.

காணப்படும் இடங்கள்: காடுகளில் அலைந்து திரிந்து வேட்டையாடும் வால்காக்கை, மரங்கொத்தி, ஈப்பிடிப்பான் முதலிய பறவைகளோடு சேர்ந்து இரைதேடித் திரியும் பழக்கமுடையது இது. பல வகைப் பறவைகளின் குரலில் போலியாகத் திறமையாகக் கத்திக் காட்டும் ஆற்றல் வாய்ந்தது. குரலை மட்டும் கேட்டு பல பறவைகள் இருக்கும் என எண்ணிச் செல்பவர்கள் இந்த ஒரு பறவையை மட்டும் கண்டு பெரிதும் ஏமாற்றம் அடைவர். அநுபவமிக்க பல பறவையாளர்களை இது இவ்வாறு ஏமாற்றி உள்ளது. இனப்பெருக்கக் காலத்தில் பொழுது புலர்வதற்கு நெடு நேரம் முன்பிருந்தே ஓயாது தொடர்ந்து டுங், டுங், டுங், டுங் எனக் கணீரென்ற குரலில் கத்தியபடி இருக்கும்.

பூச்சிகள், சிறு வண்ணத்துப் பூச்சிகள், மலர்த்தேன் ஆகியன இதன் உணவு.

இனப்பெருக்கம்: காலம்: பிப்ரவரி முதல் மே முடிய; கூடு: குச்சிகள், வேர், நார் ஆகியன கொண்டு மற்றக கரிச்சான்களின்

கூடுகளைப் போல மரங்களின் புறங்களில் தொங்கும் கிளைகளில் சிலந்தி நூல் கொண்டு கட்டும். கூடுகளைத் தரையிலிருந்து 5 முதல் 15 மீ. உயரத்தில் காணலாம்; முட்டை: 3; கிரீம் வெண்மையாக செம்பழுப்புக் கறைகளுடன் காணப்படும்.

[வட இந்தியாவில் காணப்படும் துடுப்பு வால் கரிச்சானின் தலைக் கொண்டை பெரிதாக இருப்பதோடு துடுப்பு வாலும் சற்று நீளமானது. இலங்கையில் காணப்படும் துடுப்பு வால் கரிச்சானுக்குத் தலைக் கொண்டை மிக நுட்பமானது. துடுப்பு வாலும் அளவில் சிறியது. ஆகவே அவை தனி உள்ளினங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன.]

Family : Artamidae

தகைவிலான் கீச்சான்
(SWALLOW-SHRIKE)

297. சாம்பல்நிறத் தகைவிலான் கீச்சான்

982. Ashy Swallow-Shrike

Artamus fuscus (*Vieillot*)

தோற்றம்: கொண்டைக் குருவியை விடச் சற்றுப் பருத்த தோற்றம் கொண்ட இது சுமார் 18 செ. மீ. நீளம் இருக்கும்.



சாம்பல் நிறத் தகைவிலான் கீச்சான்



சாம்பல உள்ளான் (Grey Plover) வலசை வரும் பகுதிகள்

அலகு நீலந் தோய்ந்த சாம்பல் நிறம். விழிப்படலம் பழுப்பு; கால்கள் சிலேட் நிறம்.

உடலின் மேற்பகுதி சிலேட் சாம்பல் நிறமாக இருக்கும். பிட்டம் வெளுத்துக் காணப்படும். மார்பும் வயிறும் வைன் நிறம் தோய்ந்த சாம்பல் நிறமாக இருக்கும். வாலடியும் வாலடிப் போர்வை இறகுகளும் சாம்பல் நிறந் தோய்ந்த வெண்மையாக இருக்கும்.

காணப்படும் இடங்கள்: தென்னிந்தியா முழுவதும் காண லாம். இலையுதிர் காடுகளைச் சார்ந்த உப்பங்கழிகளைச் சூழ்ந்த பகுதிகளிலும், தென்னை பனை மிகுந்துள்ள இடங்களில் மிகுதியா கக் காணலாம்.

பழக்க வழக்கங்கள்: தென்னை, பனைமரங்களிலும், மின்சாரக் கம்பிகளிலும் உயரமான இடத்தில் அமர்ந்து சுற்றிலும் நோட்டம் விட்டபடி இருக்கும். அப்போது குறுகிய சதுரமான வால் மெல்ல மேலும் கீழும் அசையக் காணலாம். மின்சாரக் கம்பிகளிலும் தந் திக் கம்பிகளிலும் ஒன்றை அடுத்து ஒன்றாக நெருக்கமாக ஏழெட்டு பறவைகள் வரை ஒரே பக்கமாகப் பார்த்து அமர்ந்திருக்கக் காண லாம். இடையிடையே எழுந்து வட்டமிட்டுப் பஞ்சுருட்டானைப் போலப் பறந்து பின் மீண்டும் வந்து அமரும். பறக்கும் பூச்சி களை உயரப் பறந்தோ தரையருகில் தாழவந்தோ வேட்டையாடும். சில சமயங்களில் மாலை நேரங்களில் நூற்றுக் கணக்கான பறவை கள் கூட்டமாக உயரப் பறந்து வேட்டையாடுவதும் உண்டு.

தட்டாம் பூச்சி, வண்ணத்துப் பூச்சி முதலியன இதன் உணவு.

பறக்கும் போதும் அமர்ந்திருக்கும் போதும் சீஇக்,!சீஇக் எனக் கனமான குரலில் கத்தியபடி இருக்கக் கேட்கலாம்.

இனப்பெருக்கம்: காலம்: ஏப்ரல் முதல் ஜுன் வரை; கூடு: வேர், நார், புல் ஆகியன கொண்டு கோப்பை வடிவிலான கூட் டினை மரக்கிளைப் பிரிவிலோ பனைமரங்களிலோ உயரமான இடத் தில் அமைக்கும். முட்டை: 2 அல்லது 3; பசுமை தோய்ந்த வெண்மையாக வெளிர் பழுப்புக் கறைகளுடன் காட்சி தரும்.

Family : Sturnidae

மைனுக்கள் அல்லது நாகணவாய்
(STARLINGS AND MYNA)

298. கருஞ்சாம்பல் தலை மைனு
987. Greyheaded Myna
Sturnia malabaricus malabaricus (*Gmelin*)

தோற்றம் : மைனுவைவிடச் சற்று மெலிந்து அளவிலும் சற்றுச் சிறியதாகக் காணப்படும் இது சுமார் 20 செ. மீ. நீளம் இருக்கும்.

அலகு அடிப்பகுதி நீலமாகவும் நடுப்பகுதி பச்சையாகவும் முனை மஞ்சளாகவும் இருக்கும். விழிப்படலம் வெளிர் நீலமாக இருக்கும். கால்கள் பழுப்புத் தோய்ந்த மஞ்சள் நிறம்.

நெற்றியும் தொண்டையும் வெண்மை. உடலின் மேற்பகுதி சாம்பல் நிறம். தலை, கழுத்து, தோள்பட்டை ஆகியவற்றில் வெண்கோடுகள் காணலாம். இறக்கைகள் கருப்புத் தோய்ந்த பழுப்பு நிறம். வால் கருப்பாகச் செம்பழுப்பு முனையோடு காட்சி தரும். உடலின் கீழ்ப்பகுதி சிவப்புத் தோய்ந்த மஞ்சள் பழுப்பாக இருக்கும். வயதான பறவைகளின் நிறம் சற்று வேறுபட்டுத் தோன்றலாம். ஆணும் பெண்ணும் ஒன்று போன்ற தோற்றம் கொண்டவை.

காணப்படும் இடங்கள் : குளிர்காலத்தில் தென்னிந்தியா முழுதும் சிறப்பாகக் கேரளாவில் காணலாம்.

பழக்க வழக்கங்கள் : அடுத்ததைப் போன்றவை.

இனப்பெருக்கம் : தென்னிந்தியாவிற்கு வடக்கே, வட இந்தியாவில்.

299. பிளைத் மைனு
988. Blyth's Myna
Sturnus malubaricus blythii (*Jerdon*)

தோற்றம் : மைனுவை விடச் சற்றுச் சிறிய இது சுமார் 20 செ. மீ. நீளம் இருக்கும்.

தலை, கழுத்து, மேல் மார்பு ஆகியன வெண்மை; உடலின் மேற்பகுதியில் சாம்பல் நிறம் மங்கிக் காணப்படும்; வயிறும் வாலடியும் மங்கிய கருஞ் சிவப்பாக இருக்கும். பெண் தோற்றத்தில் பெரிதும் முன் கண்ட கருஞ்சாம்பல் தலை மைனாவை ஒத்திருக்கும். நெற்றியும், தலை உச்சியும் மட்டும் வெண்மையாக இருக்கும்.



பிளைத் மைனா

காணப்படும் இடங்கள்: மேற்குத் தொடர்ச்சி மலை சார்ந்த பகுதிகளில் கோளாவிலும் மைசூரிலும் காபி தேயிலைத் தோட்டங்கள், இரண்டாம் தரக்காடுகள் விளைநிலங்களை அடுத்த பகுதிகள் ஆகியவற்றில் காணலாம். சமவெளி முதல் மலைகளில் 1000 மீட்டர் வரை காணலாம்.

பழக்க வழக்கங்கள்: 5 முதல் 20 வரையான சிறு கூட்டமாக முன்கண்ட கருஞ்சாம்பல் தலை மைனாவோடு சேர்ந்து பெரும்பாலும் மரங்களில் உயரவே திரியக் காணலாம். மைனாவைப்போல தரையில் மேய்வது இல்லை.

இலந்தை லாண்டானா ஆகியவற்றின் பழங்களும் மலர்த் தேனும் இதன் முக்கிய உணவு.

உரத்த குரலில் இரை தேடும்போது கத்தியபடி இருக்கும்.

இனப்பெருக்கம்: காலம்: பிப்ரவரி முதல் ஏப்ரல் முடிய; கூடு: மரங்கொத்தி, குக்குறுவான் ஆகியவை குடைந்த பொந்தில் சிறு குச்சிகள், வேர், புல் முதலியவற்றை இட்டு முட்டையிடும். முட்டை: 3 முதல் 5 வரை; வெளிர் நீலமாக எத்தகைய கறையுமின்றிக் காணப்படும்.

300. கருந்தலை மைனா

9)4.. Bl .ekh a l d or Brahminy Mina

Sturnus pagodarum (Gmelin)

தோற்றம்: மைனாவை விடச் சற்றுச் சிறிய இது சுமார் 21 செ மீ. நீளம் இருக்கும்

அலகின் அடிப்பகுதி பசுமை தோய்ந்த சாம்பல் நிறம்; முனைப் பகுதி மஞ்சள்; விழிப்படலம் மஞ்சள் தோய்ந்த கிரீம் நிறம்; கால்கள் எலுமிச்சை மஞ்சள் நிறம்.

தலையும் தலையில் சிறு கொண்டையும் கருப்பாக இருக்கும்; உடலின் மேற்பகுதி கருஞ்சாம்பல் நிறம்; கீழ்ப்பகுதி சிவப்புத் தோய்ந்த மஞ்சள் பழுப்பு நிறம்; இறக்கைகள் கருப்பு; வால் பழுப்பாக வெள்ளை முனையோடு காட்சி தரும். வளராத பறவையின் தலையில் கொண்டை இராது. மேலும் தலை புகைக் கருப்பு நிறமாக இருக்கும்.

காணப்படும் இடங்கள் : தென்னிந்தியா முழுதும் சமவெளிகளில் சிறுபுதர்காடுகளையும் விளைநிலங்களையும் சார்ந்து காணலாம்.

பழக்க வழக்கங்கள் : காடுகளிலும் மனிதர் வாழ்விடங்களிலும் ஒருசேரத் திரியக் கூடியது. நகர்ப்புறங்களில் கூட இதனைக் காணலாம். பெரும்பாலும் மரங்களிலேயே உயர இருக்குமேயன்றி மைனாவைப்போல தரையில் அதிகம் மேய்வதில்லை. 20 முதல் 30 வரையான கூட்டமாகத் திரள்வதும் உண்டு.

ஆல், அத்தி, இலந்தை; லாண்டானா முதலான பழமரங்களின் பழங்களே முக்கிய உணவு. மலர்த் தேனையும் உண்ணும்.

உரத்த குரலில் ஒன்றோடு ஒன்று பேசுவது போலக் கத்தும்.

இனப்பெருக்கம் : காலம் ; ஏப்ரல் முதல் ஆகஸ்ட் முடிய; கூடு : சுவர்களிலோ, மரத்திலோ காணப்படும் பொந்துகளில் புல், தூவி, கிழிந்த துணி ஆகியவற்றைக் கொண்டு கூடமைக்கும். முட்டை : 3 அல்லது 4; வெளிர் நீலமாக எத்தகைய கறைகளுமின்றிக் காணப்படும்.

301. ரோசா பிஞ்சு

996. Rosy Pastor

Sturnus roseus (Linnaeus)

தலை, கழுத்து. மேல் மார்பு, இறக்கைகள் ஆகியன கருப்பாகவும் எஞ்சிய பகுதிகள் ரோசா நிறத்தை ஒத்த இளஞ் சிவப்பாகவும் தலைக் கொண்டையுடனும் காணப்படும். மைனாவை ஒத்த இது செப்டம்பர் முதல் ஏப்ரல் வரையான காலத்தில் மத்திய ஆசியாவிலிருந்தும் ஐரோப்பாவிலிருந்தும் வலசை வரும். கேரளா, மைசூரில் ஓரளவும் தமிழ்நாடு, ஆந்திராவில் அபூர்வமாகவும் காணலாம். புதாகாடுகளில் காணப்படும் இது விளைநிலங்களில் தானியங்களுக்கும் பெருத்த சேதம் செய்யும்.

302. மைனு அல்லது நாகணவாய்

1006. Common Myna

Acridotheres tristis tristis (Linnaeus)

தோற்றம்: கொண்டைக் குருவிக்கும் புறாவிற்கும் இடைப்பட்ட இதன் நீளம் சுமார் 23 செ. மீ.

அலகு மஞ்சள்; விழிப்படலம் பழுப்பு; கால்கள் மஞ்சள்.

தலை, கழுத்து, மார்பு ஆகியன பளபளக்கும் கருப்பு; உடலின் மேற்பகுதி கரும்பழுப்பு. இறக்கைகளில் வெள்ளை வட்டம், பறக்கும்போது தெளிவாகப் புலனுகும். வயிறும் வாலடியும் அழுக்கு வெள்ளை; வாலடிப் போர்வை இறகுகள் வெண்மை. கண்ணைச் சுற்றிலும் தூவியற்ற பகுதி மஞ்சளாக இருக்கும்.

காணப்படும் இடங்கள்: தென்னிந்தியா முழுதும் நகரங்கள், கிராமங்கள் விளைநிலங்கள் ஆகிய எல்லா இடங்களிலும் சாதாரணமாகக் காணப்படும் பறவை.

பழக்க வழக்கங்கள்: இணையாகவும் சிறு கூட்டமாகவும் காணப்படும் இது எல்லாச் சூழல்களிலும் மனிதர்களைச் சார்ந்து வாழும் திறமை உடையது. பூச்சி, புழு, தானியம், அடுக்களைக் கழிபொருள், பழங்கள் ஆகிய பலவகை உணவுப் பொருள்களையும் உட்கொள்ளும். மலர்த்தேனையும் விரும்பிக் குடிக்கும்.

பலவகையான உரையாடுவது போன்ற கசமுசக்கும் குரலில் கத்தும். மனிதர்களிடம் எளிதில் பழகக் கூடியது. குஞ்சாக இருக்கும்போதே இதை எடுத்து சிலர் வளர்த்துப் பேசப் பழக்குகின்றனர். என்றுலும் காட்டு மைனுவைப்போலப் பேசும் திறமை இதற்கு இல்லை.

இனப்பெருக்கம்: காலம்: பிப்ரவரி முதல் ஆகஸ்ட் வரை. கூடு: குச்சிகள், வேர், குப்பைகூளம் காகிதம் ஆகியவற்றைப் பயன்படுத்திச் சுவர்களில் பொந்துகளிலும் மரபொந்துகளிலும் வீட்டுக் கூரைகளிலும் கூடு அமைக்கும். முட்டை 4 அல்லது 5; நல்ல பசுமை தோய்ந்த பளபளக்கும் நீலநிறமாக இருக்கும். ஒரே ஆண்டில் இரண்டு முறை முட்டையிட்டுக் குஞ்சு எழுப்புவதும் உண்டு.

303. தெற்கத்தியக் காட்டு மைனு

1010. Southern Jungle Myna

Acridotheres juseus mubrattensis (Sykes)

தோற்றம்: மைனு அளவுள்ள இது 23 செ. மீ. நீளம் இருக்கும்.

அலகு ஆரஞ்சு மஞ்சள் நிறம். விழிப்படலம் நீலங் கலந்த வெண்மை; கால்கள் மஞ்சள்.



தெற்கத்தியக் காட்டு மைனு

முன் கண்ட மைனுவைத் தோற்றத்தில் ஒத்தது. இதற்குக் கண்ணைச் சுற்றித் தூவியற்ற மஞ்சள் பகுதி இல்லை. அலகடியில் நெற்றியின் முன் சில கருப்புத் தூவிகள் செங்குத்தாக நிற்கும். உடலின் பழுப்பு நிறம் சற்று சாம்பல் நிறம் தோய்ந்து காணப்படும்.

காணப்படும் இடங்கள்: மேற்குத் தொடர்ச்சி கிழக்குத் தொடர்ச்சி மலைசார்ந்த பகுதிகளில் விளை நிலங்களைச் சார்ந்த காட்டுப் பகுதிகளிலும் கிராமங்களிலும் காணலாம். மலைகளில் 1500 மீட்டர் உயரம் வரை காணப்படும்.

பழக்க வழக்கங்கள்: இணையாகவும் சிறு கூட்டமாகவும் முன் கண்ட கருந்தலை மைனுவோடும் கலந்து திரியக் காணலாம். மேய்ச்சல் நிலத்தில் ஆடுமாடுகளின் காலடியில் அமர்ந்து அவறறின் காலடியிலிருந்து எழும் துள்ளுகடாய், தத்துப் பூச்சி முதலியவற்றைப் பிடித்துத் தின்னும். பழங்களையும் மலர்த் தேனையும் உணவாகக் கொள்ளும். குரல் மைனுவினதைப் போன்றதே.

இனப்பெருக்கம்: காலம்: பிப்ரவரி முதல் மே முடிய; கூடு: குச்சிகள், புல், வேர் ஆகியன கொண்டு மரங் கொத்தி. குக்குறுவான் ஆகியவற்றின் பழைய கூடான பொந்துகளில் மரத்தில் உயரக் கூடமைத்து முட்டையிடும். முட்டை: 3 அல்லது 4; பசு நீலநிறமாக இருக்கும்.

304. பெரிய காட்டு மைனு

1016. Southern Grackle

Gracula religiosa indica (Cuvier)

தோற்றம்: மைனுவைவிடச் சற்றுப் பெரியது இது சுமார் 25 செ. மீ. நீளமிருக்கும்.

அலகு ஆரஞ்சு நிறம்; முனை மஞ்சள்; விழிப்படலம் பழுப்பு; கால்கள் ஆரஞ்சு மஞ்சள் நிறம்.



பெரிய காட்டு மைனு

ஊதாவும் பச்சையும் பளபளக்கும் கருப்பு நிறம் கொண்ட மைனு இது. இறக்கைகளில் வெள்ளைப் பட்டை தெளிவாகத் தெரியும். தலையில் காணப்படும் தூவியற்ற ஆரஞ்சு மஞ்சள் நிறப் பகுதியும் பிடரியில் காணப்படும் ஆரஞ்சு மஞ்சள் தோல் கொம்பும் இதனைத் தெளிவாக அடையாளம் காட்டும்.

காணப்படும் இடங்கள்: மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதிகளில் பழநி மலைப் பகுதிகள் ஆகியவற்றில் பசுங்காடுகள் சார்ந்த பகுதிகளில் காணலாம். மலைகளில் 300 மீ. உயரம் முதல் 1500 மீ. உயரம் வரைக் காணப்படும்.

பழக்க வழக்கங்கள்: உயர்ந்த மரங்களில் இணையாகவோ இருபது வரையான கூட்டமாகவோ காணலாம். ஏலக்காய்த் தோட்டங்களில் நிழல் தரும் மரங்களில் விரும்பி வாழ்பவை. இருவாயன்கள் பச்சைப் புறாக்கள் முதலியவற்றோடு சேர்ந்து அத்தி முதலான பழமரங்களில் பழங்களை விரும்பி உண்ணும். காபித் தோட்டங்களில் வளர்க்கப்படும் முள் முருங்கை முதலான மரங்களில் மலர்கள் மலரும்போது அவற்றில் தேனுண்ணவும் இவை வரக் காணலாம்.

இதன் குரல்களை எப்பொழுதும் மலைப் பக்கங்களில் கேட்கலாம்.

குஞ்சாக இருக்கும்போதே எடுத்து வளர்த்து இதனைப் பேசப் பழக்குகின்றனர். கூடுகளில் வளர்க்கும் பறவையாக இதுவும் சிறப்பிடம் பெறுகின்றது.

இனப்பெருக்கம்: காலம்: பிப்ரவரி முதல் மே முடிய. கூடு: புல், இலை, தூவிகள் ஆகியவற்றைப் பயன்படுத்திக் காடுகளை அடுத்து நிற்கும் பெரிய மரங்களில் பொந்துகளில் முட்டையிடும். முட்டை: 2 அல்லது 3; ஆழ்ந்த நீல நிறங் கொண்டதாக செம் பழுப்பு, சாக்லெட் நிறக் கறைகளுடன் காட்சி தரும்.

Family: Corvidae

காக்கைகளும், வால் காக்கைளும்
(TREE PIES AND CROW)

305. வால் காக்கை

1033. Tree Pie

Dendrocitta vagabunda parvula (Kinnear & Whistler)

தோற்றம்: மைனா அளவுள்ள இதன் வால் மட்டும் 30 செ. மீ. நீளமிருக்கும்.

அலகு பருத்துக் கருப்பாக இருக்கும். விழிப்படலம் ஆரஞ்சுப் பழுப்பு நிறம். கால்கள் பழுப்புத் தோய்ந்த சிலேட் நிறம்.

இதன் தலையும் கழுத்தும் புகை நிறமாக இருக்கும்; முதுகும் வால் போர்வை இறகுகளும் துரு நிறம்; வயிறு லேசான கருஞ் சிவப்பு நிறம்; கருஞ்சாம்பல் நிற வால் அகன்ற கருப்பு நுனியோடு முடிந்திருக்கும்; பறக்கும்போது இறக்கைகளில் வெள்ளைப் பகுதி காணலாம். பறக்கும்போது வாலைப் பாப்பிக் கீழே தாழ்ந்தும் மீண்டும் உயர எழுப்பியும் இறக்கைகள் ஒலி யெழுப்பவும் பறப்பது கொண்டு இதனை அடையாளம் கண்டு கொள்ளலாம். வாலின் நீளம் மேலும் அடையாளம் காணத் துணை செய்யும்.

காணப்படும் இடங்கள்: தென்னிந்தியா முழுவதும் சமவெளி முதல் மலைகளில் 1000 மீ. உயரம் வரை இலையுதிர் காடுகள் சார்ந்தும் சிறு பசுங்காடுகள் சார்ந்தும் காணலாம். மாந் தோப்புகள் தென்னந் தோப்புகள் முந்திரிக் காடுகள் ஆகியவற்றைச் சார்ந்தும் காணப்படும்.

பழக்க வழக்கங்கள்: இணையாகவோ, சிறு கூட்டமாகவோ, வெண்கலக் குரலில் கத்தியபடி திரியக் காணலாம். பகல் நேரத்தில் விடாது தொடர்ந்து "க்கீ, க்கீ, க்கீ,' என்றோ "க்கியா க்கியா, க்கியா" என்றோ இவை கத்துவது எரிச்சலூட்டுவதாக இருக்கும்.

பாப்—ஓ—லிங் என்றும் கோ—கி—லா என்றும் மொழிப்படுத்தும் படியான வெண்கலக் குரலில் கத்துவதும் உண்டு.

வேட்டையாடும் பறவை பட்டாளங்களோடு சேர்ந்து இலையுதிர் காடுகளில் இது வேட்டையாடக் காணலாம். தனித்தும் இரை தேடும். புழுபூச்சிகள், ஓணான், முட்டைகள் போன்ற பலவற்றையும் உண்ணும். ஆல், அத்தி முதலான பழங்களையும் தின்னும்.

இனப்பெருக்கம்: காலம்: மார்ச் முதல் மே முடிய; கூடு: கருவேல் போன்ற முள் கொத்துக்களால் காக்கையின் கூடு போலக் கோப்பை வடிவில் அமைத்துச் சிறு குச்சிகள் வேர் முதலியவற்றால் மெத்தென ஆக்கி முட்டையிடும்; காடான பகுதிகளில் வேம்பு முதலான மரங்களில் உயரமான கிளைகளில் கூடுகளைக் காணலாம். முட்டை: 4 அல்லது 5; வெளிர் சிவப்பாக ஆழ்ந்த செம்பழுப்புக் கறைகளுடன் காணப்படும். வேறு பல நிறங்களிலும் முட்டை அமைவது உண்டு.

306. தெற்கத்திய வால் காக்கை
1036. Southern Tree Pie
Dendrocitta leucogastra (Gould)

தோற்றம்: 30 செ. மீ. நீளமுள்ள வாலுடன் மைனா அளவு இருக்கும்.

அலகு கொம்புக் கருப்பாக இருக்கும். விழிப்படலம் ஆழ்ந்த சிவப்பு; கால்கள் கரும் பழுப்பு நிறம்.

தலை நல்ல கருப்பாகவும் (முன்னது புகை நிறம்) வயிறு வெண்மையாகவும் (முன்னது கருஞ் சிவப்பு நிறம்) இருப்பது கொண்டும் இதனை முன்னதிலிருந்து எளிதில் வேறுபடுத்தி அறியலாம்.

காணப்படும் இடங்கள்: மேற்குத் தொடர்ச்சி மலை சார்ந்த மாருப் பசுங்காடுகளிலும் இலையுதிர் காடுகளிலும் மழை மிகுந்த சோலைகளிலும், ஏலக்காய், ரப்பர் தோட்டங்களிலும் சமவெளி முதல் மலைகளில் 1000 மீட்டர் உயரம் வரை காணலாம். சாதாரண விளை நிலங்களிலும் சமவெளிப் பகுதியிலுள்ள தென்னை, மா, பலா முதலான தோப்புகளிலும் இதனைக் காண முடியாது.

பழக்க வழக்கங்கள்: துடுப்பு வால் கரிச்சான், ஈப்பிடிப்பான், பசையெடுப்பான் கொண்டைக் குருவி போன்ற பறவைகளோடு

சேர்ந்து இதுவும் புழு பூச்சிகளை வேட்டையாடும். முன்னதை விடக் கணீரெனக் கேட்கும் குரலில் கத்தும். மரங்களில் உயரத்

தெற்கத்திய வால் காக்கை

திரியும் இது சுமார் 20 வரையான கூட்டமாகத் திரள்வதும் உண்டு.

புழுக்களையும் புழு பூச்சிகளையும் தின்னும். சிலபோது நீண்ட வாலை நிமிர்த்தி உடலைக் கீழே சாய்த்து எழுந்து எழுந்து 'ஃசோப் ஃசோப், ஃகோப்' எனக் கத்தியபடி மீண்டும் அமரக் காணலாம்.

இனப்பெருக்கம்: காலம்: பிப்ரவரி முதல் ஆகஸ்ட் வரை; கூடு; அடர்ந்த காடுகளில் பெரும் புதர்களிலோ சாதாரண உயரமுள்ள மரங்களிலோ முன்னதைப் போலவே கூடு அமைக்கும். முட்டை: 3 அல்லது 4; பல நிறங்கள் கொண்ட முட்டைகள் இடுவதுண்டு. கிரீம் வெண்மை, வெளிர் சிவப்பு, வெளிர் பசுமை

தோய்ந்த வெண்மை ஆகிய பலவகை நிறங்களில் பலவகைப் பழுப்புக் கறைகளோடு முட்டைகளைக் காணலாம்.

307. காக்கை

1048. House Crow

Corvus splendens splendens (Vieill)

தோற்றம் : சுமார் 35 செ. மீ. நீளம் உள்ளது.

அலகும் கால்களும் கருப்பு ; விழிப்படலம் ஆழ்ந்த பழுப்பு ;

பிடரி, கழுத்து மேல் முதுகு, மார்பு ஆகியன கருஞ்சாம்பல் நிறம். எஞ்சிய பகுதிகள் பளபளக்கும் கருப்பாக இருக்கும்.

காணப்படும் இடங்கள் : தென்னிந்தியா முழுவதும் எங்கும் காணலாம். (கேரளத்தில் C. S. Pros egatus) என்ற உள்ளினம் இதற்குப் பதிலாகக் காணப்படுகிறது. அதன் பிடரி, கழுத்து மார்பு ஆகியன இதனைக் காட்டிலும் ஆழ்ந்த கருஞ்சாம்பல் நிற மாக இருக்கும்)

பழக்க வழக்கங்கள் : மனிதர்கள் வாழ்விடங்களைச் சார்ந்து வாழும் காக்கை எல்லாவற்றையும் தின்று வாழக்கூடிய ஆற்றல் பெற்றது, திருட்டுத்தனம் மிகுந்தது. சிறு பறவைகளையும் அவற்றின் குஞ்சுகளையும் திருடித் தின்னும் பழக்கம் மிக்கது. இத ஞலேயே சிறு பறவைகள் நகர்ப் புறங்களில் தங்கி இனப்பெருக்கம் செய்து வாழ்வதில்லை இரவு நேரத்தில் பெரிய மரங்களில் மைனு, கிளி முதலியவற்ருேடு ஒன்ருக அடையும் மாலை நேரங்களில் அடையச் செல்லுமுன் முதலில் கூட்டமாகத் திரளும்.

இனப்பெருக்கம் : காலம் : பிப்ரவரி முதல் ஆகஸ்ட் முடிய ; சில பகுதிகளில் செப்டம்பர் இறுதியில் கூட அடைகாத்தபடி இருக்கக் காணலாம். கூடு மரங்களில் குள் முதலானவற்ருல் கூடு அமைத்து குப்பை கூளம் முதலியவற்ருலும் நாராலும் மெத் தென ஆக்கும். சூழ்நிலைக் கேற்பக் கூடு கட்டப் பலவகைப் பொருள்களைப் பயன்படுத்துவதோடு விளக்குக் கம்பம், தந்திக் கம்பம் போன்றவற்றிலும் கூடமைக்கக் காணலாம். ஒரே மரத்தில் நான்கைந்து கூடுகள் வரை அமைந்திருப்பதும் உண்டு. வரிசை யாக நிற்கும் தென்னை, பனை மரங்களில் ஒவ்வொரு மரத்திலும் ஒவ்வொரு கூடு அமைத்திருக்கக் காணலாம். கூட்டைப் பரப் பருந்துகள் நெருங்க விடாமல் துரத்தும். முட்டை: 3 முதல் 5 வரை. நீலங் கலந்த பசுமையாகப் பழுப்புக் கோடுகளுடனும் கறை

களுடனும் காணப்படும். கோகிலங்கள் இதன் கூடுகளில் இதன் முட்டைகளின் நிறத்தையும் உருவத்தையும் உடைய முட்டைகளை இட்டுச் செல்லும். அளவில் சற்றுச் சிறியதாக இருப்பது கொண் டும் கனமாக இருப்பது கொண்டும் கோகிலத்தின் முட்டைகளை வேறுபடுத்தி அறியலாம்.

308. அண்டங் காக்கை

1051. Indian Jungle Crow

Corvus macrorhynchos culminatus (*Sykes*)

தோற்றம் : காக்கையை விடச் சற்றுப் பெரியதான இது சுமார் 38 செ. மீ. நீளம் இருக்கும்.

அலகும் கால்களும் கருப்பு; விழிப்படலம் ஆழ்ந்த பழுப்பு;

உடலின் மேற்பகுதி முழுதுமே சற்று ஊதா பளபளக்கும் நல்ல கருப்பு நிறம். உடலின் கீழ்ப்பகுதி பளபளப்பற்ற கருமை யாக இருக்கும்.

காணப்படும் இடங்கள்: தென்னிந்தியா முழுதும் காணலாம். மலைகளில் 1000 மீ. உயரத்திற்கு மேல் காணமுடியாது. பக்கத் தில் வலசை போகும் பழக்கம் இருத்தல் வேண்டும். ஒரு குறிப் பிட்ட பகுதியில் சில மாதங்களில் ஒன்றுகூடக் காணப்படாது பின் தலை காட்டத் தொடங்குகின்றது. காக்கையைப்போல முழுதும் நகரங்களையும் கிராமங்களையும் சார்ந்து வாழாமல் காடுகள் தோப் புகள் ஆகிய பகுதிகளிலேயே மிகுதியாகத் திரிவது.

பழக்க வழக்கங்கள் : அழுகிய பண்டங்கள், குப்பைகள் ஆகியவற்றை உண்டு மனிதனுக்கு உதவும் இது திருடிச் செல் வதில் முன்னதைக் காட்டிலும் மிகுந்த தைரியம் கொண்டது. பறவைகளின் குஞ்சுகளையும் முட்டைகளையும் திருடித் தின்பதோடு அபூர்வமாக சிறிய கோழிக் குஞ்சுகளையும் திருடிச் செல்லும். குரல் முன்னதைவிடக் கரகரப்பாக இருக்கும்.

இனப்பெருக்கம் : காலம் : ஏப்ரல் முதல் ஜூன் வரை; கூடு : முன்னதைப் போலவே; ஒரு மரத்தில் ஓர் அண்டங்காக்கைக் கூட்டத்தைத்தான் காணலாம். முட்டை : சற்றுப் பெரியது; முட்டையின் நிறம் முன்னதைப் போல. இதன் கூடுகளில் கோகி லம் முட்டையிட்டுச் செல்வது உண்டு.

Family: Campehagidae

கீச்சான்கள், மின்சிட்டுக்கள்
(CUCKOO-SHRIKES AND MINIVETS)

309. கருந்தலைக் கருப்பு வெள்ளைக் கீச்சான்

1065. Blackheaded Pied Flycather-Shrike

Hemipus picatus picatus (Sykes)

தோற்றம்: சிட்டுக்குருவி அளவுள்ள இது சுமார் 14 செ. மீ. நீளம் இருக்கும்.

அலகு கருப்பு; விழிப்படலம் ஆரஞ்சு நிறம்; கால்கள் கரும் பழுப்பு;



கருந்தலைக் கருப்பு வெள்ளைக் கீச்சான்

தோற்றத்தில் ஈப்பிடிப்பானை ஒத்தது இது. ஆணின் தலையும் முதுகும் பளபளக்கும் கருப்பாக இருக்கும். பின் கழுத்தில் ஒரு வெள்ளைப் பட்டைக்கோடு காணலாம். பிட்டம் வெள்ளை; இறக்கைகள் கருப்பும் வெள்ளையுமாக இருக்கும் பெண் பறவையின் கருப்பு நிறம் மங்கிப் புகைக் கருப்பாகக் காட்சி தரும்.

காணப்படும் இடங்கள்: கேரள மாநிலம் நீங்கலாகத் தென்னிந்தியா முழுவதும் இலையுதிர் காடுகளிலும், மூங்கிற் காடுகளிலும், காடுகளை அடுத்த தோப்புகளிலும் காணலாம்.

பழக்க வழக்கங்கள்: இணையாகவோ சிறு கூட்டமாகவோ ஒன்றை ஒன்று தொடர்ந்து மரங்களில் இலைகளிடையே புழு, பூச்சிகளைத் தேடித் திரியக் காணலாம். மற்ற இரை தேடும் பட்டாளங்களுடனும் கலந்தே பெரும்பாலும் இரைதேடும். காட்டுக் கீச்சான், மின்சிட்டுக் குருவி ஆகியவற்றின் பழக்க வழக்கங்களை ஒத்தது இதன் பழக்க வழக்கங்கள்.

பூச்சிகளே முக்கிய உணவு.

வ்வீரீரிரி, வ்வீரீரிரி, வ்வீரீரிரி எனச் சிறு குரல் கொடுக்கும்.



கருந்தலைக் கருப்பு வெள்ளைக் கீச்சான்

இனப்பெருக்கம்: காலம்: மார்ச் முதல் மே வரை; கூடு: வேர், பாசி, சிறு துளிர்கள் ஆகியன கொண்டு குறுக்காகச் செல்லும் காய்ந்த அல்லது இலைகளற்ற மரக்கிளையில் கோப்பை வடிவில் சிலந்தி நூல்களைக் கொண்டு கட்டும். கீழிருந்து பார்ப்பவர்களுக்கு இதன் கூடு மரக்கிளையில் புடைத்துக் கொண்டிருக்கும் முருடு போலவே தோன்றும். முட்டை: 2 அல்லது 3; பசுமை தோய்ந்த வெண்மை நிறம். ஆணும் பெண்ணும் குடும்பப் பொறுப்பு ஏற்கும்.

310. இலங்கைக் கருப்பு வெள்ளைக் கீச்சான்

1066. Ceylon Pied Flycather-Shrike

Hemipus picatus leggi (*Whistler*)

இது முன் கண்ட கீச்சானுக்குப் பதிலாகக் கேரளாவில் மட்டும் காணப்படுவது. தோற்றத்திலும் பழக்க வழக்கங்களிலும் இனப்பெருக்கத்திலும் பெரிதும் முன் கண்ட கருப்பு வெள்ளைக் கீச்சானை ஒத்ததே. ஆணும் பெண்ணும் ஒன்றுபோலக் காணப்படுவதால் (முன்னதில் பெண்ணின் முதுகு ஆணின் முதுகுபோலக் கருப்பாக இல்லாமல் புகைக் கருப்பாக இருக்கும்) தனி உள்ளினமாக வகுக்கப்பட்டுள்ளது.

311. மலபார் காட்டுக் கீச்சான்
10 8. Malabar Wood Shrike
Tephrodornis gularis syvicola (Jerdon)

தோற்றம்: மைனா அளவுள்ள இது சுமார் 23 செ. மீ. நீளம் இருக்கும்.

ஆணின் அலகு கொம்பு நிறமான கருப்பு; பெண்ணின் அலகு கொம்பு நிறமான பழுப்பு; ஆணின் விழிப்படலம் பசுமை தோய்ந்த மஞ்சள். பெண்ணின் விழிப்படலம் காக்கி நிறம்; ஆணுக்கும் பெண்ணுக்கும் கால்கள் ஈயநிறம்.

தலையும் பிடரியும் நீலங்கலந்த கருஞ்சாம்பல் நிறம்; முதுகு, இறக்கைகள், வால் ஆகியன சாம்பல் பழுப்பு நிறம். வாலில் கருப்பும் கருஞ்சிவப்புமான பட்டைகள் இருக்கும் மேல் அலகின் அடிப்பாகத்திலிருந்து கண் வழியாகக் காது வரை கரும்பட்டை செல்லக் காணலாம். பிட்டமும் வால் மேற்போர்வை இறகு களும் வெண்மை கலந்த சாம்பற் பழுப்பாகக் கரும்பட்டைகளோடு பெரிய வெள்ளை வளையத்தோடும் காட்சி தரும். மோவாய் தொண்டை, மார்பு ஆகியன சாம்பல் தோய்ந்த வெண்மை; வயி றும் வாலடியும் வெண்மை.

பெண்ணின் தலை உச்சி சாம்பற் பழுப்பாகவும் கண்வழியாகச் செல்லும் கோடு கருப்புக்குப் பதிலாக ஆழ்ந்த பழுப்பாகவும் இருக்கும்.

காணப்படும் இடங்கள்: மைசூர், கேரளா, தமிழ் நாட்டின் மேற்பகுதி ஆகியவற்றில் மேற்குத் தொடர்ச்சி மலைப்பகுதிகள் சார்ந்த பசுங்காடுகளிலும், ஏலக்காய்த் தோட்டங்களிலும், தேக் குக் காடுகளிலும் காணலாம். மலைகளில் 1300 மீட்டர் உயரம் வரைக் காணலாம்.

பழக்க வழக்கங்கள்: சிறு கூட்டமாக இரைதேடும் மற்ற பறவைப் பட்டாளங்களுடன் கலந்து திரியும். கிளைக்குக் கிளை தாவிப் பூச்சிகளைப் பிடிக்கும் இது தாவிப் பறந்து பறக்கும் பூச்சி களைப் பிடித்து மீண்டும் கிளையில் வந்து அமர்ந்து தின்னும். அடி மரங்களின் பட்டைகளிடையேயும் பட்டைகளில் தொற்றி உட் கார்ந்தபடி பூச்சிகளை மரப்பட்டைகளிடையே இருந்து பிடிக்கும். குட்டைகளிலோ காட்டாறுகளிலோ மாலை நேரங்களில் இவை சிறு கூட்டமாகக் குளிப்பதைக் காணலாம்.

பெரிய பூச்சிகள், பட்டாம் பூச்சி, தத்துக்கிளி, கம்பளிப்பூச்சி முதலியன உணவு.

'வீ இட்ட்டூஓ" என நான்கு முதல் ஆறு முறை கத்தும்.

இனப்பெருக்கம் : காலம் : டிசம்பர் முதல் ஜூன் முடிய. கூடு ; காண்பது கடினம்; வேர், இலை தழை ஆகியவற்றால் சிலந்தி நூல் கொண்டு பின்னிய தட்டு வடிவிலான 10 செ. மீ. விட்ட முள்ள கூட்டினைக் குறுக்கச்செல்லும் மரக்கிளையில் தரையிலிருந்து சுமார் 10 மீட்டர் உயரத்தில் கட்டும். முட்டை : 2; வெளிர் பசுமை தோய்ந்த வெண்மை நிறங்கொண்டவை.

312. இந்தியக் காட்டுக் கீச்சான்

1070. Indian Wood Shrike

Tephrodornis pondicerianus pondicerianus (Gmelin)

தோற்றம் : கொண்டைக் குருவியை அளவில் ஒத்த இது சுமார் 16 செ. மீ. நீளம் இருக்கும்.

அலகு கொம்பு பழுப்பு நிறம்; விழிப்படலம் பசுமை தோய்ந்த பழுப்பு; கால்கள் கொம்பு பழுப்பு நிறம்.

உடலின் மேற்பகுதி கருஞ்சாம்பல் பழுப்பாக இருக்கும். கீழ்ப் பகுதி சாம்பல் தோய்ந்த வெண்மை. கண் வழியாகச் செல்லும் கரும்பட்டைக் கோடும் அதற்கு மேல் உள்ள வெண்புருவமும் இதனை எளிதில் அடையாளம் காண உதவும். கரும் பழுப்பு நிற மான சதுரமான வாலில் வெளியோர இறகுகள் வெண்மையாக இருக்கும். வால் மேற்போர்வை இறகுகள் வெண்மை. ஆணும் பெண்ணும் ஒன்றுபோல.

காணப்படும் இடங்கள் : தென்னிந்தியா முழுவதும் ஆங் காங்கே வறள் காடுகளிலும் இலையுதிர் காடுகளிலும் காணலாம். முன்னைய மலபார் காட்டுக் கீச்சான் காணப்படும் மாறாப் பசுங்காடு களில் காணமுடியாது.

பழக்க வழக்கங்கள் : இணையாகவோ சிறு கூட்டமாகவோ சிறு மரங்களிலும் புதர்களிலும் கிளைக்குக் கிளையும் மரத்துக்கு மர மும் ஒன்றைப் பின்பற்றி ஒன்றாகத் தாவி இரைதேடும். இரை தேடும் பறவைப் பட்டாளங்களுடனும் சேர்ந்தும் இரைதேடும்.

கம்பளிப்பூச்சி, சிலந்திப்பூச்சி, வண்டுகள் முதலியன இதன் உணவு.

ஆண் சற்று இனிமையான குரலில் 'வீட், வீட், வீட்' எனவும், வ்வீ, வ்வீ, வ்வீ எனவும் கத்தும்.

இனப்பெருக்கம் : காலம் : பிப்ரவரி முதல் மே முடியப் பொதுவாக; கூடு : மரப்பட்டை, வேர், நார் முதலியவற்றால் சிலந்தி நூல் கொண்டு கோப்பை வடிவில் இலைகளற்ற மரக்கிளையில் இரு கிளைகள் பிரியும் இடத்தில் அமைக்கும். முட்டை : 3 அல்லது 4; பசுமை தோய்ந்த சாம்பல் நிறம் கொண்டவை.

313. பெரிய குயில் கீச்சான்

1072. Indian Large Cuckoo-Shrike

Coracino novaehollandie macei (Lesson)

தோற்றம் : புறாவைவிடச் சற்று சிறிய இது சுமார் 28 செ. மீ. நீளம் இருக்கும்.

அலகும் கால்களும் சிலேட் பழுப்பு நிறம்; விழிப்படலம் ஆரஞ்சுப் பழுப்பு நிறம்.



பெரிய குயில் கீச்சான்

பருத்த முனை வளைந்த அலகுடைய இதன் உடலின் மேற்பகுதி கருஞ்சாம்பல் நிறமாகவும் கீழ்ப்பகுதி வெண்சாம்பல் நிறமாகவும் இருக்கும். பறக்கும்போது பிட்டத்தின் வெண்மை நிறம் புலனாகும். கண்ணின் வழியே பெரிய கருப்புப் பட்டைச் செல்லும். பெண் பறவையின் கண் பட்டை மங்கிக் காணப்படுவதோடு உடலின் கீழ்ப்பகுதியும் சாம்பலும் வெண்மையுமான பட்டைகளாகக் காட்சி தரும்.

காணப்படும் இடங்கள் : தென்னிந்தியா முழுவதும் ஆங்காங்கே தோட்டங்கள், தோப்புக்கள், திறந்த வெளிக் காடுகள், ரப்பர் தோட்டங்கள் விளை நிலங்களை அடுத்த பசுங்காடுகள் ஆகியவற்றைச் சார்ந்து காணலாம். மலைகளில் 1000 மீ. உயரம் வரைக் காணலாம்.

பழக்க வழக்கங்கள் : மரங்களின் உச்சியில் சிறுகூட்டமாகவோ இணையாகவோ ஒன்றன் பின் ஒன்றாகத் தாவிப் பறந்து புழுபூச்சிகளைப் பிடிக்கும். சற்று இறக்கையடித்துப் பின் மிதந்து வீழ்ந்து எழுந்து, வீழ்ந்து எழுந்து பறக்கும். கிளைகளில் நிமிர்ந்து அம

ரும் இது மரக்கிளைகளில் சென்று அமர்ந்தவுடன் ஒரு பக்கத்து இறக்கையை விரிக்கும். பின் அடுத்த பக்க இறக்கையை விரிக்கும். இப்படி மாற்றி மாற்றிச் செய்வதைக் கொண்டே இதனை எளிதாக அடையாளம் கண்டு கொள்ளலாம் எனக் கூறுகிறார் திரு. சலீம் அலீ.

புழுபூச்சிகள், வண்டுகள், அவற்றின் முட்டைகள் ஆகியன முக்கிய உணவு.

'ட்டீஇ, ட்டீரீஇ' என இரட்டை அசைக் குரலில் பறக்கும் போது கத்தும்.

இனப்பெருக்கம்: காலம்: ஜனவரி முதல் அக்டோபர் முடிய; கூடு: மரங்களில் உயரத்தில் சிறுகிளைகள் சேரும் கவட்டியில் இலைக் கொத்துக்கள், புல், சிலந்தி நூல் முதலியன கொண்டு தட்டு வடிவில் கூடு கட்டும். முட்டை: 3; வெளிர் செம்மஞ்சள் நிறத்தில் சாக்லெட் பழுப்புக் கறைகளுடன் காட்சி தரும்.

314. தெற்கத்திய கருந்தலைக் குயில் கீச்சான்
1069. Peninsular Blackheaded Cuckoo-Shrike
Coracina melanoptera sykesi (*Strickland*)

அளவில் கொண்டைக் குருவியை ஒத்த இது தோற்றத்தில் முன்கண்ட குயில்கீச்சானை ஒத்தது. தலை முழுதும் கருப்பாகவும் உடல் கருஞ்சாம்பல் நிறமாகவும் இருக்கும். வால் கருப்பாக வெள்ளை முனைகளோடு காட்சி தரும். குளிர்காலத்தில் மைசூரி லும் கேரளாவிலும் தாராளமாகக் காணலாம். தமிழ் நாட்டில் அபூர்வமாகவே காணலாம். பழக்க வழக்கங்கள் முன்னதைப் போலவே.

315. தெற்கத்திய ஆரஞ்சு மின்சிட்டு
1081. Peninsular Orange Minivet
Pericrocotas flammeus flammeus (*Forster*)

தோற்றம்: கொண்டைக் குருவி அளவுள்ள இது சுமார் 20 செ. மீ. நீளம் இருக்கும்.

ஆண்: தலை, கழுத்து, முதுகு, ஆகியன நீலந் தோய்ந்த கருப்பு; பின் முதுகும் பிட்டமும் ஆழ்ந்த சிவப்பு; இறக்கைகள் ஆழ்ந்த சிவப்பும் கருப்புமாக இருக்கும். தொண்டை கருப்பாக வும் மார்பு, வயிறு, வாலடி, வால் ஆகியன ஆரஞ்சுச் சிவப்பாக வும் இருக்கும்.

பெண் : நெற்றியும் புருவமும் மஞ்சள்; முதுகு மஞ்சள்தோய்ந்த கருஞ்சாம்பல் நிறம்; இறக்கைகள் கருப்பும் மஞ்சளுமாக இருக்கும்; உடலின் கீழ்ப்பகுதி மஞ்சளாக இருக்கும்.

காணப்படும் இடங்கள் : கிழக்கு மேற்குத் தொடர்ச்சி மலை சார்ந்த பகுதிகளில் மலைகளில் 1800 மீ. உயரம் வரை காணலாம். இலையுதிர்காடுகளிலும் காணப்படும் இது சமவெளிப் பகுதியை விட மலைப்பங்கான பகுதிகளில் மிகுதியாகக் காணக்கிடக்கிறது.

பழக்க வழக்கங்கள் : இனப்பெருக்கம் செய்யாத காலங்களில் 20 வரையான கூட்டமாக மரங்களில் உயர இரைதேடும் பிற பறவைப் பட்டாளங்களுடன் சேர்ந்து திரியக் காணலாம், இறக்கையடித்தபடி இலை தழைகள் மிகுந்த மரக்கொம்புகளின் முன்பு பறந்து புழுபூச்சிகளைப் பிடிக்கும். கிளையில் அமர்ந்திருந்து தாவிப் பறந்து பறக்கும் பூச்சிகளைப் பிடிப்பதும் உண்டு. மரத்துக்கு மரம் ஒன்றன் பின் ஒன்ருக நேராக வாலை விரித்து இறக்கை அடித்துப் பறக்கும். காதலூட்டாட்டத்தின் போது ஆணும் பெண்ணும் உயரப் பறந்து இறக்கை விரித்தபடி சுழன்று வீழ்ந்து விளையாடும்.

கம்பளிப்பூச்சி, சிள்வண்டு முதலிய புழுபூச்சிகள் முக்கிய உணவு.

ட்டுவிட்டுவி, ட்டுவிட்டுவி எனவும் ட்டுவீஇ, ட்டுவீஇ எனவும் சீழ்க்கைக் குரலில் இனிமையாகக் கத்தும்.

இனப்பெருக்கம் : காலம் : பிப்ரவரி முதல் செப்டம்பர் முடிய பலபகுதிகளில் பல சமயங்களில்; கூடு : மரங்களில் முளைக்கும் காளான், மரப்பட்டை, சிலந்தி முட்டை ஓடுகள், காய்ந்த இலைகளின் தண்டுகள் ஆகியவற்றைப் பயன்படுத்திச் சிலந்தி நூல் கொண்டு மரக்கிளைகளின் மேல் கோப்பை வடிவில் கூடு அமைக்கும். முட்டை : 2 அல்லது 3; வெளிர் நீலந் தோய்ந்த பசுமையாக மஞ்சள் பழுப்புச் சாம்பல் பழுப்புப் புள்ளிகளுடன் காணப்படும்.

316. தெற்கத்திய சின்ன மின்சிட்டு

1093. Southern Small Minivet

Pericrocotus cinnamomeus cinnamomeus (*Linnaeus*)

தோற்றம் : அளவில் சிட்டுக் குருவியை விடச் சிறிய இதன் வால் மட்டும் சற்று நீளமாக இருக்கும். சுமார் 15 செ. மீ. நீளம் இருக்கும்.

ஆண் : தலை, தொண்டை, முதுகு ஆகியன ஆழ்ந்த கருஞ் சாம்பல் நிறம். பிட்டம் ஆரஞ்சு சிவப்பு; இறக்கைகள் கருப்பாக ஆரஞ்சு மஞ்சள் கறைகளுடன் காணப்படும். நீண்ட வாலின் மேற்பகுதி கருப்பாகவும் கீழ்ப்பகுதி ஆரஞ்சு மஞ்சளாகவும் இருக்கும். மார்பு நல்ல ஆரஞ்சு நிறம்; வயிறு மஞ்சள். பெண்ணின் மேல் உடல் ஆணைப் போன்றதே. உடலின் அடிப்பகுதி வெளிர் சாம்பல் நிறமாகச் சற்று மஞ்சள் தோய்ந்து காணப்படும்.

காணப்படும் இடங்கள் : கேரளா தவிர தென்னிந்தியா முழுதும் ஆங்காங்கே வறள் காடுகளிலும் தோப்புக்கள் தோட்டங்களிலும் காணலாம். மலைகளில் 1500 மீ. உயரம் வரை காணலாம்.

பழக்க வழக்கங்கள் : சமவெளிகளில் தோப்புக்கள் சாலையோர மரங்கள் ஆகியவற்றில் 5 முதல் 8 வரையான சிறு கூட்டமாகக் காணலாம். இனப்பெருக்கம் செய்யும் காலத்தில் இணையாகவே காணப்படும். இரைதேடும் பிற பறவைப் பட்டாளங்களோடே சேர்ந்தே பெரும்பாலும் இரைதேடும். நுனிச் சிமிர்களில் தாவித் தாவிப் பறந்து பூச்சி புழுக்களைப் பிடிக்கும். பறக்கும் பூச்சிகளைப் பாய்ந்து பறந்து பிடிப்பதும் உண்டு.

கம்பளிப்பூச்சி, முதலிய சிறு பூச்சி புழுக்கள் இதன் உணவு.

ஸ்வீஇ, ஸ்வீஇ எனப் பறக்கும்போது சீழ்க்கைக் குரலில் கத்தும்.

இனப்பெருக்கம் : காலம் : பிப்ரவரி முதல் செப்டம்பர்வரை; கூடு : கோப்பை வடிவில் மரக்கிளையில் புல், வேர், களான், மரப் பட்டை முதலியன கொண்டு அமைக்கும். முட்டை : 2 முதல் 4 வரை; வெளிர் நீலமாகவோ பசுமை கலந்த வெண்மையாகவோ செம்பழுப்புப் புள்ளிகளுடன் காணப்படும்.

317. மலபார் சின்ன மின்சிட்டு

1094. Malabar Small Minivet

Pericrocotus cinnamomeus malabaricus (Gmelin)

தோற்றத்திலும் அளவிலும் பிற பழக்க வழக்கங்களிலும் முன் கண்ட தெற்கத்திய சின்ன மின் சிட்டினை ஒத்த இதன் தொண்டை மட்டும் நல்ல கருப்பாக இருப்பதால் தனி உள்ளினமாகப் பிரிக்கப்பட்டுள்ளது. கேரளாவிலும் மைசூரின் மேற்பகுதியிலும் காணப்படுவது.

Family: Irenidae

நீலச் சிட்டுக்கள், மஞ்சள் சிட்டுக்கள்: பச்சைச் சிட்டுக்கள்

(FAIRY BLUEBIRDS, IORAS, LEAF BIRDS)

318. தெற்கத்திய மஞ்சள் சிட்டு

1100. Peninsular Indian Iora

Aegithimna tiphia deignani (*Hall*)

தோற்றம்: சிட்டுக் குருவி அளவுள்ள இது சுமார் 14 செ. மீ. நீளம் இருக்கும்.

அலகு நீலந் தோய்ந்த சிலேட் நிறம்; விழிப்படலம் வெளிர மஞ்சள்; கால்கள் சிலேட் சாம்பல் நிறம்.

ஆணின் உடல் கருப்பும் மஞ்சளுமாகப் பொதுத் தோற்றத்தில் பட்டாணிக் குருவியை ஒத்திருக்கும். இறக்கைகளில் இரண்டு வெண்பட்டை காணலாம்.

பெண்ணின் உடல் மஞ்சள் தோய்ந்த பச்சையாக இருக்கும். இறக்கைகள் பசுமை தோய்ந்த பழுப்பாக இரு வெண்பட்டைகளோடு காட்சி தரும்.

இனப்பெருக்கம் செய்யாத பருவத்தில் ஆணின் தோற்றம் பெண்ணின் தோற்றத்தை ஒத்திருக்கும். வால் மட்டும் ஆண்டு முழுதும் கருப்பாக இருக்கும்.

காணப்படும் இடங்கள்: கேரளா நீங்கலாகத் தென்னிந்தியா முழுவதும் இலையுதிர்காடுகளிலும் தோட்டங்களிலும் விளைநிலங்களைச் சார்ந்த தோப்புக்களிலும் காணலாம்.

பழக்க வழக்கங்கள்: இணையாக மரங்களின் இலை மிகுந்த கிளைகளிடையே தாவித் திரியும். வேட்டையாடும் பிற பறவைப் பட்டாளங்களுடனும் சேர்ந்து வேட்டையாடும். தலை கீழாகத் தொங்கியும், கிளைகளில் தொத்தியும் இலைகளிடையே இருக்கும் பூச்சிகளைத் தேடிப் பிடிக்கும்.

பூச்சிகளும் அவற்றின் முட்டையும் இதன் உணவு.

பலவகைக் குரல்களில் இனிமையாகக் காலை நேரங்களில் தொடர்ந்து நெடுநேரம் கத்தும்.

இனப்பெருக்கம்: காலம்: ஜனவரி முதல் ஆகஸ்ட் வரை; கூடு: இரு கிளையாகப் பிரியும் சிமிரில் மரப்பட்டை, சிலந்தி நூல் ஆகியவற்றால் கோப்பை போலக் கூடு அமைத்து இலைகளால் மெத்தென ஆக்கும். முட்டை: 2 அல்லது 3; இளஞ் சிவப்பான வெண்நிறம். ஆணும் பெண்ணும் கூடு கட்டி அடைகாத்துக் குஞ்சுகளைப் பேணும்.

319. சிலோன் மஞ்சள் சிட்டு

1101. Ceylon Iora

Aegithina tiphia multicolor (Gmehin)

தோற்றத்திலும் அளவிலும் முன்னதை ஒத்த சிலோன் மஞ்சள் சிட்டின் ஆணின் மேல் தோற்றம் இனப்பெருக்கம் செய்யும் காலங்களில் ஆழ்ந்த கருப்பாகவும் இனப்பெருக்கம் செய்யாத காலங்களில் ஆழ்ந்த மஞ்சள் தோய்ந்த பச்சையாகவும் காணப் படுவதால் தனித்த உள்ளினமாகப் பிரிக்கப்பட்டுள்ளது. கேரளாவில் பல காட்டுக் கணவாய்ப் பகுதிக்குத் தெற்கேயும் இராமேஸ்வரம் தீவிலும் இதனைக் காணலாம்.

320. தென்னிந்தியப் பொன் நெற்றிப் பச்சைச் சிட்டு

1104. Southern Goldfronted Chloropsis

Chloropsis aurifrons frontalis (Pelzeln)

தோற்றம்: கொண்டைக் குருவி அளவுள்ள இது சுமார் 19 செ. மீ. நீளம் இருக்கும்.

அலகு கருப்பு; கால்கள் பசுமை தோய்ந்த சிலேட் நிறம்; விழிப்படலம் ஆழ்ந்த பழுப்பு நிறம்.



தென்னிந்தியப் பொன் நெற்றிப் பச்சைச் சிட்டு

இலைப் பச்சை நிறமான இதன் நெற்றி ஆரஞ்சு நிறமாக இருக்கும் அலகடி, கண் காது சார்ந்த பகுதிகள், மோவாய் ஆகியன கருப்பு கன்னங்கள் ஆழ்ந்த நீலம். மார்பு, வயிறு, வாலடி எல்லாம் இலைப்பச்சை நிறம்.

காணப்படும் இடங்கள்: மைசூர்; கேரள மாநிலத்தில் மலபார் மாவட்டத்திற்கு வடக்கே; தமிழ் நாட்டில் சேரவராயன், நீலகிரி, பழநி மலைப்பகுதிகள்: ஆந்திராவில் கிழக்குத் தொடர்ச்சி மலைப் பகுதிகளில் காணலாம். (இதனை ஒத்த தோற்றம் கொண்ட ஆனால் அளவில் சற்றுச் சிறிய சிலோன் பொன் நெற்றிப் பச்சைச் சிட்டு C. a. insularsis மலபார் மாவட்டத்திற்குத் தெற்கே கேரளத்தில் காணப்படும் உள்ளினமாகும்.)

பழக்க வழக்கங்கள்: எப்பொழுதும் மரங்களிலேயே இருக்கும் இதனை இணையாகவோ சிறு கூட்டமாகவோ மரங்களின் பச்சை இலை தழைகளினூடே காணலாம். இதன் உடல் நிறம் சூழ்நிலை நிறத்தில் ஒன்றிவிடுவதால் இதனைக் கண்டு கொள்வது கடினம். மஞ்சள் சிட்டைப் போலவே தலைகீழாகத் தொங்கியும் இலைக் கொத்துக்களிடையே நுழைந்தும் இரைதேடும். மற்றப் பறவை களை இது தான் இரை தேடும் மரத்தை நெருங்க விடாது மரங் களில் மலர்கள் மலரும் பருவத்தில் மலர்த்தேனை விரும்பி உண் ணும்.

எறும்பு, சிலந்தி முதலிய புழு பூச்சிகளோடு சிறு பழங்களை யும் மலர்த்தேனையும் உண்ணும்.

பல சிறு பறவைகளின் குரலில் சாயர்த்தியமாகக் கத்திக் காட்டும். கரிச்சான், மஞ்சள் சிட்டு, வெள்ளை மார்பு மீன் கொத்தி தையற் சிட்டு ஆகியவற்றின் குரலில் இது கத்தியதைக் கேட்டுள் ளனர். உரத்த குரலில் சப்தமிடுவதோடு சீழ்க்கைக் குரலில் கத்த வும் செய்யும்.

இனப்பெருக்கம்: காலம்: பிப்ரவரி முதல் ஆகஸ்ட் வரை. கூடு: சிறு இலைக் கொத்துக்கள், புல் இலை, மரப்பாசி ஆகிய வற்றைக் கொண்டு கோப்பை வடிவிலான கூட்டினை மரத்தில் புறத்தே நீண்டு தொங்கும் கிளைகளில் புல்லாலும் மூங்கில் இலை யாலும் கட்டி அமைக்கும். முட்டை: 2 அல்லது 3; மஞ்சள் தோய்ந்த கிரீம் நிறங்கொண்டு வெளிர் செந்நிறப் புள்ளிகளோடும் கோடுகளோடும் காட்சி தரும்.

321. ஜெர்டான் பச்சைச் சிட்டு

1107 Jerdon's Chloropsis

Chloropsis cochinchinensis jerdoni (Blyth)

தோற்றம்: கொண்டைக் குருவியைவிட அளவில் சிறியது. சுமார் 18 செ. மீ. நீளம் இருக்கும்.

அலகு ஆணுக்குக் கருப்பாகவும் பெண்ணுக்குக் கொம்பு நிறப் பழுப்பாகவும் இருக்கும்; விழிப்படலம் பழுப்பு; கால்கள் சிலேட் சாம்பல் நிறம்.

ஆண் தோற்றத்தில் பொன் நெற்றிப் பச்சைச் சிட்டை ஒத்தது; நெற்றி ஆரஞ்சு நிறத்திற்குப் பதிலாக மஞ்சள் தோய்ந்த பச்சையாக இருக்கும். மோவாய், தொண்டை ஆகியவற்றின் கருப்புப் பரப்பு மிகக் குறுகியதாக இருக்கும். தொண்டையின் கருப்பைச் சார்ந்த மஞ்சள் வளையம் சற்று அகலமாக இருக்கும். பெண்ணின் மோவாயும் தொண்டையும் கருப்புக்குப் பதிலாக நீலந் தோய்ந்த பசுமையாக இருக்கும். கன்னக்கோடு பசுமை தோய்ந்த நீலமாக இருக்கும்.

காணப்படும் இடங்கள்: தென்னிந்தியா முழுதும் ஆங்காங்கே புதர் காடுகளிலும், காட்டு எல்லையிலுள்ள விளை நிலங்களிலும், தோப்புகளிலும் காணலாம். சென்ற பச்சை சிட்டின் இயல்புக்கு மாறாக இது அடர்த்தியற்ற வறள்காடுகளையே விரும்புவது. மலைகளில் 1000 மீட்டர் உயரம் வரை காணலாம்.

பழக்க வழக்கங்கள்: மரங்களில் உயர இலை தழைகளினூடே தன்னைச் சுலபமாக மறைத்துக் கொண்டு திரிவது இது. பழக்க வழக்கங்களும், உணவும், குரலும் பெரிதும் முன்னதைப் போலவே.

இனப்பெருக்கம்: காலம்: நவம்பர் முதல் மே வரை சிறப்பாக; பொதுவாக ஆண்டு முழுதும்; கூடு: முன்னதைப் போல; முட்டை: 2; அபூர்வமாக 3; கிரீம் நிறத்தில் பழுப்பு, கருப்பு, ஊதாக் கோடுகளுடனும் புள்ளிகளுடனும் காணப்படும்.

322. நீலச் சிட்டு
1109 Fairy Bluebird
Irena puella puella (Latham)

தோற்றம்: மைனாவை விடச் சற்றுப் பெரிய இது சுமார் 27 செ. மீ. நீளமிருக்கும்.

நீலச் சிட்டு

ஆணின் உடலின் மேற்பகுதி நல்ல நீல நிறமாக இருக்கும். உடலின் கீழ்ப்பகுதி வெல்வெட் கருப்பாக இருக்கும். வாலடி நீல நிறம். பெண் பறவை நீலந் தோய்ந்த பசுமையான நிறங் கொண்டது. கண்ணின் முன் பகுதி கருப்பாக இருக்கும்.



தென்னிந்தியாவில் நீலச்சிட்டுக்காணப்படும் பகுதி

காணப்படும் இடங்கள்: அதிக மழை பெய்யும் மேற்குத் தொடர்ச்சி மலை சார்ந்த பகுதிகளிலும் நீலகிரி, பழநி மலைகளிலும் காணலாம். குடகில் குளிர்காலத்தில் காணப்பட்ட குறிப்பு உண்டு.

பழக்க வழக்கங்கள்: இனப்பெருக்கம் செய்யாத பருவங்களில் 6 முதல் 8 வரையான சிறு கூட்டமாக மரங்களின் உச்சியில் காணலம். இரைதேடப் புதர்களை நாடி இறங்குவதும் உண்டு. எபபோதும கிளைக்குக்கிளை தாவிப் பறந்து அலைந்தபடியே இருக்கும்.

பழங்கள், சிறுபழங்கள், மலர்த்தேன் ஆகியவற்றை விரும்பி உண்ணும். பூச்சிகளைத் தின்பதும் உண்டு.

வாலை அசைத்தபடி விஃபிட்-டியு, விஃபிட்-டியு என மென்மையான சீழ்க்கைக் குரலில் தொடர்ந்து கத்தியபடி இருக்கும். வீஇட், வீஇட் எனவும், பீகுயுக், பீகுயுக் எனவும் ஓசைப்படும் வகையில் கத்துவதும் உண்டு. மேலும் பலவகைப்பட்ட மென்மையான குரலில் ஒலி எழுப்பும்.

இனப்பெருக்கம்: காலம்: ஜனவரி முதல் ஜூன் வரை; கூடு: அடர்ந்த பசுங்காடுகளின் நடுவில் மரங்களின் உயர் கிளைப் பிரிவில் நீண்ட உலர்ந்த சிறு குச்சிகளால் 16 முதல் 20 செ. மீ. நீளமுள்ள அடர்த்த மேடையை அமைத்து அதனைப் பச்சைப்பாசியாலும், வேர்களாலும், இலைத் தண்டுகளாலும் வேயும்: முட்டை: 2; அபூர்வமாக 3; ஆலிவ் கலத்த சாம்பல் நிறமாகவோ, பசுமை தோய்ந்த வெண்மையாகவோ பழுப்புக் கறைகளோடு காட்சி தரும். பெண்ணே அடை காக்கும். ஆணும் பெண்ணும் குஞ்சுகளைப் பேணும்.

Family : Pygnonotidae

கொண்டைக் குருவிகள்
(BULBULS)

323. கருஞ்சாம்பல் தலைக் கொண்டைக் குருவி
1114. Greyheaded Bulbul
Pycnonotus priocephalus (Jerdon)

தோற்றம்: கொண்டைக் குருவியைவிட அளவில் சற்றுச் சிறிய இது சுமார் 19 செ. மீ. நீளம் இருக்கும்.

அலகு பசுமை தோய்ந்த மஞ்சள் நிறம்; விழிப்படலம் கருஞ்சாம்பல் நிறம்; கால்கள் ஆரஞ்சு மஞ்சள் நிறம்.



கருஞ்சாம்பல் தலைக் கொண்டைக் குருவி

தோற்றத்தில் இது அளவில் சிறிய பச்சைப்புறாவோ என ஐயுறத்தக்கதாக இருக்கும். தலை கருஞ்சாம்பல் நிறம்; நெற்றி பச்சை; உடலின் மேற்பகுதி ஆலிவ் பச்சையாகப் பழுப்புப்

பெரும் புள்ளிகளுடன் காட்சி தரும். வால் மேற்போர்வை இறகுகளும் நடுவாலும் கருஞ்சாம்பல் நிறம்; வாலின் ஓர இறகுகள் ஆலிவ் தோய்ந்த ஆழ்ந்த பழுப்பு நிறமாகக் கருஞ்சாம்பல் நிறமுனைகளோடு காட்சி தரும். மோவாய் கருப்பு; வயிறு ஆலிவ் பச்சை; வால் சதுரமாக இருக்கும்.

காணப்படும் இடங்கள்: மேற்குத் தொடர்ச்சி மலைசார்ந்த பகுதிகளில் நல்ல மழை பெய்யும் பகுதிகளில் சமவெளி முதல் 1500 மீட்டர் உயரம் வரை காணலாம். சிறப்பாக 600 முதல் 900 மீட்டர் உயரம் வரை உள்ள லாண்டானா புதர் நிலங்களிலும் ஈரமிக்க மூங்கிற் காடுகளிலும் காணலாம். இதன் வாழ்விடமும் சிவப்புத் தொண்டைக் கொண்டைக் குருவியின் வாழ்விடமும் ஒன்று போன்றன.

பழக்க வழக்கங்கள்: பழமரங்களின் உயர் கிளைகளில் தனித்தோ, இணையாகவோ, சிறு கூட்டமாகவோ மற்ற உள்ளிணக் கொண்டைக் குருவிகளோடும் மாங்குயில்களோடும் நீலச் சிட்டுக்களோடும் சேர்ந்து இரைதேடும்.

பழங்களும் புழு பூச்சிகளும் முக்கிய உணவு.

ச்சீஇக், ச்சீஇக் எனக் குரல் கொடுக்கும்.

இனப்பெருக்கம்: காலம்: மார்ச் முதல் ஜூலை வரை; கூடு: காய்ந்த புல், பட்டை, மூங்கில் இலை, வேர் முதலியன கொண்டு புதர்களில் தாழ்வான இடத்தில் சிலந்தி நூலால் கோப்பை வடிவில் கூடு அமைக்கும். முட்டை: 1; சிலபோது 2;

324. சிவப்புத் தொண்டை கொண்டைக் குருவி

1116. Rubythroated Yellow Bulbul

Pycnonotus melanicterus gularis (Gould)

தோற்றம்: கொண்டைக் குருவி அளவுள்ள இது சுமார் 18 செ மீ. நீளம் இருக்கும்.

அலகு பழுப்புத் தோய்ந்த கருப்பு; விழிப்படலம் வெளிர் மஞ்சள் கால்கள்; பழுப்பு.

கொண்டையற்ற கருந்தலையோடு கூடிய ஆலிவ் மஞ்சளும் நல்ல மஞ்சளுமான நிறங்கொண்ட கொண்டைக்குருவி இது. கண் புருவம் வெண்மையாக இருப்பது கொண்டும் தொண்டை ஆரஞ்

சுச் சிவப்பாக இருப்பது கொண்டும் இதனை எளிதாக அடையா ளம் கண்டு கொள்ளலாம்.

காணப்படும் இடங்கள்: மேற்குத் தொடர்ச்சிமலை சார்ந்த பசுங்காடுகளின் ஓரங்களிலும் மூங்கிற் காடுகளிலும் லாண்டானா புதர்களிலும் காணலாம். மலைகளில் 1000 மீட்டர் உயரம் வரை காணப்படும் இது விளை நிலங்களில் காணப்படுவதில்லை.

பழக்க வழக்கங்கள்: காடுகளில் மரங்களின் உச்சியில் இணை யாக இரைதேடும் இது பழங்களோடு புழுபூச்சிகளையும் உண்ணும். இனப்பெருக்கம் செய்யாத காலங்களில் சிறு கூட்டமாகச் சேர்ந்து திரியும். ஒன்றுக்கொன்று குரல் கொடுத்துத் தொடர்பு கொள் ளும் இது சிவப்பு மீசைக் கொண்டைக் குருவியைப் போல சில இனிய குரல் ஒலிகளையும் எழுப்பும்.

இனப்பெருக்கம்: காலம்: பிப்ரவரி முதல் மே முடிய; கூடு: மஞ்சள் நிறமான பழுத்த இலைகளால் சிலந்தி நூல் கொண்டு புதர்களில் சிறிய கோப்பை வடிவான கூடு அமைத்துப் புல்லால் மெத்தென ஆக்கும். முட்டை; 2 இளஞ் சிவப்புத் தோய்ந்த வெண்மையாகச் சாம்பல் நிறக் கறைகளோடு காட்சி தரும்.

325. தெற்கத்திய சிவப்பு மீசைக் கொண்டைக்குருவி

1120. Southern Redwhiskered Bulbul

Pycnonotus jocosus fuscicandatus (Gould)

தோற்றம்: கொண்டைக் குருவி அளவுள்ள இதன் நீளம் 20 செ. மீ.

அலகு கொம்பு நிறமான கருப்பு; விழிப்படலம் பழுப்பு; கால் கள் கொம்பு நிறமான பழுப்பு.

நிமிர்ந்து நிற்கும் கருப்புக் கொண்டையோடு கூடிய இதன் உடலின் மேற்பகுதி கருப்பாக இருக்கும். கண்ணுக்குப் பின் ஆழ்ந்த சிவப்பு மீசையும் வெளுத்த மார்பும் வயிறும் ஆழ்ந்த சிவப்பு வாலடியும் இதனைத் தெளிவாக அடையாளங் காட்டும். கறுத்த கழுத்துப் பட்டையும் இதற்கு இருக்கும்.

காணப்படும் இடங்கள்: மைசூர் கேரளா மாநிலங்களிலும் மேற்கு ஆந்திரப் பிரதேசத்திலும் தெற்கு மேற்குத் தமிழ் நாட்டி

லும் மலைத்தொடர்களைச் சார்ந்த புதர்காடுகளிலும் மலைவாசஸ் தலத் தோட்டங்களிலும் இதனைக் காணலாம். அடர்ந்த காடுகளை இது விரும்புவதில்லை. (வடகிழக்குத் தமிழ் நாட்டிலும் கிழக்கு ஆந்திரப் பிரதேசத்திலும் வங்காளச் சிவப்பு மீசைக் கொண்டைக் குருவி, BENGAL REDWHISKERED BULBUL P. j. emeria இதற்குப் பதிலாகக் காணப்படுகிறது. அதன் சிவப்பு மீசையும் கொண்டையும் இதனுடையதைக் காட்டிலும் சற்று நீளமானவை யாகையால் தனி உள்ளினமாகப் பிரிக்கப்பட்டுள்ளது. பழக்க வழக்கங்கள் முதலியன இதனைப் போன்றனவே.

பழக்க வழக்கங்கள்: உரிய சூழலில் தாராளமாகக் காணப்படும் இதனை நகரங்களின் நடுவில் கூடக் காணலாம். 30 வரையான கூட்டமாகத் திரியும். மற்ற கொண்டைக் குருவிகளோடு கலந்து இனப்பெருக்கம் செய்யும் இடத்தைச் சார்ந்தே திரியும் பழக்கம் உடையது. மரங்களில் இலைதழைகளிடையேயும் புதர்களிலுமே பெரும்பாலும் இரை தேடும். உச்சிக் கிளைகளிலிருந்து பாய்ந்து பறந்து பறக்கும் பூச்சிகளைப் பிடிப்பதும் உண்டு. பழத்தோட்டங்களில் பழங்களும் பூவரும்பு முளை முதலியவற்றிற்கும் ஓரளவு இது அழிவு செயயும். கூட்டை நெருங்கினால் ஆணும் பெண்ணும் கலக்கம் அடைந்து வால் போர்வை இறகுகளை உப்பிக் கொண்டு கிளைக்குக்கிளை அமைதியின்றித் தாவித் தாவிப் பறந்தபடி இருக்கும். மனிதர் குடியிருப்புக்கு அருகில் கூடு கட்டும் பறவைகள் மனிதர்களைக் கண்டு அவ்வளவாக அஞ்சுவதில்லை. சிலர் இதனை அன்பாகப் பேணி வளர்க்கின்றனர். வளர்ப்பவர்கள் குரலுக்குப் பணிந்து பறந்து வரும். காதலூடாட்டத்தின் போது ஆண் பெண்ணின் முன் தலை தாழ்த்தி வாலை விரித்து, இறக்கைகளைத் தொங்கவிட்டு அவற்றை அதிர்வோடு அசைத்து அழகு காட்டும்.

பழங்கள், புழுபூச்சிகள் முக்கிய உணவு.

பலவகைத் தொனிகளில் எப்பொழுதும் குரல் கொடுத்தபடி இருக்கும்.

இனப்பெருக்கம்: காலம்: டிசம்பர் முதல் ஜூன் வரை; மீண்டும் செப்டம்பரில்; கூடு: காய்ந்த சிறு குச்சிகள் இலைகள் ஆகியவற்றால் சிலந்தி நூல் கொண்டு கோப்பை வடிவில் பல்வேறு வகைப்பட்ட இடங்களில் கூடு அமைக்கும். முட்டை: 3; சில போது 2; இளஞ்சிவப்பாக சிவப்புப் பழுப்புக் கறைகளோடு காட்சி தரும்.

326. சிவப்பு வாலடிக் கொண்டைக் குருவி
1123. Redvented Bulbul
Pycnonotus cafer cafer (Linnaeus)

தோற்றம்: மைனாவை விடச் சிறிய இதன் நீளம் சுமார் 20 செ. மீ.

அலகு கருப்பு; விழிப்படலம் ஆழ்ந்த பழுப்பு; கால்கள் பழுப் புத் தோய்ந்த கருப்பு.

சிறுகொண்டையோடு கூடிய கருந்தலை கொண்ட இதன் உடல் மணல் பழுப்பாக செதிள் தோற்றத்தோடு காட்சி தரும். தொண்டை கருப்பு; பிட்டம் வெள்ளை; வாலடி நல்ல சிவப்பு; வால் கருப்பாக வெள்ளை விளிம்போடு காட்சி தரும்.

காணப்படும் இனங்கள்: தென்னிந்தியா முழுதும் சமவெளி களில் தாராளமாகக் காணப்படும் கொண்டைக்குருவி இது. மலை களில் 1500 மீட்டர் உயரம் வரை மனிசர் வாழ்விடங்களைச் சார்ந்து காணப்படும். புதர்க்காடுகள், இலையுதிர்காடுகள், தோட்டங்கள் வேலிகள் ஆகியவற்றைச் சார்ந்து காணப்படும்.

பழக்க வழக்கங்கள்: இணையாக ஓயாது குரல் கொடுத்தபடி லாண்டானா புதர், கள்ளி வேலி, ஆகியவற்றில் திரியும் இவை இனப்பெருக்கம செய்யாத காலத்தில் சிறு கூட்டமாகத் திரளும். அத்திப் பழங்களை விரும்பி உண்ணக் காணலாம். மரங்களிலும் புதர்களிலும் இரைதேடும் இது எறும்பு முதலிய புழுபூச்சிகளைப் பிடிக்கத் தரையில் இறங்குவதும் உண்டு. பாய்ந்து பறந்து பறக் கும் பூச்சிகளையும் பிடிக்கும். ஆற்றலோடு சற்று வேகமாகப் பறக்குமேனும் நெடுந்தூரம் பறக்கும் ஆற்றல் அற்றது. காத லாட்டத்தின் போது ஆண் இறக்கைகளை தலைக்கு மேல் உயர்த்தி மேலும் கீழும் வேகமாக ஆட்டும். வாலிறகுகளை அப் போது விரித்துக் கொள்ளும். எதிரிகளைக் கோபமாக விரட்டும் போது வால் கீழ் சிவப்புப் போர்வை இறகுகள் விறைத்து நிற்க உரக்கக் கத்தும்.

சிறு பழங்கள், மலர்த்தேன், கம்பளிப்பூச்சி, கரையான் முத லியன முக்கிய உணவு.

பீட் விட் விட் என்றும் பீப்-ஆ பீப்-ஆ என்றும் மேலும் பலவகைக் குரலிலும் கத்தும். கழுகுகள் வட்டமிடத் தொடங்கிய வுடன் முதலில் ஆபத்துக் குரல் கொடுத்துப் பிற பறவைகளை எச் சரிப்பது இதுவே.

இனப்பெருக்கம்: காலம்: பிப்ரவரி முதல் நவம்பர் வரை; சிறப்பாகப் பருவ மழை பெய்யும் போது. கூடு: வேர் சிறு கொத்துக்கள், காய்ந்த இலைகள் ஆகியன கொண்டு சிலந்தி நூலால் கோப்பை உருவில் புதர்கள், மரங்களின் சிறு கிளைகள், ஈச்சமரம், முதலிய பல்வேறு இடங்களில் கூடு அமைக்கும். கட்டடங்களில் உயரக் கூடு அமைப்பதும் உண்டு. முட்டை: 2 அல்லது 3; இளஞ் சிவப்பாக ஆழ்ந்த பழுப்புக் கறைகளுடன் காட்சி தரும். அடை காக்கும் காலம் 14 நாட்கள்; இரண்டு மூன்று முறை ஒரு பருவத்தில் குஞ்சு எழுப்பும்.

327. மஞ்சள் தொண்டைக் கொண்டைக் குருவி

1135. Yellow Throated Bulbul

Pycnonotus xantholaemus (Jerdon)

தோற்றம்: கொண்டைக் குருவி அளவுள்ள இதன் நீளம் 20 செ. மீ.

அலகும் கால்களும் கருப்பு; விழிப்படலம் ஆரஞ்சுப் பழுப்பு;

கொண்டையற்ற இதன் உடல் சாம்பலும் மஞ்சளுமாகத் தோற்றம் தரும். தலை உச்சி, மோவாய், தொண்டை ஆகியன நல்ல மஞ்சள் நிறமாக இருக்கும். கால் தொடைகளும் வாலடியும் மஞ்சள்; இறக்கைகள் பழுப்பு; வால் பழுப்பாக வெளிர் மஞ்சள் முனைகளோடு காட்சி தரும்.

காணப்படும் இடங்கள்: தெற்கு ஆந்திரா கிழக்கு மைசூர் வட தமிழ்நாடு ஆகிய பகுதிகளில் பெரிய மரங்களிடையிட்ட முட்புதரான காடுகளில் சிறு மலைகளைச் சார்ந்து காணலாம்.

பழக்க வழக்கங்கள்: கொண்டைக் குருவியோடு சேர்ந்து இணையாகத் திரியும் இது மிகுந்த அச்சம் கொண்ட சுபாவம் உடையது. எப்பொழுதும் சுறுசுறுப்பாக இருக்கும் இது மனிதர்களைக் கண்டால் அஞ்சி ஒடுங்கும் பழக்கம் கொண்டதாகையால் இதன் பழக்க வழக்கங்கள் அதிகமாக அறியப்படவில்லை.

பழங்களும் பூச்சிகளும் இதன் முக்கிய உணவு.

இனப்பெருக்கம்: காலம்: மே முதல் ஜூலை முடிய; கூடு: சிறு குச்சிகளால் இலை தழைகள் வேயப்பட்டு கோப்பை போன்ற அமைப்பில் சிலந்தி நூல் கொண்டு கட்டும். முட்டை; 2 அல்லது 3; வெண்மையான செம்புள்ளிகளோடு காட்சி தரும்.



தென்னிந்தியாவில் மஞ்சள் தொண்டைக்கொண்டைக்குருவி காணப்படும் இடங்கள்

328. வெண்புருவக் கொண்டைக் குருவி
1138. White Browed Bulbul
Pycnonotus luteolus luteolus (Lesson)

தோற்றம் : கொண்டைக்குருவி அளவுள்ள இதன் நீளம் 20 செ. மீ.

அலகு கருப்பு; விழிப்படலம் இரத்தச் சிவப்பு; கால்கள் சிலேட் கருப்பு நிறம்.

கொண்டை அற்ற இதன் உடலின் மேற்பகுதி ஆலிவ் நிற மாகவும் கீழ்ப்பகுதி வெள்ர் மஞ்சள் தோய்ந்த வெண்மையாகவும் இருக்கும். வாலடியும் பிட்டமும் நல்ல மஞ்சளாக இருக்கும். கண்ணுக்கு மேலும் கீழுமாக இரண்டு வெண்புருவங்கள் காது வரை வரக் காணலாம்.

காணப்படும் இடங்கள் : தென்னிந்தியாவின் கிழக்குப்பகுதி யில் மிகுதியும் காணப்படும் இது மழை மிகுந்த மேற்குத்தொடர்ச்சி மலைப் பகுதிகளில் காணப்படுவதில்லை. ஊர்புறங்களைச் சார்ந்த வறள் காடுகளிலும், தோட்டங்களிலும் காணலாம்.

பழக்க வழக்கங்கள் : இணையாகத் திரியும் இது அஞ்சும் சுபா வம் உடையது. புதர்களில் கத்தும் குரல் கேட்கலாமே யன்றிக் காணுதல் அரிது.

பழங்கள், சிலந்தி முதலிய பூச்சிகள் முக்கிய உணவு.

புதர்களில் மறைவாக இருந்து உரத்த குரலில் கலகலப்பான சீழ்க்கைக் குரலில் பாடும்.

இனப்பெருக்கம் : காலம் : மார்ச் முதல் ஆகஸ்ட் முடிய; கூடு : புதர்களில் கோப்பை வடிவில் சிறு குச்சிகள், வேர், மயிர் ஆகியன கொண்டு சிலந்தி நூலால் கட்டும். முட்டை: 2; சிவப் புத் தோய்ந்த வெண்மை நிறம் கொண்டிருக்கும்.

329. மஞ்சள் புருவக் கொண்டைக் குருவி
1144. Yellow Browed Bulbul
Hypsipetes indicus indicus (Jerdon)

தோற்றம் : கொண்டைக் குருவி அளவுள்ள இது 20 செ. மீ. நீளம் இருக்கும்.

அலகு கருப்பு; விழிப்படலம் பழுப்புத் தோய்ந்த சிவப்பு; கால்கள் சிலேட் சாம்பல் நிறம்.

கொண்டையில்லாத இதன் மேல் தோற்றம் ஆலிவ் மஞ்சளாகவும் நெற்றியும் கண்ணின் மேற் புருவமும் நல்ல மஞ்சளாகவும் உடலின் கீழ்ப்பகுதி எலுமிச்சை மஞ்சளாகவும் இருக்கும்.

மஞ்சள் புருவக் கொண்டைக் குருவி

காணப்படும் இடங்கள் : முந்தைய வெண்புருவக் கொண்டைக் குருவிக்குப் பதிலாக மழை மிகுந்த பசுங்காடுகளில் தென்னிந்தியாவின் மேற்குத் தொடர்ச்சி மலை சார்ந்த பகுதிகளில் சோலைகளிலும் காபி தோட்டங்களிலும் காணலாம். நீலகிரி, பழநி மலைப்பகுதிகளில் 900 மீ. முதல் 1500 மீ. உயரம் வரை மிகுதியாகக் காணலாம். 200 மீட்டர் வரை காணப்படுகிறது.

பழக்க வழக்கங்கள் : இணையாகவோ, 6 முதல் 7 வரையான சிறு கூட்டமாகவோ காணபபடும் இது சிலபோது 50 வரையான கூட்டமாகத் திரள்வதும் உண்டு. பிற பறவைகள் இவற்றோடு சேர்ந்து கொண்டு வேட்டையாடும். மரங்களின் உயர் கிளைகளிலும் புதர்களிலும் பழங்களைத் தேடி விரும்பி உண்ணும் இது குஞ்சுகளுக்குப் புழுபூச்சிகளை உணவாகத் தரும். பழங்களையும் தருவது உண்டு.

தெளிவான மென்மையான இரட்டையசைக் குரலில் சப்தமிடும்.

இனப்பெருக்கம் : காலம் : பிப்ரவரி முதல் மே முடிய; கூடு : காடுகளின் நடுவில் புதரில் தரையிலிருந்து ஓரிரு மீட்டர் உயரத்தில் புல், இலை, முதலியவைகளால் கண்ணுடிக் குருவிகளின் கூடு போல அமைக்கும். முட்டை : 2 அல்லது 3; கிரீம் இளஞ் சிவப்பாக பலநிறச் செம்புள்ளிகளும் கோடுகளும் கொண்டு காட்சி தரும்.

330. தென்னிந்தியக் கருப்புக் கொண்டைக் குருவி
1149. South Indian Black Bulbul
Hypsipetes madagascariensis ganeesa (Sykes)

தோற்றம் : கொண்டைக் குருவியை விடச் சற்றுப் பெரிய இதன் நீளம் 23 செ. மீ.



தென்னிந்தியக் கருப்புக் கொண்டைக் குருவி

அலகு ஆழ்ந்த ஆரஞ்சு நிறம்; விழிப்படலம் ஆரஞ்சுப் பழுப்பு நிறம்; கால்கள் மஞ்சள் தோய்ந்த ஆரஞ்சு நிறம்.

தலையும் கொண்டையும் கருப்பு; உடலின் மேற்பகுதி முழுதும் கருஞ் சிலேட் சாம்பல் நிறம். உடலின் கீழ்ப் பகுதி கருஞ்சாம்பல் நிறம். வாலடியில் நிறம் மங்கிக்

காணப்படும். வால் போர்வை இறகுகளில் வெள்ளை முனை யோடு காணப்படும்.

காணப்படும் இடங்கள் : மேற்குக் கிழக்குத் தொடர்ச்சி மலை சார்ந்த பகுதிகளில் 1000 மீட்டர் முதல் மலைச்சிகரம் வரை மிகுதி



தென்னிந்தியக் கருப்புக் கொண்டைக் குருவி

யாகக் காணலாம். குளிர்காலத்தில் அடிவாரம் வரை இறங்கும். பெரிய மரங்கள் நிறைந்த பசுங்காடுகளிலும் சோலைகளிலும் காண லாம். தேயிலை, காபி, ஏலக்காய்த் தோட்டங்களிலும் திரியும்.

பழக்க வழக்கங்கள் : இனப்பெருக்கம் செய்யாத காலங்களில் மரங்களில் உயர சிறு கூட்டமாகப் பகல் முழுதும் கத்தியபடி திரி யக் காணலாம். நூறு வரையான பெருங்கூட்டமாகத் திரள்வதும் உண்டு. மரங்களில் நுனிக் கொம்பில் அமர்ந்து பறக்கும் பூச்சி களைப் பாய்ந்து பற்றும். ஒரே மரத்தில் நெடுநேரம் அமராமல் மரத்துக்கு மரம் தாவிப் பறந்து திரியும். கூட்டமாகத் திரியும் இவை இனப்பெருக்கக் காலத் தொடக்கமான பிப்ரவரியில் இணை யாகப் பிரிந்து வாழத் தொடங்கி விடும்.

பழங்கள், மலர்த்தேன், பூச்சி புழுக்கள் ஆகியன இதன் முக் கிய உணவு.

ஹூர்க்கிபூஉ, ஹூர்க்கிபூஉ எனக் கூப்பிடும். ஒற்றை அசைக் குரலில் பலவகைக் குரலில் பாடும்.

இனப்பெருக்கம் : காலம் : மார்ச் முதல் ஜூன் முடிய; கூடு ; புல், காய்ந்த இலைகள், பாசி, மரப்பட்டை, காளான் ஆகியன கொண்டு சிலந்தி நூலால் இணைத்து பிரியும் கிளை இடுக்கில் கோப்பை வடிவில் அமைத்து நார், வேர் முதலியவற்றால் வேயும். முட்டை : 2; அபூர்வமாக 3;

Family : Muscicapidae

Sub-family : Timaliinae

காட்டுக் குருவிகள்
(BABBLERS)

331. புள்ளிக் காட்டுக் குருவி
1154. Peninsular Spotted Babbler
Pellorneum ruficeps ruficeps (*Swainson*)

தோற்றம் : கொண்டைக் குருவியை விடச் சிறிய இதன் நீளம் 15 செ. மீ.

உடலின் மேற்பகுதி பழுப்பாகவும் தலை உச்சி கருஞ்சிவப்பான பழுப்பாகவும் இருக்கும். கண்ணின் மேல் தெளிவற்ற புருவம் செல்லக் காணலாம். காதுத் தூவிகள் பழுப்பு நிறம். தொண்டை வெண்மை. மார்பும் வயிறும் செம்மை தோய்ந்த மஞ்சளாக ஆழ்ந்த பழுப்பு நிறக் கீற்றுக்களோடும் புள்ளிகளோடும் காட்சி தரும்.

காணப்படும் இடங்கள் : மேற்குக் கிழக்குத் தொடர்ச்சி மலை சார்ந்த பகுதிகளில் பாலக்காட்டுக் கணவாய்க்கு வடக்கே மட்டும் சமவெளி முதல் மலைகளில் 1350 மீட்டர் உயரம் வரை காணலாம். புதர்காடுகள் மூங்கில் தோப்புக்கள், சோலைகள், காட்டாற்றின் கரையிலுள்ள புதர்கள் ஆகியவற்றைச் சார்ந்து திரியும். வறண்ட தக்கண பீடபூமிப் பகுதியில் காணப்படுவதில்லை.

பழக்க வழக்கங்கள் : தரையில் உதிர்ந்த காய்ந்த இலைகளிடையே இணையாகவோ சிறு கூட்டமாகவோ பெரிய காட்டுக் குருவியைப்போல புதர்கள் செடி கொடிகள் ஆகியவற்றின் அடியே ஓடி இரை தேடும். எட்டி எட்டித் தாவிக் குதித்தோ, காடைகள்

போல விரைந்து ஓடியோ மறைந்து கொள்ளும் இயல்புடைய தாகையால் இதனை எளிதில் கண்டு கொள்ள முடியாது. பூச்சிகளே முக்கிய உணவு;

இனிய மெல்லிய துயரம் தோய்ந்த இதன் நான்கசைக் குரலினை he'll beat you I'm right here, pretty-sweet என ஆங்கிலத்தில் பல்வேறு வகையில் மொழிப் படுத்துவர். தொடர்ந்து 15 நிமிடங்கள் வரை இது போலக் கத்தக் கேட்கலாம். காலை மாலைகளில் குரல் கொடுக்கும்.

இனப்பெருக்கம்: காலம்: தென்மேற்குப் பருவ மழை பெய்யும் போது; கூடு: சாய்வான தரையில் இலைதழைகளால் பந்து போன்ற நுழைவாயிலோடு கூடிய கூடு அமைக்கும். கூடுகளைப் புதரின் அடியில் காணலாம். முட்டை: 2 அல்லது 3; வெண்மையாகச் சிறிதும் பெரிதுமான பழுப்புக் கறைகளோடு காட்சி தரும்.

332. கேரளப்புள்ளிக் காட்டுக் குருவி
1155. Kerala Spotted Babbler
Pellorneum ruficeps olivaceum (Jerdon)

தோற்றத்திலும் அளவிலும் முன்னதை ஒத்தது. இதன் தலை உச்சி ஆழ்ந்த செம்பழுப்பாக இருப்பதாலும் உடலின் கறைகளும்



கேரளப் புள்ளிக் காட்டுக் குருவி

புள்ளிகளும் மேல் தோற்றமும் பளிச்செசன இருப்பதாலும் தனி உள்ளினமாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

பாலக் காட்டுக் கணவாய்க்குத் தெற்கே கேரளத்தின் மலைப் பகுதிகளிலும் சமவெளிகளிலும் காணப்படுவது. கருவேல், இலந்தை மரங்கள், வளர்ந்த காடுகள், மூங்கில் தோப்புக்கள்

காட்டாற்றின் கரைகள், மாருப் பசுஞ் சோலைகள் ஆகியவற்றில் சமவெளி முதல் மலைகளில் 1800 மீட்டர் உயரம் வரை காணலாம். பழநி மலைச்சாரலிலும் காணலாம் எனக் கருதப்படுகிறது.

பழக்க வழக்கங்கள், உணவு, இனப்பெருக்கம் முதலியன முன்னதைப் போல.

333. கேரள வளைந்த அலகுக் காட்டுக் குருவி

1174. Kerala Scimitar Babbler

Pomatorhinus schisteceps travancoreensis (*Harington*)

தோற்றம் : கொண்டைக் குருவியை விடப் பெரியதான இது சுமார் 22 செ. மீ. நீளம் இருக்கும்.

அலகு நன்ருக வளைந்து மஞ்சள் நிறமாக இருக்கும்; விழிப்படலம் சிவந்த பழுப்பு நிறம்; கால்கள் சிலேட் நிறம்.



கேரள வளைந்த அலகுக் காட்டுக் குருவி

இதன் உடல் நல்ல ஆலிவ் பழுப்பு நிறமாக இருக்கும். மார்பும் வயிறும் வெண்மை நிறம்; கண்ணின் மேல் உள்ள வெள்ளைப் புருவம் தெளிவாகப் பெரியதாக இருக்கும்.

காணப்படும் இடங்கள் : மேற்கு மைசூர், வடக்கு மைசூர் மேற்குத் தமிழ்நாடு, கேரள ஆகிய பகுதிகளில் சமவெளி முதல் மலைச் சிகரங்கள் வரை பசுங்காடுகள், இலையுதிர்காடுகள், குறிஞ்சி, லாண்டானு புதர்கள் மூங்கிற் காடுகள் ஆகியவற்றினைச் சார்ந்து திரியக் காணலாம்.

பழக்க வழக்கங்கள் : மிக அஞ்சி மறைந்து திரியும் இயல்புடைய இதனை இனப்பெருக்கக் காலத்தில் இணையாகவும் மற்ற சமயங்களில் 4 முதல் 10 வரையான சிறு கூட்டமாகவும் காணலாம். வேறு சிறு பறவைகளோடு சேர்ந்து இரைதேடுவதும் உண்டு. புதர்களின் அடியில் காய்ந்து உலர்ந்த இலைகளைத் திருப்பிக் கலைத்துப் புழுபூச்சிகளைப் பிடிக்கும். இதனுடைய நீண்டு வளைந்த அலகு இவ்வாறு உதிர்ந்த இலைகளிடையே இரை தேட மிகவும் உதவுகிறது. பாசி பிடித்த மரக்கிளைகளிடையேயும் அடிமரங்களின் மீதும் தாவிப் பறந்து இரைதேடுவதும் உண்டு.

பூச்சிகளும் அவற்றின் முட்டைகளும் முக்கிய உணவு. பழங்களையும் மலர்த் தேனையும் உணவாகக் கொள்ளும்.

கசமுசக்கும் மென் குரலில் வோஓட்-ஹோ-ஹோ-ஹோ எனக் கத்தி ஒன்றோடு ஒன்று தொடர்பு கொள்ளும்.

இனப்பெருக்கம்: காலம்: நவம்பர் முதல் மார்ச் முடிய; கூடு: பழுத்த இலைகளும் பாசியும் கொண்டு பந்து வடிவமாகக் கூடு கட்டி மெல்லிய புல்லாலும் வேராலும் மெத்தென ஆக்கும். கூட்டைச் சாய்வான தரையில் புதர் ஓரமாக அமைக்கும். முட்டை: 3 அல்லது 2; வெண்மையாக இருக்கும்.

334. தமிழ்நாட்டு வளைந்த அலகுக் காட்டுக் குருவி

1175. Tamilnadu Scimitar Babbler

Pomatorhinus schictiseps maderaspatensis (Whistler)

தோற்றத்திலும் அளவிலும் முன்னதை ஒத்த இது கிருஷ்ணா நதி முதல் காவேரி நதி வரை உள்ள கிழக்குத் தென்னிந்தியப் பகுதியில் கிழக்குத் தொடர்ச்சிமலை சார்ந்த பகுதிகளில் காணப்படுகிறது. வாழ்விடம், பழக்க வழக்கங்கள், இனப்பெருக்கம் முதலியன முன்னதைப் போன்றனவே. இதன் வால் இறகுகளின் முனைகளில் முன்னதற்கு உள்ள கருப்பு விளிம்புகள் இல்லாததால் இது தனி உள்ளினமாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

335. வெண்தொண்டைக் காட்டுக் குருவி

1221. White throated Babbler

Dumetia hyperythra albogaluris (Blyths)

தோற்றம்: சிட்டுக் குருவியை விட அளவில் சிறிய இதன் நீளம் சுமார் 13 செ. மீ.

அலகு கொம்பு நிறமான பழுப்பாக இருக்கும்; விழிப்படலம் கிரீம் வெண்மை; கால்கள் மஞ்சள் நிறம்.

தலை செம்பழுப்பாக இருக்கும்; உடலின் மேற்பகுதி ஆலிவ் பழுப்பாக இருக்கும். தொண்டை வெண்மை; மார்பும் வயிறும் வெளிர் மஞ்சள் தோய்ந்த பழுப்பு நிறம்.

காணப்படும் இடங்கள்: கிருஷ்ணா நதிக்குத் தெற்கே தென்னிந்தியா முழுவதும் சமதரை முதல் மலைகளில் 1200 மீட்டர் வரை

யும் புல் நிலங்களிலும், புதர்க்காடுகளிலும், மூங்கில் தோப்புக்களிலும் இலையுதிர்காடுகளிலும் காணலாம். மாறாத பசுங்காடுகளை இது விரும்புவதில்லை.

பழக்க வழக்கங்கள்: புல்லிடையேயும் புதர்கள் அடியிலும் ஐந்து முதல் பத்து வரையான சிறு கூட்டமாக அலைந்து அமைதியின்றித் திரியக் காணலாம். உதிர்ந்து காய்ந்த இலைகளிடையே புழுபூச்சிகளை இலைகளைத் திருப்பித் தேடும் இது மனிதர்கள் வருவதைக் கண்டவுடன் சிதறி ஓடி மறைந்து ஒளிந்து கொள்ளும். மீண்டும் குரல் கொடுத்து ஒன்றோடு ஒன்று விரைவில் சேர்ந்து கொள்ளும்.

புழுபூச்சிகளையே உணவாகக் கொள்ளும் இது மலர்த்தேனையும் உண்ணக் காணலாம்.

ஸ்வீச், ஸ்வீச், என சிறு மென் குரல் கொடுத்து சிறு கூட்டத்தில் ஒவ்வொரு பறவையும் ஒன்றோடு ஒன்று தொடர்பு கொண்டபடி இருக்கும். இனிமையான குரலில் பாடவும் செய்யும்.

இனப்பெருக்கம்: காலம்: ஜூன் முதல் அக்டோபர் வரை. கூடு: 15 செ. மீ. விட்டமுடைய பந்து போன்ற கூட்டினைப் புல்லாலும் மூங்கில் இலைகளாலும் நுழை வாயிலோடு கட்டி மென் புல் கால்மெத்தென ஆக்கும். முட்டை: 3 அல்லது 4; வெண்மையாக செம்பழுப்புக் கறைகளுடனும் புள்ளிகளுடனும் காட்சி தரும்.

336. கருந்தலைக் காட்டுக் குருவி

1224. Blackheaded Babbler

Rhopocichla atriceps atriceps (Jerdon)

தோற்றம்: சிட்டுக் குருவியை விடச் சிறிய இதன் நீளம் 14 செ. மீ.

மேல் அலகு கொம்பு நிறமான பழுப்பு நிறம், கீழ் அலகு சாம்பல் தோய்ந்த ஊன் நிறம் (fleshy); விழிப்படலம் எலுமிச்சை மஞ்சள் நிறம்; கால்கள் இளஞ்சிவப்புத் தோய்ந்த சாம்பல் நிறம்.

தலை கரும்பழுப்பு; உடலின் மேற்பகுதி ஆலிவ் பழுப்பு நிறம்; மார்பும் மேல் வயிறும் வெள்ளை; கீழ் வயிறு ஆலிவ் பழுப்பு; ஆணும் பெண்ணும் ஒன்றுபோல.

காணப்படும் இடங்கள்: பெல்காம் முதல் பாலக்காட்டுக் கணவாய் வரை மேற்குத் தொடர்ச்சி மலைப்பகுதிகளைச் சார்ந்து

காணப்படலாம். மாருப் பசுங்காடுகளையும் மலைப்பக்கச்சோலைகளை யும் அடர்ந்த காடுகளையும், மலையாற்றங்கரைப் புதர்களையும் சார்ந்து காணலாம்.

பழக்க வழக்கங்கள் : மற்றக் காட்டுக் குருவிகளோடு சேர்ந்து புதர்களிடையே திரியும் இது மரங்களிலும் புதர்களிலும் ஒரு மீட் டர் உயரத்திற்கு மேல் ஏறுவதில்லை. மரங்களில் இருக்கும் பறவை கள் நேர் கீழாக விழ்வது போலத் தரையில் இறங்குவது பழுத்த இலைகள் உதிர்வது போல இருக்கும்.

பூச்சிகளே இதன் முக்கிய உணவு.

உரத்த குரலில் ஒன்றோடு ஒன்று தொடர்புகொள்ளக் கத்தும்.

இனப்பெருக்கம் : காலம்: பொதுவாக ஆண்டு முழுதும். சிறப்பாக மார்ச் முதல் ஜுலை வரை; கூடு: உலர்ந்த மூங்கில் இலைகளோடு புல்லும் கலந்து பந்துபோலப் புதர்களில் தரையிலி ருந்து ஒரு மீட்டர் உயரத்திற்குள் கூடு அமைக்கும். முட்டை யிடப் பயன்படுத்தாத வெறுங் கூடுகளைக் கட்டும் பழக்கமுடையது இது. அருகருகே இதுபோன்ற கூடுகளை ஆண்டு முழுதும் காண லாம். இக்கூடுகளில் இரவு நேரங்களில் இரண்டு மூன்று பறவை கள் வரை ஒன்றாக அடைவதும் உண்டு. முட்டை: 2; வெண்மை யாகப் பழுப்புத் தோய்ந்த சிவப்புப் புள்ளிகளுடனும் கறைகளுட னும் காட்சிதரும்.

337. கேரளக் கருந்தலைக் காட்டுக் குருவி

1225. Kerala Blackheaded Babbler

Rhopocichla atriceps bourdilloni (Hume)

தோற்றம், அளவு, பழக்க வழக்கங்கள், இனப்பெருக்கம் ஆகிய எல்லாவற்றிலும் முன்னதை ஒத்த இது மேற்குத் தமிழ் நாட்டிலும் பாலக்காட்டுக் கணவாய்க்குத் தெற்கே உள்ள கேரள மலைப்பகுதி களில் காணப்படுகிறது மாருப் பசுங்காடுகளைச் சார்ந்து சம வெளி முதல் மலைகளில் 1800 மீட்டர் வரை காணலாம். இதனு டைய தலை உச்சி முன்னதைப் போலக் கரும்பழுப்பாக இல்லாமல் புகைப் பழுப்பாக இருப்பதால் தனி உள்ளினமாகப் பகுக்கப் பட்டுள்ளது.

338. மஞ்சள் கண் காட்டுக் குருவி

1231. Yellow-eyed Babbler

Chrysomma sinense sinense (Gmelin)

தோற்றம்: கொண்டைக் குருவியை விடச் சிறிய இதன் அளவு 18 செ. மீ.

அலகு கருப்பு; விழிப்படலம் ஆரஞ்சு மஞ்சள்; கால்கள் மெழுகு மஞ்சள் நிறம்.

மஞ்சள் கண் காட்டுக் குருவி

உடலின் மேற்பகுதி கருஞ்சிவப்பான பழுப்பு நிறம்; இறக்கைகள் மஞ்சள் தோய்ந்த பழுப்பு நிறம். கழுத்து, தொண்டை, மார்பு, மேல் வயிறு ஆகியன வெண்மை. கீழ் வயிறு சிவப்புத் தோய்ந்த வெளிர் மஞ்சள் நிறம். வால் நீண்டு முனை நோக்கிக் குறுகிச் செல்லும்.

காணப்படும் இடங்கள்: மேற்கே நீலகிரி முதல் கிழக்கே காவேரி வரையான எல்லைக்கு டக்கே தென்னிந்தியா முழுதும் புல்வெளியான மலைப்பக்கங்களிலும், மூங்கிற் காடுகளிலும், கரும்புத் தோட்டங்களிலும் புதர்வேலிகளிலும் காணலாம். மலைகளில் 1000 மீட்டர் உயரம் வரை காணப்படும்.

பழக்க வழக்கங்கள்: இனப்பெருக்கம் செய்யாத காலங்களில் 5 முதல் 15 வரையான சிறு கூட்டமாகக் கதிர்க் குருவிகளோடு கலந்து புதர்களிலும் மூங்கிற் கிளைகளிலும் பக்கவாட்டிலும் தலை கீழாகவும் தொங்கி இரைதேடும் பட்டாணிக் குருவி போல இப்படி இரைதேடும் இது சிறு அரவம் கேட்டாலும் அஞ்சி மறைந்து விடும். நாணற் புதரின் உச்சியில் சென்று அமர்ந்து குரல் கொடுத்து உடனே பறந்து ஓடிவிடும். சிரமப்பட்டும் எழுந்து வீழ்ந்து தடுமாறியபடி பறக்கும்.

தத்துக்கிளி, கம்பளிப்பூச்சி, சிலந்தி முதலான பூச்சிகள் இதன் முக்கிய உணவு. சிறுபழங்களையும் மலர்த்தேனையும் உண்பதுண்டு.

ச்சீப், ச்சீப், ச்சீப் எனச் சாதாரணமாகக் குரல்கொடுக்கும் இது அபாயம் என உணர்ந்தால் ச்சூஉர்ர் எனக் கத்தும். இனப்பெருக்கக் காலத்தில் உயர இருந்து இனிமையாகப் பாடும்.

இனப்பெருக்கம் : காலம் : ஜூன் முதல் நவம்பர் வரை; பொதுவாகவும் ஜூலை முதல் ஆகஸ்ட் வரை சிறப்பாகவும்; கூடு : கூம்பு வடிவமான கோப்பை போன்ற ஆழ்ந்த கூட்டினைப் புல்லால் அமைத்து வெளிப்புறத்தைச் சிலந்தி நூலால் ஒட்டும், புல் குருத்துக்களிடையே தரையிலிருந்து அரை மீட்டர் உயரத்தில் குறுக்காகத் தொங்கிக் கொண்டிருக்கக் காணலாம். முட்டை: 3 முதல் 5 வரை; இளஞ்சிவப்பான வெண்மை நிறத்தில் ஆழ்ந்த செம்பழுப்புக் கறைகளோடு காட்சி தரும். ஆணும் பெண்ணும் அடைகாக்கும்; குஞ்சுகளைப் பேணும்; 12 நாட்களில் குஞ்சு கூட்டி லிருந்து பறந்து ஓடிவிடும். தாய்ப் பறவை கூட்டை நெருங்கு பவர்களின் கருத்தை மாற்றப் புண்பட்டது போலஅலறிப் புடைத் துக் கொண்டு அரற்றும்.

339. தவிட்டுக் குருவி

1254. Common Babbler

Turdoides caudatus caudatus (Dumont)

தோற்றம் : கொண்டைக் குருவியை விடப் பெரிதான இதன் நீளம் சுமார் 23 செ. மீ.

அலகு ஊன் நிறந் தோய்ந்த (Fleshy) பழுப்பு; விழிப்படலம் பழுப்பு அல்லது மஞ்சள் கால்கள் மஞ்சள்.

தலையும் முதுகும் ஆழ்ந்த பழுப்புக் கோடுகள் கொண்ட வெளிர் பழுப்பாக இருக்கும்: வாலில் சிறு குறுக்குப் பட்டைகள் காணலாம்; தொண்டை வெண்மை. மார்பும் வயிறும் கிரீம் நிறம் தோய்ந்த வெளிர் செம்மஞ்சள் நிறம்; பக்கங்களில் லேசான பழுப் புக் கோடுகள் காணலாம்.

காணப்படும் இடங்கள் : இராமேஸ்வரம் தீவு உட்படத் தென் னிந்தியா முழுதும் மலைகளில் 800 மீ. உயரம் வரை காணலாம். முட்புதர்க்காடுகளிலும், புல்வெளியான மணற்பகுதிகளிலும் காண லாம்.

பழக்க வழக்கங்கள்: 6 முதல் 20 வரையான கூட்டமாகத் தரையில் தாவித் தாவி ஓடியும், எலிபோலக் குறுகி விரைந்தோடி யும், புதர்களிலும் வேலிகளிடையேயும் இரைதேடக் காணலாம். அப்படி இரை தேடும்போது மென்மையான குரலில் கத்தியபடி இருக்கும். பூனையோ கீரியோ எதிர்ப்பட்டால் கிளைக்குக் கிளைப் பறப்பதோடு தாவித் தாவிப் பாயும் இதன் வால் அப்போது ஒடிந் தது போலத் தொங்கும். அப்போது கூட்டம் முழுதும் ஒன்றாகச்

சேர்ந்து குரலெழுப்பி எதிர்ப்பட்ட பகையை விரட்ட முற்படும். பறக்க விருப்பமில்லாததுபோல் சிலமுறை இறகடித்துப் பின் மிதந்து தொய்வாகத் தரையை ஒட்டி ஒன்றன் பின் ஒன்றாகப் பறக்கும். இரவில் மரக்கிளையில் வரிசையாக எல்லாம் ஒரே திசையைப் பார்த்தபடி அமர்ந்து உறங்கும்.

தத்துக்கிளி, வண்டு, எறும்பு, கம்பளிப்பூச்சி போன்ற புழு பூச்சிகளே முக்கிய உணவு. தானியங்களையும் பழங்களையும் தின்பது உண்டு.

விச்-விச்-விச், ரீ-ரீ-ரீ எனப் பலவகைக் குரல் ஒலிகள் எழுப்பியபடியே இரைதேடும் இது ஆபத்து என உணர்ந்தால் உரத்த அறிவிப்புக் குரல் கொடுக்கும்.

இனப்பெருக்கம்: காலம்: பொதுவாக ஆண்டு முழுதும்; சிறப்பாக மார்ச் முதல் ஜுலை முடிய; ஒரே ஆண்டில் இருமுறை குஞ்சு எழுப்புவதும் உண்டு. கூடு: புல், வேர் ஆகியவற்றால் கோப்பை வடிவிலான கூட்டினை அழகாகத் தரையிலிருந்து ஒரு மீட்டர் உயரத்தில் லாண்டனா, இலந்தை முதலான புதர்களிடையே அமைக்கும். சப்பாத்திக் கள்ளி, ஈச்சமரம் ஆகியவற்றிலும் இதன் கூட்டினைக் காணலாம். முட்டை: 4 அல்லது 3; பசு நீலமாக இருக்கும்; ஆணும் பெண்ணும் எல்லாக் குடும்பப் பொறுப்புக்களிலும் பங்குகொள்ளும். கொண்டைக் குயில் இதன் கூட்டில் முட்டையிடும்.

340. பெரிய கருஞ்சாம்பல் தவிட்டுக் குருவி
1258. Large Grey Babbler
Turdoides malcolmi (Skyes)

தோற்றம்: மைனா அளவுள்ள இது சுமார் 28 செ. மீ. நீளம் இருக்கும்.

விழிப்படலம் நல்ல எலுமிச்சை மஞ்சள் நிறம்; அலகு கொம்பு நிறமான பழுப்பு நிறம்; கால்கள் பழுப்புத் தோய்ந்த கருஞ்சாம்பல் நிறம்.

உடலின் மேற்பகுதி கருஞ்சாம்பல் பழுப்பாக ஆழ்ந்த பழுப்புக் கறைகளோடு காட்சி தரும். நெற்றி வெளிர் சாம்பல் நிறமாக இருக்கும். வாலில் குறுக்குப் பட்டைகள் காணலாம். உடலின் கீழ்ப்பகுதி கிரீம் தோய்ந்த வெளிர் செம்மஞ்சளாக இருக்கும். மார்

பிலும் தொண்டையிலும் சற்று இளஞ்சிவப்புத் தோய்ந்திருக்கும். வாலின் வெளி ஓர இறகுகள் வெண்மை நிறமுடையவை.

காணப்படும் இடங்கள்: ஆந்திரா, மைசூர், வடக்குத் தமிழ் நாடு ஆகிய பகுதிகளில் ஆங்காங்கு காணலாம். மலைகளில் 1200 மீ. உயரம் வரை காணலாம். வறண்ட, திறந்தவெளிப்புதர்காடுகளிலும், விளை நிலங்களையும், நகர்ப்புறத் தோட்டங்களையும் சார்ந்து காணப்படுவது கேரளாவில் காணப்படுவதில்லை.

பழக்க வழக்கங்கள்: எப்பொழுதும் 5 முதல் 10 வரையான கூட்டமாக மற்றத் தவிட்டுக் குருவிகளோடு சேர்ந்து திரியக் காணலாம். அபூர்வமாக நூற்றுக்கணக்கில் திரள்வதும் உண்டு. வேகமாகச் சீராகப் பறக்க மாட்டாத இது கால்களால் தாவித்தாவி ஓடியும் வேலிகள் புதர்கள் ஆகியவற்றில் நுழைந்தும் சுறுசுறுப்பாக இரைதேடக் காணலாம். ஒன்றாகச் சேர்ந்து கத்திப் பகையை விரட்டும். புதர்காடுகளில் மனிதர் நடமாட்டத்தைக் கண்டு அபாயக் குரல் கொடுத்து மற்ற இனப் பறவைகளையும் பதுங்கிக் கொள்ளுமாறு செய்வது இதுவே.

புழு, பூச்சிகளோடு கூடத் தானியங்களையும் பழங்களையும் தின்னும்.

க்காய், க்காய், க்காய் எனத் தொடர்ந்து கத்தியபடி இருக்கும்.

இனப்பெருக்கம்: காலம்: ஆண்டு முழுதும்; சிறப்பாக மார்ச் முதல் செப்டம்பர் முடிய; கூடு: சிறுகுச்சிகள் புல், வேர் முதலியன கொண்டு ஒழுங்கற்ற கோப்பை வடிவான கூட்டினை சிறு மரங்களிலும் புதர்களிலை போயும் கட்டும். முட்டை: 3 அல்லது 4; பளபளக்கும் நீல நிறங் கொண்டவை. இதன் கூடுகளிலும் கொண்டைக் குயில் முட்டையிடும். கூட்டாகக் குஞ்சுகளைப் பராமரிப்பதும் இனப்பெருக்கக் காலத்திலும் சிறு கூட்டமாகச் சேர்ந்து திரிவதும் இதன் தனித்த சிறப்பியல்புகள்.

341. கருஞ்சிவப்புத் தவிட்டுக் குருவி

1259. Rufous Babbler

Turdoides subrufus subrufus (Jerdon)

தோற்றம், அளவு, பழக்க வழக்கம், இனப்பெருக்கம் ஆகிய எல்லாவற்றிலும் அடுத்த கேரளக் கருஞ்சிவப்புத் தவிட்டுக்



கருஞ்சிவப்புத்தவிட்டுக்குருவி   கேரளக்கருஞ்சிவப்பு தவிட்டுக்குருவி

குருவியை ஒத்த இதன் நிறம் சற்று மங்கிக் காணப்படுவதால் தனி உள்ளினமாக வகுக்கப்பட்டுள்ளது. இது கிழக்குத் தமிழ் நாடு, நீலகிரியின் வடக்குச் சரிவு, மைசூர் ஆகிய பகுதிகளில புல்லும், புதருமான காடுகளிலும் மூங்கில தோப்புக்களிலும காபி தோட்டங்களிலும் காணப்படுகிறது. சமவெளி முதல் மலைகளில் 1000 மீட்டர் உயரம் வரைக் காணலாம்,

342. கேரளக் கருஞ்சிவப்புத் தவிட்டுக் குருவி

1260 K r la Rufous Babbler

Turdoides subrufus hyperythrus Sharpe)

தோற்றம்: மைனாவை விடச் சிறியது இது சுமார் 25 செ. மீ. நீளமிருக்கும்.

மேல் அலகு கொம்பு நிறமான பழுப்பு; கீழ் அலகு நல்ல மஞ்சள் நிறம்; விழிப்படலம் கிரீம் வெண்மை நிறம்; கால்கள் மஞ்சள் நிறம்.

நெற்றி ஆழ்ந்த கருஞ்சாம்பல் நிறம்; எஞ்சிய உடலின் மேற் பகுதி கருஞ்சிவப்புத் தோய்ந்த ஆலிவ் பழுப்பு நிறம்; வாலில் குறுக்குப் பட்டைகளைக் காணலாம்; உடலின் கீழ்ப்பகுதி ஆழ்ந்த துருச் சிவப்பு நிறம்.

காணப்படும் இடங்கள்: கேரளாவிலும் மேற்குத் தமிழ் நாட்டிலும் ஆழ்ந்த புதர் காடுகளிலும், மாருப் பசுங்காடுகள் சார்ந்த புல் நிலங்களிலும் மூங்கில் தோப்புக்களிலும், தேயிலை காபி தோட்டங்களிலும் காணலாம். சமவெளி முதல் 1000 மீ. உயரம் வரை மலைகளில் காணலாம்.

பழக்க வழக்கங்கள்: உதிர்ந்த இலைகளுடே ஆறு முதல் எட்டு வரையான கூட்டமாக இலைகளைப் புரட்டியும் கிளறியும் புழு பூச்சிகளைப் பிடித்துத் தின்னக் காணலாம். சிறு அரவம் கேட்டாலும் அஞ்சி மறையக் கூடியது. நெருக்கமான மூங்கிற் புதர்கள் இடையே கூட எலி போல நுழைந்து பதுங்கிக் கொள்ளும். உயர மரங்களில் மலர்களில் தேன் குடித்தபடி இருக்கும் இது சிறு ஆள் அரவம் கேட்டாலும் தலை கீழாகப் பாய்ந்து புதர்களிடையே ஓடி ஒளிந்து கொள்ளும் பழக்க முடையது.

புழு பூச்சிகளோடு பழங்களையும் மலர்த் தேனையும் உண்ணும்.

ட்ரீஇ. ட்ரீஇ, ட்ரீஇ எனத் தொடர்ந்து கத்தும். இக் குரலொலி சுவர்க் கோழியின் தொடர்ந்த குரலொலியைச் சற்று ஒத்திருக்கும்.

இனப்பெருக்கம்: காலம்: பிப்ரவரி முதல் மே முடிய; நவம்பர் வரை நீடிப்பதுண்டு; கூடு; பெரும் போக்காகப் புல் இலை, கொடித்துணர், ஆகியன கொண்டு பெரிய கோப்பை வடிவிலான கூட்டினைச் சிறு மரங்களில் இலைகள் பிரியும் இடைவெளியில் அமைக்கும். முட்டை: 4; ஆழ்ந்த நீல நிறமாக இருக்கும்.

343. தெற்கத்திய காட்டுத் தவிட்டுக் குருவி

1262. Peninsular Jungle Babbler

Turdoides striatus orientalis (*Jerdon*)

தோற்றம்: மைனு அளவுள்ள இது சுமார் 25 செ. மீ. நீளம் இருக்கும்.

அலகு வெளிர் மஞ்சள் நிறம், முனை வெளிர் கொம்பு நிறமாக இருக்கும்; விழிப்படலம் கிரீம் வெண்மை; கால்கள் வெளிர் மஞ்சள் நிறம்.

தலையும் பிடரியும் கருஞ்சாம்பல் நிறம் தோய்ந்த பழுப்பு நிற மாக இருக்கும். உடலின் மேற்பகுதி வெளிர் கருஞ்சாம்பல் நிறம் தோய்ந்த மண் பழுப்பு நிறம்; பிட்டமும் வால் போர்வை இறகு களும் மஞ்சள் தோய்ந்த பழுப்பு நிறம்; உடலில் ஒட்டவைத்தது போலத் தொங்கிக் கொண்டிருக்கும் வால் கருஞ்சிவப்புத் தோய்ந்த பழுப்பு நிறம்; தொண்டை தெளிவற்ற கருஞ்சாம்பல் நிறம்; மார்பு வெளிர் பழுப்புக் கோடுகளுடன் காட்சி தரும். வயிறு கிரீம் நிறம் தோய்ந்த மஞ்சள் பழுப்பாக இருக்கும்.

காணப்படும் இடங்கள்: தென்னிந்தியா முழுதும் காணப்படும் தவிட்டுக் குருவி இது. விளை நிலங்களையும், இலையுதிர் காடுகளை யும் பார்த்துக் காணப்படும்.

பழக்க வழக்கங்கள்: 6 முதல் 10 வரையான கூட்டமாக இது தரையில் தாவித் தாவி ஒடி இரை தேடும். காய்ந்து உலர்ந்த இலை களைப் புரட்டிப் புழுப் பூச்சிகளைப் பிடிக்கும் இது எப்பொழுதும் சுறு சுறுப்பாக இருக்கும். ஒவ்வொரு கூட்டமும் ஒரு குறிப்பிட்ட பகுதி யில் திரிந்து இரை தேடக் காணலாம் கூட்டத்தைச் சேர்ந்த பற வைகள் அனைத்தும் ஒன்றை ஒன்று தொட்டுக் கொண்டபடி நெருக்கமாக அமர்ந்து இரவைக் கழிக்கும். கூட்டமாக உரக்கக் கத்திப் பகையை விரட்டும்.

புழு பூச்சிகளோடு பழங்களையும் விதைகளையும் தின்னும்.

க்இள, ச்இள எனக் கத்தியபடி ஒன்றோடு ஒன்று தொடர்பு கொண்டபடி இருக்கும்.

இனப்பெருக்கம்: காலம்: மார்ச் முதல் அக்டோபர் வரை. கூடு: வேர், புல், சிறுகுச்சிகள் ஆகியவற்றால் கோப்பை போன்ற கூட்டினைப் புதர்களிலும் சிறு மரங்களிலும் தரையிலிருந்து ஒன்பது மீட்டர் உயரத்திற்குள்ளாக அமைக்கும்; முட்டை: 4 முதல் 6 வரை; பசு நிலமாக இருக்கும். ஆணும் பெண்ணும் கூடு அமைப்

பதிலும் குஞ்சுகளைப் பேணுவதிலும் பங்கு கொள்ளும். ஒரு கூட்டத்தைச் சேர்ந்தப் பறவைகளில் ஆணும் பெண்ணுமாகச் சேர்ந்து அடுத்தடுத்து இனப்பெருக்கம் செய்யுமே அன்றி ஒரே சமயத்தில் எல்லாப் பறவைகளும் இணை பிரிந்து இனப்பெருக்கத்தில் ஈடுபடுவதில்லை. குயில்கள் இதன் கூட்டில் முட்டை யிட்டுச் செல்லும். குயிற் குஞ்சுகளை இவை மிகப் பெரிதாக வளர்ந்த பின்னும் புறக்கணிக்காமல் உணவு கொண்டு வந்து ஊட்டக் காணலாம்.

344. மலபார் காட்டுத் தவிட்டுக் குருவி
1264. Malabar Jungle Babbler
Turdoides striatus malabaricus (Jerdon)

தோற்றத்திலும் அளவிலும் முன்னதை ஒத்த இது கேரளாவிலும் மைசூர் மாநிலத்தில் கடற்கரைப் பகுதியிலும் காணப்படுகிறது. லாண்டானா புதர்க் காடுகளிலும் மூங்கில் தோப்புக்களிலும் காணப்படும் இது மாறாப் பசுங்காடுகளைச் சார்ந்து காணப்படுவதில்லை. இதன் பழக்க வழக்கங்களும் இனப்பெருக்கமும் முன்னதைப்போன்றனவே. இதன் மார்பிலும் வயிற்றிலும் முன்னதைவிட நெருக்கமாகப் பழுப்புக் கோடுகள் காணப்படுவதால் தனி உள்ளினமாக இது பிரிக்கப்பட்டுள்ளது. முன்னதில் மார்பில் மட்டும் கோடுகள் காணப்படும்.

345. வெண்தலைத் தவிட்டுக் குருவி
1267. Whiteheaded Babbler
Turdoides affinis affinis (Jerdon)

தோற்றம்: கொண்டைக் குருவியை விடச் சற்றுப் பெரிய இது சுமார் 23 செ. மீ. நீளமிருக்கும்.

அலகும் கால்களும் வெளிர் மஞ்சள் நிறம்; விழிப்படலம் சாம்பல் தோய்ந்த வெண்மை நிறம்.

வெண்தலைத் தவிட்டுக் குருவி

தலை கிரீம் வெண்மையாகப் பக்கங்கள் சற்றுக் கருஞ்சாம்பல் நிறமாக இருக்கும். முதுகும் பிட்டமும் மங்கிய பழுப்பு நிறம்; நடு முதுகு கருஞ்சாம்பல் நிறந் தோய்ந்த ஆழ்ந்த பழுப்பாக இருக்கும்; இறக்கைகள் ஆழ்ந்த பழுப்பு நிறம்; வாலின் அடிப்பாகம் கருஞ்சாம்பல் பழுப்பாகவும் முனைப்பகுதி ஆழ்ந்த பழுப்பாக

வும் இருக்கும். தொண்டையும் மார்பும் ஆழ்ந்த பழுப்பு அவற்றில் ஒவ்வொரு தூவியும் கருஞ்சாம்பல் முனையுடையதாக இருக்கும்; வயிறும் வாலடியும் துரு நிறம் தோய்ந்த மஞ்சள் பழுப்பாக இருக்கும். வயிற்றின் பக்கங்கள் கருஞ்சாம்பல் நிறமாக இருக்கும்.

காணப்படும் இடங்கள் : இராமேஸ்வரம் தீவு உட்படத் தென்னிந்தியா முழுதும் விளை நிலங்களை அடுத்த சிறு காடுகள், லாண்டானா புதர் காடுகள், பழத் தோட்டங்கள், பூங்காக்கள் ஆகியவற்றைச் சார்ந்து காணப்படும். சென்னை போன்ற பெரு நகரங்களிலும் இதனைத் தாராளமாகக் காணலாம். மலைகளில் ,00 மீ. உயரம் வரை காணலாம்.

பழக்க வழக்கங்கள் : 6 முதல் 10 வரையான கூட்டமாகத் திரியும் இது உரிய பகுதிகளில் காட்டுத் தவிட்டுக் குருவியோடு கலந்து திரிவதும் உண்டு. விழுங்க இயலாத பெரிய பூச்சிகளைக் கால் விரல்களால் மிதித்து இடுக்கிக் கொண்டு அலகால் கொத்தித் தின்னும் பழக்கம் இதனிடம் உண்டு. மரங்களில் உயரத் தாவித் தாவிப் பறந்து ஏறிப் பின் தாழ்ந்து பறக்கும். ஒன்றன் பின் ஒன்றாகப் பறந்து பாதைகளையும் வேலிகளையும் தாண்டும் பழக்கமுடையது.

புழு பூச்சிகளோடு பழங்களையும் தானியங்களையும் தின்னும். வீட்டருகே அஞ்சாமல் வந்து சிதறிய சோற்றுப் பருக்கை முதலிய அடுக்களைக் கழி பொருள்களையும் தின்னும்.

ட்டிரீரி-ரீ-ரீ எனச் சற்றுக் கீச்சிடும் குரலில் கத்தும்.

இனப்பெருக்கம் : காலம் : பொதுவாக ஆண்டு முழுதும். சிறப்பாக மார்ச் முதல் ஜூன் வரை; அக்டோபர் நவம்பரில் இரண்டாம் முறையாக இனப்பெருக்கம் செய்வது உண்டு. கூடு : சிறு குச்சிகள், வேர், பருத்த புல், இலைதழைகள் ஆகியவற்றால் கோப்பை வடிவிலான கூடமைத்து வேர், இலை முதலியவற்றால் மெத்தென ஆக்கும். புதர்போல் இலைதழைகள் செழித்து வளர்ந்துள்ள மரக்கிளைகளில் மறைவாகத் தரையிலிருந்து ஓரிரு மீட்டர் உயரத்திற்குள்ளாகக் கூடுகளைக் காணலாம். முட்டை : 3 அல்லது 4; பசுமை கலந்த நீல நிறமாக இருக்கும். அடைகாக்கும் காலம் 14 முதல் 17 நாட்கள். ஆணும் பெண்ணும் கூடு கட்டிக் குஞ்சுகளைப் பேணும் பொறுப்புக்களை ஏற்கும். வளர்ந்த குஞ்சுகள் பறக்கத் தொடங்கியவுடன் கூட்டத்தோடு சேர்ந்து கொள்ளும் அப்போது பெற்றோரே அன்றி மற்றப் பறவைகளும் குஞ்சுகளுக்கு இரையூட்டும். இதன் கூடுகளில் கொண்டைக் குயில்கள் முட்டை

யிட்டுச் செல்லும். குயிற் குஞ்சுகள் வளர்ந்து கூட்டை விட்டுப் பறந்து வந்த பின்னரும் இவை தம்மைவிட அளவிற் பெரிய அக் குயில் குஞ்சுகளுக்கு இரையூட்டுவதைச் சாதாரணமாகக் காண லாம்.

346 வயநாட்டுச் சிரிக்கும் சிட்டு
1287. Wynad Laughing Thrush
Garrulax delesserti delesserti (*Jerdon*)

தோற்றம்: மைனா அளவுள்ள இது சுமார் 25 செ. மீ. நீளம் இருக்கும்.

மேல் அலகு கருமபழுப்பு; கீழ் அலகு மஞ்சள் தோய்ந்த ஊன் நிறம்; விழிப்படலம் ஆழ்ந்த சிவப்பு; கால்கள் மஞ்சள் தோய்ந்த ஊன் நிறம்.

கொண்டையற்ற இதன் உடல் மேல் சிவந்த பழுப்பு நிறமாக இருக்கும். உடலின் கீழ்ப்பகுதி வெண்சாம்பல் நிறம் தோய்ந்த பழுப்பாக இருக்கும். தலை உச்சி, கழுத்தின் பக்கங்கள், மேல் முதுகு ஆகியன சிலேட் சாம்பல் நிறமாக இருக்கும். கண் வழி யாக அகன்ற கருங்கோடு அலகிலிருந்து காதுவரை செல்லும். மோவாய், கன்னங்கள் தொண்டை ஆகியன வெண்மையாக இருக்கும். வால் கருப்பு. ஆணும் பெண்ணும் ஒன்று போல.

காணப்படும் இடங்கள்: மேற்குத் தொடர்ச்சி மலை சார்ந்த அடர்ந்த ஈரமிகுந்த காடுகளில் வட கன்னடம் தொடங்கி தென் திருவாங்கூர் நீங்கலாகக் கேரளத்தின் எல்லாப் பகுதிகளிலும் சமவெளி முதல் மலைகளில் 1500 மீ. வரை காணலாம். நீலகிரி, மேற்கு மைசூர் ஆகிய பகுதிகளிலும் காணப்படும் இது பழநி மலை யிலும் காணப்படுவதால் தமிழ் நாட்டுப் பறவைகள் வரிசையில் இது பற்றிய குறிப்பு உண்டு.

பழக்க வழக்கங்கள்: மிக அஞ்சி ஒடுங்கும் இது 5 முதல் 15 வரையான கூட்டமாகப் புதர்களின் அடியே காட்டுப் பாதை ஓரங்களில் திரியக் காணலாம். சிறு புதர்களில் மேலே தாவி ஏறும் இது மரங்களில் உயரச் செல்வதில்லை. தரையில் இலை களைப் புரட்டிப் புழுபூச்சிகளைப் பிடித்துத் தின்னும். யாரேனும் கவனிக்கின்றார்கள் எனத் தெரிந்தால் புதர்களின் அடியே மறைந்து ஒளிந்து ஓடும்.

புழு பூச்சிகள் இதன் முக்கிய உணவு.

ஒரு பறவை கலகலக்கும் குரலில் கத்தத் தொடங்கியவுடன் அடுத்தது அதற்கு அடுத்தது ஒவ்வொன்றாகச் சேர்ந்து கத்தத் தொடங்கிக் கூட்டம் முழுவதும் சிரிப்பது போலக் கெக்கலிக்கும் குரலில் கத்தத் தொடங்கிவிடும்.

இனப்பெருக்கம் : காலம் : ஏப்ரல் முதல் ஆகஸ்ட் முடிய; கூடு : புல், இலை, முதலியவற்றால் அரை உருண்டை வடிவான கோப்பை வடிவமாகப் புதர்களில் 2 மீ. உயரத்திற்குள்ளாகக் கூடு அமைத்து வேர், இலைக்காம்புகள் முதலியவற்றால் மெத்தென ஆக்கும். முட்டை : 2 அல்லது 3; வெண்மையாக வட்டவடிவ மாக இருக்கும்.

347. நீலகிரிச் சிரிக்கும் சிட்டு

1307. Nilgiri Laughing Thrush

Garrulax cachinnans cachinnans (Jerdon)

தோற்றம் : முன்னதைவிடச் சற்றுச் சிறிய இது சுமார் 23 செ. மீ. நீளம் இருக்கும்.

அலகும் கால்களும் கொம்புக் கருப்பு நிறம்; விழிப்படலம் சிவப்பு.

தலை உச்சியும் பிடரியும் சிலேட் பழுப்பு நிறம்; ஒவ்வொரு தூவியிலும் சிறுகருப்புக் காணலாம்; உடலின் மேற்பகுதி ஆலிவ் பழுப்பு நிறம்; கண் வழியே வெண்கோடு செல்லக் காணலாம். மோவாய் கருப்பு; தொண்டையும் மார்பும் நல்ல கருஞ்சிவப்பு; வாலடி வெளிர் கருஞ்சிவப்பு.

காணப்படும் இடங்கள் : நீலகிரி மாவட்டத்தில் 1000 மீட்டர் தொடங்கி மலைச்சிகரம் வரை சோலைகளிலும் அடர்ந்த காடுகளி லும் வேலி ஓரங்களிலும் காணலாம்.

பழக்க வழக்கங்கள் : பத்துப் பன்னிரண்டு பறவைகள் எப் போதும் சேர்ந்து புதர்கள் அடியே காய்ந்த இலைகளைப் புரட்டிப் புழுபூச்சிகளைப் பிடிக்கும். இது முன்னதைப் போல் மிகுந்த அச் சங் கொண்ட சுபாவம் உடையது இல்லை. உதகமண்டலம் குன் னூர், கோத்தகிரி நகரங்களை ஒட்டிய பகுதியிலேயே இதனைக் காணலாம். மற்ற பறவைப் பட்டாளங்களுடன சேர்ந்து மரங் களின் அடியில் பிடித்திருக்கும் பாசிகளிடையேயும் கிளைகளிடையே யும் ஓடி இரைதேடக் காணலாம்.

க்கீ-க்கீ-க்கீ என ஒன்றைத் தொடர்ந்து ஒன்ருகக் கத்தத் தொடங்கிய பின் கூட்டமாகச் சிரிப்பது போலக் கத்தும். அப்படிக் கத்தும்போது அலகு செங்குத்தாக வானேக்கி இருக்க வால் கீழ் நோக்கி அமுங்கித் தொங்கும்.

புழுபூச்சிகளும் பழங்களும் இதன் முக்கிய உணவு.

இனப்பெருக்கம் : காலம் : பிப்ரவரி முதல் மே முடிய; கூடு: முன்னதைப்போல; முட்டை : 2 அல்லது 3; வெளிர் நீலமாகச் செம்பழுப்பு, ஆழ்ந்த பழுப்புக் கறைகளோடு காட்சிதரும். ஆணும் பெண்ணும் குடும்பப் பொறுப்பில் பங்கு கொள்ளும்.

348. பாணசூர் சிரிக்கும் சிட்டு
1309. Banasore Laughing Thrush
Carrulax jerdoni jerdoni (Blyth)

தோற்றம் : மைனு அளவுள்ள இது சுமார் 22 செ. மீ. நீளம் இருக்கும்.

அலகு மங்கிய கருப்பு; விழிப்படலம் சிவப்பு; கால்கள் சிலேட் கருப்பு;

உச்சந்தலேயும் பிடரியும் சிலேட் பழுப்பு நிறம்; கண் வழியாக மேலும் கீழும் கருங்கரையோடு கூடிய வெண்கோடு செல்லும்; கழுத்தின் பக்கங்கள் சாம்பல் பழுப்பு நிறம்; உடலின் மேற்பகுதி ஆலிவ் பழுப்பு நிறம். வாலில் சற்றுக் கருஞ்சிவப்புத் தோய்ந்திருக்கக் காணலாம். மோவாயும் கன்னங்களும் கருப்பு; மார்பும் தொண்டையும் சாம்பலும் வெண்மையுமான கோடுகள் பெற்று இருக்கும். வயிறு கருஞ்சிவப்பு; பக்கங்களும், தொடையும், வால் கீழ்ப்போர்வை இறகுகளும் ஆலிவ் தோய்ந்த பழுப்பு நிறம்.

காணப்படும் இடங்கள் : பாலக்காட்டிலிருந்து குன்னூர், நீலகிரி வழியாகக் குடகுவரை மேற்குத் தொடர்ச்சி மலேப்பகுதிகள் சார்ந்து காணப்படுகிறது. மலேகளில் 1000 மீ. மேல் காணலாம்.

பழக்க வழக்கங்கள் : அடுத்ததைப் போன்ற பழக்க வழக்கங்களும் இனப்பெருக்க முறையும் கொண்டது.

349. திருவாங்கூர் வெண்மார்புச் சிரிக்கும் சிட்டு
1310. Travancore Whitebre isted Laughing Thrush
Carrulax j rdoni faisbanki (Blansford)

தோற்றம் : மைனு அளவுள்ள இது சுமார் 23 செ. மீ. நீளம் இருக்கும்.

அலகு கொம்பு நிறமான பழுப்பு; விழிப்படலம் செம்பழுப்பு கால்கள் சிலேட் பழுப்பு நிறம்.

தலை சிலேட் பழுப்பு நிறம்; உடலின் மேற்பகுதி ஆலிவ் பழுப்பு நிறம்; இறக்கைகளிலும் வாலிலும் சற்றுக் கருஞ்சிவப்புத் தோய்ந்திருக்கும். கண்ணுக்கு மேல் மேலும் கீழும் கருப்புக் கரையோடு கூடிய வெண்புருவம் செல்லக் காணலாம். மார்பு வெண் சாம்பல் நிறமாக வெண்கோடுகளோடு காட்சி தரும்; வயிறும் வாலடியும் கருஞ்சிவப்பாக இருக்கும். இதற்கு மோவாயில் முன்னையதற்கு உள்ளது போன்ற கருப்புக் கிடையாது.

காணப்படும் இடங்கள் : கொல்லம் மாவட்டத்தின் வடபகுதி முதல் வடக்கே ஆனை மலை வரை உள்ள மேற்குத் தொடர்ச்சிமலை சார்ந்த பகுதிகளிலும் கொடைக்கானலிலும் (பழநி மலை) காணலாம். மலைகளில் 1000 மீ. உயரம் முதல் உச்சி வரை பசுமை மாறாக் காடுகளிலும் மலைச் சோலைகளிலும் ஏலக்காய்த் தோட்டங்களிலும் காணலாம்.

பழக்க வழக்கங்கள் : ஆறு முதல பத்துப் பன்னிரண்டு வரையான கூட்டமாகப் புதர்களின் அடியே காய்ந்த இலை சருகுகளைப் புரட்டிப் புழுபூச்சிகளைப் பிடித்துத் தின்னும். ஆளரவம் கேட்டவுடன் மரங்களில் தொத்தி ஏறி மறைந்து கொள்ளும். அப்படி அஞ்சி மறையும்போது வீட், வீட், வீட் எனக் கத்தக் கேட்கலாம். இரை தேடும் போதும் மற்ற சமயங்களில் கூட்டத்தில் உள்ள பறவைகள் குரல் கொடுத்து ஒன்றோடு ஒன்று தொடர்பு கொண்டபடி இருக்கும்.

புழுபூச்சிகள், பழங்கள், முதலியன இதன் முக்கிய உணவு.

இனப்பெருக்கம் : காலம் : பிப்ரவரி முதல் மே முடிய; கூடு : புல், இலை முதலியவற்றால் கோப்பை போல் அமைத்த கூட்டினை மென்மையான புல்லால் மெத்தென ஆக்கி முட்டையிடும். கூடுகளை அடர்ந்த புதர்களில் பெரணி (Fern) புதர்களிடையேயும் தரையிலிருந்து 2 மீ. உயரத்திற்குள்ளாகக் காணலாம். முட்டை : 2 அல்லது 3 வட்டவடிவமாக வெளிர் நீல நிறங்கொண்டதாக இருக்கும்.

350. தென் திருவாங்கூர் சிரிக்கும் சிட்டு
1311. Blanfords or South Travancore Laughing Thrush
Garrulax jerdoni meridionale Blandford)

தோற்றத்திலும் அளவிலும் பெரிதும் முன்னதை ஒத்த இதன் கண்ணை அடுத்த வெண்புருவம் மிகச் சிறியதாக இருக்கும்.

மேலும் வயிற்றின் நடுவிடம் மார்பைப் போலவே சாம்பல் தோய்ந்த வெண்மையாக இருக்கும், தலை பிடரி முதலியன மங்கிய சாம்பல் பழுப்பாக இருக்கும். இவ்வேறுபாடுகள் கருதி இது தனி உள் ளினமாக வகுக்கப்பட்டுள்ளது. கேரளாவின் தென்பகுதியில் இதனைக் காணலாம். பழக்க வழக்கங்கள், இனப்பெருக்கம் முதலியன முன்னதைப் போன்றனவே.

351. நீலகிரி கலகலப்பான் சிட்டு
1390. Nilgiri Quaker Babbler
Alcippe poioicephala poioicephala (Jerdon)

தோற்றம்: சிட்டுக்குருவியை விடச் சற்றுப் பெரியதான இது சுமார் 16 செ. மீ. நீளம் இருக்கும்.

அலகு கொம்பு நிறமான பழுப்பு; விழிப்படலம் சாம்பல் பழுப்பு நிறம்; கால்கள் ஊன் நிறமாக இருக்கும்.

நீலகிரி கலகலப்பான் சிட்டு

தலையும் பிடரியும் பழுப்புத் தோய்ந்த சாம்பல் நிறம். உடலின் மேற்பகுதி ஆலிவ் தோய்ந்த பசுமை; பிட்டத்தில் கருஞ்சிவப்பும் தோய்ந்திருக்கக் காணலாம். வால் இறக்கைகள் ஆகிய செம்பழுப்பாக இருக்கும். மோவாயும் தொண்டையும் வெண்மை; மார்பும் வயிறும் வெளுத்த சாம்பல் தோய்ந்த செம்மஞ்சள் நிறம்.

காணப்படும் இடங்கள்: மேற்குத் தொடர்ச்சி மலை சார்ந்த பகுதிகளில் சமவெளி முதல 2100 மீ. வரை பசுங்காடுகளிலும் அவற்றைச் சார்ந்த சோலைகளிலும் மூங்கில் காடுகளிலும் காண லாம். பழநிமலைச் சாரலிலும் காணலாம்.

பழக்க வழக்கங்கள்: 6 முதல் 10 வரையான கூட்டமாகப் பாசி படிந்த மரங்களின் கிளைகளிடையே புழுபூச்சிகளைத் தேடித் திரியக் காணலாம். பட்டாணிக் குருவிகளைப் போல இலைக்கொத் துக்களில் தலை கீழாகத் தொங்கியும் பக்கவாட்டில் குறுக்கே அமர்ந் தும் புழுபூச்சிகளைத் தேடும் சிறு கிளைக்குக் கிளை தாவியபடி சுறுசுறுப்பாக அலையும் இது மற்றப் பறவைப்பட்டாளங்களோடு சேர்ந்தும் இரைதேடுவதும் உண்டு ஓயாது கலகலப்பாகக் கத் தியபடி இடம் விட்டு இடம் தாவித் திரியும் இதன் குரல் இந்தியக் கருங்குருவியின் குரலை ஒத்து இருக்கும். சிர்ர், சிர்ர் எனச் சிறு

குரல் கொடுத்து ஒன்றோடு ஒன்று தொடர்பு கொண்டபடி இருக்கும். இவை பெரும்பாலும் மரங்களின் மேலேயே தரை இறங்காது திரியக் காணலாம்.

புழுபூச்சிகளோடு மலர்த்தேனையும் உண்ணும். இலவம் முள் முருங்கை முதலான மரங்கள் மலரும் பருவத்தில் அங்குக் கூட்டமாகக் காணலாம்.

இனப்பெருக்கம் : காலம் : ஜனவரி முதல் மே வரை; கூடு : வேர், மரக்காளான், இலை, புல் ஆகியன கொண்டு ஒழுங்கற்ற கோப்பை வடிவிலான கூட்டினைத் தரையிலிருந்து சுமார் ஒரு மீ. உயரத்தில் சிறு செடிகளில் அமைக்கும். கூட்டினை அடர்ந்த காடுகளினுள்ளேயே காணலாம். முட்டை : 2 அல்லது 3; இளஞ்சிவப்புத் தோய்ந்த வெண்மையாக ஆழ்ந்த ஊதாச் சிவப்புக் கோடுகளுடனும் கறைகளுடனும் காணலாம்.

[A. p. brucei என்ற உள்ளினம் சிழக்குத் தொடர்ச்சி மலை சார்ந்த பகுதிகளில் காணப்படுகிறது. அதன் பழக்க வழக்கங்கள் தோற்றம் முதலியன பெரும்பாலும் இதனை ஒத்தனவே.]

Sub-family : Muscicapinae

ஈப்பிடிப்பான்கள்
(FLYCATCHERS)

352. பழுப்பு நிற ஈப்பிடிப்பான்
1407. Brown Flycatcher
Alseonox latrirostrix (Raffles)

தோற்றம் : சிட்டுக்குருவியை விடச் சிறியதான இது சுமார் 10 செ. மீ. நீளமிருக்கும்.

மேல் அலகும் கீழ் அலகின் முனையும் கரும்பழுப்பு; கீழ் அலகு வெளிர் மஞ்சள்; விழிப்படலம் ஆழ்ந்த பழுப்பு; கால்கள் கரும் பழுப்பு.

கண்ணைச் சுற்றிய பகுதி வெண்மையாகும்; உடலின் மேற் பகுதி சாம்பற் பழுப்பாக இருக்கும். வால் ஆழ்ந்த பழுப்பாகவும் இறக்கை பழுப்பாகவும் இருக்கும். மார்பு சாம்பல் நிறமாகவும் மோவாயும் தொண்டையும் சாம்பல் தோய்ந்த வெண்மையாகவும் வயிறு வெண்மையாகவும் இருக்கும்.

காணப்படும் இடங்கள் : தென்னிந்தியா முழுவதும் குளிர் காலத்தில் ஓரளவும் கோவையில் அபூர்வமாகக் காணலாம். சிறு

புதர்களிலும் தேக்குமரக் காடுகளிலும் தோப்புகளிலும் சமவெளி முதல் மலைகளில் 1000 மீட்டர் உயரம் வரை காணலாம்.

பழக்க வழக்கங்கள்: இது காலை மாலை நேரங்களிலேயே சுறு சுறுப்பாக இரை தேடுவதைக் கண்டுள்ளதாக திரு. சலீம் அலி குறித்துள்ளார். தனித்து மரங்களில் கிளைக்குக் கிளை தாவி பூச்சிகளைப் பிடிக்கும்.

ச்சீஇ-சிர்- ரீ-ரீ-ரீ எனக் குரல் கொடுக்கும்.

இனப்பெருக்கம்: காலம்: அபூர்வமாகவே ஒரு சில பறவைகள் கோடையில் தென்னிந்தியாவில் தங்கி இனப்பெருக்கம் செய்கின்றன. மே முதல் ஜூலை வரை; கூடு: மரக்காளான், வேர், பாசி, ஆகியனவற்றால் கோப்பை வடிவில் அடிமரங்களைச் சார்ந்தே தரையிலிருந்து 2 முதல் 7 மீ. உள்ளாகக் கூடு அமைக்கும். முட்டை: 3; வெளிர் ஆலிவ் நிறமாக இருக்கும்.

353. லேயார்டு ஈப்பிடிப்பான்
1408. Layard's or Indian Brownbreasted Flycatcher
Muscicapa muttui muttui (*Layard*)

தோற்றம்: சிட்டுக்குருவியை விடச் சிறிய இது சுமார் 14 செ. மீ. நீளம் இருக்கும்.

மேல் அலகு கரும்பழுப்பு; கீழ் அலகு வெளிர் ஊன் நிறம்; விழிப்படலம் கரும் பழுப்பு; கால்கள் மெழுகு மஞ்சள் நிறம்.



லேயார்டு ஈப்பிடிப்பான்

உடலின் மேற்பகுதி வெளிர் செம் பழுப்பாக இருக்கும். நெற்றி, உச்சி, பிடரி ஆகியன ஆலிவ் பழுப்பாக இருக்கும் கண்ணைச் சுற்றி வெள்ளை வட்டம் காணலாம். மோவாய், தொண்டை ஆகியன வெண்மை; கன்னம், கழுத்தின் பக்கங்கள், மார்பு, உடலின் பக்கங்கள் ஆகியன மஞ்சள் தோய்ந்த பழுப்பு; வயிறு, வாலடி, வாலடி இறகுகள் ஆகியன வெளிர் மஞ்சள் நிறம்.

காணப்படும் இடங்கள்: குளிர்காலத்தில் வலசை வருவது. மாறாப் பசுங் காடுகளைச் சார்ந்த அடர்ந்த புதர்களி

லும், ஏலக்காய் தோட்டங்களிலும், காட்டருவிகளின் கரைகளில் வளர்ந்துள்ள புதர்களிலும் மலைகளில் 300 மீ. முதல் 1000 மீ. வரை ஆங்காங்கே காணலாம்.

பழக்க வழக்கங்கள் : தனித்துத் தாழ்வான புதர்களில் அமைதியாக இரை தேடியபடி இருக்கும் இது சில சமயங்களில் வேறு ஈப்பிடிப்பான்களோடும் காணப்படுவதுண்டு.

இனப்பெருக்கம் : இமயமலைச் சாரலில்.

354. கருஞ்சிவப்பு வால் ஈப்பிடிப்பான்
1409. Rufous Tailed Flycatcher
Muscicapa ruficauda (*Swaison*)

தோற்றம் : சிட்டுக்குருவி அளவுள்ள இது சுமார் 14 செ. மீ. இருக்கும்.

மேல் அலகு வெளிர் பழுப்பு; கீழ் அலகு ஊன் நிறம்; விழிப் படலம் ஆழ்ந்த பழுப்பு; கால்கள் ஊதா தோய்ந்த பழுப்பு நிறம்.

உடலின் மேற்பகுதியும் கழுத்தின் பக்கங்களும் மங்கிய ஆலிவ் பழுப்பு நிறம்; வால் செம்பழுப்பாக இருக்கும்; உடலின் கீழ்ப்பகுதி மங்கிய சாம்பற் பழுப்பாக இருக்கும்.

காணப்படும் இடங்கள் : மேற்குத் தொடர்ச்சி மலை சார்ந்த திருவாங்கூர் பகுதிகளில் 600 முதல் 1000 மீ. வரை பசுங்காடுகளைச் சார்ந்து காணலாம். குளிர்காலத்தில் வலசை வருவது.

பழக்க வழக்கங்கள் : தனித்து உயர்ந்த மரங்களில் திரிவது இது பெரிய மரங்களின் உயர்கிளைகளில் இலைகளிடையே இரை தேடித் திரிவது. இலைகளற்ற கிளைகளில் அமர்ந்து பூச்சிகளைத் துரத்திப் பிடிக்கும் பழக்கம் இதற்கு இல்லை. அதற்குப் பதிலாக இலை தழைகளூடே பாய்ந்து புகுந்து பூசசிகளைப் பிடிக்கும்.

இனப்பெருக்கம் : இமயமலைப் பகுதிகளில்.

355. ஐரோப்பிய செம்மார்பு ஈப்பிடிப்பான்
1411. European Red-breastedFlycatcher
Musicapa parva parva (*Bechst*)

தோற்றம் : சிட்டுக்குருவி அளவுள்ள இது சுமார் 11 செ. மீ. நீளம் இருக்கும்.

மேல் அலகு பழுப்பு; கீழ் அலகு ஊன் நிறம்; விழிப்படலம் பழுப்பு; கால்கள் கரும்பழுப்பு நிறம்.

உடலின் மேற்பகுதி செம்மஞ்சள் தோய்ந்த பழுப்பு நிறம்; உச்சியும் பிடரியும் சாம்பல் தோய்ந்த பழுப்பு நிறம்; நெற்றி, கன்னம், கண் முன் இடம், காதுப் பகுதி ஆகியன நீலந் தோய்ந்த சாம்பல் நிறம்; கண்ணைச் சுற்றி வெள்ளை வட்டம் காணலாம். மோவாய், தொண்டை, மார்பு ஆகியன நல்ல செம்பழுப்பு நிறம். வயிறும் வாலடியும் வெண்மை. பெண்ணின் தொண்டையும் மார்பும் வெண்மையாக இருக்கும்.

[கிழக்கத்திய செம்மார்பு ஈப்பிடிப்பான் Musicapa parva albicilla என்ற உள்ளினமும் தென்னிந்தியாவில் காணப்படுகிறது. இதன் தொண்டையும் மோவாயும் மட்டுமே செம்பழுப்பாக இருக்கும். தலை சாம்பல் தோய்ந்த பழுப்புக்குப் பதிலாக முதுகினைப் போல செம்மஞ்சள் தோய்ந்த பழுப்பாக இருக்கும்.]

காணப்படும் இடங்கள் : இவை இரண்டுமே குளிர்காலத்தில் வலசை வருவன. முன்னது மைசூருக்குத் தெற்கே காணப்படுவதில்லை. குடகு, வடக்கு ஆந்திராப் பகுதிகளில் ஆங்காங்கே மலைப்பகுதிகளில் ஓரளவு காணலாம். பின்னதான albicilla கேரளாவில் குமிழி வரை காணப்பட்ட குறிப்பு உண்டு என திரு. சலீம் அலி குறித்துள்ளார். ஆனால் அது மிக அபூர்வமாகவே தெற்கே வலசை வருவது.

பழக்க வழக்கங்கள் : அடிக்கொரு முறை வாலை உயரத்தூக்கி ஆட்டும். அப்பொழுது இறக்கைகள் நெகிழ்ந்து தொங்கக் காணலாம். தனித்துத் தாழ்வான கிளைகளில் அமர்ந்திருந்து பூச்சிகளைத் துரத்திப் பிடிக்கும். வாலை உயர்த்தியபடி தரையிலிறங்கிப் புழுபூச்சிகளை உண்பதும் உண்டு.

இங்கு வலசை வரும்போது இது பாடுவதில்லை.

இனப்பெருக்கம் : முன்னது ஐரோப்பாவிலும் பின்னது வடகிழக்கு ஆசியாவிலும் இனப்பெருக்கம் செய்கின்றன.

356. கருப்பு ஆரஞ்சுமான ஈப்பிடிப்பான்
1428. Black and Orange Flycatcher
Muscicapa nigrorufa (Jerdon)

தோற்றம் : சிட்டுக்குருவியை விடச் சிறிய இது சுமார் 12 செ.மீ. நீளம் இருக்கும்.

அலகு கருப்பு; விழிப்படலம் பழுப்பு; கால்கள் சாம்பல் பழுப்பு நிறம்.

தலை, கழுத்து, இறக்கைகள் கருப்பு நிறம்; முதுகு, வால், மோவாய், தொண்டை, மார்பு ஆகியன சிவந்த ஆரஞ்சு நிறம். வாலடியும் வால் கீழ் போர்வை இறகுகளும் மஞ்சளான ஆரஞ்சு நிறம். பெண் சற்று மங்கிய தோற்றம் தரும்.



கருப்பும் ஆரஞ்சுமான ஈப்பிடிப்பான்

காணப்படும் இடங்கள் : வயநாடு, நீலகிரி, பழநி, பிளகிரிரங்கன் மலை சார்ந்த பகுதிகளில் மாருப் பசுங்காடுகளில் 900 முதல் 1500 மீ. உயரம் வரை உள்ள பகுதிகளில் காணலாம்.

பழக்க வழக்கங்கள் : தனித்தோ, தூரதூரமாகப் பிரிந்து திரியும் இணையாகவோ காணலாம். தாழ்ந்த புதர்களிலும் தாழ்வான கிளைகளிலுமே சார்ந்து திரியும். மனிதர்களைக் கண்டு அஞ்சும் சுபாவம் இல்லாத பறவையாகையால் உரிய பகுதிகளுக்குச் சென்ருல் எளிதாகக் காணலாம். மூன்று பகுதிகளில் எங்கும் தாராளமாகக் காணப்படுவது. சிக்கி–ரிக்கி–சிக்கி என அடிக்கொரு முறை ஆண் பறவை கத்தியபடி இருக்கும்.

இனப்பெருக்கம் : காலம் : மார்ச், ஏப்ரல் மாதங்களில்; கூடு: புல், இலை முதலியவற்ருல் ஒழுங்கற்ற கோப்பை வடிவில் புதர்கள் சிறு செடிகள் ஆகியவற்றில் தரையிலிருந்து ஒரு மீ. க்குள்ளாக அமைக்கும். முட்டை : 2; செம்மஞ்சள் தோய்ந்த வெண்மையாக ஊதா நிறச் சிவப்புக் கறைகளுடன் காணப்படும்.

357. வெள்ளை வயிற்று நீல ஈப்பிடிப்பான்
Whitebellied Blue Flycatcher
Muscicapo pallipes (Jerdon)

தோற்றம் : சிட்டுக்குருவி அளவுள்ள இது சுமார் 16 செ. மீ நீளம் இருக்கும்.

அலகு கருப்பு; விழிப்படலம் பழுப்பு; கால்கள் ஊதா தோய்ந்த ஊன் நிறம்.

ஆண்: உடலின் வயிறு நீங்கிய பிற பகுதிகள் நீலமாகவும் வயிறு மட்டும் வெண்மையாகவும் இருக்கும்.

பெண்: உடலின் மேற்பகுதி கருஞ்சிவப்புத் தோய்ந்த ஆலிவ் பழுப்பாக இருக்கும். தொண்டை ஆரஞ்சு செம்பழுப்பாகவும் மார்பும் வயிறும் சாம்பல் தோய்ந்த வெண்மையாகவும் வால் கருஞ்சிவப்புப் புற இறகுகளோடு பழுப்பு நிறமாகவும் இருக்கும்.

ஆண் நீலகிரி நீலமேனி ஈப்பிடிப்பானையும், வெள்ளை வயிற்று சின்ன இறக்கைச் சிட்டையும் தோற்றத்தில் ஒத்திருப்பதால் குழப்பம் நிகழலாம். பெண் சிவப்பு மார்பு ஈப்பிடிப்பான் பெண்ணை ஒத்து அமைந்திருப்பதால் அதனோடு குழப்பிக் கொள்ள நேரிடலாம். M. palliper தூய நீல நிறமானது M. albicaudata பசுமை தோய்ந்த நீல நிறம் கொண்டது. M. pallipes வயிறும் வாலடியும் வெண்மை நிறமானது. M. albicaudata வாலடி மட்டும் வெண்மையானது. B. M. albiventris சிலேட் நீல நிறமாக இருப்பது கொண்டும் M. pallipes போலத் தரைக்கு வந்து இரை தேடாமல் மரங்களில் உயரத் திரிவது கொண்டும் வேறுபடுத்தி அறியலாம்.

காணப்படும் இடங்கள்: மேற்குத் தொடர்ச்சி மலை சார்ந்த பகுதிகளில் பசுங்காடுகளைச் சார்ந்து 100 மீ. முதல் 1150 மீ. வரை காணலாம்.

பழக்க வழக்கங்கள்: உயர வளர்ந்த குறிஞ்சி முதலான புதர்களிடையே தனித்துத் திரியக் காணலாம். சிறு கிளைகளில் அமர்ந்து பூச்சிகளைத் தொடர்ந்து பறந்து பிடித்து மீண்டும் திரும்ப வேறொரு கிளையில் வந்து அமரும். இரை தேடும் பிற பறவைப் பட்டாளங்களுடன் சேர்ந்து திரிந்தாலும் இது தாழ்வான புதர்களிலேயே அப்போதும் சுற்றிவரக் காணலாம். மரக்கிளைகளில் நிமிர்ந்து அமர்ந்திருக்கும் போது பருத்த அலகுப் பூஞ்சிட்டினைப் போல வாலினை விரித்து அப்படியும் இப்படியும் அசைக்கக் காணலாம்.

பறக்கும் பூச்சிகளே இதன் முக்கிய உணவு.

ஆண் காலை மாலை நேரங்களில் இனிமையாகப் பாடும்.

இனப்பெருக்கம்: காலம்: பிப்ரவரி முதல் செப்டம்பர்வரை; கூடு: வேர், புல், மரக்காளான் முதலியவற்றால் பாசியினைப் புறத்தில் வைத்து பெரும் போக்காகக் கோப்பை வடிவான கூடு அமைக்கும். காய்ந்து போன பெரிய மரங்களில் காணப்படும்

பொந்துகளிலோ ஆழ்ந்த புதர்களிலோ கூடுகளைக் காணலாம். முட்டை: 4; பெரிய கருங்குருவியின் முட்டையைப் போலவோ சாமாவின் முட்டையைப் போலவோ காட்சி தரும். கடல் பச்சை நிறமாக சாக்லெட் பழுப்பு கரும் பழுப்புக் கறைகளுடன் காட்சி தரும்.

353. நீலத்தொண்டை ஈப்பிடிப்பான்

1440. Bluethro•ted Flycatcher

Musicapa rubeculoides rubeculoides (Vigors)

தோற்றம்: சிட்டுக்குருவி அளவுள்ள இது சுமார் 14 செ. மீ. நீளம் இருக்கும்.

அலகு பழுப்பான கருப்பு; விழிப்படலம் பழுப்பு; கால்கள் சாம்பல் தோய்ந்த பழுப்பு.

ஆண்; உடலின் மேற்பகுதி முழுதும் நீல நிறமாக இருக்கும். தொண்டை ஆழ்ந்த நீலமாக இருக்கும். கழுத்தும் மார்பும் துருச்சிவப்பாக இருக்கும். வயிறு வெள்ளை நிறம்.

பெண்; உடலின் மேற்பகுதி அலிவ் பழுப்பாக இருக்கும். மார்பு கருஞ்சிவப்பாகத் துருநிறம் தோய்ந்து காணப்படும். வயிறு வெளளை. இதனை முந்திய வெள்ளைவயிற்று நில ஈப்பிடிப்பானின் பெண்ணோடு குழப்பிக் கொள்ள நேரிடும்.

காணப்படும் இடங்கள் : குளிர்காலத்தில் தென்னிந்தியா முழுதும் பசுமைமாருக் காடுகளில் சமவெளி முதல் 9(.0 மீட்டர் உயரம் வரை மிக அபூர்வமாகவே காணலாம்.

பழக்க வழக்கங்கள் : அடிக்கடி வாலை நிமிர்த்தி சீ ச்சிர். ர் ச்சிர்...ர் எனவோ கிளிக் கிளிக் எனவோ கத்தும் நடுங்கும் குரலில் டிரிடிரிடிரி என டிக்கல் பூஞ்சிட்டினைப்போலவும் கத்தக் கேட்கலாம். தனித்துக் காடான பகுதிகளில் பூச்சிகளை வேட்டையாடித் திரியும்.

இனப்பெருக்கம் : இமயமலைப் பகுதியில்.

359. டிக்கல் நீல ஈப்பிடிப்பான்

1442. Ti‹kell's Blue Flycatcher

Muscicapa tickelliae tickelliae (Blyth)

தோற்றம்: சிட்டுக்குருவி அளவுள்ள இதன் நீளம் 15 செ.மீ.

அலகு கருப்புத் தோய்ந்த பழுப்பு; விழிப்படலம் ஆழ்ந்த பழுப்பு; கால்கள் சாம்பல் பழுப்பு நிறம்.

உடலின் மேற்பகுதி முழுதும் நல்ல நீல நிறமாக இருக்கும்; நெற்றியும், புருவமும் தோள்பட்டையும் சற்று மங்கிய நீலமாக இருக்கும்; தொண்டையும் மார்பும் வெளிர் துருநிறம் வயிறும் வாலடியும் வெண்மை; பெண்ணின் உடல் நீலமும் மார்புப் பகுதித் துருநிறமும் மங்கிக் காணப்படும்.

காணப்படும் இடங்கள்: தென்னிந்தியா முழுவதும் சமவெளி களில் இலையுதிர் காடுகள் சார்ந்த பகுதிகளில் காணலாம். மலை களில் 1500 மீ. உயரம் வரை மூங்கிலும் பிற மரங்களும் கலந்து வளர்ந்துள்ள காடுகளில் காணலாம்.

பழக்க வழக்கங்கள்: மென் சிறு குரலில் கிறீச்சிட்டு ரீ..ரீ..ரீ எனக் கத்தும். மற்ற ஈப்பிடிப்பான்களைப் போலவே பறக்கும் பூச்சிகளைப் பிடிக்கக் காணலாம். மனிதர்களைக் கண்டால் அஞ்சி மறையும் சுபாவம் கொண்டது.

இனப்பெருக்கம்: காலம்: மார்ச் முதல் ஆகஸ்ட் வரை; கூடு: குச்சி, காய்ந்த இலை, வேர் ஆகியவற்றால் கோப்பை வடி வில் மரப்பொந்து அல்லது மண் கரைகள் உள்ள குழிகளில் அமைக்கும். முட்டை: 3 முதல் 5 வரை; ஆலிவ் பழுப்பு நிறங் கொண்டவை; செம்பழுப்புச் சிறு புள்ளிகள் கொண்டிருக்கும்.

360. நீலமேனி ஈப்பிடிப்பான்

1445. Verditer Flycatcher

Muscicapa thalassina thalassina (Swainson)

தோற்றம்: சிட்டுக்குருவியை ஒத்த அளவுள்ள இதன் நீளம் 15 செ. மீ.

அலகும் கால்களும் கருப்பு; விழிப்படலம் கரும் பழுப்பு.

செம்பின் களிம்பினை ஒத்த பசு நீல நிறங்கொண்ட பறவை; கண்ணின் முன் தெளிவான கருப்புப் பகுதி காணலாம். (பெண் சற்று மங்கிய தோற்றம் கொண்டது) வாலடி வெள்ளையாகவும் வாலடிப் போர்வை இறகுகள் பசுநீலமாக வெள்ளைப் பட்டைகளு டனும் காணப்படும்.

காணப்படும் இடங்கள்: குளிர்காலத்தில் தென்னிந்தியா முழு வதும் மலைகள் சார்ந்த காட்டுப் பகுதிகளில் சமவெளி முதல் 1500 மீ. உயரம் வரை காணலாம்.

பழக்க வழக்கங்கள் : மரங்களில் உயரத் தனித்துப் பூச்சிகளைத் தேடித் திரியும். 'கிளிக், கிளிக்' எனக் கிளைகளில் அமர்ந்து வாலை ஆட்டியபடியே குரல் கொடுப்பதைத் தவிர வேறு குரல் கொடுப்ப தில்லை. கோடை நெருங்கும் சமயங்களில் வடக்கே மீண்டும் திரும்பும் முன் ஆண் இனிமையாகப் பாடும். இதன் பாட்டு வெள்ளைக் கண்ணியின் குரலை ஒத்தது. பூச்சிகளே முக்கிய உணவு.

இனப்பெருக்கம் : இமயமலைப் பகுதிகளில்

361. நீலகிரி நீலமேனி ஈப்பிடிப்பான்

1446. Nilgiri Verditer Flycatcher

Muscicappa albicaudata (Jerdon)

தோற்றம் : சிட்டுக்குருவி அளவுள்ள இதன் நீளம் 15 செ.மீ.

அலகும் கால்களும் கருப்பு; விழிப்படலம் கரும்பழுப்பு;

பசுமை தோய்ந்த நீல நிறங்கொண்ட இதன் நெற்றியும் கண்பட்டையும் நல்ல நீலமாக இருக்கும். தொண்டையும் மார் பும் வெளிர்த்த துரு நிறமாக இருக்கும். வயிறு வெண்மை. (பார்க்க: வெள்ளை வயிற்று நீல ஈப்பிடிப்பான்- வேறுபாடு அறிய வும்) பெண் சற்று மங்கிய சாம்பற் பழுப்புத் தோய்ந்த பசு நீல நிறங்கொண்டதாக இருக்கும்.

காணப்படும் இடங்கள் : நீலகிரி மலையைச் சார்ந்து அமைந்த மேற்குத் தொடர்ச்சி மலைபபகுதிகளில் பழநி, ஆனைமலைப் பகுதி களிலும் மாறுப் பசுங்காடுகளில் 1000 மீ. முதல் 2000 மீ. வரை யான பகுதிகளில் காணலாம்.

பழக்க வழக்கங்கள் : அடுத்த சாம்பல் தலை ஈப்பிடிப்பானுட னும், லாயார்டு வெள்ளை மார்பு ஈப்பிடிப்பானுடனும் கலந்து திரி யக் காணலாம். ரீங்காரக் குரலில் ஆண் இனிமையாகப் பாடும். மரங்களில் இலைகளற்ற கிளைகளில் அமர்ந்து இது பாடும் ஒலி 10 விநாடிகள் வரை கேட்கும். உடனே ஏதேனும் பூச்சிகள் பறக்குமானல் எழுந்து துரத்திப் பிடிக்கும். மிகச்சிறு மலைச்சோலை களில் கூட இது திரியக் காணலாம். உயர இலைகளூடேயும் புதர்களைச் சார்ந்தும் பறந்து இரை தேடும்.

பூச்சிகளே முக்கிய உணவு.

இனப்பெருக்கம்: காலம்: மார்ச் முதல் மே வரை; கூடு: மரப்பாசி, வேர், நார் முதலியன கொண்டு தரையில் பொந்துகளிலும் மரப்பொந்துகளிலும் கோப்பை வடிவிலான கூடு கட்டும். முட்டை: 3; சிலபோது 2; கிரீம் நிறம் தோய்ந்த இளம் சிவப்பாக இருக்கும். சிவப்புப் புள்ளிகளோடு பெருமுனையில் புள்ளிகளாலான வளைய அமைப்பும் காணலாம்.

362. கருஞ்சாம்பல் தலை ஈப்பிடிப்பான்

1449. Krey-Headed Flycatcher

Culicicapo ceylonensis ceylonensis (Swainson)

தோற்றம்: சிட்டுக்குருவியை விட அளவில் சிறியது. சுமார் 12 செ. மீ. நீளம் இருக்கும்.

மேல் அலகு கரும் பழுப்பு; கீழ் அலகு மஞ்சள் தோய்ந்த கொம்பு நிறம்; விழிப்படலம் ஆழ்ந்த பழுப்பு; கால்கள் பழுப்புத் தோய்ந்த ஆரஞ்சு நிறம்;

இதன் தலையும் கழுத்தும் மார்பும் வெண்மை தோய்ந்த கருஞ்சாம்பல் நிறமாக இருக்கும் உடலின் மேற்பகுதி பசுமை தோய்ந்த மஞ்சளாக இருக்கும். வயிறும் வாலடியும் தூய மஞ்சளாக இருக்கும். ஆணும் பெண்ணும் ஒன்று போல இருக்கும்.



கருஞ்சாம்பல் தலை ஈப்பிடிப்பான்

காணப்படும் இடங்கள்: மேற்குத் தொடர்ச்சி மலை சார்ந்த பகுதிகளில் பழநி மலையுட்பட பசுமை மாறுக் காடுகளிலும் ஈரமிகுந்த இலையுதிர் காடுகளைச் சார்ந்த மூங்கில் தோப்புகள், மலையாற்றங்கரை சார்ந்த காடுகள் ஆகியவற்றில் 450 மீ. முதல் 2500 மீ. வரை காணலாம்.

பழக்க வழக்கங்கள்: தனித்து சுறுசுறுப்பாக மரங்களில் உயர புழுபூச்சிகளைத் துரத்திப் பிடித்தபடி இருக்கும். திறமையாக அப்படியும் இப்படியும் வேகமாகத் திரும்பிப் பூச்சிகளைப் பிடித்து மீண்டும் கிளைகளில் சென்று அமரும். க்சிக்—வீஇச்சீ—வீஇச்சீ என உரத்த சீழ்க்கைக் குரலில் அடிக்கடிக் கத்தக் கேட்கலாம். ட்டிட்டிட்டி என சிறு குரலில் கத்துவதும் உண்டு.

இனப்பெருக்கம் : காலம் : ஏப்ரல் முதல் ஜூன் முடிய; கூடு : சிறு கோப்பை வடிவான கூட்டினைப் பாசி பிடித்த மரக்கிளையில் மரக்காளான், மரப்பாசி ஆகியன கொண்டு தரையிலிருந்து 6 மீ. உள்ளான உயரத்தில் சிலந்தி நூல்கள் கொண்டு அமைக்கும். முட்டை : 3 அல்லது 4; சாம்பல் தோய்ந்த வெண்மையாக இருக்கும். மஞ்சள் நிறந் தோய்ந்த கருஞ்சாம்பல் கறைகள் கொண்டதாக இருக்கும்.

363. தெற்கத்திய வெண்புருவ விசிறிவால் நாட்டியக்காரி

1452. Southern Whitebrowed Fantail Flycatcher

Rhipidura aureola compressirostris (Blyth)

தோற்றம் : சிட்டுக்குருவியை விடச் சற்றுப் பெரிய இது சுமார் 16 செ. மீ. நீளம் இருக்கும்.

தெற்கத்திய வெண்புருவ விசிறிவால் நாட்டியக்காரி

அலகு பழுப்புத் தோய்ந்த கருப்பு; விழிப்படலம் பழுப்பு; கால்கள் கரும் பழுப்பு.

தலை உச்சியும் பிடரியும் கழுத்தும் கருப்பு; கண்ணுக்கு மேல் ஒரு வெள்ளைக் கோடு பிடரி வரை செல்லும். உடலின் மேற்பகுதி சாம்பல் பழுப்பு நிறம். வால் பழுப்பு நிறமாக விசிறி போல் விரிந்து நடுவில் நான்கு இறக்கைகள் தவிர இருபுற ஓரத்திலுள்ள இறக்கைகள் யாவும் வெள்ளை முனையோடு காட்சி தரும். தொண்டை கருப்பு; மார்பில் தெளிவற்ற கருப்பு வளையம் காணலாம். வயிறும் வாலடியும் வெண்மை.

காணப்படும் இடங்கள்: இலையுதிர் காடுகள். அடர்ந்த மரங்களோடு கூடிய தோப்புகள், புதர்காடுகள், பலாத் தோட்டங்கள் மாந்தோப்புகள் ஆகியவற்றில் தென்னிந்தியா முழுவதும் காணலாம். கேரளப் பகுதியில் மிகுதியும் காணப்படும். (வட தமிழ் நாடு, மைசூர். ஆந்திரப் பகுதிகளில் Rhipidura aureola aureola என்ற சிறப்பு உள்ளினம் காணப்படுகின்றது. அதன் வால் சற்று நீண்டு, நடு இரண்டு இறகுகள் மட்டும் வெள்ளை விளிம்பு அற்றதாக இருக்கும். இதனைக் காட்டிலும் உடம்பின் மேற்பகுதி சற்று நிறம் மங்கிக் காணப்படும். இரண்டையும் வேறுபடுத்தி அறிவது சிரமம். ஒரே பகுதியில் இரண்டும் கலந்து காணப்படுவது உண்டு)

பழக்க வழக்கங்கள்: பெரும்பாலும் இணையாகக் குறிப்பிட்ட ஒரு பகுதியில் சுற்றிச் சுற்றித் திரியும். வேட்டையாடும் பிற பறவைப் பட்டாளங்களோடு சேர்ந்து திரிவதும் உண்டு. ஒரு கிளையிலிருந்து இன்னொரு கிளைக்குத் தாவிய படியே இருக்கும். ஒரு கிளையிலோ பாறையிலோ அமர்ந்து சுற்றிலும் திரும்பித் திரும்பிப் பார்த்தபடி வாலை விரித்துக் காட்டியபடி இருக்கும். பூச்சிகள் எதிர்ப்பட்டால் சுற்றி ஒரு வட்டமிட்டுப் பறந்து பின் அவைகளை அலகால் வேகமாகக் கவ்விப் பிடிக்கும். அப்போது மேல் அலகும் கீழ் அலகும் சேரும் சப்தம் உண்டாகக் கேட்கலாம்.

ச்சக் ச்சக் ச்சக் எனக் கத்தும்.

இனப்பெருக்கம்: காலம்: பிப்ரவரி முதல் மே முடிய; கூடு: மெல்லிய புல்லினால் சிறிய கோப்பை வடிவில் வெளிப்பக்கத்தைச் சிலந்தி நூலால் பிணைத்து அமைக்கும். மரக்கிளைகளின் பிரிவில் தரையிலிருந்து சுமார் 4 மீ. உயரம் வரைக் கூடுகளைக் காணலாம். முட்டை: 3; சிலபோது 4; இளஞ்சிவப்புத் தோய்ந்த கிரீம் நிறமாக சிறு பழுப்புப் புள்ளி வட்டங்களோடு காட்சி தரும். ஆணும் பெண்ணும் கூடு கட்டுவதிலும் அடைகாப்பதிலும், குஞ்சுகளைப் பேணுவதிலும் பணி ஏற்கும்.

364. வெண்புள்ளி விசிறிவால் நாட்டியக்காரி

1458. White-spotted Fantail Flycatcher

Rhipidura albogularis (Lesson)

தோற்றம்: சிட்டுக்குருவியை விடச் சற்றுப் பெரிய இது சுமார் 17 செ. மீ. நீளம் இருக்கும்.

அலகும் கால்களும் கருப்பு; விழிப்படலம் ஆழ்ந்த பழுப்பு;

தலை கருப்பு; கண்ணின் மேல் ஒரு வெண்கோடு செல்லக் காணலாம்· எஞ்சிய உடலின் மேற்பகுதிகள் ஆழ்ந்த பழுப்பு நிறம். தொண்டையும் வயிறும் வெள்ளை; வயிற்றில் கருஞ்சிவப்பு நிறம் தோய்ந்திருக்கக் காணலாம்; கழுத்தும மார்பும் கருப்பு; இதன் பெயருக்குக் காரணமான பெரிய வெள்ளைப் புள்ளிகளை மார்பில் காணலாம். ஆணும் பெண்ணும் ஒன்று போல; வாலின் ஓர இறகுகளில் வெள்ளை நுனி தெளிவாகத் தெரியாது.

காணப்படும் இடங்கள்: நீலகிரி சார்ந்த மலைப்பகுதிகளில் மிகுதியாகவும் மலைசார்ந்த பிற பகுதிகளில் ஓரளவும் சமவெளிப் பகுதி முதல் மலைகளில் 1500 மீ. உயரம் வரை இலையுதிர் காடுகளிலும், சோலைகளிலும் காட்டாறுகள் சார்ந்த பகுதிகளிலும் காணலாம்.

பழக்க வழக்கங்கள்: முன்னதைப் போன்றனவே.

இனப்பெருக்கம்: காலம்: மார்ச் முதல் ஜூலை முடிய; கூடு: முன்னதை ஒத்திருக்கும். முட்டை: 3; மஞ்சளாக மஞ்சளான பழுப்புப் புள்ளிகளுடன் காட்சி தரும்.

Sub-Family: Monarchinae

அரசவாலன்கள்
(MONARCH FLYCATCHER)

365. வெள்ளை அரசவாலன்

1461. Paradise Flycatcher

Terpsiphone paradisi paradisi (*Linnaeus*)

தோற்றம்: கொண்டைக் குருவி அளவுள்ள இதன் வால் சுமார் 40 செ. மீ. நீண்டு தொங்கும்.

அலகு முனை கருத்துச் சாம்பல் தோய்ந்த நீல நிறமாக இருக்கும். விழிப்படலம் ஆழ்ந்த பழுப்பு, கால்கள் சிலேட் நீல நிறம்.

ஆண்: கொண்டையோடு கூடிய தலை கருப்பாக இருக்கும். உடலின் மேற்பகுதியும் கீழ்ப்பகுதியும் நீண்ட வாலும் வெண்மை நிறம்.

பெண்: கொண்டை கருப்பு: தலையும் கழுத்தும் கருப்பு; உடலின் மேற்பகுதி செம்பழுப்பு; கீழ்ப்பகுதி வெளிர் சாம்பல்

தோய்ந்த வெண்மை நிறம். நீண்டு தொங்கும் வால் இதற்குக் கிடையாது.

வளராத ஆண் : பெண்ணினைப் போன்ற உடல் தோற்றம் கொண்டது. நீண்டு தொங்கும் வால் வெண்மைக்குப் பதிலாக செம்பழுப்பு நிறமாக இருக்கும்.

வெள்ளை அரசவாலன்

காணப்படும் இடங்கள்: தென்னிந்தியா முழுவதும் சம வெளி முதல் மலைகளில் 2000 மீ உயரம் வரையிலும் காணலாம். மூங்கிற்காடுகள், பசுங்காடுகளை அடுத்த பகுதிகள், தோப்புகள், ரப்பர்த் தோட்டங்கள் ஆகியவற்றைச் சார்ந்து காணலாம். மரங் கள் அற்ற ராமநாதபுரம் நகரில் முட்புதர்களிடையே காணப்பட்ட குறிப்புண்டு. குளிர்காலத்தில் இலங்கைக்கு வலசை செல்லும் பறவைகள் போவதும் திரும்புவதுமான பருவங்களில் மிகுதியாகக் காணப்படுவது உண்டு.

பழக்க வழக்கங்கள்: நீண்ட வால் காற்றில் அசையப் பறந்து ஆண் அப்படியும் இப்படியுமாகத் திரும்பிப் பூச்சிகளைப்

பிடிப்பது காண்பதற்கினிய காட்சியாகும். ச்சீ-ச்சீவீஇ எனக் குரல் கொடுத்தபடி நெருக்கமான கிளைகளுக்கிடையே கூட லாவக மாகச் சென்று நுழைந்து பறக்கும் இனப்பெருக்கக் காலத்தில் பல வகை இனிய குரல்களில் ஒலி எழுப்பும்.

இனப்பெருக்கம்: காலம்: மே முதல் ஜூலை முடிய; கூடு: புல், நார் ஆகியவற்றை சிலந்தி நூலால் இணைத்துக் கோப்பை வடிவிலான கூட்டினைக் கிளைகள் பிரியும் கவட்டி இடையே அமைக் கும். முட்டை: 3 அல்லது 4; கிரீம் நிறத்தில் ஆழ்ந்த சிவப்புப் புள்ளிகளோடு காணப்படும்.

366. நீலநிறக் கரும்பிடரி அரசவாலன்

1465. Indian Blacknaped Blue Flycatcher

Monarcha azurea styani (*Hartlaup*)

தோற்றம்: சிட்டுக்குருவியை விடச் சற்றுப் பெரிய இது சுமார் 16 செ. மீ. நீளம் இருக்கும்.

அலகு முனை கருப்பாக நீல நிறமாக இருக்கும்; விழிப்படலம் ஆழ்ந்த பழுப்பு; கால்கள் சிலேட் நீல நிறம்.

உடலின் மேற்பகுதி மங்கிய நீல நிறமாக இருக்கும். தலை யும் கழுத்தும் நல்ல நீலம்; பிடரியில் விறைப்பான கருப்புத் தூவி களால் ஆன பெரிய கரும்பட்டைக்கோடு காணலாம். கழுத்தின் கீழ்ப்பகுதியில் முன் பக்கம் ஒரு கருப்புக்கோடு காணப்படும். தொண்டை, கழுத்து, மார்பு ஆகியன வெளிர் நீலம். வயிறு, வாலடி ஆகியன நீலந்தோய்ந்த வெண்மையாக இருக்கும்.

பெண் அளவில் சற்றுச் சிறியதாக, பிடரியிலும் கழுத்திலும் கருப்புக் கோடுகளின்றிப் பழுப்புத் தோய்ந்த நீல நிறத்தோடு காட்சி தரும் உடலின் கீழ்ப்பகுதி சாம்பல் தோய்ந்து வெண்மை யாகக் காணப்படும்.

காணப்படும் இடங்கள்: தென்னிந்தியா முழுவதும் மாருப் பசுங்காடுகளிலும் ஈரமிகுந்த இலையுதிர்காடுகளிலும் சமவெளி முதல் மலைகளில் 1200 மீ உயரம் வரை ஆங்காங்கே காணலாம்.

பழக்க வழக்கங்கள்: இணையாகவோ, தனித்தோ இரை தேடும் பறவைப் பட்டாளங்களுடன் இதுவும் கலந்து திரியக் காணலாம். விசிறிவால் நாட்டியக்காரியைப் போல வாலைச் சற்று விரித்துத் தூக்கியபடி இறக்கைகளைத் தொங்க விட்டு ஸ்வீச்-விச்

என்றோ ச்சீ-ச்சீ என்றோ உரத்தக் குரலில் கத்தியபடி கிளைக்குக் கிளை சுறுசுறுப்பாகத் தாவிப் பறக்கக் காணலாம். பறந்து பாய்ந்து பூச்சிகளைப் பிடிப்பதோடு தரையில் இறங்கியும் பூச்சிகளைப் பிடிக்கும். வேகமாக இறக்கை அடித்து இலைக்கொத்துக்களின் முன் மிதந்து பறந்து உள்ளே இருக்கும் புழுபூச்சிகளை விரட்டிப் பிடிப்பதும் உண்டு.

இனப்பெருக்கம் : காலம் : ஜூன், ஜூலை மாதங்களில்; கூடு : கோப்பை வடிவில் புல், பாசி, சிலந்தி நூல் ஆகியன கொண்டு மரக்கிளைகளிடையே 8 மீ. உயரத்திற்கு உள்ளாக அமைக்கும். முட்டை : 3 அல்லது 4; வெளிர் கிரீம் நிறமாக பழுப்புக் கறைகளுடனும் ஊதாப் புள்ளிகளுடனும் காட்சி தரும்.

Sub-Family: Sylviinae

கதிர்க்குருவிகள்
(WARBLERS)

367. செந்தலை விசிறிவால் கதிர்க்குருவி

1496. Redheaded Fantail Warbler

Cisticola exilis erythrocephala (Blyth)

தோற்றம் : சிட்டுக்குருவியை விடச் சிறிய இது சுமார் 11 செ. மீ. நீளம் இருக்கும்.

மேல் அலகு கொம்பு பழுப்பு நிறம்; கீழ் அலகு மஞ்சள் தோய்ந்த பழுப்பு நிறம்; விழிப்படலம் வெளிர் பழுப்பு நிறம்; கால்கள் வெளிர் பழுப்பு நிறம்.

உச்சந்தலை செம்பழுப்பாக இருக்கும். உடலின் மேற்பகுதி கருஞ்சிவப்பாகக் கருங்கோடுகளோடு காணப்படும். உடலின் கீழ்ப்பகுதி லேசான துருநிறமாக இருக்கும். தொண்டையும் வயிறும் வெண்மை நிறம். குவிந்து சிறுத்து முடியும் வால் கருப்பாக வெள்ளையோடு காணப்படும்.

ஆண் குளிர்காலத்தில் பெண்ணினை ஒத்திருக்கும்.

பெண்ணின் தலை கருஞ்சிவப்பாகக் கருங்கோடுகளோடு காட்சி தரும். உடலின் கீழ்ப்பகுதி வெளிர் கருஞ்சிவப்பாக இருக்கும்.

காணப்படும் இடங்கள்: மேற்குத் தொடர்ச்சி மலை சார்ந்த பகுதிகளில் குறிஞ்சிப் புதர்களிலும், புதர்காடுகளிலும் 900 மீ. முதல் 1500 மீ. வரை காணலம். நீலகிரி, பழநி, பிளகிரிரங்கன், பாபாபுதான் மலைப்பகுதிகளில் காணலாம்.

பழக்க வழக்கங்கள்: தனித்தோ, சிறு கூட்டமாகவோ மலைப்பக்கங்களில் மலைப்புல் வளர்ந்துள்ள பகுதிகளில் மறைந்து திரியும் இயல்பு உடையது. ஒன்றிரண்டு அடிக்கடி புல்லின் நுனி இலையில் வந்து அமரக்காணலாம். மனிதர் நெருங்கினுல் ஒவ்வொன்ருக எல்லாப் பறவைகளும் எழுந்து ஒரே திசையில் செல்லக் காணலாம். அவ்வாறு பறக்கும் பறவைகள் சற்று தூரம் பறந்தவுடன் மீண்டும் புல்லினிடையே இறங்கி மறையும். புல் தண்டுகளில் பாய்ந்து தாவித் தாவிச் செல்லும். இனப்பெருக்கக் காலத்தில் உயர எழுந்து இடமும் வலமுமாக மாறி மாறித் திரும்பிப் பறக்கும் அப்போது ஸ்சிர்ர்ர்ர் எனச் சீறுவது போல ஒலித்துப் பின் ப்ளுக் என மணி ஒலி போன்ற குரலில் கத்தியபடி இருக்கும்.

சிறு பூச்சிகளே முக்கிய உணவு.

இனப்பெருக்கம்: தென்னிந்தியாவில் இனப்பெருக்கம் செய்கின்றது என்பதற்குரிய தெளிவான சான்றுகள் இல்லை.

368. சிறுகோட்டு விசிறிவால் கதிர்க்குருவி

1498. Streaked Fantail Warbler

Cisticola juncidis cursitans (Franklin)

தோற்றம்: சிட்டுக்குருவியைவிட அளவில் சிறிய இது சுமார் 11 செ. மீ. நீளம் இருக்கும்.

அலகு ஊன் நிறம்; விழிப்படலம் மஞ்சட் பழுப்பு; கால்கள் இளஞ்சிவப்பு நிறம்.

உடலின் மேற்பகுதி கரும்பழுப்பாகக் கருஞ்சிவப்பான மஞ்சட் கோடுகளுடன் காட்சி தரும். மோவாயும் தொண்டையும் வெண்மை. கருஞ்சிவப்புத் தோய்ந்த பழுப்பு நிற வாலில் நடு இரண்டு இறகுகள் தவிர மற்றவை வெள்ளை முனையோடு காட்சி தரும். வயிறும் மார்பும் வாலடியும் சிவப்புத் தோய்ந்த மஞ்சளாக இருக்கும்.

காணப்படும் இடங்கள்: தென்னிந்தியா முழுவதும் நீர்வளமிகுந்த பகுதிகளில் சதுப்பு நிலமான புல்காடுகள், நெல் வயல்கள்

ஆகியவற்றைச் சார்ந்து காணலாம். மலைகளில் 1200 மீ. உயரம் வரை காணப்படுகிறது.

பெரியாறு நீர்த்தேக்கப்பகுதி, குமிளி, மலபார் போன்ற மழை மிகுந்த பகுதிகளில் C. j. salimali என்ற உள்ளினம்



சிறுகோட்டு விசிறிவால் கதிர்க்குருவி

காணப்படுகிறது. இது C. j. cursitans ஐக்காட்டிலும் மேலுய கீழும் நல்ல ஆழ்ந்த நிறப்பொலிவு கொண்டது. பிட்டம் கருஞ் சிவப்புக்குப் பதிலாகப் பளிச்செனக் காட்சி தரும் செம்பழுப்பாக இருக்கும்.

பழக்க வழக்கங்கள் : தனித்தோ, சிறு கூட்டமாகவோ புல் நிலங்களிடையே காணலாம். விசிறிவாலை விரித்து, உயர எழுந்து இடம் வலமாகத் திரும்பி ச்சிப், ச்சிப், ச்சிப் எனக் கத்தியபடி பறப்பதைக் கொண்டு இது இருப்பதைக் கண்டு கொள்ளலாம். கூடு கட்டியுள்ள இடத்திற்கு மேலே இது இப்படிக் குறிக்கோளின்றிப் பறப்பது கொண்டு இதன் கூடு உள்ள இடத்தையும் கண்டு கொள்ளலாம். இப்படி எழுந்து தாழ்ந்து இடம் வலமாகத் திரும்பிப் பறக்கும்போது ஒவ்வொரு முறை கீழே தாழ்ந்து வரும்போதும் ச்சிப் எனக் குரல் கொடுக்கும். சராசரியாக ஒரு வினாடிக்கு ஒரு ச்சிப் ஒலிப்பதைக் கேட்கலாம்.

பூச்சிகள், கம்பளிப் பூச்சிகள் ஆகியவை இதன் உணவு.

இனப்பெருக்கம் : காலம் : ஏப்ரல் முதல் அக்டோபர் முடிய; கூடு : புல்லினிடையே சிறு புல்லால் கோப்பை வடிவிலான கூடு அமைத்துச் சிலந்தி நூல் கொண்டு கூட்டினை ஒன்ருகப் பிணைக் கும். முட்டை : 3 முதல் 5 வரை; வெண்மையாக ஆழ்ந்த ஊதா, சிவப்புக் கறைகளோடு காட்சி தரும்.

369. குடகு நீண்ட வால் கதிர்க்குருவி

1504. Goorg Long Tailed or Wren Warbler

Prinia hodgsonii albogularis (Walden)

தோற்றம் : சிட்டுக் குருவியை விடச் சிறிய இது சுமார் செ. மீ. நீளமிருக்கும்.

அலகு கருப்பு; விழிப்படலம் வைக்கோல் நிறம்; கால்கள் பழுப்புத் தோய்ந்த ஊன் நிறம்.

தையற் சிட்டினைப் பெரிதும் தோற்றத்தில் ஒத்தது இது. கோடைக்காலத்தில் உடலின் மேற்பகுதி சிலேட் சாம்பல் நிறமாக இருக்கும்; கீழ்ப்பகுதி வெண்மை, மார்பில் அகன்ற கருஞ்சாம்பல் நிற வளையம் காணலாம். வால் முனை குறுகி வெள்ளைக் கறை களுடன் காட்சி தரும். குளிர்காலத்தில் வால் சற்று நீண்டிருக் கும் போதே இந்த வெள்ளைப் புள்ளிகள் தெளிவாகத் தெரியும். மேலும் குளிர்காலத்தில் உடலின் மேற்பகுதி சற்றுக் கருஞ்சிவப் புத் தோய்ந்த பழுப்பாக மாறும்.

காணப்படும் இடங்கள் : குடகு, மைசூர் பகுதிகளில் மேற்குத் தொடர்ச்சி மலை சார்ந்தும் கிழக்குத் தொடர்ச்சி மலைப் பகுதிகளில் வடக்கே விசாகப்பட்டணம் வரையும் காணலாம். சமவெளி முதல் மலைகளில் 1500 மீ. உயரம் வரை புல் நிலங்களையும் புதர்க்காடு களையும் சார்ந்து காணலாம்.

(Prinia hodgsonii gracilis என்ற உள்ளினமும் தென்னிந்தி யாவில் பிற பகுதிகளில் காணப்படுகிறது. குளிர்காலத்தில் இதன் மேற்பகுதி ஆலிவ் பழுப்பு நிறமாக இருக்கும். மார்பில் இதற்கு வளையம் கிடையாது. உடலின் கீழ்ப்பகுதி albogularis போலத் தூய வெண்மையாக இராமல் கிரீம் தோய்ந்த வெண்மை நிறமாக இருக்கும். தெற்கத்திய நீண்டவால் கதிர்க்குருவியான இது தென்னிந்தியா முழுதும் காணப்படுகிறது. பழக்க வழக்கங்கள் பெரும்பாலும் குடகுக் கதிர்க்குருவியைப் போன்றனவே)

பழக்க வழக்கங்கள்: 3 முதல் 5 வரையான பறவைகள் எப்போதும் சேர்ந்து திரியும். சிலபோது 10 முதல் 15 வரையான பறவைகள் திரள்வதும் உண்டு. புல்லினிடையே டொக். டொக் எனக் குரல் கொடுத்தபடி தாவித் திரியும். இனப்பெருக்கக் காலத்தில் யூசீஇ-யூசீஇ-யூசீஇ-விச்விச்விச்விச் என முதலில் மிக மெல்லிய குரலில் தொடங்கிப் பின் உரக்கக் கத்தும்.

புழு பூச்சிகளோடு முள்முருங்கை முதலான மலர்களில் தேனையும் உண்ணும்.

இனப்பெருக்கம்: காலம்: ஏப்ரல் முதல் ஜூலை வரை. கூடு: மலைசார்ந்த பகுதிகளில் 100 முதல் 300 மீ. உயரத்திலேயே இது இனப்பெருக்கம் செய்கிறது. தையல் சிட்டினைப் போல ஓரிரு பெரிய இலைகளை ஒட்டித் தைத்து உள்ளே புல், நார் முதலியவற்றால் மெத்தென ஆக்கி முட்டையிடும். தனியாகப் புல் முதலானவற்றை சிலந்தி நூலால் கோப்பை போல் சேர்த்து அமைத்து அதனைச் சுற்றிலும் இலைகளைக் கொண்டு மறைப்பது உண்டு. தரையிலிருந்து ஒரு மீட்டர் உயரத்திற்குள்ளாகவே கூடுகளைக் காணலாம். முட்டை: 3 அல்லது 4; வெண்மை, நீலம், இளஞ்சிவப்புத் தோய்ந்த வெண்மை, பசுமை தோய்ந்த வெண்மை ஆகிய பல நிறங்களால் காணப்படும். எல்லா நிற முட்டைகளிலும் செம்பழுப்புக் கறைகளைக் காணலாம்.

370. நீலகிரி நீண்டவால் கதிர்க்குருவி
1513. Nilgiri Longtailed or Wren-Warbler
Prinia subflava franklinii Blyth)

தோற்றம்: சிட்டுக் குருவியை விடச் சிறியது சுமார் 13 செ. மீ. நீளம் இருக்கும்.

அலகு கோடையில் கருப்பாகவும் குளிர்காலத்தில் கொம்புப் பழுப்பு நிறமாகவும் இருக்கும்; விழிப்படலம் பழுப்புத் தோய்ந்த மஞ்சள் நிறம்; கால்கள் பழுப்புத் தோய்ந்த ஊன் நிறம்.

உடலின் மேற்பகுதி மங்கிய கருஞ்சிவப்புத் தோய்ந்த பழுப்பு நிறமாக இருக்கும்; உடலின் அடிப்பகுதி வெண்மையாக இருக்கும்; நீண்ட வால் சரியாக இணைக்கப்படாதது போல எத்தகைய ஆழ்ந்த கறைகளுமின்றி இருக்கும். கோடையில் உடலின் மேற்பகுதி மண் பழுப்பு நிறமாக மாறும். கீழ்ப்பகுதியில் வெண்மை சற்று மஞ்சள் தோய்ந்திருக்கும். வால் சற்றுக் குறுகி கூரிய முனையின்றி மழுங்கிய முனையோடு புறஇறகுகளில் வெண்மை தோய்ந்து காணப்படும்.

காணப்படும் இடங்கள்: நீலகிரி, பழநி மலைகளைச் சார்ந்த பகுதிகளிலும் தெற்கு மைசூர் மலைகளிலும் சமவெளி முதல் மலைகளில் 1700 மீ. உயரம் வரை இலையுதிர் காடுகளையும் புல்வெளியான பகுதிகளையும் சார்ந்து நீர்வளம் சற்றுக் குறைவான பகுதிகளில் காணப்படும்.

பழக்க வழக்கங்கள்: நீண்டவால் காட்டுக் கதிர்க் குருவியினையும் சாம்பல் நிற நீண்ட வால் கதிர்க்குருவியினையும் ஒத்த பழக்க வழக்கங்கள் கொண்டது.

இனப்பெருக்கம்: காலம்: டிசம்பர் முதல் ஏப்ரல் முடிய; கூடு: மெல்லிய புல் நாரால் வால் பேரிக்காய் உருவில் நீண்ட பைபோல நுழை வாயிலோடு கூடு பின்னிப் புல்லில் அல்லது நெற்பயிர்களிடையே தரையிலிருந்து 1 மீ. உயரத்திற்குள்ளாகத் தொங்க விடும். முட்டை: 3 முதல் 5 வரை; பளபளக்கும் பசுமை தோய்ந்த நீல நிறங்கொண்டு செம்பழுப்புச் சிறுகோடுகளுடனும் கறைகளுடனும் காட்சி தரும்.

371. தெற்கத்திய நீண்டவால் கதிர்க்குருவி
1510. South Indian Longtailed or Wren-Warbler
Prinia subflava inornata (Gmelin)

தோற்றத்தில் பெரிதும் முன்னதை ஒத்துச் சற்று மங்கிய நிறத்துடன் காணப்படுவது. தென்னிந்தியாவில் சமவெளிப் பகுதிகளிலும் கிழக்குத் தொடர்ச்சி மலை சார்ந்த பகுதிகளிலும் காணப்படுவது இதுவே. குளிர் காலத்தில் கருஞ்சிவப்புத் தோய்ந்து ஆலிவ் பழுப்பாகக் காணப்படும் உடலின் மேற்பகுதி கோடையில் மண் நிறப் பழுப்பாகத் தெளிவின்றி இருக்கும்.

பழக்க வழக்கங்கள், இனப்பெருக்க முறை முதலியன எல்லாம் முன்னதைப் போன்றனவே.

372. சாம்பல்நிற நீண்டவால் கதிர்க்குருவி
1517. Ashy Longtailed or Wren-Warbler
Prinia socialis socialis (Sykes)

தோற்றம்: சிட்டுக் குருவியை விடச் சிறியதான இது சுமார் 13 செ. மீ. நீளம் இருக்கும்.

அலகு கருப்பு; விழிப்படலம் கண் விளிம்பும் நல்ல ஆரஞ்சு பழுப்பு நிறம்; கால்கள் பழுப்புத் தோய்ந்த மஞ்சள் நிறம்.

உடலின் மேற்பகுதி சாம்பல் சிலேட் நிறமாகவும் கீழ்ப்பகுதி செம்மஞ்சள் தோய்ந்த வெண்மையாகவும் இருக்கும். வால் நீண்டு முனையில் வெள்ளையும் கருப்புமான புள்ளிகளுடன் காணப்படும் பெரும்பாலும் வாலை வளைத்து உடலின் மேல் தூக்கியபடியோ நிமிர்த்தி விறைப்பாக நிற்க வைத்தபடியோ இருக்கக் காணலாம். வாலை ஓயாது ஆட்டியபடி இருக்கும். கழுத்தும், தொண்டையும், மார்பும் சற்று ஆழ்ந்த செம்மஞ்சள் தோய்ந்த வெண்மையாகவும் வயிறு கிட்டத்தட்ட தூய வெண்மையாகவும் இருக்கும்.

காணப்படும் இடங்கள்: தென்னிந்தியா முழுவதும் புல்லும் நாணலும் மிகுந்த சற்று நீர்வளமிக்க பகுதிகளில் காணலாம். மலைகளில் 1500 மீ. உயரம் வரை காணலாம். 500 மீ. முதல் 1000 மீ. வரையுள்ள புல் நிலமான மலைச்சரிவுகளில் தாராளமாக எங்கும் காணலாம்.

பழக்க வழக்கங்கள்: புல் தண்டுகளிலும் சிறு செடிகளிலும் இணையாக வாலை நிமிர்த்தியும் தாழ்த்தியும் ஆட்டியபடி தாவித் திரிந்தபடி இருக்கக் காணலாம். ட்டீஇ, ட்டீஇ, ட்டீஇ எனக் குரல் கொடுத்தபடியே பூச்சி புழுக்களைத் தேடியபடி இருக்கும். இனப்பெருக்கக் காலத்தில் ஆண் புல் நுனியில் அமர்ந்து நெடு நேரம் பாடியபடி இருக்கக் கேட்கலாம். மனிதர்களின் நடமாட்டத்தை அறியவரும் இது பரபரப்படைந்து கீழ் அலகையும் மேல் அலகையும் சேர்த்துத் தொடர்ந்து மெல்லத்தட்டி கிட், கிட், கிட் என்ற சப்தத்தை உண்டாக்கும்.

புழு பூச்சிகளோடு மலர்களில் தேனையும் உண்ணும்.

இனப்பெருக்கம்: காலம்: மே முதல் ஆகஸ்ட் முடிய; கூடு: தையல் கதிர்க் குருவியைப்போல இலைகளைத் தைத்து புல் முதலிய வற்றால் மெத்தென ஆக்கி முட்டையிடும். வேறொரு வகைக் கூட்டினை மெல்லிய புல் நாரால் நுழைவாயிலோடு கூடிய பணப்பை (Purse) உருவில் கட்டுவதும் உண்டு. முட்டை: 3 அல்லது 4; பளபளக்கும் செங்கல் சிவப்பாக இருக்கும். பெரிய முனையில் ஆழ்ந்த நிறமுடைய வளையம் காணலாம்.

373. நீண்டவால் காட்டுக் கதிர்க்குருவி

1521. Southern Jungle Longtailed or Wren-Warbler

Prinia sylvatica sylvatica (*Jerdon*)

தோற்றம்: சிட்டுக்குருவியை விட சற்றுச் சிறியதரான இது சுமார் 15 செ. மீ. நீளம் இருக்கும்.

அலகு கரும்பழுப்பு நிறம்; விழிப்படலம் பழுப்புத் தோய்ந்த மஞ்கள் நிறம். கால்கள் பழுப்பான ஊன் நிறம்.



நீண்டவால் காட்டுக் கதிர்க்குருவி

மற்ற கதிர்க்குருவிகளை விட இது அளவில் சற்றுப் பெரியது. உடலின் மேற்பகுதி சற்றே கருஞ்சிவப்புத் தோய்ந்து மண் பழுப்பு நிறமாக இருக்கும். தலை சாம்பல் தோய்ந்த பழுப்பு நிறமாக இருக்கும். உடலின் கீழ்ப்பகுதி சற்று செம்மஞ்சள் கலந்த வெண்மையாக இருக்கும். வால் நீண்டு தனியாக இணைத்தது போல் முனைப்பகுதி சிறுத்துக் காணப்படும். கோடைகாலத்தில் வாலின் புற இறகுகளில் வெள்ளைப் புள்ளிகள் காணலாம். பெண் ஆணை விடச் சற்றுச் சிறியது

காணப்படும் இடங்கள் : தென்னிந்தியா முழுதும் புதர்க்காடுகளும் முள்காடுகளுமான இலையுதிர்காட்டுப் பகுதிகளில் மலைப் பக்கங்களைச் சார்ந்து காணலாம்.

பழக்க வழக்கங்கள் : தனித்தோ; இணையாகவோ காணப்படும் இதன் பழக்க வழக்கங்கள் பெரும்பாலும் முன்னைய சாம்பல் தலை நீண்டவால் கதிர்க்குருவியின் பழக்க வழக்கங்களை ஒத்தனவே. புதர்காடுகளில் இடையிடையே காணப்படும் பாறைகள் மீதும் புதர்கள் மீதும் அமர்ந்து ஓயாது ஒரே சீராக பீஇட்டி-பீஇட்டி-பீஇட்டி எனக் கத்தியபடி இருக்கும். ஆண் இனப்பெருக்கக் காலத்தில் வேகமாக இறக்கை அடித்து செங்குத்தாக உயரச் சென்று பின் தலை கீழாகத் தரை நோக்கிப் பாய்ந்து வந்து புதர் மேல் அமரும். பிறகு மீண்டும் செங்குத்தாக உயரப் பறந்து சென்று விழும். பரபரப்படைந்தபோது பிட், பிட், பிட், பிட் எனக் கத்தும்.

பூச்சிகளே முக்கிய உணவு.

இனப்பெருக்கம்: காலம். ஏப்ரல் முதல் செப்டம்பர் வரை; கூடு: புல்லால் வட்டவடிவமாகச்சிலந்தி நூல்கொண்டு உருண்டையான கூட்டினை முட்புதர்களிடையே அமைக்கும். முட்டை: 4 அல்லது 5; பசுமை தோய்ந்த சாம்பல் நிறமாக செம்பழுப்புப் புள்ளிகளோடு காட்சி தரும்.

374. தையல் சிட்டுக் கதிர்க்குருவி
1535. Tailor Bird
Orthotomus sutorius guzutrata (Latham)

தோற்றம்: சிட்டுக்குருவியை விடச் சிறியதான இது சுமார் 13 செ. மீ. நீளம் இருக்கும்.

அலகு மெலிந்து நீண்டு நேராகக் காணப்படும். மேல் அலகு கொம்பு நிறமான பழுப்பு; கீழ்அலகு இளஞ்சிவப்பான ஊன் நிறம்; விழிப்படலம் ஆரஞ்சுச் சிவப்பு நிறம்; கால்கள் பழுப்புத் தோய்ந்த ஊன் நிறம் கொண்டு சற்று நீண்டிருக்கும்.

தலை உச்சி துருச் செந்நிறமாக இருக்கும்; உடலின் மேற் பகுதி மஞ்சள் தோய்ந்த ஆலிவ் பழுப்பாக இருக்கும். வாலின் நடு இறகு இனப்பெருக்கக் காலத்தில் நீண்டு காணப்படும். அதனை எப்பொழுதும் விறைத்துத் தூக்கிக்கொண்டிருக்கக் காணலாம். பெண் ஆணினைப் போன்ற தோற்றமுடையதாய் நீண்ட நடு வால் அளவில் சற்றுக் குறுகிக் காணப்படும்.

காணப்படும் இடங்கள்: தென்னிந்தியா முழுவதும் புதர் காடுகள், இரண்டாந்தரக் காடுகள் ஆகியவற்றைச் சார்ந்தும் மா, பலா முதலான மரங்கள் வளர்ந்துள்ள வீட்டுத் தோட்டங்களைச் சார்ந்தும் காணலாம். மலைகளில் 2000 மீ. உயரம் வரைக் காண லாம். மலைப்பகுதிகளில் அபூர்வமாகவே காணப்படும்.

பழக்க வழக்கங்கள்; மக்கள் வாழ்விடங்களைச் சார்ந்து அச்ச மின்றித் திரியும் பறவை இது. தோட்டங்கள், வேலிகள், சிறு புதர்க்காடுகள் ஆகியவற்றைச் சார்ந்து காலை முதல் மாலை வரை ட்டுவிட், ட்டுவிட், ட்டுவிட் என்று ஒலிக்கும் குரலிலோ பிரட்டி-பிரட்டி-பிரட்டி என்பதுபோல ஒலிக்கும் குரலிலோ கத்திக்கொண்டு திரியும். வீட்டு முற்றத்தில் தொட்டிகளில் வளர்க்கும் செடிகளில் கூட இரவில் நம்பிக்கையோடு வந்து தங்கும் சுபாவம் கொண்டவை என திரு. எச். ஆர். பேக்கர் குறித்துள்ளார். இந்தக் குடும் பத்தைச் சேர்ந்த பறவைகளுள் எங்கும் காணப்படுவது இதுவே.

இனப்பெருக்கம் : காலம் : ஏப்ரல் முதல் ஜூன் வரை; கூடு : பெரிய இலையாக இருக்குமாயின் ஒரே இலையின் இரு விளிம்புகளை யும் கோப்பை போல வளைத்துத் தைத்து அதனுள் நார், பஞ்சு, சருகு முதலியவற்றை வைத்துக் கோப்பை போல அமைத்து முட்டையிடும். இலையைப் பருத்தி நூலாலோ சிலந்தி நூலாலோ பிணைக்கும். சிறிய இலையாயின் இரண்டு இலைகளைப் பைபோல் சேர்த்துத் தைத்துப் பின் பஞ்சு, சருகு, மயிர் முதலியவற்றை உள்ளே நிரப்பும். ஆடாதோடை குரோட்டன்ஸ், கல்வாழை போன்ற செடிகளில் தரையிலிருந்து ஒரு மீட்டருக்குள்ளாக இதன் கூடுகளைக் காணலாம். முட்டை : 4; பசு நீலம், வெண்மை, இளஞ் சிவப்பு ஆகிய பல நிறங்களில் இருக்கும். பெரும்பாலும் செம்பழுப் புக் கறைகள் கொண்டனவாக முட்டைகள் விளங்கும். ஆணும் பெண்ணும் கூடு கட்டுவதிலும் குஞ்சுகளைப் பேணுவதிலும் பங் கேற்கும். பெண்ணே பெரும்பாலும் அடைகாக்கும்.

375. புல் கதிர்க்குருவி (அல்லது) கிழக்கத்திய தத்துக்கிளி பிடிக்கும் கதிர்க்குருவி

1545. Eastern Grasshopper Warbler

Locustella naevia straminea (*Seebohm*)

தோற்றம் : சிட்டுக்குருவி அளவுள்ள இது சுமார் 14 செ மீ. நீளம் உள்ளதாகச் சற்று மெலிந்த தோற்றம் கொண்டு விளங்கும்.

மேல் அலகு கரும்பழுப்பு; கீழ் அலகு மஞ்சள் தோய்ந்த வெண்மை; விழிப்படலம் வெளிர் பழுப்பு; கால்கள் ஊன் நிறமான வெண்மை;

உடலின் மேற்பகுதி ஆலிவ் பழுப்பாக இருக்கும். ஒவ்வொரு தூவியிலும் ஒரு கரும்புள்ளி இருக்கக் காணலாம்; மோவாய், தொண்டை, நடு வயிற்றிடம் ஆகியன வெண்மை; எஞ்சிய உட லின் கீழ்ப்பகுதிகள் மங்கிய மஞ்சள் நிறம்; அலகு முகடும் சிறு புரு வமும் வெண்மை; வாலடிப் போர்வை இறகுகள் நடுவில் கருப்பு நிறங்கொண்டிருக்கும்; வளராத பறவைகளின் உடலின் கீழ்ப்பகுதி நல்ல மஞ்சளாக இருக்கும். ஆணும் பெண்ணும் ஒன்றுபோல.

காணப்படும் இடங்கள் : குளிர்காலத்தில் தென்னிந்தியா முழு தும் காணலாம். சிறப்பாகப் புல் வளர்ந்த மலைப்பக்கங்களில் 1000 மீ. உயரத்திற்குமேல் மலைச்சோலைகளை அடுத்து காணலாம்.

பழக்க வழக்கங்கள் : புல்லிடையே தனித்து மறைந்து திரியும் இது காலை மாலை நேரங்கள் சற்று வெளிப்பட்டுப் புல்லின் மேல்

அமர்ந்திருக்கக் காணலாம். மிதிப்பது போல அருகே நெருங்கும் வரை வெளிப்படாமல் பதுங்கியே இருக்கும் குணம் கொண்டது. அப்படி மனிதர்கள் மிக அருகில் நெருங்கியவுடன் சற்று தூரம் பறந்து மீண்டும் புல் புதரிடையே மறைந்து விடும். இடையிடையே ட்ஸ்க், ட்ஸ்க் எனக் குரல் கொடுக்கும்.

பூச்சிகளே இதன் முக்கிய உணவு.

இனப்பெருக்கம்: மத்திய மேற்கு ஆசியப் பகுதிகளில்.

376. அகன்றவால் புல் கதிர்க்குருவி

1546. Broadtailed Grass-Warbler

Schoenicola platyura (*Jerdon*)

தோற்றம்: சிட்டுக்குருவியை விடப் பெரியதான இது சுமார் 17 செ. மீ. நீளமிருக்கும்.



அகன்றவால் புல் கதிர்க் குருவி

மேல் அலகு கொம்பு நிறமான பழுப்பு; கீழ் அலகு ஊன் நிறம்; விழிப்படலம் பழுப்புத் தோய்ந்த சாம்பல் நிறம்; கால்கள் கருஞ் சாம்பல் பழுப்பு நிறம்.

உடலின் மேற்பகுதி கருஞ்சிவப்புத் தோய்ந்த பழுப்பாக இருக்கும். மோவாய், தொண்டை, மார்பு, வயிறு ஆகியன வெண்மை; வால் அகன்று ஆழ்ந்த பழுப்பு நிறம் கொண்டதாகக் குறுக்குப் பட்டைகளோடு காட்சி தரும்; முனை சற்று நிறம் மங்கிய தாக இருக்கும். ஆணும் பெண்ணும் ஒன்று போல இருக்கும்.

காணப்படும் இடங்கள்: மேற்குத் தொடர்ச்சி மலை சார்ந்த பகுதிகளில் நீலகிரி பழநி உட்பட 1000 மீட்டர் முதல் 1500 மீட்டர் வரை உள்ள பகுதிகளில் உயர்ந்த புல் வளர்ந்த மலைப் பக்கங் களில் நாணற் புதர் மிகுந்த சதுப்பான மலைப் பகுதிகளில் காண லாம்.

பழக்க வழக்கங்கள்: தனித்தும் சிறு கூட்டமாகவும் எப் பொழுதும் மறைந்தே திரியும் குணம் கொண்டது இது. காலை மாலைகளில் புல்லின் உச்சியில் அமர்ந்து பிங், பிங், பிங் எனச் சிறு குரலில் கத்தக் கேட்கலாம். மற்றபடி இதன் பழக்க வழக்கங்கள் முன்னதன் பழக்க வழக்கங்களை ஒத்தனவே.

பூச்சிகளே இதன் முக்கிய உணவு.

இனப்பெருக்கம்: தென்னிந்திய எல்லையில் இவை சிறப்பாக இனப்பெருக்கம் செய்கின்றன என்பதற்கு ஒரு மித்த சான்றுகள் இல்லை. பெல்காமுக்கு வடக்கேயே கூடுகளும் முட்டைகளும் காணப்பட்ட குறிப்புகள் உண்டு.

377. பருத்த அலகு கதிர்க்குருவி

1549. Thickbilled Warbler

Phragamaticola aedon aedon (Pallas)

தோற்றம்: கொண்டைக் குருவி அளவுள்ள இது சுமார் 20 செ. மீ. நீளமிருக்கும்.

மேல் அலகு கரும் பழுப்பு நிறம்; கீழ் அலகு மஞ்சள் தோய்ந்த ஊன் நிறம்; விழிப் படலம் ஆலிவ் பழுப்பு நிறம்; கால்கள் ஈய நிறம்.

உடலின் மேற்பகுதி ஆலிவ் பழுப்பாக இருக்கும். கீழ்ப்பகுதி வெளிர் செம்மஞ்சள் தோய்ந்த வெண்மை நிறமாக இருக்கும். மார்பும் பக்கங்களும் சற்று வெளிர் மஞ்சள் தோய்ந்திருக்கும். கண் ணில் புருவமில்லாத ஒரே அடையாளந்தான் இதனை அடுத்த நாணல் கதிர் குருவியிலிருந்து வேறுபடுத்த உதவுவது. ஆணும் பெண்ணும் ஒன்று போல.

காணப்படும் இடங்கள்: குளிர்காலத்தில் தென் சைபீரியா வடக்குச் சீனா ஆகிய பகுதிகளிலிருந்து வலசை வரும் இது கேரளா, மைசூர் ஆகிய பகுதிகளில் சிறப்பாகவும் ஆந்திரா தமிழ் நாடு ஆகிய பகுதிகளில் அபூர்வமாகவும் சமவெளி முதல் மலைகளில்

1000 மீ. உயரம் வரை புல்லும் பூடும் முளைத்துள்ள மலைப்பக்கங்களில் சற்று நீர்வளமிக்க பகுதிகளை அடுத்துக் காணப்படுகிறது.

பழக்க வழக்கங்கள்: ஈரமிக்க புதரான பகுதிகளில் தனித்து மறைந்து திரியும் இதனை ஒரு புதரிலிருந்து இன்னொரு புதருக்குப் பறந்து செல்லும்போதே காணலாம். புதர்களிடையே இரைதேடும் போது டிஸ்சூக், டிஸ்சூக், டிஸ்சூக் என உரத்த கர கரப்பான குரலில் கத்தும். குரலை வைத்தே இது புதர்களில் மறைந்திருப்பதைக் கண்டு கொள்ளலாம்.

பூச்சிகளே இதன் முக்கிய உணவு.

இனப்பெருக்கம்: இந்தியாவிற்கு வடக்கே.

378. பெரிய நாணல் கதிர்க்குருவி
1550. Indian Great Reed Warbler
Acrocephalus stentoreus brunnescens (*Jerdon*)

தோற்றம்: தோற்றத்தில் பெரிதும் முன்னதை ஒத்த இதனைக் கண்ணின் மேற் காணப்படும் குறுகிய வெள்புருவம் கொண்டு வேறுபடுத்தி அறியலாம். பிட்டம் அதனைக் காட்டிலும் சற்றுக் கருஞ்சிவப்பாக இருக்கும்.

காணப்படும் இடங்கள்: தென்னிந்தியா முழுவதும் நீர்வளம் மிகுந்த நாணல் புதரும் சதுப்புமான பகுதிகளில் காணலாம். மாலைகளில் 1000 மீட்டர் உயரப் வரை. கோடையில் மிக அபூர்வமாகவும் குளிர்காலத்தில் ஆங்காங்கே மிகுதியாகவும் காணலாம்.

பழக்க வழக்கங்கள்: தனித்து நாணல் புதர்களிடையே மறைந்து ஒழிந்து திரிகின்ற இதனைக் காண்பது அரிது. அபூர்வமாக நாணலின் உச்சியில் அமர்ந்து மிகப் புதுமையான குரலில் ஆர்வத்துடன் பாடும் சமயங்களில் காண நேரிடலாம். அப்போது தொண்டை புடைப்பதையும் திறந்த வாயின் ஆரஞ்சு சிவப்பு நிறத்தையும் தெளிவாகக் காணலாம்.

இனப்பெருக்கம்: காலம்: ஜூலை முதல் செப்டம்பர் வரை கேரளத்தில் வேம்பநாட்டு ஏரியில் இனப்பெருக்கம் செய்வது அண்மையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. (P. V. George, 1961, Journal of Bomay Natural History Society vol. 58. page 797) இதற்கு முன் தென்னிந்தியாவில் இனப்பெருக்கத்திற்கான குறிப்பு இல்லை. கூடு: புல், நாணல் இலை முதலியவற்றால் கோப்பை வடிவில் அமைத்த கூட்டினை நீரில் நிற்கும் நாணல்களின் இடையே

தண்ணீருக்கு அரை மீட்டர் உயரம் மேலே தொங்க விடும். முட்டை: 3 முதல் 6 வரை; பசுமையாகவோ, மஞ்சள் நிறமாகவோ, சாம்பல் தோய்ந்த வெண்மையாகவோ செம்பழுப்புக் கறையுடன் காட்சி தரும்.

379. பிளைத் நாணல் கதிர்க்குருவி
1556 Blyth's Reed Warbler
Aerocephalus dumetorum (Blyth)

சிட்டுக்குருவியை விட அளவில் சிறிய இது தோற்றத்தில் முன்னைய பெரிய நாணல் கதிர்க் குருவியைப் பெரிதும் ஒத்தது. குளிர்காலத்தில் ரஷியா, மேற்கு சைபீரியா போன்ற தொலை தூரப் பகுதிகளிலிருந்து வலசை வரும் இதனைத் தென்னிந்தியா முழுவதும் சமவெளிகளில் புதர்காடுகளிலும், தோப்புக்களிலும், வேலிகளிலும் காணலாம். மலைகளில் நீர்வளமிக்க சதுப்பான புதர்க்காடுகளில் 2000 மீட்டர் உயரம் வரை காணலாம். முன்னதைப் போலவே புதர்களில் மறைந்து திரிந்து எப்போதாவது அபூர்வமாக வெளியே தலை நீட்டுவது. பூச்சிகளே முக்கிய உணவு; டிஸ்சூக், டிஸ்சூக் என்ற உரத்த குரல் புதர்களிலிருந்து கேட்பதைக் கொண்டு இதன் இருப்பை அறியலாம். பூச்சிகளே முக்கிய உணவு. இனப்பெருக்கம் இந்தியாவிற்கு வெளியே.

380. நெல்லுக் கதிர்க்குருவி
1557. Paddy Field Warbler
Acrocephalus agricola agricola (Jerdon)

தோற்றம்: சிட்டுக் குருவியை விடச் சிறியதான இது சுமார் 14 செ. மீ. நீளம் இருக்கும். அலகு வெளிர் ஊன் நிறமாக இருக்கும். விழிப்படலம் வைக்கோல் நிறம்; கால்கள் சாம்பல் தோய்ந்த பழுப்பு நிறம்.

உடலின் மேற்பகுதி துரு நிறம் தோய்ந்த ஆலிவ் பழுப்பாக இருக்கும். உடலின் கீழ்ப்பகுதி முழுதும் வெண்மை. அலகடியிலிருந்து காது வரை வெண்புருவக் கோடு செல்லக் காணலாம். பறக்கும்போது பிட்டம் நல்ல கருஞ்சிவப்பாகத் தெரியும். ஆணும் பெண்ணும் ஒன்றுபோல.

காணப்படும் இடங்கள்: குளிர்காலத்தில் தென்னிந்தியா முழுவதும் மருதவளம் சார்ந்த நெல்வயல்களைச் சார்ந்து காணலாம்.

பழக்க வழக்கங்கள் : நீரில் நிற்கும் நெற்பயிர், புல் ஆகிய வற்றினிடையே தனித்து மறைந்து திரியக் காணலாம். மனிதரை எதிர்ப்பட்டால் சற்றுத் தூரம் பறந்து மீண்டும் புல்லினிடையே புகுந்து மறையும். தண்ணீரை அடுத்துத் தண்டுக்குத் தண்டு தாவியும் பக்கவாட்டில் தொங்கியும் பூச்சிகளைப் பிடிக்கவும் இது நீர்ப்பரப்பில் காணப்படும் பூச்சிகளைக் கூடப் பிடிக்கிறது. ச்சார், ச்சார் என கடுத்த குரலில் கத்தியபடியே இரைதேடும்.

இனப்பெருக்கம் : தென்னிந்தியாவிற்கு வெளியே.

381. மரக் கதிர்க்குருவி
1563. Sykes's Tree Warbier
Hippolais caligata rama (*Sykes*)

தோற்றம் : சிட்டுக்குருவியை விடச் சிறியதான இது சுமார் 14 செ. மீ. நீளம் இருக்கும்.

மேல் அலகு கொம்பு நிறமான பழுப்பு, கீழ் அலகு இளஞ் சிவப்பான ஊன் நிறம்; விழிப்படலம் ஆலிவ் பழுப்பு நிறம்; கால்கள் பழுப்புத் தோய்ந்த ஊன் நிறம்.

எலியின் நிறத்தை ஒத்த சற்று ஆலிவ் நிறம் தோய்ந்த கருஞ் சாம்பற் பழுப்பு நிற மேல் தோற்றம் கொண்டது சிறு வெண் புருவம் கண்ணின் மேல் காணலாம். உடலின் கீழ்ப்பகுதி மங்கிய மஞ்சள் தோய்ந்த வெண் நிறமாக இருக்கும்.

காணப்படும் இடங்கள் : தென்னிந்தியா முழுவதும் சம வெளிகளில் இலையுதிர் காடு சேர்ந்த கருவேல மரக்காடுகளில் காணலாம். (H. C. Caligata (Agres) என்ற உள்ளினமும் தென்னிந்தியாவில் கேரளா தவிர எஞ்சிய பகுதிகளில் காணப்படுகிறது. தோற்றத்திலும் பழக்க வழக்கத்திலும் இதனை ஒத்த அதனை இயற்கையில் பார்த்துப் பிரித்து வேறுபாடு அறிதல் கடினம். H. C. caligata. H. C. rama இரண்டுமே Blyth's reed warbler, Paddyfield warbler ஆகியவற்றோடு தோற்றத்தில் ஒத்து இருப்பதால் இயற்கையில் பிரித்தறிவது முடியாததாகும்)

பழக்க வழக்கங்கள் : மரக்கிளைகளினூடு பறந்து மரக்கிளைகளிலிருந்து சிறு பூச்சி புழுக்களைப் பிடித்துத் தின்னும். மரங்களுக்கு வெளியே பறக்கும் பூச்சிகளையும் அவ்வப்போது பாய்ந்து பிடித்தல் உண்டு. இங்கு வலசை வரும்போது பாடுவதில்லை.

இனப்பெருக்கம் : வட இந்தியாவில் சிந்து, பஞ்சாப் பகுதிகளில் இது இனப்பெருக்கம் செய்கிறது.

382. வெண்தொண்டைக் கதிர்க்குருவி
1570. Lesser Whitethroat
Sylvia curruca affinis (Blyth)

தோற்றம்: சிட்டுக் குருவியை விடச் சிறிய இது சுமார் 14 செ. மீ. நீளம் இருக்கும்.

அலகு ஆழ்ந்த கொம்பு நிறம்; விழிப்படலம் பழுப்பான வெண்மை. கால்கள் நீலந் தோய்ந்த ஈய நிறம்.

உடலின் மேற்பகுதி மண் பழுப்பாக இருக்கும். தலை சற்றுக் கருஞ்சாம்பல் நிறம் தோய்ந்த பழுப்பாக இருக்கும்; வால் பழுப்பு; வாலின் புற இறகுகள் வெண்மை; நடு இறகு வெண் முனையோடு இருக்கும். இறக்கைகள் நல்ல பழுப்பு நிறம். கண்ணின் முன்னிடம் கண் காது ஆகிய பகுதிகளை நல்ல பழுப்பான பகுதி இணைக்கும். தொண்டை தூய வெண்மை; மார்பும் வயிறும் வெண்மையாகப் பக்கங்களில் சாம்பல் நிறம் தோய்ந்து காணப்படும். ஆணும் பெண்ணும் ஒன்றுபோல.

காணப்படும் இடங்கள்: தென்னிந்தியா முழுதும் (கேரளம் நீங்கலாக) சமவெளிப் பகுதிகளில் காணலாம்.

பழக்க வழக்கங்கள்: மறைந்து தனித்து முள்ளான புதர்காடுகளில் திரியும் இது இலைகளிடையே புகுந்து புழுபூச்சிகளைத் தேடிப் பிடிக்கும். மற்ற கதிர்க் குருவிகளோடு சேர்ந்தும் இரை தேடக் காணலாம். கம்பளிப்புழு, பூச்சிகள் ஆகியவற்றோடு மலர்த் தேனையும் விரும்பி உண்ணும்.

டெக்...டெக்...டெக் என சில விநாடிகளுக்கொருமுறை குரல் கொடுக்கும்.

இனப்பெருக்கம்: தென்னிந்திய எல்லைக்கு வெளியே.

383. கருந்நிலைக் கதிர்க்குருவி
1565. Orpean Warbler
Sylvia hortensis crassirostris (Cretz)

தோற்றம்: சிட்டுக் குருவியை விடப் பெரிய இதன் நீளம் சுமார் 17 செ. மீ.

அலகு கரும்பழுப்பு; விழிப்படலம் பழுப்பான வெண்மை; கால்கள் சிலேட் கருஞ் சாம்பல் நிறம்.

தலை நல்ல கருப்பாக இருக்கும். உடலின் மேற்பகுதி சிலேட் கருஞ்சாம்பல் நிறமாக இருக்கும். வால் கருப்பு; ஓர இறகுகள் வெண்மை; கன்னங்களும் உடலின் கீழ்ப்பகுதியும் லேசான வெளிர் மஞ்சள் நிறந் தோய்ந்த வெண்மையாக இருக்கும். வாலடிப் போர்வை இறகுகள் சிலேட் சாம்பல் நிறமாக இருக்கும்.

பெண்ணின் தலைக் கருப்புச் சற்று மங்கிக் காணப்படும். மற்றபடி பெண் ஆணை ஒத்திருக்கும்.

காணப்படும் இடங்கள்; கேரளம், தென் தமிழ்நாடு நீங்கலாகத் தென்னிந்தியா முழுவதும் குளிர்காலத்தில் வலசை வரக் காணலாம்.

பழக்க வழக்கங்கள்: தனித்துக் கருவேலங்காடுகளிலும், வறண்ட விளை நிலங்களை அடுத்த முட்காடுகளிலும் இலை தழைகளிடையே திரிந்து கம்பளிப்புழு, பூச்சிகள் ஆகியவற்றைப் பிடிக்கும். இரைதேடத் தரையில் இறங்குவதும் உண்டு. மலர்த் தேனையும் உணவாகக் கொள்ளும். பிற பழக்க வழக்கங்களில் முன்னதைப் பெரிதும் ஒத்தது.

இனப்பெருக்கம்: தென்னிந்திய எல்லைக்கு வெளியே; இமய மலை சார்ந்த பகுதிகளில்.

384. டிக்கல் புதர்க் கதிர்க்குருவி
1579. Tickell's Leaf Warbler
Phylloscopus affinis (Tickell)

தோற்றம்: சிட்டுக் குருவியை விட மிகச் சிறியதான இது சுமார் 10 செ. மீ. நீளம் இருக்கும்.

அலகு கொம்புப் பழுப்பு நிறம்; விழிப்படலம் பழுப்பு; கால்கள் மஞ்சள் தோய்ந்த பழுப்பு நிறம்.

உடலின் மேற்பகுதி தெளிவற்ற ஆலிவ் பழுப்பு நிறம். கீழ்ப்பகுதி நல்ல மஞ்சள். தெளிவான புருவமும் கழுத்தின் பக்கங்கள் ஆலிவ் பழுப்புத் தோய்ந்திருப்பது கொண்டும் இதனை அடையாளம் காணலாம். ஆணும் பெண்ணும் ஒன்று போல.

காணப்படும் இடங்கள்: குளிர்காலத்தில் தென்னிந்தியா முழுவதும் மலைசார்ந்த பகுதிகளில் புதர்க்காடுகளிலும் சிறு மரங்களை உடைய காடுகளிலும் ஆங்காங்கே அபூர்வமாகக் காணலாம்.

பழக்க வழக்கங்கள்; மற்ற கதிர்க் குருவிகளைப் போல் தனித்துத் திரியாமல் சுமார் 20 வரையான சிறு கூட்டமாகத் திரியக் காணலாம். தரையிலும் தாழ்வான புதர்களிலும் கிளைகளிலும் தாவிப் பறந்து சுறுசுறுப்பாக இரை தேடக் காணலாம் இடையிடையே இறக்கைகளை வேகமாக அதிரும்படி அசைத்துச் சிட்டுக் குருவியினைப் போல ட்டிஸ்ப், ட்டிஸ்ப் என மிக மெல்லிய குரலில் கத்தும்.

பூச்சிகளே முக்கிய உணவு.

இனப்பெருக்கம்: இமயமலைப் பகுதியில்.

டைட்லர் புதர்க் கதிர்க் குருவி (TYTLER'S LEAF WARBLER) ஹியூம் புதர்க் கதிர்க்குருவி (HUME'S LEAF WARBLER பூட்டட் மரக் கதிர்க்குருவி (BOOTED TREE WARBLER போன்ற சிறு கதிர்க் குருவிகள் குளிர்காலத்தில் வலசை வருகின்றன. அளவில் சிறிய, தோற்றத்தில் ஒத்த அவற்றை இயற்கையில் வேறுபடுத்தி அறிவது கடினம்.

385. பெரிய அலகுக் கதிர்குருவி

1601. Largebilled Warbler

Phylloscopus magnirostris (*Blyth*)

தோற்றம்: சிட்டுக் குருவியை விடச் சிறிய இது சுமார் 14 செ. மீ. நீளம் இருக்கும்.

உடலின் மேற்பகுதி ஆலிவ் பழுப்பாக இருக்கும். பிட்டம் ஆழ்ந்த நிறங் கொண்டது. உடலின் கீழ்ப்பகுதி மங்கிய மஞ்சள் நிறங்கொண்டது. வயிறு நல்ல மஞ்சளாக இருக்கும். கண்ணுக்கு மேல் மஞ்சள் தோய்ந்த வெண்புருவம் காணலாம்.

நல்ல பச்சைப் புதர்க்குருவி (BRIGHT GREEN LEAF WARBLER) P. nitidus, பச்சைப் புதர்க்குருவி (GREENISH LEAF WARBLER) P. trochiloides viridanus ஆகிய இரண்டும் தோற்றத்தில் இதனை ஒத்து இயற்கையில் வேறுபடுத்தி அறிய முடியாத இந்த இனத்தைச் சார்ந்த கதிர்க்குருவிகளே குளிர்காலத்தில் வலசை வரும். இவற்றையும் தென்னிந்தியாவில் ஆங்காங்கே காணலாம். இங்கு இனப்பெருக்கம் செய்வதில்லை.

காணப்படும் இடங்கள்: குளிர்காலத்தில் மலைகள் சார்ந்த சோலைகளிலும் பசுமை மாறாக்காடுகளிலும் மேற்கு மலைத்தொடர்ச்சி சார்ந்த பகுதிகளில் ஆங்காங்கே காணலாம்,

பழக்க வழக்கங்கள் : தனித்து மரங்களில் இலைகளூடே பூச்சி களைப் பிடிக்கும் இது மற்ற வேட்டையாடும் பறவைப் பட்டாளங் களுடனும் சேர்ந்து வேட்டையாடுவதும் உண்டு. மற்றப் பழக்க வழக்கங்கள் கதிர்க்குருவிகளுக்குரியன போன்றே.

பூச்சிகளே இதன் முக்கிய உணவு.

வீஇ-ச்சிஇ? வீஇ-ச்சிஇ? எனக் கேள்வி கேட்பது போலக் கத்தும். இதன் குரல் ஒலிகொண்டு இதனைப் பச்சைப் புதர்க் குருவி களிலிருந்து வேறுபடுத்தி அறியலாம்.

இனப்பெருக்கம்: திபேத், காஷ்மீர் போன்ற இமயமலைப் பகுதிகள் சார்ந்த இடங்களில் இனப்பெருக்கம் செய்வது.

386. பட்டைத்தலைப் புதர்க் கதிர்க்குருவி

1606: Large Crowned Lcaf Warbler

Phylloscopus occipitalis occipitalis (*Blyth*)

தோற்றம்: சிட்டுக்குருவியை விடச் சிறிய இது சுமார் 15 செ. மீ. நீளம் இருக்கும்.

அலகு பழுப்பு; முனையும் கீழ் அலகும் ஆரஞ்சு மஞ்சளாக இருக்கும்; விழிப்படலம் பழுப்பு; கால்கள் சாம்பல் தோய்ந்த பழுப்பு நிறம்.

உடலின் மேற்பகுதி மஞ்சள் தோய்ந்த ஆலிவ் பச்சை நிறம், உடலின் கீழ்ப்பகுதி வெளிர்மஞ்சள் தோய்ந்த பழுப்பாக இருக்கும். உச்சந்தலையில் மூன்று சிறு பட்டைக் கோடுகள் செல்லக் காண லாம். நடுக்கோடு மஞ்சள் தோய்ந்த சாம்பலாகவும் ஓரக் கோடுகள் சற்று அகன்று ஆலிவ் நிறமாகவும் இருக்கும். இறக்கைகளில் இரண்டு வெள்ளை நிறப் பட்டைகள் சற்று மஞ்சள் தோய்ந்திருக்கக் காணலாம்.

காணப்படும் இடங்கள்: தென்னிந்தியா முழுவதும் பசுமை மாறாக் காடுகளில் மலைப் பகுதிகளைச் சார்ந்து சிறப்பாக 900 முதல் 1200 மீட்டர் வரையுள்ள பகுதிகளில் காணலாம்.

பழக்க வழக்கங்கள் : சுமார் 20லிருந்து 30 வரையான கூட்ட மாக அடர்ந்த காடுகளில் உயர்ந்த மரங்களின் இலைகளூடே திரியக் காணலாம். அடிக்கடி இறக்கையை விரித்து இலைக் கொத்துக் களுள் புகுந்து பூச்சிகளைப் பிடிக்கக் காணலாம். வெள்ளைக் கண்ணி, பட்டாணிக்குருவி, கருஞ்சாம்பல் தலை ஈப்பிடிப்பான் ஆகியவற்றோடு சேர்ந்து பூச்சிகளை வேட்டையாடித் திரிவதும் உண்டு.

பூச்சிகளே இதன் முக்கிய உணவு.

ச்சிப், ச்சிப் என்றோ ட்டிஸ்ப், ட்டிஸ்ப் என்று கத்துவதோடு ஓரிரு விநாடி நேரமே நீட்டிக்கும் பாடல் ஒன்றினைப் பாடுவதும் உண்டு.

இனப்பெருக்கம் : மேற்கு இமயமலை, நேபாளம் ஆப்கானிஸ்தானம் போன்ற இமயமலை சார்ந்த பகுதிகளில் இனப்பெருக்கம் செய்கிறது.

Sub-Family : Turdinae

மலைச்சிட்டான்களும், கல்லுக்குருவிகளும்
(THRUSHES AND CHATS)

387. செவ்வயிற்றுக் குட்டை இறக்கையன்
1637 Rufousbellied Short wing
Brachypteryx major major (Jerdon)

தோற்றம் : சிட்டுக் குருவிக்கும் கொண்டைக் குருவிக்கும் இடைப்பட்ட தோற்றம் உடைய இது சுமார் 16 செ. மீ. நீளம் உடையது.

அலகு கருப்பு ; விழிப்படலம் மஞ்சள் தோய்ந்த பழுப்பு ; கால்கள் வெளிர்த்த சிவப்புத் தோய்ந்த சாம்பல் நிறம்.

உடலின் மேற்பகுதி முழுவதும் தொண்டையும் கழுத்தும் மார்பும் சிலேட் நீல நிறம். மார்பு சாம்பல் நிறம் தோய்ந்தது போல இருக்கும், பிட்டம் வெண்மை, வால் கருப்பு பழுப்போடு நீலமாக இருக்கும். இறக்கைகள் கரும் பழுப்பாக நீல விளிம்போடு காட்சி தரும். கீழ் மார்பும வாலடியும் வெண்மை. பக்கங்கள், வயிறு, வாலடிப போர்வை இறகுகள் கருஞ்சிவப்பாக இருக்கும். பெண் அளவில் சற்றுச் சிறியதாகச் சற்று மங்கிய நிறத்தோடு காட்சி தரும்.

காணப்படும் இடங்கள் : நீலகிரி மைசூர் மலைகளில் 1000 மீட்டர் உயரத்திற்கு மேல் உச்சி வரை காணலாம். மாறுப் பசுங்காடுகளைச் சார்ந்து காணப்படுவது.

பழக்க வழக்கங்கள் : தனித்து, அடர்ந்த காடுகளில் அடியில் உள்ள புதர்களில் மறைந்து திரியும் பழக்கமுடையது. மாலை நேரம் நெருங்கும்போது மறைவிடத்தை விட்டு வெளிப்பட்டு காட்டுப்

பாதையின் ஓரத்திலோ காட்டாறுகளின் கரையிலோ தாவிப் பறந்து திரியக் காணலாம். மனிதர்களின் நடமாட்டத்தைக் கவனித்தவுடன் மரங்களில் பறந்து உயர அமரும் இது உடனே மீண்டும் தனக்குரிய புதர்களில் இறங்கிவிடும். பெரும்பாலும் இனப் பெருக்கம் செய்யாத பருவங்களில் இது அதிகம் கத்துவதில்லை. இனபபெருக்கக் காலத்தில் ஆண் கிளைக்குக் கிளை தாவியபடி நெடு நேரம் தொடர்ந்து பலவகை இன் குரலில் பாடும். இதன் பாட்டொலி நீலகிரி மலைச் சிட்டானின் பாட்டொலியை ஒத்திருக்கும்.

பூச்சிகளே இதன் முக்கிய உணவு.

இனப்பெருக்கம்: காலம்: மார்ச் முதல் ஜூன் முடிய; கூடு: அடர்ந்த காடுகளில் மரத்தில் பொந்தில் பாசி, பாசி வேர், நார் முதலியவற்றால் கோப்பை போன்ற கூட்டினை அமைக்கும். சிறு செடிகளின் கிளைப்பிரிவிலும் மண் கரைகளின் மேலும் மற்றவர் களுக்குத் தெளிவாகத் தெரியும்படியான இடத்தில் கூடு அமைப் பதும் உண்டு. முட்டை: 2; மங்கிய ஆலிவ் பழுப்பு நிறமாக இருக்கும் முட்டையின் மீது நெருக்கமான செம்பழுப்புச் சிறு புள்ளி களைக் காணலாம்.

388. வெள்ளை வயிற்றுக் குட்டை இறக்கையன்

1633 Whitebellied Shortwing

Brachypteryx major albiventris (Blanford)

தோற்றத்திலும் அளவிலும் பெரிதும் முன்னைய குட்டை இறக்கையினை ஒத்ததே இது. முன்னையதில் உடலின் கீழ்ப் பகுதியில் காணப்படும் கருஞ் சிவப்பு நிறமான பகுதிகள் இதற்கு வெண்மையாக இருக்கும். இதனால் இது தனி உள்ளினமாக வகுக்கப் பட்டுள்ளது. தோற்றத்தில் இது வெள்ளை வயிற்று ஈப் பிடிப்பானை ஒத்து இருப்பதால் இரண்டும் ஒன்றாகத் திரியும் இடங்களில் குழப்பம் ஏற் படலாம்.



வெள்ளை வயிற்றுக் குட்டை இறக்கையன்

பழநி மலைகளிலும், நீலகிரிக்குத் தெற்கே மேற்குத் தொடர்ச்சி மலை சார்ந்த பகுதிகளிலும் மழை மிகுந்த அடர்ந்த சோலைகளிலும் காணலாம்.

பழக்க வழக்கங்களும் இனப்பெருக்க முறையும் முன்னதனைப் போன்றனவே.

389. செவ்வாலி

1671. Redstart

Phoenicurus ochruros (S. G. Gmelin)

தோற்றம் : சிட்டுக்குருவி அளவுள்ள இது சுமார் 14 செ. மீ. நீளமிருக்கும்.

அலகும் கால்களும் கருப்பு நிறம் ; விழிப்படலம் ஆழ்ந்த பழுப்பாக இருக்கும்.

உச்சந் தலை சிலேட் நிறம் ; கண்ணின் முன்னிடம் மோவாய், கன்னங்கள், தொண்டை, மார்பு. முதுகு ஆகிய கருப்பாக இருக்கும் ; இறக்கைகள் கருப்பு முனையோடு கருஞ்சிவப்பாக இருக்கும்· பிட்டம் வால் மேற் போர்வை இறகுகள், வயிறு, ஆகியன நல்ல கருஞ்சிவப்பாக இருக்கும். வாலின் நடு இறகுகள் இரண்டு பழுப்பாகவும் எஞ்சியவை கருஞ்சிவப்பாகவும் இருக்கும்.

பெண்ணின் பொதுத் தோற்றம் பழுப்பாகச்சற்றுக் கருஞ்சிவப்புத் தோய்ந்து காணப்படும் மார்பு, பிட்டம், வால், வாலடிப் போர்வை இறகுகள் அதிகக் கருஞ்சிவப்பாக இருக்கும்.

காணப்படும் இடங்கள் : குளிர்காலத்தில் தென்னிந்தியா முழுவதும் சமவெளிகளில் தோட்டங்கள், தோப்புக்கள், வேலிகள் வறண்ட புல் புதர்கள் நிறைந்த கல்லான மலைப் பக்கங்கள் ஆகிய வற்றைச் சார்ந்து காணலாம். மலைகளில் 1000 மீ. உயரம் வரை காணலாம்.

பழக்க வழக்கங்கள் : தனித்தும் தூரப் பிரிந்து திரியும் இணையாகவும் காணலாம். மக்களைக் கண்டு அஞ்சாது பழகும் சுபாவம் உடையவை. செப்டம்பரில் வலசை வரும் இவை ஏப்ரல் முடிய இங்கு தங்கி இருக்கக் காணலாம். இடம் விட்டு இடம் மாறி அமரும் இவை வீட்டுக் கூரை, புதர் உச்சி தாழ்வான மரக்கிளை ஆகியவற்றின்மீது அமர்ந்திருந்து தரையில் தாவி இறங்கிப் புழு பூச்சிகளைப் பிடிக்கக் காணலாம். அப்படி இரைதேடும்போது வாலை வேகமாக நடுக்கி அசைத்தபடி இருக்கும். சிலபோது தாவிப் பறந்து, பறந்து செல்லும் பூச்சிகளைப் பிடிப்பதும் உண்டு.

பூச்சிகளே இதன் முக்கிய உணவு.

மெல்லிய குரலில் வீட், வீட், வீட் எனக் கத்தும்.

இனப்பெருக்கம்: மே முதல் ஆகஸ்ட் மாதங்கள் வரையான பருவத்தில் இமயமலைப் பகுதிகளில் 3000 மீ. உயரத்தில் இனப் பெருக்கம் செய்கிறது.

390. சிவந்த கறை நீலகண்டன்
1644. Redspotted Bluethroat
Erithacus sevecicus (Linnaeus)

தோற்றம்: சிட்டுக் குருவி அளவுள்ள இது சுமார் 15 செ. மீ. நீளம் இருக்கும்.

அலகும் விழிப்படலமும் ஆழ்ந்த பழுப்பு; கால்கள் மங்கிய ஊன் நிறமாக இருக்கும்.

உடலின் மேற்பகுதி லேசான ஆலிவ் நிறம் தோய்ந்த பழுப்பு நிறமாக இருக்கும். கண்ணுக்குமேல் தெளிவான வெள்ளைப் புருவம் செல்லக் காணலாம். சிறு வெள்ளை மீசைக் கோடும் காணப் படும். மார்பில் பழுப்புப் புள்ளிகளோடு கூடிய வெள்ளை வளையம் காணலாம். (வலசை வந்த இந்தப் பறவைகள் திரும்பும் பருவ மாகிய மார்ச் மாத வாக்கில் ஆணின் தொண்டை நல்ல நீலமாக மாறுவதோடு வெள்ளை வளையத்தைச் சார்ந்த நீல வளையம் ஒன்று காணலாம்) பிட்டம் ஆரஞ்சு தோய்ந்த செம்பழுப்பாக இருக்கும். வால் கருப்பு முனைகள் கொண்டதாக இருக்கும். வாலை கருங் குருவியைப்போல சற்று நிமிர்த்தியபடி இருக்கும். பறக்கும்போது பிட்டத்தின் ஆரஞ்சுச் செம்பழுப்புத் தெளிவாகத் தெரியும்.

காணப்படும் இடங்கள்: குளிர்காலத்தில் வலசை வரும் இவற்றைத் தென்னிந்தியா வெங்கும் ஆங்காங்கே அபூர்வமாகக் காணலாம். திருச்சிராப்பள்ளி, தட்டக்காடு ஆகிய இடங்களில் காணப்பட்ட குறிப்புண்டு.

பழக்க வழக்கங்கள்: தனித்து வாலைச் சற்று நிமிர்த்தி இறக் கைகளைத் தொங்கவிட்டபடி நாணற் புதர்கள். சதுப்பான புதர்ப் பகுதிகள், கரும்புத் தோட்டங்கள் ஆகியவற்றில் திரியக்காணலாம். சப்தமின்றிப் புதர்களிடையே தாவிப் பறக்கும் இது சற்றைக்கொரு தரம் ஏதேனும் பூச்சியைப் பிடிக்க ஓரிடத்தில் நிலைகொள்ளக் காணலாம்.

கம்பளிப் பூச்சிகள், வண்டுகள். சிறு பூச்சிகள் ஆகியன இதன் உணவு.

இனப்பெருக்கம்: தென்னிந்திய எல்லைக்கு அப்பால்.

391. நீலக் கல்லுக்குருவி

6611. Indian Blue Chat

Erithacus brunneus brunneus (Hodgson)

தோற்றம்: சிட்டுக் குருவியை விடச் சற்றுப் பெரிய இது சுமார் 16 செ. மீ. நீளம் இருக்கும்.

அலகு கரும் பழுப்பு; விழிப்படலம் ஆழ்ந்த பழுப்பு; கால்கள் பழுப்புத் தோய்ந்த ஊன் நிறம்.

ஆண்; இதன் கண் முன்னிடம், கன்னங்கள், கழுத்தின் பக்கங்கள் ஆகியன கருப்பு நிறம். நெற்றியிலிருந்து கண்ணின் மேல் நீண்ட வெள்ளைப் புருவம் செல்லக் காணலாம். உடலின் மேற்பகுதி ஆழ்ந்த நீல நிறமாகவும் அடிப்பகுதி செம்பழுப்பாகவும் காணப்படும். வாலடிப் பகுதி சற்று மங்கிய வெண்மை தோய்ந்த நிறமாக இருக்கும்.

பெண்: உடலின் மேற்பகுதி ஆலிவ் பழுப்பாக இருக்கும். கீழ்ம்பகுதி செம்மஞ்சள் தோய்ந்த வெண்மையாக இருக்கும்.

காணப்படும் இடங்கள்: குளிர்காலத்தில் மேற்குத் தொடர்ச்சி மலை சார்ந்த பகுதிகளிலும், நீலகிரி, பழநி மலை சார்ந்த பகுதிகளிலும் 500 மீ. முதல் 1500 மீ. வரையான உயரத்தில் பசுங்காடுகள், காபி தோட்டங்கள், சதுப்பான தாழம்புதர் மிக்க இடங்கள், பிரப்பம் புதர்கள் ஆகியவற்றைச் சார்ந்து திரியக் காணலாம். கிழக்குத் தொடர்ச்சி மலையில் விசாகப்பட்டினம் சார்ந்த வடபகுதியில் காணப்பட்ட குறிப்பு உள்ளது.

பழக்க வழக்கங்கள்: தரையில் தனித்துப் புதர்களிடையே தாவித் தாவி ஓடி புழுபூச்சிகளைப் பிடிக்கும். சிறு குரலில் விநாடிக்கொரு முறை மெல்லச் கத்தும். அப்படிக் கத்தும்போது வாலைத் தூக்கி அசைக்கக் காணலாம்.

பூச்சிகளே இதன் உணவு.

இனப்பெருக்கம்: இமயமலை சார்ந்த பகுதிகளில்.

382. இந்தியக் கருப்பு வெள்ளைக் குருவி

1650. Indian Magpie Robin

Coprychus saularis saularis (Linnaeus)

தோற்றம்: கொண்டைக் குருவி அளவுள்ள இது சுமார் 22 செ. மீ. நீளம் இருக்கும்.

அலகும் கால்களும் கருப்பு; விழிப்படலம் ஆழ்ந்த பழுப்பு நிறம்.

உடலின் மேற்பகுதி முழுதும் பளபளக்கும் கருப்பு நிறம். தோள்பட்டையும் இறக்கைப் போர்வை இறகுகளும் வெண்மை. வாலில் நடுவில் இரு ஜோடி இறகுகள் கருப்பாகவும் எஞ்சிய ஓர இறகுகள் வெண்மையாகவும் இருக்கும். கழுத்து தொண்டை, மார்பு ஆகியன பளபளக்கும் கருப்பு நிறம். வயிறும் வாலடியும் வெண்மை.

பெண் உடலின் மேற்பகுதியும் கழுத்தும் தொண்டையும் பளபளக்கும் கருப்புக்குப்பதிலாக மங்கிய சாம்பல் தோய்ந்த கருப்பு நிறமாக இருக்கும் மற்றபடி ஆணும பெண்ணும் ஒன்றுபோல.

காணப்படும் இடங்கள்: தென்னிந்தியா முழுவதும் சமவெளி களிலும் மலைகளில் 1500 மீ. வரையிலும் ஆங்காங்கே இரண்டாந் தரக் காடுகளிலும் இலையுதிர் காடுகளிலும், விளை நிலங்களிலும், தோப்புக்களிலும், மக்கள் வாழ்விடங்களை அடுத்த பூங்காக்களி லும் காணலாம்.

பழக்க வழக்கங்கள் : அழகிய தோற்றம் கொண்ட இது இனி மையாகவும் பாடக் கூடியது. தனித்தும் இணையாகவும் திரியும் இது மனிதர்களைக் கண்டு அஞ்சி ஓடும் சுபாவம் கொண்டதன்று. ஆகையால் இதன் அழகைக் காணவும் இனிய பாடலைக் கேட்கவும் யாருக்கும் எத்தகைய தடையும் இல்லை. மரங்களில் ஓய்வாகத் திரியும் இது அடிக்கடித் தரையில் இறங்கி இரை தேடும். மீண்டும் மரங்களில் சென்று அமர்ந்து கொள்ளும். அப்படித் தரையில் இரைதேடித் தாவித் திரியும்போது வாலைக் கருங்குருவியின் வாலைப் போல அடிக்கடி நிமிர்த்திக் கொள்ளக் காணலாம். இறக்கைகளை யும் வாலையும் விரித்துப் பயங்காட்டியபடி சற்றுப் பெரிய பூச்சியி னைக் காலால் நசுக்கிப் பிடிக்கக் காணலாம். ஈப்பிடிப்பான்களைப் போலத் தாவிப் பாய்ந்து பறக்கும் பூச்சிகளைப் பிடிப்பதும் உண்டு. மலர் மரங்கள் மலரும் போது அவற்றில் தேன் குடிக்கும் பழக்கமும் உண்டு.

ஆண் இனப்பெருக்கக் காலத்தில் அதிகாலையிலும் பிற்பக லிலும் தொடர்ந்து குறிப்பிட்ட மரக்கிளைகளில் அமர்ந்து தனது ஆட்சி யுரிமை எல்லையை அறிவிக்க நெடுநேரம் பாடும். மற்றப் பருவங்கள் ஸ்வீஇஇ, ஸ்வீஇஇ எனச் சிறு குரல் மட்டும் கொடுக்கக் கேட்கலாம்.

இதனைப் பிடித்துக் கூண்டில் வளர்ப்பதோடு கூடச் சண்டை யிடவும் சிலர் பழக்குகின்றனர்.

இனப்பெருக்கம்: காலம்: பிப்ரவரி முதல் மே முடிய; கூடு: புல், வேர், நார், மயில் முதலிய கொண்டு மரப்பொந்துகளிலோ சுவர்களில் உள்ள பொந்துகளிலோ அடித்தளம் அமைத்து மெத்தென ஆக்கி முட்டையிடும் முட்டை: 3 அல்லது 4; வெளிர் பசுமையாகவோ நீலங்கலந்த பசுமையாகவோ காட்சி தரும். வெளிர் சிவப்புப் புள்ளிகள் வெளிர் முனையில் மிகுதியாகவும் மற்றப் பகுதிகளில் ஓரளவும் அழகு செய்யக் காணலாம்.

முட்டையிடும் பெட்டிகளை இது வந்து போகும் தோட்டங்களில் வைத்தால் விரும்பி அவற்றில் கூடு கட்டி முட்டையிடும்.

393. தெற்கத்திய கருப்பு வெள்ளைக் குருவி

2162 Southern Magpie Robin

Capsychus saularis ceylonensis (Sclater)

தோற்றத்தில் அளவிலும் பழக்க வழக்கங்களிலும் இனப்பெருக்க முறையிலும் முன்னதை ஒத்த இது நீலகிரி முதல் தெற்கே கன்னியாகுமரி வரை மேற்குத் தொடர்ச்சி மலைப்பகுதி சார்ந்து காணப்படுகிறது. இந்த உள்ளினத்தில் பெண்ணின் முதுகும் மார்பும் சாம்பல் தோய்ந்த கருப்பாக இல்லாமல் கிட்டத்தட்ட ஆணின் கருப்பு நிறத்தை ஒத்த அடர்த்த கருப்பு நிறமாக இருப்பதால் தனி உள்ளினமாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

394· இசைபாடும் சாமா

1665. Shama

Copsychus malabaricus malabaricus (Scopoli)

தோற்றம்: கொண்டைக்குருவி அளவுள்ள இதன் நீண்ட வால் மட்டும் சுமார் 15 செ. மீ. நீளம் இருக்கும்.

அலகு கொம்பு நிறமான பழுப்பு; விழிப்படலம் பழுப்பு; கால்களும் விரல்களும் இளஞ் சிவப்பான ஊன் நிறம்.



இசைபாடும் சாமா

உடலின் மேற்பகுதி பளபளக்கும் கருப்பு; பிட்டம் வெண்மை, மார்பு கருப்பு; வயிறும் வாலடியும் நல்ல செம்பழுப்பு நிறம். முனை நோக்கிக் குறுகிச் செல்லும் நீண்ட வாலின் ஓர இறகுகளின் விளிம்பு வெண்மை

யாக இருக்கும். ஓர இறகுகளின் முனையும் வெண்மையாக இருக்கும்.

பெண்ணின் உடல் கருப்புக்குப் பதிலாக சிலேட் பழுப்பாக இருக்கும். வயிறும் வாலடியும் நிறம் மங்கிக் காணப்படும். வால் நீளம் குறைந்து சுமார் 10 செ. மீ. அளவே இருக்கும்.

காணப்படும் இடங்கள் : மேற்குத் தொடர்ச்சி மலை சார்ந்த பகுதிகளிலும் நீலகிரி பழநி மலைகளிலும் அவை சார்ந்த காடுகளிலும் சமவெளி முதல் மலைகளில் 750 மீ. உயரம் வரை காணலாம். ஈரமிகுந்த இலையுதிர்காடுகளிலும் மூங்கிற் புதர்கள் நிறைந்த பகுதிகளிலும் விரும்பித் திரியும்.

பழக்க வழக்கங்கள் : தனித்துக் காடுகளின் நடுவே திரியும் இது மூங்கில் வளர்ந்துள்ள பகுதிகளில் விரும்பித் திரியக் காணலாம். கருப்பு வெள்ளைக் குருவியின் பழக்க வழக்கங்களையே பெரிதும் இதனுடைய பழக்க வழக்கங்கள் ஒத்தவை. ஆனல் அதனைப் போல மனிதர்களைக் கண்டால் இது அஞ்சாது நெருங்கி வந்து பழகாது. எனினும் புதர்களில் மறைந்திருக்கும் இதன் உடைய குரலைக் கேட்கலாம். இதனைக் காண எளிய வழி இது சீழ்க்கைக் குரலில் கத்தும் போது அதனை ஒத்த போலிக் குரலில் நாம் சீழ்க்கை அடித்தால் போதும். தனக்குப் போட்டியாகத் தன் ஆட்சி எல்லையில் வேருெரு பறவை நுழைந்து விட்டதாகக் கருதி அதனை விரட்டக் கருதி மெல்ல மெல்ல நம்மை நெருங்கி வரும். மாங்குயில், டிக்கல் ஈப்பிடிப்பான், வெண்தொண்டைப் பூங்குருவி ஆகியவற்றின் குரலொலியை ஒத்த இனிய குரலில் காலை, மாலை நேரங்களில் தொடர்ந்து பாடியபடி இருக்கும்.

இனப்பெருக்கம் : காலம் : மார்ச் முதல் மே வரை; கூடு : மூங்கில் இலை, வேர், புல் ஆகியவற்ருல் கோப்பை வடிவில் மரப் பொந்துகளிலோ, மூங்கிற் புதர்களிடேயே உதிர்ந்து நிறைந்திருக்கும் இலைதழைகளிடையேயோ கூடு அமைக்கும். முட்டை : 1 அல்லது 5; வெளிர் நீலந் தோய்ந்த பசுமையாக செம்பழுப்புக் கறைகளோடும் புள்ளிகளோடும் காட்சி தரும்.

395. இந்திய இசைபாடும் சாமா

1666. Indian Shama

Copsychus malabaricus indicus (*S. Baker*)

தோற்றத்தில் பெரிதும் முன்னதை ஒத்த இந்திய சாமா வடக்கு ஆந்திராவிலும் அதற்கு வடக்கிலும் காணப்படுவது.

இதில் ஆணின் வால் சாமாவின் வாலைப் போல நீண்டிராமல் சாமாவின் பெண்ணின் வால் அளவே இருக்குமாகையால் தனி உள்ளினமாகப் பிரிக்கப்பட்டுள்ளது. பழக்க வழக்கங்கள் இனப் பெருக்கம் ஆகியன முன்னதைப் போன்றனவே. C. M. leggai என்ற உள்ளினம் இலங்கையில் காணப்படுகிறது. இதில் ஆணின் வால் இந்திய சாமாவின் வாலளவே இருப்பதோடு கூட மார்பின் செம்பழுப்பு நிறம் ஆணுக்கும் பெண்ணுக்கும் மங்கியே காணப்படும்.

396. தென்னிந்திய மலைக் கல்லுக்குருவி

1700. South Indian Pied Bush Chat

Saxicola caprata caprata (Linnaeus)

தோற்றம்: சிட்டுக்குருவி அளவுள்ள இது சுமார் 15 செ மீ. நீளமிருக்கும்.

அலகும் கால்களும் கருப்பு; விழிப்படலம் ஆழ்ந்த பழுப்பு.

ஆணின் உடல் நல்ல கருப்பாக இருக்கும். பிட்டம், வயிறு, இறக்கைகள் ஆகியவற்றில் வெள்ளைப் பகுதிகள் காணலாம். இறக்கைகளில் காணப்படும் வெண்மை பறக்கும்போது தெளிவாகத் தெரியும்.

பெண் மண் பழுப்பான உடலுடன் லேசான துரு நிறப் பிட்டத்துடன் காணப்படும்.

காணப்படும் இடங்கள்: தென் இந்தியாவில் கிழக்குத் தொடர்ச்சி மலை சார்ந்த பகுதிகளிலும் அதனைச் சார்ந்த பீடபூமிப் பகுதிகளிலும் திறந்த புல் வெளியான மலைச் சரிவுகளிலும் பள்ளத் தாக்குகளிலும் காணலாம்.

பழக்கவழக்கங்கள்: இனப்பெருக்கம் ஆகியன அடுத்த நீலகிரிக் கல்லுக் குருவியைப் போன்றன.

397. நீலகிரி கல்லுக்குருவி

1702. Nilgiri Pied Bushchat

Saxicola caprata nilgiriensis (Whistler)

தோற்றத்திலும் அளவிலும் இது பெரிதும் முன்னதை ஒத்தது. அலகு முன்னதைவிடச் சற்று நீளமாக இருப்பதால் தனி உள்ளினமாகப் பகுக்கப்பட்டுள்ளது.

காணப்படும் இடங்கள்: மேற்குத் தொடர்ச்சி மலை சார்ந்த பகுதிகளிலும், பழநி மலைகளிலும் காணலாம். மலைகளில் 1500 மீ. உயரம் வரை காணலாம்.

பழக்க வழக்கங்கள்: தளித்துப் புதர்களின் உச்சியில் வாலை யாட்டியபடி அமர்ந்திருக்கக் காணலாம். தரையில் இறங்கிப் பூச்சிகளைப் பிடிப்பதோடு பறக்கும் பூச்சிகளைப் பாய்ந்து பறந்து பற்றுவதும் உண்டு. ச்சீக், ச்சீக் எனக் கத்தக் கேட்கலாம். இனப்பெருக்கக் காலத்தில் ஆண் சீழ்க்கைக் குரலில் பாடும். உயரப் பறந்து விழும்போதே அல்லது புதர்களின் மேல் அமர்ந்தோ இவ்வாறு பாடக் கேட்கலாம்.

இனப்பெருக்கம்: காலம்: பிப்ரவரி முதல் மே வரை. கூடு; புதர்களிலோ மண்கரைகளின் ஓரங்களில் வங்குகளிலோ புல்லால் மேடையிட்டு பயிர், கம்பளி நூல் ஆகியவற்றால் மெத்தென ஆக்கி முட்டையிடும். முட்டை: 3 முதல் 5 வரை; நீலந் தோய்ந்த வெண்ணிறமாக செம்பழுப்புக் கறைகளுடன் காட்சி தரும்.

398. தென் இந்தியக் கருங்குருவி

1720. South Indian Blackbacked Robin

Saxicoloides fulicata fulicata (*Linnaeus*)

தோற்றம்: சிட்டுக்குருவியை விடச் சற்று பெரிய இது சுமார் 16 செ. மீ. நீளம் இருக்கும்.

அலகும் கால்களும் பழுப்புத் தோய்ந்த கருப்பு; விழிப்படலம் பழுப்பு.

உடல் முழுதும் நல்ல கருப்பான தோற்றம் கொண்டது. எப்போதும் நிமிர்ந்து வளைந்து நிற்கும் வாலடி நல்ல செம்பழுப்பு நிறமாக இருக்கும். இறக்கைகளில் உள்ள சிறு வெள்ளைப் பகுதி பறக்கும்போது தெளிவாகத் தெரியும்.

பெண் சாம்பல் பழுப்பாக வெளிர்த்த செம்பழுப்பாக வாலடிப் பகுதி கொண்டதாக இருக்கும்.

காணப்படும் இடங்கள்: தென்னிந்தியா முழுதும் சிறு புதர்களோடு கூடிய வறள் காடுகளையும், கல்லும் கரடுமான முள் நிலங்களையும், லாண்டானா புதர்கள ஆகிய இடங்களைச் சார்ந்து காணலாம். மக்கள் வாழ்விடங்களை அடுத்தும் தாராளமாகத் திரியும்.

பழக்க வழக்கங்கள்: எங்கும் சாதாரணமாகக் காணப்படும். இது மக்கள் வாழ்விடங்களைச் சார்ந்த பகுதிகளிலும் தாராளமாக வந்து பழகும். தரையில் அங்கும் இங்கும் ஓடியாடி இரை தேடும் இது புதர்களின் மீதோ பாறை மீதோ அமர்ந்து அடிக்கடி வாலை ஆட்டக் காணலாம். இனப்பெருக்கக் காலத்தில் உயர்வான இடங்

களில் அமர்ந்து மெல்லி ழ்க்கைக் குரலில் சில நிமிட நேரம் தொடர்ந்து காலை நேரங்களில் பாடக் கேட்கலாம். மற்றபடி அங்கும் இங்கும் ஓடியாடித் திரியும்போது ச்சீ, ச்சீ எனக் குரல் கொடுக்கும்.

பூச்சிகள், அவற்றின் முட்டை, கரையான், எலும்பு முதலியன இதன் உணவு.

இனப்பெருக்கம்: காலம்: டிசம்பர் முதல் ஏப்ரல் வரை; கூடு: புல், வேர், ஆகியவற்றால் அகன்ற கோப்பை வடிவாக அமைந்த கூட்டினைத் தூவிகள், மயிர், பாம்புச் சட்டை ஆகிய வற்றால் மெத்தென ஆக்கும். இற்ற மரப் பொந்துகள், மண் கரை களில் காணப்படும் வங்குகள் ஆகியவற்றில் கூடுகளைக் காணலாம் புறக்கணிக்கப்பட்டு வீசி யெரியப்பட்ட பழைய மண் பாண்டங்கள், தகர டப்பாக்கள் ஆகியவற்றினுள்ளும் இது கூடு கட்டிக் கொள் ளும். முட்டை: 2 அல்லது 3; வெண்மையாகவோ, கிரீம் நிற மாகவோ செம்பழுப்புக் கறைகளோடும் புள்ளிகளோடும் காட்சி தரும். ஆணும் பெண்ணும் கூடு கட்டுவதிலும் குஞ்சுகளைப் பேணுவதிலும் பங்கு கொண்டாலும் பெண்ணே அடைகாக்கும்.

399. நீலத்தலைப் பூங்குருவி

1723. Blueheaded Rock Thrush

Monticola cinclorhynchus (Vigors)

தோற்றம்: கொண்டைக் குருவி அளவுள்ள இது சுமார் 15 செ. மீ. நீளமிருக்கும்.

அலகு கொம்பு நிறமான பழுப்பு; விழிப்படலம் ஆழ்ந்த பழுப்பு நிறம். கால்கள் சாம்பல் நிறம்.

ஆண்: தலை, மோவாய், தொண்டை ஆகியன நீல நிறம். எஞ்சிய உடலின் மேற்பகுதி நீலமும் கருப்புங் கலந்து காட்சிதரும். பிட்டம் செம்பழுப்பாக இருக்கும் உடலின் கீழ்ப் பகுதி முழுதும் நல்ல செம்பழுப்பு நிறமாக இருக்கும்.

பெண்: உடலின் மேற்பகுதி வெளிர் மஞ்சளாக ஆலிவ் நிறங் கலந்து காணப்படும். தலையின் பக்கங்கள் பழுப்பாகவும் இறக்கை கள் மங்கிய கருப்பு நிறக்கோடுகளோடும் காட்சி தரும். மோவாயும் தொண்டையும் செம்மஞ்சள் தோய்ந்த வெண்மையாக இருக்கும் மார்பும் வயிறும் வெண்மையாகச் செதில்கள் போன்ற பழுப்புநிறக் கறைகள் கொண்டிருக்கும்.

காணப்படும் இடங்கள் : குளிர்காலத்தில் தென்னிந்தியா முழுதும் சமவெளி முதல் மலைகளில் 1500 மீ உயரம் வரை இலையுதிர் காடுகள், மூங்கிற் காடுகள், இரண்டாந்தரப் பசுமை மாறாக் காடுகள் ஆகியவற்றைச் சார்ந்து காணலாம்.

பழக்க வழக்கங்கள் : தனித்துக் காடுகளிலும், காபித் தோட்டங்கள், மூங்கிற் புதர்கள் ஆகியவற்றினிடையே கிளைகளில் அமர்ந்திருக்கக் காணலாம். புழு, பூச்சிகள், தவளை, ஒணான் போன்றவற்றைக் கண்டால் பாய்ந்து பிறகு மீண்டும் இருக்கை இடத்திற்குத் திரும்பும். தரையில் இரைதேடும் பூங்குருவியைப் போலக் காய்ந்து உதிர்ந்த இலைகளிடையேயும் ஈரப் பற்றுக் குப்பை (mulch) இடையேயும் இரை தேடும். யாராவது குறுக்கிட்டால் விரைந்து கிளைகளுக்குப் பாய்ந்து பறக்கும். குளிர்காலத்தில் இங்கு பாடுவதில்லை.

இனப்பெருக்கம் : தென்னிந்திய எல்லைக்கு வடக்கே.

400. நீலப் பூங்குருவி

1726. Indian Blue Rock Thrush

Monticola solitarius pandoo (Sykes)

தோற்றம் : கொண்டைக் குருவியை விடச் சற்றுப் பெரியதான இது சுமார் 22 செ. மீ. நீளமிருக்கும்.

அலகும் கால்களும் கரும்பழுப்பு நிறம்; விழிப்படலம் பழுப்பு.

ஆண் : உடல் முழுதும் கரு நீலமாகத் தோற்றம் தருவது இது. தலை பிடரி, கழுத்து, மார்பு முதுகு ஆகியவற்றில் சற்றுப் பழுப்புத் தோய்ந்தும் மார்பிலும் வயிற்றிலும் சிறிது வெண்மை தோய்ந்தும் காட்சி தரும்.

பெண் : கருஞ்சாம்பல் தோய்ந்த பழுப்பு நிறமான மேல் உடலும் ஆழ்ந்த பழுப்புக் கோடுகளோடு கூடி வெண்மையான வயிறும் மார்பும் கொண்டு காட்சி தரும். இறக்கைகளில் லேசான பட்டை காணலாம். பறக்கும்போது இறக்கைப் பட்டை ஓரளவு புலனாகும்.

குறுகிய வாலும், சற்றுப் பருத்த உடலும், நீண்ட கால்களும் இதனைக் கண்டு கொள்ள உதவும்.

காணப்படும் இடங்கள் : தென்னிந்தியா முழுதும் குளிர்காலத்தில் வடக்கே இமயமலைப் பகுதிகளிலிருந்து வலசை வந்து திரியும்

இது கல்லும் சிறு பாறைகளும் கலந்து காணப்படும் புதர்க் காடுகளிலும் கல் உடைக்கும் பாறை நிலங்களிலும் திரியக் காணலாம்.

பழக்க வழக்கங்கள் : தனித்தே எப்பொழுதும் இதனைக் காணலாம். பெரிதும் பழக்க வழக்கங்களில் முன்னதை ஒத்தது எனினும் இது மரங்களற்ற கல்லும் பாறையுமான திறந்த வெளிப் புதர் காடுகளையே விரும்பித் திரியும். மனிதர்களைக் கண்டு அஞ்சி மறையும் பழக்கம் கொண்டதில்லை வீட்டுக் கூரைகள் மதில் சுவர்கள் ஆகியவற்றின் மீதும் தைரியமாக வந்து உட்காரும் வீட்டினுள்ளே கூட வந்து பழகுவதும் உண்டு.

எல்லா வகையான பூச்சிகள், புழுக்கள், கரையான், சிறிய ஓணான், தவளை முதலியனவற்றை உணவாகக் கொள்ளும்.

வலசை வரும் இது இங்கு கத்துவதில்லை. திரும்பத் தொடங்கும் மார்ச் ஏப்ரல் மாதங்களில் ஆண் சீழ்க்கைக் குரலில் இடையிடையே பாடக் கேட்கலாம்.

இனப்பெருககம் : இமயமலைப் பகுதிகளில் 1300 மீ. முதல் 4500 மீ. இடைப்பட்ட உயரத்தில் இனப்பெருக்கம் செய்கிறது.

401. மலபார் சீகாரப் பூங்குருவி
1728. Malabar Whistling Thrush
Myiophoneus horsfieldii horsefieldii (Vigors)

தோற்றம் : புறாவைவிடச் சற்று சிறியது இது சுமார் 30 செ.மீ. நீளமிருக்கும்.



மலபார் சீகாரப் பூங்குருவி

அலகும் கால்களும் கருப்பு; விழிப்படலம் ஆழ்ந்த பழுப்பு நிறம்.

பெரிய அளவிலான கரு நீல நிறங் கொண்ட இதனை எளிதாக மற்றப் பூங் குருவிகளிலிருந்து பிரித்து அறியலாம். நெற்றியும் தோள் பட்டையும் ஆழ்ந்த நீலமாக இருக்கும்.

காணப்படும் இடங்கள் : மேற்குக் கிழக்குத் தொடர்ச்சி மலை சார்ந்த பகுதிகளில் மலை அடிவாரம் முதல் 1500 மீ. உயரம் வரை. காலை அருவிகளையும் மாலைகளில் மக்கள் வாழ்விடங்களையும் சார்ந்து காணலாம்.

பழக்க வழக்கங்கள் : குத்துக்கல் மலைசார்ந்த பகுதிகளிலும் மலையருவி சார்ந்த பகுதிகளிலும் தனித்தோ இணையாகவோ காண லாம். மலையருவிகளிடையே காணப்படும் கற்களின்மீது தாவித் தாவி அமர்ந்து இரைதேடக் காணலாம். அடிக்கடி வாலை மேலும் கீழும் ஆட்டக் காணலாம். அப்போது விசிறிபோல் வால் கீழே அசையும்போது விரிந்து தரையைத் தொடும்.

நீர்வாழ் பூச்சிகள், நத்தை, நண்டு முதலியவற்றோடு பழங்களை யும் தின்னும். உரத்த இனிய சீழ்க்கைக் குரலில் காலை மாலை நேரங்களில் பாடக் கேட்கலாம். அதனால் சீழ்க்கை அடிக்கும் சோம்பேறிப்பள்ளிச் சிறுவன் என்ற சிறப்புப் பெயர் இதற்கு ஏற் பட்டுள்ளது.

இனப்பெருக்கம் : காலம் : மார்ச் முதல் ஜூலை முடிய ; கூடு : ஓடும் நீரருகே பாறைப் பிதுக்கிலோ மரங்களின் வேரிடையேயோ வேர், புல், பாசி ஆகியவற்றை மண்ணோடு கலந்து கட்டுப்போல அமைக்கும். முட்டை : 3 அல்லது 4; வெளிர் மஞ்சளாக செம்பழுப் புப் புள்ளிகளுடன் காட்சி தரும்.

402: கருப்பு வெள்ளைப் பூங்குருவி

1731. Pied Groundthrush

Zoothera wordii (*Blyth*)

தோற்றம் : மைனா அளவுள்ள இது சுமார் 20 செ. மீ. நீளம் இருக்கும்.

ஆண் : அலகு மஞ்சள் ; விழிப்படலம் பழுப்பு ; கால்கள் மஞ்சள் பழுப்புத் தோய்ந்த ஊன் நிறம்.

பெண் : அலகு கொம்பு நிறந் தோய்ந்த மஞ்சள்; விழிப்படலம் பழுப்பு ; கால்கள் மஞ்சள்.

தலை கருப்பு ; மார்பும் உடலின் மேற்பகுதியும் கருப்பாகவும் மார்பிற்குக் கீழே உள்ள வயிறும் வாலடியும் வெண்மையாகவும்

இருக்கும். வெண்புருவமும் முதுகில் வெண்மையாகப் பிறை வடிவில் காணப்படும் கோடுகளும் மேலும் அடையாளமாம். பெண்ணின் உடலின் மேற்பகுதி ஆலிவ் பழுப்பாகவும் ஆணின் வெண் பகுதிகள் இதற்கு வெளிர் பஞ்சளாகவும் இருக்கும். அடிப்பகுதி பட்டைகளோடு கூடிய ஆலிவ் நிறமாகக் காணப்படும்.

காணப்படும் இடங்கள்: குளிர்காலத்தில் இமயமலைப் பகுதிகளிலிருந்து இலங்கைக்கு வலசை செல்லும் வழியில் மேற்குக் கிழக்குத் தொடர்ச்சி மலை சார்ந்த பகுதிகளில் அபூர்வமாக ஒன்றிரண்டு தங்கக் காணலாம்.

பழக்க வழக்கங்கள்: அடுத்த வெண் தொண்டைப் பூங்குருவி போல,

இனப்பெருக்கம்: இமயமலைப் பகுதியில்.

403. வெண் தொண்டைப் பூங்குருவி

1734. Whitethroated Ground Thrush

Zoothera citrina cyanotus (Jardine & Silby)

தோற்றம்: சுமார் மைனா அளவுள்ள இது சுமார் 22 செ. மீ. நீளம் இருக்கும்.

அலகு கருப்பு; விழிப்படலம் ஆழ்ந்த பழுப்பு. கால்கள் பழுப்பான ஊன் நிறம்.



வெண்தொண்டைப் பூங்குருவி

இதன் தலை, கழுத்து, உடலின் கீழ்ப்பகுதிகள் ஆகியன மஞ்சள் தோய்ந்த பழுப்பாக இருக்கும்; உடலின் மேற்பகுதி சிலேட் நீலமாக இருக்கும்; இறக்கைகளில் உள்ள வெள்ளை வட்டம் பறக்கும் போது நன்றாகப் பளிச்சிடக் காணலாம். தொண்டையில் காணப்படும் வெண்மையும் தலையில் கண்ணுக்குக் கீழேயிருந்து கருப்பினிடையே காணப்படும் கீழ் நோக்கிச் செல்லும் அகன்ற வெண்கோடுகளும் இதனைத் தெளிவாக அடையாளம் காட்டும்.

பெண் பறவையின் உடலின் மேற்பகுதி சிலேட் நீலத்தோடு கூட ஆலிவ் பச்சை நிறமும் தோய்ந்து காணப்படும்.

காணப்படும் இடங்கள்: மேற்குத் தொடர்ச்சி மலை சார்ந்த பகுதிகளில் காபி தோட்டங்களையும் ஈரமிக்க இலையுதிர் காடுகளையும் சார்ந்து சமவெளிப் பள்ளத்தாக்குகள் முதல் மலைகளில் 1100 மீ. உயரம் வரை காணலாம். பருவ மழை பெய்யும் பருவத்தில் தென்னிந்தியா முழுதும் பறந்து திரிவதும் உண்டு.

பழக்க வழக்கங்கள்: புதர்களுக்கடியில் தரையில் தாவித் தாவிக் குதித்துக் காய்ந்த இலை சருகுகளைப் புரட்டி அவற்றிற்கு அடியே மறைந்திருக்கும் பூச்சிகளைப் பிடித்துத் தின்னும். ஈர மண்ணைச் சற்றுக் கிளறிப் பூச்சிகளைப் பிடிப்பதும் உண்டு. மக்கள் நடமாட்டம் நிகழ்வதை அறிந்தவுடன் தாழ்வான கிளை ஒன்றில் தாவிப் பறந்து அமர்ந்து கொள்ளும் இது குறுக்கிட்டவர்கள் சென்றவுடன் மீண்டும் தரையிலிறங்கிப் பூச்சிகளைத் தேடத் தொடங்கி விடும். காபித் தோட்டங்களில் ஈரத்தைக் காக்கவும் காபிச் செடிகளின் வேருக்குப் பாதுகாப்பளிக்கவும் பரப்பப்பட்டிருக்கும் வைக்கோல் போன்றவற்றின் இடையே இது சாதாரணமாகத் திரியக் காணலாம்.

பூச்சிகள், அவற்றின் முட்டைகள் ஆகியவற்றோடு கூடப் பழங்கள் கொட்டைகள் முதலியவற்றையும் இது தின்னும்.

இனப்பெருக்கக் காலத்தில் ஆண் காலையிலும் மாலையிலும் இனிய சீழ்க்கைக் குரலில் பாடும். மற்றபோது க்ரீ.இஇ-ஈஇ எனப் பூங்குருவிகளைப் போலக் கத்துவதன்றி வேறு குரல் கொடுப்பதில்லை.

இனப்பெருக்கம்: காலம்: மே முதல் ஆகஸ்ட் முடிய; கூடு இலை, வேர், பசுங்கச்சிகள் முதலியவற்றால் கோப்பை போல அமைத்து உட்பாகத்தை மெல்லிய வேராலும் சிறு புல்லால் மெத்தென ஆக்கி முட்டையிடும். கூட்டுக்கு அடியில் சிறிது சேற்றை அடித்தளமாக அமைப்பதும் உண்டு. காபிச் செடிப் புதர் போன்ற புதர்ச் செடிகளில் தரையிலிருந்து 1 மீட்டர் முதல் 4 மீ. உயரத்தில் கூடுகள் அமைந்திருக்கக் காணலாம். முட்டை: 3 அல்லது 2, வெளிர் நீலம் தோய்ந்த கிரீம் நிறங் கொண்டதாக இருக்கும். பெரும்பக்கத்தில் அடர்த்தியாகவும் மற்றப் பகுதிகளில் ஓரளவும் மங்கிய சிவப்புக் கறைகளையும் கீற்றுக்களையும் முட்டையின் மீது காணலாம். ஆணும் பெண்ணும் கூடு கட்டுவது, அடைகாப்பது, குஞ்சுகளைப் பேணுவது ஆகிய எல்லாப் பணிகளிலும் பங்கு ஏற்கும்.

404. ஆரஞ்சுநிறத்தலைப் பூங்குருவி
1735. Orangeheaded Ground Thrush
Zoothera citrina citrina (*Latham*)

தோற்றத்தில் தலையையும் தொண்டையையும் தவிரப் பெரிதும் முன்னைய வெண்தொண்டைப் பூங்குருவியை ஒத்த இது. தலையிலும் தொண்டையிலும் வெண்நிறம் இன்றித் தலை முழுதும் உடலின் கீழ்ப்பகுதியைப் போலவே ஆரஞ்சு நிறமாக இருக்கும். மற்றபடி அளவும் பழக்க வழக்கங்களும் இனப்பெருக்க முறையும் முன்னதைப் போன்றனவே. இமயமலைப் பகுதிகளில் இனப்பெருக்கம் செய்து வாழும் இது குளிர்காலத்தைக் கழிக்கத் தென்னிந்தியாவில் இறங்காமல் நேரே இலங்கைத் தீவுக்கு வலசை செல்கின்றது என திரு. சலீம் அலி குறித்துள்ளார். தமிழ்நாட்டுப் பறவை வரிசை நூல் ஆசிரியர் திரு. எம். ஏ. பாட்சா செங்கல்பட்டிலும் கோடைக்கானலிலும் கண்டதாகக் குறித்துள்ளார். திரு. ஏ. ஜி. கார்டியூ சென்னைக்கருகே ஒன்றினைக் கைப்பற்றியுள்ளார். ஆகவே அபூர்வமாகத் தென்னிந்தியாவின் கிழக்குப் பகுதிகளில் காணப்படும் பறவை என இதனைக் கொள்ளலாம். மேற்குத் தொடர்ச்சி மலைசார்ந்த பகுதிகளில் காணப்பட்ட குறிப்பு இல்லை.

405. நீலகிரிப் பூங்குருவி
1742. Nilgiri Thrush
Zoothera dauma neilgherriensis (*Blyth*)

தோற்றம்: மைனாவை விடச் சற்றுப் பெரிய இது சுமார் **24** செ. மீ. நீளம் இருக்கும்.

அலகு கருப்புத் தோய்ந்த கொம்பு நிறம்; விழிப்படலம் ஆழ்ந்த பழுப்பு; கால்கள் வெளிர் ஊன் நிறம்.



நீலகிரிப் பூங்குருவி

தலை உச்சியும் கழுத்தும் ஆழ்ந்த பழுப்பு நிறம்; உடலின் மேற்பகுதி ஆழ்ந்த ஆலிவ் பழுப்பாகப் பிட்டம் நோக்கிச் செல்லச் செல்லக் கருஞ் சிவப்புத் தோய்ந்து காணப்படும். வால் இளஞ் சிவப்புத் தோய்ந்த பழுப்பாக இருக்கும். முதுகில் சிறிய கருப்பு நிறமான பிறைக் கோடு

களைக் காணலாம். உடலின் கீழ்ப்பகுதி வெண்மையாகப் பிறை வடிவான தெளிவான கருப்புக் கோடுகளுடன் காணப்படும். பறக்கும்போது இறக்கைகளில் வெளிர்த்த பட்டைகள் இருப்பது தெளிவாகத் தெரியும்.

காணப்படும் இடங்கள்: மேற்குத் தொடர்ச்சி மலைசார்ந்த பகுதிகளில் நீலகிரி, மூணாறு மைசூர் மலைப்பகுதிகளைச் சார்ந்தும் பழநி மலைப்பகுதி பிலகிரி நங்கன் மலைப்பகுதி ஆகியவற்றைச் சார்ந்தும் 500 மீ. உயரத்திற்கு மேல் மலை உச்சி வரை அடர்ந்த மாருப் பசுங்காடுகளைச் சார்ந்தும் ஆங்காங்கே திரியக் காணலாம்.

பழக்க வழக்கங்கள்: தனித்துத் திரியும் இதனை அபூர்வமாக உயர்ந்த சோலைகளில் இங்கும் அங்குமாகக் காணலாம் காடுகளிலும் ஈரம் காக்கப் போடப்பட்டுள்ள குப்பை செத்தைகளின் மீதும் நடந்தும் தாவிக் குதித்தும் திரியக் காணலாம். உடலின் பின் பகுதியை அப்படி நடக்கும் போது மேலும் கீழும் ஆட்டியபடியே இருக்கும். அடிக்கொரு முறை வாலை விரித்துச் சுருக்குவதும் காணலாம். மனிதர்களைக் கண்டவுடன் பறந்து மரத்தில் ஏறி அமர்ந்து கொள்ளும் இது அச்சம் நீங்கியவுடன் மீண்டும் தரையில் இறங்கி இரைதேடத் தொடங்கும். வேகமாக நேராக வல்லூறி ப் போலப் பறக்கு இது தாவிப் பறந்தே மரக்கிளைகளில் வல்லூறினைப்போல அமருகின்றது. ஆண் இனப்பெருக்கக் காலத்தில் இனியதான பலவகைக் குரல்களில் பாடும்.

புழுபூச்சிகளே முக்கிய உணவு.

இனப்பெருக்கம்: காலம்: மார்ச் முதல் ஜூன் முடிய; கூடு: பாசி, சிறுகுச்சிகள் வேர் ஆகியன கொண்டு கோப்பை வடிவில் மரக்கிளைகளிடையே 2 முதல் 6 மீ உயரத்திற்குள்ளாக கூடு அமைக்கும். முட்டை: 2; அபூர்வமாக 3; வெளிர் மஞ்சள் நிறமாக மங்கிய சிவப்புக் கறைகளுடனும் புள்ளிகளுடனும் காணப்படும்.

406. கருந்தலை மலைச் சிட்டான்

1753 Blackcapped Blackbird

Turdus merula nigropileus (Lafresnaye)

தோற்றம்: மைனாவை விடச் சற்றுப் பெரிய இது சுமார் 26 செ. மீ. நீளம் இருக்கும்.

அலகு மங்கிய ஆரஞ்சு நிறம்: விழிப்படலம் ஆழ்ந்த பழுப்புத் தோய்ந்த சிவப்பு நிறம்; கண்களைச் சுற்றியுள்ள இமைப்பகுதி நல்ல ஆரஞ்சு நிறம்; கால்கள் மங்கிய ஆரஞ்சு மஞ்சள் நிறம்.

நெற்றி முதல் பிடரிவரை தலையும் தலையின் பக்கங்களும் கருப்பு நிறம்; பின் கழுத்து, கழுத்தின் பக்கங்கள் உடலின் கீழ்ப் பகுதி ஆகியவை பழுப்புத் தோய்ந்த கருஞ்சாம்பல் நிறம்; மார்பில் மட்டும் சற்று துருச்சிவப்பு கலந்தாற்போற் காணப்படும். உடலின் மேற்பகுதி இறக்கைகள் வால் ஆகியன கறுத்த கருஞ்சாம்பல் நிறமாக இருக்கும். வால் எப்பொழுதும் உடம்பை விடக் கறுத்துக் காணப்படும்.

காணப்படும் இடங்கள்: மேற்குத் தொடர்ச்சிமலை சார்ந்த பகுதிகளில் மலை அடிவாரம் முதல் மலைகளில் 1500 மீ. உயரம் வரை இலையுதிர்காடுகளையும் பசுங்காடுகளையும் சார்ந்து காணலாம். நீலகிரிப் பகுதிகளில் மிகுதியாகவும் மைசூர் பகுதிகளில் ஆங்காங்கேயும் காணலாம். கேரளப் பகுதிகளில் குளிர்காலத்தில் பரவுகிறது.

பழக்க வழக்கங்கள்: தனித்தும் சிறு கூட்டமாகவும் இணைகளாகவும் தரையிலும் மரங்களிலும் இது இரை தேடித் திரியக் காணலாம். தரையில் காய்ந்த இலை சருகுகளைப் புரட்டியபடி தாவித் திரியும் இது இலைகளிடையே பூச்சிகளைப் பிடித்துத் தின்பதோடு கூடப் பழுத்து உதிர்ந்த பழங்களையும் விருப்பத்தோடு பொறுக்கித் தின்னும். பழமரங்களிலும் மலர்மரங்களிலும் இதனைக் காணலாம். லாண்டானா பழுக்கும்போது லாண்டானா புதர்களில் இவை கூட்டமாகத் திரியக் காணலாம். மரத்தடியில் இரை தேடும் இது மக்கள் எதிர்பட்டால் மரக்கிளைகளில் பாய்ந்து பறந்து அமர்ந்து கொள்ளும்.

பழங்களும், பூச்சிகளும், மலர்த் தேனும் இதன் உணவு.

இனப்பெருக்கக் காலத்தில் இனிமையாகப் பாடுவது இது.

இனப்பெருக்கம்: காலம்: மே முதல் ஜுலை வரை. கூடு குச்சிகள், புல், பாசி ஆகியவற்றை மண்ணோடும் சேர்த்துக் கலந்து புதர்களிலும் மரக்கிளைகளிடையும் கூடு அமைக்கும். முட்டை: 3 அல்லது 4; பசுமை தோய்ந்த வெண்மை செம்பழுப்பு, ஊதா முதலான நிறங்களில் கறைகளும் புள்ளிகளும் பெற்று விளங்கக் காணலாம்.

407. போர்டிலோன் மலைச்சிட்டான்
1756 Bourdillon's Blackbird
Turdus merula bourdilloni (Seebohm)

தோற்றம்: மைனா அளவுள்ள இது சுமார் 24 செ. மீ. நீளம் இருக்கும்.

அலகு ஆரஞ்சு மஞ்சள் நிறம்; விழிப்படலம் ஆழ்ந்த பழுப்பு நிறம். கால்கள் ஆரஞ்சு சிவப்பு நிறம்.

இதன் உடலின் மேற்பகுதி நல்ல கருப்பாக இருக்கும். உடலின் கீழ்ப்பகுதி கருப்புத் தோய்ந்த பழுப்பு நிறமாக இருக்கும்.

பெண்ணின் உடலின் மேற்பகுதி ஆலிவ் சற்றுத் தோய்ந்த நல்ல பழுப்பாக இருக்கும்: உடலின் கீழ்ப்பகுதி செம்மஞ்சள் தோய்ந்த கருஞ்சாம்பல் நிறமாக இருக்கும். மோவாயும் தொண்டையும் வெளிறிய பழுப்பாகக் காணப்படும்.

காணப்படும் இடங்கள்: கேரளத்தில் மேற்குத் தொடர்ச்சி மலை சார்ந்த பகுதிகளிலும் பழநி மலைப்பகுதிகளிலும் காணலாம். பீர்மேடு. மூணாறு பகுதிகளில் 900 மீ. முதல் மலையுச்சிவரை பசுமைமாறாச் சோலைக்காடுகளிலும் சாலை ஓரங்களிலும் மிகுதியாகக் காணலாம்.

பழக்க வழக்கங்கள்: பெரும்பாலும் பழக்க வழக்கங்கள் முந்தின மலைச்சிட்டானைப் போன்றனவே.

இனப்பெருக்கம்: காலம்: மார்ச் முதல் ஜூன் வரை; கூடு: பாசி, புல், வேர் ஆகியவற்றோடு சேற்று மண்ணையும் கலந்து கோப்பை போன்ற கூட்டினைப் புதர்களில் அமைக்கும். முட்டை: 2 அல்லது 3; நீலங்கலந்த பசுமை நிறமாகச் செம்பழுப்புப் புள்ளிகளுடன் காட்சி தரும்.

408. நீலகிரி மலைச்சிட்டான்
Nilgiri Blackbird
Turdus meruva simillimus (Jerdon)

தோற்றம்: மைனாவை விடப் பெரியதான இது சுமார் 25 செ. மீ. நீளம் இருக்கும்.

அலகு ஆரஞ்சு நிறம்; கால்கள் மஞ்சள்; விழிப்படலம் ஆழ்ந்த பழுப்பு நிறமாக இருக்கும்.

ஆண்: நெற்றி, உச்சி, பிடரி ஆகியன கருப்பு; உடலின் மேற்பகுதி முழுவதும் ஆழ்ந்த கருஞ்சாம்பல் நிறம் தோய்த்த பழுப்பு நிறம். உடலின் கீழ்ப்பகுதி இறக்கையடிப் போர்வை சிறகுகளும் நல்ல பழுப்பு நிறம்.

பெண்: உடலின் மேற்பகுதி கறுத்த கருஞ்சாம்பல் நிறம் தோய்ந்த பழுப்பாக இருக்கும். மோவாயும் தொண்டையும் வெளிர்த்துக் கரும் பழுப்புக் கோடுகளுடன் காட்சி தரும். உடலின் கீழ்ப்பகுதி பழுப்பு நிறம் தோய்ந்த கருஞ்சாம்பல் நிறமாக இருக்கும்.

காணப்படும் இடங்கள்: மேற்குத் தொடர்ச்சி மலைசார்ந்த பகுதிகளில் பாலக் காட்டுக் கணவாய்க்கு வடக்கான மலைப் பகுதிகளிலும் நீலகிரி, பிலகிரிரங்கன் மைசூர் மலைப்பகுதிகளிலும் சோலைகள், பழத்தோட்டங்கள் காபித் தோட்டங்கள் ஆகியவற்றைச் சார்ந்தும் காணலாம்.

பழக்க வழக்கங்கள்: பெரும்பாலும் கருந்தலை மலைச் சிட்டாளின் பழக்க வழக்கங்களை ஒத்தனவே. பழங்களைப் பூச்சி புழுக்களோடு கூட விரும்பி உண்ணும் இதனைப் பழத்தோட்டக்காரர்கள் கருணையின்றிச் சுட்டுக் கொல்கின்றனர். பூச்சி புழுக்களைத் தின்று விவசாயிகளுக்கு இது செய்யும் நன்மையைக் கருதிப் பார்ப்பதில்லை.

ச்சக்—ச்சக்—ச்சக் எனக் கத்தும் இது இனப்பெருக்கக் காலத்தில் இனிய குரல் மலைப் பக்கங்களில் எதிரொலிக்கத் தொடர்ந்து பாடக்கேட்கலாம்.

இனப்பெருக்கம்: காலம்: பிப்ரவரி முதல் ஜூன் முடிய; ஒரே ஆண்டில் இரண்டு முறை முட்டையிடுவதாகவும் கருதப் படுகிறது. கூடு; குச்சிகள், பாசி, வேர், புல் ஆகியன கொண்டு சேற்று மண்ணையும் கலந்து மரக்கிளைகளிலோ, புதர்களிலோ, மலையருவியின் கரைகளிலோ, பாறைகளிடையேயோ, தோட்டங்களில் புதர்களிலோ கூடு அமைக்கும்; முட்டை: 4; பசுமை தோய்ந்த நீல நிற முட்டைகள் செம்பழுப்புக் கறைகளும் தெளிவற்ற ஊதா நிறக் கறைகளும் கொண்டு காட்சி தரும்.

Family : Paridae

பட்டாணிக் குருவிகள்
(TRUE TITS)

409. கருஞ்சாம்பல் பட்டாணிக் குருவி
1795. Indian Grey Tit
Parus major mahrattarum (Hartert)

தோற்றம் : சிட்டுக் குருவி அளவுள்ள இது சுமார் 14 செ. மீ: நீளமிருக்கும்.

அலகு கரும்பழுப்பு நிறம் ; விழிப்படலம் பழுப்பு ; கால்களும் பாதமும் சிலேட் நீல நிறம்.

தலை, மோவாய், தொண்டை, மார்பு வயிற்றில் நேர் கீழாகச் செல்லும் ஒரே கோடு ஆகியன கருப்பு நிறம் ; கன்னங்களும் காதும் வெண்மை ; முதுகு. பிட்டம், வால் மேல் போர்வை இறகுகள் நீலம் தோய்ந்த சாம்பல் நிறம். இறக்கைகள் கருப்பாக வெள்ளைப் பட்டையோடு காட்சி தரும். உடலின் கீழ் பகுதியான வயிறும் வாலடியும் வெண்மை.

காணப்படும் இடங்கள் : தென்னிந்தியா முழுவதும் மலைகளில் 500 மீ. உயரத்திற்குமேல் இலையுதிர் காடுகளிலும் புதர்க் காடுகளிலும் எங்கும் காணலாம். சமவெளிப் பகுதிகளில் அபூர்வமாகக் காணலாம்.

பழக்க வழக்கங்கள் : இணையாகவோ சிறு குடும்பக் கூட்டமாகவும் தனித்தும் மற்ற வேட்டைக்காரப் பறவைப் பட்டாளங்களுடன் சேர்ந்தும் மரங்களில் இலைப் புதர்களிடையே அங்கும் இங்கும் தாவித் தாவிப் புழுபூச்சிகளைப் பிடித்துக்கொண்டிருக்கக் காணலாம். இலைகளின் அடியிலும், மலர்களின் உள்ளும் மரப்பட்டைகளின் பிளவிலும் நுட்பமாகப் புழு பூச்சிகளைத் தேடி அலையும் இது தலை கீழாகத் தொங்கிக் கொண்டும் பக்கவாட்டில் சாய்ந்தும் பலவித நிலைகளில் உடலை வைத்துக் கொண்டிருப்பது பார்க்க வியப்பாகத் தோன்றும். வேலிகள் பழத்தோட்டங்கள், சிறு காடுகள் ஆகியவற்றில் இரைதேடும்போது கூட்டத்தைச் சேர்ந்த பறவைகள் சிட்டுக் குருவியைப் போல்சிறு குரலில் கத்தியபடி ஒன்றோடு ஒன்று தொடர்பு கொண்டபடி இருக்கும்.

பூச்சிகள், புழுக்கள், அவற்றின் முட்டைகள் ஆகியவற்றோடு பழங்களையும் கொட்டைகளையும் உண்ணுகின்றது.

இனப்பெருக்கக் காலத்தில் ஆண் உரத்த சீழ்க்கைக் குரலில் வீஇஇச்சிச்சீ—வீஇஇச்சிச்சீ எனப் பாடியபடியே இரைதேடும். நான்கைந்து முறை கத்தியபின் சில விநாடிகள் இடைவிட்டு மீண்டும் தொடங்கும். இப்படி நெடு நேரம் நாள் முழுதும் பாடியபடி இருக்கும்.

கம்பளிப் பூச்சிகளை இது ஏராளமாகப் பிடித்துத் தின்னும். இனப்பெருக்கக் காலத்தில் ஒரே நாளில் குஞ்சுகளுக்காகப்பல நூறு முறை பூச்சிகளைப் பிடித்துச் சென்று உணவாக ஊட்டும் இது உழவர்களுக்கு மிகுந்த உதவி செய்கின்றது எனலாம். பழத் தோட்டங்களில் செய்யும் அழிவோடு இந்த உதவியை எண்ணிப் பார்க்கும் போது இது செய்யும் தீமையை விட நன்மையே அதிகம் எனக் கொள்ளலாம்.

இனப்பெருக்கம் : காலம்: பிப்ரவரி முதல் ஜூன் முடிய; கூடு: தூவிகள், காய்ந்த மென்மையான சருகுகள், ஆட்டின் மயிர், பாசி முதலியன கொண்டு சிறு மேடைபோல மரங்களில் பொந்துகளில் அமைத்து முட்டையிடும். பொந்துகள் மிகச் சிறிய நுழை வாயிலை உடையனவாக இருக்கக் காணலாம். உடலைச் சுருக்கி மிகச் சிரமப்பட்டே ஆணும் பெண்ணும் அதன் வழியே நுழைந்து உள்ளும் புறமும் சென்று வரும். முட்டை: 4 முதல் 6 வரை: வெண்மையாகவோ இளஞ்சிவப்புத் தோய்ந்த வெண்மையாகவோ இருக்கக் காணலாம் செம்பழுப்பு நிறப் புள்ளிகளும் சிறு கறைகளும் முட்டைகளின் மீது நிறைந்திருக்கக் காணலாம். ஆணும் பெண்ணும் கூடு கட்டுதல், அடைகாத்தல், குஞ்சுகளைப் பேணுதல் ஆகிய எல்லாப் பணிகளிலும் பொறுப்பேற்கும்.

410. வெள்ளை இறக்கைக் கரும்பட்டாணிக்குருவி

White-winged Black Tit

Parus nuchalis (Jerdon)

தோற்றத்திலும் அளவிலும் பெரிதும் முன்னதை ஒத்த இதன் உடலின் மேற்பகுதி கருப்பாக இருக்கும். தொண்டையிலிருந்து வாலடி வரை அகன்ற கருங்கோடு நீண்டு செல்லக் காணலாம். கன்னங்கள், கழுத்தின் பக்கங்கள், மார்பு, வயிறு, வாலடி, இறக்கைகளில் காணப்படும் பட்டை ஆகியன வெண்மையாக இருக்கும். கிழக்குத் தொடர்ச்சி மலை சார்ந்த பகுதிகளில் அடர்ந்த காடுகளில்

மலைகளில் உயரக் காணப்படும் இதன் பழக்க வழக்கங்களும் இனப் பெருக்க முறையும் பெரிதும் முன்னதை ஒத்தனவே.

411. தெற்கத்திய மஞ்சள் கன்னப் பட்டாணிக் குருவி

Southern Yellow-Cheeked Tit

Machlolophus xanthogenys aplonotus (Blyth)

தோற்றம்: சிட்டுக் குருவி அளவுள்ள இதன் நீளம் 15 செ. மீ.

அலகு கருப்பு; விழிப்படலம் பழுப்பு; கால்கள் ஈய நிறம்.

தலை, தலைக்கொண்டை, மோவாய், தொண்டை, கழுத்து மார்பின் நடுவிடம், வயிற்றின் நடுவிடம் ஆகியன கருப்பு; முதுகு நல்ல ஆலிவ் பச்சை நிறம்; தோள்பட்டை கருவிளிம்போடு சாம்பல் நிறம்; வால் மேல் போர்வை இறகுகள் சாம்பல் நிறம். வால் கருத்து விளிம்புகள் சற்று நீலந்தோய்ந்திருக்கும். ஓர இறகுகள் வெண்மையான விளிம்புகளோடு இருக்கும். இறக்கைகள் கருப்பாக வெண்பட்டையோடு காட்சி தரும். கண்ணின்மேல் மஞ்சட் கோடு மூக்கடியிலிருந்து பிடரி வரை செல்லக் காணலாம்; கன்னங் களும் கழுத்தின் பக்கங்களும் மஞ்சள் நிறம்; மார்பு வயிறு ஆகிய வற்றின் பக்கங்கள் மஞ்சள் தோய்த்த பசுமையாக இருக்கும்.

பெண் சற்று நிறம் மங்கிக் காணப்படும்.

காணப்படும் இடங்கள்: தென்னிந்தியா முழுதும் மலைப்பக்கங் களில் 900 மீ. உயரத்திற்குமேல் மலை உச்சி வரை திறந்த வெளிர் பசுங்காடுகளிலும் இலையுதிர் காடுகளிலும் காணலாம்.

பழக்க வழக்கங்கள்: பெரும்பாலும் கருஞ்சாம்பல் நிறப்பட் டாணிக் குருவியின் பழக்க வழக்கங்களைப் போன்றனவே மற்ற இரைதேடும் பட்டாளங்களுடன் சிறு கூட்டமாகச் சேர்ந்து வேட்டையாடித் திரியும் இது இனப்பெருக்கக் காலத்தில் இணை யாகச் சேர்ந்து திரியக் காணலாம்.

இனப்பெருக்கக் காலத்தில் ஆண் ச்சீஇவிட், பிரெட்டி, ச்சீஇவிட் என இனிய குரலில் கொண்டை நிமிர்ந்து நிற்க இறக்கைகளைத் தொங்கவிட்டபடி பாடக் காணலாம்.

இனப்பெருக்கம்: காலம்: மே முதல் செப்டம்பர் முடிய; கூடு: கருஞ்சாம்பல் நிறப் பட்டாணிக் குருவியைப் போன்றதே; முட்டை: 4 முதல் 6 வரை; பளபளக்கும் இளஞ் சிவப்புத் தோய்ந்த வெண்மையாக ஊதாப் பழுப்புக் கறைகளுடனும் பருத்த புள்ளி

களுடனும் காட்சி தரும். ஆணும் பெண்ணும் குடும்பப் பொறுப்பு ஏற்கும்.

412. திருவாங்கூர் மஞ்சள் கன்னப் பட்டாணிக் குருவி
Travancore Yellowcheeked Tit
Parus xanthogenys travancoreensis (Kinnear & Whistler)

இது தோற்றத்தில் முன்கண்ட பட்டாணிக் குருவியை (P. N. apl notus) ஒத்ததே. இதன் தோற்றத்தில் மேலும் கீழும் மஞ்சள் நிறம் முன்னதைவிட மங்கியும் ஆலிவ் பசுமை நிறம் சற்று ஆழ்ந்தும் காணப்படும். ஆகவே தனி உள்ளினமாகப் பிரிக்கப்பட்டுள்ளது. கேரளத்திலும், மேற்குத் தொடர்ச்சி மலை சார்ந்த பகுதிகளிலும் பழநி மலைசார்ந்த பகுதியிலும் தென் கொங்கணத்திலும் 800 மீ. முதல் 1500 மீ. உயரம் வரை அடர்ந்த இலையுதிர் காடுகளிலும், ஏலக்காய்த் தோட்டங்களிலும் காணலாம். இனப்பெருக்க முறையும் பழக்க வழக்கங்களும் முன்னதைப் போன்றனவே.

Family : Sittidae

Family : Selpornitinae

பசையெடுப்பான்கள்
(NUTHATCHES)

413. செம்பழுப்பு மார்புப் பசையெடுப்பான்
Chestnut Bellied Nuthatch
Sitta castaneiventris castaneiventris (Franklin)

தோற்றம் : சிட்டுக்குருவியை விடச் சிறியதான இது சுமார் 15 செ. மீ. நீளம் இருக்கும்.

அலகு கொம்பு நிறமான கருப்பு; விழிப்படலம் பழுப்பு; கால்கள் ஈய நிறம்.

உடலின் மேற்பகுதி நீலந்தோய்ந்த கருஞ்சாம்பல் நிறம். அலகடியிலிருந்து கண்கள் வழியாகப் பிடரிவரைக் கருங்கோடுகள் நீண்டிருக்கக் காணலாம். நடுவாலிறகுகள் இரண்டு நீலமாகவே காட்சி தரலாம். கன்னங்களும் மோவாயும் வெண்மை. மார்பு, வயிறு, வாலடி ஆகியன நல்ல செம்பழுப்பாக இருக்கும்.

காணப்படும் இடங்கள்: கேரளா நீங்கலாகத் தென்னிந்தியா முழுவதும் இலையுதிர்காடுகளில் மலைப்பக்கங்களிலும் ஊர்ப்புறங்களை அடுத்த மாந்தோப்புக்கள் போன்றவற்றிலும் ஆங்காங்கே காணலாம்.

பழக்க வழக்கங்கள்: தனித்தும் இணையாகவும் அடிமரங்களிலும் கிளைகளிலும் சுண்டெலி போலத் தவழ்ந்து ஓடி மரப்பட்டைகளிடையே மறைந்திருக்கும் புழுபூச்சிகளைப் பிடிக்கக் காணலாம். வேட்டையாடும் மற்றப் பறவைப் பட்டாளங்களுடன் கலந்து புழு பூச்சிகளை வேட்டையாடுவதும் உண்டு. அடிமரங்களைக் சுற்றிச் சுற்றி வந்து இரைதேடும் இதன் செயல் மரங்கொத்தியின் செயலையும் பட்டாணிக் குருவியின் செயலையும் பெரிதும் ஒத்திருக்கக் காணலாம்.

இனப்பெருக்கம்: காலம்: மார்ச் முதல் ஜூலை வரை; கூடு: மரப்பொந்துகளில் இலைகள், கம்பளிநூல், பாசி முதலியவற்றால் மேடையிட்டு பொந்தின் நுழைவாயிலைச் சேற்றால் பூசி மறைத்து விடும். முட்டை: 2 முதல் 5 வரை; வெண்மையாகச் சிவப்புப் புள்ளிகளோடு காட்சி தரும்.

414. வெல்வெட் நெற்றிப் பசையெடுப்பான்

1838. Velvetfronted Nuthatch

Sitta frontalis frontalis (*Swainson*)

தோற்றம்: சிட்டுக் குருவியை விடச் சிறிய இது சுமார் 14 செமீ. நீளமிருக்கும்.

அலகு பவளச் சிவப்பு: விழிப்படலம் எலுமிச்சை மஞ்சள் நிறம். கால்கள் ஆரஞ்சு தோய்ந்த பழுப்பு நிறம்.

வெல்வெட் நெற்றிப் பசையெடுப்பான்

இதன் உடலின் மேற்பகுதி ஊதா கலந்த நீலமாக இருக்கும். உடலின் கீழ்ப்பகுதி சாம்பல் தோய்ந்த இளம் சிவப்பாக இருக்கும் நெற்றி வெல்வெட் கருப்பாக இருக்கும் மோவாயும் தொண்டையும் வெண்மை நிறம். கண்ணின் மேல் பிடரிவரை ஒரு கரும் புருவக்கோடு செல்லக் காணலாம்.

பெண் ஆணினை ஒத்துக் கரும் புருவக் கோடின்றி இருக்கும்.

காணப்படும் இடங்கள்: மேற்குக் கிழக்குத் தொடர்ச்சிமலை சார்ந்த பகுதிகளில் சமவெளி முதல் உயர் முகடுகள் வரை பசுஞ் சோலைகளைச் சார்ந்து திரியக் காணலாம்.

பழக்க வழக்கங்கள்: ஐந்தாறு பறவைகள் சேர்ந்த சிறு கூட்டமாக அடிமரங்களைச் சுற்றி முன்னைய பசையெடுப்பானைப் போலவே இரை தேடித் திரியக் காணலாம். அடிமரங்களில் பட்டைகளிடையேயும் பாசிகள் மரக்காளான்கள் ஆகியவற்றின் இடையேயும் மறைந்திருக்கும் புழுபூச்சிகளைப் பிடித்துத் தின்னும். இவ்வாறு மரங்களில் தொற்றி எலிபோல ஊர்ந்து திரிவதற்கேற்ற வகையில் இதன் கால்களும் விரல்களும் உறுதியாக அமைந்துள்ளன. மரங்கொத்தி மரத்தில் தொத்தும்போது அதன் நீண்ட வால் மூன்றாவது கால் போலப் பின்புறம் ஒரு தாங்கலாக அமைகிறது. ஆனால் இது குறுகிய வாலையுடையதாகையால் முழுவதும் கால்களை நம்பியே மரங்களில் தொத்தித் திரிகிறது.

சிறு குரலில் கத்தியபடி இரைதேடும் இது ஒன்றோடு ஒன்று எப்பொழுதும் குரலொலியால் தொடர்பு கொண்டபடி இருக்கும்.

இனப்பெருக்கம்: முந்தைய பசையெடுப்பானைப் போல.

Family : Salpornitinae

மரந்தொத்திகள்
(CREEPERS)

415. புள்ளி மரந்தொத்தி
1840. Spotted Grey Greepers
Salpornis melanotus (Franklin)

தோற்றம்: சிட்டுக்குருவி அளவுள்ள இது சுமார் 15 செ. மீ. நீளம் இருக்கும்.

அலகு கொம்புக் கருப்பு நிறமாக இருக்கும். விழிப்படலம் ஆழ்ந்த பழுப்பு நிறம். கால்கள் ஈயநிறம்.

உடலின் மேற்பகுதி வெள்ளைப் புள்ளிகளோடும் பட்டைகளோடும் கூடிய கருப்பாகக் காட்சி தரும். கண்ணுக்கு மேல் அகன்ற வெண்புருவம் இருக்கும். கண்ணின் வழியாக வெள்ளைக் கோட்டிற்குக் கீழ் ஒரு கருங்கோடும் செல்லும். மோவாயும்

தொண்டையும் வெண்மை. தொண்டையின் பக்கங்களில் சில கரும்புள்ளிகள் காணலாம். உடலின் கீழ்ப்பகுதி மஞ்சள் தோய்ந்த பழுப்பாகச் சற்றுச் சிவப்பு நிறங் கலந்து கருப்புப் பட்டைகளுடன் காணப்படும். சில தூவிகள் வெண் முனைகளோடு காட்சி தரும.

காணப்படும் இடங்கள்: அபூர்வமாகக் காணப்படும் இது சென்னைக்குவடமேற்கே காணப்பட்டதாகத் தென்னிந்தியப்பறவைகள் என்ற நூலில் குறித்துள்ளனர். தமிழ் நாட்டுப் பறவைகள் வரிசை நூலாசிரியர் செஙகல்பட்டில் காணப்பட்டதாகக் குறித்துள்ளார்

பழக்க வழக்கஙகள்: உயர்ந்து வளர்ந்த பெரிய மரங்களில் வேகமாகத் தொத்தி இரைதேடும இயல்புடையது இது. மரங் கொத்தியை வி வேகமாக மரக்கிளைகளில் தொத்தி ஏறும்.

இனப்பெருக்கம்: ஒரு முறை கூடு காணப்பட்டுள்ளது. இதனுடைய பழக்க வழக்கங்கள் இனப்பெருக்கம் பற்றிய விரிவான விளக்கம் ஆராயப்படுவதற்குரிய ஒன்று.

Family: Motacillidae

நெட்டைக்காலிகளும், வாலாட்டிகளும்

(PIPITS AND WAGTAILS)

416. காட்டு நெட்டைக்காலி
1852. Indian Tree Pipit
Anthus hodgsoni hodgsoni (Richmond)

தோற்றம்: சிட்டுக்குருவியை விடச் சற்றுப் பெரியதான இது சுமார் 17 செ. மீ. நீளம் இருக்கும்.

அலகு கொம்பு நிறம்; கால்கள் வெளிர் ஊன் நிறம்; விழிப்படலம் பழுப்பு;

உடலின் மேற்பகுதி ஆலிவ் பழுப்பாகக் கருப்புக் கோடுகளோடு காணப்படும். தலை கழுத்து, முதுகு ஆகியவற்றில் ஆழ்ந்த கோடுகளைக் காணலாம். தொண்டை, கழுத்து, மார்பு ஆகியன செம்மஞ்சள் தோய்ந்த வெண்மையாக இருக்கும், வயிறு நல்ல வெண்மை கழுத்திலும் மார்பிலும் ஆழ்ந்த பழுப்புக கோடுகளையும் புள்ளிகளையும் காணலாம். வயிற்றிலும் பக்கங்களிலும் கோடு

கள் இடைவெளி விட்டு நீண்டிருக்கக் காணலாம். வாலடி வெளிர்த்த செம்மஞ்சள் நிறமாக இருக்கும். கண்ணின் மேல் மங்கிய ஒரு வெண்கோடு காணலாம்.

காணப்படும் இடங்கள்: குளிர்காலத்தில் வலசை வருபவை இவை. மேற்கு, கிழக்குத் தொடர்ச்சி மலை சார்ந்த பகுதிகளில் மைசூருக்கு வடக்கே உள்ள மலைப்பகுதிகளில் ஓரளவு மிகுதியாகவும் தெற்கே செல்லச் செல்லக் குறைந்த அளவிலும் காணலாம். அடர்த்தியற்ற மரங்களோடு கூடிய புல்வெளிகளையுடைய மலைப் பக்கங்களில் சிறப்பாக 750 மீ. உயரத்திற்கு மேல் காணலாம். காபி, தேயிலைத் தோட்டங்களிடையே திரிவதும் உண்டு.

பழக்க வழக்கங்கள்: தோற்றத்தில் பெண் சிட்டுக்குருவியை ஒத்திருக்கும் நெட்டைக் காலிகளை ஒன்றிலிருந்து ஒன்று பிரித்து அறிவது கடினம். சற்று மெலிந்த தோற்றம் கொண்டிருப்பது கொண்டும் வால் நீண்டு ஓர இறகுகளில் வெள்ளை நிறமாக இருப்பது கொண்டும் ஓரளவு எளிதில் வேறுபடுத்தி அறியலாம். மேலும் நெட்டைக்காலிகள் வாலாட்டிகளைப் போல அடிக்கடி வாலினை மேலும் கீழும் ஆட்டும் பழக்கம் உடையவை. சிறு மரங்களை இடையிடையே உடைய பாறைகள் துருத்திக் கொண்டிருக்கும் புல்வெளியோடு கூடிய மலைப்பக்கங்களில் இவை இணையாகவோ, பரந்து பட்ட சிறு கூட்டமாகவோ திரியக் காணலாம். தரையில் ஓடியாடிப் பூச்சி புழுக்களைத் தேடித் தின்னும் பழக்கமுடையவை இவை. ப்பீபிட்-ப்பீபிட் என்றும் டீஸ்வீப் டீஸ்வீப் என்றும் குரல் கொடுக்கும் இவை வாலாட்டிகளைப் போலவே சற்று மேலும் கீழுமாக வீழ்ந்து எழுந்து பறக்கக் காணலாம். பறக்கும் இவை தரையில் உட்காரும் போது வால் ஓர இறகுகளின் வெண்மை தெளிவாகத் தெரியும். யாராவது குறுக்கிட்டால் தரையில் இரை தேடிக் கொண்டிருக்கும் இவை எழுந்து மரங்களில் சென்று அமர்ந்து கொள்ளக் காணலாம்.

இனப்பெருக்கம்: தென்னிந்தியாவிற்கு வெளியே.

417. யோஹன் காட்டு நெட்டைக்காலி

1853. Yunnan Tree Pipit

Anthus hodgsoni yunnanensis (Uchida & Kuroda)

தோற்றத்திலும் அளவிலும் பழக்க வழக்கங்களிலும் முன்னைய காட்டு நெட்டைக்காலியை ஒத்த இது குளிர்காலத்தில் தென்னிந்திய மலைசார்ந்த பகுதிகளில் தென் திருவாங்கூர் வரை வலசை வந்து திரியக் காணலாம். இதனுடைய முதுகில் காணப்படும்

கருப்பு நிறக் கோடுகள் முன்னதைவிட மிக மங்கலாக இருக்கும். மார்பிலும் வயிற்றிலும் காணப்படும் ஆழ்ந்த நிறப் பழுப்புக்கோடுகளும் முன்னதற்கு இருப்பது போல ஆழ்ந்ததாக இராமல் லேசாக இருக்கும். இதுவும் குளிர்காலத்தில் வலசை வந்து திரும்புவது இனப்பெருக்கம் செய்வது வட கிழக்கு ஆசியப் பகுதிகளில்.

418. ரிச்சர்டு நெட்டைக்காலி

1857. Richard Pipit

Anthus novaeseelandiae richardi (Vieillot)

தோற்றம் : சிட்டுக் குருவியை விடப் பெரியதான இது சுமார் 18 செ. மீ. நீளம இருக்கும்.

அலகு கொம்புப் பழுப்பு நிறம்; விழிப்படலம் பழுப்பு; கால்கள் பழுப்பான ஊன் நிறம்.

அளவிற் பெரிய இதனை இதனுடைய சற்று நீண்ட கால்களைக் கொண்டு தெரிந்து கொள்ளலாம். உடலின் மேற்பகுதி ஆழ்ந்த பழுப்பாக சிவப்புத் தோய்ந்த மஞ்சள் நிறக் கோடுகளுடன் இருக்கும். வால் நல்ல பழுப்பாக இருக்கும். வால் ஓர இறகுகள் கிட்டத் தட்ட முழுதும் வெண்மையாக இருக்கக் காணலாம். புருவக் கோடும் உடலின் அடிப்பகுதியும் வெளிர் செம்மஞ்சள் நிறமாக இருககும். தொண்டையின் பக்கங்களும் முன் கழுத்தும் மார்பும் ஆழ்ந்த பழுப்புக் கோடுகளோடு திகழக் காணலாம். மார்பின் வயிறு ஆகியவற்றின் பக்கங்கள் ஆழ்ந்த செம்மஞ்சளாக லேசான சில தெளிவற்ற பழுப்புக் கோடுகளோடு காட்சிதரும்.

காணப்படும் இடங்கள் : குளிர்காலத்தில் தென்னிந்தியா முழுதும் சதுப்பான உப்பங்கழிப பகுதிகளிலும், ஏரிக்கரைகளிலும், நீரை அடுத்திருக்கும் அறுவடை முடிந்த நெல் வயல்களிலும் வலசை வந்து திரியக் காணலாம்.

பழக்க வழக்கங்கள் : சதுப்பு நிலங்களைச் சார்ந்து மரங்களற்ற நீர்வளம் மிகுந்த பகுதிகளில் தனித்தோ, சிறு கூட்டமாகவோ திரியும் இதன் பழக்க வழக்கங்களை ஒத்தனவே.

இனப்பெருக்கம் : மத்திய ஆசியா சைபீரியா ஆகிய பகுதிகளில்.

419. பிளைத் நெட்டைக்காலி

1861. Blyth's Pipit

Anthus godlewskii (Taczanowski)

தோற்றத்திலும் அளவிலும் முழுதும் இது முன்னதைப் போன்றே காட்சி தரும். இயற்கைச் சூழலில் வேறுபடுத்தி அறிவது கடினம். இதன் காலில் பின் விரல் சற்றுக் குறுகலாக இருப்பது கொண்டு கையில் பிடித்துப் பார்க்கும்போது வேறுபாடு அறியலாம். கலின் நீளமும் முன்னதைவிடச் சிறியது. பழக்க வழக்கங்கள், காணுமிடம், இனப்பெருக்கம் ஆகியன முன்னதைப் போன்றன.

420. மலாய் நெட்டைக்காலி

1860. Malay Pipit

Anthus novaeseelandiae malayensia (Eyton)

தோற்றம்: சிட்டுக் குருவி அளவினதான இது சுமார் 15 செ.மீ. நீளமிருக்கும்.

மேல் அலகும் கீழ் அலகின் முனையும் கொம்பு நிறமான பழுப்பு. கீழ் அலகு வெளிர் ஊன் நிறம்; கால்கள் பழுப்புத் தோய்ந்த மஞ்சள் நிறம்.

இது தோற்றத்தில் முழுவதும் ரிச்சார்டு நெட்டைக்காலியை ஒத்து அளவில் சற்றுச் சிறியதாக இருக்கும்.

காணப்படும் இடங்கள்: மேற்குத் தொடச்சி மலைசார்ந்த பகுதிகளில் மைசூர் மாநிலத்தில் மைசூருக்குத் தெற்கே திருவாங்கூர் வரை புல் வெளியான மலைப்பக்கங்களையும், உப்பங்களிகளைச் சார்ந்த பகுதிகளையும், ஏரி குளங்களையும் சார்ந்து நீலகிரி நெட்டைக் காலியுடனும் ரிச்சார்டு நெட்டைக்காலியுடனும் கலந்து திரியக் காணலாம்.

பழக்க வழக்கங்கள்: ரிச்சார்டு நெட்டைக் காலியைப் போன்றவையே.

இனப்பெருக்கம்: காலம்: நவம்பர் முதல் ஏப்ரல் முடிய கூடு: சற்று உருண்டையான கோப்பை வடிவில் அமைத்த கூட்டினை வேர், புல், மயிர் ஆகியவற்றால் தரையில் குழிவான இடத்தில் புல் புதர் ஓரமாக அமைக்கும். முட்டை: 3 அல்லது 4; சாம்பல் தோய்ந்த வெண்மையாகவோ மஞ்சள் தோய்ந்த வெண்மையாகவோ இருக்கும். பழுப்புப் புள்ளிகளும் கறைகளும் முட்டை

யின் மீது காணலாம். இனப்பெருக்கக் காலத்தில் ஆண் பாடியபடி இறக்கை அடித்துச் சற்று உயரப் பறக்கக் காணலாம்.

[Anthus novaeseelandiae rufulus என்ற உள்ளினம் (INDIAN PIPIT—இந்திய நெட்டைக்காலி முன் சொன்ன மலாய் நெட்டைக் காலி என்ற உள்ளினத்திற்குப் பதிலாக தென்னிந்தியாவில் கேரளம் ஒழிந்த பிற பகுதிகளில் காணலாம். இதன் பழக்க வழக்கங்களும் இனப்பெருக்க முறையும் மலாய் நெட்டைக் காலியை ஒத்தனவே.]

421. கருஞ்சிவப்பு நெட்டைக்காலி

1869. Rufous Rock PiPit

Anthus similis travancoriensis (Riply)

தோற்றம்: கொண்டைக் குருவி அளவுள்ள இது சுமார் 19 செ. மீ. நீளமிருக்கும்.

மேல் அலகு ஆழ்ந்த கொம்புப் பழுப்பாகவும் கீழ் அலகு வெளிர் ஊன் நிறமாகவும் இருக்கும்; விழிப்படலம் செம்பழுப்பு; கால்கள் மஞ்சள் பழுப்பு நிறம்.

மற்ற நெட்டைக் காலிகளைவிடப் பெரியதான இதன் உடலின் மேற்பகுதி ஆழ்ந்த பழுப்பாக இருக்கும். ஒவ்வொரு தூவியும் செம்மஞ்சளான விளிம்புகளோடு தோற்றம் தரக் காணலாம். கண்ணின் மேல் தெளிவில்லாத செம்மஞ்சள் புருவக்கோடு செல்லக் காணலாம். வால் கருஞ்சிவப்பாக செம்மஞ்சள் விளிம்போடு காட்சி தரும். உடலின் கீழ்ப்பகுதி செம்மஞ்சளாக மோவாயும் தொண்டையும் வெளுத்தும், கீழ் வயிறும் வாலடியும் சற்று ஆழ்ந்த நிறத்துடனும் காட்சி தரும்.

காணப்படும் இடங்கள்: மேற்குத் தொடர்ச்சி மலைசார்ந்த மலைப்பகுதிகளிலும பழநிமலை சார்ந்த மலைப்பகுதிகளிலும் 1000 மீ. உயரத்திற்குமேல் மலை முடிகள் வரை மரங்களற்ற பாறையும் புல்லுமான மலைப்பக்கங்களில் காணப்படுகிறது.

பழக்க வழக்கங்கள்: பொதுவில் மற்ற நெட்டைக் காலிகளின் பழக்க வழக்கங்களை ஒத்தனவே இதனுடைய பழக்க வழக்கங்களும். இறக்கையசைத்து வானில் சற்று முன் செல்லாது நின்றபடி பறக்கும் பழக்கம் இதற்கு உண்டு. மனிதர் எதிர்ப்பட்டால் உயர எழுந்து இடம் வலமாக இறக்கையடித்துப் பறந்தபடி இருந்து பின் மீண்டும் தரையிலிறங்கும்.

இனப்பெருக்கம்: காலம்: ஏப்ரல் மே மாதங்களில். கூடு: புதரடியில் தரையில் குழியில் புல், வேர் ஆகியவற்றால் கோப்பை போல அமைத்து முட்டையிடும். முட்டை: 2 அல்லது 3; மஞ்சள் தோய்ந்த வெண்மையாக இருக்கும்.

422. நீலகிரி நெட்டைக்காலி

1870. Nilgiri Pipit

Anthus nilghiriensis (Sharpe)

தோற்றம்: சிட்டுக்குருவி அளவுள்ள இது சுமார் 16 செ. மீ. நீளமிருக்கும்.

அலகு கரும்பழுப்பு நிறம்; விழிப்படலம் பழுப்பு; கால்கள் சிவந்த பழுப்பு நிறம்.

ஆலிவ் நிறம் தோய்ந்த செம்மஞ்சளாக அகன்ற கருங்கோடு களுடன் உடலின் மேற்பகுதி காட்சி தரும். வாலின் ஓர இறகு கள் ஒரு பகுதி வெண்மையாக இருக்கக் காணலாம். தலையின் பக்கங்கள் கருஞ்சிவப்பும் பழுப்பும் தோய்ந்த நிறமாகக் காணப் படும். உடலின் கீழ்ப்பகுதி நல்ல செம்மஞ்சளாகக் காணப்படும். மார்பிலும் பக்கங்களிலும் நீண்ட சிறு கருங்கோடுகள் நிறைந் திருக்கக் காணலாம். குறுகிய செம்மஞ்சள் நிறக் கண் புருவம் தெளிவின்றித் தோற்றம் தரக் காணலாம்.

காணப்படும் இடங்கள்: நீலகிரி, பழநி, ஆனைமலை, பொன் முடி, பீர்மேடு போன்ற மேற்குத் தொடர்ச்சி மலைப்பகுதி சார்ந்த பகுதிகளில் 1000 மீ. மேல் மலை முடிவரை புல் வெளியான பாறை களை இடையே உடைய மலைப்பக்கங்களிலும் மலைச் சோலைகளை அடுத்த புல்வெளிப் பகுதிகளிலும் காணலாம்.

பழக்க வழக்கங்கள்: பிற நெட்டைக் காலிகளைப் போன்ற னவே.

இனப்பெருக்கம்: காலம்: ஏப்ரல் முதல் ஜூன் முடிய; கூடு: தரையில் குழியில் புல்லாலும் வேராலும் அகன்ற கோப்பை வடிவிலான கூட்டினைப் புதர் அல்லது புல்லடியில் அமைக்கும் முட்டை: 2 அல்லது 3; சாம்பல் நிறம் தோய்ந்த வெண்மை யாகப் பழுப்பு நிறச் சிறு புள்ளிகளும் கறைகளும் பெற்றுக் காட்சி தரும்.

423. காட்டு வாலாட்டி அல்லது வானம்பார்த்தான் வாலாட்டி
1874 Forest Wagtail
Motacilla indica (*Gmelin*)

தோற்றம்: சிட்டுக் குருவியை விடச் சற்றுப் பெரிய இது சுமார் 16 செ. மீ. நீளமிருக்கும்.



காட்டு வாலாட்டி அல்லது வானம் பார்த்தான் வாலாட்டி

மேல் அலகு கொம்பு நிறம்; கீழ் அலகு ஊன் நிறம்; விழிப் படலம் ஆழ்ந்த பழுப்பு; கால்கள் பழுப்பு தோய்ந்த ஊன் நிறம்.

உடலின் மேற்பகுதி ஆலிவ் பச்சையாக இருக்கும். வால் மேற் போர்வை இறகுகள், வாலின் நடு இறகுகள் ஆகியன பழுப்பாக இருக்கும். உடலின் கீழ்ப்பகுதி கிரீம் வெண்மையாக மார்பில் இரண்டு பிறை வடிவான கருப்பு வளையங்களுடன் காட்சி தரும். அதில் கீழே இருக்கும் வளையம் நடுவில் இடைவெளியோடு கூடியதாக ஒடித்திருக்கும். கண்ணின்மேல் குறுகிய மங்கிய வெண் புருவம் தெளிவாகத் தெரியும். இறக்கைகளில் மூன்று வெண் பட்டைகள் இருக்கும். தொண்டை, மோவாய் ஆகியவற்றில் மஞ்சளும் பக்கங்களில் சாம்பல் பழுப்பும் தோய்ந்திருக்கக் காணலாம். கன்னங்களில் ஆலிவ் பச்சைப் பெரும் புள்ளிகள் காணப்படும்.

காணப்படும் இடங்கள்: குளிர்காலத்தில் வடக்கு சைபீரியா முதலிய பகுதிகளிலிருந்து வலசை வரும் இதனை மேற்குத் தொடர்ச்சி மலைத் தொடர்ந்த பகுதிகளில் இலையுதிர் காடுகளைச் சார்ந்து வெளிகளில் முதல் மலைகளில் 1000 மீ. உயரம் வரை காணலாம்,

பழக்க வழக்கங்கள்: தனித்துக் காடுகளில் சிற்றாறுகளின் ஓரங்களில் உதிர்ந்து அழுகிய இலைதழைகளிடையே பூச்சிகளைத் தேடித் திரியக் காணலாம். மனிதர்கள் குறுக்கிட்டால் மரத்தில் தாழ்வான கிளையில் பறந்து அமர்ந்து கொண்டு வாலை மேலும் கீழும் மற்ற வாலாட்டிகளைப் போல் ஆட்டாது உடலையும் வாலையும் பக்கவாட்டில் அசைத்தபடி இருக்கக் காணலாம். காபித் தோட்டங்களிலும் இதனைக் காணலாம். தரையில் மல்லாந்து படுத்தபடி வானத்தைப் பார்த்தபடி இருக்கும் பழக்கம் இதற்கு உண்டு இதுபோல இது வானம் பார்த்தபடி படுத்திருக்குமானால் நிச்சயம் அன்று மழை வரும் என மலைப்பகுதிகளில் வாழும் மக்கள் நம்புகின்றனர் என்ற உண்மையை எம். ஏ. பாத்சா தமிழ் நாட்டுப் பறவைகள் வரிசையில் குறித்துள்ளார்.

பறக்கும் போதும் அமர்ந்திருக்கும் போதும் பிங், பிங் என சிறு குரலில் கத்தியபடி இருக்கும்.

இனப்பெருக்கம்: இந்தியாவிற்கு வெளியே.

424. கருஞ்சாம்பல் தலை மஞ்சள் வாலாட்டி
1875. Greyheaded Yellow Wagtail
Motacilla flava thunbergi (Billberg)

தோற்றம்: சிட்டுக்குருவியை விடச் சற்றுப் பெரிய இது 16 செ. மீ. நீளம் இருக்கும்.

அலகு கொம்புப் பழுப்பு நிறம்; (horny brown) விழிப்படலம் பழுப்பு; கால்கள் கொம்புக் கருப்பு நிறம் (horny black).

வலசை வரும் இது மார்ச் மாதத்தில் திரும்பு முன் தான் பிரித்து உணரத்தக்க நிறவேறுபாடுகளைக் கொள்கிறது. குளிர் காலத்தில் இது நீலத்தலை வாலாட்டியைப் போன்ற தோற்றம் கொண்டிருக்கும். ஆனால் இதன் தொண்டை எப்போதும் மஞ்சள் நிறமாக இருப்பது கொண்டும் கன்னங்களும் காதுப்பகுதியும் ஆழ்ந்த கருஞ்சாம்பல் நிறமாக இருப்பது கொண்டும் குளிர்காலத்தில் இதனை வேறுபடுத்தி அறியலாம். மற்றபடி உடலின் மேற்பகுதியும் கீழ்ப்பகுதியும் நிறங்குன்றிக் காணப்படும். (பார்க்க: கருஞ்சாம்பல் நிற வாலாட்டி)

மார்ச் மாதத்தில் உடலின் மேற்பகுதி ஆலிவ் பச்சையாகவும் கீழ்ப்பகுதி நல்ல மஞ்சளாகவும் தலை நீலந்தோய்ந்த கருஞ்சாம்பல் நிறமாகவும் மாறும்.

காணப்படும் இடங்கள் : தென்னிந்தியா முழுதும் ஆங்காங்கே நீர்வளம் மிகுந்த பகுதிகளில் புல்வெளிகளையும் ஏரி குளங்களையும் சார்ந்து ஆங்காங்கே காணலாம். கேரளத்தில் இவை பெருங் கூட்டமாகக் காணப்படுவது உண்டு.

பழக்க வழக்கங்கள் : தனித்தும், சிறு கூட்டமாகவும் குளங் களைச் சார்ந்த ஈரமிகுந்த புல் நிலங்களிலும், அறுவடையான நெல் வயல்களிலும் காணலாம். மேய்ச்சல் நிலத்தில் ஆடு மாடுகளைச் சார்ந்து திரிவதும் உண்டு. பறக்க எழும்போது வீஸ்ப், வீஸ்ப் எனக் கத்தக் கேட்கலாம்.

425. நீலத் தலை மஞ்சள் வாலாட்டி
1876. Blueheaded Yellow Wagtail
Motacilla flava beema (*Sykes*)

தோற்றம் : சிட்டுக்குருவியை விடச் சற்றுப் பெரிய இது சுமார் 16 செ. மீ. நீளம் இருக்கும்.

அலகு கொம்புப் பழுப்பு நிறம்; விழிப்படலம் பழுப்பு; கால்கள் கரும்பழுப்பு நிறம்.

கோடை காலத்தில் ஆலிவ் பழுப்பான மேல் தோற்றத்துடனும் மஞ்சள் நிறக் கீழ்ப்பகுதிகளுடனும் காட்சி தரும் கண் புருவம் தெளிவாகப் பெரிதாக வெண்மையாக இருக்கும். தலை நீலந் தோய்ந்த கருஞ்சாம்பல் நிறமாக இருக்கும். மோவாய் வெண்மையாகவும் வெண்மையான மீசைக் கோட்டுடனும் காட்சி தரும்.

குளிர்காலத்தில் கண் புருவம் மங்கித் தெளிவற்றுக் காணப் படும். தலையின் கருஞ்சாம்பல் நிறத்தில் பசுமை கலந்து காணப் படும். உடலின் அடிப்பகுதியின் மஞ்சள் மங்கி மஞ்சள் நிறமின்றி மார்பில் மங்கிய கருப்புக் கறைகளுடன் காட்சி தரும்.

காணப்படும் இடங்கள் : குளிர்காலத்தில் வலசை வரும் இதனைத் தென்னிந்தியா முழுதும் காணலாம்.

பழக்க வழக்கங்கள் : கேரளத்தில் குளிர்காலத்தில் பெரும் கூட்டமாகக் காணப்படுவது உண்டு. உப்பங்கழிகளைச் சார்ந்தும் கரும்புத் தோட்டங்களை அடுத்தும், அறுவடையான நெல் வயல் களிலும் பெருங் கூட்டமாக மேயக் காணலாம். மற்ற பழக்க வழக் கங்கள் பொதுவாக வாலாட்டிக் குருவிகளுக்கு உரியனவே.

இனப்பெருக்கம் : தென்னிந்திய எல்லைக்கு அப்பால் தென் கிழக்கு ரஷியா, லடாக் தென்கிழக்கு திபேத் போன்ற பகுதிகளில்.

426. மஞ்சள் வாலாட்டி
1875a. Short-tailed Greyheaded Yellow Wagtail
Motacilla flava simillima (Hartert)

தோற்றத்திலும் அளவிலும் முன்னதையே பெரிதும் ஒத்த இது வடக்கு கிழக்கு ஆசியப் பகுதிகளிலிருந்து தென்னிந்தியாவிற்கு வலசை வருகிறது. குளிர்காலத்தில் 30 முதல் 50 வரையான கூட்டமாக இது M. F. thunbergi யுடன் சேர்ந்து புல் நிலங்களிலும் ஏரி, குளம், உப்பங்கழி ஆகியவற்றைச் சார்ந்து சமவெளிகளில் திரியக் காணலாம். இதன் பின் விரல் நேராக இருப்பது குறித்துத் தனி உள்ளினமாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

427. கருஞ்சாம்பல் வாலாட்டி
1884. Grey Wagtail
Motocilla caspica caspica (Gmelin)

தோற்றம்: கொண்டைக் குருவியை விடச் சற்றுச் சிறிய இது சுமார் 19 செ. மீ. நீளம் இருக்கும்.

அலகு கொம்புப் பழுப்பு நிறம்; விழிப்படலம் பழுப்பு; கால்கள் பழுப்புத் தோய்ந்த ஊன் நிறம்.

உடலின் மேற்பகுதி நீலந் தோய்ந்த கருஞ்சாம்பல் நிறமாக இருக்கும். கண்ணின்மேல் வெள்ளைப் புருவமும் பசுமை தோய்ந்த மஞ்சள் நிறப் பிட்டமும் இதனை மற்ற வாலாட்டிகளிலிருந்து பிரித்தறிய உதவும். மார்பும் வயிறும் வெண்மையாக மார்பில் சற்று மஞ்சள் தோய்ந்து காணப்படும். வாலடி நல்ல மஞ்சளாக இருக்கும். வால் நடுவில் மூன்று ஜோடி இறகுகள் கருப்பாகவும் ஓர இறகுகள் வெண்மையாகவும் மற்றவை முக்கால் பங்கு வெண்மையாகவும் இருக்கக் காணலாம்.

வலசை வந்த பறவைகள் திரும்பு முன் மார்ச் மாதத்தில் உடலின் மேற்பகுதி சிலேட் நிறம் தோய்ந்த கருப்பாக மாறும். மோவாய், தொண்டை, மேல் மார்பு ஆகியன பெண்ணுக்குக் கருப்பாக மாறும். கண் புருவம் அகன்று தூய வெண்ணிறம் கொண்டதாக பளிச்சென மாறும். பெண்ணின் மார்பும் தொண்டையும் ஆணின் மார்பையும் தொண்டையையும் போலத் தூய கருப்பாக மாறுமல் வெண்ணிறமாகக் கருங்கோடுகளுடன் காட்சி தரும்.

காணப்படும் இடங்கள்: குளிர்காலத்தில் வடக்கு ஐரோப்பா, வடகிழக்கு ஆசியா, ஆப்கான் போன்ற பகுதிகளிலிருந்து செப்

டம்பர் கடைசி வார வாக்கில் வலசை வரும் இது ஏப்ரல் வரை தென்னிந்தியா முழுதும் சமவெளிகளில் ஆங்காங்கேயும் மலைகளில் காடுகளிடையே செல்லும் பாதைகளில் மிகுதியாகவும் திரியக் காணலாம்.

பழக்க வழக்கங்கள் : முன்னேய வாலாட்டிகளைப் போலன்றித் தனித்துக் காணப்படும் இது மற்ற பழக்க வழக்கங்களில் கருஞ் சாம்பல் தலை மஞ்சள் வாலாட்டியைப் பெரிதும் ஒத்தது.

இனப்பெருக்கம் : தென்னிந்தியாவிற்கே வெளியே.

428. வெள்ளை வாலாட்டி
1885, Indian White Wagtail
Motacillo alba dukhunensis (Sykes)

தோற்றம் : கொண்டைக்குருவியை விடச் சற்றுச் சிறிய இது சுமார் 19 செ. மீ. நீளம் இருக்கும்.

அலகும் கால்களும் பழுப்புத் தோய்ந்த கருப்பு; விழிப்படலம் பழுப்பு.

குளிர்காலத்தில் : நெற்றி, உச்சி, தலையின் பக்கங்கள், கழுத்து. உடலின் கீழ்ப்பகுதி ஆகியன வெண்மை மார்பில் பிறை போன்ற ஒரு கருப்புக்கோடு காணலாம், பிடரியும் முன் தலையும் கருப்பாக இருக்கும் உடலின் மேற்பகுதி கருஞ்சாம்பல் நிறம். இறக்கைகள் ஆழ்ந்த பழுப்போடு பெரிய வெள்ளைப் பட்டைகளுடன் காட்சி தரும்.

கோடைக்காலத்தில் : மோவாய், தொண்டை, மேல் மார்பு ஆகியன கருப்பாக மாறும்.

பெண்ணின் தோற்றம் ஆணினை ஒத்ததே என்றாலும் ஆணைப் போல் பளிச்செனத் தோன்றாது சற்று மங்கிய தோற்றம் தரும். குளிர்காலத்தில் பெண்ணின் பிடரியும் முன் தலையும் கருஞ்சாம்பல நிறமாக இருக்கும்.

காணப்படும் இனங்கள் : தென்னிந்தியா முழுதும் ஆங் காங்கே மலைகளிலும் சமவெளியிலும் புல் நிலங்களைச் சார்ந்து திரி யக் காணலாம்.

பழக்க வழக்கங்கள் : புல்வெளிகளிலோ, உழுத நிலங் களிலோ தனித்தும் சிதறிய சிறு கூட்டமாகவும் பூச்சிகளைத்

தேடித் திரியும் இந்த அழகிய வாலாட்டி மற்ற வாலாட்டிகளைவிட மிகுதியும் சுறுசுறுப்பானது. ஓயாது வாலாட்டியபடி இருக்கும் இது இடமும் வலமுமாக ஓடியபடி இரைதேடக் காணலாம். தப்பிப் பறக்க முயலும் பூச்சிகளைப் பிடிக்கச் சற்று இறக்கை அடித்து மேலே பறப்பதும் உண்டு. மேலும் கீழுமாக உயர்ந்தும் தாழ்ந்தும் ச்சீ-சீப், ச்சீ-சீப் எனக் கத்தியபடியே பறக்கும்.

பூச்சிகளும் நத்தைகளுமே இதன் முக்கிய உணவு.

இனப்பெருக்கம் : ஆசியாவின் வடபகுதிகளில்.

429. பெரிய கருப்பு வெள்ளை வாலாட்டி
1891. Large Pied Wagtail
Motacilla maderaspatensis (Gmelin)

தோற்றம் : கொண்டைக் குருவி அளவுள்ள இது சுமார் 23 செ. மீ. நீளம் இருக்கும்.

அலகும் கால்களும் கொம்புப் பழுப்பு நிறம். விழிப்படலம் பழுப்பு நிறம்.

இதன் உடலின் மேற்பகுதி கருப்பாகவும் கீழ்ப்பகுதி வெண்மையாகவும் இருக்கும். தலை, மோவாய், தொண்டை, மார்பு ஆகியன கருப்பு நிறம். கண்ணின் வழியாக வெண்புருவக்கோடு செல்லக் காணலாம். இறக்கைகளும் வாலும் வெள்ளையும் கருப்புமாக இருக்கும். பெண் பறவையின் கருப்பு நிறம் சற்று மங்கிக் காணப்படுவதும் உண்டு.

காணப்படும் இடங்கள் : தென்னிந்தியா முழுதும் நகரங்களிலும் கிராமங்களிலும் வெற்புறங்களிலும் ஆண்டு முழுதும் எங்கும் சற்று நீர்வளம் மிகுந்த பகுதிகளைச் சார்ந்து காணப்படும் வாலாட்டி இதுவே.

பழக்க வழக்கங்கள் : உப்பங்கழிகள், ஏரிகள், குளங்கள், காட்டருவிகள், வாய்க்கால் கரைகள் ஆகியவற்றைச் சார்ந்து திரியக் காணலாம். நீர்நிலையை அடுத்த பாறைகள் மீதோ அல்லது நீரில் நிற்கும் கட்டைகளிலோ, படகுகளிலோ அமர்ந்து நீரின் மேல் திரியும் சிறு பூச்சிகளைப் பிடிக்கக் காணலாம். குளிர் காலத்தில் வலசை வரும் மற்ற வாலாட்டிகளோடு சேர்ந்து இரவு நேரத்தில் நீரிடையே நிற்கும் நாணற் புதர்களில் அடையக் காணலாம்.

சிறு பூச்சிகளும் நத்தைகளுமே இதன் முக்கிய உணவு.

ஆண் இனப்பெருக்கக் காலத்தில் உயரமான இடத்தில் அமர்ந்து சீழ்க்கைக் குரலில் பாடக் கேட்கலாம்

இனப்பெருக்கம் : காலம் : நவம்பர் முதல் பிப்ரவரி வரை; கூடு : வேர், கம்பளிநூல், உலர்ந்த பாசம், மயிர் ஆகியன கொண்டு பாலங்களின் அடியிலும், கோபுரங்களிலும், வீட்டுக் கூரைகளிலும் கோப்பை வடிவிலான கூடு அமைக்கும். முட்டை; 3 அல்லது 4; சாம்பல் தோய்ந்த வெண்மையாகவோ, பசுமை தோய்ந்த வெண்மையாகவோ பல உருவப் பழுப்பு நிறக் கறை களுடனும் கோடுகளுடனும் காட்சி தரும். ஆணும் பெண்ணும் குடும்பப் பொறுப்பு ஏற்கும்.

Family: Dicacidae

பூஞ்சிட்டுக்கள்

(FLOWERPECKERS)

430. சாதாப் பூஞ்சிட்டு

Plain Coloured Flower-Pecker

Dicaeum concolor olivaceum (Wald)

தோற்றத்திலும் அளவிலும் நீலகிரிப் பூஞ்சிட்டை ஒத்த இது சற்று ஆழ்ந்த நிறங் கொண்டது. இணையாக உயர்ந்து வளர்ந்த உச்சிக்கிளைகளில் சுறுசுறுப்பாகத் தாவித் தாவிப் பறந்து பூச்சி களைப் பிடித்தபடி இருக்கும். சிறு கூட்டமாகச் சேர்ந்து இப்படிப் பறப்பதும் உண்டு. வட இந்தியாவில் இனப்பெருக்கம் செய்யும் இது குளிர்காலத்தில் தென்னிந்திய மலைப்பகுதிகளுக்கே வலசை வருகிறது.

431. டிக்கல் பூஞ்சிட்டு

1899. Tickell's Flower-Pecker

Dicasum erythrorhynchos erythrorhynchos (Latham)

தோற்றத்திலும் அளவிலும் இதுவும் நீலகிரிப் பூஞ்சிட்டை ஒத்ததே. இதன் அலகு மட்டும் வெளிர்சிவப்பாக இருக்கும். மேலும் மலைப்பகுதிகள் சமவெளிகள் ஆகிய எங்கும் காணப்படுவது இது. பழக்க வழக்கங்களும் இனப்பெருக்கமும் நீலகிரிப் பூஞ் சிட்டை ஒத்தனவே.

432. பருத்த அலகுப் பூஞ்சிட்டு

1892. Thick-Billed Flower-Pecker

Dicaeum agile agile (*Tickell*)

தோற்றம் : சிட்டுக் குருவியை விடச் சிறிய இது சுமார் 10 செ. மீ. நீளம் இருக்கும்.



பருத்த அலகுப் பூஞ்சிட்டு

அலகு பருத்துக் குருகி குருவியின் அலகு போல நீல நிறம் கொண்டிருக்கும். அலகின் அமைப்பால் பெயர் பெற்ற இதனை அலகு கொண்டே மற்றப் பூஞ்சிட்டுக்களிலிருந்து பிரித்து அறியலாம். விழிப்படலம் சிவப்பு; கால்கள் ஈய நிறம்

உடலின் மேற்பகுதி சாம்பல் நிறங் கலந்த ஆலிவ் பழுப்பாக இருக்கும். உடலின் கீழ்ப்பகுதி வெளிர் கருஞ்சாம்பல் நிறம் தோய்ந்த வெண்மையாகத் தெளிவற்ற சிறு பழுப்புக் கோடுகளுடன் காணப்படும். வால் முனையும் இறக்கை விளிம்புகளும் பசுமை கலந்து காணப்படும்.

காணப்படும் இடங்கள் : சமவெளிகளில் எங்கும் எப்பொழுதும் தாராளமாகக் காணலாம். மலைகளில் 100[illegible] மீட்டர் உயரம் வரை காணப்படும்.

பழக்க வழக்கங்கள் : மற்ற பூஞ்சிட்டுகளின் பழக்க வழக்கங்களை ஒத்ததே இதன் பழக்க வழக்கங்களும். புல்லுருவிச் செடிகளின் பழங்களை விரும்பி உண்ணும் என்றாலும் டிக்கல் பூஞ்சிட்டினைப் போல் இ[illegible] அப்படியே பழங்களை முழுமையாக விழுங்குவதில்லை. பழங்களை அலகால் நசுக்கிப் பழங்களின் சதைப்பற்றைக் கடித்தே உண்ணும். இ[illegible] பழங்களின் விதைகளைக் கிளைகளில் துடைத்து விட்டுத் [illegible]

பூஞ்சிட்டைப் போல எச்சத்தால் புல்லுருவிகளைப் பிற மரங்களுக்குப் பரவுவதில்லை. விதைகள் அதே மரத்தில் துடைக்கப்படுவதால் புல்லுருவிகள் ஒரே மரத்தில் பெருகி வளர்கின்றன புல்லுருவியின் பழங்களோடு கூட லாண்டானா, ஆல், முதலிய பிற மரஞ் செடிகளின் பழங்களையும் விரும்பி உண்ணும்.

ச்சிக், ச்சிக், ச்சிக் என்ற இதன் குரல் சற்றுக் கனத்து ஒலிக்கும்.

இனப்பெருக்கம் : காலம் : பிப்ரவரி முதல் மே வரை கூடு : காய்ந்த இலைகளால் தொங்கு நீள் வடிவக் கூட்டினை அமைத்துக் கொள்ளும். கூடு சூழ்நிலையோடு மிகப்பொருந்திக் கண்டுகொள்ள இயலாதபடி அமைந்திருக்கும். முட்டை : 2 அல்லது 3; இளஞ் சிவப்பு நிறமாக ஆழ்ந்த செம்பழுப்பு செங்கல் சிவப்புக் கறைகளுடன் அழகாகக் காட்சி தரும்.

433. நீலகிரிப் பூஞ்சிட்டு

1902. Nilgiri Flower-Pecker

Dicaeum concolor concolor (Jerdon)

தோற்றம் : சிட்டுக் குருவியில் பாதியளவே உள்ள இது சுமார் 9 செ. மீ. நீளமே இருக்கும்.

அலகு சிறிதாக, மெல்லியதாக, சற்று வளைந்து, கருப்பாக இருக்கும். விழிப்படலம் ஆழ்ந்த பழுப்பு நிறம். கால்கள் கருப்பு நிறம்.

தோற்றத்தில் பெண் தேன்சிட்டை ஒத்திருக்கும். அலகும் உருவமும் சிறியதாக இருப்பது கொண்டு அதனின்றும் வேறு படுத்தி அறியலாம். உடலின் மேற்பகுதி மங்கிய ஆலிவ் பச்சை நிறமாக இருக்கும். கீழ்ப்பகுதி லேசாக மஞ்சள் தோய்ந்த வெளிர்த்த சாம்பல் நிறமாக இருக்கும். நெற்றியிலும் கண்ணைச் சுற்றியும் காணப்படும் வெள்ளைப்பகுதி மழைக்காலம் தொடங்கியவுடன் மங்கி விடும்.

காணப்படும் இடங்கள் : தென்னிந்தியாவில் தென் கேரளம் முதல் வடக்கே கண்டாலா வரை மேற்குத் தொடர்ச்சி மலைசார்ந்த பகுதிகளில் மலை அடிவாரம் முதல் உச்சி வரை காணலாம் நீலகிரி பழநி மலைகளில இதனை எங்கும் தாராளமாகக் காணலாம்.

பழக்க வழக்கங்கள் : நீலகிரி, பழநி மலைகளில் உயர்ந்த சோலைகளிலும், பசுமை மாறாக் காடுகளிலும், இலையுதிர் காடுகளி

லும். தேயிலை, காபி தோட்டங்களிலும் எங்கும் காணப்படுவது. மரங்களில் உயர வளர்ந்துள்ள புல்லுருவித் தாவரங்களிடையே இதனை நிச்சயம் காணலாம். மலர்கள் மலர்ந்துள்ள மரங்களில் தேனுண்ணும் இது கிளைக்குக் கிளை சுறுசுறுப்பாகத் தாவிப் பறக்கும். புல்லுருவித் தாவரங்களின் பழங்களையும் விரும்பி உண்ணும். இதனுடைய எச்சத்தால் புல்லுருவித் தாவரங்களின் (Loranthus) விதைகள் மரககிளைக்குப் பரவி மரங்களுக்குப் பெருந் தீமை செய்கின்றன. இது உருவில் மிகச் சிறியதாக இருந்தாலும் பழத்தோட்டங்களிலும் காடுகளிலும் மிகுந்த கேடு செய்கின்றது என திரு. சலீம் அலி அவர்கள் குறிப்பிடுகின்றார்.

மலர்த்தேனும், சிறு பழங்களுமே இதன் முக்கிய உணவு.

ச்சிக்...ச்சிக்...ச்சிக்... என விரைந்து சிறு குரல் கொடுத்தபடி இருக்கும்.

இனப்பெருக்கம்: காலம்: பிப்ரவரி முதல் மே வரை; கூடு: திறந்தவெளிக் காடுகளில் மரக்கிளையின் சிமிரில் வால் பேரிக்காய் வடிவில் தொங்கும் கூட்டினைப் பழுத்து விழுந்த இலை தழைகளால் அமைக்கும். முட்டை: 2; வெண்மை நிறமாக இருக்கும்.

Family: Nectariniidae

தேன்சிட்டுக்கள்
(SUNBIRDS)

434. லோட்டன் தேன்சிட்டு

1911. Loten's Sunbird

Nectarinia lotenia hindustanica (Whistler)

தோற்றம்: சிட்டுக் குருவியை விடச் சிறிய இது சுமார் 14 செ. மீ. நீளமிருக்கும்.

அலகு சுமார் 3 செ. மீ. நீளம் கருப்பாக இருக்கும். விழிப்படலம் ஆழ்ந்த பழுப்பு; கால்கள் கருப்பு நிறம்.

ஆண்: உடலின் மேற்பகுதி முழுதும் கரும் பச்சையாக இளம் ஊதாப் பளபளப்போடு காட்சி தரும். வால் மேற்போர்வை இறகுகள் கரு நீலமாக இருக்கும்; வால் நீலம்; கழுத்தும் தலையின் பக்கங்களும் இளம் ஊதா (lilac) பளபளக்கும் பச்சை நிறம்; கன்

ணங்கள், மோவாய், மேல் தொண்டை ஆகியன கரும் பச்சை; மார்பு ஆழ்ந்த ஊதா நிறம். மார்பின் கீழ் ஒரு பழுப்புக் கலந்த சிவப்புப் பட்டை காணலாம். வயிறு கரும் பழுப்பு



லோட்டன் தேன் சிட்டு

பெண் : உடலின் மேற்பகுதி பசுமை தோய்ந்த வெளிர் பழுப்பாக இருக்கும். வால் கரும் பழுப்பாகவும் இறக்கைகள் வெள்ளை விளிம்போடும் காட்சி தரும். உடலின் கீழ்ப்பகுதி மஞ்சள் தோய்ந்த வெண்மையாக இருக்கும்.

காணப்படும் இடங்கள் : தென்னிந்தியா முழுதும் சமவெளிப் பகுதிகளில் காணலாம்.

பழக்க வழக்கங்கள் ; இனப்பெருக்கம் : ஊதாத் தேன் சிட்டினைப் போல,

435. ஊதாத் தேன்சிட்டு

1917. Purple Sunbird

Nectarinia asiatica asiatica (*Latham*)

தோற்றம் : தோற்றத்தில் இது லோட்டன் தேன் சிட்டினைப் பெரிதும் ஒத்திருக்கும். அளவில் சற்றுச் சிறியது. மார்பின் கீழ் காணப்படும் பட்டை பழுப்புக் கலந்த சிவப்புக்குப் பதிலாக லேசான செம்பு நிறமாக இருக்கும்.

குளிர்காலத்தில் லோட்டன் தேன்சிட்டின் பெண்ணினை ஒத்திருக்கும்.

காணப்படும் இடங்கள்: தென்னிந்தியா முழுவதும் சமவெளிகளிலும் மலைகளில் ஆயிரம் மீட்டர் உயரம் வரையும்.

பழக்க வழக்கங்கள்: மலர்கள் மலரும் போது இதனைச் சாதாரணமாக மலர் மரங்களில் செடி கொடிகளிலும தேன் உண்டு கொண்டிருக்கக் காணலாம். எருக்கம்பூ முதல் பன்னீர்ப் பூ வரை எல்லாவகை மலர்களிலும் அலகினை நுழைத்துத் தேனினை உண்ணும். ஈக்கள், சிறு பூச்சிகள் முதலியவற்றையும் தின்னும். சுறுசுறுப்பாக மலருக்கு மலர் தாவிப் பறக்கும் இவற்றைக் குளிர்காலத்தில் மலர்கள் மலராத சமயத்தில் அவ்வளவு மிகுதியாகக் காண முடியாது. குளிர்கால நிறவேறுபாடு காரணமாக கண்ணில் படுவதும் சற்றுக் கடினம்.

இனப்பெருக்கக் காலத்தில் ஆண் சிறு மரங்களில் உயர அமர்ந்து இறக்கைகளை அடிக்கொரு முறை விரித்துத் தன் அழகைக் காட்டி விஜச்...விஜச் விஜச்... என இனிமையாகக் குரலில் காலையிலும் பிற்பகல் நேரத்திலும் நெடுநேரம் தொடர்ந்து கத்தும்.

இனப்பெருக்கம்: காலம்: பெரும்பாலும் ஆண்டு முழுதும்; இளவேனில் பருவத்தில் சிறப்பாக; கூடு: வால் பேரிக்காய் உருவில் மேற்கோப்போடு கூடிய நுழைவாயிலோடு கூடிய தொங்கும் கூட்டினை பாசி, தூசி, குப்பை, காய்ந்த இலை சருகு, சிலந்தி நூல் ஆகியன கொண்டு சாதாரண உயரத்தில் சிறு செடியின் சிமிரில் கட்டும். கூட்டினைப் பார்த்தால் சிலந்தி வலையில் குப்பைகள் சேர்ந்து ஒட்டிக் கொண்டிருப்பது போலவே தோன்றும். பயன்படுத்தப்படாத அறைகள், வீட்டு முற்றத்தில் தொங்கும் விளக்குகள் ஆகியவற்றில் மனித நடமாட்டம் மிகுந்த பகுதிகளிலும் கூடு அமைக்கும். முட்டை: 2 அல்லது 3; சாம்பல் நிறம் தோய்ந்த வெண்மையாகச் செம்பழுப்புக் கறைகளோடும் புள்ளிகளோடும் காட்சி தரும்.

436. ஊதாபிட்டத் தேன்சிட்டு

1907. Purple-Rumped Sunbird

Necturinio zeylonica sala (Vieillot)

தோற்றம்: ஊதாத் தேன் சிட்டு அளவுள்ள இது சுமார் 11 செ. மீ. நீளம் இருக்கும்.

அலகும் கால்களும் கருப்பு; விழிப்படலம் ஆழ்ந்த சிவப்பு;

ஆண்: தலை, பிடரி, தோள்பட்டை ஆகியன பளபளக்கும் கரும் பச்சை; கழுத்து முதுகு, இறக்கைப் போர்வைச் சிறகுகள்

ஆகியன செம்பழுப்பு நிறம்; பிட்டம் வாலடிப் போர்வை இறகு கள், மோவாய், தொண்டை ஆகியன பளபளக்கும் சிவப்பு ஊதா நிறம். கழுத்தில் ஒரு செம்பழுப்புப் பட்டை காணலாம்; மார்பு நல்ல மஞ்சள்; வயிறும் வாலடியும் வெளிர் மஞ்சள்; வயிற்றின் பக்கங்கள் தூய்மையற்ற வெண்மை.

பெண்: அளவில் சற்றுச் சிறியது. உடலின் மேற்பகுதி ஆலிவ் பச்சையாகவும், கீழ்ப்பகுதி மஞ்சளாகவும் இருக்கும்.

காணப்படும் இடங்கள்: தென்னிந்தியா முழுதும் சமவெளி களில் காணலாம்.

பழக்க வழக்கங்கள்; இனப்பெருக்கம்: ஊதாத் தேன்சிட்டைப் போல. இனப்பெருக்கக் காலத்தில் பாடும் குரல் ட்டியு, ட்டியு, ட்டியு என ஒலிக்கும். பாடும் போது அப்படியும் இப்படியும் திரும் பித் திரும்பி இறக்கையை விரித்து விரித்துக் காட்டிக் குரல் கொடுக்கும் இது நாள் தோறும் அமர்ந்து பாடும் இடத்தருகே இதன் கூட்டினை விரைவில் காணலாம்.

437. சின்னத் தேன்சிட்டு
1909. Small Sunbird
Nectarinia minima (Sykes)

தோற்றம்: சுமார் 9 செ. மீ. நீளமுள்ள இது தேன் சிட்டுக் களுள் மிகச் சிறியது.

அலகும் கால்களும் கருப்பாகவும் விழிப்படலம் செம்பழுப்பாக வும் இருக்கும்.

ஆழ்ந்த சிவப்பு முதுகும் கரும்பச்சைத் தலையுச்சியுமுடைய இதன் உடலின் கீழ்ப்பாகம் மஞ்சளாக இருக்கும். தொண்டையும் கழுத்தும் செவவந்தி சிவப்பாக (Amethystine) இருக்கும்.

இனப்பெருக்கம் செய்யாத போது தலை, கழுத்து, மேல் முதுகு ஆகியன ஆலிவ் பச்சையாக இருக்கும். கீழ் முதுகும், தோள்பட்டை இறகுகளும், இறகுப் போர்வைச் சிறகுகளும், ஆழ்ந்த இரத்தச் சிவப்பாக இருக்கும். இறக்கைகளும் வாலும் கருப்பு நிறம்; உடலின் கீழ்ப்பகுதி மஞ்சள் நிறம்.

பெண்ணின் உடலின் மேற்பகுதி ஆலிவ் பச்சையாகவும் பிட் டம், வால் மேற்போர்வை இறகுகள் சிவப்பாகவும், வால் பழுப் பாக சிவப்பு விளிம்புகளோடும் இருக்கும்.

காணப்படும் இடங்கள் : மேற்குத் தொடர்ச்சி மலைப்பகுதி சார்ந்த பகுதிகளில் மலைகளிலும் மலையடிவாரக் காடுகளிலும் காணலாம்.

பழக்க வழக்கங்கள் : பிற தேன் சிட்டுகளைப் போல மலர்களில் தேனினை இதுவும் விரும்பி உண்ணும். மலைவாசஸ்தலப் பூங்காக்களில் இதனைக் காணலாம். வீட்டு முற்றங்களில் தொட்டிகளில் வளர்க்கும் மலர்ச் செடிகளில் கூட அச்சமின்றித் தேன் உண்ண வரும். முள்முருங்கை மலரும்போது அம்மரங்களில் இதனைக் கூட்டமாகக் காணலாம். தேனோடு கூடப் புழுபூச்சிகள், சிலந்தி ஆகியவற்றையும் உண்ணும். இரைதேடும் போது ஓயாது சிக்சிக் எனக் கத்தும்.

இனப்பெருக்கம் : காலம் : பிப்ரவரி முதல் அக்டோபர் வரை; கூடு : சிறு நுழைவாயிலோடு அமைந்த நீள் வட்டவடிவமான கூட்டினைச் செடிகளில் 1 முதல் 2 மீட்டர் உயரத்தில் தொங்கும் படியாக பாசி, மரக்கட்டை, இலைக்கன் ஆகியன கொண்டு சிலந்தி வலை நூலோடு சேர்த்து அமைக்கும். முட்டை : 2; பசுமை தோய்ந்த வெண்மையாகப் பச்சைப் பழுப்புப் புள்ளிகளுடன் காணப்படும்.

438. மஞ்சள் முதுகுத் தேன்சிட்டு
1929. Yellow-Backed Sunbird
Aethopyga siparaja vigorsii (Sykes)

தோற்றம் : சிட்டுக் குருவியை விடச் சிறிய இது சுமார் 15 செ. மீ. நீளம் இருக்கும்.

அலகு கருப்பு; விழிப்படலம் சிவந்த பழுப்பு; கால்கள் கருப்பு நிறம்.

ஆண் : நெற்றியும் உச்சந்தலையும் கரும்பச்சை; பின் தலையும் பிடரியும் கருப்பு; தலையின் பக்கங்கள், பின் கழுத்து முதுகு தோள் பட்டை இறகுகள், இறக்கைப் போர்வை இறகுகள் ஆகியன நல்ல சிவப்பு;

பிட்டம் நல்ல மஞ்சள்; வால் போர்வை இறகுகள் கரும்பச்சை வால் கத்தரிப்பூ நிறங் கலந்த கருப்பு நிறம்;

அலகின் அடிப்பாகத்திலிருந்து நீண்டு செல்லும் மீசைக் கோடுகளும் காதுகளின் மேற்பகுதியில் சிறு திட்டும் ஆழ்ந்த ஊதா நிறம்;

மோவாய், தொண்டை, மார்பு ஆகியன சிறு மஞ்சள் கோடுகளோடு கூடிய ஆழ்ந்த சிவப்பு நிறம்.

மார்பின் சிவப்பை ஒட்டி ஒரு கருப்புப் பட்டை காணப்படும்;

வயிறும் வாலடியும் வெளிர்த்த கருஞ்சாம்பல் நிறம்;

இறக்கைப் போர்வை இறகுகளும் துணை இறகுகளும் வெண்மை;

வால் நீண்டு குவிந்து காணப்படும்.

பெண் : இதன் வால் ஆணின் வாலை விட அளவில் சிறியது. உடலின் மேற்பகுதி மங்கிய பச்சையாகவும் கீழ்ப்பகுதி வெளிர் சாம்பல் நிறமாகவும் இருக்கும். வாலடி, இறக்கையடிப் பகுதிகள் சற்று மஞ்சள் தோய்ந்து காணப்படும.

வளராத பறவை பெண்ணின் தோற்றத்தைக் கொண்டிருக்கும்.

காணப்படும் இடங்கள் : மேற்குத் தொடர்ச்சிமலைசார்ந்த பகுதிகளில் அடர்ந்த காடுகளிலும் திறந்தவெளிக் காடுகளிலும் சமவெளி முதல் 1500 மீட்டர் உயரம் வரை காணலாம்.

பழக்க வழக்கங்கள் : காடுகளிலும் புதர்காடுகளிலும் மலைப் பகுதிகளைச் சார்ந்து திரியும் இதனை மலைவாசஸ்தலங்களில் பூங்காக்களிலும் தோட்டங்களிலும் கூடக் காணலாம். கல்வாழை, செம்பருத்தி முதலிய மலர்ச்செடிகள் மலரும் போது அவற்றின் மலர்களில் தேனை விரும்பி உண்ண வரும். ஆணும் பெண்ணுமான இணையாகவே இவற்றைக் காணலாம். பலவகை மலர்களிலும் சுறுசுறுப்பாகத் தாவிப் பறந்து தேன் உண்ணும் இது சில போது மலர்களின் முன் இறக்கை அடித்து அந்தரத்தில் நிற்பதும் உண்டு. மலரினுள் குழல் போன்ற நீண்ட நாக்கினைச் செலுத்தித் தேனினை உறிஞ்சிக் குடிக்கும் இது அயல் மகரந்தச் சேர்க்கைக்குப் பெருந்துணை புரிவதால் தோட்டக்காரர்களுக்கு மிகுந்த நன்மையே செய்கின்றது எனலாம். பெரிய மலர்களில் அலகையோ நாவையோ நீட்டித் தேன் உண்ண முடியாதபோது மலரின் அல்லி வட்டத்தில் Corolla) அலகால் துளைத்து அந்தத் துளை வழியே தேனினை உண்ணும். பூச்சி, புழுக்களையும் சிலபோது உணவாகக் கொள்ளும.

மலருக்கு மலர் தாவிப் பறக்கையிலும் இடம்மாறி அமர்கையிலும் ச்சீ...ச்சீஇஇ என்ற குரலில் கத்தும்.

இனப்பெருக்கம்: காலம்: ஜூன் முதல் செப்டம்பர் வரை; கூடு: வால் பேரிக்காய் உருவில் மேற்கோப்பு அமைந்த நுழை வாயிலோடு கூடிய கூட்டினை வேர், பாசி நூல் ஆகியன கொண்டு தாழ்வான புதரிலோ, காட்டாறுகளில் தாழ்ந்து வளைந்த சிமிறுகளிலோ தொங்கவிடும். முட்டை: 2 அல்லது 3; கிரீம் நிறங்கொண்ட அவை சிறு பழுப்புக் கறைகளோடு விளங்கும்.

439. சிலந்தி பிடிப்பான்

1931. Little Spider Hunter

Arachnothera longirostris longirostris (*Latham*)

தோற்றம்: சிட்டுக்குருவி அளவுள்ள இது சுமார் 15 செ. மீ. நீளம் இருக்கும்.



சிலந்தி பிடிப்பான்

நீண்டு வளைந்த அலகு கருப்பாக 3 செ. மீ. நீளம் இருக்கும. விழிப்படலம் பழுப்பு கால்கள் காரீய நிறம்.

தேன் சிட்டைப் போன்ற தோற்றம் கொண்ட இதன் உடலின் மேற்பகுதி ஆலிவ் பச்சையாக இருக்கும். மோவாயும் தொண்டையும் சாம்பல் நிறந் தோய்ந்த வெண்மை, மார்பும் வயிறும் மஞ்சள் நிறம். ஆணும் பெண்ணும் ஒன்று போல;

காணப்படும் இடங்கள்: மேற்குத் தொடர்ச்சி மலை சார்ந்த பகுதிகள் ஆங்காங்கே சமவெளி முதல் மலைகளில் 1500 மீட்டர் உயரம் வரை காணலாம்.

பழக்க வழக்கங்கள்: அடர்ந்த பசுங்காடுகளில் இணையாக இதனைக் காணலாம். மலைகளில் காடுகளில் இயற்கையாக வளர்ந்துள்ள வாழைத் தோட்டங்களிலும் தோட்டத் தொழிலாளர் குடியிருப்பைச் சார்ந்த வாழைத் தோட்டங்களிலும் வாழைப் பூவின் தேனினை உண்ண இது தவறாது வரும். முள்முருங்கை, புல்லுருவி முதலானவற்றைச் சார்ந்தும் காணலாம். பலவகை மரங்

களில் தேனோடு கூடப் புழுபூச்சிகள், சிலந்தி முதலியவற்றையும் உண்ணும்.

ச்சீஇ... ச்சீஇ என மரத்துக்கு மரம் பறக்கும் போது குரல் கொடுத்தபடி இருக்கும்.

இனப்பெருக்கம்: காலம்: பிப்ரவரி முதல் மே வரை; கூடு; வாழை இலைகளின் அடிப்பக்கத்தில், சிறு இலைகள், புல், தூசு துப்பு ஆகியன கொண்டு கோப்பை வடிவிலான கூடு அமைத்துக் கூட்டினைச் சிலந்தி நூல் முதலியன கொண்டு வாழை இலையோடு தைத்துக் கட்டி வைக்கும் வாழை இலை மேல் கூரைபோல் அமையும். கூட்டின் பக்கத்தில் நுழையும் துவாரம் இருக்கும். முட்டை: 2: சிலபோது 3; இளஞ்சிவப்பாக ஆழ்ந்த சிவப்புக் கறைகளோடு காட்சி தரும்.

Family: Zosteropidae
வெள்ளைக் கண்ணிகள்
(WHITE EYES)

440. வெள்ளைக் கண்ணி

1936, Indian White-Eye

Zosterops palpebrosa nilgiriensis (Ticehurst)

தோற்றம்: தேன் சிட்டை விடச் சிறியதானது.

அலகு பழுப்பு நிறமாகச் சற்று வளைந்திருக்கும்; விழிப்படலம் பழுப்பு நிறம்; கண்ணைச் சுற்றி நல்ல வெள்ளை வட்டம் அமைந்திருப்பது இதற்கு இந்தப் பெயர் வரக் காரணம். கால்கள் வெளிர் பழுப்பு நிறம்.



வெள்ளைக் கண்ணி

சிறிய இதன் உடலின் மேற்பகுதி பச்சை தோய்ந்த மஞ்சள் நிறமாக இருக்கும். மோவாய், தொண்டை, மார்பு ஆகியன நல்ல மஞ்சள். வயிறும் வாலடியும் நீலங்கலந்த வெண்மை நிறம் சதுரமான வால் கருப்பாகப் பச்சை நிற விளிம்புகளோடு காட்சி தரும்.

காணப்படும் இடங்கள்: தென்னிந்திய மலைகளில் 2500 மீட்டர் உயரம் வரை சாதாரணமாகக் காணலாம்.

பழக்க வழக்கங்கள்: சண்ணுடிக் குருவி என்ற தமிழ்ப் பெயராலும் வழங்கப்படும் இதனை நல்ல காட்டுப் பாங்கான பகுதிகளிலும், பழத் தோட்டங்கள், தோப்புக்கள், பூங்காக்கள் ஆகியவற்றிலும் காணலாம். 5 முதல் 20 வரையான கூட்டமாகத் திரியும் பழக்கமுடைய இது சிலபோது நூறு வரையான பெருங் கூட்டமாகத் திரள்வதும் உண்டு. மரக்கிளைகளிடையேயும், பறந்து இரைதேடியபடி இருக்கும் இவை தரையில் இறங்குவதில்லை பட்டாணிக் குருவியைப்போல தலை கீழாகவும் பக்கவாட்டிலும் தொங்கியபடி அரும்புகளுள்ளே ஆராய்ந்து பூச்சி புழுக்களைப் பிடிக்கும். இனப் பெருக்ககாலத்தில் ஆணும் பெண்ணுமான இணைகளாகச் சேர்ந்து பிரியும். ஓயாது ச்சீர், ச்சீர் எனக் கத்தியபடி இருக்கும்.

பூச்சி, புழுக்கள், பழங்கள் முதலியன இதன் உணவு.

இனப்பெருக்கம்: காலம்: பிப்ரவரி முதல் ஜூலை வரை; கூடு: இது சிறு கிளைகளுக்கிடையே நீண்டு செல்லும் கிளையின் வெளி ஓரத்தில் மாங்குயிலின் கூடு போன்ற கோப்பை வடிவிலான கூட்டினைத் தூசு, துப்பு, சிலந்தி நூல் ஆகியன கொண்டு அமைக்கும். கூடு தரையிலிருந்து 2 அல்லது 3 மீட்டர் உயரத்தில் இருக்கும். புதர்களிலும் கூடு அமைப்பது உண்டு முட்டை: 2 அல்லது 3; நீல நிறமாக இருக்கும்.

கிழக்குத் தொடர்ச்சி மலைசார்ந்த பகுதிகளில் காணப்படும் வெள்ளைக் கண்ணிகள் சற்று நிறம் மங்கி உடலின் மேற்பாகம் சற்று அதிக மஞ்சளாகவும் கீழ்ப்பாகம் அதிக வெண்மையாகவும் காணப்படுவதால் தனி உள்ளினமாக வகுக்கப் பட்டுள்ளது. Zasterops palpebrosa salimali என்ற இதன் அலகும் நீலகிரி வெள்ளைக் கண்ணியின் அலகைவிடச் சற்று நீளங் குறைந்தது.

Family: Ploceidae

Sub-Family: Passer

சிட்டுக் குருவிகள்
(SPARROWS)

441. சிட்டுக் குருவி

1938. Indian House-Sparrow

Passer domesticus indicus (Jardine & Selby)

தோற்றம்: கொண்டைக் குருவியை விடச் சிறியது சுமார் 15 செ மீ நீளமிருக்கும்.

அலகு கருப்பு; கால்கள் லேசான பழுப்பு; விழிப்படலம் வெளிர் பழுப்பு நிறம்.

ஆண்: தலை, பிடரி, முதுகு வால்மேல் போர்வை இறகுகள் ஆகியன கருஞ்சாம்பல் நிறமாக சற்றுப் பழுப்புத் தோய்ந்து காணப் படும். மேல் முதுகும் இறக்கைகளும் இடையிடையே கரும் பழுப்புக் கோடுகள் கொண்ட செம்பழுப்பு நிறம். மோவாய், தொண்டை மார்பு ஆகியன கருப்பு நிறம். கண்களிலிருந்து பிடரி வரி செம்பழுப்புப் பட்டைக்கோடுகள் வரக் காணலாம். வயிறும் வாலடியும் அழுக்கு வெள்ளை.

பெண்: உருவில் சற்றுச் சிறியது. உடலின் மேற்பகுதி வெளிர் பழுப்பாகவும்: முதுகும் தோள்பட்டையும் லேசான கருஞ் சிவப்பாகக் கருப்புக் கோடுகளோடும் காண சிதரும். கண்ணின் மேல் லேசான வெண்கோடு இருக்கும். உடலின் கீழ்ப்பகுதி சாம்பல் நிறம் தோய்ந்த வெண்மை.

காணப்படும் இடங்கள்: தென்னிந்தியா முழுதும் மலைகளிலும் சமவெளிகளிலும் மிகுதியாகக் காணப்படும் பறவை இதுவே.

பழக்க வழக்கங்கள்: மனிதர்கள் வாழுமிடங்களிலெல்லாம் மனிதர்களைச் சார்ந்து வாழ்வது. சிறு கிராமங்கள், பெரு நகரங் கள், காடுகளிலுள்ள வாழ்விடங்கள் என்ற வேறுபாடின்றி எங்கும் காணப்படுவது வேறுபாடின்றிக் கிடைப்பதை யெல்லாம் தின்று வாழக்கூடியது. சிலபோது பெருங் கூட்டமாகத் திரளும். மாலையில் இந்தக் கூட்டங்கள் இலைகள் மிகுந்த மரங்களில் சென்று அடை யும். இனப்பெருக்கம் செய்யும் காலங்களில் இணை இணையாகப் பிரிந்து வாழும்.

தானியங்கள், புழு பூச்சிகள், முளைகள், மலர்களில் தேன் இளந்துளிர்கள், சோற்றுப் பருக்கை முதலிய வீட்டுக் கழி பொருள் கள் ஆகிய எல்லாவற்றையும் தின்னும்.

ட்சிஇ ட்சிஇ இட்சிஇ என்று ச்சீர், ச்சீர் என்றும் கத்தும்.

இனப்பெருக்கம்: காலம்: பெரும்பாலும் ஆண்டு முழுதும். கூடு: வீட்டுக் கூரை, சுவர்ப் பொந்துகள், விளக்குக் கம்பங்களில் உள்ள மூடியின் துணை, தந்திக் கம்பிகளின் மேலே உள்ள பொந்து ஆகிய பல இடங்களிலும், புல், வைக்கோல், குப்பை கூளம் ஆகி யன கொண்டு கூடு அமைத்துக் கொள்ளும். முட்டை: 3 முதல் 5 வரை; வெளிர் பசுமை தோய்ந்த வெண் நிறம். பழுப்புக் கறை களும் சிறு கோடுகளும் காணப்படும்.

442. மஞ்சள் தொண்டை சிட்டுக் குருவி
1949. Yellowthroated Sparrow
Petronia xanthocollis xanthocollis (*Burton*)

தோற்றம்: சிட்டுக்குருவி அளவுள்ள இது சுமார் 15 செ. மீ. நீளமிருக்கும்.

அலகு கருப்பு; கால்கள் சாம்பல் பழுப்பு; விழிப்படலம் வெளிர் பழுப்பு நிறம்.

உடலின் மேற்பகுதி வெளிர் பழுப்பாக இருக்கும். தோள் பட்டையும் சிறு சிறகுப் போர்வை இறகுகளும் செம்பழுப்பு நிறம். இறக்கைகள் இரண்டு வெண்பட்டைகளோடு கூடிய பழுப்பு நிறம்; மோவாயும் வாலடியும் தூய வெண்மை; வயிறும் மார்பும் சாம்பல் தோய்ந்த வெண்மை. தொண்டை நடுவிடம் நல்ல மஞ்சள் நிற மாக இருக்கும். பெண்ணின் தோள் பட்டைச் செம்பழுப்பும், தொண்டை மஞ்சளும் சற்று மங்கிக் காணப்படும்.

காணப்படும் இடங்கள்: தென்னிந்தியா முழுதும் காணலாம். மலைகளில் 1500 மீட்டர் உயரம் வரை காணப்படும்.

பழக்க வழக்கங்கள்: சிட்டுக் குருவிகளைப் போல் நகரங்களி லும் கிராமங்களிடையேயும் மக்கட் பழக்கத்திடையே கலந்து வாழ விரும்பாமல் ஊர் புறங்களில் ஒதுக்கமாகத் திரிவது. திறந்த வெளிக் காடுகளிலும் இலையுதிர் காடுகளிலும் காணலாம்.

குரலும் உணவு முறையும் சிட்டுக்குருவியைப் போலவே.

இனப்பெருக்கம்: காலம்: எப்ரல் முதல் ஜூலை வரை. கூடு: மரங்கொத்தி, குக்குறுவான் போன்றவற்றின் பழைய பொந்து களிலும் மின்சார விளக்கு மூடியின் புழையிலும் புல், வேர், தூவி கள் முதலியவற்றைக் கொண்டு கூடு அமைக்கும். முட்டை: 3 அல்லது 4; ஆழ்ந்த பழுப்புக் கறைகள் கொண்ட நீலந் தோய்ந்த பசுமை நிறங் கொண்டதாக இருக்கும்.

Sub-Family: Ploceinae

தூக்கணாங் குருவிகள்
(WEAVER BIRDS)

443. தூக்கணாங் குருவி
1951. Baya or Weaver Bird
Ploceus philippinus philippinus (*Linnaeus*)

தோற்றம்: சிட்டுக்குருவியின் அளவுள்ள இது சுமார் 15 செ மீ. நீளம் இருக்கும்.

அலகு கொம்பு நிறமாக இருக்கும். குளிர்காலத்தில் அடி அலகின் கீழ்ப்பகுதி மஞ்சளாக இருக்கும்; விழிப்படலம் பழுப்பு; கால்கள் ஊன் நிறமாக இருக்கும்.



தூக்கணாங் குருவி

ஆண் இனப்பெருக்கக் காலத்தில்: தலையும் பிடரியும் மார்பும் பொன் மஞ்சளாக இருக்கும். கண்ணின் முன்னிடம், மோவாய், காதுப்பகுதி தொண்டை, உடலின் மேற்பகுதி ஆகியன ஆழ்ந்த பழுப்பாக இருக்கும். முதுகிலும் தோள்பட்டையிலும் மஞ்சள் கோடுகளைக் காணலாம். இறக்கைகளிலும் வாலிலும் சிவப்புத் தோய்ந்த மஞ்சள் முனைகள் காணலாம். வயிறும் வாலடியும் செம்மஞ்சளாக இருக்கும்.

இனப்பெருக்கம் செய்யாத குளிர்காலத்தில்; ஆணும் ஆண்டு முழுதும் பெண்ணும் உடலின் பேர்பகுதி முழுதும் செம்மஞ்சளாக ஆழ்ந்த பழுப்புக் கோடுகளோடு காட்சி தரும். தலையின் பக்கங்கள் செம்மஞ்சள் தோய்ந்த பழுப்பாக இருக்கும். புருவப் பகுதியும் உடலின் கீழ்ப்பகுதியும் செம்மஞ்சளாக இருக்கும். மோவாய், தொண்டை, வயிறு ஆகியன மார்பைவிடச் சற்று வெளிரிக் காணப்படும். இறக்கைகளும் வாலும் பழுப்பு விளிம்புகளோடு கூடிய செம்மஞ்சளாக இருக்கும்.

காணப்படும் இடங்கள்: தென்னிந்தியா முழுதும் சமவெளிகளில் விளை நிலங்களைச் சார்ந்து காணலாம். கரும்பு நெல்விளையும் மருத நிலம் சார்ந்த பகுதிகளில் தோட்டங்களிலும் தானியங்கள் விளைந்திருக்கும்போது பெருங் கூட்டமாக வரும்.

பழக்க வழக்கங்கள்: பெருங் கூட்டமாகவும் சிறு கூட்டமாகவும் விளைந்து நிற்கும் தானியங்கள் வந்து விழும். தரையில் புல் விதைகளைப் பொறுக்குவதும் உண்டு. பெரிதும் தானியங்களையே உண்ணும் இவை புழுக்களையும் மலர்த் தேனையும் உண்பதும் உண்டு கூட்டில் வளரும் குஞ்சுகளுக்கு மென்மையான புழுக்களையே ஊட்டக் காணலாம். இனப்பெருக்கக்காலத்தில் கூடு கட்டும் ஆண்கள் ஒரே ஆரவாரத்தோடு இறக்கைகளை அடித்துக் கொண்டு பல வகைக் குரலில் ஒலி கொடுக்கும். மற்ற சமயங்களில் சிட்டுக்

குருவியைப்போலச் சிட், சிட், சிட் எனச் சிறு குரலில் கத்தக் கேட்கலாம்.

இனப்பெருக்சம் : காலம் : மே முதல் செப்டம்பர் முடிய; கூடு : நீராகே நிற்கும் சருகேல பரங்கள், தென்னை, பனை ஈச்ச பரங்கள் ஆகியவற்றில் இதன் கூடுகளைக் காணலாம். தென்னை ஓலையில் நார், நெல் தோகையின் நார் ஆகியவற்றைக் கொண்டு உருண்டை வடிவில் நீண்ட நுழைவாயிலோடு கூடிய தொங்கும் கூட்டினை ஆண் பறவை அழகாகப் பின்னி அமைக்கும். பெரும்பாலும் கூடுகள் மரத்தில் கிழக்கு நோக்கிச் செல்லும் கிளைகளில் தொங்கக் காணலாம். முட்டை : 2 முதல் 4 வரை: வெண்மையாகக் காட்சி தரும். ஆண் பல பெண் பறவைகளை ஒரே சமயத்தில் துணையாகக் கொண்டு வாழக் காணலாம்.

(Ploceus philippinus travancoreensis என்ற உள்ளினம் பேற்குத்தொடர்ச்சி மலைசார்ந்த மழைமிகுந்த பகுதிகளில் காணப்படுகிறது இதன் உடலின் மேல் தோற்றமும் பக்கங்களும் ஆழ்ந்த பழுப்பு நிறங் கொண்டதாக இருக்கக் காணலாம்.)

444. கருங்கோட்டு மார்புத் தூக்கணாங் குருவி
1972. Streaked Weaver Bird
Ploceus manyar flaviceps (Lesson)

தோற்றம் : சிட்டுக்குருவி அளவுள்ள இது சுமார் 15 செ. மீ. நீளம் இருக்கும்.

அலகு கொம்புப் பழுப்பு நிறம்; விழிப்படலம் ஆழ்ந்த பழுப்பு; கால்கள் பழுப்புத் தோய்ந்த ஊன் நிறம்.

எல்லாப் பருவங்களிலும் ஆணும் பெண்ணும் தெளிவாகத் தெரியும் கருப்பு நிறக்கோடுகளோடு கூடிய செம்மஞ்சள் நிற மார்பினை உடையனவாக இருக்கும். ஆணுக்கும் பெண்ணுக்கும் இனப்பெருக்கக் காலத்தில் சிறிது வேறுபாடு உண்டு. அப்போது ஆணின் தலை உச்சியின் கருப்பு நிறம் மட்டும் பொன்னிறமாக மஞ்சளாக மாறும். மற்றபடி இது தோற்றத்தில் முன்னதைப் போன்றே காட்சி தரும்.

காணப்படும் இடங்கள் : தென்னிந்தியா முழுதும் ஆங்காங்கே சமவெளிகளில் நீர்வளமிக்க இடங்களில் காணலாம்.

பழக்க வழக்கங்கள் : நீர்வளமிக்க பகுதிகளில் ஏரிகளின் கரைகளில் உள்ள நாணற்புதர்களிலும். ஆற்றங்கரை சார்ந்த

பகுதிகளிலும் கூட்டமாகத் திரியக் காணலாம். வறண்ட பகுதிகளில் காணப்படுதல் இல்லை. மற்றபடி இதன் பழக்க வழக்கங்கள் முந்தைய தூக்கணாங்குருவியின் உடையதைப் போன்றதே.

இனப்பெருக்கம் :காலம்: மே முதல் நவம்பர் முடிய கூடு: முன்னதைப் போல; முட்டை: முழுதும் முன்னதை ஒத்திருக்கக் காணலாம்

Sub-Fami!y: Estrilidine

தினைக் குருவிகள்

(MUNI ꜝS)

445. வெண்தொண்டைத் தினைக்குருவி

1;66. Whitethroated Munia

Lonchura malabarica malabarica (Linnaeus)

தோற்றம்: சிட்டுக் குருவியை விடச் சிறியதான இது சுமார் 1: செ. மீ. நீளம் இருக்கும்.

அலகு நீலந் தோய்ந்த கொம்பு நிறம்; விழிப்படலம் பழுப்பு; கால்கள் கருஞ்சாம்பல் நிறம் தோய்ந்த இளஞ்சிவப்பாக இருக்கும்.

உடலின் மேற்பகுதி முழுதும் மண் பழுப்பாக இருக்கும் நெற்றியும், தலை உச்சியும் சற்று ஆழ்ந்த நிறங்கொண்டிருக்கும். வால் கருப்பாக முனை குவிந்து இருக்கும். பருத்த கூம்பு வடிவான நீலநிற அலகினைக் கொண்டும் வெள்ளைப் பட்டத்தினைக் கொண்டும் இதனை எளிதாக அடையாளம் காணலாம். உடலின் கீழ்ப் பகுதி முழுதும் வெண்மையாக இருக்கும்.

காணப்படும் இடங்கள்: தென்னிந்தியா முழுதும் ஆங்காங்கே சமவெளிப் பகுதிகளில் வறண்ட முள்மரங்கள் நிறைந்த இடங்களைச் சார்ந்து திரியக் காணலாம். மற்ற தினைக்குருவிகளோடு கலந்து காணப்படுவதும் உண்டு. கிழக்குத்தொடர்ச்சி மலைசார்ந்த பகுதிகளில் மலைகளில் 1000 மீட்டர் உயரம் வரை காணலாம். நீர் வளம் மிகுந்த கேரளப் பகுதிகளில் காணப்படுவதில்லை.

பழக்க வழக்கங்கள்: மனிதர் வாழ்விடங்களைச் சார்ந்தும் இலையுதிர்காடுகளிலும் கூட்டமாகக் காணலாம். 15 முதல் 20 பறவைகள் முள்மரங்களில் காலை நேரங்களில் உயர உட்கார்ந்திருக்கக் காணலாம். தரையிலிறங்கி மற்ற தினைக்குருவிகளோடு சேர்ந்து

ஆரவாரம் செய்தபடி இரைதேடும் இது மனிதர்களைக் கண்டவுடன் கூட்டமாக எழுந்து மீண்டும் மரங்களில் சென்று அமர்ந்து கொள்ளும். மேலும் கீழுமாக விழுந்து எழுந்து பறக்கக் காணலாம்.

இனப்பெருக்கம் காலம்: ஆண்டு முழுதும்; கூடு: புல்லால் நுழைவாயிலோடு கூடிய உருண்டை வடிவான கூடு அமைத்து உட்புறத்தை மென் புல் மலர்களால் மெத்தென ஆக்கும். முள்மரங்களில் கூடுகளைக் காணலாம். முட்டை: 4 முதல் 8 வரை; வெண்மை நிறங் கொண்டவை.

446. வெண்முதுகுத் தினைக்குருவி

1968. Whitebacked Munia

Lonchura Striata Striata (Linnaeus)

தோற்றம்: சிட்டுக்குருவியை விடச் சிறிய இது சுமார் 12 செ. மீ. நீளம் இருக்கும்.

மேல் அலகு சிலேட் பழுப்பு; கீழ் அலகு சிலேட் நீலம்; விழிப்படலம் செம்பழுப்பு; கால்கள் ஈய நிறம்.

தலை, தொண்டை, மார்பு ஆகியன கருப்பு நிறமாக இருக்கும். உடலின் மேற்பகுதி சாக்லெட் பழுப்பாக சிறுவெண்கோடுகளோடு காட்சி தரும் இறக்கைகளும் வாலும், கருப்புத் தோய்ந்த சாக்லெட் நிறமாக இருக்கும் பிட்டத்தில் ஒரு வெண்பட்டைக் காணலாம் கீழ் மார்பும் வயிறும் வெண்மையாக இருக்கும்

காணப்படும் இடங்கள் தென்னிந்தியா முழுதும் ஆங்காங்கே இலையுதிர்காடுகளைச் சார்ந்து திரியக் காணலாம் கிழக்குக் கடற்கரை சார்ந்த பகுதிகளைவிட மேற்குக்கடற்கரைப் பகுதிகளில் கூட்டமாகக் காணலாம். மலைகளில் 1000 மீ. உயரம் வரை காணப்படும்.

பழக்க வழக்கங்கள்: 10 முதல் 15 வரையான கூட்டமாகத் திரியும் இது ஒன்றிரண்டு தனித்துக் கருந்தலைத் தினைக்குருவிகளின் கூட்டத்தோடு கலந்தும் திரியக் காணலாம். கருந்தலைத் தினைக்குருவியைப் போல நீர்வளம் மிகுந்த இடங்களை இது அதிகம் விரும்புவதில்லை. தரையில் அமர்ந்து கூட்டமாகப் புல் விதைகளைக் கசமுச எனச் சப்தமிட்டபடியே பொறுக்கித் தின்னும் இவை மனிதர்களைக் கண்டவுடன் மரங்களில் தாவிப் பறந்து அமர்ந்து கொள்ளும்.

இனப்பெருக்கம்: காலம்: மே முதல் செப்டம்பர் முடிய; கூடு: புல்லால் நுழைவாயிலோடு கூடிய உருண்டை வடிவான கூட்டினை முட்புதர்களில் அமைக்கும். தென்னை மரங்களில் திருடர்கள் ஏறுவதைத் தடுக்கச் சுற்றிலும் வைத்துக் கட்டப்படும் முட்புதர்களில இது அடிக்கடி கூடு கட்டக் காணலாம். முட்டை: 5 முதல் 6 வரை; தூய வெண்மை நிறங்கொண்டவை.

447. கருஞ்சிவப்பு வயிற்றுத் தினைக்குருவி

1971. Rufous bellied Munia

Lonchura kelaarti jerdoni (Hume)

தோற்றம்: சிட்டுக் குருவியை விடச் சற்றுச் சிறிய இது சுமார் 13 செ. மீ. நீளம் இருக்கும்.

அலகின் அடிப்பகுதி நீலமாகவும் எஞ்சிய பகுதி ஆழ்ந்த கொம்புப் பழுப்பு நிறமாகவும் இருக்கும். விழிப்படலம் பழுப்பு; கால்கள் பசுமை தோய்ந்த ஈயநிறம்.

தலை ஆழ்ந்த பழுப்பு நிறம்; உடலின் மேற்பகுதி சாக்லெட் பழுப்பு நிறமாக வெளிர் கோடுகளோடு காட்சி தரும். உடலின் கீழ்ப்பகுதி இளஞ்சிவப்புத் தோய்ந்த பழுப்பாக இருக்கும். கன்னங்கள், மோவாய், தொண்டை. மேல் மார்பு ஆகியவை சற்றுக் கருப்புத் தோய்ந்து காணப்படும். பிட்டம் ஆழ்ந்த பழுப்பாக இருக்கும். வால் மேற்போர்வை இறகுகள் பளபளப்போடு கூடிய செம்மஞ்சளாக இருக்கும். ஆணும் பெண்ணும் ஒன்று போல.

காணப்படும் இடங்கள்: மேற்குத் தொடர்ச்சி மலை சார்ந்த பகுதிகளில் சமவெளி முதல் மலைகளில் 1000 மீ. உயரம் வரை காணலாம். பழநி, நீலகிரி, குடகுமலைகளில் கிழக்குத் தொடர்ச்சி மலை சார்ந்த பகுதிகளிலும் காணலாம்.

பழக்க வழக்கங்கள்: மற்ற தினைக்குருவிகளைப் போலன்றி ஒரு சில பறவைகள் சேர்ந்த சிறு கூட்டமாகவே இவை மலை சார்ந்த பகுதிகளில் திரியக் காணலாம். நெல்லடிக்கும் களங்களைச் சார்ந்த பகுதிகளில் திரியக் காணலாம். நெல்லடிக்கும் களங்களைச் சார்ந்தும் புல்நிலங்களிலும் தானியங்களையும் புல்விதைகளையும் பொறுக்கக் காணலாம். மலைப்பகுதிகளைச் சார்ந்த வயல்வெளிகளில் களங்களில் இவை கூட்டமாகக் காணப்படும் மற்றபடி இதன் பழக்க வழக்கங்கள் பிற தினைக்குருவிகளைப் போன்றனவே.

இனப்பெருக்கம்: காலம்: மார்ச் முதல் ஆகஸ்ட் முடிய; கூடு: மரப்பொந்துகளிலோ, புல்லிடையேயோடு புல்லால் உருண்டை

யான கூடு அமைத்து உட்புறத்தைத் தூவி சிறுபுல் ஆகியவற்ருல் மெத்தென ஆக்கும். முட்டை: 6 முதல் 8 வரை; வெண்மையாகக் கறைகள் ஏதுமின்றிக் காணப்படும்.

448. பொரிப்புள்ளித் தினைக்குருவி
1974 Spotted Munia
Lonchura punctulata punctulata (Linnaeus)

தோற்றம்: சிட்டுக்குருவியை விடச் சிறிய இது சுமார் 13 செ. மீ. நீளம் இருக்கும்.

அலகு சிலேட் கருப்பாகவும். அடிப்பகுதி நீலந் தோய்ந்த சாம்பல் நிறமாகவும் இருக்கும். விழிப்படலம் ஆரஞ்சுப்பழுப்பு நிறம் கால்கள் நீலந் தோய்ந்த சிலேட் நிறம்.

உடலின் மேற்பகுதி சாக்லெட் நிறமாக இருக்கும். மோவாய் தொண்டை, தலை ஆகியன நல்ல துருப் பழுப்பு நிறமாக இருக்கும். பிட்டமும் வெண்மையும் கருப்புமான சிறு கோடுகளோடு காட்சி தரும். உடலின் கீழ்ப்பகுதி கருப்பாக இடையே பொரி பொரித்ததைப் போன்ற சிறு சிறு வெண்கோடுகள் நிறைந்து காணப்படும்.

இனப்பெருக்கம் செய்யாத காலத்தில் சற்று நிறம் மங்கிக் காணப்படும்.

காணப்படும் இடங்கள்: தென்னிந்தியா முழுவதும் சமவெளிப் பகுதி முதல் மலைகளில் 2000 மீ. உயரம் வரை காணலாம்.

பழக்க வழக்கங்கள்: வயல் வெளிகளிலும் மூங்கிற் புதர்களிலும் பெருங் கூட்டமாகக் காணப்படும் தினைக்குருவி இதுவே. மூங்கிலில் நெல் விளையும் காலங்களில் காலையில் கூட்டமாக மேயக் காணலாம். நெல் வயல்களில் 100 முதல் 500 வரையான பறவைகள் பெருங் கூட்டமாக அமர்ந்து நெல்லைத் தின்றபடி இருக்கும். மனிதர் நெருங்கியவுடன் இறக்கைகள் பெரும் இரைச்சல் உண்டாக்கக் கூட்டமாக எழுந்து அருகில் இருக்கும் மரங்களிலோ வயல்களின் மேல் செல்லும் மின்சாரக் கம்பிகளிலோ அமர்ந்து கொள்ளும். வெண் முதுகுத் தினைக்குருவி, கருந்தலைத் தினைக் குருவி, வெண் தொண்டைத் தினைக்குருவி ஆகிய ஒரு சில எப்போதும் இவற்றின் கூட்டத்தில் சூழலுக்கு ஏற்பக் கலந்திருக்கக் காணலாம். அறுவடை முடிந்த வயல்களில் நெடு நாட்கள் சென்ற பின்னும் எஞ்சிய மணிகளை இவை வந்து பொறுக்கித் தின்னக் காணலாம். புல்

வெளிகளில் புல் விதைகளை மற்றப் பருவங்களில் உணவாகக் கொள்ளும்.

இனப்பெருக்கம் : காலம் : பொதுவாக ஆண்டு முழுதும் சிறப்பாக ஏப்ரல் முதல் அக்டோபர் முடிய ; கூடு : புல்லால் சற்றுப் பெரிய உருண்டை வடிவான கூட்டினை நுழை வாயிலோடு கூடியதாக அமைக்கும். மூங்கிற் புதர், முட்புதர், ஈச்ச மரம், பனைமரம் ஆகியவற்றில் இதன் கூடுகளைக் காணலாம். குன்னூரில் பெரிய ஊசியிலை மரங்களில் அருகருகே மிக உயரத்தில் இவை சிம்ஸ் பார்கில் கூடு அமைக்கின்றன. முட்டை : 4 முதல் 7 வரை வெண்மை நிறங்கொண்டவை.

449. சிவப்புத் தினைக்குருவி

19.4. Red Munia

Amandava amandava (*Linnaeus*)

தோற்றம் : சிட்டுக் குருவியை விட அளவில் மிகச் சிறியது சுமார் 10 செ. மீ. நீளம் இருக்கும்.

அலகு சிவப்பு ; விழிப்படலம் ஆரஞ்சுச் சிவப்பு ; கால்கள் ஊன் நிறம்.

இனப் பெருக்கஞ் செய்யாத காலத்தில் ஆணும் பெண்ணும் உடல் முழுதும் மேலும் கீழும் பழுப்பு நிறமாக இடையிடையே வெண் புள்ளிகளோடு காணப்படும். வால் பகுதியும் வயிறும் வாலடியும் சற்றுக் கருப்புத் தோய்ந்து காணப்படும். இனப்பெருக்க காலத்தில் ஆணின் தலை, கழுத்து, முதுகு, வால்மேற் போர்வை இறகுகள், மோவாய் தொண்டை ஆகியன நல்ல குங்குமச் சிவப்பாக மாறும்.

காணப்படும் இடங்கள் : தென்னிந்தியாவில் மலைகளில் 2000 மீ. உயரம் வரை இவற்றைக் கூட்டமாகத் தாராளமாக மற்ற தினைக்குருவிகளோடு கலந்து திரியக் காணலாம். கேரளத்தில் காணப்படுதல் இல்லை. சமவெளிகளில் மிக அபூர்வமாகக் காண லாம். நீலகிரி, பழநி, மைசூர் மலைப்பகுதிகளில் காணப்படுகிறது

பழக்க வழக்கங்கள் : புதர்காடுகளிலும், புல் நிலங்களிலும், மலைப்பக்கங்களிலும் கூட்டமாகவும் மற்றத் தினைக்குருவிகளோடு கலந்தும் திரியக் காணலாம். ஈரமிகுந்த புல் நிலங்களில் புல் விதைகளைப் பொறுக்கித் தின்னும் இதனை கூடுகளில் விரும்பி

வ ர்க்கின்றன. இனப்பெருக்க காலத்தில் ஆண் சிறு குரலில் தொடர்ந்து கத்தியபடி இருக்கும்.

இனப்பெருக்க காலம்: மே முதல் செப்டம்பர் முடிய: கூடு: புல்லால் புதர்களிலோ உயர வளர்ந்த புல்லிடையேயோ உருண்டையான கூட்டினை அமைத்து மென் புல்லாலும் தூவிகளாலும் மெத்தை ஆக்கும். தரையிலிருந்து 4 மீ. உயரத்திற்குள்ளாகக் கூடுகளைக் காணலாம். முட்டை: 3 முதல் 7 வரை; தூய வெண்மை நிறங்கொண்டவை. ஆணும் பெண்ணும் மற்றத் தினைக்குருவிகளைப் போலவே குடும்பப் பொறுப்பேற்கும்.

450. கருந்தலைத் தினைக்குருவி

1378. Blackhead Munia

Lonchura malacca malacca (Linnaeus)

தோற்றம்: சிட்டுக்குருவியை விடச்சிறிய இது சுமார் 13 செ.மீ. நீளம் இருக்கும்.

அலகு பசுமை தோய்ந்த நீலம்; விழிப்படலம் பழுப்பு; கால்கள் சிலேட் நிறம்.

தலை, கழுத்து, மேல் மார்பு, கீழ் வயிறு வாலடி, தொடை, வாலடிப் போர்வை இறகுகள் ஆகியன கருப்பு; முதுகு செம்பழுப்பு நிறம், வால் மேல் போர்வை இறகுகள் பிட்டம், வால் விளிம்புகள் ஆகியன பளபளக்கும் நல்ல செம்பழுப்பாக இருக்கும். வயிற்றின் பக்கங்கள், மேல் வயிறு கீழ் மார்பு ஆகியன வெண்மை.

காணப்படும் இடங்கள்: தென்னிந்தியா முழுவதும் சமவெளிகளில் ஆங்காங்கே நீர்வளம் மிகுந்த பகுதிகளிலும் உப்பங்கழி சார்ந்த பகுதிகளிலும், நீர் நிறைந்த வயல் வெளிகளை அடுத்தும் காணலாம். மற்ற தினைக்குருவிகளோடு ஒன்றிரண்டு கலந்தே தமிழ் நாட்டில் காணப்படுகிறது.

பழக்க வழக்கங்கள்: பதினைந்து வரையான சிறு கூட்டமாக நாணற்புதர் பெரும்புல் ஆகியன வளர்ந்துள்ள சதுப்பு நிலங்களில் மேய்ந்து கொண்டிருக்கக் காணலாம். எழுந்து பறக்கும்போது சிறு குரலில் கத்தும். பிற பழக்க வழக்கங்கள் மற்ற தினைக்குருவிகளைப் போன்றனவே.

இனப்பெருக்கம் : காலம் : ஜூலை முதல் அக்டோபர் முடிய ; கூடு : புல்லால் பந்து வடிவில் புல், புதர் ஆகியவற்றிடையே கூடு அமைத்து மென் புல்லால் மெத்தென ஆக்கும். முட்டை : 4 முதல் 7 வரை ; வெண்மை நிறங் கொண்டவை.

Family : Fringillidae

Sub-Family : Carduelinae

ரோசா பிஞ்சுகள்
(ROSEFINCHES)

451. ரோசா பிஞ்சு

2011. Common Indian or Hodgson's Rose Finch

Carpodacus crythrinus roseatus (Blyth)

தோற்றம் : சிட்டுக் குருவி அளவுள்ள இது சுமார் 85 செ. மீ. நீளம் இருக்கும்.

அலகும் கால்களும் கொம்பு நிறமான பழுப்பு; விழிப்படலம் பழுப்பு நிறம்.

ஆண் : பொதுத் தோற்றத்தில் சிட்டுக்குருவியை ஒத்த இதன் தலை, மார்பு, முதுகு தோள்பட்டை ஆகியன ரோஜா நிறச் சிகப்பாக இருக்கும். வயிறும் வாலடியும் மங்கிய ரோஜா நிறந் தோய்ந்த வெண்மையாக இருக்கும். இறக்கைகளும் வாலும் பழுப்பு நிறம்.

பெண் : உடலின் மேற்பகுதி ஆலிவ் பழுப்பு நிறமாக ஆழ்ந்த பழுப்பு நிறக்கோடுகளோடு காட்சி தரும். பிட்டமும் வால் மேற் போர்வை இறகுகளும் சற்றுப் பொன் நிறம் தோய்ந்து காணப் படும். உடலின் கீழ்ப்பகுதி வெளிர் பழுப்பாக இருக்கும். மோவாய், தொண்டை, வயிறு, வாலடி ஆகியன சற்று வெண்மையாக இருக்கும். மார்பிலும் பக்கங்களிலும் ஆழ்ந்த பழுப்பு நிறக் கோடு கள் காணலாம்.

காணப்படும் இடங்கள் : குளிர்காலத்தில் வடக்கே இமயமலைப் பகுதிகளிலிருந்து வலசை வரும் இவற்றைத் தென்னிந்திய மலை

களில் ஆங்காங்கே 2000 மீ. உயரம் வரையிலும் காணலாம். வடக்கே இருந்து வலசை வரும் இவை தென்னிந்தியாவில் தென் கேரளத்திலும் தென் தமிழ் நாட்டிலும் மிக அபூர்வமாகவே காண லாம். மைசூர் ஆந்திராப் பகுதிகளிலும் தமிழ் நாட்டில் நீலகிரி பழநிமலைப் பகுதிகளிலும் ஓரளவு காணலாம்.

பழக்க வழக்கங்கள் : 10 முதல் 20 வரையான சிறு கூட்டமாக மூங்கிற் காடுகளிலும், லாண்டானு புதர்களிலும் காணலாம். மூங்கில் நெல், தானியங்கள் முதலியவற்றோடு சிறு பழங்களையும் கொட்டைகளையும் உணவாகக் கொள்ளும் இது காபித் தோட்டங் களில் முள் முருக்கைத் தேனினையும் அம் மலர் மலரும் பருவத்தில் விரும்பிக் குடிக்கும்.

ஆடியோடி இரை தேடும்போது டூஇ—டூஇ எனக் கேள்வி கேட்பது போலக் கத்தும்.

இனப்பெருக்கம் : இமயமலைப் பகுதிகளில்.

மேற்கோள் நூற்பட்டியல்

Ali, Salim : *Book of Indian Birds*

Ali, Salim : *Indian Hill Birds*

Ali, Salim : *Birds of Kerala*

Ali, Salim and S. Dillion Ripley : *Handbook of the Birds of India and Pakistan*, Vol. I to VI

Baker H.R. and Inglis M. : *The Birds of South India*

Badshah, M. A. : *Check List of Birds of Tamil Nadu*

Henry G. M. : *A Guide to the Birds of Ceylon*

Krishnan M. : *The Vedanthangal Sanctuary for Water Birds*

Journal of Bombay Natural History Society Volumes.

கலைச்சொல் அகராதி

(ஆங்கிலம்—தமிழ்)

Abdomen	—	வயிறு
Adult Bird	—	இறக்கை முளைத்த பறவை
Alar	—	இறக்கையோடு தொடர்புடைய
Back	—	முதுகுப் புறம்
Bill	—	அலகு
Billing	—	அலகிணைத்தல்
Breeding	—	இனப்பெருக்கம்
Breeding Season	—	இனப்பெருக்கக் காலம்
Bridled	—	கண்சூழ் வளைய அமைப்புடைய
Brood	—	குஞ்சுகள் (இளஉயிரிகள்)
Brood Spots	—	தூவியற்ற வயிற்றுப்பகுதி
Buccal	—	வாய் சார்ந்த
Caudal	—	வால் தொடர்பான
Cere	—	செர்ரே
Cervical	—	கழுத்தைச் சார்ந்த
Cheek	—	கன்னம்
Chest	—	மார்பு
Chin	—	மோவாய்
Clutch	—	முட்டைகளின் தொகுதி
Clutch size	—	முட்டைகளிடும் அளவு
Contour feathers	—	உருவத் தூவி
Crest	—	தொண்டை
Crop	—	தீனிப் பை

Crown — உச்சந்தலை
Dispersion — பரவுதல்
Distraction display — போக்குக் காட்டல்
Dorsal — முதுகுப் பக்கம்
Down (feather) — மென் தூவி
Drive — உந்தல்
Ear coverts — காது மூடு தூவிகள்
Egg tooth — முட்டைப்பல்
Endemic — பகுதிக்குரிய
Exotic — புறத்திருந்து புகுந்த
Feathers — இறகுகள்
Fledging — பறக்கத் தொடங்கிய குஞ்சு
Flight — பறத்தல்
,, flapping — சீராக இறக்கை அடித்துப் பறத்தல்
,, gliding — சீராக மிதந்து பறத்தல்
,, hovering — வேகமாக இறக்கை அடித்துப் பறத்தல்
,, soaring — வெப்பக் காற்றில் மிதந்து பறத்தல்
,, tumbling — தடுமாறிப் பறத்தல்
,, undulating — எழுந்து விழுந்து பறத்தல்
Forehead — நெற்றி
Foreneck — முன் கழுத்து
Frontal - நெற்றித் தொடர்பான
Gape — அலகிடைப் பிளப்பு
Genus — பேரினம்
Geographical race — புவியியல் அடிப்படைத் தொகுதி
Gular — தொண்டை தொடர்பான
Hackles — கழுத்தில் தொங்கும் இறகுகள்
Imitation song — போலியாகப் பாடுதல்
Incubate — அடைகாத்தல்
Instinct — உள்ளுணர்வு
Iris — விழிவண்ணப் படலம்
Juvenile bird — இறக்கை முளைத்த குஞ்சு
Lobes — கதுப்பு

Lores — கண் அலகிடைப் பகுதி
Lunate — பிறை வடிவான
Mantle — தோள்பட்டை சார்ந்த பகுதி
Migration — வலசை போதல்
Monogamous — ஒரு துணையையுடைய
Moult — புதிய இறகுகள் முளைத்தல்
Nape — பிடரி
Nidicolous — கண் திறவாது வெளிவரும் குஞ்சுகள்
Nidifugous — கண் திறந்த நிலையில் வெளிவரும் குஞ்சுகள்
Nostril — நாசித்துளை
Occiput — பின்தலை
Oology — முட்டையியல்
Ovulation — முட்டையிடுதல்
Palmate — கை போல் பரந்த
Papilla — இறகு முகிழ்ப்பு
Pectinate — சீப்பமைப்புடைய
Pectoral — மார்பு சார்
Pelagic — கடல் சார்
Pellets — துண்டங்கள்
Pigeon's milk — புறாப்பால்
Polyandrous — பல ஆண் துணையுடைய
Polygamous — ஒன்றுக்கு மேற்பட்ட துணையுடைய
Polygynous — பல பெண் துணையுடைய
Predator — கொன்றுண்ணல்
Primaries — முதனிலை இறக்கை இறகுகள்
Primary coverts — முதனிலை இறக்கைப் போர்வைத் தூவிகள்
Rectrices — வாலிறகுகள்
Roost — இரவில் கூட்டமாகத் தங்குமிடம்
Rump — பிட்டம்
Saddle — பிட்டத்திற்கும் முதுகுக்கும் இடைப்பட்ட இடம்

Sansorial	—	மரத்தில் தொத்தும்
Secondaries	—	துணை இறகுகள்
Shoulder	—	தோள்பட்டை
Sickles	—	அருவாள் போன்ற வாலிறகுகள்
inuated	—	அலை போன்ற விளிம்புடைய
Sole	—	கால் விரல்களின் அடிப்பகுதி
Song	—	சீராகப் பறவைகள் எழுப்பும் குரலொலி
Song flight	—	பாடியபடி பறத்தல்
Species	—	இனம்
Speculem	—	வேறுபட்ட நிறப்பட்டை
Spur	—	காலில் காணப்படும் முள்
Squamatic	—	பட்டைபட்டையான
Striated	—	வரிவரியான
Subsong	—	தெளிவற்ற பாட்டொலி
Subspecies	—	உள்ளினம்
Supercilium	—	புருவக்கோடு
Tail coverts—under	—	வால் கீழ்போர்வை இறகுகள்
Tail coverts—upper	—	வால் மேற்போர்வை இறகுகள்
Territory	—	தனித்துரிமை கொண்டாடும் வாழ்விடம்
Trailing edge	—	இறகுகளின் பின் விளிம்பு
Uncinate	—	கொக்கி போன்ற
Varigated	—	பலநிறப் புள்ளிகளும் கோடுகளும் கொண்ட
Vent	—	வாலடி
Ventral	—	உடலின் கீழ்ப்பகுதி சார்ந்த
Web	—	விரலிடைச்சவ்வு
Wings	—	இறக்கைகள்
Wing bar	—	இறக்கைப்பட்டை
Winter visitor	—	குளிர்காலத்தில் வலசை வருபவை